முன்னுரை

எபிரெய பாஷையிலே, நியாயாதிபதிகளின் புஸ்தகத்திற்கு "சேப்பேர் ஷோப்டிம்" என்னும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. சீரிய மொழியிலும், அரபிய மொழியிலும் இந்தப் புஸ்தகம் "இஸ்ரவேல் புத்திரருடைய நியாயாதிபதிகளின் புஸ்தகம்" என்று அழைக்கப்படுகிறது. சாமுவேல் தீர்க்கதரிசியே இந்தப் புஸ்தகத்தின் ஆசிரியர்.

நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேலுடைய காணியாட்சியின் சரித்திரத்தை இந்தப் புஸ்தகம் விவரிக்கிறது. நியாயாதிபதிகளாகிய ஒத்னியேலின் காலத்திலிருந்து, சிம்சோனின் காலம் வரையிலும் இந்தப் புஸ்தகத்தில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரை ஆட்சி புரிந்த நியாயாதிபதிகளைப்பற்றியும், அவர்களுடைய கோத்திரத்தைப்பற்றியும், அவர்கள் ஆளுகை செய்த வருஷங்களைப்பற்றியும் கீழே சுருக்கமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நியாயாதிபதிகள் இஸ்ரவேல் புத்திரரை 299 வருஷங்களாக ஆட்சி செய்திருக்கிறார்கள்.

1. ஒத்னியேல் - யூதா - 40 வருஷம்
2. ஏகோத் - பென்யமீன் - 8 வருஷம்
3. பாராக் - நப்தலி - 40 வருஷம்
4. கிதியோன் - மனாசே - 40 வருஷம்
5. அபிமெலெக்கின் குமாரர் - 3 வருஷம்
6. தோலா - இசக்கார் - 23 வருஷம்
7. யாயீர் - மனாசே - 22 வருஷம்
8. எப்தா - மனாசே - 6 வருஷம்
9. இப்சாம் - யூதா - 7 வருஷம்
10. ஏலோன் - செபுலோன் - 10 வருஷம்
11. அப்தோன் - எப்பிராயீம் - 8 வருஷம்
12. சிம்சோன் - தாண் - 20 வருஷம்

மேலே சொல்லப்பட்டிருக்கிற நியாயாதிபதிகளைத் தவிர, ஏலி, சாமுவேல் ஆகியோரும் இஸ்ரவேலை நியாயம் விசாரித்திருக்கிறார்கள். இவர்கள் லேவி கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களைப்பற்றிய சரித்திரம் நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் எழுதப்படவில்லை. ரூபன் அல்லது சிமியோன், காத் அல்லது ஆசேர் கோத்திரத்தில் ஒரு நியாயாதிபதியும் எழும்பவில்லை.

நியாயாதிபதிகள் 16 ஆவது அதிகாரத்தின் முடிவில், இந்த நியாயாதிபதிகளைப்பற்றிய சரித்திரம் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இதன் பின்பு, ரூத்தின் சரித்திரத்தைப்போல, நியாயாதிபதிகளின் காலத்தில் நடைபெற்ற சம்பவங்கள், நியாயாதிபதிகள் 17-21 ஆகிய அதிகாரங்களில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"நியாயாதிபதிகள் நியாயம் விசாரித்து வரும் நாட்களில்" (ரூத் 1:1) என்னும் வாக்கியத்தோடு ரூத்தின் சரித்திரம் ஆரம்பமாகிறது. ஆனால் நியாயம் விசாரித்த நியாயாதிபதிகளைப்பற்றிய விவரம் இங்கே சொல்லப்படவில்லை.

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேலின் காணியாட்சி எந்த நிலமையிலிருந்தது என்பது பற்றிய விவரம் நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு மிகவும் விசேஷமானவர்கள். கர்த்தர் தம்முடைய நியாயப்பிரமாணத்தையும், வாக்குத்தத்தங்களையும் அவர்களுக்கு கொடுத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாரிடம் துன்மார்க்கமும் விக்கிரகாராதனையும் காணப்பட்டது. இஸ்ரவேல் புத்திரரை, சுற்றிலுமிருந்த அந்நிய ஜாதியார், அதிகமாய் ஒடுக்கினார்கள்.

நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் அனுபவித்த பாடுகளைப்பற்றியும், வேதனைகளைப்பற்றியும், அவர்கள் தங்கள் வேதனைகளைக் குறித்து கர்த்தரிடத்தில் முறையிட்டது பற்றியும் எழுதப்பட்டிருக்கிறது. ஆனாலும், இக்காலத்தில், கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாய் ஜீவித்த ஜனங்களும் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்.

நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் கர்த்தரை விட்டுவிட்டு, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போய்விடுகிறார்கள். ஆனாலும் இக்காலத்திலும், கர்த்தரை உண்மையான இருதயத்தோடு பின்பற்றுகிற இஸ்ரவேல் புத்திரரும் தேசத்திலே இருக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாரில் ஒரு கூட்டம் ஜனம் விக்கிரகங்களை ஆராதனை செய்தாலும், கானான் தேசத்திலே ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற ஆசரிப்புக்கூடாரத்தில் ஆராதனைகள் நடைபெறுகிறது. இஸ்ரவேல் புத்திரர் மோசேயின் பிரமாணத்தை கைக்கொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரில் சிலர் விக்கிரகங்களையும், சிலர் கர்த்தரையும் ஆராதிக்கிறார்கள். வேறு சிலரோ விக்கிரகங்களையும் கர்த்தரையும் சேர்ந்து ஆராதிக்கிறார்கள்.

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருடைய கோத்திரங்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்து, சமஸ்த இஸ்ரவேல் தேசம் ஏற்படுத்தப்படவில்லை. ஒவ்வொரு கோத்திரத்தாரும் தங்களை தனித்தனியாக ஆளுகை செய்து கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஒன்றுசேர்ந்து, இஸ்ரவேலின் காணியாட்சிக்கு ஆதரவாக தீர்மானம்பண்ணாமல், ஒவ்வொரு கோத்திரத்தாரும், தங்களுடைய இஷ்டபிரகாரம், தனிப்பட்ட முறையில் தீர்மானம்பண்ணிக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பொதுவான ஒரு தலைவர் என்று யாருமில்லை. இஸ்ரவேலின் காணியாட்சிக்கு ஆலோசனைச்சங்கம் எதுவுமில்லை. பல சமயங்களில் இஸ்ரவேலின் கோத்திரத்தார் மத்தியிலே, கருத்து வேறுபாடுகளும், விவாதங்களும், சண்டை சச்சரவுகளும் உண்டாயிற்று. அவர்களால் ஏகோபித்து, ஒருமனப்பட்டு, எந்தக் காரியத்தையும் செய்ய முடியவில்லை.

நியாயாதிபதிகளின் ஆளுகையும் நிலைத்திருக்கவில்லை. நியாயாதிபதிகள் சில வருஷங்களுக்கு இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிக்கிறார்கள். அதன் பின்பு அவர்களை நியாயம் விசாரிப்பதற்கு ஒரு நியாயாதிபதியுமில்லை. மறுபடியும் யாராவது ஒரு நியாயாதிபதி எழும்புகிறார்.

ஏகூத் சத்துருக்களை ஜெயித்த பின்பு, தேசம் எண்பது வருஷம் அமைதியாயிருந்தது என்று எழுதப்பட்டிருக்கிறது. அத்தனை வருஷங்களும் ஏகூத் உயிரோடிருந்திருப்பதற்கு வாய்ப்பில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு உதவி தேவைப்பட்டபோது, கர்த்தருடைய ஆவியானவர் அவ்வப்போது, நியாயாதிபதிகளை எழுப்புகிறார். அவர்கள் தங்களுடைய காலங்களில் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார்கள்.

நியாயாதிபதிகள் இஸ்ரவேலின் சத்துருக்களை முறியடித்தார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் காணப்பட்ட விக்கிரகாராதனைகளை அகற்றிப்போட்டார்கள். இதுவே நியாயாதிபதிகளின் பிரதான ஊழியங்களாய் இருந்தது.

தெபோராள் ஒரு தீர்க்கதரிசினி. இவள் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் நியாயம் விசாரித்தாள். இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண, தெபோராள் கர்த்தருடைய ஜனத்தை வழிநடத்தினாள். "அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்" (நியா 4:4).

நியாயாதிபதிகள் - விரிவுரை

JUDGES - COMMENTARY

BELLWETHER INTERNATIONAL

GOOD NEWS PUBLISHERS

நியாயாதிபதிகள் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரித்த காலத்தில், தேவனாகிய கர்த்தரே, இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ராஜாவாயிருந்து அவர்களை ஆளுகை செய்தார். நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் தேசத்திலே, கர்த்தருடைய ஆளுகை நடைபெற்றது. இந்த சத்தியத்தை சாமுவேல் இஸ்ரவேல் புத்திரருக்கு, பல சந்தர்ப்பங்களில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

"அம்மோன் புத்திரரின் ராஜாவாகிய நாகாஸ் உங்களுக்கு விரோதமாய் வருகிறதை நீங்கள் கண்டபோது, உங்கள் தேவனாகிய கர்த்தரே உங்களுக்கு ராஜாவாயிருந்தும், நீங்கள் என்னை நோக்கி: அப்படியல்ல, ஒரு ராஜா எங்கள்மேல் ஆளவேண்டும் என்றீர்கள்" (1சாமு 12:12).

1 அதிகாரம்

யோசுவா மரித்துப்போனார். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சுதந்தரத்தில் இளைப்பாறுகிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் கோத்திரத்தார் இன்னும் சுதந்தரிக்கவேண்டிய தேசங்களும் இருக்கிறது. கானான் தேசத்தில், இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே, புறஜாதியாரும் வாசம்பண்ணுகிறார்கள்.

யோசுவா முக்கியமான வேலைகள் எல்லாவற்றையும் ஏற்கெனவே செய்து முடித்துவிட்டார். கானான் தேசத்திலிருந்த பிரதான ராஜாக்களையெல்லாம் சங்காரம்பண்ணிவிட்டார். கானான் தேசத்தில் மீதமுள்ள ராஜாக்களையும், ராஜ்யங்களையும் இஸ்ரவேல் கோத்திரத்தார் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். அவர்கள் கர்த்தரை நம்பி கிரியை செய்திருந்தால், கானான் தேசத்தை முழுவதுமாய் சுதந்தரித்திருக்கலாம்.

யோசுவா மரித்த பின்பு, இஸ்ரவேல் ஜனங்கள் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். தாங்கள் சுதந்தரிக்கவேண்டிய தேசத்தை சுதந்தரியாமல் சும்மாயிருக்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நெருக்கமுண்டாயிற்று. அவர்கள் ஏற்கெனவே சுதந்தரித்த தேசம் அவர்களுக்கு போதுமானதாயில்லை. தங்களுக்கு நெருக்கம் உண்டானபோது, இஸ்ரவேல் ஜனத்தார் தாங்கள் சுதந்தரிக்கவேண்டிய தேசங்களைப்பற்றி யோசித்துப் பார்க்கிறார்கள்.

கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணுவதில் யூதா கோத்திரத்தாரும், சிமியோன் கோத்திரத்தாரும் தைரியமாய் ஈடுபடுகிறார்கள். கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி யூதாகோத்திரத்தார் முதல் முதல் எழுந்து புறப்படவேண்டுமென்று கர்த்தர் கட்டளை கொடுக்கிறார் (நியா 1:1,2).

யூதா தன் சகோதரனாகிய சிமியோனையும் தன்னோடு சேர்த்துக் கொண்டு, கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார் (நியா 1:3). பேசேக்கிலே நடைபெற்ற யுத்தத்தில் இவர்களுக்கு ஜெயமுண்டாயிற்று (நியா 1:4-7). யூதாவின் புத்திரர் எருசலேமைப் பிடிக்கிறார்கள் (நியா 1:8). எபிரோனையும், தெபீரையும் கைப்பற்றுகிறார்கள் (நியா 1:9-15). மேலும் யூதாவின் மனுஷரும் சிமியோன் கோத்திரத்தாரும் காசாவையும், ஓர்மாவையும், மேலும் பல தேசங்களையும் கைப்பற்றுகிறார்கள் (நியா 1:17-19).

யூதாகோத்திரத்தார் மலைத்தேசத்தாரை துரத்திவிடுகிறார்கள். ஆனால் அவர்களால் பள்ளத்தாக்கின் குடிகளை துரத்தக்கூடாமல் போயிற்று. பள்ளத்தாக்கின் குடிகளிடத்தில் இருப்பு இரதங்கள் இருந்ததினால், யூதாகோத்திரத்தார் அதைப் பார்த்து பயந்து, அவர்களைத் துரத்தாமல் விட்டுவிடுகிறார்கள் (நியா 1:19). யூதாவின் புத்திரரோடுகூட கேனியரின் புத்திரரும் குடியிருக்கிறார்கள் (நியா 1:16).

இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் யூதா கோத்திரத்தைப்போலவோ, சிமியோன் கோத்திரத்தாரைப்போலவோ கானானியருக்கு விரோதமாக தைரியமாய் யுத்தம்பண்ணவில்லை. இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் கோழைகளாகயிருக்கிறார்கள். பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரை துரத்திவிடவில்லை (நியா 1:21).

யோசேப்பின் குடும்பத்தார் பெத்தேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள் (நியா 1:22-26). இதில் இவர்களுக்கு ஜெயமுண்டாயிற்று. ஆனாலும் யோசேப்பின் குடும்பத்தார் மற்ற இடங்களில், இதுபோல தைரியமாய் யுத்தம்பண்ணவில்லை. மனாசே கோத்திரத்தாரும் கானானியரைத் துரத்திவிடவில்லை (நியா 1:27,28). எப்பிராயீம் கோத்திரத்தாரும் கானானியரைத் துரத்திவிடவில்லை (நியா 1:29). செபுலோன் கோத்திரத்தாரும் கானானியரைத் துரத்திவிடவில்லை (நியா 1:30).

ஆசேர் கோத்திரத்தார் கானானியர் நடுவே குடியிருக்கிறார்கள். அவர்களைத் துரத்திவிடவில்லை (நியா 1:31,32). நப்தலி கோத்திரத்தாரோ கானானியரைத் துரத்திவிடாமல் அவர்களிடத்தில் பகுதி வாங்குகிறார்கள் (நியா 1:33).

எமோரியர் தாண் புத்திரரை நெருக்குகிறார்கள் (நியா 1:34-36). இசக்கார் கோத்திரத்தாரைப்பற்றியோ யோர்தானுக்கு அப்புறத்திலே, கீலேயாத்திலே குடியிருக்கிற, இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தாரைப் பற்றியோ இங்கு ஒன்றும் சொல்லப்படவில்லை.

யூதா எழுந்து புறப்படக்கடவன் நியா 1:1-8

நியா 1:1. யோசுவா மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி, எங்களில் யார் முதல்முதல் எழுந்து புறப்படவேண்டும் என்று கேட்டார்கள்.

நியா 1:2. அதற்குக் கர்த்தர்: யூதா எழுந்து புறப்படக்கடவன்; இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன் என்றார்.

நியா 1:3. அப்பொழுது யூதா தன் சகோதரனாகிய சிமியோனை நோக்கி: நாம் கானானியரோடே யுத்தம்பண்ண நீ என் சுதந்தரப் பங்குவீதத்தில் என்னோடேகூட எழுந்துவா; உன் சுதந்தரப் பங்கு வீதத்தில் நானும் உன்னோடுகூட வருவேன் என்றான்; அப்படியே சிமியோன் அவனோடேகூடப் போனான்.

நியா 1:4. யூதா எழுந்துபோனபோது, கர்த்தர் கானானியரையும் பெரிசியரையும் அவர்கள் கையிலே ஒப்புக்கொடுத்தார்; அவர்கள் பேசேக்கிலே பதினாயிரம்பேரை வெட்டினார்கள்.

நியா 1:5. பேசேக்கிலே அதோனிபேசேக்கைக் கண்டு, அவனோடு யுத்தம்பண்ணி, கானானியரையும் பெரிசியரையும் வெட்டினார்கள்.

நியா 1:6. அதோனிபேசேக் ஓடிப்போகையில், அவனைப் பின்தொடர்ந்து பிடித்து, அவன் கைகால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டார்கள்.

நியா 1:7. அப்பொழுது அதோனிப்பேசேக்: எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின்கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார் என்றான். அவனை எருசலேமுக்குக் கொண்டுபோனார்கள்; அங்கே அவன் செத்துப்போனான்.

நியா 1:8. யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அதிலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கிவிட்டார்கள்.

யோசுவா மரித்த பின்பு இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணுகிறார்கள். கானான் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கானானியரும் குடியிருக்கிறார்கள். அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணி, அவர்களைத் துரத்தவேண்டும். தேசத்தை மொத்தமாய்ச் சுதந்தரித்துக்கொள்ளவேண்டும்.

"கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி, எங்களில் யார் முதல்முதல் எழுந்து புறப்படவேண்டும்" (நியா 1:1) என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள். சரித்திரத்தின் இந்தக்கால கட்டத்தில், இஸ்ரவேல் புத்திரர் திரளான எண்ணிக்கையில் பலுகிப் பெருகியிருக்கிறார்கள். யோசுவா இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும், அவர்களுடைய சுதந்தரத்தை சீட்டுப்போட்டு பங்கிட்டுக்கொடுத்திருக்கிறார்.

ஆனால் இஸ்ரவேல் கோத்திரத்தாரோ தங்களுடைய சுதந்தரத்தை இன்னும் முழுவதுமாக சுதந்தரித்துக்கொள்ளவில்லை. அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகரித்துக்கொண்டு வருகிறது. இதனால் இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு, தங்களுடைய தேசத்திலே நெருக்கமுண்டாகிறது. தங்களுடைய தேசத்தின் எல்லையை, கர்த்தர் தங்களுக்கு கொடுத்த சுதந்தரத்திலே விஸ்தாரம்பண்ணவேண்டுமென்று விரும்புகிறார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தார் தங்களுடைய எல்லையை விஸ்தாரம்பண்ண வேண்டுமென்றால், அவர்கள் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணவேண்டும். யுத்தம்பண்ண இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆயத்தமாயும், ஆர்வமாயும் இருக்கிறார்களா? அல்லது பயப்படுகிறார்களா என்பது தெரியவில்லை.

இஸ்ரவேல் கோத்திரத்தார் எல்லோரும் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி ஆயத்தமாயும், ஆர்வமாயும் இருப்பார்களென்றால், முதலில் எழுந்து புறப்படவேண்டிய கோத்திரத்தார் சந்தோஷத்தோடு புறப்பட்டுப் போவார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தார், யுத்தம்பண்ணுவதற்கு பயப்படுவார்களென்றால், முதலில் எழுந்து போகாதவர்கள் சந்தோஷமாயிருப்பார்கள்.

யோசுவா மரித்த பின்பு இஸ்ரவேல் புத்திரர் கானானியரோடு இதுவரையிலும் யுத்தம்பண்ணவில்லை. அவர்கள் ஒருவேளை தங்களுடைய சுதந்தரத்தில் திருப்தியாக இளைப்பாறிக்கொண்டிருக்கலாம். கர்த்தர் தங்களுக்குக் கொடுத்த சுதந்தர தேசத்தின் பங்குவீதத்தை சுதந்தரியாமல் அசட்டையாகயிருந்திருக்கலாம். இப்போது இஸ்ரவேல் புத்திரரின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதினால், தேசத்தில் இடநெருக்கடி உண்டாயிருப்பதினால், அவர்கள் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ண வேண்டியது அவசியமாயிருக்கிறது.

கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் தீர்மானித்திருக்கிறார்களா, அல்லது, இஸ்ரவேல் புத்திரரின் நிர்விசாரத்தையும், கோழைத்தனத்தையும் பார்த்து, கானானியர் அவர்கள்மீது யுத்தம்பண்ண வருகிறார்களா என்றும் இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை.

கானானியர் இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம்பண்ண வருவார்களென்றால், இஸ்ரவேல் புத்திரர் அவர்களை எதிர்க்கவேண்டும். அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணவேண்டும். வேறு வழியில்லை. இஸ்ரவேல் புத்திரர் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணவில்லையென்றால், கானானியர் இஸ்ரவேல் புத்திரரை, தேசத்தைவிட்டே துரத்திவிடுவார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய சரித்திரத்தில், இந்தக் காலம், மிகவும் முக்கியமான காலமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணுகிறார்கள். அவரிடத்தில் விசாரிக்கிறார்கள். "கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி எங்களில் யார் முதன்முதல் எழுந்து புறப்படவேண்டும்" என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் விண்ணப்பத்திற்கு கர்த்தர் உடனே பிரதியுத்தரம் சொல்லுகிறார். "யூதா எழுந்து புறப்படக்கடவன்" (நியா 1:2) என்று கர்த்தர் சொல்லுகிறார். யூதா கோத்திரத்தார், கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி, முதலாவதாக எழுந்து புறப்படவேண்டும். கானானியரோடு நடைபெறும் யுத்தத்தில், கர்த்தர் யூதாகோத்திரத்தாருக்கு ஜெயத்தைக் கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார். "இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்" (நியா 1:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

கர்த்தர் கானான் தேசத்தை யூதாபுத்திரருடைய கையிலே ஒப்புக்கொடுத்துவிட்டார். யூதாபுத்திரர் கானான் தேசத்தை சுதந்தரிப்பார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய சுதந்தரத்தில் தங்கியிருக்கிற கானானியரை, யூதாகோத்திரத்தார் துரத்திவிடவேண்டும். யூதாபுத்திரர் கானானியரை நிர்மூலம்பண்ணவேண்டும்.

"யூதா எழுந்து புறப்படக்கடவன்" என்று சொல்லி, கர்த்தர் யூதாகோத்திரத்தாரை யுத்தத்திற்கு முதலாவதாக அனுப்புகிறார். இதற்கு சில விசேஷித்த காரணங்கள் உண்டு. யூதாகோத்திரத்தார் ஜனம் பெருத்தவர்கள். அவர்களுடைய எண்ணிக்கையும் அதிகம். அவர்களுடைய பலமும் அதிகம்.

யூதாகோத்திரத்தார் கண்ணியத்திலும், மதிப்பிலும், மரியாதையிலும், தெய்வபக்தியிலும் மிகவும் விசேஷமானவர்கள். ஆகையினால் கர்த்தர் யூதாபுத்திரரைத் தெரிந்தெடுத்து, அவர்களிடத்தில் பொறுப்பை ஒப்புக்கொடுக்கிறார் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் யூதாகோத்திரத்திலிருந்து வந்தவர். கிறிஸ்துவானவர் யூதராஜசிங்கமாயிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இந்தப் பிரபஞ்சத்திலுள்ள அந்தகார வல்லமைகளை முதலாவதாக அழித்துப் போடுகிறார். சாத்தானுடைய கிரியைகளையும், அவனுடைய சதிஆலோசனைகளையும் அவமாக்கிப்போடுகிறார். சாத்தான் யாரை விழுங்கலாம் என்று சுற்றி அலைகிறான். நமக்கு இந்தப் பூமியிலே, அந்தகாரலோகாதிபதிகளோடு யுத்தமுண்டு. நமக்கு இயேசுகிறிஸ்துவில் ஜெயமுமுண்டு. கிறிஸ்துவுக்குள் இருக்கிறவர்கள் சாத்தானை ஜெயிப்பார்கள்.

யூதாகோத்திரத்தார் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். "யூதா எழுந்து புறப்படக்கடவன்" என்று கர்த்தர் சொன்னவுடன், அவர்கள் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். யூதாகோத்திரத்தாருக்கு அருகாமையில், சிமியோன் கோத்திரத்தார் இருக்கிறார்கள். அவர்களும் தங்களோடு சேர்ந்துகொள்ளலாம் என்று, யூதாகோத்திரத்தார், சிமியோன் புத்திரருக்கு சொல்லுகிறார்கள்.

யூதாகோத்திரத்தார், கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி புறப்பட்டுப்போகும்போது, தன் சகோதரனாகிய சிமியோனை நோக்கி, "நாம் கானானியரோடே யுத்தம்பண்ண நீ என் சுதந்தரப் பங்குவீதத்தில் என்னோடேகூட எழுந்துவா; உன் சுதந்தரப் பங்கு வீதத்தில் நானும் உன்னோடுகூட வருவேன்" (நியா 1:3) என்று சொல்லுகிறார்கள்.

யூதாகோத்திரத்தார் எண்ணிக்கை பெருத்தவர்கள். பலம் மிகுந்தவர்கள். சிமியோன் கோத்திரத்தாரோ சொற்ப ஜனங்கள் பலவீனமானவர்கள். ஆனாலும் பலமுள்ள யூதாகோத்திரத்தார், பலவீனமான சிமியோன் கோத்திரத்தாரை, தங்களோடு சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஒருவன் பலமுள்ளவனாயிருந்தாலும், அவனுக்கு பலவீனனுடைய உதவியும் தேவைப்படுகிறது.

இஸ்ரவேல் கோத்திரத்தாரில், யூதாகோத்திரத்தாரே பிரதானமான கோத்திரத்தார். சிமியோன் கோத்திரத்தாரோ மிகவும் சாதாரணமானவர்கள். ஆனாலும் யூதாகோத்திரத்தார், சிமியோன் கோத்திரத்தாரின் சிநேகத்தையும், ஒத்துழைப்பையும் விரும்புகிறார்கள்.

நம்முடைய சரீரத்தின் தலையானது எல்லா வேலைகளையும் தானே செய்வேன் என்று சொல்லக்கூடாது. மற்ற அவயவத்தின் உதவி தனக்குத் தேவையில்லை என்றும் நினைக்கக்கூடாது. சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களும் ஒன்றுக்கொன்று இசைந்து செயல்படவேண்டும். அப்போதுதான் நம்முடைய சரீரம் சரியாக இயங்கும். சரீரத்திலுள்ள எல்லா அவயவங்களுமே சரீரத்திற்கு தேவைப்படுகிறது. எந்த அவயவத்தையும் தேவையற்றது என்று சொல்லி ஒதுக்கி தள்ளக்கூடாது.

யூதாகோத்திரத்தாருடைய விண்ணப்பத்தை சிமியோன் கோத்திரத்தார் அங்கீகரிக்கிறார்கள். யூதாகோத்திரத்தார் சொன்ன பிரகாரம், சிமியோன் கோத்திரத்தாரும் அவர்களோடே கூட, கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி புறப்பட்டுப்போகிறார்கள். யூதாகோத்திரத்தார் புறப்பட்டுப்போகிறார்கள். சிமியோன் கோத்திரத்தாரும் அவர்களோடேகூட போகிறார்கள்.

இந்த யுத்தத்தில், காலேப், யூதாகோத்திரத்தாருக்கு படைத்தளபதியாக இருந்திருக்கவேண்டும். காலேபுக்கு சுதந்தரத்தில் பங்குவீதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அவர் இன்னும் தன்னுடைய பங்குவீதத்தை சுதந்தரித்துக்கொள்ளவில்லை. இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் தங்களுடைய பங்குவீதத்தை சுதந்தரித்துக்கொள்வதற்கு காலேப் உதவிசெய்கிறார். தன்னுடைய பங்குவீதத்தை காலேப் கடைசியாகப் பெற்றுக்கொள்ள ஆயத்தமாயிருக்கிறார்.

காலேப் ஒரு யுத்தவீரர். அவர் ஒரு நல்ல தலைவர். காலேப் என்னும் பெயருக்கு "முழுஇருதயத்தோடு" என்று பொருள். அவர் தன்னுடைய பெயருக்கேற்ற பிரகாரம், முழுஇருதயத்தோடு, முழுபலத்தோடு, கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு, காலேபைப்போல, ஒரு நல்ல படைத்தளபதியைப் பெற்றிருப்பது, மேன்மையான சிலாக்கியம்.

கர்த்தர் இந்த யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு வெற்றியைக் கட்டளையிடுகிறார். கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரரிடம், "யூதா எழுந்து புறப்படக்கடவன்; இதோ, அந்த தேசத்தை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தேன்" (நியா 1:2) என்று வாக்குப்பண்ணினார். கர்த்தர் இப்போது தம்முடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறார்.

யூதா எழுந்துபோனபோது, கர்த்தர் கானானியரையும் பெரிசியரையும் அவர்கள் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்; அவர்கள் பேசேக்கிலே பதினாயிரம்பேரை வெட்டுகிறார்கள். பேசேக்கிலே அதோனிபேசேக்கைக் கண்டு, அவனோடு யுத்தம்பண்ணி, கானானியரையும் பெரிசியரையும் வெட்டுகிறார்கள் (நியா 1:4,5).

இஸ்ரவேல் புத்திரர் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணும்படி முதலாவது புறப்பட்டுப்போனார்களா அல்லது, கானானியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்படி முதலாவது புறப்பட்டு வந்தார்களா என்பது தெரியவில்லை. கர்த்தர் தம்முடைய சித்தத்திலும், திட்டத்திலும் தெளிவாகவும், உறுதியாகவும் இருக்கிறார். கர்த்தர் கானானியரை யூதாபுத்திரருடைய கையிலே ஒப்புக்கொடுக்கிறார்.

கானானியர் சமவெளியிலே இருக்கிறார்கள். இந்த இடம் பேசேக் என்று அழைக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் கானானியரோடு, பேசேக்கிலோ அல்லது பேசேக்குக்கு அருகாமையிலோ யுத்தம்பண்ணியிருக்கவேண்டும். யூதாபுத்திரர் பேசேக்கிலே பதினாயிரம் கானானியரை வெட்டுகிறார்கள்.

பிற்காலத்தில் சவுல் இந்த ஸ்தலத்திலே இஸ்ரவேல் புத்திரரை இலக்கம் பார்க்கிறார். "அவர்களைப் பேசேக்கிலே இலக்கம் பார்த்தான்; இஸ்ரவேல் புத்திரரில் மூன்றுலட்சம்பேரும், யூதா மனுஷரில் முப்பதினாயிரம்பேரும் இருந்தார்கள்" (1சாமு 11:8).

யூதாகோத்திரத்தார், கானானியரில் 10,000 பேரை சங்காரம்பண்ணுகிறார்கள். கானானிலுள்ள சேனை பலவீனமாயிற்று. அவர்களால் இனிமேல் யூதாகோத்திரத்தாரை எதிர்த்து யுத்தம்பண்ண முடியாது. யூதாபுத்திரர் பேசேக்கிலே, கானானின் ராஜாவாகிய அதோனிபேசேக்கைக் கண்டு, அவனோடும் யுத்தம்பண்ணுகிறார்கள்.

அதோனிபேசேக் யூதா கோத்திரத்தாருக்கு தப்பித்து ஓடிப்போகிறான். யூதாபுத்திரரோ அதோனிபேசேக்கைப் பின்தொடர்ந்து, அவனைப் பிடிக்கிறார்கள். அவன் கை கால்களின் பெருவிரல்களை தறித்துப்போடுகிறார்கள் (நியா 1:5,6).

அதோனிபேசேக் என்னும் பெயருக்கு "பேசேக்கின் பிரபு" என்று பொருள். இவனுடைய கால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டதினால், இவனால் இனிமேல் தப்பித்து ஓடிப்போக முடியாது. இவனுடைய கைகளின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டதினால், இவனால் இனிமேல் ஆயுதம் ஏந்தி யுத்தம்பண்ணவும் முடியாது.

இந்த வசனப்பகுதியை வாசிக்கும்போது, யூதாபுத்திரர், அதோனிபேசேக்கின்மீது மனிதாபிமானமில்லாமல், அவனுக்கு கடுமையான தண்டனை கொடுத்ததுபோல தெரிகிறது. அதோனிபேசேக் யாருக்கும் இரக்கம் காண்பிக்கவில்லை. அதனால் அவனுக்கு இரக்கம் கிடைக்கவில்லை.

தனக்குக் கொடுக்கப்பட்ட தண்டனை நீதியானது என்று, அதோனிபேசேக் தன்னுடைய வாயினால் அறிக்கை செய்கிறான். "எழுபது ராஜாக்கள், கைகால்களின் பெருவிரல்கள் தறிக்கப்பட்டவர்களாய், என் மேஜையின்கீழ் விழுந்ததைப் பொறுக்கித் தின்றார்கள்; நான் எப்படிச் செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார்" (நியா 1:7) என்று அதோனிபேசேக் தன்னுடைய பாவத்தையும், தனக்குக் கிடைத்திருக்கிற தண்டனையையும் பற்றிச் சொல்லுகிறான். இவன் மற்றவர்களுக்கு தீங்கு செய்தான். இப்போது இவனுக்கு தீங்கு உண்டாயிற்று.

கானான் தேசத்திலே அதோனிபேசேக் மிகவும் முக்கியமானவன். அவன் ஏற்கெனவே எழுபது ராஜாக்களை ஜெயித்து, அவர்களுடைய கை கால்களின் பெருவிரல்களை தறித்துப்போட்டவன். யூதாவின் மனுஷர் அதோனிபேசேக்கோடு யுத்தம்பண்ணி, அவனை ஜெயித்ததினால், எழுபது ராஜாக்களை ஜெயித்ததுபோல இருக்கிறார்கள்.

அதோனிபேசேக் கானான் தேசத்தில் மிகவும் முக்கியமானவனாகயிருந்தாலும், அவன் இப்போது யூதாபுத்திரர் கையிலே சிறைக்கைதியாகயிருக்கிறான். யூதாவின் மனுஷர் அதோனிபேசேக்கினுடைய கை கால்களின் பெருவிரல்களைத் தறித்துப்போட்டு, அவனை எருசலேமுக்கு கொண்டு போகிறார்கள். அங்கே அவன் செத்துப்போகிறான். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்தவன் அழிந்துபோகிறான்.

அதோனிபேசேக் மற்றவர்களுக்கு செய்த தீங்கின் பிரகாரமே, இவனுக்கு தீங்கு வந்திருக்கிறது. இவனுடைய கை கால்களின் பெருவிரல்கள் துண்டிக்கப்பட்டிருக்கிறது. அதோனிபேசேக் தண்டனையின் வேதனையை அனுபவித்தாலும், தேவனுடைய நீதியை அங்கீகரிக்கிறான். "நான் எப்படி செய்தேனோ, அப்படியே தேவன் எனக்கும் செய்து சரிக்கட்டினார்" என்று சொல்லுகிறான். கர்த்தர் தனக்குக் கொடுத்த தண்டனை நீதியானது என்பதை அதோனிபேசேக் அங்கீகரிக்கிறான்.

அதோனிபேசேக் எருசலேமிலே செத்துப்போகிறான். யூதாவின் புத்திரர் எருசலேமின்மேல் யுத்தம்பண்ணி, அதைப் பிடித்து, அதிலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினிக்கு இரையாக்கிவிடுகிறார்கள் (நியா 1:8).

கர்த்தர் யூதாவோடே கூட இருக்கிறார் நியா 1:9-20

நியா 1:9. பின்பு யூதாவின் புத்திரர் மலைத்தேசத்திலேயும், தெற்கேயும், பள்ளத்தாக்குகளிலேயும் குடியிருக்கிற கானானியரோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டுப்போனார்கள்.

நியா 1:10. அப்படியே யூதா கோத்திரத்தார் எபிரோனிலே குடியிருக்கிற கானானியருக்கு விரோதமாய்ப் போய், சேசாய், அகிமான், தல்மாய் என்பவர்களை வெட்டிப்போட்டார்கள். முற்காலத்தில் அந்த எபிரோனுக்கு கீரியாத் அர்பா என்று பேர்.

நியா 1:11. அங்கேயிருந்து தெபீரின் குடிகளுக்கு விரோதமாகப் போனார்கள்; முற்காலத்தில் தெபீருக்கு கீரியாத்செப்பேர் என்று பேர்.

நியா 1:12. அப்பொழுது காலேப்: கீரியாத்செப்பேரை சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன் என்றான்.

நியா 1:13. அப்பொழுது காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் அதைப் பிடித்தான்; ஆகையால் தன் குமாரத்தியாகிய அக்சாளை அவனுக்கு விவாகம்பண்ணிக்கொடுத்தான்.

நியா 1:14. அவள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்க வேண்டும் என்று அவனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின்மேலிருந்து இறங்கினாள். காலேப் அவளை நோக்கி: உனக்கு என்னவேண்டும் என்றான்.

நியா 1:15. அப்பொழுது அவள்: எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும் என்றாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுத்தான்.

நியா 1:16. மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடேகூடப் பேரீச்சமரங்களின் பட்டணத்திலிருந்து ஆராத்திற்குத் தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்து, ஜனங்களோடே குடியேறினார்கள்.

நியா 1:17. யூதா தன் சகோதரனாகிய சிமியோனோடுகூடப் போனான்; அவர்கள் சேப்பாத்தில் குடியிருக்கிற கானானியரை முறிய அடித்து, அதைச் சங்காரம்பண்ணி, அந்தப் பட்டணத்திற்கு ஓர்மா என்று பேரிட்டார்கள்.

நியா 1:18. யூதா காசாவையும் அதின் எல்லையையும், அஸ்கலோனையும் அதின் எல்லையையும், எக்ரோனையும் அதின் எல்லையையும் பிடித்தான்.

நியா 1:19. கர்த்தர் யூதாவோடேகூட இருந்ததினால், மலைத்தேசத்தாரைத் துரத்திவிட்டார்கள்; பள்ளத்தாக்கின் குடிகளுக்கு இருப்புரதங்கள் இருந்தபடியினால், அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று.

நியா 1:20. மோசே சொன்னபடியே, எபிரோனைக் காலேபுக்குக் கொடுத்தார்கள்; அவன் அதிலிருந்த ஏனாக்கின் மூன்று குமாரரையும் துரத்திவிட்டான்.

யூதாகோத்திரத்தாரும், சிமியோன் கோத்திரத்தாரும் கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணி, அவர்களைத் துரத்திவிடுகிறார்கள். யூதாவின் மனுஷர் கானானியரில் அநேகரைத் துரத்திவிட்டாலும், அவர்களை கானான் தேசத்திலிருந்து இன்னும் முற்றிலுமாய்த் துரத்திவிடவில்லை.

கானானின் மலைத்தேசத்திலிருந்து கானானியரை, யூதாவின் மனுஷர் துரத்திவிடுகிறார்கள். இவர்கள் எருசலேமை சுற்றிலுமிருந்த மலைப்பகுதியில் குடியிருந்த கானானியர். கர்த்தர் யூதாவோடே கூடயிருக்கிறார். ஆகையினால் யூதாவின் மனுஷர் மலைத்தேசத்தாரைத் துரத்தி விடுகிறார்கள். பள்ளத்தாக்கின் குடிகளிடம் இருப்பு இரதங்கள் இருக்கிறது. ஆகையினால் யூதாவின் மனுஷரால் அவர்களைத் துரத்தக்கூடாமற்போயிற்று (நியா 1:19).

"அதற்கு யோசேப்பின் புத்திரர்: மலைகள் எங்களுக்குப் போதாது; பள்ளத்தாக்கு நாட்டிலிருக்கிற பெத்செயானிலும், அதின் ஊர்களிலும், யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலும் குடியிருக்கிற எல்லாக் கானானியரிடத்திலும் இருப்புரதங்கள் உண்டு என்றார்கள்" (யோசு 17:16).

பள்ளத்தாக்கின் மனுஷரிடத்தில் இருப்பு இரதங்கள் இருப்பதினால், அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணுவது தங்களுக்கு பாதுகாப்பானதல்ல என்று யூதாவின் மனுஷர் யோசிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தங்களோடு கூடயிருக்கிறார் என்பதை அவர்கள் மறந்துவிடுகிறார்கள். ஆயிரக்கணக்கான தேவதூதர்கள் கர்த்தருடைய இரதங்களாயிருக்கிறார்கள். இந்த உலகத்திலிருக்கிறவனிலும், நம்மோடு கூடயிருக்கிறவர் பெரியவர் என்னும் விசுவாசம் நமக்குள் இருக்கவேண்டும்.

"தேவனுடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாயிருக்கிறது; ஆண்டவர் பரிசுத்தஸ்தலமான சீனாயிலிருந்தவண்ணமாய் அவைகளுக்குள் இருக்கிறார்" (சங் 68:17).

யூதாவின் மனுஷரிடத்தில் விசுவாசத்தைவிட பயமே அதிகமாயிருக்கிறது. அவர்கள் கர்த்தரை விசுவாசத்தோடு நோக்கிப் பார்ப்பதற்குப் பதிலாக, சத்துருக்களின் இருப்பு இரதங்களை பயத்தோடு நோக்கிப் பார்க்கிறார்கள். யூதாவின் மனுஷர் கர்த்தரை நம்பி பள்ளத்தாக்கின் மனுஷரோடு யுத்தம்பண்ணியிருந்தால், அவர்களை கானான் தேசத்திலிருந்து மொத்தமாய்த் துரத்திவிட்டிருக்க முடியும். ஆனால் யூதாவின் மனுஷர் அவர்களை எதிர்த்து யுத்தம்பண்ணாமல், தங்களுடைய சுதந்தர தேசத்திற்கு திரும்பி வந்துவிடுகிறார்கள்.

யோசுவா கானான் தேசத்தை இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு பங்குவீதமாகப் பிரித்துக்கொடுத்தபோது, காலேபுக்கு எபிரொன் என்னும் மலை நாட்டை சுதந்தரமாய்க் கொடுத்தார். சுமார் பத்து அல்லது பன்னிரண்டு வருஷங்களுக்கு முன்பாக காலேபுக்கு எபிரொன் பங்குவீதமாய்க் கொடுக்கப்பட்டது. ஆனாலும் அவர் அந்த மலைநாட்டை இப்போதுதான் சுதந்தரிக்கிறார். இதுவரையிலும் காலேப், மற்ற கோத்திரத்தாரின் சுதந்தரத்தை சுதந்தரிப்பதற்காக, அவர்களோடு சேர்ந்து கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணிக்கொண்டிருந்தார்.

யூதாவின் புத்திரர் மலைத் தேசத்திலேயும், தெற்கேயும், பள்ளத்தாக்கு களிலேயும் குடியிருக்கிற கானானியரோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டுப்போகிறார்கள். அப்படியே யூதா கோத்திரத்தார் எபிரோனிலே குடியிருக்கிற கானானியருக்கு விரோதமாய்ப் போய், சேசாய், அகீமான், தல்மாய் என்பவர்களை வெட்டிப்போடுகிறார்கள். முற்காலத்தில் அந்த எபிரோனுக்கு கீரியாத் அர்பா என்று பேர் (நியா 1:9,10).

காலேபுக்கு எபிரோன் சுதந்தரமாகக் கொடுக்கப்பட்டாலும், அவர் இப்போதுதான் எபிரோனை சுதந்தரிக்கிறார். தன்னுடைய சொந்த நன்மைகளைவிட, மற்றவர்களுடைய நன்மைகளே மிகவும் முக்கியமானது என்று தீர்மானித்து, காலேப் இதுவரையிலும் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு உதவிசெய்தார். நற்குணமுள்ளவர்கள், தங்களுடைய சொந்த நன்மைகளைவிட, மற்றவர்களுடைய நன்மைகளை அதிகமாய் நாடுவார்கள்.எல்லோரும் ஆசீர்வாதங்களையும் நன்மைகளையும் பெற்றுக்கொண்ட பின்பு, இவர்கள் கடைசியிலே தங்களுக்கு நியமிக்கப்பட்ட நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்கள்.

எபிரோனை சுதந்தரிக்கும்போது, யூதாவின் மனுஷர் எல்லோரும் காலேபுக்கு உதவியாக வருகிறார்கள். எபிரொனிலே ஏனாக்கின்மூன்றுகுமாரர்கள் இருக்கிறார்கள். காலேப் அதிலிருந்த ஏனாக்கின் மூன்று குமாரரையும் துரத்திவிடுகிறார் (நியா 1:20).

யூதாவின் மனுஷர் எபிரோனை காலேபுக்கு கொடுக்கிறார்கள். தனக்கு உதவிசெய்த யூதாவின் மனுஷருக்கு காலேபு நன்றி சொல்லுகிறார். அவர்களுக்கு பிரதி உபகாரம் பண்ண விரும்புகிறார். அக்காலத்தில் தெபீரிலே கானானியர் வாசம்பண்ணுகிறார்கள். யூதாவின் மனுஷர் தெபீரிலுள்ள கானானியரைத் துரத்திவிட்டு, அதை தங்களுக்கு சுதந்தரமாக்கிக்கொள்ளவேண்டும்.

யூதா கோத்திரத்தார் எபிரோனில் குடியிருந்த கானானியரை துரத்திவிட்ட பின்பு அவர்கள், அங்கேயிருந்து தெபீரின் குடிகளுக்கு விரோதமாகப் போகிறார்கள்; முற்காலத்தில் தெபீருக்கு கீரியாத்செப்பேர் என்று பேர் (நியா 1:11). தெபீரின் குடிகளுக்கு விரோதமாக காலேபும் புறப்பட்டுப்போகிறார். தெபீரை சீக்கிரமாய் பிடிப்பதற்காக, காலேபும் உதவிசெய்கிறார்.

அப்பொழுது காலேப்: "கீரியாத்செப்பேரை சங்காரம்பண்ணிப் பிடிக்கிறவனுக்கு என் குமாரத்தியாகிய அக்சாளை விவாகம்பண்ணிக்கொடுப்பேன்" என்று சொல்லுகிறார். அப்பொழுது காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல் அதைப் பிடிக்கிறார்; ஆகையால் காலேப் தன் குமாரத்தியாகிய அக்சாளை ஒத்னியேலுக்கு விவாகம்பண்ணிக்கொடுக்கிறார்.

ஒத்னியேல் தன்னுடைய வீரத்தினால் தெபீரையும் பிடிக்கிறார். காலேபின் மகளையும் மணக்கிறார். தெபீர் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த ஸ்தலம். ஆகையினால் யூதாவின் மனுஷருக்கு, தெபீரின் குடிகளைத் துரத்திவிட்டு, அதை பிடிப்பது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது.

காலேப் நற்குணமுள்ளவர். அவர் தன்னுடைய குமாரத்தி அக்சாளின்மீது பிரியமாயிருக்கிறார். காலேபு தன் குமாரத்தியாகிய அக்சாளை ஒத்னியேலுக்கு விவாகம்பண்ணிக்கொடுத்து, தன் மகளை, தன் மருமகனோடு அனுப்புகிறார்.

அக்சாள் புறப்படுகையில், என் தகப்பனிடத்தில் ஒரு வயல்வெளியைக் கேட்க வேண்டும் என்று ஒத்னியேனிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு, கழுதையின்மேலிருந்து இறங்குகிறாள். காலேப் அவளை நோக்கி: "உனக்கு என்னவேண்டும்" என்று கேட்கிறார்.

அப்பொழுது அக்சாள்: "எனக்கு ஒரு ஆசீர்வாதம் தரவேண்டும்; வறட்சியான நிலத்தை எனக்குத் தந்தீர்; நீர்ப்பாய்ச்சலான நிலங்களையும் எனக்குத் தரவேண்டும்" என்று கேட்கிறாள்; அப்பொழுது காலேப்: மேற்புறத்திலும் கீழ்ப்புறத்திலும் அவளுக்கு நீர்ப்பாய்ச்சலான நிலங்களைக் கொடுக்கிறார் (நியா 1:14,15).

கேனியர் யூதாவின் மனுஷருக்கு மத்தியிலே குடியிருக்கிறார்கள். மற்ற கோத்திரத்தாருக்கு மத்தியில் குடியிருப்பதைவிட, யூதாகோத்திரத்தார் மத்தியில் குடியிருப்பதை கேனியர் விரும்புகிறார்கள். ஏனெனில், யூதா புத்திரர் எல்லோருமே யுத்த புருஷர்கள். அவர்கள் பெலமிக்கவர்கள். அவர்கள் மத்தியில் குடியிருந்தால் பாதுகாப்பாயும், அமைதியாயும் இருக்கலாம் என்று கேனியர் நினைக்கிறார்கள்.

கேனியர் மோசேயின் மாமனாகிய எத்திரோவின் வம்சத்தைச் சேர்ந்தவர்கள். மோசேயின் மாமனாகிய கேனியனின் புத்திரரும் யூதாவின் புத்திரரோடேகூடப் பேரீச்சமரங்களின் பட்டணத்திலிருந்து ஆராத்திற்குத் தெற்கேயிருக்கிற யூதாவின் வனாந்தரத்திற்கு வந்து,ஜனங்களோடே குடியேறுகிறார்கள் (நியா 1:16).

பேரீச்சமரங்களின் பட்டணம் என்பது எரிகோ பட்டணத்தைக் குறிக்கும். இந்தப் பட்டணத்தை யாரும் மறுபடியும் கட்டியெழுப்பக்கூடாது என்று யோசுவா சொல்லியிருந்தார். கேனியரின் புத்திரரோ இதுவரையிலும் கூடாரங்களில் வாசம்பண்ணியவர்கள். இவர்கள் எரிகோவை திரும்பக்கட்டியெழுப்பி அதிலே குடியிருக்கிறார்கள். இவர்கள் இங்கு நிரந்தரமாய்க் குடியிருக்கவில்லை. எரிகோ பட்டணத்திலிருந்து யூதாவின் வனாந்தரத்திற்கு வந்து, யூதாகோத்திரத்தாரோடே குடியேறுகிறார்கள்.

இஸ்ரவேல் மனுஷர் கேனியரின் புத்திரருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுக்கிறார்கள். அவர்கள் அமைதியான சுபாவமுள்ளவர்கள். கேனியர் எங்கே குடியேறவேண்டுமென்று விரும்புகிறார்களோ, அங்கே குடியேறுவதற்கு இஸ்ரவேல் கோத்திரத்தார் அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள். கேனியர் எங்கே குடியிருந்தாலும், தங்களுக்கு கொஞ்சம் வசதியிருந்தாலும், அவர்கள் முறுமுறுக்காமல், போதுமென்ற மனதோடு திருப்தியாயிருப்பார்கள். ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியை சுதந்தரித்துக்கொள்வார்கள். நாம் மற்றவர்களுக்கு தீங்குசெய்யவில்லையென்றால், மற்றவர்களும் நமக்கு தீங்கு செய்யமாட்டார்கள்.

சிமியோன் புத்திரருடைய கோத்திரத்தின் எல்லைப்பகுதியில் கானானியர் இருக்கிறார்கள். யூதாவின் மனுஷர் சிமியோன் புத்திரருக்கு உதவிசெய்து, அவர்களுடைய பங்குவீதத்தை சுதந்தரிப்பதற்கு உதவிசெய்கிறார்கள்.

அவர்கள் சேப்பாத்தில் குடியிருக்கிற கானானியரை முறிய அடித்து, அதைச் சங்காரம் பண்ணி, அந்தப் பட்டணத்திற்கு ஓர்மா என்று பேரிடுகிறார்கள். யூதாகோத்திரத்தார் காசாவையும் அதின் எல்லையையும், அஸ்கலோனையும் அதின் எல்லையையும், எக்ரோனையும் அதின் எல்லையையும் பிடிக்கிறார்கள் (நியா 1:17,18).

ஓர்மா என்னும் பெயருக்கு "அழிவு" என்று பொருள். காசா, அஸ்கலோன், எப்ரோன் ஆகியவை பெலிஸ்தரின் பட்டணங்கள். யூதாகோத்திரத்தார் பெலிஸ்தரின் பட்டணங்களைப் பிடிக்கிறார்கள். ஆனால் அந்தப் பட்டணங்களில் குடியிருக்கிற பெலிஸ்தரை அவர்கள் அழிக்கவில்லை. பிற்காலத்தில் பெலிஸ்தர், யூதாமனுஷருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, தங்களுடைய பட்டணங்களை யூதர்களிடத்திலிருந்து திரும்பவும் பெற்றுக்கொள்கிறார்கள்.

நாம் சத்துருவின் அந்தகார கிரியைகளுக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ணும்போது, அவற்றை முற்றிலுமாய் அழித்துப்போடவேண்டும். அந்தகார சக்திகளை அரையும் குறையுமாக அழிப்பது ஆபத்தானது. இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலுள்ள சத்துருக்களை மொத்தமாய்த் துரத்திவிடவேண்டும். ஆனால் அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படியவில்லை. கானானியர் எல்லோரையும் அவர்கள் மொத்தமாய்த் துரத்தவில்லை. கானானியரில் அநேகர் திரும்பவும் வந்து, இஸ்ரவேல் புத்திரரிடம், தங்களுடைய பட்டணங்களைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறார்கள்.

பென்யமீன் புத்திரர்
நியா 1:21

நியா 1:21. பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் எபூசியர் இந்நாள்மட்டும் பென்யமீன் புத்திரரோடேகூட எருசலேமில் குடியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் மற்ற கோத்திரத்தார், கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ணவில்லை. அவர்களைத் துரத்திவிட்டு தங்களுடைய பங்குவீதத்தை சுதந்தரிக்கவுமில்லை. எருசலேமிலே எபூசியர் குடியிருக்கிறார்கள். எருசலேம் பென்யமீன் புத்திரருக்கு பங்குவீதமாய்க் கொடுக்கப்பட்டது. பென்யமீன் புத்திரர் எருசலேமிலே குடியிருந்த எபூசியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் எபூசியர் இந்நாள்மட்டும் பென்யமீன் புத்திரரோடேகூட எருசலேமில் குடியிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு, யூதாகோத்திரத்தார் முன்மாதிரியாக இருந்தார்கள். யூதாவின் புத்திரர் மலைத்தேசத்திலேயும், தெற்கேயும், பள்ளத்தாக்குகளிலேயும் குடியிருக்கிற கானானியரோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டுப்போனார்கள் (நியா 1:9). ஆனால் பென்யமீன் புத்திரரோ, யூதாவின் புத்திரரைப்போல கானானியரை எதிர்த்து யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகவில்லை. சும்மாயிருந்துவிடுகிறார்கள். பென்யமீன் புத்திரரிடம் தைரியமுமில்லை. தீர்மானமுமில்லை.

யோசேப்பின் குடும்பத்தார் நியா 1:22-26

நியா 1:22. யோசேப்பின் குடும்பத்தாரும் பெத்தேலுக்கு விரோதமாய்ப் போனார்கள்; கர்த்தர் அவர்களோடேகூட இருந்தார்.

நியா 1:23. யோசேப்பின் புத்திரர் பெத்தேலை வேவுபார்க்க ஆட்களை அனுப்பினார்கள்; முன்னே அந்தப் பட்டணத்திற்கு லூஸ் என்று பேர்.

நியா 1:24. அந்த வேவுகாரர் பட்டணத்திலிருந்து புறப்பட்டுவருகிற ஒரு மனுஷனைக் கண்டு: பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை எங்களுக்குக் காண்பி, உனக்குத் தயைசெய்வோம் என்றார்கள்.

நியா 1:25. அப்படியே பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை அவர்களுக்குக் காண்பித்தான்; அப்பொழுது அவர்கள் வந்து, பட்டணத்திலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, அந்த மனுஷனையும் அவன் குடும்பத்தையும் விட்டுவிட்டார்கள்.

நியா 1:26. அப்பொழுது அந்த மனுஷன் ஏத்தியரின் தேசத்திற்குப் போய், ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு லூஸ் என்று பேரிட்டான்; அதுதான் இந்நாள்மட்டும் அதின் பேர்.

யோசேப்பின் குடும்பத்தாரும் பெத்தேலுக்கு விரோதமாய்ப் போகிறார்கள்; கர்த்தர் அவர்களோடேகூட இருக்கிறார். பென்யமீன் கோத்திரத்தாருடைய பட்டணங்களில், பெத்தேலும் ஒரு பட்டணமாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

"பெத்அரபா, செமராயிம், பெத்தேல்" (யோசு 18:22). ஆனாலும் பெத்தேல் பட்டணம் அதன் எல்லையிலிருப்பதினால், இந்தப் பட்டணத்தின் ஒரு பகுதி பென்யமீன் புத்திரருடைய சுதந்தரத்திலும், மீதமுள்ள பகுதி எப்பிராயீம் புத்திரருடைய சுதந்தரத்திலுமுள்ளது.

"அங்கேயிருந்து அந்த எல்லை, பெத்தேலாகிய லூசுக்கு வந்து, லூசுக்குத் தென்பக்கமாய்ப் போய், அதரோத் அதாருக்குத் தாழ்வான பெத்தொரோனுக்குத் தெற்கேயிருக்கிற மலையருகே இறங்கும்" (யோசு 18:13).

யோசேப்பின் குடும்பத்தார் பெத்தேலுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தர் அவர்களோடே கூடயிருக்கிறார். அவர்களோடு கூடயிருக்கிற கர்த்தர், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரோடும் இருப்பார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. அந்தந்த கோத்திரத்தார், கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகவேண்டும். கர்த்தர் தங்களோடு கூடயிருப்பார் என்று நம்பவேண்டும். கர்த்தர் நம்மோடு கூடயிருப்பதே நமக்கு மெய்யான பெலன்.

யோசேப்பின் மனுஷர் பெத்தேலுக்கு விரோதமாய் ஞானமாய் யுத்தம்பண்ணுகிறார்கள். யோசேப்பின் புத்திரர் பெத்தேலை வேவுபார்க்க ஆட்களை அனுப்புகிறார்கள்; முன்னே அந்தப் பட்டணத்திற்கு லூஸ் என்று பேர் (நியா 1:23).

அந்த வேவுகாரர் பட்டணத்திலிருந்து புறப்பட்டுவருகிற ஒரு மனுஷனைக் கண்டு: "பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை எங்களுக்குக் காண்பி, உனக்குத் தயைசெய்வோம்" (நியா 1:24) என்று சொல்லுகிறார்கள்.

இந்த மனுஷனுக்கு பெத்தேல் பட்டணத்திற்குள்ளே போகும் இரகசிய வழிகளெல்லாம் தெரிந்திருக்கிறது. இந்த மனுஷன் பெத்தேல் பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை அவர்களுக்குக் காண்பிக்கிறான்; அப்பொழுது அவர்கள் வந்து, பட்டணத்திலுள்ளவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டுகிறார்கள். அந்த மனுஷனையும் அவன் குடும்பத்தையும் விட்டுவிடுகிறார்கள் (நியா 1:25).

அந்த மனுஷன் இஸ்ரவேல் புத்திரரோடு குடியிருக்கவில்லை. அவன் ஏத்தியரின் தேசத்திற்குப்போகிறான். அங்கே ஒரு பட்டணத்தைக் கட்டி, அதற்கு லூஸ் என்று பேரிடுகிறான்; அதுதான் இந்நாள்மட்டும் அதின் பேர். இது அரபியா தேசத்திலிருக்கிறது. இந்த மனுஷன் புதிய பட்டணத்தைக் கட்டினாலும், இந்தப் பட்டணத்திற்கு, தன்னுடைய பழைய பட்டணமாகிய, பெத்தேலின் பெயராகிய லூஸ் என்றே பெயரிடுகிறான்.

பெத்தேல் என்னும் பெயருக்கு "தேவனுடைய வீடு" என்று பொருள். லூஸ் என்னும் பெயருக்கு "வாதுமை மரம்" என்று பொருள்.

வேவுகாரருக்கு அந்த மனுஷன் உதவிசெய்கிறான். பெத்தேல் பட்டணத்திற்குள் பிரவேசிக்கும் வழியை அவர்களுக்கு காண்பிக்கிறான். பெத்தேலின் மனுஷர் எதிர்பாராத நேரத்திலே, யோசேப்பின் குடும்பத்தார், பெத்தேலுக்குள் பிரவேசித்து, பட்டணத்திலுள்ளவர்களை பட்டயக்கருக்கினாலே வெட்டிப்போடுகிறார்கள்.

இந்த யுத்தத்தை தவிர, யோசேப்பின் குடும்பத்தார் வேறு முக்கியமான யுத்தம் எதுவும் பண்ணியதாக வேதாகமத்தில் சொல்லப்படவில்லை.

மனாசே, எப்பிராயீம், செபுலோன், ஆசேர் கோத்திரத்தார் நியா 1:27-32

நியா 1:27. மனாசே கோத்திரத்தார் பெத்செயான் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், தானாக் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், தோரின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், இப்லெயாம் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், மெகிதோவின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும் துரத்திவிடவில்லை; கானானியர் அந்த தேசத்திலே தானே குடியிருக்கவேண்டும் என்று இருந்தார்கள்.

நியா 1:28. இஸ்ரவேலர் பலத்தபோது, கானானியரை முற்றிலும் துரத்திவிடாமல் பகுதி கட்டப்பண்ணினார்கள்.

நியா 1:29. எப்பிராயீம் கோத்திரத்தார் கேசேரிலே குடியிருந்த கானானியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் கானானியர் கேசேரில் அவர்கள் நடுவே குடியிருந்தார்கள்.

நியா 1:30. செபுலோன் கோத்திரத்தார் கித்ரோனின் குடிகளையும், நாகலோலின் குடிகளையும் துரத்திவிடவில்லை, ஆகையால் கானானியர் அவர்கள் நடுவே குடியிருந்து, பகுதிகட்டுகிறவர்களானார்கள்.

நியா 1:31. ஆசேர் கோத்திரத்தார் அக்கோவின் குடிகளையும், சீதோனின் குடிகளையும், அக்லாப், அக்சீப், எல்பா, ஆப்பீக், ரேகோப் பட்டணங்களின் குடிகளையும் துரத்திவிடவில்லை.

நியா 1:32. ஆசேரியர் தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்; அவர்களை அவர்கள் துரத்திவிடவில்லை.

மனாசே, எப்பிராயீம், செபுலோன், ஆசேர் ஆகிய கோத்திரத்தார், தங்கள் நடுவே குடியிருந்த கானானியரைத் துரத்திவிடவில்லை. மனாசே கோத்திரத்தார் பெத்செயான் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், தானாக் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், துரத்திவிடவில்லை.

மனாசே கோத்திரத்தார் தோரின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், இப்லெயாம் பட்டணத்தாரையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும், மெகிதோவின் குடிகளையும் அதற்கு அடுத்த ஊர்களின் மனுஷரையும் துரத்திவிடவில்லை;

கானானியர் அந்த தேசத்திலே தானே குடியிருக்கவேண்டும் என்று இருக்கிறார்கள். இஸ்ரவேலர் பலத்தபோது, கானானியரை முற்றிலும் துரத்திவிடாமல் பகுதி கட்டப்பண்ணுகிறார்கள் (நியா 1:27,28).

எப்பிராயீம் கோத்திரத்தார் கேசேரிலே குடியிருந்த கானானியரையும் துரத்திவிடவில்லை; ஆகையால் கானானியர் கேசேரில் அவர்கள் நடுவே குடியிருக்கிறார்கள்.

செபுலோன் கோத்திரத்தார் கடல் வழியில் வியாபாரம் பண்ணுவதில் கவனம் செலுத்துகிறார்கள். அவர்களுடைய கடல் துறைக்கு ஏராளமான கப்பல்கள் வந்துபோகும். ஆகையினால் இவர்கள் கித்ரோனின் குடிகளையும், நாகலோலின் குடிகளையும் துரத்திவிடவில்லை. இங்கே இருக்கிற கானானியர் அவர்கள் நடுவே குடியிருந்து, பகுதிகட்டுகிறவர்களாகிறார்கள் (நியா 1:30).

மற்ற கோத்திரத்தாரைவிட ஆசேர் கோத்திரத்தார் கோழைகளாகயிருக்கிறார்கள். இவர்கள் கானானியரை துரத்திவிடுவதற்கு பதிலாக, கானானியருக்கு கீழ்ப்படிகிறார்கள்.

ஆசேர் கோத்திரத்தார் அக்கோவின் குடிகளையும், சீதோனின் குடிகளையும், அக்லாப், அக்சீப், எல்பா, ஆப்பீக், ரேகோப் பட்டணங்களின் குடிகளையும் துரத்திவிடவில்லை. ஆசேரியர் தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருக்கிறார்கள்; அவர்களை அவர்கள் துரத்திவிடவில்லை (நியா 1:31,32).

நப்தலி, தாண் கோத்திரத்தார் நியா 1:33-36

நியா 1:33. நப்தலி கோத்திரத்தார் பெத்ஷிமேசின் குடிகளையும் பெத்தானாத்தின் குடிகளையும் துரத்திவிடாமல், தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருந்தார்கள்; பெத்ஷிமேஸ், பெத்தானாத் பட்டணங்களின் குடிகள் அவர்களுக்குப் பகுதிகட்டுகிறவர்களானார்கள்.

நியா 1:34. எமோரியர் தாண் புத்திரரைப் பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாமல், மலைத்தேசத்திற்குப் போகும்படி நெருக்கினார்கள்.

நியா 1:35. எமோரியர் ஏரேஸ் மலைகளிலும் ஆயலோனிலும் சால்பீமிலும் குடியிருக்க வேண்டும் என்று இருந்தார்கள்; ஆனாலும் யோசேப்பின் குடும்பத்தாரின் கை பலத்தபடியினால், அவர்களுக்குப்பகுதி கட்டுகிறவர்களானார்கள்.

நியா 1:36. எமோரியரின் எல்லை அக்கராபீமுக்குப் போகிற மேடுதொடங்கி அதற்கு அப்புறமும் போயிற்று.

கானானியர் தங்கள் மத்தியிலே குடியிருப்பதற்கு நப்தலி கோத்திரத்தார் அனுமதி கொடுக்கிறார்கள். கானானியர்கள் தங்களுக்கு பகுதி கட்டினால், அதுவே தங்களுக்கு பெருத்த வருமானம் என்று நினைக்கிறார்கள்.

நப்தலி கோத்திரத்தார் பெத்ஷிமேசின் குடிகளையும் பெத்தானாத்தின் குடிகளையும் துரத்திவிடாமல், தேசத்தின் குடிகளாகிய கானானியரின் நடுவே குடியிருக்கிறார்கள்; பெத்ஷிமேஸ், பெத்தானாத் பட்டணங்களின் குடிகள் அவர்களுக்குப் பகுதிகட்டுகிறவர்களாகிறார்கள் (நியா 1:33).

தாண் கோத்திரத்தார் இதுவரையிலும் கானானியருக்கு விரோதமாய் எதிர்த்து நின்று யுத்தம்பண்ணினார்கள். அவர்களுக்கு மலைத்தேசங்களில் வெற்றி கிடைத்தது. ஆனாலும் பள்ளத்தாக்குகளிலுள்ள எமோரியரை தாண் கோத்திரத்தாரால் துரத்திவிட முடியவில்லை. ஒருவேளை பள்ளத்தாக்கிலுள்ளவர்களிடத்தில் இருப்பு இரதங்கள் இருந்திருக்கலாம். இதனால் எமோரியர் தாண் புத்திரரை பள்ளத்தாக்கில் இறங்கவொட்டாமல், மலைத்தேசத்திற்குப் போகும்படி நெருக்குகிறார்கள் (நியா 1:34).

யாக்கோபு தன்னுடைய புத்திரரை ஆசீர்வதிக்கும்போது, யூதாவை சிங்கத்திற்கும், தாணை சர்ப்பத்திற்கும் ஒப்பிட்டுச்சொன்னார். யூதாகோத்திரத்தாரிடம் சிங்கத்தைப்போன்ற பெலம் இருக்கிறது. அவர்கள் தைரியமாய் யுத்தம்பண்ணி சத்துருக்களைத் துரத்திவிடுகிறார்கள். தாண் புத்திரரோ சர்ப்பத்தைப்போல தந்திரமுள்ளவர்களாயிருந்தாலும், அவர்களால் கானானியரை துரத்திவிட முடியவில்லை.

சூதும், வாதும், கபடும், தந்திரமும் ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. நேர்மையும், உண்மையும், கடின உழைப்பும், கர்த்தர்மீது வைக்கும் விசுவாசமுமே நமது வெற்றிக்கு ஆதாரம்.

எமோரியர் ஏரேஸ் மலைகளிலும் ஆயலோனிலும் சால்பீமிலும் குடியிருக்க வேண்டும் என்று இருக்கிறார்கள்; ஆனாலும் யோசேப்பின் குடும்பத்தாரின் கை பலத்தபடியினால், அவர்களுக்குப்பகுதி கட்டுகிறவர்களாகிறார்கள். எமோரியரின் எல்லை அக்கராபீமுக்குப் போகிற மேடுதொடங்கி அதற்கு அப்புறமும் போயிற்று (நியா 1:35,36).

இஸ்ரவேல் புத்திரர், பொதுவாக, நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு கொடுத்திருக்கிற பொறுப்புக்களை அவர்கள் நிறைவேற்றவில்லை. அவர்களிடத்தில் கவனக்குறைவும், அக்கறையின்மையும் காணப்படுகிறது.

கானானியர் தங்கள் சுதந்தரத்தைவிட்டு தாங்களாகவே ஓடிப்போய்விடுவார்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் எதிர்பார்க்கிறார்கள். கானானியரைத் துரத்துவதற்கு தாங்கள் என்ன செய்யவேண்டுமென்று கர்த்தர் கட்டளைகொடுத்திருக்கிறாரோ, அதற்கு அவர்கள் கீழ்ப்படியவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தர்மீது நம்பிக்கையுமில்லை.

நாற்பது வருஷங்களுக்கு முன்பாக, இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. ஆனால் கர்த்தர் தங்களுக்கு கொடுத்த நல்ல வாய்ப்பை, அவர்கள் தங்களுடைய அவிசுவாசத்தினால் கெடுத்துப்போட்டார்கள். வனாந்தரத்திலே நாற்பது வருஷங்களாக சுற்றி அலைந்தார்கள். நாற்பது வருஷங்களுக்கு பின்பு, இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு, மறுபடியும் அவிசுவாசமே சோதனையாயிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய வல்லமையையும், அவருடைய வாக்குத்தத்தத்தையும் நம்பவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரையும், அவருடைய வார்த்தைகளையும் நம்பாமல், தங்களுக்குத் தாங்களே கேடு வரவழைத்துக்கொள்கிறார்கள். பல சிக்கல்களில் சிக்கிக்கொள்கிறார்கள். சோதனைகளில் விழுகிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்பினால் செழித்திருப்பார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள்.

2 அதிகாரம்

கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேல் புத்திரரோடு பேசுகிறார் (நியா 2:1-5). நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரருடைய ஆவிக்குரிய நிலமையைப்பற்றி இங்கு விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. யோசுவாவின் நாட்களிலே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடந்தார்கள். யோசுவாவுக்கு பின்பு, உயிரோடிருந்த இஸ்ரவேலின் மூப்பர் கர்த்தரை சேவித்தார்கள் (நியா 2:6-10).

இந்தக் காலத்திற்கு பின்பு இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். பாகால்களை சேவிக்கிறார்கள் (நியா 2:11-13). கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராயிருக்கிறார். அவர்கள்மீது தம்முடைய நியாயத்தீர்ப்பை அனுப்புகிறார் (நியா 2:14,15).

இஸ்ரவேல் புத்திரர் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய வேதனைகளைப் பார்த்து மனதிரங்கி, அவர்களை இரட்சிப்பதற்கு நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறார் (நியா 2:16-18). இஸ்ரவேல் புத்திரரோ நியாயாதிபதிகளின் சொல்லைக் கேட்கவில்லை. அவர்கள் அந்நிய தேவர்களைப் பின்பற்றி சோரம் போகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபமும் நியாயத்தீர்ப்பும் அவர்கள்மேல் வருகிறது (நியா 2:17-19). இஸ்ரவேல் புத்திரர்மீது கர்த்தருடைய கோபம் வந்திருப்பதினால், அவர்களால் சத்துருக்களைத் துரத்த முடியவில்லை. அவர்களுக்கு யுத்தங்களில் ஜெயம் கிடைக்கவில்லை (நியா 2:20-23).

கர்த்தருடைய தூதனானவர்
நியா 2:1-5

நியா 2:1. கர்த்தருடைய தூதனானவர் கில்காலிலிருந்து போகீமுக்கு வந்து: நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டு வந்து விட்டு, உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை என்றும்,

நியா 2:2. நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக் கடவீர்கள் என்றும் சொன்னேன்; ஆனாலும் என் சொல்லைக் கேளாதேபோனீர்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்?

நியா 2:3. ஆகையால் நான் அவர்களை உங்கள் முகத்திற்கு முன்பாகத் துரத்துவதில்லை என்றேன்; அவர்கள் உங்களை நெருக்குவார்கள்; அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள் என்றார்.

நியா 2:4. கர்த்தருடைய தூதனானவர் இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் எல்லாரோடும் சொல்லுகையில், ஜனங்கள் உரத்த சத்தமிட்டு அழுதார்கள்.

நியா 2:5. அவ்விடத்திற்குப் போகீம் என்று பேரிட்டு, அங்கே கர்த்தருக்குப் பலியிட்டார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது பிரியமாயிருக்கிறார். அவர்களுக்கு பரலோகத்திலிருந்து தம்முடைய செய்திகளை அனுப்புகிறார். இது இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிற மிகப்பெரிய சிலாக்கியம். கர்த்தருடைய செய்திகள் இஸ்ரவேல் புத்திரருக்கு உபதேசங்களாகவும், போதனைகளாகவும், அவர்களுடைய தப்பிதங்களினிமித்தம் அவர்களை கடிந்துகொள்வதாகவும் இருக்கிறது.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு தம்முடைய பிரமாணங்களை எழுதிக்கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய பிரமாணங்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக வாசிக்கப்படும். இது அவர்களுக்கு கிடைத்திருக்கிற பெரிய ஆசீர்வாதம். இந்த ஆசீர்வாதத்தோடு, கர்த்தருடைய வார்த்தைகளை தங்கள் செவிகளால் கேட்கும் ஆசீர்வாதமும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைத்திருக்கிறது.

"நீங்கள் வலதுபுறமாய்ச் சாயும்போதும், இடதுபுறமாய்ச் சாயும்போதும்: வழி இதுவே, இதிலே நடவுங்கள் என்று உங்களுக்குப் பின்னாலே சொல்லும் வார்த்தையை உங்கள் காதுகள் கேட்கும்" (ஏசா 30:21).

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அனலுமில்லாமல், குளிருமில்லாமல் நிர்விசாரமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் உற்சாகமில்லை. கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. கர்த்தரை நம்பும் விசுவாசமில்லை. கர்த்தருடைய தூதனானவர் அவர்களுடைய ஆவிக்குரிய பின்மாற்றத்தை அவர்களுக்கு உணர்த்துகிறார். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் அவர்கள் மறுபடியும் உயிர்பெற்று எழும்புவதற்கு, அவர்கள் என்ன செய்யவேண்டும் என்னும் ஆலோசனைகளையும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவரே, இஸ்ரவேல் ஜனத்தாரிடம் நேரடியாக வந்து பேசுகிறார். இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பதற்காக கர்த்தர் அவ்வப்போது நியாயாதிபதிகளை எழுப்புகிறார். கிதியோன், சிம்சோன் ஆகியோர் நியாயாதிபதிகளில் பிரபல்யமானவர்கள். கர்த்தர் நியாயாதிபதிகள் மூலமாயும் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் பேசுகிறார். கர்த்தருடைய தூதனானவரும் அவர்களோடு பேசுகிறார்.

கர்த்தருடைய இஸ்ரவேல் ஜனங்கள் அவருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தருக்கு பரிசுத்தமானவர்கள். இஸ்ரவேல் புத்திரர் பாவங்களிலும், கண்ணிகளிலும் விழுந்துவிடக்கூடாது. இதற்காக அவர்களை எப்படியெல்லாம் எச்சரிக்கவேண்டுமோ, அப்படியெல்லாம் எச்சரித்து, கர்த்தர் அவர்களுக்கு ஆலோசனை சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தம்முடைய வார்த்தைகளை சொல்லுகிறார் (நியா 2:4). பிரசங்கியாரும் பெரியவர். அவருடைய பிரசங்கச் செய்தியைக் கேட்கிறவர்களும் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் போகீமிலிருக்கிறார்கள். "போகீம்" என்னும் பெயருக்கு "அழுகிறவர்கள்" என்று பொருள். கர்த்தருடைய தூதனானவர், இஸ்ரவேல் புத்திரரை, போகீமில் சந்திப்பது மிகவும் பொருத்தமாயிருக்கிறது. அவர்களெல்லோரும் தங்கள் பாவங்களுக்காக இங்கே மனம் வருந்தி அழவேண்டும்.

கர்த்தருடைய தூதனானவர், இஸ்ரவேல் ஜனத்தாருடைய பாவங்களினிமித்தம், அவர்களைக் கடிந்துகொள்கிறார். அவர்களை எச்சரிக்கிறார். கர்த்தருடைய தூதனானவர் இந்த வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரர் எல்லாரோடும் சொல்லுகையில், ஜனங்கள் உரத்த சத்தமிட்டு அழுகிறார்கள் (நியா 2:4).

பிரசங்கச் செய்தி மிகவும் சுருக்கமாக இருக்கிறது. ஆனாலும் இந்தச் செய்தி மிகவும் தெளிவாகயிருக்கிறது. செய்தி அவர்களுடைய இருதயத்தைத் தொடுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இதுவரையிலும் செய்ததை, இங்கு மறுபடியுமாக அவர்களுக்கு நினைவுபடுத்துகிறார்.

"நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டு வந்து விட்டு, உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை என்றும், நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக்கடவீர்கள்" (நியா 2:1,2) என்று கர்த்தர் சொல்கிறார்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய சொல்லைக் கேளாதே போகிறார்கள் "ஏன் இப்படிச் செய்தீர்கள்?" (நியா 2:2) என்று கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேல் புத்திரரிடம் கேட்கிறார்.

எகிப்து தேசம் அடிமைத்தனத்தின் தேசம். இது பாடுகளின் தேசம். இது அப்பக்குறைவுள்ள பஞ்ச தேசம். கர்த்தரோ அவர்களை எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறார். கானான் தேசமோ இளைப்பாறுகிற தேசம். சுதந்தரமான தேசம். பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம்.

கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்து, "உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை" (நியா 2:1) என்று சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய உடன் படிக்கைக்கு உண்மையுள்ள வராயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரும் கர்த்தருக்கும், அவருடைய உடன் படிக்கைக்கும் உண்மையுள்ளவர் களாயிருக்கவேண்டும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை கானான் தேசத்திற்கு அழைத்து வந்து, அவர்களோடு உடன்படிக்கை பண்ணி, "நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கை பண்ணாமல், அவர்கள் பலி பீடங்களை இடித்துவிடக்கடவீர்கள்" (நியா 2:2) என்றும் சொன்னார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படியவேண்டும். கானானியர் கர்த்தருடைய சத்துருக்கள். கர்த்தருக்கு சத்துருவாயிருக்கிறவர்கள், கர்த்தருடைய பிள்ளைகளுக்கும் சத்துருவாயிருக்கவேண்டும்.

கானான் தேசத்திலே விக்கிரகங்களின் பலிபீடங்கள் இருக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரர் அந்த பலிபீடங்களை இடித்துப்போடவேண்டும். அவற்றை இடிக்காமல் விட்டுவைத்தால், அந்தப் பலிபீடத்தின்மேல் விக்கிரகங்களுக்கு பலியிடவேண்டும் என்னும் சோதனை இஸ்ரவேல் புத்திரருக்கு வரும். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிவதே, சோதனையிலிருந்தும், பாவத்திலிருந்தும் தப்பிப்பதற்கு உன்னதமான வழி.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம் தம்முடைய கட்டளையை மிகவும் தெளிவாகச் சொல்லுகிறார். அவர்களுக்கு புரியும் விதமாகப் பேசுகிறார். அவர்களுக்கு நன்மை உண்டாகவே கர்த்தர் இந்தக் கட்டளையை அவர்களுக்கு கொடுக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய சொல்லைக் கேளாதே போகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய கட்டளையை உறுதியான வார்த்தைகளினால் சொன்னாலும், இஸ்ரவேல் ஜனங்கள், கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியக்கூடாது என்று தீர்மானமாயிருக்கிறார்கள். அவர்களும் தங்கள் தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறார்கள்.

கர்த்தருக்கு சிறிய காரியத்தில் கீழ்ப்படியாதவர்கள், பெரிய காரியத்தில் நிச்சயமாய்க் கீழ்ப்படியமாட்டார்கள். கொஞ்சத்தில் உண்மையில்லாதவர்கள், அநேகத்தின்மேல் நிச்சயமாகவே உண்மை யுள்ளவர்களாயிருக்கமாட்டார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். அவர்கள் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். அவர்களுடைய இருதயங்களில் கர்த்தரைத் துதிக்கும் துதிகளும், ஸ்தோத்திரங்களும், நன்றியும் நிரம்பியிருக்கவேண்டும். ஆனால் அவர்களுடைய இருதயங்களில் மதியீனமும், கீழ்ப்படியாமையும், கலகுணமும், முரட்டாட்டமும், அவிசுவாசமும் நிரம்பியிருக்கிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய சொல்லைக் கேளாதே போகிறார்கள். கர்த்தர் அவர்களிடம், "ஏன் இப்படி செய்தீர்கள்" என்று கேட்கிறார். மேலும் கர்த்தர் அவர்களிடம், "நான் அவர்களை உங்கள் முகத்திற்கு முன்பாகத் துரத்துவதில்லை" என்று சொல்லுகிறார். மேலும் "அவர்கள் உங்களை நெருக்குவார்கள்; அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள்" என்றும் கர்த்தர் அவர்களிடத்தில் கானானியரைப்பற்றிச் சொல்லுகிறார் (நியா 2:3).

கர்த்தருக்கு சத்துருவாகயிருக்கிறவர்களிடம் நாம் சிநேகமாயிருக்கக்கூடாது. அப்படிப்பட்ட சத்துருக்களோடு சிநேகமாயிருப்பதினால் தங்களுக்கு நன்மை உண்டாகும் என்று நினைக்கிறவர்கள் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொள்கிறார்கள். நம்முடைய ஆசீர்வாதங்கள் கர்த்தரிடத்திலிருந்து மாத்திரமே வரும். கர்த்தருடைய சத்துருக்களிடமிருந்து நமக்கு ஒருபோதும் நன்மை வரப்போவதில்லை. சத்துருக்கள் நமக்கு உதவிசெய்வதுபோல செய்வார்கள். ஆனால் அந்த உதவிகள் நம்மை விழவைக்கும் கண்ணியாகவும், வலையாகவும், படுகுழியாகவும் இருக்கும்.

கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேல் ஜனத்தாரிடம் மிகவும் தெளிவாக பிரசங்கம்பண்ணுகிறார். இந்தச் செய்தி இஸ்ரவேல் புத்திரருடைய இருதயத்தில் பதிகிறது. கர்த்தருடைய தூதனானவர் தங்களுக்கு பிரசங்கம்பண்ணுகையில், இஸ்ரவேல் ஜனத்தார் உரத்த சத்தமிட்டு அழுகிறார்கள். பிரசங்கம் நடைபெறும்போதே அழுகையும் நடைபெறுகிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் உரத்த சத்தமிட்டு அழுதால் மாத்திரம் போதாது. அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்படவேண்டும். இருதயம் புதுப்பிக்கப்படாமல், எவ்வளவு உரத்த சத்தமாய் அழுதாலும், அதனால் ஒரு பிரயோஜனமுமில்லை. கர்த்தருடைய தூதனானவர் தங்களுக்கு சொன்ன செய்தியைக் கேட்டு, இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் வீட்டிற்குப்போய், கர்த்தர் சொன்ன பிரகாரம், அந்நிய தெய்வங்களின் பலிபீடங்களையெல்லாம் இடித்துப்போடவேண்டும். ஆனால் அவர்கள் அப்படி செய்யவில்லை.

கர்த்தருடைய தூதனானவர் பிரசங்கம்பண்ணும்போது, ஜனங்கள் உணர்ச்சிவசப்பட்டு, உரத்த சத்தமிட்டு அழுகிறார்கள். வீட்டிற்குப்போகும் முன்பு, அவர்களுடைய ஆவிக்குரிய அனல் அவிந்துபோகிறது. மறுபடியும் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய வார்த்தையினால் இஸ்ரவேல் ஜனங்களை உருக்குகிறார். அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக உருவாக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். ஆனால் உருக்கப்பட்ட அவர்களை, கர்த்தர் உருவாக்கும் முன்பாக, அவர்களுடைய இருதயம் மறுபடியுமாய் கடினமாகிவிடுகிறது.

இஸ்ரவேல் ஜனத்தார் உரத்த சத்தமிட்டு அழுத இடத்திற்கு "போகீம்" என்று பெயரிடுகிறார்கள். இந்தப் பெயருக்கு "அழுகிறவர்கள்" என்று பொருள் (நியா 2:5). இந்த ஸ்தலத்தில் ஜனங்கள் கர்த்தருக்கு பலியிடுகிறார்கள். சீலோவிலே கர்த்தருடைய பலிபீடம் இருக்கிறது. சீலோவிலே பலியிடுவதுபோல, போகீமிலே பலியிடுகிறார்கள்.

யோசுவாவின் காலம்
நியா 2:6-10

நியா 2:6. யோசுவா இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்களை அனுப்பிவிட்டபோது, அவர்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அவரவர் தங்கள் தங்கள் சுதந்தர வீதத்திற்குப் போனார்கள்.

நியா 2:7. யோசுவாவின் சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்த அவருடைய பெரிய கிரியைகளையெல்லாம் கண்டவர்களும், யோசுவாவுக்குப் பின்பு உயிரோடிருந்தவர்களுமாகிய மூப்பரின் சகல நாட்களிலும் ஜனங்கள் கர்த்தரைச் சேவித்தார்கள்.

நியா 2:8. நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தரின் ஊழியக்காரன் நூற்றுப் பத்து வயதுள்ளவனாய் மரணமடைந்தான்.

நியா 2:9. அவனை எப்பிராயீமின் மலைத்தேசத்திலுள்ள காயாஸ் மலைக்கு வடக்கேயிருக்கிற அவனுடைய சுதந்தரத்தின் எல்லையாகிய திம்னாத்ஏரேசிலே அடக்கம்பண்ணினார்கள்.

நியா 2:10. அக்காலத்தில் இருந்த அந்தச் சந்ததியார் எல்லாரும் தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டபின்பு, கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காகச் செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்குப்பின் எழும்பிற்று.

கானானியரும் அவர்களுடைய விக்கிரகங்களும், அவர்களுடைய தேவர்களும் இஸ்ரவேல் புத்திரருக்கு கண்ணிகளாயிருப்பார்கள் (நியா 2:3) என்று கர்த்தருடைய தூதனானவர் எச்சரித்துச் சொன்னார். அவர் சொன்ன பிரகாரமே, கானானியரின் தேவர்கள், இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கண்ணியாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய உடன்படிக்கைக்கும், அவருடைய கட்டளைக்கும் கீழ்ப்படியவில்லை. அவர்கள் தங்கள் நடுவிலிருந்து விக்கிரகங்களையும், பலிபீடங்களையும் இடித்துப்போடவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய சரித்திரத்திலே நடைபெற்ற சம்பவங்கள் இங்கு ஒவ்வொன்றாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் கானான் தேசத்திலே சந்தோஷமாய்க் குடியேறினார்கள். யோசுவா அவர்களுக்கு கானான் தேசத்தை சீட்டுப்போட்டு பங்குவீதமாகப் பிரித்துக்கொடுத்தார். இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு, கானான் தேசத்திலே சுதந்தரத்தைப் பங்கிட்டுக் கொடுத்த பின்பு, யோசுவா இஸ்ரவேல் புத்திரராகிய ஜனங்களை அனுப்பிவிடுகிறார். அவர்கள் தங்கள் தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள, அவரவர் தங்கள் தங்கள் சுதந்தர வீதத்திற்குப்போகிறார்கள் (நியா 2:6).

யோசுவாவின் காலத்திலே, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைசேவிக்கிறார்கள். அவருக்கு நன்றியுள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கிறார்கள்.

யோசுவாவின் சகல நாட்களிலும் கர்த்தர் இஸ்ரவேலுக்காகச் செய்த அவருடைய பெரிய கிரியைகளையெல்லாம் கண்டவர்களும், யோசுவாவுக்குப் பின்பு உயிரோடிருந்தவர்களுமாகிய மூப்பரின் சகல நாட்களிலும் ஜனங்கள் கர்த்தரைச் சேவிக்கிறார்கள் (நியா 2:7).

யோசுவாவின் காலத்திலே, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் கர்த்தருக்கு பயப்படும் பயம் இருக்கிறது. அவர்கள் கர்த்தர்மீது விசுவாசம் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்துகிறார்கள். யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயும், பிரியமுள்ளவர்களாயும், பிரயோஜனமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

நூனின் குமாரனாகிய யோசுவா என்னும் கர்த்தரின் ஊழியக்காரர் நூற்றுப் பத்து வயதுள்ளவராய் மரணமடைகிறார். அவரை எப்பிராயீமின் மலைத்தேசத்திலுள்ள காயாஸ் மலைக்கு வடக்கேயிருக்கிற அவருடைய சுதந்தரத்தின் எல்லையாகிய திம்னாத்ஏரேசிலே அடக்கம்பண்ணுகிறார்கள்.

யோசுவா மரித்த பின்பு, இஸ்ரவேல் ஜனத்தாருடைய ஆவிக்குரிய ஜீவியம் சீர்கெட்டுப்போகிறது. அவர்கள் கர்த்தரைவிட்டுப் பின்வாங்கிப்போகிறார்கள். யோசுவாவுக்கு பின்னாலே, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே வேறொரு சந்ததி எழும்புகிறது. இந்த சந்ததியார் கர்த்தரையும் அறியவில்லை. கர்த்தர் இஸ்ரவேலுக்காக செய்த ஏராளமான நன்மைகளையும் அறியவில்லை.

யோசுவாவும் மரணமடைந்தார். அவருடைய காலத்தில் உயிரோடிருந்த இஸ்ரவேல் சந்ததியார் எல்லோரும் மரணமடைந்து, தங்கள் பிதாக்களுடன் சேர்க்கப்பட்டார்கள். இதன் பின்பு கர்த்தரையும், அவர் இஸ்ரவேலுக்காக செய்த கிரியையையும் அறியாத வேறொரு சந்ததி அவர்களுக்கு பின் எழும்பிற்று (நியா 2:10). இந்தப் புதிய சந்ததியார், முற்றிலும் உலகப்பிரகாரமான ஜனமாயிருக்கிறார்கள். மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதே இவர்களுக்கு பிரியமாயிருக்கிறது. இவர்கள் ஆடம்பர பிரியராயிருக்கிறார்கள்.

இந்தப் புதிய சந்ததியார் இஸ்ரவேல் புத்திரராயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை அறியாதவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் அந்நிய தெய்வங்களைப் பின்பற்றுகிறார்கள். விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல் பாவத்திலே ஜீவிக்கிறார்கள். இந்த சந்ததியார் மத்தியிலே, கர்த்தருக்கு விரோதமான பாவங்களும், அநியாயங்களும், அக்கிரமங்களும் தாராளமாய் நிரம்பியிருக்கிறது.

பாகால்கள்
நியா 2:11-15

நியா 2:11. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து,

நியா 2:12. தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள்.

நியா 2:13. அவர்கள் கர்த்தரை விட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவித்தார்கள்.

நியா 2:14. அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி, அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்கக்கூடாதபடி கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் அவர்களை ஒப்புக்கொடுத்து, அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போட்டார்.

நியா 2:15. கர்த்தர் சொல்லியபடியும், கர்த்தர் அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும், அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம் கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருந்தது; மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் ஜனங்கள் கர்த்தரைவிட்டு, பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். கர்த்தரைப் பின்பற்றாமல் அந்நிய தேவர்களைப் பின்பற்றுகிறார்கள். அவர்கள் தீங்கு செய்கிறார்கள்.

கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, அவரைக் கோபப்படுத்துவதே மிகப்பெரிய தீங்கு. கர்த்தரைக் கோபப்படுத்துகிறவர்கள் தங்களுடைய சுயவிருப்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இவர்கள் கர்த்தருடைய விருப்பத்திற்கும், சித்தத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பதில்லை.

இஸ்ரவேல் புத்திரர், தங்கள் தேவனாகிய கர்த்தரை விட்டுவிடுகிறார்கள் (நியா 2:12). அவர்கள் கர்த்தரைவிட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள் (நியா 2:13). கர்த்தரை சேவியாமல், விக்கிரகங்களை சேவிப்பது மிகப்பெரிய பாவம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு உடன்படிக்கையில் இணைந்திருக்கிறார்கள். ஆனால் கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். மணவாட்டி தன்னுடைய மணவாளனை விட்டு விட்டு, வேறு புருஷரோடு ஓடிப்போவதுபோல, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு பாகாலையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள்.

"என் ஜனங்கள் இரண்டு தீமைகளைச் செய்தார்கள்; ஜீவத்தண்ணீர் ஊற்றாகிய என்னை விட்டுவிட்டார்கள்; தண்ணீர் நிற்காத தொட்டிகளாகிய வெடிப்புள்ள தொட்டிகளைத் தங்களுக்கு வெட்டிக் கொண்டார்கள்" (எரே 2:13).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை சேவியாமல், அவரை விட்டு விலகிப்போகும்போது, நாஸ்திகர்களாக மாறவில்லை. அவர்கள் தேவன் இல்லை என்று சொல்லவில்லை. அவர்கள் கர்த்தரை சேவியாமல் பாகால்களை சேவிக்கிறார்கள். அந்நிய தெய்வங்களை சேவிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் ஒருவரே. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுக்கு ஏராளமான அந்நிய தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள். விக்கிரகங்களின் எண்ணிக்கையைப் பெருக்குகிறார்கள்.

"பாகால்" என்னும் பெயருக்கு "தெய்வங்கள்" என்று பொருள். "அஸ்தரோத்" என்னும் பெயருக்கு, "ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" என்று பொருள். இரண்டுமே பன்மைப்பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். ஒன்றாகிய மெய்த்தேவனாகிய கர்த்தரை விட்டுவிடுகிறார்கள். கர்த்தருக்குப் பதிலாக தங்களுக்கு ஏராளமான தெய்வங்களை உண்டுபண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே, அவர்களுடைய முற்பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணினவர். கர்த்தரே அவர்களை கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தவர். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ தங்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணிந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டுகிறார்கள் (நியா 2:12).

கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராயிருக்கிறார். அவர்களைத் தண்டிக்கிறார். அவர்கள் அப்புறம் தங்கள் சத்துருக்களுக்கு முன்பாக நிற்க முடியவில்லை. கர்த்தர் அவர்களை, கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையில் ஒப்புக்கொடுக்கிறார். அவர்களைச் சுற்றிலும் இருக்கிற அவர்கள் பகைஞரின் கையிலே விற்றுப்போடுகிறார் (நியா 2:14).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஆசீர்வதித்தார். அவர்களுக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். அவர்கள் கால்மிதிக்கிற தேசமெல்லாம் அவர்களுக்கு சொந்தமாகும் என்று வாக்குப்பண்ணினார். கர்த்தர் அவர்களுடைய சத்துருக்களோடு அவர்களுக்காக யுத்தம்பண்ணினார். இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தருடைய கிருபையினால், கானானியரைத் துரத்தினார்கள்.

ஆனால் இப்போதோ கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். அவர்கள் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம், கர்த்தருடைய கை, அவர்களுக்கு விரோதமாக தீமைக்கென்றே இருக்கிறது. அவர்கள் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை காரணமில்லாமல் தண்டிக்கவில்லை. கர்த்தர் நீதியும் நியாயமுமுள்ளவர். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு நீதியானது. கர்த்தர் ஏற்கெனவே இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லியபடியும், அவர்களுக்கு ஆணையிட்டிருந்தபடியும் அவர்களைத் தண்டிக்கிறார் (நியா 2:15).

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். பாகால்களையும் அஸ்தரோத்தையும் சேவிக்கிறார்கள். சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். ஆனால் இந்த யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கவில்லை. ஜெயம் கர்த்தரால் மாத்திரமே வரும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர்மீது கோபமாயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தைக் கட்டளையிடாமல், அவர்களுடைய சத்துருக்களுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார்.

புறஜாதி ஜனங்கள் கர்த்தரை அறியாதவர்கள். அவர்கள் கர்த்தரை சேவியாதவர்கள். ஆனாலும் கர்த்தர் அவர்களுக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரை அறிந்திருக்கிறவர்கள். ஆனால் அவர்கள் இப்போது கர்த்தரைவிட்டு விலகிப்போனவர்கள். தம்மைவிட்டு விலகிப்போன இஸ்ரவேல் ஜனங்களுக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கொடுப்பதற்கு பதிலாக, தம்மை அறியாத அந்நிய ஜாதியாருக்கு ஜெயத்தைக் கொடுப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

இப்போது இஸ்ரவேல் புத்திரர் புறப்பட்டுப்போகிற இடமெல்லாம், கர்த்தருடைய கை தீமைக்கென்றே அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது. துரத்தப்பட்ட கானானியர் இப்போது இஸ்ரவேல் புத்திரரைத் துரத்துகிறார்கள். யுத்தத்திலே தோற்றுப்போன கானானியர், இப்போது ஜெயிக்கிறார்கள். கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், பாதுகாப்பும், பராமரிப்பும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைக்கவில்லை. இதுவே இஸ்ரவேல் புத்திரருடைய தோல்விக்கும், கானானியருடைய ஜெயத்திற்கும் அடிப்படை காரணம்.

நியாயாதிபதிகள்
நியா 2:16-23

நியா 2:16. கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணினார்; அவர்கள் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்தார்கள்.

நியா 2:17. அவர்கள் தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்துகொண்டார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போனார்கள்.

நியா 2:18. கர்த்தர் அவர்களுக்கு நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறபோது, கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்துவருவார்; அவர்கள் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறதினாலே, கர்த்தர் மனஸ்தாபப்படுவார்.

நியா 2:19. நியாயாதிபதி மரணமடைந்த உடனே, அவர்கள் திரும்பி, அந்நிய தேவர்களைப் பின்பற்றவும் சேவிக்கவும் பணிந்து கொள்ளவும், தங்கள் பிதாக்களைப்பார்க்கிலும் கேடாய் நடந்து, தங்கள் கிரியைகளையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருப்பார்கள்.

நியா 2:20. ஆகையால் கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி: இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான் கற்பித்த என்உடன்படிக்கையை மீறி என் சொல்லைக் கேளாதேபோனபடியால்,

நியா 2:21. யோசுவா மரித்துப் பின்வைத்துப் போன ஜாதிகளில் ஒருவரையும், நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி விடாதிருப்பேன்.

நியா 2:22. அவர்கள் பிதாக்கள் கர்த்தரின் வழியைக் கவனித்ததுபோல, அவர்கள் அதிலே நடக்கும்படிக்கு, அதைக் கவனிப்பார்களோ இல்லையோ என்று, அவர்களைக்கொண்டு இஸ்ரவேலைச் சோதிப்பதற்காக அப்படிச் செய்வேன் என்றார்.

நியா 2:23. அதற்காகக் கர்த்தர் அந்த ஜாதிகளை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும், அவைகளைச் சீக்கிரமாய்த் துரத்திவிடாமலும் விட்டுவைத்தார்.

கர்த்தர் கிருபையும் இரக்கமுமுள்ளவர். அவருடைய கிருபைக்கு அளவே இல்லை. இஸ்ரவேல் புத்திரர் மிகவும் நெருக்கப்பட்டபோது, கர்த்தர் அவர்களுக்காக மனஸ்தாபப்படுகிறார். அவர்களுடைய நெருக்கத்திற்கும், பாடுகளுக்கும், அவர்களுடைய பாவங்களும், அக்கிரமங்களுமே காரணம். அவர்கள் தங்களுடைய மதியீனத்தினால், தங்களுக்குத் தாங்களே கேடு வரவழைத்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அதிகமாய் நெருக்கப்படும்போது, கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும், அவர்களை இரட்சிக்கிறார். கர்த்தர் அவர்களுடைய நெருக்கங்களையும், கஷ்டங்களையும் பார்த்து மனஸ்தாபப்படுவதினாலும், அவருடைய மனவுருக்கத்தினாலும், அவர்களை கஷ்டங்களுக்கு விலக்கி இரட்சிக்கிறார். மனுஷருடைய சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ, சுயமுயற்சியினாலோ, அவர்களுக்கு இரட்சிப்பு வராது. இரட்சிப்பு கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே மனுஷரை இரட்சிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டுவிலகி, விக்கிரகங்களை சேவித்தபோது, கர்த்தர் அவர்கள்மேல் கோபப்படுகிறார். கர்த்தருடைய கை அவர்களுக்கு விரோதமாய்த் தீமைகென்று எழும்புகிறது. அவர்களால் தங்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக நிற்கமுடியவில்லை. விக்கிரகங்களை ஆராதிக்கிற இஸ்ரவேல் ஜனத்தாரை, கர்த்தர் கொள்ளையிடுகிற கொள்ளைக்காரர் கையிலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார். அவர்களுடைய பகைஞரின் கையிலே அவர்களை விற்றுப்போடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு நீதியான தண்டனை கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய நியாயத்தீர்ப்பினால் அவர்கள் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரை இறுக்கப்பிடித்து ஒடுக்குவார்கள். இஸ்ரவேல் புத்திரரும் அவர்கள் நிமித்தமாக தவியாய்த் தவிப்பார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தின் தவிப்பைப் பார்த்து மனஸ்தாபப்படுவார்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களைக் குறித்தோ, அக்கிரமங்களைக் குறித்தோ தங்கள் இருதயங்களில் வேதனைப்படவில்லை. சத்துருக்கள் தங்களை இறுகப்பிடித்து நொறுக்குவதினிமித்தமாகவே, இஸ்ரவேல் புத்திரர் தங்கள் இருதயங்களில் வேதனைப்படுகிறார்கள். அவர்களிடத்தில் தங்கள் பாவங்களைக் குறித்த குற்றவுணர்வு காணப்படவில்லை. தங்கள் நெருக்கத்தினிமித்தமாகவும், ஒடுக்கத்தினிமித்தமாகவும் வேதனைப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக அவர்களுக்கு தண்டனை கொடுக்கப்படுகிறது. இந்தத் தண்டனையை அனுபவிப்பதற்கு அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி, அந்நிய தெய்வங்களைப் பின்பற்றுவதினால் அவர்கள்மீது சாபம் வந்திருக்கிறது. இந்த சாபத்திற்கும் அவர்கள் பாத்திரவான்களாயிருக்கிறார்கள்.

நாம் கர்த்தருடைய கிருபையின் காலத்தில் ஜீவிக்கிறோம். நம்முடைய பாவங்களுக்கு தக்கபடி கர்த்தர் நம்மை உடனே தண்டித்துவிடாமல், நாம் மனந்திரும்புவதற்காக, கர்த்தரை பொறுமையோடு காத்திருக்கிறார். கர்த்தருடைய முழுகோபமும் நம்மீது காண்பிக்கப்படவில்லை. கர்த்தருடைய உக்கிரகோபம் வெளிப்படும்போது, அந்தக் கோபத்தை எந்த மனுஷராலும் தாங்கிக்கொள்ள முடியாது.

இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். சத்துருக்கள் அவர்களைக் கொள்ளையிடுகிறார்கள். அவர்களை கொள்ளையிடுகிறவர்களின் கைகளுக்கு நீங்கலாக்கி இரட்சிப்பதற்காக, கர்த்தர் நியாயாதிபதிகளை எழுப்புகிறார்.

இந்த நியாயாதிபதிகள் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலிருந்தே எழுப்பப்படுகிறார்கள். கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய பிள்ளைகளில் ஒரு சிலரைத் தெரிந்தெடுத்து, அவர்களுக்கு விசேஷித்த கிருபைகளைக் கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பதற்காகவும், அவர்களுடைய பாவங்களைக்குறித்து அவர்களுக்கு உணர்த்துவதற்காகவும், கர்த்தர் தம்முடைய ஊழியக்காரருக்கு விசேஷித்த தகுதிகளைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளை பெற்றிருக்கிற ஊழியக்காரர்கள், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக ஊழியம் செய்யவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். அவர்களிடத்தில் மனப்பெருமையோ, மனமேட்டிமையோ இருக்கக்கூடாது. அவர்கள் மனத்தாழ்மையோடு ஊழியம் செய்யவேண்டும். கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், அவருடைய ஜனத்தின் பிரயோஜனத்திற்காகவும் ஊழியம் செய்யவேண்டும்.

நியாயாதிபதிகள் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறார்கள். கர்த்தர் நியாயாதிபதிகளோடு கூடயிருக்கிறார். கர்த்தரே நியாயாதிபதிகளை எழுப்பியிருக்கிறார். இவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள்.

சபையிலே குழப்பமும், அவிசுவாசமும், பாவமும் அதிகரிக்கும்போது, விசுவாசிகளை சீர்படுத்துவதற்காக, கர்த்தர் விசேஷித்த ஊழியக்காரர்களை எழுப்புகிறார். விசுவாசிகளுக்கு ஏராளமான பிரச்சனைகள் இருக்கும்போது, கர்த்தருடைய ஊழியக்காரர்கள், விசுவாசிகளின் பிரச்சனைகள் நீங்குவதற்கு ஆவிக்குரிய ஆலோசனைகளைச் சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவர்களிடத்தில் காணப்படுகிற குழப்பங்களையும், தாறுமாறுகளையும் நீக்கிப்போட்டு, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தை சீர்படுத்துவதற்கு உதவிசெய்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு விசேஷித்த ஞானத்தையும், தைரியத்தையும் கொடுக்கிறார். அவர்களுடைய இருதயம் கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற இருதயமாயிருக்கும். அவர்கள் முழுஇருதயத்தோடு கர்த்தருக்கு ஊழியம் செய்வார்கள். கர்த்தருடைய சித்தத்தையும் திட்டத்தையும் நிறைவேற்றுவார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினாலேயே ஊழியக்காரர்களை எழுப்புகிறார். அவர்களுக்கு ஆவிக்குரிய வரங்களையும் கொடுக்கிறார்.

தங்கள் தேசத்திற்கு ஆசீர்வாதமாயிருக்கிறவர்கள், கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளைப் பெற்றிருக்கிறார்கள். இவர்கள் கர்த்தரால் கொடுக்கப்பட்ட ஈவாகயிருக்கிறார்கள்.

கர்த்தர் நியாயாதிபதிகளை எழும்பப்பண்ணுகிறார். அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தாரை, கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார்கள். அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளைப் போதிக்கிறார்கள். ஆவிக்குரிய சத்தியங்களை உபதேசம்பண்ணுகிறார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் ஜனத்தார், தங்கள் நியாயாதிபதிகளின் சொல்லைக் கேளாமல், அந்நிய தேவர்களைப் பின்பற்றிச் சோரம்போய், அவைகளைப் பணிந்துகொள்கிறார்கள்; தங்கள் பிதாக்கள் கர்த்தரின் கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்த வழியை அவர்கள் சீக்கிரமாய் விட்டு விலகி, அவர்கள் செய்தபடி செய்யாமற்போகிறார்கள். கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். தங்களை இரட்சித்த கர்த்தரை மறந்துவிடுகிறார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் ஜனத்தாரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இது புருஷனுக்கும் மணவாட்டிக்கும் இடையே ஏற்படுத்தப்பட்டிருக்கிற விவாக உடன்படிக்கையைப்போல பரிசுத்தமானது. ஆனால் இஸ்ரவேல் ஜனத்தாரோ, கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்கள் உடன்படிக்கையை மீறுகிறார்கள். கர்த்தரை மறந்துவிட்டு, அந்நிய தேவர்களைப் பின்பற்றி சோரம்போகிறார்கள். அவர்கள் விக்கிரகங்களை ஆராதித்து, ஆவிக்குரிய வேசித்தனம் பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் முற்பிதாக்கள், கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றி, கர்த்தருக்குப் பிரியமான வழியில் நடந்தார்கள். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்கள் முற்பிதாக்கள் நடந்த பரிசுத்தமான வழியைவிட்டு சீக்கிரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். தங்களுடைய முற்பிதாக்கள் செய்தபடி, அவர்கள் கர்த்தருடைய கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். தங்களுக்கு ஏராளமான விக்கிரகங்களை உண்டுபண்ணுகிறார்கள். விநோதமான விக்கிரகாராதனைகளை கண்டுபிடிக்கிறார்கள். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், கர்த்தருடைய கற்பனையை மீறுகிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வருகிறது. கர்த்தர் அவர்களை சத்துருக்கள் கையிலும், அவர்களைக் கொள்ளையிடுகிறவர்கள் கையிலும் ஒப்புக்கொடுத்து விடுகிறார். அவர்களுடைய பகைஞரின் கையிலே விற்றுப்போடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் மிகவும் நெருக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வேதனைகளையும், நெருக்கத்தையும் தாங்கிக்கொள்ள முடியாமல் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தவிப்பைப் பார்த்து, அவர்கள்மேல் மனஸ்தாபப்படுகிறார். அவர்களைக் கொள்ளையிடுகிறவர்களின் கைக்கு, நீங்கலாக்கி இரட்சிப்பதற்காக கர்த்தர் நியாயாதிபதிகளை எழுப்பப்பண்ணுகிறார்.

கர்த்தர் நியாயாதிபதியோடேகூட இருந்து, அந்த நியாயாதிபதியின் நாட்களிலெல்லாம் அவர்கள் சத்துருக்களின் கைக்கு அவர்களை நீங்கலாக்கி இரட்சித்துவருகிறார்; இஸ்ரவேல் ஜனத்தார் தங்களை இறுகப்பிடித்து ஒடுக்குகிறவர்களினிமித்தம் தவிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுடைய தவிப்பைப் பார்த்து மனஸ்தாபப்படுவார் (நியா 2:18).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்கிறார். அவர்களுடைய தவிப்புகளிலிருந்தும், வேதனைகளிலிருந்தும் அவர்களை இரட்சிக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயில்லை. அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லை. அவர்கள் சீக்கிரத்தில் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அந்நிய தேவர்களை பின்பற்றிவிடுகிறார்கள். விக்கிரகங்களைப் பணிந்துகொள்கிறார்கள்.

கர்த்தர் எழும்பப்பண்ணின நியாயாதிபதி, இஸ்ரவேல் ஜனங்களை, அவர்களுடைய சத்துருக்களின் கைகளுக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார். அந்த நியாயாதிபதி மரணமடைந்தவுடனே, இஸ்ரவேல் ஜனங்கள், நியாயாதிபதியையும் மறந்துவிடுகிறார்கள், கர்த்தரையும் மறந்துவிடுகிறார்கள். அவர்கள் மறுபடியும் அந்நிய தேவர்களைப் பின்பற்றி, அவற்றை சேவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் முற்பிதாக்களைப்போல கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லை. அவர்கள் தங்கள் பிதாக்களைப் பார்க்கிலும் கேடாய் நடக்கிறார்கள். தங்கள் கிரித்தியங்களையும் தங்கள் முரட்டாட்டமான வழியையும் விடாதிருக்கிறார்கள் (நியா 2:19).

இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் ஜனத்தார்மேல் மூளுகிறது. கர்த்தர் தம்முடைய கோபத்தினால், இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்களை, துரத்திவிட மறுத்துவிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் மேல் கோபமூண்டவராகி: "இந்த ஜனங்கள் தங்கள் பிதாக்களுக்கு நான் கற்பித்த என் உடன்படிக்கையை மீறி என் சொல்லைக் கேளாதேபோனபடியால், யோசுவா மரித்துப் பின்வைத்துப் போன ஜாதிகளில் ஒருவரையும், நான் இனி அவர்களுக்கு முன்பாகத் துரத்தி விடாதிருப்பேன்" (நியா 2:20,21) என்று சொல்லுகிறார்.

யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் ஜனங்கள் ஏராளமான கானானியரை தங்கள் சுதந்தர தேசத்திலிருந்து துரத்திவிட்டார்கள். யோசுவா மரித்துப்போன பின்பு, இஸ்ரவேல் புத்திரரால் கானானியரைத் துரத்திவிட முடியவில்லை. கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும் இஸ்ரவேல் புத்திரருக்கு கிடைக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆதரவாக யுத்தம்பண்ண வரவில்லை.

இஸ்ரவேல் ஜனத்தார் கானானியரோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். அவர்களோடு சிநேகம் வைத்து, அவர்களுடைய குடும்பங்களில் விவாக சம்பந்தம் பண்ணுகிறார்கள். கானானியரின் விக்கிரகங்களை தங்களுடைய தெய்வங்களாகப் பாவித்து, அவற்றை சேவித்து பணிந்துகொள்கிறார்கள். இதனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக, அவர்களுடைய சத்துருக்களை துரத்திவிடாதிருக்கிறார் (நியா 2:21).

"நான் கூப்பிட்டும் மறுஉத்தரவு கொடுக்கிறவனில்லாமலும், நான் பேசியும் அவர்கள் கேளாமலும், அவர்கள் என் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, நான் விரும்பாததைத் தெரிந்துகொண்டதினிமித்தம், நானும் அவர்களுடைய ஆபத்தைத் தெரிந்து கொண்டு, அவர்களுடைய திகில்களை அவர்கள்மேல் வரப்பண்ணுவேன்" (ஏசா 66:4).

இஸ்ரவேல் ஜனத்தார் கானானியரின் பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படியாமல் தங்களுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு கீழ்ப்படிகிறார்கள். கர்த்தருக்கு விரோதமான பாவங்களை சந்தோஷமாய்ச் செய்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தார்மேல் கோபங்கொண்டு, அவர்களுடைய பாவங்களுக்கு அவர்களை ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் பாவத்தின் கண்ணியில் சிக்கியிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை ஆளவில்லை. பாவத்தின் வல்லமை அவர்களை ஆளுகிறது. பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்து, தங்களுடைய அழிவை தாங்களே தேடிக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் வழியைக் கவனித்துப் பார்க்கவேண்டும். அதில் நடக்கவேண்டும். அவர்களுடைய முற்பிதாக்கள் கர்த்தரின் வழியை கவனித்து பார்த்து அதிலே நடந்தார்கள். அவர்கள் கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்தார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுடைய முற்பிதாக்களைப்போல கர்த்தரின் வழியை கவனிப்பார்களா என்றும், அவர்கள் கர்த்தரின் வழியிலே நடப்பார்களா என்றும், கர்த்தர் அவர்களை சோதித்துப் பார்க்க விரும்புகிறார். இதற்காகவே இஸ்ரவேல் புத்திரருடைய சத்துருக்களை, கர்த்தர் அவர்களுக்கு முன்பாகத் துரத்திவிடாதிருக்கிறார். இதற்காகக் கர்த்தர் அந்த அந்நிய ஜாதிகளை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும், அவைகளைச் சீக்கிரமாய்த் துரத்திவிடாமலும் விட்டுவைத்திருக்கிறார் (நியா 2:22,23). இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய அழிவைத் தாங்களே தேடிக்கொள்கிறார்கள்.

3 அதிகாரம்

இஸ்ரவேல் ஜனத்தாரின் சத்துருக்களைப்பற்றியும், அவர்கள் கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாக செய்த தீங்குகளைப்பற்றியும் இந்த அதிகாரத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்டிருக்கிறது (நியா 3:1-7). கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை இரட்சிப்பதற்கு நியாயாதிபதிகளை எழுப்புகிறார். அவர்களில் மூன்று பேரைப்பற்றி இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மெசொப்பொத்தாமியாவின் ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, இஸ்ரவேல் ஜனங்களை மீட்பதற்காக கர்த்தர் ஒத்னியேலை எழுப்புகிறார் (நியா 3:8-11).

மோவாபியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அவர்களுடைய கைகளிலிருந்து இஸ்ரவேல் புத்திரரை மீட்பதற்காக, கர்த்தர் ஏகூத்தை எழுப்புகிறார் (நியா 3:12-30).

சம்கார் என்னும் நியாயாதிபதி பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கிறார் (நியா 3:31).

கர்த்தர் விட்டுவைத்த ஜாதிகள் நியா 3:1-7

நியா 3:1. கானான் தேசத்தில் நடந்த சகல யுத்தங்களையும் அறியாதிருந்த இஸ்ரவேலராகிய அனைவரையும் சோதிப்பதற்காகவும்,

நியா 3:2. இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்குமுன் யுத்தஞ்செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படி பழக்குவிப்பதற்காகவும், கர்த்தர் விட்டுவைத்த ஜாதிகள் யாரென்றால்:

நியா 3:3. பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும், சகல கானானியரும், சீதோனியரும், பாகால்எர்மோன் துவக்கி ஆமாத்திற்குள் பிரவேசிக்கும் வரைக்கும் லீபனோனின் மலைகளிலே குடியிருக்கிற ஏவியருமே.

நியா 3:4. கர்த்தர் மோசேயைக்கொண்டு தங்கள் பிதாக்களுக்கு விதித்த கற்பனைகளுக்கு இஸ்ரவேலர் கீழ்ப்படிவார்களோ என்று அறியும்படி, இஸ்ரவேலரை அவர்களாலே சோதிப்பதற்காக அவர்கள் விடப்பட்டிருந்தார்கள்.

நியா 3:5. இப்படி இஸ்ரவேல் புத்திரர், கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியராகிய இவர்கள் நடுவே குடியிருந்து,

நியா 3:6. அவர்களுடைய குமாரத்திகளை விவாகம்பண்ணி, தங்களுடைய குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடுத்து, அவர்கள் தேவர்களைச் சேவித்தார்கள்.

நியா 3:7. இப்படி இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து பாகால்களையும் தோப்பு விக்கிரகங்களையும் சேவிக்கிறபோது,

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருக்கிறார். அவர்கள் கானான் தேசத்திலுள்ள கானானியரைத் துரத்திவிட்டு, அந்த தேசத்தை தங்களுக்கு சுதந்தரித்துக்கொள்ளவேண்டும். ஆனால் இஸ்ரவேல் ஜனத்தார் கானானியர் எல்லோரையும் அந்த தேசத்திலிருந்து துரத்திவிடவில்லை. கானானியரில் சிலர் இன்னும், கானான் தேசத்திலே, இஸ்ரவேலர் மத்தியிலே குடியிருக்கிறார்கள். அவர்களைப்பற்றிய விவரம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

கானான் தேசத்தில் குடியிருக்கும் கானானியர் தங்களுக்குள் பிரிவினையில்லாமல் ஒற்றுமையாயிருக்கிறார்கள். பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும் கானானிலிருக்கிறார்கள்.

"பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளும் இவைகளைக்கண்டு, அன்றையதினம் எக்ரோனுக்குத் திரும்பிப்போனார்கள். பெலிஸ்தர் குற்றநிவாரணத்திற்காக, கர்த்தருக்குச் செலுத்தின மூலவியாதியின் சாயலான பொன் சுரூபங்களாவன, அஸ்தோத்திற்காக ஒன்று, காசாவுக்காக ஒன்று, அஸ்கலோனுக்காக ஒன்று, காத்துக்காக ஒன்று, எக்ரோனுக்காக ஒன்று" (1சாமு 6:16,17).

பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளைத் தவிர, கானானியரும், சீதோனியரும், பாகால்எர்மோன் துவக்கி ஆமாத்திற்குள் பிரவேசிக்கும்வரைக்கும் லீபனோனின் மலைகளிலே குடியிருக்கிற ஏவியரும் கானான் தேசத்திலே இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் இவர்களை கானான் தேசத்திலிருந்து இன்னும் துரத்திவிடவில்லை.

இவர்களைத் தவிர, மேலும் புறஜாதியாரும், கானான் தேசம் முழுவதிலும் பரவியிருக்கிறார்கள். கானானியர், ஏத்தியர், எமோரியர், பெரிசியர், ஏவியர், எபூசியராகிய இவர்கள் இஸ்ரவேல் புத்திரர், நடுவே குடியிருக்கிறார்கள் (நியா 3:5).

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, கானானியரில் இன்னும் சிலரை, கானான் தேசத்திலே விட்டு வைத்திருக்கிறார். கர்த்தர் தம்முடைய சித்தத்தைப்பற்றி, ஏற்கெனவே இதற்கு முந்திய அதிகாரத்தில் சொல்லியிருக்கிறார்.

"அவர்கள் பிதாக்கள் கர்த்தரின் வழியைக் கவனித்ததுபோல, அவர்கள் அதிலே நடக்கும்படிக்கு, அதைக் கவனிப்பார்களோ இல்லையோ என்று, அவர்களைக்கொண்டு இஸ்ரவேலைச் சோதிப்பதற்காக அப்படிச் செய்வேன் என்றார். அதற்காகக் கர்த்தர் அந்த ஜாதிகளை யோசுவாவின் கையில் ஒப்புக்கொடாமலும், அவைகளைச் சீக்கிரமாய்த் துரத்திவிடாமலும் விட்டுவைத்தார்" (நியா 2:22,23).

இஸ்ரவேல் புத்திரரை திருத்துவதற்காக, அவர்கள் மத்தியிலே கர்த்தர் கானானியரை விட்டு வைத்திருப்பது, அவருடைய தெய்வீக சித்தமாயும், அவருடைய நீதியாயும் இருக்கிறது. கர்த்தருடைய சித்தத்தில் அவருடைய ஞானமும் வெளிப்படுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை திருத்தும்போது, அவர்களுக்கு நன்மைகளும் அனுகூலங்களும் உண்டாகிறது.

இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரில், இப்போதிருக்கிறவர்கள், யுத்தம் செய்ய அறியாதிருக்கிறார்கள். இவர்கள் யுத்தம் செய்ய அறியவேண்டும். அதற்கு பழகவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரரின் சந்ததியாரும் அதற்குமுன் யுத்தஞ்செய்ய அறியாதிருந்தவர்களும் அவைகளை அறியும்படி பழக்குவிப்பதற்காகவும், கர்த்தர் இந்த ஜாதிகளை, கானான் தேசத்திலே விட்டுவைத்திருக்கிறார் (நியா 3:2).

கர்த்தர் மோசேயைக்கொண்டு தங்கள் பிதாக்களுக்கு விதித்த கற்பனைகளுக்கு இஸ்ரவேலர் கீழ்ப்படிவார்களோ என்று அறியும்படி, இஸ்ரவேலரை அவர்களாலே சோதிப்பதற்காக அவர்கள் விடப்பட்டிருக்கிறார்கள் (நியா 3:4).

கானான் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரரைச் சுற்றிலும் அவர்களுடைய சத்துருக்கள் இருக்கிறார்கள். அவர்கள் மூலமாய் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு எப்போதுமே ஆபத்து வருவதற்கு வாய்ப்புள்ளது. அந்த ஆபத்துக்களை சந்திப்பதற்கு இஸ்ரவேல் ஜனத்தார் ஆயத்தமாயிருக்கவேண்டும். அவர்கள் யுத்தசன்னத்தராக, மிகுந்த கட்டுப்பாடோடு ஜீவிக்கவேண்டும்.

சத்துருக்கள் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேசத்தையும் பாதுகாக்கவேண்டும். சத்துருக்களையும் முறியடிக்கவேண்டும். சத்துருக்கள் கடல் வழியாகவும் வரலாம். ஆகையினால் இஸ்ரவேல் ஜனங்கள், தங்களுடைய சுதந்தரத்திலுள்ள கடல் துறைகளை பலப்படுத்தவேண்டும். கர்த்தர் அவர்களுக்கு சுதந்தரமாகக் கொடுத்திருக்கிற, கடற்கரை பகுதிகளையெல்லாம் சுதந்தரித்து, தங்களுடைய தேசத்தின் எல்லையை விஸ்தாரம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் ஜனங்களோ நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். தங்கள் மத்தியிலே குடியிருக்கிற புறஜாதி ஜனங்களோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். அவர்களுடைய குமாரத்திகளை விவாகம்பண்ணி, தங்களுடைய குமாரத்திகளை அவர்கள் குமாரருக்குக் கொடுத்து, அவர்கள் தேவர்களைச் சேவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்கு விசேஷமானவர்கள். அவர்கள் கர்த்தரை மாத்திரமே சேவிக்கவேண்டும். ஆனால் அவர்கள் இப்போது அந்நிய ஜாதியாரோடு சம்பந்தம்பண்ணி அவர்களுடைய விக்கிரகங்களை சேவிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் விக்கிரகாராதனை அதிகரித்திருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதியாரை விவாகம்பண்ணியதினால் அவர்களுக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. அவர்களுடைய சுதந்தரத்தின் எல்லைகள் இதனால் விஸ்தாரமாகவில்லை. அவர்களுக்கு மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கவில்லை. இஸ்ரவேல் ஜனங்கள், எந்தவிதமான நன்மையும் இல்லாமல், அந்நிய தெய்வங்களை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து பாகால்களையும் தோப்பு விக்கிரகங்களையும் சேவிக்கிறார்கள் (நியா 3:7).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரே மெய்யான தேவன். அவரே சர்வசிருஷ்டிகர். இஸ்ரவேல் ஜனங்களோ சிருஷ்டிகரை ஆராதியாமல், சிருஷ்டிகளை ஆராதிக்கிறார்கள். மரங்களை சேவிக்கிறார்கள். தோப்பு விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய நுகத்திலே பிணைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் கானானியரோடு விவாக சம்பந்தம் செய்துகொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரால் கானானியருடைய விக்கிரகாராதனையை மாற்ற முடியவில்லை. கானானியர் இஸ்ரவேலரை மாற்றிவிடுகிறார்கள். இஸ்ரவேலர் கானானியரைப் பின்பற்றி, கர்த்தரை மறந்து, விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள்.

அந்நிய நுகத்தில் பிணைக்கப்படும்போது, நன்மை தீமையை வெல்லுவதற்கும் பதிலாக, தீமை நன்மையை வெல்வதற்கும் வாய்ப்புள்ளது. இந்த சம்பவம் இஸ்ரவேல் ஜனத்தாரின் ஜீவியத்திலே நிரூபணமாகிறது. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை மறந்து, அந்நிய தெய்வங்களை சேவிக்கிறார்கள். தீமை நன்மையை ஆளுகை செய்கிறது. இஸ்ரவேல் ஜனத்தார் அந்நிய தெய்வங்களை ஆராதிக்கும்போது, தங்கள் தேவனாகிய கர்த்தரையே மறந்துவிடுகிறார்கள்.

ஒத்னியேல்
நியா 3:8-11

நியா 3:8. கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டவராகி, அவர்களை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையிலே விற்றுப்போட்டார்; இப்படியே இஸ்ரவேல் புத்திரர் கூசான்ரிஷதாயீமை எட்டு வருஷம் சேவித்தார்கள்.

நியா 3:9. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணினார்.

நியா 3:10. அவன்மேல் கர்த்தருடைய ஆவி வந்திருந்ததினால், அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, யுத்தம்பண்ணப் புறப்பட்டான்; கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்; ஆகையால் அவன் கை கூசான்ரிஷதாயீமின்மேல் பலங்கொண்டது.

நியா 3:11. தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது. கேனாசின் குமாரனாகிய ஒத்னியேல் மரணமடைந்தான்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டாவராயிருக்கிறார். கர்த்தருடைய கோபம் நீதியானது. அவர் தம்முடைய கோபத்தினால் இஸ்ரவேல் புத்திரருக்கு தண்டனை கொடுக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமின் கையிலே விற்றுப்போடுகிறார்; இப்படியே இஸ்ரவேல் புத்திரர் கூசான் ரிஷதாயீமை எட்டு வருஷம் சேவிக்கிறார்கள் (நியா 3:8).

கர்த்தர் இதுவரையிலும் தம்முடைய கிருபையினால் இஸ்ரவேல் ஜனத்தாரை பாதுகாத்து வந்தார். சத்துருக்களால் அவர்களைத் தொடமுடியவில்லை. கர்த்தருடைய ஜனத்தைத் தொடுகிறவர்கள், அவருடைய கண்மணியையே தொடுகிறார்கள். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்.

ஆனால் கர்த்தரோ இப்போது இஸ்ரவேலின்மேல் கோபமாயிருக்கிறார். கர்த்தருடைய கோபத்திற்கு இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களே காரணம். அவர்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். பாகால்களையும் தோப்பு விக்கிரகங்களையும் சேவிக்கிறார்கள். இதனால் கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபங்கொள்கிறார். கர்த்தர் இதுவரையிலும் அவர்களுக்கு கொடுத்து வந்த தம்முடைய பாதுகாப்பை இப்போது விலக்கிக்கொள்கிறார். அவர்களை அந்நிய தேசத்தாரின் கைகளில் விற்றுப்போடுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் கிடைக்கவில்லை. கர்த்தர் சந்தையிலே ஒரு பொருளை விற்பதுபோல, இஸ்ரவேல் ஜனங்களை அந்நிய தேசத்தாரிடத்தில் விற்றுப்போடுகிறார். அந்நிய தேசத்தார் இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம்பண்ணுவதற்கு கர்த்தர் அனுமதிக்கிறார். இந்த யுத்தத்தில், கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக, அந்நியருக்கு ஜெயமும், இஸ்ரவேல் புத்திரருக்கு தோல்வியும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் ஜனத்தார்மீது சீரியாவின் ராஜாவாகிய கூஷான்ரிஷதாயீம் முதலாவதாக யுத்தம்பண்ண வருகிறான். இவன் மெசொப்பொத்தாமியாவின் ராஜா. கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களை இவனுடைய கையிலே விற்றுப்போடுகிறார். சீரிய தேசம் டைகிரீஸ், யூப்பிரட்டிஸ் ஆகிய இரண்டு பெரிய நதிகளுக்கு நடுவிலே இருக்கிறது. ஆகையினால் இந்த தேசம் மெசொப்பொத்தாமியா என்று அழைக்கப்படுகிறது. "மெசொப்பொத்தாமியா" என்னும் பெயருக்கு "நதிகளின் மத்தியில்" என்று பொருள்.

சீரியாவின் ராஜா தன்னுடைய தேசத்தின் எல்லைகளை விஸ்தாரம்பண்ண வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறான். இதன் நிமித்தமாக தனக்கு அருகாமையில், யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிற இஸ்ரவேலின் இரண்டரை கோத்திரத்தார்மீது யுத்தம்பண்ணி, அவர்களை ஒடுக்குகிறான். இதன்பின்பு, யோர்தானுக்கு இப்புறத்திலிருக்கிற கானான் தேசத்தையும் கைப்பற்றவேண்டும் என்பது சீரியா ராஜாவின் திட்டம்.

இஸ்ரவேல் புத்திரரால் சீரியாவின் ராஜாவாகிய கூஷான்ரிஷதாயீமுக்கு விரோதமாய் எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் யுத்தத்திலே தோற்றுப்போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கூஷான்ரிஷதாயீமை எட்டு வருஷம் சேவிக்கிறார்கள். சீரியாவின் ராஜா இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்குகிறான். கர்த்தருடைய ஜனத்திற்கு மிகுந்த வேதனைகளும், உபத்திரவங்களும் உண்டாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வேதனைகளுக்கு மத்தியிலே கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். அவர்கள் சந்தோஷமாகயிருந்த காலத்தில் கர்த்தரை மறந்துவிட்டார்கள். அந்தக் காலங்களில் அவர்கள் பாகால்களையும் தோப்பு விக்கிரகங்களையும் நோக்கிக் கூப்பிட்டார்கள். இப்போதோ அவர்களுக்கு உபத்திரவங்கள் வந்திருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர், தங்களுக்கு உபத்திரவங்களும் வேதனைகளும் வந்திருக்கிற காலத்தில், கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இரங்குகிறார். அவர்கள்மீது மனதுருக்கமாயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும்படி காலேபின் தம்பியான கேனாசுடைய குமாரனாகிய ஒத்னியேல் என்னும் ஒரு ரட்சகனை அவர்களுக்கு எழும்பப்பண்ணுகிறார் (நியா 3:9).

ஒத்னியேல் காலேபின் குமாரத்தியை விவாகம்பண்ணினவர். இவர் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியில் நற்சாட்சி பெற்றிருக்கிறவர். இவர் யுத்தவீரர். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பதற்கு ஒத்னியேலை எழுப்புகிறார். கர்த்தருடைய ஆவி ஒத்னியேல்மேல் வந்திருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருடைய அதிபதிகளோ அல்லது அவர்களுடைய பிரபுக்களோ ஒத்னியேலை தங்களுக்கு நியாயாதிபதியாக நியமிக்கவில்லை. கர்த்தரே ஒத்னியேலை இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதியாக நியமித்திருக்கிறார். ஊழியம் கர்த்தருடையது. கர்த்தரே தம்முடைய பிள்ளைகளுக்கு ஊழிய அபிஷேகத்தைக் கொடுக்கிறார். கர்த்தரே ஒத்னியேலை இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இரட்சராக எழும்பப்பண்ணுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் ஞானத்தின் ஆவியானவராகவும் இருக்கிறார். அவர் பெலத்தின் ஆவியானவராகவும் இருக்கிறார். தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் ஒத்னியேலை பெலப்படுத்துகிறார். தகுதிப்படுத்துகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் ஒத்னியேல்மீது வந்தபோது, அவர் முதலாவதாக இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார். அவர்களுடைய பாவங்களையும் அக்கிரமங்களையும் கடிந்துகொள்கிறார். அவர்கள் மத்தியிலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகும் வண்ணமாக அவர்களுக்கு கர்த்தருடைய வார்த்தைகளை உபதேசம் பண்ணுகிறார். அதன் பின்புதான் ஒத்னியேல் யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகிறார்.

இதுவே கர்த்தருக்கு சித்தமான வழி. முதலாவதாக நமக்குள்ளே இருக்கும் பாவங்களை நாம் மேற்கொள்ளவேண்டும். அதற்கு பிறகு, நமக்கு வெளியே இருக்கும் சத்துருக்களை நம்மால் எளிதாய் மேற்கொள்ள முடியும். ஒத்னியேல் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே காணப்படுகிற பாவங்களை ஒழிக்கிறார். அவர்களுடைய விக்கிரகாராதனைகளை ஒழிக்கிறார். அதன்பின்பு இஸ்ரவேலுடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண புறப்பட்டுப்போகிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நமக்கு நியாயாதிபதியாகவும், நியாயப் பிரமாணத்தைக் கொடுக்கிறவராகவும் இருக்கிறார். அதன் பின்பு அவர் நம்மை இரட்சிக்கிறார். நம்முடைய பாவங்களுக்கு நாம் மனந்திரும்பவில்லையென்றால், நம்முடைய ஆத்துமாவுக்கு இரட்சிப்பு கிடைக்காது. இரட்சிக்கப்படுவதற்கு வேறு குறுக்கு வழி எதுவுமில்லை.

"கர்த்தர் நம்முடைய நியாயாதிபதி, கர்த்தர் நம்முடைய நியாயப்பிரமாணிகர், கர்த்தர் நம்முடைய ராஜா, அவர் நம்மை இரட்சிப்பார்" (ஏசா 33:22).

கர்த்தர் மெசொப்பொத்தாமியாவின் ராஜாவாகிய கூசான்ரிஷதாயீமை அவன் கையிலே ஒப்புக்கொடுக்கிறார்; ஆகையால் ஒத்னியேலின் கை கூசான்ரிஷதாயீமின்மேல் பலங்கொள்கிறது (நியா 3:10). இஸ்ரவேல் ஜனத்தார் சீரியா ராஜாவின் நுகத்தை சுமந்துகொண்டிருக்கிறார்கள். ஒத்னியேலோ இஸ்ரவேல் ஜனத்தாருடைய கழுத்தின் மேலிருக்கிற அடிமைத்தனத்தின் நுகத்தை அகற்றிப்போடுகிறார்.

இஸ்ரவேல் தேசம் இப்போது அமைதியாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரோடு ஒப்புரவாகியிருக்கிறார்கள். கர்த்தரும் அவர்கள்மீது கொண்டிருந்த கோபத்தை விலக்கிவிட்டு, இப்போது அவர்கள்மீது அன்பாயிருக்கிறார். அவர்களைப் பாதுகாத்து பராமரிக்கிறார். தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருக்கிறது. ஜனங்கள் கர்த்தரோடு ஐக்கியமாயிருக்கும்போது, கர்த்தரும் அவர்களோடு ஐக்கியமாயிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய உடன்படிக்கைக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். கர்த்தரும் தம்முடைய உடன்படிக்கையில் உண்மையுள்ளவராயிருக்கிறார். இதனால் தேசம் அமைதலாயிருக்கிறது. ஒத்னியேல் இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார். அதன்பின்பு கேனாசின் குமாரனாகிய ஒத்னியேல் மரணமடைகிறார் (நியா 3:11).

ஏகூத்

நியா 3:12-30

நியா 3:12. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்; அவர்கள் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலக்கப்பண்ணினார்.

நியா 3:13. அவன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்டிக்கொண்டு வந்து, இஸ்ரவேலை முறிய அடித்தான்; பேரீச்சமரங்களின் பட்டணத்தையும் பிடித்தான்.

நியா 3:14. இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவைப் பதினெட்டு வருஷம் சேவித்தார்கள்.

நியா 3:15. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப்பண்ணினார்; அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்.

நியா 3:16. ஏகூத், இருபுறமும் கருக்கும் ஒரு முழ நீளமுமான ஒரு கத்தியை உண்டுபண்ணி, அதைத் தன் வஸ்திரத்துக்குள்ளே தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டிக்கொண்டு,

நியா 3:17. காணிக்கையை மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குச் செலுத்தினான்; எக்லோன் மிகவும் ஸ்தூலித்த மனுஷனாயிருந்தான்.

நியா 3:18. அவன் காணிக்கையைச் செலுத்தித் தீர்ந்தபின்பு, காணிக்கையைச் சுமந்து வந்த ஜனங்களை அனுப்பிவிட்டான்.

நியா 3:19. அவனோ கில்காலிலுள்ள சிலைகள் இருக்கும் இடத்திலிருந்து திரும்பிவந்து: ராஜாவே, உம்மிடத்தில் சொல்லவேண்டிய இரகசியமான ஒரு வார்த்தை உண்டு என்றான். அதற்கு அவன்: பொறு என்றான்; அப்பொழுது அவனிடத்தில் நின்ற யாவரும் அவனை விட்டு வெளியே போய்விட்டார்கள்.

நியா 3:20. ஏகூத் அவன் கிட்டே போனான்; அவனோ தனக்குத் தனிப்புற இருந்த குளிர்ச்சியான அறைவீட்டில் உட்கார்ந்திருந்தான்; அப்பொழுது ஏகூத்: உம்மிடத்தில் சொல்லவேண்டிய தேவவாக்கு எனக்கு உண்டு என்றான்; அவன் தன் ஆசனத்திலிருந்து எழுந்திருந்தான்.

நியா 3:21. உடனே ஏகூத் தன் இடதுகையை நீட்டி, தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருந்த கத்தியை உருவி, அதை அவன் வயிற்றுக்குள் பாய்ச்சினான்.

நியா 3:22. அலகோடேகூடக் கைப்பிடியும் உள்ளே புகுந்தது; அவனுடைய வயிற்றிற்குள் போன கத்தியை இவன் இழுக்கக் கூடாதபடிக்கு, நிணம் அலகைச் சுற்றிக் கொண்டடைத்தது; அது பின்புறத்திலே புறப்பட்டது.

நியா 3:23. ஏகூத் புறப்பட்டு, அறைவீட்டின் கதவைச் சாத்திப் பூட்டிப்போட்டு, கொலுக்கூடத்தின் வழியாய்ப் போய்விட்டான்.

நியா 3:24. அவன் போனபின்பு ஊழியக்காரர் வந்து பார்த்தார்கள்; இதோ, அறைவீட்டின் கதவு பூட்டியிருந்தது; ஆகையால் அவர் அந்தக் குளிர்ச்சியான அறையிலே மலஜலாதிக்கிருக்கிறாராக்கும் என்றார்கள்.

நியா 3:25. அவர்கள் சலித்துப்போகுமட்டும் காத்திருந்தார்கள்; அவன் அறைவீட்டின் கதவைத் திறக்கவில்லை; ஆகையால் ஒரு திறவுகோலை எடுத்துத் திறந்தார்கள்; இதோ, அவர்கள் ஆண்டவன் தரையிலே செத்துக்கிடந்தான்.

நியா 3:26. அவர்கள் தாமதித்துக்கொண்டிருந்தபோது, ஏகூத் ஓடிப்போய், சிலைகளுக்குள்ள இடத்தைக் கடந்து, சேயிராத்தைச் சேர்ந்து தப்பினான்.

நியா 3:27. அங்கே வந்தபோது எப்பிராயீம் மலையில் எக்காளம் ஊதினான்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் அவனோடேகூட மலையிலிருந்து இறங்கினார்கள்; அவன் அவர்களுக்கு முன்பாக நடந்து:

நியா 3:28. என்னைப் பின்தொடர்ந்து வாருங்கள்; கர்த்தர் உங்கள் பகைஞராகிய மோவாபியரை உங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்தார் என்றான். அவர்கள் அவனைப் பின்தொடர்ந்துபோய், மோவாபுக்கு எதிரான யோர்தான் துறைகளைப் பிடித்து, ஒருவனையும் கடந்துபோகவொட்டாமல்,

நியா 3:29. அக்காலத்திலே மோவாபியரில் ஏறக்குறையப் பதினாயிரம்பேரை வெட்டினார்கள்; அவர்களெல்லாரும் புஷ்டியுள்ளவர்களும் பராக்கிரமசாலிகளுமாயிருந்தார்கள்; அவர்களில் ஒருவனும் தப்பவில்லை;

நியா 3:30. இப்படியே அந்நாளிலே மோவாப் இஸ்ரவேலுடைய கையின்கீழ்த் தாழ்த்தப்பட்டது; அதனாலே தேசம் எண்பது வருஷம் அமைதலாயிருந்தது.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். இதனால் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குவதற்கு புதிய சத்துருவை எழுப்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். ஆனால் கர்த்தரோ அவர்களை சங்காரம்பண்ணாமல், அவர்களை இரட்சிப்பதற்கு ஒத்னியேலை எழுப்பினார். இஸ்ரவேல் புத்திரரும் அழிவுக்கு தப்பித்துக்கொண்டார்கள்.

கர்த்தர் தங்களை பழைய சத்துருக்களிடமிருந்து விடுவித்துக் காத்துக் கொண்டதினால், அவர்களுடைய இருதயம் பாவம் செய்வதற்கு துணிகரம் கொள்கிறது. தாங்கள் பாவம் செய்தாலும் கர்த்தர் தங்களை கடினமாய்த் தண்டிக்கமாட்டார் என்று இஸ்ரவேல் ஜனத்தார் நினைக்கிறார்கள். ஒத்னியேலின் காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குப் பயந்து சிறிதுகாலம் ஜீவிக்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை சத்துருக்கள் ஒடுக்குகிறார்கள். இதனால் இஸ்ரவேல் ஜனத்தாருடைய தேசம் பலவீனமாகிறது. கர்த்தருடைய ஜனமும் தாழ்த்தப்படுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாய்ப் பலக்கப்பண்ணுகிறார் (நியா 3:12).

மோவாபின் ராஜாவாகிய எக்லோன் அம்மோன் புத்திரரையும் அமலேக்கியரையும் கூட்டிக்கொண்டு வந்து, இஸ்ரவேலை முறிய அடிக்கிறான்; பேரீச்சமரங்களின் பட்டணத்தையும் பிடிக்கிறான் (நியா 3:13).

இஸ்ரவேல் புத்திரர் பலவீனமாயிருக்கும்போது மோவாபின் ராஜாவாகிய எக்லோன் அவர்களை முறியடிக்கிறான். இஸ்ரவேல் ஜனத்தாரை ஒடுக்கிறவர்கள், இதற்கு முன்பு அவர்களை ஒடுக்கியவர்களைவிட, இப்போது மிகவும் கடுமையாய் ஒடுக்குகிறார்கள். கர்த்தர் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாய் பலக்கப்பண்ணுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் ஒடுக்கப்படவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. இதனால் இஸ்ரவேல் ஜனத்தாருடைய வேதனையும் உபத்திரவமும் அதிகரிக்கிறது.

மோவாபின் ராஜாவாகிய எக்லோன், இஸ்ரவேல் புத்திரரோடு தனியாக யுத்தம்பண்ணவில்லை. தன்னோடு அம்மோன் புத்திரரையும், அமலேக்கியரையும் கூட்டுச்சேர்த்துக்கொள்கிறான். கர்த்தரும் மோவாபின் ராஜாவை இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பலக்கப்பண்ணுகிறார். அம்மோன் புத்திரரும், அமலேக்கியரும், எக்லோனை இஸ்ரவேலுக்கு விரோதமாகப் பலக்கப்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலின் சத்துருக்கள் அவர்களை முறியடிக்கிறார்கள். இஸ்ரவேலுக்கு தோல்வி உண்டாயிற்று. அவர்கள் ஆரம்பத்தில், யோர்தானுக்கு அப்புறத்திலிருந்த, இஸ்ரவேலின் இரண்டரைக்கோத்திரத்தாரை மாத்திரம் முறியடித்தார்கள். அதன்பின்பு அவர்கள் யோர்தானுக்கு இப்புறத்திலும் வந்து, கானான் தேசத்திலுள்ள இஸ்ரவேலையும் முறியடிக்கிறார்கள்.

எரிகோ இருந்த இடத்திற்கு அருகாமையிலே பேரீச்சமரங்களின் பட்டணம் இருக்கிறது. மோவாபின் ராஜாவாகிய எக்லோன் இந்தப் பட்டணத்தையும் பிடிக்கிறான்.

"தென்புறத்தையும், சோவார் வரைக்குமுள்ள பேரீச்சமரங்களின் பட்டணம் என்னும் ஊர்முதற்கொண்டு எரிகோவின் பள்ளத்தாக்காகிய சமனான பூமியையும் காண்பித்தார்" (உபா 34:3).

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்கு பகுதி கட்டுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார், ஒருவேளை கானான் தேசத்தில் விளைகிற தானியங்களை அவர்களுக்கு பகுதியாகக் கட்டியிருக்கலாம். அல்லது தங்களுடைய பொக்கிஷங்களிலிருந்து, பொன்னையும் வெள்ளியையும் எடுத்து மோவாபின் ராஜாவுக்கு பகுதி கட்டியிருக்கலாம். இப்படியே இஸ்ரவேல் புத்திரர் எக்லோன் என்னும் மோவாபின் ராஜாவைப் பதினெட்டு வருஷம் சேவிக்கிறார்கள் (நியா 3:14).

மோவாபின் ராஜா இஸ்ரவேல் புத்திரரை அதிகமாய் ஒடுக்குகிறான். அப்போது, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப்பண்ணுகிறார்; ஏகூத் இடதுகைப் பழக்கமுள்ளவர் (நியா 3:15).

பேரீச்சமரங்களின் பட்டணம் பென்யமீன் கோத்திரத்தாரின் பங்குவீதத்திலிருக்கிறது. மற்ற கோத்திரத்தாரைவிட பென்யமீன் கோத்திரத்தார் மோவாபின் ராஜாவால் அதிகமாய் ஒடுக்கப்படுகிறார்கள். இவர்களே அதிகமாய் பாதிக்கப்படுகிறார்கள்.

பென்யமீன் கோத்திரத்தாருடைய கழுத்தின்மீது அதிகபாரமான சுமை சுமத்தப்பட்டிருக்கிறது. இந்த சுமையை இறக்கி வைப்பதற்கு, பென்யமீன் கோத்திரத்தார் அதிகமாய் போராடுகிறார்கள்.

இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரிலும், பென்யமீன் கோத்திரத்தாரே பலவீனமானவர்கள். ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேலை இரட்சிப்பதற்கு, பென்யமீன் கோத்திரத்தானாகிய ஏகூத்தையே, இரட்சகராக எழுப்பப்பண்ணுகிறார்.

பென்யமீன் கோத்திரத்தாரில் அநேகர் இடது கைப்பழக்கமுள்ளவர்கள். அவர்களைப் போலவே ஏகூத்தும் இடது கைப்பழக்கமுள்ளவர். "அந்த ஜனங்களெல்லாருக்குள்ளும் தெரிந்து கொள்ளப்பட்ட இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிவார்கள்" (நியா 20:16).

பென்யமீன் என்னும் பெயருக்கு "வலதுகையின் குமாரன்" என்று பொருள். ஆனால் இந்தக் கோத்திரத்தாரில் அநேகர் இடது கைப்பழக்கமுள்ளவர்களாகவே இருக்கிறார்கள். மனுஷருடைய பெயருக்கும் அவர்களுடைய சுபாவத்திற்கும் சம்பந்தமில்லாமலிருக்கிறது. கர்த்தர் இடது கைப்பழக்கமுள்ள ஏகூத்தை, தம்முடைய வலதுகையின் மனுஷனாகத் தெரிந்தெடுக்கிறார்.

"உமது கரம் உமது வலதுபாரிசத்துப் புருஷன்மீதிலும், உமக்கு நீர் திடப்படுத்தின மனுஷகுமாரன் மீதிலும் இருப்பதாக" (சங் 80:17).

மனுஷன் இடது கைப்பழக்கமுள்ளவனாகயிருந்தாலும், அவன் வலது கைப்பழக்கமுள்ளவனாகயிருந்தாலும், மனுஷனால் நமக்கு ஜெயமுண்டாகாது. கர்த்தருடைய வலதுகரமே நமக்கு ஜெயத்தைக் கொடுக்கும்.

"அவர்கள் தங்கள் பட்டயத்தால் தேசத்தைக் கட்டிக்கொள்ளவில்லை; அவர்கள் புயமும் அவர்களை இரட்சிக்கவில்லை; நீர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தபடியால், உம்முடைய வலதுகரமும், உம்முடைய புயமும், உம்முடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது" (சங் 44:3).

கர்த்தர் மனுஷரை தம்முடைய கருவிகளாகப் பயன்படுத்துகிறார். மனுஷருடைய வலதுகையும் இடதுகையும் கர்த்தர் பயன்படுத்தும் கருவிகளாக மாத்திரமே இருக்கிறது. கர்த்தரே நமக்கு யுத்தத்திலே ஜெயத்தைக் கொடுக்கிறவர்.

இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனை சேவிக்கிறார்கள். மோவாபியரின் கரத்திலிருந்து இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய விருப்பம். ஏகூத் மோவாபின் ராஜாவாகிய எக்லோனைக் கொன்றுபோடுகிறார். கர்த்தருடைய நீதியின் பிரகாரமாக எக்லோனுக்கு மரண தண்டனை கொடுக்கப்படுகிறது. ஏகூத் கர்த்தருடைய நீதியான தண்டனையை நிறைவேற்றுகிறார். எக்லோனைக் கொலைசெய்த பாவம் ஏகூத்தின்மீது சுமத்தப்படாது.

மோவாபின் ராஜாவாகி எக்லோனை சந்திப்பதற்கு, ஏகூத்திற்கு நல்ல வாய்ப்பு கிடைத்திருக்கிறது. ஏகூத் நல்ல ஞானமுள்ளவர். சுறுசுறுப்பாய் செயல்படக்கூடியவர். ராஜாக்களுக்கு முன்பாக நிற்கக்கூடிய தகுதியும், அந்தஸ்தும், சவுந்தரியமுமுள்ளவர். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் ஏகூத்தைத் தெரிந்தெடுத்து, அவர் மூலமாக மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்கு தங்களுடைய காணிக்கைகளை அனுப்புகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் ஏற்கெனவே மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்கு பகுதி கட்டி அவனைச் சேவிக்கிறார்கள். இப்போதோ நியமிக்கப்பட்ட பகுதியைவிட, அதிகமான பொருட்களை காணிக்கைகளாகக் கொடுத்தனுப்புகிறார்கள். ஒருவேளை இஸ்ரவேல் ஜனத்தார் மோவாபின் ராஜாவினுடைய கண்களிலிருந்து தயவு எதிர்பார்த்திருக்கலாம். ராஜா தங்களுக்கு சில சலுகைகளை செய்யவேண்டுமென்று இஸ்ரவேல் ஜனத்தார் நினைத்திருக்கலாம். ராஜாவின் மனதிலே இடம் பிடிப்பதற்காக, இஸ்ரவேல் ஜனத்தார் ராஜாவுக்கு காணிக்கைகளைக் கொடுத்தனுப்புகிறார்கள்.

ஏகூத் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்கு காணிக்கையைச் செலுத்துகிறார். ராஜாவுக்கு காணிக்கை செலுத்தும்போது, ஒருசில பாரம்பரிய மரியாதைகளையெல்லாம் செய்யவேண்டும். ராஜாவுக்கு முன்பாக பணிவோடும் மரியாதையோடும் நிற்கவேண்டும். ஏகூத்தோ ராஜாவைக் கொல்லுவதற்காக அங்கே போயிருக்கிறார். தன்மீது யாருக்கும் சந்தேகம் வந்துவிடக்கூடாது என்பதில் ஏகூத் மிகவும் கவனமாயும், எச்சரிப்பாயும் இருக்கிறார்.

ஏகூத், இருபுறமும் கருக்கும் ஒரு முழ நீளமுமான ஒரு கத்தியை உண்டுபண்ணி, அதைத் தன் வஸ்திரத்துக்குள்ளே தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டிக்கொண்டிருக்கிறார் (நியா 3:16). காணிக்கையை அவருடைய ஜனங்கள் சுமந்துவருகிறார்கள். எக்லோனைக் கொன்றுவிடவேண்டும் என்பது ஏகூத்தின் திட்டம்.

ஏகூத் அதிகமான ஞானமும், அதிகமான தந்திரமுமுள்ளவர். எக்லோனுக்கு காணிக்கை கொடுக்கப்போகும்போதே, ஏகூத் ராஜாவைக் கொல்லுவதற்கு ஆயத்தமாய்ப்போகிறார். ராஜாவைக் கொல்லுவதற்கு ஒரு ஆயுதத்தையும் ஆயத்தம்பண்ணுகிறார். எக்லோனைக்கொல்ல ஒரு கத்தியை உண்டுபண்ணுகிறார். இந்தக் கத்தி இருபுறமும் கருக்குள்ளது. இந்தக் கத்தியின் நீளம் ஒரு முழம் மாத்திரமே இருக்கிறது. இது சிறிய கத்தியாகயிருப்பதினால், இந்தக் கத்தியை ஏகூத்தால் தன்னுடைய வஸ்திரத்திற்குள்ளே ஒளித்து வைக்கமுடிகிறது.

ஏகூத் தன்னுடைய கத்தியை தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருக்கிறார். அவர் இடது கைப்பழக்கமுள்ளவர். கத்தி வலதுபுறத்து இடுப்பிலே கட்டப்பட்டிருக்கிறது. ஏகூத் தன்னுடைய இடது கையினால், இந்தக் கத்தியை எளிதாக எடுக்க முடியும். ஏகூத் ஒவ்வொரு காரியத்தையும் மிகவும் ஞானமாக திட்டமிட்டு செய்கிறார்.

ஏகூத் ராஜாவுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையைக் கொடுக்கிறார். எக்லோன் மிகவும் ஸ்தூலித்த மனுஷனாயிருக்கிறான். அவன் உடல் பருமன் மிகுந்தவன். அவனால் எங்கும் ஓடியாடி போகமுடியாது. அவன் தன்னுடைய ஆசனத்திலே அசையாமல் அமர்ந்திருக்கிறான். ஏகூத் மோவாபின் ராஜாவுக்கு காணிக்கையை செலுத்தி தீர்ந்த பின்பு, காணிக்கையை சுமந்து வந்த ஜனங்களை அனுப்பிவிடுகிறார்.

மோவாபின் ராஜாவாகிய எக்லோன் குளிர்ச்சியான அறைவீட்டில் தனிப்புற உட்கார்ந்திருக்கிறார். ஏகூத் மாத்திரம் அவரோடு கூடயிருக்கிறார். காணிக்கையை சுமந்து வந்த ஜனங்கள் வெளியே போய்விடுகிறார்கள். ஏகூத்தும் அவர்களோடு வெளியே போவதுபோல போகிறார். கில்காலிலுள்ள சிலைகள் இருக்கும் இடம் மட்டும் போய்விட்டு, மறுபடியும் மோவாபின் ராஜாவினிடத்தில் திரும்பி வருகிறார்.

ஏகூத் மோவாபின் ராஜாவாகிய எக்லோனிடத்தில் திரும்பி வந்து "ராஜாவே, உம்மிடத்தில் சொல்லவேண்டிய இரகசியமான ஒரு வார்த்தை உண்டு" என்று சொல்லுகிறார். அதற்கு எக்லோன் "பொறு" என்று சொல்லுகிறான்; அப்பொழுது எக்லோனிடத்தில் நின்ற யாவரும் அவனை விட்டு வெளியே போய்விடுகிறார்கள் (நியா 3:19).

இப்போது ராஜாவின் குளிர்ச்சியான அறைவீட்டில், எக்லோனும் ஏகூத்தும் மாத்திரம் தனியே இருக்கிறார்கள். எக்லோன் தன் குளிர்ச்சியான அறைவீட்டில் உட்கார்ந்திருக்கிறான். அப்போது ஏகூத் எக்லோன் கிட்டே போகிறார். அவர் ராஜாவிடம் "உம்மிடத்தில் சொல்ல வேண்டிய தேவவாக்கு எனக்கு உண்டு" என்று சொல்லுகிறார். அப்பொழுது எல்லோன் தன் ஆசனத்திலிருந்து எழுந்திருக்கிறான்.

ஏகூத்தின் வலதுபுறத்து இடுப்பிலே கட்டப்பட்டிருக்கிற கத்தியே, தேவவாக்கு. ஏகூத் தேவவாக்கை எக்லோனுக்கு சொல்லுகிறார். ஆனால் அவர் அதை ராஜாவின் காதுகளில் சொல்லவில்லை. ராஜாவின் வயிற்றுக்குள்ளே சொல்லுகிறார்.

எக்லோன் தன் ஆசனத்திலிருந்து எழுந்திருந்தபோது, ஏகூத் தன் இடதுகையை நீட்டி, தன் வலதுபுறத்து இடுப்பிலே கட்டியிருந்த கத்தியை உருவி, அதை அவன் வயிற்றுக்குள் பாய்ச்சுகிறார். அலகோடேகூடக் கைப்பிடியும் உள்ளே புகுந்து கொள்கிறது; எக்லோனுடைய வயிற்றிற்குள் போன கத்தியை ஏகூத்தால் இழுக்கக் கூடாதபடிக்கு, நிணம் அலகைச் சுற்றிக் கொண்டடைத்துக்கொள்கிறது; அது பின்புறத்திலே புறப்படுகிறது (நியா 3:21,22).

"எக்லோன்" என்னும் பெயருக்கு "கிடாரி" என்று பொருள். எக்லோன் கொழுத்த கிடாரியைப்போல ஸ்தூலித்த மனுஷனாயிருக்கிறான். ஏகூத் தன்னுடைய கத்தியை, எக்லோனுடைய வயிற்றுக்குள் பாய்ச்சுகிறான். எக்லோன் கொழுத்த கிடாரியைப்போல கீழே விழுகிறான். கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பு எக்லோன்மீது உண்டாயிற்று.

எக்லோன் மிகவும் மோசமானவன். அவன் ஒரு துன்மார்க்கன். மோவாபின் ராஜாவாகிய எக்லோன் இஸ்ரவேல் புத்திரரை பதினெட்டு வருஷமாக ஒடுக்கினவன். இஸ்ரவேல் புத்திரரும், எக்லோனுக்கு விரோதமாக, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார்கள். எக்லோனை சங்காரம்பண்ணுவது கர்த்தருடைய சித்தமாயிற்று. கர்த்தர் எக்லோனுக்கு மரணதண்டனை விதிக்கிறார். இந்தத் தண்டனையை ஏகூத் நிறைவேற்றுகிறார்.

ஏகூத் எக்லோனை கொன்றுபோட்டவுடன், அந்த இடத்திலிருந்து தப்பித்து ஓடிவிடுகிறார். ஏகூத் தப்பித்துப்போவதற்கு கர்த்தர் அற்புதமான சூழ்நிலைகளையும் ஏற்படுத்திக்கொடுக்கிறார். எக்லோன் கீழே விழும்போது அலறி துடிக்கவில்லை. அந்த அறையில் அவனைத்தவிர வேறு ஒருவனுமில்லை. எக்லோனோடு கூட நின்ற யாவரும், அவனை விட்டுப்போய், சற்று தூரத்திலிருக்கிறார்கள். ஆகையினால் எக்லோனின் மரண ஓலம் அவர்களுடைய செவிகளில் கேட்கவில்லை.

ஏகூத் புறப்பட்டு, அறைவீட்டின் கதவைச் சாத்திப் பூட்டிப்போட்டு, கொலுக்கூடத்தின் வழியாய்ப் போய்விடுகிறார் (நியா 3:23). தன்னோடுகூட அறைக்கதவின் திறவுகோலையும் கொண்டு போய்விடுகிறார். அறைக்கு வெளியே காவலாளர்கள் நிற்கிறார்கள். ஆனால் ஏகூத்தோ ஒன்றும் தெரியாதவர் போலவும், ஒரு குற்றமும் செய்யாதவர் போலவும், அந்த இடத்தைவிட்டுக் கடந்துபோய்விடுகிறார். கர்த்தர் ஏகூத்துக்கு தைரியத்தைக் கொடுத்திருக்கிறார்.

ஏகூத் போனபின்பு, எக்லோனின் ஊழியக்காரர் வந்து பார்க்கிறார்கள்; இதோ, அறைவீட்டின் கதவு பூட்டியிருக்கிறது; ஆகையால் அவர் அந்தக் குளிர்ச்சியான அறையிலே மலஜலாதிக்கிருக்கிறாராக்கும் என்கிறார்கள் (நியா 3:24). இந்த ஊழியக்காரர்கள், எக்லோனின் குளியலறையை சுத்தம்பண்ணுகிறவர்களாகயிருக்கலாம். எக்லோனுடைய அறைவீட்டின் கதவு பூட்டப்பட்டிருப்பதினால், அவனுடைய வேலைக்காரர், அறைக்கு வெளியே பொறுமையாய்க் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

அவர்கள் சலித்துப்போகுமட்டும் காத்திருக்கிறார்கள்; அவன் அறைவீட்டின் கதவைத் திறக்கவில்லை; ஆகையால் ஒரு திறவுகோலை எடுத்துத் திறக்கிறார்கள்; இதோ, அவர்கள் ஆண்டவன் தரையிலே செத்துக்கிடக்கிறான் (நியா 3:25).

எக்லோனின் ஊழியக்காரர், அறைவீட்டிற்கு வெளியே காத்திருக்காமல், அறைக்கதவை உடனே திறந்து பார்த்திருந்தால், எக்லோன் செத்துப்போனதை உடனே பார்த்திருக்க முடியும். அவர்கள் ஏகூத்தையும் பிடித்துக்கொள்வதற்கு வாய்ப்புள்ளது. ஆனால் கர்த்தருடைய கிருபை ஏகூத் தப்பித்துப்போவதற்கு உதவி செய்கிறது.

எக்லோனின் ஊழியக்காரர் அறைவீட்டிற்கு வெளியே தாமதித்துக்கொண்டிருந்தபோது, ஏகூத் ஓடிப்போய், சிலைகளுக்குள்ள இடத்தைக் கடந்து, சேயிராத்தைச் சேர்ந்து தப்புகிறார் (நியா 3:26). சேயிராத் அடர்ந்த வனப்பகுதியாகும். ஏகூத் எக்லோனுடைய அறைவீட்டிற்கு வரும்போதே, எப்படி தப்பித்துப்போவது என்பதையும் யோசித்து, திட்டமிட்டு வந்திருக்கிறார். ஏகூத் சேயிராத்துக்கு வந்தபோது, எப்பிராயீம் மலையில் எக்காளம் ஊதுகிறார். இந்த மலை மோவாபியருடைய தலைநகரத்திற்கு அருகாமையிலுள்ளது.

ஏகூத் எக்லோனைக் கொன்றுபோட்ட பின்பு, மோவாபியரின் மொத்த சேனையையும் சங்காரம்பண்ண திட்டமிடுகிறார். எப்பிராயீம் மலையில் எக்காளம் ஊதி, இஸ்ரவேல் புத்திரரின் சேனையை ஒன்றுக்கூட்டிச் சேர்க்கிறார். இஸ்ரவேல் புத்திரர் ஏகூத்தோடே கூட மலையிருந்து இறங்குகிறார்கள். ஏகூத் அவர்களுக்கு முன்பாக நடக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் ஏகூத்தை பின்தொடர்ந்து வருகிறார்கள். ஏகூத் இஸ்ரவேலின் சேனயை தலைமை தாங்கி வழிநடத்துகிறார்.

ஏகூத் எப்பிராயீம் மலையிலிருந்து யுத்த எக்காளம் ஊதுகிறார். அந்த எக்காளமே விடுதலையின் எக்காளமாயிற்று. எக்காள சத்தம் இஸ்ரவேல் புத்திரருக்கு சந்தோஷ சத்தமாகயிருக்கிறது. மோவாபின் ராஜாவாகிய எக்லோன் இஸ்ரவேல் புத்திரரை பதினெட்டு வருஷமாக ஒடுக்கினான். மோவாபியரின் பிடியிலிருந்து இஸ்ரவேல் புத்திரர் இப்போது விடுதலை பெறுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் மோவாபியர் ஊதும் எக்காள சத்தத்தைத்தான் கேட்டார்கள். இப்போதுதான் அவர்கள் முதன்முறையாக, இஸ்ரவேல் புத்திரரில் ஒருவர் ஊதும் எக்காள சத்தத்தை தங்கள் செவிகளால் கேட்கிறார்கள்.

ஏகூத் எக்காளம் ஊதுகிறார். தன்னைப் பின்தொடர்ந்து வருகிற இஸ்ரவேல் புத்திரரிடம், "கர்த்தர் உங்கள் பகைஞராகிய மோவாபியரை உங்கள் கைகளில் ஒப்புக் கொடுத்தார்" என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஏகூத்தைப் பின்தொடர்ந்துபோய், மோவாபுக்கு எதிரான யோர்தான் துறைகளைப் பிடிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், மோவாபியரில் ஒருவனையும் கடந்துபோகவொட்டாமல் ஏறக்குறையப் பதினாயிரம்பேரை வெட்டுகிறார்கள்; மோவாபியர்கள் எல்லோரும் புஷ்டியுள்ளவர்களும் பராக்கிரமசாலிகளுமாயிருக்கிறார்கள்; அவர்களில் ஒருவனும் தப்பவில்லை (நியா 3:28,29).

ஏகூத் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவராயிருக்கிறார். தான் செய்கிற ஒவ்வொரு காரியத்தையும் அவர் கர்த்தரை நம்பி செய்கிறார். கர்த்தர் தன்னோடு கூடயிருப்பார் என்றும், அவர் தனக்கு உதவிசெய்வார் என்றும் ஏகூத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, தன்னை உற்சாகப்படுத்துகிறார். தன்னைப் பின்தொடர்ந்து வருகிற இஸ்ரவேலின் சேனையையும் உற்சாகப்படுத்துகிறார். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுப்பார்.

இஸ்ரவேல் புத்திரர் மோவாபியருக்கு எதிராக யுத்தம்பண்ணும்போது, முதலாவதாக யோர்தானின் துறைகளைப் பிடிக்கிறார்கள். மோவாபியர் யோர்தானின் துறைகளிலே பலத்த காவலை நியமித்திருக்கிறார்கள். அங்கே ஏராளமான மோவாபியர் காவல் காத்துக்கொண்டிருக்கிறார்கள். மோவாபியர் எல்லோரும் புஷ்டியுள்ளவர்கள். எக்லோனைப்போலவே ஸ்தூலித்த சரீரமுள்ளவர்கள். அவர்கள் அனைவரும் பராக்கிரமசாலிகள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் மோவாபியர் எல்லோரையும் வெட்டி யோர்தானின் துறைகளைப் பிடிக்கிறார்கள்.

யோர்தானின் துறைகள் பிடிக்கப்பட்டதினால், கானான் தேசத்தில் அங்கும் இங்குமாக சிதறிக்கிடக்கிற மோவாபியர் மத்தியிலே தகவல் தொடர்பு துண்டிக்கப்படுகிறது. இஸ்ரவேல் புத்திரர் மோவாபியரை வெட்டிக்கொன்றுபோடும்போது, இந்தச் செய்தி மற்ற இடங்களிலிருக்கிற மோவாபியருக்கு பரவவில்லை. மோவாபியருக்கு உதவியாக கானான் தேசத்தில் மற்ற இடங்களிலிருக்கும் மோவாபியர்கள் உதவிக்கு வரவில்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர், அதிக எதிர்ப்பு எதுவுமில்லாமல் மோவாபியரில் ஏறக்குறைய பதினாயிரம்பேரை வெட்டிப்போடுகிறார்கள். அவர்களில் ஒருவனும் தப்பவில்லை.

இப்படியே அந்நாளிலே மோவாப் இஸ்ரவேலுடைய கையின்கீழ்த் தாழ்த்தப்படுகிறது; அதனாலே தேசம் எண்பது வருஷம் அமைதலாயிருக்கிறது (நியா 3:30). இஸ்ரவேல் தேசத்திலே மோவாபியரின் வல்லமை முறிந்துபோகிறது.

மோவாபியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக தனியாக யுத்தம்பண்ண வராமல், தங்களோடுகூட பெலிஸ்தரின் ஐந்து அதிபதிகளையும், சகல கானானியரையும், சீதோனியரையும், மலைகளிலே குடியிருக்கிற ஏவியரையும் அழைத்துக்கொண்டு வந்து, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள்.

சத்துருக்களின் எண்ணிக்கை திரளாயிருந்தாலும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார். கர்த்தர் நம் பட்சத்திலிருக்கும்போது, நமக்கு விரோதமாக எந்த அந்தகார வல்லமையினாலும் எதிர்த்து நிற்க முடியாது. கர்த்தர் நமக்காக யுத்தம்பண்ணுவார். கர்த்தர் நமக்கு சத்துருக்கள்மீது ஜெயத்தைக் கட்டளையிடுவார். கர்த்தர் மோவாபியரைத் தாழ்த்துகிறார். இஸ்ரவேலரை உயர்த்துகிறார். இஸ்ரவேல் தேசம் சத்துருக்களின் நெருக்குதலில்லாமல் எண்பது வருஷம் அமைதலாயிருக்கிறது.

சம்கார்
நியா 3:31

நியா 3:31. அவனுக்குப்பிற்பாடு ஆனாத்தின் குமாரன் சம்கார் எழும்பினான்; அவன் பெலிஸ்தரில் அறுநூறுபேரை ஒரு தாற்றுக்கோலால் முறிய அடித்தான்; அவனும் இஸ்ரவேலை இரட்சித்தான்.

கானான் தேசத்தின் தென்மேற்கு பகுதியிலே பெலிஸ்தர்கள் பிரவேசிக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேலருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். பெலிஸ்தருக்கு விரோதமாக கர்த்தர் சம்காரை எழுப்புகிறார்.

சம்காரின் நாட்களிலே இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அந்நிய தெய்வங்களைப் பின்பற்றுகிறார்கள். விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது வருகிறது. கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை பெலிஸ்தரின் கையில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

"ஆனாத்தின் குமாரனாகிய சம்காரின் நாட்களிலும், யாகேலின் நாட்களிலும், பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது; வழி நடக்கிறவர்கள் பக்கவழியாய் நடந்தார்கள். தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய்ப்போயின, இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப் போயின. நூதன தேவர்களைத் தெரிந்து கொண்டார்கள்; அப்பொழுது யுத்தம் வாசல்வரையும் வந்தது; இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம்பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியும் காணப்பட்டதுண்டோ?" (நியா 5:6-8).

பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிற காலத்திலே, ஏகூத் இன்னும் ஜீவனோடிருக்கிறார். சம்கார் கானான் தேசத்தின் தென்மேற்கு பகுதியிலிருக்கிறார். சம்கார் பெலிஸ்தரில் அறுநூறு பேரை ஒரு தாற்றுக்கோலால் முறியடிக்கிறார். தாற்றுக்கோல் என்பதற்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தைக்கு, "உழவு கலப்பை" என்றும் பொருள் சொல்லலாம்.

சம்கார் நிலத்தை உழுது விவசாயம் பண்ணுகிறவர். கர்த்தரோ தம்முடைய தெய்வீக சித்தத்தினால், விவசாய வேலை பார்க்கிற சம்காரை, இஸ்ரவேலின் நியாயாதிபதியாக எழுப்புகிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, புதிய ஏற்பாட்டுக்காலத்திலே மீன்பிடிக்கிறவர்களை, மனுஷரைப் பிடிக்கும் அப்போஸ்தலராக ஏற்படுத்தினார்.

சம்காரின் கையில் ஒரு சாதாரண தாற்றுக்கோலே ஆயுதமாகயிருக்கிறது. அது மிகவும் பலவீனமான ஆயுதம். ஆயுதம் எப்படிப்பட்டதாகயிருந்தாலும், அந்த ஆயுதத்தை கர்த்தர் பயன்படுத்தும்போது, அதுவே வல்லமையான ஆயுதமாயிருக்கும். நாம் பலவீனராகயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய கரத்தில் நம்மை எடுத்து பயன்படுத்தும்போது, கர்த்தர் நம்மூலமாய் பெரிய காரியங்களை செய்வார்.

கர்த்தருக்குப் பிரியமான தாற்றுக்கோல், கோலியாத்தின் பட்டயத்தைவிட வல்லமையானது. சம்கார் தன்னுடைய தாற்றுக்கோலால், பெலிஸ்தரில் அறுநூறுபேரை முறியடிக்கிறார். அவர் தன்னுடைய சுயபலத்தினாலோ, சுயவல்லமையினாலோ பெலிஸ்தரை முறியடிக்கவில்லை. பரிசுத்த ஆவியானவருடைய பலத்தினாலே, சம்கார் பெலிஸ்தரில் அறுநூறு பேரை ஒரு தாற்றுக்கோலால் முறியடிக்கிறார்.

4 அதிகாரம்

தெபொராள், பாராக் ஆகியோரைப்பற்றிய சரித்திரம் இந்த அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் திரும்ப கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து வருகிறார்கள் (நியா 4:1). யாபீன் என்னும் கானானியருடைய ராஜா இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறான் (நியா 4:2,3).

அக்காலத்திலே தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலில் நியாயம் விசாரிக்கிறாள் (நியா 4:4,5). இஸ்ரவேல் ஜனத்தார் யாபீனின் கையிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள். பாராக்குக்கும் தெபொராளுக்கும், யாபீன்மீது யுத்தம்பண்ணுவது தொடர்பாக நடைபெற்ற சம்பாஷணை (நியா 4:6,9).

பாராக் யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார் (நியா 4:10). யாபீனின் படைத்தளபதியாகிய சிசெராவும், பாராக்கும் யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள் (நியா 4:12,13). தெபொராள் பாராக்கை கர்த்தருடைய நாமத்தினால் உற்சாகப்படுத்துகிறாள் (நியா 4:14). கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானானியர்மீது வெற்றியைக் கட்டளையிடுகிறார் (நியா 4:15,16).

யாபீனின் படைத்தளபதியாகிய சிசெரா தப்பித்து ஓடிப்போகிறான் (நியா 4:17). அவன் யாகேலின் கூடாரத்திலே அடைக்கலம் பெற்று, அங்கே ஆயாசமாய்த் தூங்குகிறான் யாகேல் சிசெராவின் நெற்றியிலே ஒரு ஆணியை அடித்து அவனைக் கொன்றுபோடுகிறாள் (நியா 4:18-21).

கர்த்தர் கானானியரின் ராஜாவாகிய யாபீனை இஸ்ரவேலுக்கு முன்பாகத் தாழ்த்துகிறார். இஸ்ரவேல் புத்திரரின் கை பலத்துக்கொண்டிருக்கிறது. கானானியருக்கு தோல்வி உண்டாயிற்று (நியா 4:22-24).

யாபீன்
நியா 4:1-3

நியா 4:1. ஏகூத் மரணமடைந்தபின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்தார்கள்.

நியா 4:2. ஆகையால் கர்த்தர் அவர்களை ஆத்சோரில் ஆளுகிற யாபீன் என்னும் கானானியருடைய ராஜாவின் கையிலே விற்றுப்போட்டார்; அவனுடைய சேனாபதிக்குச் சிசெரா என்று பேர்; அவன் புறஜாதிகளுடைய பட்டணமாகிய அரோசேத்திலே குடியிருந்தான்.

நியா 4:3. அவனுக்குத் தொளாயிரம் இருப்பு ரதங்கள் இருந்தது; அவன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்கினான்; இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்த ஏகூத் மரித்துப்போகிறார். ஏகூத் மரணமடைந்தபின்பு இஸ்ரவேல் புத்திரர் திரும்பக் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வருகிறார்கள் (நியா 4:1).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கர்த்தருக்கு நன்றியில்லாமல், அவருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். இதனால் கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது மூளுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சத்துருக்களின் கைகளில் விற்றுப்போட்டு, அவர்களைத் தண்டிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் தண்டனையின் வேதனையை தாங்கமுடியாமல் கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள். கர்த்தர் அவர்கள்மீது மனதுருக்கமாக இரங்குகிறார். அவர்களை இரட்சிப்பதற்கு நியாயாபதிகளை அனுப்புகிறார். கர்த்தருடைய கிருபையினால் இஸ்ரவேல் ஜனத்தார், தங்களுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து விடுவிக்கப்படுகிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தரைப்பற்றி நன்றாய்த் தெரியும். கர்த்தருடைய கோபமும், அவருடைய நியாயத்தீர்ப்பும், அவர் கொடுக்கும் தண்டனையும் தங்களை எப்படி பாதிக்கும் என்பதும் அவர்களுக்கு நன்றாய்த் தெரியும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் கொடுக்கும் தண்டனைகளை ஏற்கெனவே அனுபவித்திருக்கிறார்கள்.

ஆனாலும் அவர்கள் இப்போது மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய இருதயம் இன்னும் பரிசுத்தமாகவில்லை. அவர்கள் எத்தனை தரம் தண்டிக்கப்பட்டாலும், மறுபடியும் மறுபடியுமாக கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய பாவத்தினால் தண்டனைகளை அனுபவித்தாலும், அவர்களால் பாவம் செய்யாமலிருக்க முடியவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக தொடர்ந்து பாவம் செய்யும்போது அவர்களுடைய தேசத்தில் அமைதியில்லாமல் போய்விடுகிறது. கர்த்தர் அவர்களை பாதுகாக்க மறுத்துவிடுகிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைவிட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார். ஆனாலும், இஸ்ரவேல் ஜனத்தார், கர்த்தரிடத்தில் அழுது புலம்பும்போது, கர்த்தர் அவர்களுக்கு திரும்பவும் இரக்கம் காண்பிக்கிறார்.

இஸ்ரவேல் தேசம் எண்பது வருஷம் அமைதலாயிருந்தது (நியா 3:30). அவர்களுடைய அமைதியே, அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு ஆபத்தாயிற்று. தேசம் அமைதியாயிருக்கும்போது, ஜனங்கள் கர்த்தரிடத்தில் நெருக்கமாயிருக்கவேண்டும். கர்த்தரைப்பற்றியும், அவருடைய பிரமாணங்களைப்பற்றியும் தியானிக்க வேண்டும். தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும்.

இஸ்ரவேல் தேசம் எண்பது வருஷம் அமைதியாயிருந்த காலத்தில், இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். கர்த்தர் அவர்களைப் பாதுகாக்கிறார். அவர்களுக்கு அமைதியைக் கொடுக்கிறார். அவர்கள் கர்த்தர் கொடுக்கும் பாதுகாப்பையும், அமைதியையும் சந்தோஷமாய் அனுபவிக்கிறார்கள். ஆனால் தங்களை ஆசீர்வதிக்கும் கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள்.

ஏகூத் உயிரோடிருந்த காலத்தில், இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரித்தார். அவர் கர்த்தருடைய வார்த்தைகளை ஜனங்களுக்கு உபதேசம்பண்ணினார். அவர்கள் பாவம் செய்தபோது, ஏகூத் அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்தினார். ஆனால் இப்போதோ ஏகூத் மரணமடைந்துவிட்டார். இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்க நியாயாதிபதிகள் யாரும் இல்லை. அவர்கள் பாவம் செய்யும்போது, அவர்களைக் கண்டித்து உணர்த்துவதற்கு ஒருவருமில்லை. இதனால் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள்.

கர்த்தருடைய கோபம் இஸ்ரவேல் புத்திரர்மீது மூளுகிறது. கர்த்தர் அவர்களை ஆத்சோரில் ஆளுகிற யாபீன் என்னும் கானானியருடைய ராஜாவின் கையிலே விற்றுப்போடுகிறார்; அவனுடைய சேனாபதிக்குச் சிசெரா என்று பேர்; அவன் புறஜாதிகளுடைய பட்டணமாகிய அரோசேத்திலே குடியிருக்கிறான். அவனுக்குத் தொளாயிரம் இருப்பு ரதங்கள் இருக்கிறது (நியா 4:2,3).

யாபீன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்குகிறான். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போகும்போது, கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அவர்களுக்கு கிடைக்கவில்லை. இதனால் அவர்களுடைய சத்துருக்கள், அவர்களை எளிதாக மேற்கொள்கிறார்கள்.

கானானின் ராஜாவாகிய யாபீன் ஆத்சோரிலே ஆளுகை செய்கிறான். யோசுவாவின் புஸ்தகத்தில் ஆத்சோரின் ராஜாவாகிய யாபீனைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு யாபீன்களும் ஒரே நபராகவோ அல்லது, யோசுவாவின் காலத்தில் இருந்தவர், இந்த யாபீனுக்கு முற்பிதாவாகவோ இருக்கலாம்.

"ஆத்சோரின் ராஜாவாகிய யாபீன் அதைக் கேள்விப்பட்டபோது, அவன் மாதோனின் ராஜாவாகிய யோபாவிடத்திற்கும், சிம்ரோனின் ராஜாவிடத்திற்கும், அக்சாபின் ராஜாவிடத்திற்கும், மேலும் சிலருக்கும் ஆளனுப்பினான்" (யோசு 11:1).

"அக்காலத்திலே யோசுவா திரும்பி, ஆத்சோரைப் பிடித்து, அதின் ராஜாவைப் பட்டயத்தினால் வெட்டிப்போட்டான்; ஆத்சோர் முன்னே அந்த ராஜ்யங்களுக்கெல்லாம் தலைமையான பட்டணமாயிருந்தது" (யோசு 11:10).

யோசுவா யாபீனையும் அவனுடைய மனுஷரையும் சங்காரம்பண்ணி, ஆத்தோரை அக்கியினால் சுட்டெரித்தார். இதன்பின்பு கானானியர் ஆத்சோரை மறுடியுமாய் கட்டியெழுப்புகிறார்கள். இவர்கள் எண்ணிக்கையிலும், பலத்திலும் வளர்ச்சி பெறுகிறார்கள். யாபீனுடைய சேனாதிபதியாகிய சிசெரா ஒரு நல்ல யுத்தவீரன். இவன் இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம்பண்ணி, அவர்களை மேற்கொள்கிறான். யாபீனும் சிசெராவும், இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்குகிறார்கள்.

ஒரு காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கானானியர்மீது யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களை தங்களுடைய ஆளுகையின்கீழ் வைத்திருந்தார்கள். கானானியர் ஒரு காலத்தில் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு அடிமைகளாயிருந்தார்கள்.

"கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்" (ஆதி 9:25).

ஆனால் இப்போதோ, இஸ்ரவேல் புத்திரர் கானானியருக்கு அடிமைகளாயிருக்கிறார்கள். கானானியர் இஸ்ரவேலரை கொடுமையாய் ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து நடந்த வரையிலும், கர்த்தருடைய கிருபையும், உதவியும், ஒத்தாசையும், அநுக்கிரகமும் அவர்களுக்கு கிடைத்தது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தபோதோ, கர்த்தருடைய பாதுகாப்பு அவர்களுக்கு கிடைக்காமல் போயிற்று.

இப்போது இஸ்ரவேல் புத்திரர் கானானியரின் காலடியிலிருக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாருடைய தோல்விக்கும், அவர்கள் அனுபவிக்கும் பாடுகளுக்கும் அவர்களுடைய பாவங்களே காரணம். இஸ்ரவேல் ஜனத்தார் சோம்பேறிகளாகயிருந்து நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. அவர்களுக்கு கர்த்தர்மீது விசுவாசமுமில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியாமல், தங்கள் மனம்போன போக்கிலே ஜீவிக்கிறார்கள். தங்கள் பாவத்திற்கான தண்டனைகளை அனுபவிக்கிறார்கள்.

கானானியர் இஸ்ரவேல் புத்திரரை சாதாரணமாக ஒடுக்கவில்லை. அவர்கள் மிகவும் கொடுமையாய் ஒடுக்குகிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரருடைய வேதனைகளும், பாடுகளும், உபத்திரவங்களும் அதிகரித்திருக்கிறது. தங்கள்மீது வந்திருக்கிற வேதனைகளை இஸ்ரவேல் புத்திரரால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. தாங்கள் அனுபவிக்கிற உபத்திரவங்களை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதனால் இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரிடத்தில் திரும்பி வருகிறார்கள். தங்கள் உதவிக்காக கர்த்தரை நோக்கிப் பார்க்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள் (நியா 4:3).

பாடுகளும், வேதனைகளும், உபத்திரவங்களும் இஸ்ரவேல் ஜனத்தாரை கர்த்தரிடத்தில் அழைத்து வருகிறது. வேதனைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கு, கர்த்தரிடத்தில் வருவதைத் தவிர, அவர்களுக்கு வேறு உபாயம் எதுவுமில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் இதுவரையிலும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்து வந்தார்கள். இப்போதோ தங்கள் உதவிக்காக கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள்.

தெபொராள்
நியா 4:4-9

நியா 4:4. அக்காலத்திலே லபிதோத்தின் மனைவியாகிய தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தாள்.

நியா 4:5. அவள் எப்பிராயீம் மலைத்தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின்கீழ் குடியிருந்தாள்; அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவார்கள்.

நியா 4:6. அவள் நப்தலியிலுள்ள கேதேசிலிருக்கிற அபினோகாமின் குமாரன் பாராக்கை வரவழைத்து: நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய் என்றும்,

நியா 4:7. நான் யாபீனின் சேனாபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும் அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா என்றாள்.

நியா 4:8. அதற்குப் பாராக்: நீ என்னோடே கூட வந்தால் போவேன்; என்னோடேகூட வராவிட்டால், நான் போகமாட்டேன் என்றான்.

நியா 4:9. அதற்கு அவள்: நான் உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன்; ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது; கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக்கொடுப்பார் என்று சொல்லி, தெபொராள் எழும்பி, பாராக்கோடேகூடக் கேதேசுக்குப் போனாள்.

யாபீன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்குகிறான். அதன்பின்பு இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இரட்சிப்பின் வருஷம் வருகிறது. தெபொராள் என்னும் தீர்க்கதரிசியானவள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வருகிற காலத்திலே, கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு இரட்சிப்பைக் கட்டளையிடுகிறார்.

தெபொராள் என்னும் பெயருக்கு "தேனீ" என்று பொருள். தெபொராள் தன்னுடைய பெயருக்கேற்ற பிரகாரமாக, சோம்பலில்லாமல் சுறுசுறுப்பாக இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வருகிறாள். ஜனங்களுக்கு அதிக பிரயோஜனமான ஊழியத்தை செய்கிறாள். தெபொராள் தன்னுடைய சிநேகிதர் மத்தியிலே தேனைப்போல இனிமையான சுபாவமுள்ளவளாகவும், தன்னுடைய சத்துருக்கள் மத்தியிலே, தேனீயின் கொட்டுகிற கொடுக்கைப்போல கூர்மையானவளாயும் இருக்கிறாள்.

தெபொராள் லபிதோத்தின் மனைவி. யூதர்களுடைய பாரம்பரிய வரலாற்றில், ஸ்திரீகள் தங்களுடைய புருஷரின் பெயரை, தங்கள் பெயரோடு சேர்த்து பயன்படுத்துவதில்லை. ஆகையினால் லபிதோத் என்பது ஓர் ஊரின் பெயராகயிருக்கவேண்டும் என்றும், தெபொராள் லபிதோத் ஊரைச் சேர்ந்தவள் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் பொருள் சொல்லுகிறார்கள்.

லபிதோத் என்னும் பெயருக்கு "விளக்குகள்" அல்லது "தீபங்கள்" என்று பொருள். தெபொராள் தேவாலயத்தில் பயன்படுத்தப்படும் விளக்குகளுக்கு, திரிகளை தயாரித்துக்கொடுக்கும் வேலை செய்கிறவள். இஸ்ரவேல் ஜனத்தார் ஆவிக்குரிய இருளில் இருந்த காலத்தில், தெபொராள், அவர்களுக்கு எரிகிற விளக்கைப்போல இருந்து, ஆவிக்குரிய வெளிச்சத்தைக் கொடுக்கிறாள். இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோருக்கும் தெபொராளின் ஞானத்தைப்பற்றித் தெரிந்திருக்கிறது.

தெபொராள் ஒரு தீர்க்கதரிசியானவள். இவள் தேவனோடு நெருக்கிய ஐக்கியத்திலிருக்கிறாள். இஸ்ரவேலின் ஊழியத்திற்கு தன்னை முழுவதுமாக அர்ப்பணித்திருக்கிறாள். கானானின் ராஜாவாகிய யாபீன் இஸ்ரவேல் புத்திரரை, இருபது வருஷமாக கொடுமையாக ஒடுக்கின காலத்தில், தெபொராள் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறாள்.

தெபொராள் இஸ்ரவேல் தேசத்து இளவரசியல்ல. அவள் ஒரு இராணியாகயிருந்து ஜனங்களை ஆளுகை செய்யவில்லை. ஒரு அரசாங்கத்திலே வழக்குகளை விசாரிப்பதற்கு நியாயாபதிகளை நியமிப்பது வழக்கம். அப்படிப்பட்ட அரசாங்க உத்தியோகம் எதுவும் தெபொராளுக்கு கொடுக்கப்படவில்லை.

கர்த்தர் தெபொராளை தம்முடைய தீர்க்கதரிசியாக தெரிந்துகொள்கிறார். தெபொள் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே, கர்த்தர் தனக்குக் கொடுக்கும் வார்த்தைகளை அறிவிக்கிறாள். இவள் ஜனங்களுக்கு, கர்த்தருடைய வாயாகயிருந்து ஊழியம் செய்கிறாள்.

தெபொராள் எப்பிராயீம் மலைத்தேசமான ராமாவுக்கும் பெத்தேலுக்கும் நடுவிலிருக்கிற தெபொராளின் பேரீச்சமரத்தின்கீழ் குடியிருக்கிறாள்; அங்கே இஸ்ரவேல் புத்திரர் அவளிடத்திற்கு நியாய விசாரணைக்குப் போவது வழக்கம் (நியா 4:5).

தெபொராள் பேரீச்ச மரத்தின்கீழே குடியிருக்கிறாள் என்று சொல்லுவதற்கு பதிலாக, அவள் அந்த மரத்தின் கீழே அமர்ந்திருக்கிறாள் என்று சொல்லுவது சிறப்பாகயிருக்கும். இந்த பேரீச்ச மரத்திற்கு தெபொராளின் பேரீச்ச மரம் என்று பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவள் இந்த மரத்தின்கீழே அமர்ந்திருந்து, இஸ்ரவேலை நியாயம் விசாரித்து வருகிறாள்.

தெபொராளின் வீடு பேரீச்ச மரத்தின் கீழே இருந்திருக்கலாம். அல்லது வெட்ட வெளியிலே, தெபொராளின் நியாயாசனம் போடப்பட்டிருக்கலாம். அவள் அந்த நியாயாசனத்தில் அமர்ந்திருந்து, இஸ்ரவேல் ஜனத்தை நியாயம் விசாரித்திருக்கலாம். தெபொராள் ஒருவேளை பேரீச்சமரத்தின் நிழலிலே அமர்ந்திருந்து நியாயம் விசாரித்திருக்கலாம்.

பூர்வகாலத்தில், இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறவர்கள், பேரீச்ச மரத்தின்கீழே, அதன் நிழலில் அமர்ந்திருந்து, இஸ்ரவேல் ஜனங்களை நியாயம் விசாரிப்பது வழக்கம். பேரீச்ச மரம் உறுதியானது. அது நீதிக்கு அடையாளம். அந்த மரத்திற்கு எவ்வளவு எதிர்ப்புக்கள் வந்தாலும், பேரீச்ச மரம் பட்டுப்போகாது. அது உறுதியாய் நிலைத்திருக்கும். ஜனங்களுக்கு தன் பலனைத் தொடர்ந்து கொடுக்கும்.

நியாயாதிபதிகள் நீதியின் பக்கத்தில் உறுதியாயிருந்து, நீதியான விசாரணை செய்து, நியாயமான தீர்ப்பு வழங்குகிறார்கள். இதற்கு அடையாளமாகவே, தெபொராள் பேரீச்ச மரத்தின்கீழே குடியிருக்கிறாள்.

கானானின் ராஜாவாகிய யாபீன் இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்குகிறான். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சிக்கும் திட்டத்தை, கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியாகிய தெபொராளுக்கு வெளிப்படுத்துகிறார்.

தெபொராள் ஒரு ஸ்திரீ. சமுதாயத்தில் ஸ்திரீகள் பலவீனமான பாண்டமாயிருக்கிறார்கள். அக்காலத்தில் ஸ்திரீகள் படைத்தளபதியாகயிருந்து யுத்தம்பண்ணும் வழக்கமில்லை. இஸ்ரவேலின் சேனைக்கு தன்னால் தலைமை ஏற்க முடியாவிட்டாலும், இந்த வேலையை யாரிடம் ஒப்படைப்பது என்று தெபொராளுக்கு தெரிந்திருக்கிறது.

தெபொராள் நப்தலியிலுள்ள கேதேசிலிருக்கிற அபினோகாமின் குமாரன் பாராக்கை வரவழைக்கிறாள். தெபொராளின் உதவியில்லாமல் பாராக்கால் ஒன்றும் செய்யமுடியாது. அதுபோலவே பாராக்கின் உதவியில்லாமல் தெபொராளாலும் ஒன்றும் செய்யமுடியாது.

தெபொராள் சரீரத்தின் தலையைப்போல ஞானமுள்ளவள். பாராக் சரீரத்தின் கையைப்போல பெலமுள்ளவர். தலையும் கையும் சேர்ந்து இயங்கவேண்டும். அப்போதுதான் நினைத்த காரியம் நடைபெறும். இஸ்ரவேல் புத்திரருக்கு யாபீனின் கையிலிருந்து விடுதலை கிடைக்கவேண்டுமென்றால், தெபொராளும் பாராக்கும் சேர்ந்து, யாபீனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும்.

தெபொராள் பாராக்கிடம், "நீ நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொண்டு, தாபோர் மலைக்குப் போகக்கடவாய்" என்று சொல்லுகிறாள் (நியா 4:6).

"நான் யாபீனின் சேனாபதியாகிய சிசெராவையும், அவன் ரதங்களையும் அவன் சேனையையும், கீசோன் பள்ளத்தாக்கிலே உன்னிடத்திற்கு வர இழுத்து அவனை உன் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிடவில்லையா" (நியா 4:7) என்று தொபொராள் பாராக்குக்கு கர்த்தருடைய கட்டளையை நினைவுபடுத்துகிறாள்.

பாராக் யாபீனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ண ஒரு சேனையை ஆயத்தம்பண்ணவேண்டும். கானானின் ராஜாவாகிய யாபீனுக்கு சிசெரா படைத்தளபதியாயிருக்கிறான். அவனுக்கு தொளாயிரம் இருப்பு இரதங்கள் இருக்கிறது. பாராக் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். ஆனால் பாராக்கோ சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண பயப்படுகிறார்.

பாராக் சிசெராவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணாமல் சோர்ந்துபோயிருப்பதற்கு சில காரணங்கள் உள்ளன. பாராக்குக்கு தெபொராளுடைய உத்தரவு தேவைப்படுகிறது. பாராக் தன்னுடைய சுயவிருப்பத்தின் பிரகாரமாக, இஸ்ரவேலின் சேனையைக் கூட்டிச்சேர்க்கக்கூடாது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாக இஸ்ரவேலின் சேனையைக் கூட்டவேண்டும்.

தெபொராள் கர்த்தருடைய வார்த்தையை பெற்றுக்கொண்டு, அதை பாராக்குக்கு சொல்லுகிறாள். பரலோகத்திலிருந்து, தெபொராள் மூலமாய் பாராக்குக்கு கட்டளை வந்திருக்கிறது. பாராக் நப்தலி புத்திரரிலும், செபுலேன் புத்திரரிலும் பதினாயிரம் பேரை கூட்டிச் சேர்க்கவேண்டும். பாராக் அவர்களைக் கூட்டிக்கொண்டு தாபோர் மலைக்குப்போகவேண்டும்.

பாராக் தன்னுடைய சேனையிலே எத்தனை பேரைச் சேர்க்கவேண்டும் என்றும் தெபொராள் அவருக்கு கர்த்தருடைய வார்த்தையை சொல்லுகிறாள். மொத்தம் பதினாயிரம் பேரைக் கூட்டிச்சேர்க்கவேண்டும். பாராக் நப்தலி கோத்திரத்தைச் சேர்ந்தவர். செபுலோன் புத்திரர் நப்தலி புத்திரருக்கு அருகாமையிலிருக்கிறார்கள். பாராக் இவ்விரண்டு கோத்திரத்தாரிலுமிருந்து பதினாயிரம் பேரைக் கூட்டிச்சேர்க்கவேண்டும். தாபோர் மலை நப்தலி கோத்திரத்தின் சுதத்தரவீதத்திற்கு அருகாமையிலுள்ளது. பாராக் பதினாயிரம்பேரை கூட்டிக்கொண்டு தாபோர் மலைக்குப்போகவேண்டுமென்று தெபொராள் கர்த்தருடைய வார்த்தையைச் சொல்லுகிறாள்.

பாராக் தெபொராள் சொன்ன பிரகாரம், பதினாயிரம் பேரை கூட்டிச் சேர்க்கிறார். ஆனால் அவருக்கு சத்துருவோடு எப்படி யுத்தம்பண்ணுவது என்று தெரியவில்லை. யாபீனோடு யுத்தம்பண்ண, தனக்கு எப்படிப்பட்ட வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் பாராக் அறியாதிருக்கிறார். கர்த்தருடைய வார்த்தை பாராக்குக்கு தெபொராள் மூலமாய் மறுபடியும் வெளிப்படுகிறது. கர்த்தர் யாபீனின் சேனாபதியாகிய சிசெராவையும், அவனுடைய இரதங்களையும், அவன் சேனையையும் கீசோன் பள்ளத்தாக்கிலே, பாராக்கினிடத்திற்கு இழுத்துக்கொண்டு வருவார். கர்த்தர் அவர்களை பாராக்கின் கையிலே ஒப்புக்கொடுப்பார். தெபொராள் பாராக்கிடம் பேசினாலும், அவள் கர்த்தருடைய வார்த்தையைப் பேசுகிறாள்.

பாராக்குக்கு கர்த்தருடைய ஆறுதலான வார்த்தை சொல்லப்படுகிறது. ஆனாலும் அவர் சிசெராவோடு யுத்தம்பண்ணப்போக தயங்குகிறார். பாராக் தெபொராளிடம், "நீ என்னோடே கூட வந்தால் போவேன்; என்னோடேகூட வராவிட்டால், நான் போகமாட்டேன்" (நியா 4:8) என்று சொல்லுகிறார்.

யுத்த ஆலோசனைகளைவிட, தெபொராள் தன்னோடு கூடயிருப்பதுதான் தனக்கு பெலன் என்று பாராக் நினைக்கிறார். தெபொராள் தன்னோடு கூடவே இருந்து, ஒவ்வொரு சூழ்நிலையிலும் தனக்குத் தேவையான ஆலோசனைகளைக் கொடுப்பாள் என்று பாராக் எதிர்பார்க்கிறார். கர்த்தருடைய சிந்தையை தன்னால் அறிந்துகொள்ள முடியாது என்றும், கர்த்தர் தம்முடைய சித்தத்தை தெபொராள் மூலமாய் தனக்கு வெளிப்படுத்துவார் என்றும் பாராக் எதிர்பார்க்கிறார்.

சிசெராவிடம் தொள்ளாயிரம் இருப்பு இரதங்கள் இருக்கிறது. கானானியருடைய சேனையில் திரளான எண்ணிக்கையில் யுத்தவீரர்கள் இருக்கிறார்கள். சத்துருவின் சேனையைப் பார்க்கும்போதே பாராக்குக்கு பயமும் கலக்கமும் உண்டாகிவிடுகிறது. தெபொராள் தன்னோடு கூடயிருந்தால், கர்த்தருடைய பிரசன்னம் தன்னோடு கூடயிருப்பதுபோல இருக்கும் என்று பாராக் எதிர்பார்க்கிறார்.

பாராக் சிசெராவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகும்போது, அவருக்கு யுத்த ஆலோசனைகள் தேவைப்படும். தன்னுடைய சேனையிலுள்ள பதினாயிரம்பேரை அவ்வப்போது உற்சாகப்படுத்தவேண்டும். இல்லையென்றால் அவர்களும் சோர்ந்துபோய்விடுவார்கள். எல்லா சூழ்நிலைகளிலும் கர்த்தருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும். இவையெல்லாவற்றிற்குமே தீர்க்கதரிசியாகிய தெபெராள் தேவைப்படுகிறாள்.

தெபொராள் பாராக்கோடுகூட கேதேசுக்குப்போக சம்மதம் தெரிவிக்கிறாள். தெபொராள் பாராக்கிடம், "நான் உன்னோடே கூட நிச்சயமாய் வருவேன்; ஆனாலும் நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது; கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக்கொடுப்பார்" (நியா 4:9) என்று சொல்லுகிறாள். தெபொராள் இந்த வார்த்தையைச் சொல்லி, எழும்பி, பாராக்கோடேகூட கேதேசுக்குப்போகிறாள்.

தெபொராள் தேனீயைப்போல சுறுசுறுப்பானவள். இஸ்ரவேல் தேசத்திற்காக ஊழியம் செய்வதில் அவள் களைத்துப் போகவுமில்லை. சோர்ந்துபோகவுமில்லை. தெபொராள் ஸ்திரீயாகயிருந்தாலும், அவள் ஒரு பலவீனமான பாண்டாகயிருந்தாலும், கர்த்தரிடத்தில் அவள் வைத்திருக்கிற விசுவாசம் உறுதியாயிருக்கிறது. தெபொராள் சரீரத்தில் பலவீனமானவள். விசுவாசத்தில் பெலமுள்ளவள்.

சிசெராவோடு யுத்தம்பண்ண தெபொராளும் தன்னோடுகூட வரவேண்டுமென்று பாராக் கேட்டுக்கொள்கிறார். அவள் தன்னோடு கூட வந்தால்தான் தான் யுத்தம்பண்ணப்போவதாகவும், அவள் தன்னோடு கூட வரவில்லையென்றால், தான் யுத்தம்பண்ணப்போவதில்லை என்றும் பாராக் உறுதியாக சொல்லிவிடுகிறார்.

தெபொராள் தன்னோடு கூட வராமல், பாராக் பதினாயிரம்பேரை மாத்திரம் கூட்டிக்கொண்டு, சிசெராவோடு யுத்தம்பண்ணப்போனால், அது அவருக்கு மேன்மையாயிருக்கும். தெபொராள் பாராக்கோடே கூடப்போனால், அது அவருக்கு மேன்மையாயிருக்காது. ஆகையினால் "நீ போகிற பிரயாணத்தில் உண்டாகிற மேன்மை உனக்குக் கிடையாது" என்று தெபொராள் சொல்லிவிடுகிறாள். "கர்த்தர் சிசெராவை ஒரு ஸ்திரீயின் கையில் ஒப்புக்கொடுப்பார்" என்றும் தெபொராள் சிசெராவின் முடிவைப்பற்றி தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறாள்.

சிசெராவின்மீது கிடைத்த வெற்றி, தெபொராள் மூலமாய் உண்டாயிற்று என்று இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சொல்லுவார்கள். இந்த யுத்தத்தினால் உண்டாகிற மேன்மை பாராக்குக்கு கிடைக்காமல் தெபொராளுக்கு கிடைக்கும்.

ஏபேரின் மனைவியாகிய யாகேல் சிசெராவைக் கொன்றுபோடுவாள். யுத்தத்தில் முழுவெற்றி, மறுபடியும் ஒரு ஸ்திரீயின் மூலமாகவே உண்டாகும். இதனால் இந்த யுத்தத்தில் பாராக்குக்கு மேன்மை உண்டாகாது. அவருடைய மேன்மை மங்கிப்போகும் என்று தெபொராள் சொல்லுகிறாள்.

பாராக்கு தன்னுடைய சுயமேன்மையையோ, சுயமகிமையையோ எதிர்பார்க்கவில்லை. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு விடுதலை கிடைக்கவேண்டும். இதுவே பாராக்கின் விருப்பம். சிசெராவுக்கு விரோதமாக நடைபெறப்போகும் யுத்தத்தில், இஸ்ரவேல் புத்திரருக்கு வெற்றி கிடைக்கவேண்டும் என்பதே பாராக்கின் பிரதான நோக்கமாயிருக்கிறது. ஆகையினால், தனக்கு மேன்மை கிடைக்காவிட்டாலும், தெபொராள் தன்னோடுகூட வரவேண்டுமென்று பாராக் சொல்லுகிறார்.

பாராக்
நியா 4:10-16

நியா 4:10. அப்பொழுது பாராக்: செபுலோன் மனுஷரையும் நப்தலி மனுஷரையும் கேதேசுக்கு வரவழைத்து, தன்னைப் பின்செல்லும் பதினாயிரம் பேரோடே போனான்; தெபொராளும் அவனோடேகூடப் போனாள்.

நியா 4:11. கேனியனான ஏபேர் என்பவன் மோசேயின் மாமனாகிய ஓபாபின் புத்திரராயிருக்கிற கேனியரை விட்டுப் பிரிந்து, கேதேசின் கிட்ட இருக்கிற சானாயிம் என்னும் கர்வாலிமரங்கள் அருகே தன் கூடாரத்தைப் போட்டிருந்தான்.

நியா 4:12. அபினோகாமின் குமாரன் பாராக் தாபோர் மலையில் ஏறிப்போனான் என்று சிசெராவுக்கு அறிவிக்கப்பட்டபோது,

நியா 4:13. சிசெரா தொளாயிரம் இருப்புரதங்களாகிய தன்னுடைய எல்லா ரதங்களையும், தன்னோடிருக்கும் எல்லா ஜனங்களையும், புறஜாதிகளின் பட்டணமாகிய அரோசேத்திலிருந்து கீசோன் பள்ளத்தாக்கிலே வரவழைத்தான்.

நியா 4:14. அப்பொழுது தெபொராள் பாராக்கை நோக்கி: எழுந்துபோ; கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே; கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்படவில்லையா என்றாள்; அப்பொழுது பாராக்கும், அவன் பின்னாலே பதினாயிரம்பேரும், தாபோர் மலையிலிருந்து இறங்கினார்கள்.

நியா 4:15. கர்த்தர் சிசெராவையும் அந்த எல்லா ரதங்களையும் சேனையனைத்தையும் பாராக்குக்கு முன்பாகப் பட்டயக்கருக்கினால் கலங்கடித்தார்; சிசெரா ரதத்தைவிட்டிறங்கி கால்நடையாய் ஓடிப்போனான்.

நியா 4:16 பாராக் ரதங்களையும் சேனையையும் புறஜாதிகளுடைய அரோசேத்மட்டும் துரத்தினான்; சிசெராவின் சேனையெல்லாம் பட்டயக்கருக்கினால் விழுந்தது; ஒருவனும் மீதியாயிருக்கவில்லை.

தெபொராள் தனக்கு சொன்ன பிரகாரம், பாராக் நப்தலி புத்திரரிலும், செபுலோன் புத்திரரிலும் பதினாயிரம் பேரைக் கூட்டிக்கொள்கிறார். அவர்களை கேதேசுக்கு வரவழைத்து அவர்களோடேகூடப்போகிறார். தெபொராளும் பாராக்கோடு கூடப்போகிறாள். செபுலோன் புத்திரரும், நப்தலி புத்திரரும் யுத்தத்திலே வல்லவர்களல்ல. ஆனாலும் தெபொராளின் பாடல் அவர்களை உற்சாகப்படுத்துகிறது.

தெபொராளின் ஆறுதலான வார்த்தைகளையும், உற்சாகமான வார்த்தைகளையும் கேட்டு, இஸ்ரவேல் புத்திரரில் மேலும் சில கோத்திரத்தாரும் பாராக்கின் சேனையில் சேர்ந்து கொள்கிறார்கள். எல்லா கோத்திரங்களிலிருந்தும் யுத்த மனுஷர்கள் தங்களோடு சேர்ந்துகொள்வார்கள் என்று பாராக்கும், தெபொராளும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால் அநேகர் அவர்களோடு கூட வரவில்லை.

கேனியனாகிய ஏபேர் என்பவனைப்பற்றி இங்கே விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர்கள் யூதாவுக்கு தென்புறத்திலே, வனாந்தரத்திலே குடியிருக்கிறவர்கள்.

கேனியனான ஏபேர் என்பவன் மோசேயின் மாமனாகிய ஓபாபின் புத்திரராயிருக்கிற கேனியரை விட்டுப் பிரிந்து, கேதேசின் கிட்ட இருக்கிற சானாயிம் என்னும் கர்வாலிமரங்கள் அருகே தன் கூடாரத்தைப் போட்டிருக்கிறான் (நியா 4:11).

யாகேல் என்பவள் கேனியனான ஏபேரின் மனைவி. அக்காலத்தில் யாபீன் என்னும் ஆத்சோரின் ராஜாவுக்கும், கேனியனான ஏபேரின் வீட்டிற்கும் சமாதானம் உண்டாயிருக்கிற (நியா 4:17). ஆகையினால் ஏபேர் பாராக்கோடுகூட சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகவில்லை.

சிசெரா இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறான். அபினோகாமின் குமாரன் பாராக் தாபோர் மலையில் ஏறிப்போனான் என்று சிசெராவுக்கு அறிவிக்கப்படுகிறது. அப்பொழுது சிசெரா தொளாயிரம் இருப்புரதங்களாகிய தன்னுடைய எல்லா ரதங்களையும், தன்னோடிருக்கும் எல்லா ஜனங்களையும், புறஜாதிகளின் பட்டணமாகிய அரோசேத்திலிருந்து கீசோன் பள்ளத்தாக்கிலே வரவழைக்கிறான் (நியா 4:12,13).

சிசெரா தன்னுடைய இருப்பு இரதங்களை நம்புகிறான். அவனிடத்தில் தொள்ளாயிரம் இருப்பு இரதங்கள் இருக்கிறது. இவையெல்லாம் யுத்தக்களத்தில் மொத்தமாக ஓடும்போது பேரிரைச்சல் உண்டாகும். இந்த சத்தத்தைக் கேட்கும்போதே, கால்நடையாய் நடக்கிற யுத்த வீரர்கள் எல்லோரும் பயந்து ஓடிப்போய்விடுவார்கள். சிசெரா தன்னுடைய தொள்ளாயிரம் இருப்பு இரதங்களையும் பாராக்குக்கு விரோதமான யுத்தத்திலே பயன்படுத்துகிறான்.

தெபொராள் பாராக்கோடு கூடயிருக்கிறாள். பாராக் பதினாயிரம் பேரை யுத்தத்திலே வழிநடத்தினாலும், தெபொராளே பாராக்குக்கு கட்டளை கொடுக்கிறாள். தெபொராள் பாராக்கை நோக்கி: "எழுந்துபோ; கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே; கர்த்தர் உனக்கு முன்பாகப் புறப்படவில்லையா" (நியா 4:14) என்று சொல்லுகிறாள்.

பாராக்கும் பதினாயிரம்பேரும் தாபோர் மலையின்மேல் நின்று, கீசோன் பள்ளத்தாக்கிலே இருக்கிற சிசெராவின் இருப்பு இரதங்களையும், திரளான சேனைகளையும் பார்த்து பயப்படுகிறார்கள். அவர்களுடைய இருதயம் சோர்ந்துபோகிறது. அப்போது தெபொராள் அவர்களுக்கு கர்த்தருடைய ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறாள். "கர்த்தர் சிசெராவை உன் கையிலே ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே" என்று தெபொராள் பாராக்குக்கு சொல்லி, அவர்களை உற்சாகப்படுத்துகிறாள். தெபொராள் தனக்கு கட்டளையிட்டவுடன், பாராக்கும், அவர் பின்னாலே பதினாயிரம்பேரும், தாபோர் மலையிலிருந்து இறங்குகிறார்கள்.

யுத்தக்களத்திலே தங்களுக்கு இப்படிப்பட்ட உற்சாகமான வார்த்தை கிடைக்கவேண்டும் என்பதற்காகத்தான், தெபொராளும் தன்னோடேகூட வரவேண்டுமென்று பாராக் விரும்பினார். தெபொராள், யுத்தக்களத்திலே நிற்கும்போது, இஸ்ரவேலின் சேனை எதிலே குறைவுள்ளவர்களாகயிருக்கிறார்கள் என்பதைப் பார்க்கிறாள். அந்தக் குறையை தன்னுடைய தீர்க்கதரிசன வார்த்தையினால் நிவிர்த்தி பண்ணுகிறாள்.

இஸ்ரவேல் ஜனத்தார் பயத்தோடும் அவிசுவாசத்தோடும் இருக்கிறார்கள். யுத்தத்திலே தங்களுக்கு வெற்றி கிடைத்தாலும், யுத்தம் எத்தனை நாள் நடைபெறும் என்று அவர்களுக்கு தெரியவில்லை. தெபொராள் அவர்களுடைய சந்தேகத்தை தீர்த்து வைக்கிறாள். "கர்த்தர் சிசெராவை உன் கையில் ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே" என்று சொல்லி அவர்களை உற்சாகப்படுத்துகிறாள். யுத்தம் கர்த்தருடையது. யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயம் கிடைக்கும். அந்த ஜெயமும் இன்றே கிடைக்கும் என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு ஆறுதலான வார்த்தையாயிருக்கிறது.

தெபொராள் யுத்தக்களத்திலே கர்த்தரைப்பற்றிச் சொல்லுகிறாள். கர்த்தர் பாராக்குக்கு முன்பாகவே, யுத்தக்களத்திற்கு வந்துவிட்டார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் பாராக்கோடு கூடயிருக்கிறது. "கர்த்தர் உனக்கு முன்பாக புறப்படவில்லையா" என்று தெபொராள் பாராக்கிடம் கேட்கிறாள். சிசெராவிடம் தொள்ளாயிரம் இருப்பு இரதங்கள் இருக்கிறது. பாராக்கோடு கர்த்தருடைய பிரசன்னம் இருக்கிறது. சேனைகளின் கர்த்தர் பெரியவர். தெபொராளின் ஆறுதலான வார்த்தை பாராக்குக்கு தெம்மையும், தைரியத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கிறது.

கர்த்தரே சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார். கர்த்தர் சிசெராவையும் அவனுடைய எல்லா ரதங்களையும் சேனையனைத்தையும் பாராக்குக்கு முன்பாகப் பட்டயக்கருக்கினால் கலங்கடிக்கிறார்; சிசெரா ரதத்தைவிட்டிறங்கி கால்நடையாய் ஓடிப்போகிறான் (நியா 4:15).

பாராக்கோடு கூடயிருக்கிறவர்கள் சிசெராவின் சேனையைப் பார்த்து கலங்கிப்போயிருக்கிறார்கள். பாராக்கும், அவரோடு கூடயிருக்கிற பதினாயிரம் பேரும் சிசெராவின் இரதங்களைப் பார்த்து பயந்து நடுங்குகிறார்கள். அவர்கள் பயப்பட்டுக்கொண்டிருக்கும்போதே, கர்த்தர் சிசெராவையும் அவனுடைய சேனையையும் முறியடிக்கிறார்.

கர்த்தர் தம்முடைய சர்வசேனையையும் இந்த யுத்தத்திலே சிசெராவுக்கு விரோதமாகப் பயன்படுத்துகிறார். கர்த்தர் வானத்திலுள்ள நட்சத்திரங்களை தம்முடைய ஆயுதங்களாகப் பயன்படுத்தி, சிசெராவையும் அவனுடைய சேனையையும் கலங்கப்பண்ணுகிறார்.

"வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம்பண்ணின" (நியா 5:20).

ஒருவேளை சிசெராவின் சேனையின்மீது வானத்திலிருந்து கல்மழை விழுந்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. சிசெராவின் சேனையால் கர்த்தருடைய வல்லமைக்கு முன்பாக எதிர்த்து நிற்கமுடியவில்லை. இதுவரையிலும் தன்னுடைய இரதத்திலிருந்த சிசெரா, இப்போது தன்னுடைய இரதத்தை விட்டு இறங்கி கால்நடையாய் ஓடிப்போகிறான்.

பாராக் சிசெராவின் ரதங்களையும் சேனையையும் புறஜாதிகளுடைய அரோசேத்மட்டும் துரத்துகிறார்; சிசெராவின் சேனையெல்லாம் பட்டயக்கருக்கினால் விழுகிறது; சிசெராவின் சேனையில் ஒருவனும் மீதியாயிருக்கவில்லை (நியா 4:16). தெபொராள் பாராக்கிடம் "கர்த்தர் சிசெராவை உன் கையிலே ஒப்புக்கொடுக்கும் நாள் இதுவே" என்று சொன்னாள். அவள் சொன்ன வார்த்தை அப்படியே நிறைவேறுகிறது.

அரோசேத்திலே சிசெராவின் பாளயம் இருக்கிறது. சிசெராவும் அவனுடைய சேனையும் அரோசேத்திற்கு ஓடிப்போகிறார்கள். பாராக்கோ அவர்களை அரோசேத் மட்டும் துரத்தி, அவர்கள் எல்லோரையும் பட்டயத்தினாலே சங்காரம்பண்ணுகிறார். சிசெராவின் சேனையில் ஒருவரும் மீதியாயிருக்கவில்லை.

பாராக்கின் சேனையிலுள்ளவர்கள், சிசெராவின் சேனையிலுள்ள எல்லோரையும் பட்டயக்கருகினாலே வெட்டிப்போடுகிறார்கள். சிசெராவும் அவனுடைய சேனையையும் முற்றிலுமாக சங்காரம்பண்ணுவதற்காகவே, கர்த்தர் சிசெராவை பாராக்கின் கையிலே ஒப்புக்கொடுத்திருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற பொறுப்பை பாராக் நேர்த்தியாக செய்து முடிக்கிறார்.

சிசெரா
நியா 4:17-24

நியா 4:17. சிசெரா கால்நடையாய்க் கேனியனான ஏபேரின் மனைவியாகேலுடைய கூடாரத்திற்கு ஓடிவந்தான்; அப்பொழுது யாபீன் என்னும் ஆத்சோரின் ராஜாவுக்கும், கேனியனான ஏபேரின் வீட்டுக்கும் சமாதானம் உண்டாயிருந்தது.

நியா 4:18. யாகேல் வெளியே சிசெராவுக்கு எதிர்கொண்டுபோய்: உள்ளே வாரும்; என் ஆண்டவனே, என்னண்டை உள்ளே வாரும், பயப்படாதேயும் என்று அவனோடே சொன்னாள்; அப்படியே அவளண்டை கூடாரத்தில் உள்ளே வந்தபோது, அவனை ஒரு சமுக்காளத்தினாலே மூடினாள்.

நியா 4:19. அவன் அவளைப் பார்த்து: குடிக்க எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா, தாகமாயிருக்கிறேன் என்றான்; அவள் பால் துருத்தியைத் திறந்து, அவனுக்குக் குடிக்கக்கொடுத்து, திரும்பவும் அவனை மூடினாள்.

நியா 4:20. அப்பொழுது அவன்: நீ கூடாரவாசலிலே நின்று, யாராவது ஒருவன் வந்து, இங்கே யாராகிலும் இருக்கிறார்களா என்று உன்னிடத்தில் கேட்டால், இல்லை என்று சொல் என்றான்.

நியா 4:21. பின்பு ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஒரு கூடார ஆணியை எடுத்து, தன் கையிலே சுத்தியைப் பிடித்துக் கொண்டு, மெள்ள அவனண்டையில் வந்து, அவன் நெற்றியிலே அந்த ஆணியை அடித்துப்போட்டாள்; அது உருவிப் போய், தரையிலே புதைந்தது; அப்பொழுது ஆயாசமாய்த் தூங்கின அவன் செத்துப்போனான்.

நியா 4:22. பின்பு சிசெராவைத் தொடருகிற பாராக் வந்தான்; அப்பொழுது யாகேல் வெளியே அவனுக்கு எதிர்கொண்டுபோய்: வாரும், நீர் தேடுகிற மனுஷனை உமக்குக் காண்பிப்பேன் என்று சொன்னாள்; அவன் அவளிடத்திற்கு வந்தபோது, இதோ, சிசெரா செத்துக்கிடந்தான்; ஆணி அவன் நெறியில் அடித்திருந்தது.

நியா 4:23. இப்படி தேவன் அந்நாளிலே கானானியரின் ராஜாவாகிய யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தினார்.

நியா 4:24. இஸ்ரவேல் புத்திரரின் கை கானானியரின் ராஜாவாகிய யாபீனை நிர்மூலமாக்குமட்டும் அவன்மேல் பலத்துக் கொண்டேயிருந்தது.

கானானியருடைய ராஜாவாகிய யாபீனுக்கு சிசெரா என்பவன் சேனாபதியாயிருக்கிறான். கர்த்தர் சிசெராவையும், அவனுடைய எல்லா இரதங்களையும், சேனை அனைத்தையும், பாராக்குக்கு முன்பாக, பட்டயக்கருக்கினாலே கலங்கடிக்கிறார். சிசெரா தன்னுடைய இரதத்தைவிட்டு இறங்கி கால்நடையாய் தப்பித்து ஓடிப்போகிறான்.

சிசெரா கால்நடையாய்க் கேனியனான ஏபேரின் மனைவி யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடிவருகிறான்; தொளாயிரம் இருப்பு இரதங்களுக்கு சேனாபதியாயிருக்கிறவன், இப்போது தனக்கென்று ஒரு இரதம் கூட இல்லாமல், கால்நடையாய் ஓடி வருகிறான். சிசெரா தன்னுடைய இரதங்களை நம்பினான். ஆனால் அந்த இரதங்கள் அவனுக்கு உதவிசெய்யவில்லை. இப்போது அவன் தன்னுடைய கால்களை நம்புகிறான் (நியா 4:17).

கேனியருக்கு பெரிய பட்டணங்கள் எதுவும் சொந்தமாகயில்லை. அவர்கள் கூடாரங்களில் வாசம்பண்ணுகிறார்கள். இக்காலத்தில் யாபீன் என்னும் ஆத்சோரின் ராஜாவுக்கும், கேனியனான ஏபேரின் வீட்டிற்கும் சமாதானம் உண்டாயிருக்கிறது. சிசெரா பாராக்குக்கு தப்பித்து ஓடுகிறான். அவன் ஓடி ஒளிந்துகொள்வதற்கு பெரிய கோட்டைகளோ, பெரிய துருக்கங்களோ இல்லை. அவனுக்கு முன்பாக யாகேலுடைய கூடாரம் இருக்கிறது.

ராஜாவாகிய யாபீனுக்கும், கேனியனான ஏபேலின் வீட்டிற்கும் இக்காலத்தில் சமாதானம் இருக்கிறது. ஆகையினால் சிசெரா யாகேலுடைய கூடாரத்திற்கு தப்பித்து ஓடிவருகிறான். யாகேல் கேனியனான யாபேலின் மனைவி. தான் கேனியருடைய கூடாரத்தில் தங்கியிருந்தால், அது தனக்கு பாதுகாப்பாயிருக்கும் என்று சிசெரா நினைக்கிறான். பாராக்கின் கைகளிலிருந்து, கேனியர்கள் தன்னைப் பாதுகாப்பார்கள் என்று சிசெரா எதிர்பார்க்கிறான்.

சிசெரா யாகேலுடைய கூடாரத்திற்கு ஓடி வரும்போது, யாகேல் வெளியே சிசெராவுக்கு எதிர்கொண்டுபோய், "உள்ளே வாரும்; என் ஆண்டவனே, என்னண்டை உள்ளே வாரும், பயப்படாதேயும்" என்று அவனோடே சொல்லுகிறாள்; அப்படியே சிசெரா அவளண்டை கூடாரத்தில் உள்ளே வந்தபோது, யாகேல் அவனை ஒரு சமுக்காளத்தினாலே மூடுகிறாள் (நியா 4:18).

சிசெரா தன்னுடைய கூடாரத்திற்கு ஓடி வரும்போது, யாகேல் தன் கூடாரத்தின் வாசலில் நின்றுகொண்டு இருந்திருக்கவேண்டும். அவள் சிசெராவிடம் யுத்தக்களத்தில் நடைபெற்ற இராணுவச் செய்தியைக் கேட்கவேண்டும் என்னும் ஆவலில், தன்னுடைய கூடாரவாசலில் நின்றுகொண்டு இருந்திருக்கலாம். இஸ்ரவேல் ஜனத்தாருக்கும், சிசெராவுக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தில், யாருக்கு ஜெயமுண்டாயிற்று என்பதை அறிந்துகொள்ள யாகேல் ஆவலாயிருந்திருக்கலாம்.

யாகேல் சிசெராவை தன்னுடைய கூடாரத்திற்குள் வரவேற்கிறாள். யுத்தத்திலே யாராவது காயம்பட்டு, அடைக்கலம் தேடி வரும்போது, அவர்களுக்கு உதவி செய்வதற்காக, யாகேல் தன் கூடாரத்து வாசலிலே நின்றுகொண்டிருந்திருக்கவேண்டும்.

சிசெரா யாகேலின் கூடாரத்திற்குள்ளே இருக்கிறான். சிசெரா யாகேலைப் பார்த்து, "குடிக்க எனக்குக் கொஞ்சம் தண்ணீர் தா, தாகமாயிருக்கிறேன்" என்று கேட்கிறான்; யாகேல் பால் துருத்தியைத் திறந்து, சிசெராவுக்கு குடிக்கக்கொடுத்து, திரும்பவும் அவனை சமுக்காளத்தினாலே மூடுகிறாள் (நியா 4:19).

சிசெரா பாலை குடித்துவிட்டு, யாகேலிடம், "நீ கூடாரவாசலிலே நின்று, யாராவது ஒருவன் வந்து, இங்கே யாராகிலும் இருக்கிறார்களா என்று உன்னிடத்தில் கேட்டால், இல்லை என்று சொல்" (நியா 4:20) என்று சொல்லுகிறான்.

சிசெரா யாகேலிடம் கூடாரத்திலே ஒருவருமில்லை என்று சொல்லச்சொல்லிவிட்டு, ஆயாசமாய்த் தூங்குகிறான். சிசெரா யாபீனுடைய சேனாபதி. தொளாயிரம் இருப்பு இரதங்களுக்கு தளபதி. யுத்த வியூகங்களை வகுத்து ஞானமாயும், தைரியமாயும் யுத்தம்பண்ண வேண்டியவன். ஆனால் அவனோ இப்போது, தன்னுடைய பாதுகாப்பைப்பற்றி எந்தக் கவலையுமில்லாமல், ஒரு ஸ்திரீயின் கூடாரத்திலே ஆயாசமாய்த் தூங்குகிறான்.

ஒருவேளை யாகேலுடைய கூடாரம் சத்தம், சந்தடி எதுவுமில்லாமல் அமைதியாகயிருந்திருக்கவேண்டும். ஆகையினால்தான் சிசெரா படுத்தவுடன் ஆயாசமாய்த் தூங்கிவிடுகிறான். யாகேலுடைய கூடாரம் தனக்குப் பாதுகாப்பான இடம் என்று சிசெரா நினைக்கிறான். ஆனால் அதுவே அவனுடைய ஜீவனுக்கு ஆபத்தான இடமாயிருக்கிறது.

சிசெரா ஆயாசமாய்த் தூங்கிக்கொண்டிருக்கும்போது, ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஒரு கூடார ஆணியை எடுத்து, தன் கையிலே சுத்தியைப் பிடித்துக் கொண்டு, மெள்ள அவனண்டையில் வந்து, அவன் நெற்றியிலே அந்த ஆணியை அடித்துப்போடுகிறாள்; அது உருவிப் போய், தரையிலே புதைந்துவிடுகிறது; அப்பொழுது ஆயாசமாய்த் தூங்கின சிசெரா செத்துப்போகிறான் (நியா 3:21). யாகேல் மிகப்பெரிய சேனாபதியை, ஒரு ஆணியால் அடித்து கொன்றுபோடுகிறாள்.

சிசெரா செத்துப்போனது கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. சிசெரா தன் ராஜாவாகிய யாபீனோடு சேர்ந்து இஸ்ரவேல் புத்திரரை, இருபது வருஷம் கொடுமையாய் ஒடுக்கினான். அவன் செய்த அக்கிரமத்திற்கும், அநியாயத்திற்கும் கர்த்தர் அவனுக்கு தண்டனை கொடுக்கிறார். யாகேல் சிசெராவைக் கொன்றுபோட்டது, தேவனுடைய தெய்வீக தீர்மானத்தின் பிரகாரமாக நடைபெற்ற ஒரு விசேஷித்த சம்பவம். இந்த சம்பவத்தை நம்முடைய ஜீவியத்தில் ஒரு முன்மாதிரியாக பின்பற்றக்கூடாது.

விசுவாசிகளாகிய நாம் அந்நியரை உபசரிக்கவேண்டும். அவர்களை ஆணியடித்து கொன்றுபோடக்கூடாது. சகோதர சிநேகமும், அந்நியரை உபசரிப்பதும் எல்லா விசுவாசிகளிடமும் இருக்கவேண்டிய பொதுவான சுபாவம். நம்மை நம்பியிருக்கிறவர்களுக்கு நாம் ஒருபோதும் துரோகம்பண்ணிவிடக்கூடாது. நாம் பிறருக்கு அடைக்கலம் கொடுக்க வேண்டியவர்கள், அவர்களை நம்முடைய கையினாலே அழித்துப்போடக்கூடாது. நம்மை நம்புகிறவர்களுக்கு துரோகம் செய்வது பாவம்.

நியாயாதிபதிகள் மூன்றாவது அதிகாரத்தில் ஏகூத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. ஏகூத் மோவாபின் ராஜாவாகிய எக்லோனை வஞ்சனையாகக் கொன்றுபோட்டார் (நியா 3:17-23). ஏகூத்தும் கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரமாகவே எக்லோனைக் கொன்றுபோட்டார். இவையெல்லாம் கர்த்தரால் அனுமதிக்கப்படும் விசேஷித்த சம்பவங்கள்.

சிசெரா இஸ்ரவேலை அழிக்க நினைத்தான். அவர்களை அழிப்பதற்கு தன்னிடத்திலுள்ள தொளாயிரம் இருப்பு இரதங்களை பயன்படுத்த வேண்டும் என்று திட்டம் வகுத்தான். ஆனால் சிசெராவோ, ஒரு சாதாரண இருப்பு ஆணியினால் செத்துப்போனான். கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாகத் தீங்கு செய்கிறவர்கள், தங்களுக்கு தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

சிசெரா செத்துப்போனபின்பு, அவனைப் பின்தொடர்ந்து வருகிற பாராக் யாகேலின் கூடாரத்திற்கு வருகிறார். அப்போது யாகேல் தன்னுடைய கூடாரத்திற்கு வெளியே, பாராக்குக்கு எதிர்கொண்டு போய், அவரை வரவேற்கிறாள். "வாரும், நீர் தேடுகிற மனுஷனை உமக்குக் காண்பிப்பேன்" (நியா 4:22) என்று சொல்லுகிறாள்.

யாகேல் பாராக்கை தன் கூடாரத்திற்குள் அழைத்துக்கொண்டு போகிறாள். பாராக் கூடாரத்திற்குள் வந்தபோது, அங்கே சிசெரா செத்துக்கிடக்கிறான். அவன் நெறியில் ஆணியடித்திருக்கிறது. சிசெரா செத்துப்போனதைப் பார்த்து பாராக் மிகவும் சந்தோஷப்பட்டிருப்பான். இஸ்ரவேலை ஒடுக்கினவன் செத்துக்கிடக்கிறான்.

இப்படி தேவன் அந்நாளிலே கானானியரின் ராஜாவாகிய யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தினார். இஸ்ரவேல் புத்திரரின் கை கானானியரின் ராஜாவாகிய யாபீனை நிர்மூலமாக்குமட்டும் அவன்மேல் பலத்துக் கொண்டேயிருந்தது (நியா 4:23,24).

இஸ்ரவேல் புத்திரர் கானானின் ராஜாவாகிய யாபீனின் கைகளிலிருந்து பூரணமாய் விடுதலை பெறுகிறார்கள். கர்த்தர் சிசெராவை பாராக்கின் கையிலே ஒப்புக்கொடுத்த நாளிலே, இஸ்ரவேல் புத்திரர்மீது சுமத்தப்பட்டிருந்த கானானியரின் நுகம் நீக்கப்படுகிறது.

சிசெரா செத்துப்போனபின்பு, இஸ்ரவேல் புத்திரர் கானானியரின் ராஜாவாகிய யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேலின் கரத்தை பலப்படுத்துகிறார். இஸ்ரவேல் ஜனத்தார், யாபீனை நிர்மூலம்பண்ணுகிறார்கள்.

5 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரருக்கு கானானின் ராஜாவாகிய யாபீன்மீது வெற்றி உண்டாயிற்று. தெபொராளும் பாராக்கும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த ஜெயத்தை நினைவுகூர்ந்து, அவரை நன்றியோடு துதித்துப் பாடுகிறார்கள். கர்த்தரைத் துதிக்கும் துதியினால் இந்தப் பாடல் ஆரம்பமாகிறது (நியா 5:1-3).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த அநேக நன்மைகளை நினைவுகூர்ந்து, இந்தப் பாடல் பாடப்படுகிறது. கர்த்தர் சீனாய் மலையிலே தம்மை வெளிப்படுத்தினார். அதுபோலவே இப்போதும் கர்த்தர் தம்மை வெளிப்படுத்தியிருப்பதாக தெபொராளும் பாராக்கும் பாடுகிறார்கள் (நியா 5:4,5).

இஸ்ரவேல் புத்திரரை அந்நிய ஜாதியார் ஒடுக்கினார்கள். கர்த்தரோ தமது கிருபையினால் இஸ்ரவேல் ஜனத்தாரை இரட்சித்தார் (நியா 5:6-8). இஸ்ரவேல் ஜனங்கள் எல்லோரும் தங்களோடு சேர்ந்து கர்த்தரை ஸ்தோத்திரம் பண்ணுமாறு தெபொராளும் பாராக்கும் அழைக்கிறார்கள் (நியா 5:9-13).

தெபொராளும் பாராக்கும் சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, இஸ்ரவேல் கோத்திரத்தாரில் சிலர் அவர்களோடு கூடப்போகிறார்கள். இஸ்ரவேலரில் வேறு சிலரோ, சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகவில்லை (நியா 5:14-19).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்காக, சிசெராவை எதிர்த்து யுத்தம்பண்ணுகிறார் (நியா 5:20-22). யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள். அவள் சிசெராவைக் கொன்றுபோடுகிறாள் (நியா 5:24-30). கர்த்தரிடத்தில் ஏறெடுக்கப்படுகிற ஜெபத்தோடு இந்தப் பாடல் நிறைவுபெறுகிறது (நியா 5:31).

தெபொராளும் பாராக்கும் பாடினதாவது
நியா 5:1-5

நியா 5:1. அந்நாளிலே தெபொராளும் அபினோகாமின் குமாரன் பாராக்கும் பாடினதாவது:

நியா 5:2. கர்த்தர் இஸ்ரவேலுக்காக நீதியைச் சரிக்கட்டினதினிமித்தமும், ஜனங்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்ததினிமித்தமும் அவரை ஸ்தோத்திரியுங்கள்.

நியா 5:3. ராஜாக்களே, கேளுங்கள்; அதிபதிகளே, செவிகொடுங்கள்; நான் கர்த்தரைப் பாடி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுவேன்.

நியா 5:4. கர்த்தாவே, நீர் சேயீரிலிருந்து புறப்பட்டு, ஏதோமின் வெளியிலிருந்து நடந்துவருகையில், பூமி அதிர்ந்தது, வானம் சொரிந்தது, மேகங்களும் தண்ணீராய்ப் பொழிந்தது.

நியா 5:5. கர்த்தருக்கு முன்பாகப் பர்வதங்கள் கரைந்தது; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக சீனாயும் கரைந்தது.

தெபொராளும் பாராக்கும் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறார்கள். நாம் துதியின் கீதங்களினால் கர்த்தரைக் கனம்பண்ணவேண்டும். ஒருவன் சந்தோஷமாயிருந்தால், அவன் சங்கீதம் பாடக்கடவன் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நாம் கர்த்தருக்கு துதியின் கீதங்களைப் பாடவேண்டுமென்றால், நம்முடைய இருதயத்தில் பரிசுத்தமான சந்தோஷம் இருக்கவேண்டும். நம்முடைய ஸ்தோத்திர பலிகளுக்கும், நன்றி பலிகளுக்கும், துதியின் கீதங்களுக்கும், நம்முடைய இருதயத்தில் பொங்கி வழியும் பரிசுத்தமான சந்தோஷமே ஆதாரமாயும், அஸ்திபாரமாயும் இருக்கிறது.

நாம் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, கர்த்தர் நமக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, அவரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தர் செய்த நன்மைகளை நினைவுகூருவதற்கு, துதியின் கீதங்கள் நமக்கு உதவியாயிருக்கும். நாம் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, உற்றார் உறவினர்களையும், சிநேகிதர்களையும் நம்மோடுகூட சேர்த்துக்கொண்டு, கர்த்தரைத் துதிக்கவேண்டும். இதன் மூலமாக மற்றவர்களும் கர்த்தருடைய மகிமையையும், மகத்துவத்தையும், மாட்சிமையையும் கற்றுக்கொள்வார்கள்.

பெற்றோர் தங்கள் பிள்ளைளோடு சேர்ந்து கர்த்தரைத் துதிக்கவேண்டும். கர்த்தருக்கு துதியின் கீதங்களைப் பாடவேண்டும். இதன் மூலமாக நம்முடைய சந்ததிகளும், கர்த்தருடைய அற்புதமான கிரியைகளை நினைவுகூருவார்கள்.

"தலைமுறை தலைமுறையாக உம்முடைய கிரியைகளின் புகழ்ச்சிச் சொல்லி, உம்முடைய வல்லமையுள்ள செய்கைகளை அறிவிப்பார்கள்" (சங் 145:4).

இந்த ஸ்தோத்திரப் பாடலை தெபொராள் எழுதியிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். "தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும்" (நியா 5:7) என்று தெபொராள் இந்தப் பாடலில் பாடுகிறாள்.

தெபொராள் ஒரு தீர்க்கதரிசி. கர்த்தர் இவளுக்கு பாடல்களை எழுதும் தாலந்துகளையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் தனக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளை, தெபொராள் நேர்த்தியாகப் பயன்படுத்தி, இனிமையான பாடல்களைப் பாடுகிறாள். இந்தப் பாடலில் பயன்படுத்தப்பட்டிருக்கிற எல்லா வார்த்தைகளும், எல்லா வாக்கியங்களும் மிகவும் இனிமையாகயிருக்கிறது. இந்தப் பாடல் முழுவதிலும் ஜீவன் நிரம்பியிருக்கிறது.

தெபொராள் இந்தப் பாடலில் பயன்படுத்தியிருக்கிற வார்த்தைகளெல்லாமே மிகவும் இனிமையானவை. அவை கருத்து ஆழமுள்ளவை. கற்பனை நயம் கொண்டவை. தெபொராள் தன் இருதயத்தின் சிந்தனைகளை அற்புதமான பாடலாக வெளிப்படுத்தியிருக்கிறாள். இந்தப் பாடலில் இனிமையிருப்பதுபோல, மகிமையும், மேன்மையும், மாட்சிமையும் இருக்கிறது.

தெபொராள் ஒரு தீர்க்கதரிசியாகயிருந்தாலும், அவள் தன்னுடைய அதிகாரத்தை, ஒரு தேசத்தின் இராணியைப்போல பயன்படுத்துகிறாள். இஸ்ரவேலின் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறாள். இஸ்ரவேலின் சேனைக்கு கர்த்தரைத் துதித்து பாடும் பாடலை கற்றுக்கொடுக்கிறாள். இஸ்ரவேல் ஜனத்தாரை, அவர்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு வழிநடத்தி செல்லுகிறாள்.

தெபொராள் கானானியரின் ராஜாவாகிய யாபீனோடு யுத்தம்பண்ணப்போனபோது, இஸ்ரவேலின் சேனையை அவள் முன்னின்று வழிநடத்தினாள். கர்த்தர் யாபீனை நிர்மூலமாக்கினார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, தெபொராள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள்.

தெபொராளும் பாராக்கும் இந்தப் பாடலைப் பாடும்போது, கர்த்தரைத் துதிக்கும் துதியினால் இந்தப் பாடலை ஆரம்பிக்கிறார்கள். "கர்த்தர் இஸ்ரவேலுக்காக நீதியைச் சரிக்கட்டினதினிமித்தமும், ஜனங்கள் மனப்பூர்வமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்ததினிமித்தமும் அவரை ஸ்தோத்திரியுங்கள்" (நியா 5:2) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தருக்கு துதிகளையும், ஸ்தோத்திரங்களையும் ஏறெடுப்பதே இந்தப் பாடலின் முக்கிய நோக்கம். ஆகையினால் கர்த்தரைத் துதிக்கும் துதியின் வார்த்தைகளே, இந்தப் பாடலின் ஆரம்ப வரியாக பாடப்படுகிறது. "கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்" (நியா 5:2) என்று சொல்லி, தெபொராளும் பாராக்கும் கர்த்தரைத் துதிக்கிறார்கள். மற்றவர்களும் கர்த்தரைத் துதிப்பதற்கு அவர்களை வழிநடத்துகிறார்கள்.

நாம் கர்த்தரிடத்தில் நம்முடைய விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் ஏறெடுப்பதற்கு முன்பாக, நாம் கர்த்தரைத் துதிக்கவேண்டும். நம்முடைய வாயிலிருந்து, கர்த்தரைத் துதிக்கும் துதியின் வார்த்தைகளே முதலாவதாக புறப்பட்டு வரவேண்டும். "உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஜெபம்பண்ணக் கற்றுக்கொடுத்ததுபோல, நாம் கர்த்தருடைய நாமத்தை முதலாவதாக பரிசுத்தம் பண்ண வேண்டும்.

தெபொராளும் பாராக்கும் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது, தன்னோடுகூட எல்லோரும் சேர்ந்து கர்த்தரைத் துதிக்கவேண்டுமென்று அவர்கள் விரும்புகிறார்கள். சமுதாயத்தில் உயர்ந்த அந்தஸ்துக்களிலிருப்பவர்களும், தேசத்திலே உயர்ந்த பதவி வகிப்பவர்களும், தாங்கள் பாடும் பாடலின் வரிகளை செவிகொடுத்து கேட்கவேண்டுமென்று தெபொராளும் பாராக்கும் சொல்லுகிறார்கள். "ராஜாக்களே கேளுங்கள், அதிபதிகளே செவிகொடுங்கள்" (நியா 5:3) என்று சொல்லுகிறார்கள்.

ராஜாக்களும் அதிபதிகளும் தங்களுடைய பாதுகாப்புக்கு குதிரைகளையும், இரதங்களையும் நம்புகிறார்கள். அவை எல்லாம் மாயை. அவை நமக்கு மெய்யான பாதுகாப்பைக் கொடுக்காது. கர்த்தரே நம்மை பாதுகாக்கிறவர்.

"நான் கர்த்தரைப் பாடி, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுவேன்" (நியா 5:3) என்று தெபொராள் பாடுகிறாள். ராஜாக்களும் அதிபதிகளும் தன்னோடு சேர்ந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணவேண்டுமென்று, தெபொராள் அவர்களை அழைக்கிறாள். அவர்களோ நூதன தேவர்களை தெரிந்துகொண்டார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி அந்நிய தெய்வங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். விக்கிரகங்களுக்கு தூபங்காட்டுகிறார்கள். அவர்கள் விக்கிராராதனையை விட்டு விலகி வந்து, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரை மாத்திரம் கீர்த்தனம்பண்ணவேண்டும்.

சிசெராவின் ஜீவன் பரிதாபமாய் முடிவடைந்தது. அவன் கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்ய நினைத்தான். ஆனால் அவனுடைய ஜீவன் சேதமாயிற்று. இது எல்லா ஜனங்களுக்கும் எச்சரிப்பாக இங்கு எழுதப்பட்டிருக்கிறது. கர்த்தருடைய ஜனத்திற்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிறவர்கள் கர்த்தருக்கு விரோதமாய் எதிர்த்து நிற்கிறார்கள்.

தெபொராள் பூர்வகாலங்களை நினைத்துப் பார்க்கிறாள். கர்த்தர் இதற்கு முன்பு தம்மை எப்படி வெளிப்படுத்தினார் என்றும், இப்போது அவர் தம்மை எப்படி வெளிப்படுத்துகிறார் என்றும் ஒப்பிட்டுப் பார்க்கிறாள். கர்த்தர் நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர். கர்த்தர் இக்காலத்தில் நமக்கு நன்மை செய்யும்போது, அவர் பூர்வகாலத்தில் தம்முடைய ஜனத்திற்கு எப்படி நன்மை செய்தார் என்பதையும் நாம் நினைத்துப் பார்க்கவேண்டும்.

"கர்த்தாவே, நீர் சேயீரிலிருந்து புறப்பட்டு, ஏதோமின் வெளியிலிருந்து நடந்துவருகையில், பூமி அதிர்ந்தது, வானம் சொரிந்தது, மேகங்களும் தண்ணீராய்ப் பொழிந்தது" (நியா 5:4) என்று தெபொராள் சொல்லுகிறாள்.

வேதபண்டிதர்கள் இந்த வாக்கியத்திற்கு இரண்டு விதமாக வியாக்கியானம் சொல்லுகிறார்கள். அவற்றின் விவரம் வருமாறு:

1. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுடைய சத்துருக்களுக்கு முன்பாக யுத்தம்பண்ணும்போது, கர்த்தர் தாமே, தம்முடைய நீதியினாலும் வல்லமையினாலும் வெளிப்பட்டார். கர்த்தருடைய வல்லமை சத்துருக்களை நிர்மூலமாக்கிற்று. இஸ்ரவேல் ஜனங்களை ஒடுக்க நினைத்தவர்கள் ஒடுங்கிப்போனார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு யுத்தத்திலே வெற்றியைக் கட்டளையிட்டார்.

2. கர்த்தர் சீனாய் மலையிலே தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தபோது, கர்த்தருடைய மகிமையும் மாட்சிமையும் வெளிப்பட்டது. கர்த்தர் அப்போது இஸ்ரவேலுக்கு தம்முடைய மகிமையை வெளிப்படுத்தினார்.

கர்த்தர் தம்முடைய வல்லமையை சத்துருக்களுக்கு முன்பாக பல சமயங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் இஸ்ரவேல் புத்திரரை ஏதோம் தேசத்திலிருந்து வழிநடத்தினார். கர்த்தர் சீகோனையும் ஓகையும் இஸ்ரவேல் புத்திரருடைய பாதபடியிலே நொறுக்கிப்போட்டார். யுத்தம் கர்த்தருடையது. கர்த்தர் தம்முடைய ஜனத்திற்காக யுத்தம்பண்ணுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேலின் சத்துருக்களை முறியடிக்கும்போது, தம்முடைய பலத்த புயத்தினாலே அவர்களை நிர்மூலம் பண்ணுகிறார். இதனால் பூமி அதிருகிறது. கர்த்தர் ஏதோமின் வெளியிலிருந்து நடந்து வருகையில் பூமியதிருகிறது. வானம் சொரிகிறது. மேகங்களும் தண்ணீராய்ப் பொழிகிறது.

கர்த்தர் புறப்பட்டு வரும்போது, அவருடைய தெய்வீக மகிமையும், தெய்வீக வல்லமையும் வெளிப்படுகிறது. கர்த்தருடைய மகிமையும் வல்லமையும் பூமியை அதிரச்செய்கிறது. சூரியனுக்கு முன்பாக பனிமலை உருகுவதுபோல, கர்த்தருடைய மகத்துவத்திற்கும், வல்லமைக்கும், மகிமைக்கும் முன்பாக பர்வதங்கள் கரைகிறது.

கர்த்தர் சீனாய் மலையிலே தம்முடைய வல்லமையை வெளிப்படுத்தினார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு முன்பாக சீனாயும் கரைகிறது. சீனாய் மலையிலே கர்த்தர் தம்முடைய பிரமாணத்தைக் கொடுத்தபோது, பூமியதிர்ந்தது. வானம் சொரிந்தது.

பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது
நியா 5:6-11

நியா 5:6. ஆனாத்தின் குமாரனாகிய சம்காரின் நாட்களிலும், யாகேலின் நாட்களிலும், பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது; வழி நடக்கிறவர்கள் பக்கவழியாய் நடந்தார்கள்.

நியா 5:7. தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய்ப்போயின, இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப்போயின.

நியா 5:8. நூதன தேவர்களைத் தெரிந்து கொண்டார்கள்; அப்பொழுது யுத்தம் வாசல்வரையும் வந்தது; இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம்பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியும் காணப்பட்டதுண்டோ?

நியா 5:9. ஜனங்களுக்குள்ளே தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்த இஸ்ரவேலின் அதிபதிகளை என் இருதயம் நாடுகிறது; கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்.

நியா 5:10. வெள்ளைக் கழுதைகளின்மேல் ஏறுகிறவர்களே, நியாயஸ்தலத்தில் வீற்றிருக்கிறவர்களே, வழியில் நடக்கிறவர்களே, இதைப் பிரஸ்தாபியுங்கள்.

நியா 5:11. தண்ணீர் மொண்டுகொள்ளும் இடங்களில் வில்வீரரின் இரைச்சலுக்கு நீங்கினவர்கள் அங்கே கர்த்தரின் நீதிநியாயங்களையும், அவர் இஸ்ரவேலிலுள்ள தமது கிராமங்களுக்குச் செய்த நீதிநியாயங்களையுமே பிரஸ்தாபப்படுத்துவார்கள்; அதுமுதல் கர்த்தரின் ஜனங்கள் ஒலிமுக வாசல்களிலே போய் இறங்குவார்கள்.

கானானியரின் ராஜாவாகிய யாபீன் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கினான். சம்காரின் நாட்களிலே, இஸ்ரவேல் புத்திரருக்கு பெலிஸ்தியர் மூலமாய் பிரச்சனைகளும் நெருக்கங்களும் உண்டாயிற்று. சம்கார் இஸ்ரவேல் ஜனத்தாரை பெலிஸ்தியரின் பிடியிலிருந்து ஓரளவு விடுதலை பண்ணினார்.

சம்காருக்கு பின்பு யாகேலின் காலத்தைப்பற்றி தெபொராள் இங்கு குறிப்பிடுகிறாள். இஸ்ரவேலின் விடுதலையில் யாகேலுக்கு முக்கியமான பங்கு உண்டு. ஆனாலும் இக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் ஒடுக்கப்பட்டிருந்தது. தேசம் அழிந்துபோய் பாழாய்க்கிடந்தது.

இஸ்ரவேல் தேசத்தில் வியாபாரம் சீராக நடைபெறவில்லை. இக்காலத்தில் பெரும்பாதைகள் பாழாய்க்கிடந்ததினால், வியாபாரம் முற்றிலுமாய் நின்றுபோயிற்று. வியாபாரிகளால் பெரும்பாதையின் வழியாக தங்கள் சரக்குகளை ஏற்றிச் செல்ல முடியவில்லை. வழிநடக்கிறவர்கள் பக்கவழியாய் நடந்துபோனார்கள். இதனால் இஸ்ரவேல் தேசத்திலே விற்பதும் கொள்ளுவதும் முற்றிலுமாய் நின்றுபோயிற்று.

சம்காரின் நாட்களிலும், யாகேலின் நாட்களிலும், பெரும்பாதையின் வழியாக ஜனங்களும் பிரயாணம் பண்ணவில்லை. பாதையும் சரியில்லை. வழிப்போக்கர்களுக்கு பாதுகாப்புமில்லை. பெலிஸ்தரின் தொந்தரவு அதிகமாயிருந்ததினால், பெரும்பாதையின் வழியாக யாரும் தைரியமாக பிரயாணம் பண்ணவில்லை.

இஸ்ரவேல் தேசத்திலே, இக்காலத்தில் விவசாயமும் நடைபெறவில்லை. விளைநிலங்களெல்லாம் விவசாயம் பண்ண முடியாமல் தரிசு நிலமாய் கிடக்கிறது. கிராமத்தில் வாசம்பண்ணுகிறவர்கள் தங்கள் பாதுகாப்புக்காக, மறைவான இடங்களுக்குப் போய்விட்டார்கள். கிராமத்து ஜனங்கள் அரணிப்பான பட்டணங்களில் குடியிருக்கவேண்டுமென்று விரும்பி, பட்டணங்களுக்கு குடியேறி விட்டார்கள். இதனால் வெளிநிலங்களில் விவசாயம் நடைபெறவில்லை. இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப்போயின (நியா 5:7).

"தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய்ப்போயின, இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப் போயின" (நியா 5:7) என்று தெபொராள் பாடுகிறாள்.

இஸ்ரவேல் தேசத்திலே நீதியான நிர்வாகம் நடைபெறவில்லை. வழக்குகள் நியாயமாக விசாரிக்கப்படவில்லை. தேசத்தைச் சுற்றிலும் சத்துருக்கள் யுத்தம்பண்ண நெருக்குகிறார்கள். நியாயசபை கூடுகிற வாசல்களில், சத்துருக்கள் யுத்தம்பண்ண நெருங்கி வருகிறார்கள். யுத்தம் வாசல் வரையும் வந்திருக்கிறது. இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம் பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியும் காணப்படுகிறது (நியா 5:8).

இஸ்ரவேல் தேசத்தைவிட்டு வெளியேறிப்போகிறவர்களுக்கோ அல்லது தேசத்திற்குள்ளே வருகிறவர்களுக்கோ சமாதானமில்லை. பிரயாணம் பண்ணுகிறவர்கள் வாசல் வழியாகக் கடந்துபோகவேண்டும். அந்த வாசல்களில், அந்நிய தேசத்து சத்துருக்களின் சேனைகள் நிரம்பியிருக்கிறார்கள். தண்ணீர் எடுக்கும் இடங்களில்கூட வில்வீரர்கள் கூட்டமாய் நிற்கிறார்கள். அவர்களுடைய இரைச்சல் பேரிரைச்சலாகயிருக்கிறது (நியா 5:11).

இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே கேடகமும் ஈட்டியும் இருக்கிறது. ஆனால் சத்துருக்களை எதிர்த்து யுத்தம்பண்ணுவதற்கு, அவர்களுடைய இருதயத்தில் தெம்பும், நம்பிக்கையும், வீரமும் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் ஆவியில் சோர்ந்துபோயிருக்கிறார்கள். சத்துருக்களைப் பார்த்து அவர்களுடைய ஆவி முறிந்துபோயிற்று. அவர்களுடைய கேடகமும் ஈட்டியும் அவர்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்கவில்லை. "இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம் பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியும் காணப்பட்டதுண்டோ" (நியா 5:8) என்று தெபொராள் கேட்கிறாள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு ஏராளமான நெருக்கங்களும், துன்பங்களும், துயரங்களும், வேதனைகளும் வந்திருக்கிறது. அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தெய்வங்களை ஆராதித்ததினால், அவர்களுக்கு கர்த்தருடைய பாதுகாப்பு கிடைக்கவில்லை. அவர்கள் நூதன தேவர்களைத் தெரிந்துகொண்டார்கள் என்று தெபொராள் சொல்லுகிறாள். இஸ்ரவேல் ஜனத்தாரின் விக்கிரகாராதனையே, அவர்களுடைய துன்பங்களுக்கு காரணம்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை ஆராதியாமல், விக்கிரகங்களுக்கு தூபங்காட்டும்போது, கர்த்தர் அவர்களை சத்துருக்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைப் பின்பற்றாமல் நூதன தேவர்களைத் தெரிந்துகொண்டாலும், கர்த்தர் அவர்கள்மீது இன்னும் இரக்கம் காண்பிக்கிறார். கர்த்தர் அவர்களை சத்துருக்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்தாலும், அவர்களை விடுவிப்பதற்கு, இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே இரட்சகர்களை எழுப்புகிறார்.

"தெபொராளாகிய நான் எழும்புமளவும், இஸ்ரவேலிலே நான் தாயாக எழும்புமளவும், கிராமங்கள் பாழாய்ப்போயின, இஸ்ரவேலின் கிராமங்கள் பாழாய்ப் போயின" (நியா 5:7) என்று தெபொராள் தன்னுடைய ஊழியத்தைப்பற்றிச் சொல்லுகிறாள்.

தெபொராள் இஸ்ரவேல் ஜனத்தார் மத்தியிலே நியாயாதிபதியாக எழும்பும் வரையிலும், கானானியரின் ராஜாவாகிய யாபீன் அவர்களை ஒடுக்கினான். இஸ்ரவேல் தேசத்திலே சமாதானம் இல்லாமல் போயிற்று. இஸ்ரவேலின் சத்துருக்களை முறியடிப்பதற்கு, கர்த்தர் தெபொராளை எழுப்புகிறார். அவள் இஸ்ரவேலிலே தாயாக எழும்புகிறாள். ஒரு தாய் தன் பிள்ளைகள்மீது அன்பாயும், பாசமாயும் இருப்பதுபோல, தெபொராள் இஸ்ரவேல் ஜனத்தாரை பாசத்தோடு நேசிக்கிறாள்.

தெபொராள் இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரையும் நியாயம் விசாரிக்கிறாள். அவளுக்கு கீழே அதிபதிகளும் இருக்கிறார்கள். "ஜனங்களுக்குள்ளே தங்களை மனப்பூர்வமாய் ஒப்புக்கொடுத்த இஸ்ரவேலின் அதிபதிகளை என் இருதயம் நாடுகிறது" (நியா 5:9) என்று தெபொராள் சொல்லுகிறாள். தெபொராளும், அவளுக்கு கீழே இஸ்ரவேலின் அதிபதிகளும், இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிக்கிறார்கள்.

தெபொராளின் காலத்திலே, கானானியரின் ராஜாவாகிய யாபீன் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறான். கர்த்தரோ யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக தாழ்த்துகிறார். இஸ்ரவேல் புத்திரரின் கை கானானியரின் ராஜாவாகிய யாபீனை நிர்மூலமாக்குகிறது. இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானானியரின் ராஜாவாகிய யாபீனின் உபத்திரவத்திலிருந்து விடுதலை கிடைக்கிறது. இந்த மகாபெரிய இரட்சிப்பிலே கர்த்தர் தெபொராளை பயன்படுத்துகிறார்.

தெபொராளோடுகூட இஸ்ரவேலின் அதிபதிகளும் சேர்ந்து, கானானியரின் ராஜாவாகிய யாபீனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் யாபீனை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக தாழ்த்துகிறார். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணினார். கர்த்தரே இந்த யுத்தத்தில், இஸ்ரவேல் ஜனத்தாருக்கு வெற்றியைக் கட்டளையிட்டார்.

ஆகையினால் தன்னோடு சேர்ந்து, இஸ்ரவேலின் அதிபதிகளும் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டுமென்று தெபொராள் சொல்லுகிறாள். "வெள்ளைக் கழுதைகளின்மேல் ஏறுகிறவர்களே, நியாயஸ்தலத்தில் வீற்றிருக்கிறவர்களே, வழியில் நடக்கிறவர்களே, இதைப் பிரஸ்தாபியுங்கள்" (நியா 5:10) என்று தெபொராள் பாடுகிறாள்.

வெள்ளைக் குதிரைகளின்மேல் ஏறி வருகிறவர்கள் கெம்பீரமாய் வருவார்கள். அவர்கள் பராக்கிரமசாலிகளாயிருப்பார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானானியரின் கரத்திலிருந்து விடுதலையையும் கொடுத்திருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாரை வெள்ளைக் குதிரைகளின் ஏறிவரும்படியான சிலாக்கியத்தையும், கண்ணியத்தையும், கௌரவத்தையும் கொடுத்திருக்கிறார். இதற்காக இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரும் கர்த்தரை ஸ்தோத்திரிக்கவேண்டும்.

நியாயாதிபதிகள் தங்கள் நியாயாசனங்களில் அமர்ந்து, இஸ்ரவேல் ஜனத்தாரை நியாயம் விசாரிப்பார்கள். நியாயாபதிகளுக்கு கர்த்தரைப்பற்றியும், அவர் தம்முடைய ஜனங்களுக்கு இதுவரையிலும் செய்த மகத்துவமான கிரியைகளைப்பற்றியும் தெரிந்திருக்க வேண்டும். நியாயாதிபதிகளின் கைகளில் நீதியின் பட்டயம் இருக்கிறது. நீதியின் பட்டயத்தை யுத்தத்தின் பட்டயத்தால் மேற்கொள்ள முடியவில்லை. கர்த்தர் நீதியின் பட்டயத்தைப் பாதுகாக்கிறார். நியாயாபதிகள் கர்த்தருடைய உதவியையும், ஒத்தாசையையும் நினைவு கூர்ந்து, அவரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

இஸ்ரவேல் ஜனத்தார் தாழ்ந்திருந்தபோது, சத்துருக்களின் வில்வீரர்கள், இஸ்ரவேல் தேசத்திற்குள்ளேயே வந்துவிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தண்ணீர் மொண்டு கொள்ளும் இடங்களில், சத்துருக்களின் வில்வீரர்கள் கூட்டமாய்க் கூடியிருக்கிறார்கள். அவர்களுடைய இரைச்சல் அதிகமாயிருக்கிறது. கர்த்தர் சத்துருக்களின் வில்வீரரை நிர்மூலம்பண்ணுகிறார். அவர்களுடைய இரைச்சல் தண்ணீர் மொண்டு கொள்ளும் இடத்தைவிட்டு நீங்குகிறது.

வில்வீரரின் இரைச்சல் நீங்கின பின்பு, அங்கே கர்த்தரை பிரஸ்தாபப்படுத்துகிற துதியின் கீதம் கேட்கிறது. இப்போது தண்ணீர் மொண்டு கொள்ளும் இடங்களில் சத்துருக்களின் பிரச்சனை இல்லை. அங்கே சத்துருக்களுடைய வில்வீரர்கள் யாருமில்லை. அங்கே வில்வீரரின் இரைச்சலும் இல்லை. இஸ்ரவேல் ஜனங்கள் தண்ணீர் மொண்டு கொள்ளும் இடங்களிலே சத்துருக்களின் பயமில்லாமல் விடுதலையோடிக்கிறார்கள்.

"அங்கே கர்த்தரின் நீதிநியாயங்களையும், அவர் இஸ்ரவேலிலுள்ள தமது கிராமங்களுக்குச் செய்த நீதிநியாயங்களையுமே பிரஸ்தாபப்படுத்துவார்கள்; அதுமுதல் கர்த்தரின் ஜனங்கள் ஒலிமுக வாசல்களிலே போய் இறங்குவார்கள்" (நியா 5:11) என்று தெபொராள் பாடுகிறாள்.

சம்காரின் நாட்களிலும், யாகேலின் நாட்களிலும் பெரும்பாதைகள் பாழாய்க் கிடந்தது. இந்தப் பாதைகளில் சத்துருக்களின் நடமாட்டம் அதிகமாயிருந்தது. ஆகையினால் வழிநடக்கிறவர்கள் பெரும்பாதைகள் வழியாய் நடக்காமல் பக்கவழியாய் நடந்தார்கள். பக்கவழிகளிலே சத்துருக்கள் இல்லை. இஸ்ரவேல் ஜனத்தாரை இந்த வழியிலே யாரும் பயமுறுத்தவில்லை. கொள்ளைக்காரர்களின் பயமும் இங்கே இல்லை.

தண்ணீர் மொண்டுகொள்ளும் கிணறுகளிலும் சத்துருக்கள் யாருமில்லை. அங்கே இருந்த சத்துருக்களையெல்லாம் கர்த்தர் நீக்கிப்போட்டார். இவையெல்லாம் கர்த்தருடைய கிரியைகள். இவை பாராக்கின் கிரியைகளோ அல்லது தெபொராளின் கிரியைகளோ அல்ல. சத்துருக்களின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்கள், கர்த்தர் செய்த நீதி நியாயங்களை பிரஸ்தாபப்படுத்துகிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் தேசத்தின் எல்லைகளிலே சமாதானத்தைக் கட்டளையிடுகிறார்.

கானானியரின் ராஜாவாகிய யாபீன் இஸ்ரவேல் ஜனத்தாரை தன்னுடைய அநீதியினாலும், அக்கிரமத்தினாலும் ஒடுக்குகிறான். கர்த்தர் யாபீனை நியாயம் விசாரிக்கிறார். கர்த்தர் நீதி நியாயங்களுக்கு அதிபதியாகயிருக்கிறவர். அவர் சத்துருக்களையும் நியாயம் விசாரிக்கிறவர். சத்துருக்களின் ஒடுக்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட இஸ்ரவேல் ஜனங்கள், கர்த்தர் தங்களுக்கும், தங்கள் கிராமங்களுக்கும் செய்த நீதி நியாயங்களை பிரஸ்தாபப்படுத்துகிறார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே, பட்டணங்களிலிருப்பவர்களைவிட, கிராமங்களிலிருக்கிறவர்களுக்கு சத்துருக்கள் மூலமாய் அதிக ஆபத்து உண்டாயிற்று. பட்டணங்களிலுள்ள வீடுகள் அரணிப்பான கோட்டைச்சுவர்களுக்குள்ளே பாதுகாப்பாயிருக்கிறது. கிராமங்களிலோ அரணிப்பான அலங்கங்கள் ஏதுவுமில்லை. ஆகையினால் சத்துருக்கள் கிராமங்கள்மீது எளிதாக வந்துவிடுகிறார்கள். கர்த்தரோ இஸ்ரவேல் தேசத்திலுள்ள கிராமங்களுக்கு அரணான கோட்டையாயிருக்கிறார். கர்த்தரே அவர்களைப் பாதுகாக்கிறார்.

கிராமத்தில் வாசம்பண்ணுகிறவர்கள், கர்த்தர் தங்களுடைய கிராமங்களுக்கு செய்த நீதிநியாயங்களை பிரஸ்தாபப்படுத்துகிறார்கள். கர்த்தருடைய ஜனங்கள் எந்தவிதமான பாதுகாப்புமில்லாமல், சத்துருக்களின் ஆபத்துக்களுக்கு அருகாமையிலிருக்கும்போது, கர்த்தரே அவர்களுக்கு பாதுகாப்பாயிருக்கிறார். கர்த்தருடைய ஜனம் பலவீனராயிருக்கும்போது, கர்த்தர் அவர்களுக்கு உதவிசெய்து அவர்களைப் பலப்படுத்துகிறார்.

தெபொராளே, விழி
நியா 5:12-23

நியா 5:12. விழி, விழி, தெபொராளே, விழி, விழி, பாட்டுப்பாடு; பாராக்கே, எழும்பு; அபினோகாமின் குமாரனே, உன்னைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோ.

நியா 5:13. மீதியாயிருந்தவர்கள் ஜனத்தின் பிரபுக்களை ஆளும்படி செய்தார்; கர்த்தர் எனக்குப் பராக்கிரமசாலிகளின்மேல் ஆளுகை தந்தார்.

நியா 5:14. அமலேக்குக்கு விரோதமாக இவர்களுடைய வேர் எப்பிராயீமிலிருந்து துளிர்த்தது; உன் ஜனங்களுக்குள்ளே பென்யமீன் மனுஷர் உனக்குப் பின்சென்றார்கள்; மாகீரிலிருந்து அதிபதிகளும், செபுலோனிலிருந்து எழுதுகோலைப் பிடிக்கிறவர்களும் இறங்கிவந்தார்கள்.

நியா 5:15. இசக்காரின் பிரபுக்களும் தெபொராளோடே இருந்தார்கள்; பாராக்கைப் போல இசக்கார் மனுஷரும் பள்ளத்தாக்கில் கால்நடையாய் அனுப்பப்பட்டுப் போனார்கள்; ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி.

நியா 5:16. மந்தைகளின் சத்தத்தைக் கேட்க, நீ தொழுவங்களின் நடுவே இருந்துவிட்டதென்ன? ரூபனின் பிரிவினைகளால் மனோவிசாரங்கள் மிகுதி.

நியா 5:17. கீலேயாத் மனுஷர் யோர்தானுக்கு அக்கரையிலே இருந்துவிட்டார்கள்; தாண் மனுஷர் கப்பல்களில் தங்கியிருந்ததென்ன? ஆசேர் மனுஷர் கடற்கரையிலே தங்கி, தங்கள் குடாக்களில் தாபரித்தார்கள்.

நியா 5:18. செபுலோனும் நப்தலியும் போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றார்கள்.

நியா 5:19. ராஜாக்கள் வந்து யுத்தம்பண்ணினார்கள்; அப்பொழுது கானானியரின் ராஜாக்கள் மெகிதோவின் தண்ணீர் அருகான தானாக்கிலே யுத்தம்பண்ணினார்கள்; அவர்களுக்குத் திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை.

நியா 5:20. வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம்பண்ணின.

நியா 5:21. கீசோன் நதி, பூர்வநதியாகிய கீசோன் நதியே, அவர்களை அடித்துக் கொண்டுபோயிற்று; என் ஆத்துமாவே, நீ பலவான்களை மிதித்தாய்.

நியா 5:22. அப்பொழுது குதிரைகளின் குளம்புகள், பாய்ச்சலினாலே, பலவான்களின் பாய்ச்சலினாலேயே, பிளந்துபோயின.

நியா 5:23. மேரோசைச் சபியுங்கள்; அதின் குடிகளைச் சபிக்கவே சபியுங்கள் என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார்; அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வரவில்லை; பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாய் அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வரவில்லையே.

தெபொராள் கர்த்தரைத் துதிக்கும் துதியின் கீதத்தைப் பாடி, தன்னைத்தானே உற்சாகப்படுத்துகிறாள். தன்னுடைய ஆத்துமாவைத் தட்டி எழுப்புகிறாள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்திற்கு யுத்தத்திலே பெரிய ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் கொடுத்த வெற்றியை நினைவுகூர்ந்து, அவரைத் துதிக்குமாறு தெபொராள் பாராக்கையும் உற்சாகப்படுத்துகிறாள்.

தெபொராள் ஒரு தீர்க்கதரிசி. தன்னுடைய விசுவாசத்தையும், தன்னுடைய உற்சாகத்தையும் வெளிப்படுத்தும் வண்ணமாக தெபொராள் இந்தப் பாடலை பாடுகிறாள். "விழி, விழி, தெபொராளே, விழி, விழி, பாட்டுப்பாடு; பாராக்கே, எழும்பு" (நியா 5:12) என்று பாடி, தெபொராள் தன்னை உற்சாகப்படுத்துகிறாள்.

பாராக் இஸ்ரவேல் புத்திரருடைய சேனைக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். யுத்தத்தில் தங்களுக்கு கிடைத்த வெற்றியை பாராக் உற்சாகமாய்க் கொண்டாட வேண்டும். யுத்தத்திலே தான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளையெல்லாம் பாராக் நேர்த்தியாய் செய்து முடிக்கவேண்டும். தெபொராள் பாராக்கிடம், "அபினோகாமின் குமாரனே, உன்னைச் சிறையாக்கினவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோ" (நியா 5:12) என்று கட்டளையிடுகிறாள்.

சிசெராவின் சேனையிலிருந்தவர்களில் அநேகர் யுத்தக்களத்திலேயே சங்காரமானார்கள். அவர்களில் ஒரு சிலர் பட்டயத்திற்கு தப்பி உயிரோடிருப்பதற்கு வாய்ப்புள்ளது. அக்காலத்தில், யுத்தத்தில் ஜெயித்தவர்கள், தோற்றுப்போனவர்களை சிறைப்பிடிப்பது வழக்கம். அவர்களுடைய யுத்தத்தளவாடங்களையும், உடமைகளையும் கொள்ளைப்பொருளாய் கொண்டுபோவதும் அக்காலத்து வழக்கமாகும்.

கானானியரின் ராஜாவாகிய யாபீன் இஸ்ரவேல் புத்திரரை சிறைப்படுத்தியிருந்தான். கர்த்தர் இந்த யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தாரை சிறையாக்கின கானானியரை, பாராக் இப்போது சிறையாக்கி, தன்னுடைய தேசத்திற்குக் கொண்டு போகவேண்டும். கானானியர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு அடிமைகளாயிருக்கவேண்டும்.

தெபொராள் கர்த்தரைத் துதித்துப் பாடுகிறாள். தன்னுடைய துதியின் கீதத்திற்கான காரணத்தையும் இங்கு விவரிக்கிறாள். "மீதியாயிருந்தவர்கள் ஜனத்தின் பிரபுக்களை ஆளும்படி செய்தார்; கர்த்தர் எனக்குப் பராக்கிரமசாலிகளின்மேல் ஆளுகை தந்தார்" (நியா 5:13) என்று தெபொராள் சொல்லுகிறாள். இதுவே அவள் கர்த்தரைத் துதித்துப் பாடுவதற்கு காரணம்.

இஸ்ரவேல் ஜனத்தார் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் படைபலமோ, ஆயுதபலமோ இல்லை. சத்துருக்கள் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு மதிப்பும் மரியாதையும் கொடுப்பதில்லை. ஆனாலும் கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக, அவர்களுடைய சத்துருக்களைத் தாழ்த்துகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை உயர்த்துகிறார். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜனத்தின் பிரபுக்களை ஆளுகை செய்கிறார்கள். சத்துருக்களில் பராக்கிரமசாலிகளாயிருக்கிறவர்களை இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய ஆளுகையின்கீழ் கொண்டுவருகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தத்திலே வெற்றியைக் கொடுக்கிறார். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருந்தாலும், கர்த்தர் அவர்களோடு கூடயிருந்து அவர்களைப் பலப்படுத்துவார். கர்த்தருக்கு மீதமான ஜனங்கள் எல்லா காலங்களிலும் இருப்பார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். அவர்கள் பலவீனராகவும், சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களாகவும் இருந்தாலும், கர்த்தருக்குள் அவர்களுக்கு நம்பிக்கை உண்டு.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய கரத்திற்குள் அடங்கியிருக்கும்போது, கர்த்தர் அவர்களை தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக பயன்படுத்துவார். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. இஸ்ரவேல் ஜனங்கள் சொற்ப எண்ணிக்கையுள்ளவர்களாயிருப்பது மாத்திரமல்ல, அவர்களில் ஒரே ஒரு தனிநபர் மாத்திரம் மீதியாயிருந்தாலும், கர்த்தர் அந்த நபரையும் தம்முடைய நாமமகிமைக்காக பயன்படுத்துவார். தம்முடைய பலத்தையும், பராக்கிரமத்தையும், வல்லமையையும் அந்த தனிநபர் மூலமாய் வெளிப்படுத்துவார்.

கர்த்தருக்கு விரோதமாகப் பெருமை பாராட்டுகிறவர்கள் அழிந்துபோவார்கள். அவர்கள் எண்ணிக்கையில் அதிகமானோராயிருந்தாலும், அவர்களிடத்தில் படைபலம் மிகுதியாயிருந்தாலும், அவர்களிடத்தில் இருப்பு இரதங்கள் ஏராளமாயிருந்தாலும், அவர்களால் கர்த்தருக்கு விரோமாய் எதிர்த்து நிற்க முடியாது. கர்த்தர் தம்முடைய சத்துருக்களை நிர்மூலம்பண்ணுவார்.

தெபொராள் ஒரு ஸ்திரீ. ஸ்திரீகள் தங்கள் சரீரத்தில் பலவீனமான பாண்டமாயிருக்கிறார்கள். பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்தின்படி, ஸ்திரீகள் தங்கள் புருஷருக்கு கட்டுப்பட்டு, கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். ஆனாலும் கர்த்தர் தெபொராளை உயர்த்துகிறார். தெபொராள் இஸ்ரவேல் தேசத்திலுள்ள புருஷரையும், ஸ்திரீகளையும் ஆளுகை செய்கிறாள்.

கர்த்தர் தெபொராளை இஸ்ரவேல் ஜனத்தின் பிரபுக்களை ஆளும்படி செய்கிறார். இஸ்ரவேல் ஜனத்திலே பராக்கிரமசாலிகள் இருக்கிறார்கள். கர்த்தர் தெபொராளுக்கு அவர்கள்மேல் ஆளுகை தருகிறார் (நியா 5:13). இஸ்ரவேலின் பிரபுக்களும் பராக்கிரமசாலிகளும், தெபொராளின் ஆளுகைக்கு மனப்பூர்வமாய்க் கீழ்ப்படிகிறார்கள்.

கானான் தேசத்து ஜனங்கள் பராக்கிரமசாலிகளாயிருக்கிறார்கள். தெபொராள் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறாள். இஸ்ரவேல் தேசத்தின் பராக்கிரமசாலிகள், தெபொராளோடு சேர்ந்துகொண்டு, கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேலின் பராக்கிரமசாலிகள், யுத்தத்திலே, தெபொராளுக்கு வெற்றி கிடைக்க, கடினமாய் உழைக்கிறார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தாருடைய எல்லா கோத்திரத்தாரும் தெபொராளோடு கூடயிருந்து கானானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவில்லை. ஒரு சில கோத்திரத்தார் தெபொராளோடு கூடயிருந்து கானானியருக்கு விரோதமாக யுத்தம் பண்ணுகிறார்கள். வேறுசில கோத்திரத்தாரோ, இந்த யுத்தத்தில் பங்குபெறாமல் தங்களுடைய சொந்த வேலைகளைப்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேல் கோத்திரத்தாரில் மேலும் சிலர், தெபொராள் பக்கமும் சேராமல், கானானியர் பக்கமும் சேராமல் நடுநிலை வகிக்கிறார்கள்.

தெபொராள் கானானியரின் ராஜாவாகிய யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறாள். சிசெரா யாபீனுடைய படைத்தளபதி. இந்த அதிகாரத்தில் யாபீனையும் சிசெராவையும் பற்றி அதிகமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. யாபீனோடு மேலும் சில புறஜாதியார் சேர்ந்துகொள்கிறார்கள். தெபொராள் அவர்களைப்பற்றியும் இங்கு வரிசையாகச் சொல்லுகிறாள்.

அமலேக்கியர் யாபீனோடு சேர்ந்துகொள்கிறார்கள். எப்பிராயீமர் அமலேக்கியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அமலேக்கியர் சிசெராவோடு சேர்ந்துகொள்ள புறப்பட்டுப் போனபோது, எப்பிராயீமர், அவர்களை வழியிலே சங்காரம்பண்ணி தடுத்திருக்கவேண்டும். அமலேக்கியரால் சிசெராவோடு சேர்ந்துகொள்ள முடியவில்லை. "அமலேக்குக்கு விரோதமாக இவர்களுடைய வேர் எப்பிராயீமிலிருந்து துளிர்த்தது" (நியா 5:14) என்று தெபொராள் சொல்லுகிறாள்.

யோசுவாவின் காலத்திலே, கானானியர்கள் கானான் தேசத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்டார்கள். யோசுவாவும் கானானியரின் ராஜாக்களில் அநேகரை சங்காரம்பண்ணினார். யோசுவாவுக்கு பின்பு, கானான் ராஜாக்களில் சிலர் மறுபடியும் தங்களுடைய சேனையைத் திரட்டி, யாபீனோடு சேர்ந்துகொள்கிறார்கள். இவர்களுடைய கூட்டு முயற்சியினால், கானானியரின் சேனை வலுவடைகிறது. அது எண்ணிக்கையில் அதிகரிக்கிறது. அந்தக் கானானியரின் ராஜாக்கள் எல்லோரும் ஒன்றாய்க் கூடிவந்து, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள் (நியா 5:19).

"ராஜாக்கள் வந்து யுத்தம்பண்ணினார்கள்; அப்பொழுது கானானியரின் ராஜாக்கள் மெகிதோவின் தண்ணீர் அருகான தானாக்கிலே யுத்தம்பண்ணினார்கள்; அவர்களுக்குத் திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை" (நியா 5:19) என்று தெபொராள் சொல்லுகிறாள்.

கானானியரின் ராஜாவாகிய யாபீன், கானானின் மற்ற ராஜாக்களை கூலி பொருந்தி தன்னோடு சேர்த்துக்கொள்ளவில்லை. யாபீனிடம் இருப்பு இரதங்கள் இருக்கிறது. கானானியரின் மற்ற ராஜாக்களிடம் ஆட்கள் மாத்திரம் இருக்கிறார்கள். அவர்களிடத்தில் ஆயுதங்களோ, இருப்பு இரதங்களோ இல்லை. ஆகையினால் அவர்களுக்கு திரவியக்கொள்ளை கிடைக்கவில்லை.

தெபொராள் கானானியரின் ராஜாவாகிய யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, இஸ்ரவேல் புத்திரரில் அநேகர், தெபொராளோடு சேர்ந்துகொண்டு, யாபீனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள். தெபொராள் தன்னோடுகூட சேர்ந்துகொண்டு, தனக்கு ஆதரவாய் யுத்தம்பண்ணின இஸ்ரவேல் புத்திரரை இந்தப் பாடலில் புகழ்ந்து பேசுகிறாள்.

தெபொராள் எப்பிராயீமுக்கு நடுவிலும் பென்யமீனுக்கு நடுவிலும் வாசம்பண்ணுகிறாள். அவர்கள் தெபொராளோடு சேர்ந்துகொள்கிறார்கள். தெபொராள் இவ்விரண்டு கோத்திரத்தாரையும் புகழ்ந்து பேசுகிறாள்.

"அமலேக்குக்கு விரோதமாக இவர்களுடைய வேர் எப்பிராயீமிலிருந்து துளிர்த்தது; உன் ஜனங்களுக்குள்ளே பென்யமீன் மனுஷர் உனக்குப் பின்சென்றார்கள்; மாகீரிலிருந்து அதிபதிகளும், செபுலோனிலிருந்து எழுதுகோலைப் பிடிக்கிறவர்களும் இறங்கிவந்தார்கள்" (நியா 5:14) என்று தெபொராள் எப்பிராயீமரையும், பென்யமீனரையும் குறித்து புகழ்ந்து சொல்லுகிறாள். இவர்கள் யாபீனுக்கு விரோதமாக நடைபெற்ற யுத்தத்தில் தைரியமாக யுத்தம்பண்ணினார்கள்.

பென்யமீன் மனுஷர் மற்ற இஸ்ரவேல் புத்திரருக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறார்கள். பென்யமீன் கோத்திரத்தார் மிகவும் சாதாரணமானவர்கள். இக்காலத்தில் அவர்கள் எப்பிராயீமுக்கு தாழ்ந்திருக்கிறார்கள். பென்யமீனர் எண்ணிக்கையிலும், படைபலத்திலும் குறைச்சலுள்ளவர்கள். ஆனாலும் அமலேக்குக்கு விரோதமாய் நடைபெறுகிற யுத்தத்திலே, பென்யமீன் மனுஷர் எப்பிராயீமருக்கு பின்செல்லுகிறார்கள்.

மாகீரிலிருந்து அதிபதிகளும், செபுலோனிலிருந்து எழுதுகோலைப் பிடிக்கிறவர்களும் இறங்கிவருகிறார்கள் (நியா 5:14). யாபீனுக்கு விரோதமாக நடைபெறுகிற யுத்தத்திலே, செபுலோன் புத்திரர் யுத்த வியூகங்களை வகுக்கிறார்கள். மாகீரின் அதிபதிகள், யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிற, மனாசேயின் பாதிக்கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்.

இசக்காரின் பிரபுக்களும் தெபொராளோடே இருக்கிறார்கள்; பாராக்கைப் போல இசக்கார் மனுஷரும் பள்ளத்தாக்கில் கால்நடையாய் அனுப்பப்பட்டுப் போகிறார்கள் (நியா 5:15). யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது நீதியான காரியம் என்பதை இசக்காரின் மனுஷர் அங்கீகரிக்கிறார்கள். ஆகையினால் அவர்கள் இந்த யுத்தத்தின் பாரங்களை தங்கள் தோள்களில் சுமக்கிறார்கள். தோள்களில் சுமப்பது இசக்கார் புத்திரருக்கு நியமிக்கப்பட்ட வேலை.

"இசக்கார் இரண்டு பொதியின் நடுவே படுத்துக்கொண்டிருக்கிற பலத்த கழுதை. அவன், இளைப்பாறுதல் நல்லது என்றும், நாடு வசதியானது என்றும் கண்டு, சுமக்கிறதற்குத் தன் தோளைச் சாய்த்து, பகுதிகட்டுகிறவனானான்" (ஆதி 49:14,15).

இசக்கார் மனுஷர் யாபீனுடைய சுமையை தங்கள் தோள்களில் சுமக்க விரும்பவில்லை. அவர்கள் யாபீனின் சுமையை தங்கள் தோள்களிலிருந்து இறக்கி வைத்துவிடுகிறார்கள். யாபீனுக்கு விரோதமாக நடைபெறுகிற யுத்தத்திலே, அவர்கள் இஸ்ரவேல் புத்திரருடைய யுத்த தளவாட சுமைகளை, தங்கள் தோள்களில் சுமக்க தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள்.

"செபுலோனும் நப்தலியும் போர்க்களத்து முனையிலே தங்கள் உயிரை எண்ணாமல் மரணத்துக்குத் துணிந்து நின்றார்கள்" (நியா 5:18) என்று தெபொராள் சொல்லுகிறாள். எல்லா கோத்திரத்தாரையும்விட, செபுலோன் கோத்திரத்தாரும், நப்தலி கோத்திரத்தாரும் யுத்தக்களத்திலே தைரியமாய் யுத்தம்பண்ணுகிறார்கள். பாராக் இவர்களுடைய தேசத்தை சேர்ந்தவர். தெபொராள் பாராக்கினிமித்தமாக, செபுலோனையும் நப்தலியையும் முகஸ்துதி பண்ணவில்லை. அவர்கள் யுத்தக்களத்திலே, மிகுந்த தைரியத்தோடு சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள்.

செபுலோனும் நப்தலியும் போர்க்களத்து முனையிலே, யாபீனுக்கு அருகாமையில் நின்று அவனுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார்கள். சத்துருக்களுக்கு தூரத்திலிருக்கிறவர்களைவிட, அவர்களுக்கு அருகாமையிலிருக்கிறவர்களுக்கே, உயிர்ச்சேதம் அதிகமாய் உண்டாகும். ஆனால் செபுலோனும் நப்தலியும் தங்களுடைய உயிரை எண்ணாமல், போர்க்களத்து முனையிலே, மரணத்திற்கு துணிந்து நிற்கிறார்கள். இதனால் தெபொராள் இவர்களை புகழ்ந்து சொல்லுகிறாள்.

கர்த்தரே இஸ்ரவேல் ஜனத்திற்காக யுத்தம்பண்ணுகிறார். இந்த யுத்தத்தில், இஸ்ரவேல் புத்திரர் பயன்படுத்தப்பட்டாலும், கர்த்தர் வானத்திலுள்ள நட்சத்திரங்களையும், தம்முடைய ஜனத்திற்கு ஆதரவாகப் பயன்படுத்துகிறார். "வானத்திலிருந்து யுத்தம் உண்டாயிற்று; நட்சத்திரங்கள் தங்கள் அயனங்களிலிருந்து சிசெராவோடே யுத்தம்பண்ணின" (நியா 5:20) என்று தெபொராள் சொல்லுகிறாள்.

கர்த்தர் சேனைகளின் அதிபதியாயிருக்கிறார். அவரே ராஜாதி ராஜா. அவரே கர்த்தாதி கர்த்தா. கர்த்தர் சிசெராவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறார். சத்துருக்களுடைய சேனைகளின்மீது வானத்திலிருந்து கல்மழைகள் விழுகிறது. இடியும் மின்னலும் சிசெராவின்மீது விழுந்து, அவனுடைய சேனையிலுள்ளவர்களை சங்காரம்பண்ணுகிறது. கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், வானத்திலுள்ள நட்சத்திரங்களும் சிசெராவுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறது.

சிசெராவின் சேனைக்கு விரோதமாக, வானத்திலுள்ள நட்சத்திரங்கள் யுத்தம்பண்ணியதுபோல, பூமியிலுள்ள நதிகளும், அவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறது. "கீசோன் நதி, பூர்வநதியாகிய கீசோன் நதியே, அவர்களை அடித்துக் கொண்டுபோயிற்று" (நியா 5:21) என்று தெபொராள் சொல்லுகிறாள்.

கீசோன் நதி பொதுவாக எப்போதுமே வறண்டு காணப்படும். ஆனால் இப்போதோ அந்த நதி உற்பத்தியாகும் இடத்திலே பெருமழை பெய்கிறது. கீசோன் நதி பிரவாகித்து ஓடுகிறது. சிசெராவின் சேனையிலுள்ளவர்கள் கீசோன் நதியைக் கடந்து தப்பித்து ஓட முயற்சி பண்ணுகிறார்கள். ஆனால் கீசோன் நதியோ பிரவாகித்து ஓடி, அவர்களை அடித்து கொண்டு போயிற்று. நதியைக் கடக்க முயற்சி பண்ணினவர்கள் எல்லோரும் அதிலே மூழ்கி மாண்டுபோனார்கள்.

சிசெராவின் சேனைக்கு விரோதமாக, தெபொராளின் ஆத்துமாவும் யுத்தம்பண்ணுகிறது. "என் ஆத்துமாவே, நீ பலவான்களை மிதித்தாய்" (நியா 5:21) என்று தெபொராள் சொல்லுகிறாள். தெபொராள் தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னைப்பற்றி பெருமையாகவோ, உயர்வாகவோ பேசவில்லை. அவளிடத்தில் சத்துருக்களுக்கு விரோதமாக பரிசுத்தமான வைராக்கியம் இருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் கானானியரின் ராஜாவாகிய யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, இஸ்ரவேல் ஜனத்தாரில் சிலர், நடுநிலை வகிக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரோடு சேர்ந்து, அவர்களுடைய சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவேண்டும். ஆனால் அவர்களோ தெபொராளோடு சேர்ந்து, யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை.

சிசெராவின் சேனைக்கு விரோதமாக யூதாகோத்திரத்தாரோ, சிமியோன் கோத்திரத்தாரோ யுத்தம்பண்ண வரவில்லை. அவர்களுடைய சுதந்தர தேசம் ஒருவேளை, தெபொராளின் சுதந்தர தேசத்திற்கு வெகுதூரத்திலிருப்பதினால் அவர்களால் யுத்தத்தில் பங்குபெற முடியாமல் போயிருக்கலாம்.

ரூபன் கோத்திரத்தார் தெபொராளோடு சேர்ந்து, சிசெராவின் சேனைக்கு விரோதமாக யுத்தம்பண்ண மறுத்துவிடுகிறார்கள். "ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி" (நியா 5:15) என்று தெபொராள் சொல்லுகிறாள்.

ரூபன் கோத்திரத்தார், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரிடமிருந்து பிரிந்திருக்கிறார்கள். யோர்தான் நதி ரூபன் கோத்திரத்தாரைப் பிரிக்கிறது. மேலும் ரூபன் கோத்திரத்தாருக்குள்ளேயே ஒற்றுமையில்லாமல், பிரிந்திருக்கிறார்கள். அவர்களுக்குள் ஒருமனமும், ஒருமித்த கருத்தும் காணப்படவில்லை. ஆகையினால் அவர்கள் தெபொராளோடுகூட யுத்தத்திலே சேர்ந்துகொள்ளவில்லை.

ரூபனின் பிரிவினைகளுக்கு பல காரணங்கள் இருக்கலாம். யுத்தத்திலே யார் முன்னாலே போவது என்பதில் அவர்களுக்குள் ஒருமித்த கருத்து ஏற்படாமலிருக்கலாம். மற்ற கோத்திரத்தார் எல்லோரும், சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது நியாயமானது என்று நினைக்கும்போது, ரூபன் கோத்திரத்தார் மாத்திரம், இந்த யுத்தம் தேவையற்றது என்றும், இது நீதியானதல்ல என்றும் தீர்மானம் செய்திருக்கலாம்.

சிசெராவின் சேனைக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறவர்கள் தெபொராளையும் பாராக்கையும் பின்பற்றிப்போகிறார்கள். இந்த யுத்தத்திலே கர்த்தர் தங்களுக்கு வெற்றியைக் கொடுப்பார் என்று அவர்களெல்லோரும் நம்பிக்கையோடு போகிறார்கள். யுத்தத்திலே ஜெயிக்கலாம் என்று இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் நம்பும்போது, ரூபன் புத்திரர் மாத்திரம், இந்த யுத்தம் நடைமுறைக்கு ஒத்துவராது என்று அவிசுவாசத்தோடு தீர்மானித்திருக்கலாம். ரூபன் புத்திரர் கர்த்தரை நோக்கிப் பார்க்காமல், சூழ்நிலைகளை நோக்கிப் பார்த்து, தங்கள் ஆத்துமாக்களில் சோர்வடைந்திருக்கலாம்.

ரூபன் புத்திரர் உலகப்பிரகாரமான வேலைகளில் அதிக கவனம் செலுத்துகிறார்கள். அவர்கள் தொழுவங்களின் நடுவே இருந்து மந்தைகளைக் கவனிக்கிறார்கள். யுத்தக்களத்திலே இருப்பதைவிட, தொழுவத்தின் நடுவிலே இருப்பது தங்களுக்கு பிரயோஜனமானது என்று ரூபன் புத்திரர் நினைக்கிறார்கள். தங்களுடைய மந்தைகளை அப்படியே விட்டுவிட்டு, சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவது, தங்களுக்கு பெருத்த நஷ்டத்தை உண்டுபண்ணும் என்று ரூபன் கோத்திரத்தார் யோசிக்கிறார்கள். மந்தைகளைக் கவனிக்கவில்லையென்றால், தங்கள் மந்தையிலுள்ள ஆடுமாடுகள் பட்டினி கிடந்து மரித்துப்போகும் என்று பயப்படுகிறார்கள். "மந்தைகளின் சத்தத்தைக் கேட்க, நீ தொழுவங்களின் நடுவே இருந்துவிட்டதென்ன?" (நியா 5:16) என்று தெபொராள் கேட்கிறாள்.

ரூபன் புத்திரர் தங்களோடு சேர்ந்து, சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வராமலிருப்பது, தெபொராளுக்கு மிகுந்த மனவருத்தத்தையும், மனவேதனையையும் உண்டுபண்ணிற்று. "ரூபனின் பிரிவினைகளால் உண்டான இருதயத்தின் நினைவுகள் மிகுதி" என்றும், "ரூபனின் பிரிவினைகளால் மனோவிசாரங்கள் மிகுதி" என்றும் தெபொராள் மனவேதனையோடு சொல்லுகிறாள்.

தாண் கோத்திரத்தாரும், ஆசேர் கோத்திரத்தாரும், சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரவில்லை. இவ்விரண்டு கோத்திரத்தாரும் கடற்கரையிலே குடியிருக்கிறார்கள். தாண் மனுஷர் கப்பல்களில் தங்கியியிருக்கிறார்கள். தங்களால், தங்களுடைய கப்பல்களை விட்டு யுத்தம்பண்ண வரமுடியாது என்று தாண் புத்திரர் சொல்லுகிறார்கள்.

ஆசேர் புத்திரரோ தங்கள் வீடுகளில் தங்கியிருக்கிறார்கள். கடற்கரையில் ஏற்பட்டிருக்கிற கடல் அறுப்புக்களால் உண்டான சேதங்களை பழுதுபார்க்க வேண்டுமென்று, ஆசேர் மனுஷர் கடற்கரையிலேயே தங்கி, தங்கள் குடாக்களில் தாபரிக்கிறார்கள். கடல் தண்ணீர் தங்கள் வீடுகளுக்குள் வந்துவிடாதவாறு, அதை தடுத்து நிறுத்துவதற்கு அணைபோடவேண்டும் என்றும், அதற்கான ஆயத்த வேலைகளை தாங்கள் செய்யவேண்டியிருப்பதினால், தங்கள் கடற்கரையிலேயே தாங்கள் தங்கியிருக்கவேண்டும் என்றும் ஆசேர் மனுஷர் சொல்லுகிறார்கள்.

ஆசேர் புத்திரர் வாசம்பண்ணுகிற கடற்கரையிலே, வியாபாரக் கப்பல்கள் வந்துபோவது வழக்கம். கப்பல்களிலுள்ள பொருட்களையெல்லாம் இறக்கவும், கப்பல்களுக்கு பொருட்களை ஏற்றவும் தாங்கள் இங்கே இருக்கவேண்டுமென்று ஆசேர் மனுஷர் தீர்மானிக்கிறார்கள். ஆகையினால் இவர்கள் தெபொராளோடு சேர்ந்து கொள்ளவில்லை. யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதைவிட, வியாபாரம் பண்ணுவதே ஆசேரின் மனுஷருக்கு மிகவும் முக்கியமானதாயிருக்கிறது.

தெபொராளும் பாராக்கும் சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, இஸ்ரவேல் புத்திரரில் சிலர் தங்களோடு சேர்ந்துகொள்ளாதது தெபொராளுக்கு மிகுந்த மனவருத்தத்தைக் கொடுக்கிறது. தெபொராள் கர்த்தரைத் துதித்து பாடும்போது, தங்களோடு சேர்ந்துகொள்ளாத இஸ்ரவேல் புத்திரரையும், தன்னுடைய பாடல் வரிகளில் சேர்த்து பாடுகிறாள்.

"கீலேயாத் மனுஷர் யோர்தானுக்கு அக்கரையிலே இருந்துவிட்டார்கள்; தாண் மனுஷர் கப்பல்களில் தங்கியிருந்ததென்ன? ஆசேர் மனுஷர் கடற்கரையிலே தங்கி, தங்கள் குடாக்களில் தாபரித்தார்கள்" (நியா 5:17) என்று தெபொராள் பாடுகிறாள்.

தெபொராள் தன்னுடைய பாடலிலே மேரோசின் புத்திரரை சபிக்கிறாள். அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை. சிசெராவின் பராக்கிரமசாலிகளுக்கு விரோதமாக, மேரோசின் புத்திரர் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வரவில்லை. ஆகையினால், "மேரோசை சபியுங்கள்" என்றும், "அதின் குடிகளை சபிக்கவே சபியுங்கள்" (நியா 5:23) என்றும் தெபொராள் சொல்லுகிறாள். அவள் இந்த சாபவார்த்தைகளைச் சொல்லும்போது, இந்த வார்த்தைகள் கர்த்தருடைய தூதனானவர் சொல்லுவதாகவும் சொல்லுகிறாள்.

மரோசு எங்கே இருக்கிறது என்று தெளிவாகத் தெரியவில்லை. இது ஒரு வேளை அக்காலத்தில் பிரசித்திப் பெற்ற பட்டணமாகயிருக்கலாம். இஸ்ரவேல் புத்திரருக்கும், சிசெராவின் சேனைக்கும் இடையே யுத்தம் நடைபெறுகிற ஸ்தலத்திற்கு அருகாமையில் மேரோசு இருக்கலாம் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

மேரோசு யுத்தக்களத்திற்கு அருகாமையிலிருப்பதினால், கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு உபகாரம் செய்யும் சிலாக்கியம் இவர்களுக்கு கிடைத்திருக்கிறது. கர்த்தருடைய சித்தம் நிறைவேறுவதற்கும், அவருடைய நீதி நிலைநிறுத்தப்படுவதற்கும் மேரோசின் ஜனங்கள் கர்த்தருடைய பட்சத்தில் துணைநின்றிருக்கவேண்டும். ஆனால் அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு உதவிசெய்ய மறுத்துவிடுகிறார்கள்.

மேரோசின் புத்திரர் யாபீனுடைய இருப்பு இரதங்களைப் பார்த்து பயந்திருக்கலாம். இஸ்ரவேல் புத்திரருக்கு உதவிசெய்தால், சிசெராவின் சேனை தங்களை அழித்துப்போடும் என்று நினைத்து, அவர்கள் கர்த்தர் பட்சத்தில் துணைநிற்க வராமல், தங்கள் பட்டணத்திலேயே முடங்கியிருந்திருக்கலாம்.

கர்த்தர் ஒவ்வொரு மனுஷனையும், ஒவ்வொரு தேசத்தாரையும் கண்ணோக்கிப் பார்க்கிறார். தம்முடைய பட்சத்தில் துணையாயிராதவனை, கர்த்தர் தம்முடைய சத்துருவாகவே நோக்கிப் பார்க்கிறார். அவனைத் தம்முடைய சத்துருவாகப் பாவிக்கிறார்.

தெபொராள் யாபீனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிற காலத்தில் மேரோசு ஒரு பிரதான பட்டணமாயிருக்கிறது. இந்தப் பட்டணத்தில் ஏராளமான ஜனங்கள் வாசம்பண்ணுகிறார்கள். இவர்களால் கர்த்தருடைய ஜனத்திற்கு அதிகமாய் உதவி செய்திருக்க முடியும். தெபொராளும் மேரோசின் குடிகளிடத்தில் அதிகமான உதவிகளை எதிர்பார்க்கிறாள். ஆனால் மேரோசின் குடிகளோ கர்த்தர் பட்சத்தில் துணை நிற்க வரவில்லை. ஆகையினால் தெபொராள், மேரோசை சபிக்கிறாள்.

யாகேல்
நியா 5:24-31

நியா 5:24. ஸ்திரீகளுக்குள்ளே கேனியனான ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள்; கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவளே.

நியா 5:25. தண்ணீரைக் கேட்டான், பாலைக் கொடுத்தாள்; ராஜாக்களின் கிண்ணியிலே வெண்ணெயைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

நியா 5:26. தன் கையால் ஆணியையும், தன் வலதுகையால் தொழிலாளரின் சுத்தியையும் பிடித்து, சிசெராவை அடித்தாள்; அவன் நெற்றியில் உருவக்கடாவி, அவன் தலையை உடைத்துப்போட்டாள்.

நியா 5:27. அவள் கால் அருகே அவன் மடங்கி விழுந்துகிடந்தான், அவள் கால் அருகே மடங்கி விழுந்தான்; அவன் எங்கே மடங்கி விழுந்தானோ அங்கே மடிந்து கிடந்தான்.

நியா 5:28. சிசெராவின் தாய் ஜன்னலில் நின்று பலகணிவழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்து: அவனுடைய ரதம் வராமல் பிந்திப்போனதென்ன? அவனுடைய ரதங்களின் ஓட்டம் தாமதிக்கிறதென்ன என்று புலம்பினாள்.

நியா 5:29. அவளுடைய நாயகிகளில் புத்திசாலிகள் அவளுக்கு உத்தரவு சொன்னதுமன்றி, அவள் தானும் தனக்கு மறுமொழியாக:

நியா 5:30. அவர்கள் கொள்ளையைக் கண்டுபிடிக்கவில்லையோ, அதைப் பங்கிடவேண்டாமோ, ஆளுக்கு இரண்டொரு பெண்களையும், சிசெராவுக்குக் கொள்ளையிட்ட பலவருணமான ஆடைகளையும், கொள்ளையிட்ட பலவருணமான சித்திரத் தையலாடைகளையும், கொள்ளையிட்டவர்களின் கழுத்துக்கு இருபுறமும் பொருந்தும் சித்திரத்தையலுள்ள பலவருணமான ஆடையையும் கொடுக்கவேண்டாமோ என்றாள்.

நியா 5:31. கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள்; அவரில் அன்புகூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக்கடவர்கள் என்று பாடினார்கள். பின்பு தேசம் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது.

தெபொராளின் பாடல் இந்த வசனப்பகுதியோடு நிறைவு பெறுகிறது. தெபொராள் யாகேலை புகழ்ந்து சொல்லுகிறாள். யாகேலும், தெபொராளைப்போலவே ஒரு ஸ்திரீயாகயிருந்தாலும், அவளும் இந்த யுத்தத்தில் முக்கியமான பங்கை நிறைவேற்றுகிறாள்.

தெபொராள் யாகேலைப்பற்றி புகழ்ந்து சொல்லும்போது, "ஸ்திரீகளுக்குள்ளே கேனியனான ஏபேரின் மனைவியாகிய யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவள்; கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே அவள் ஆசீர்வதிக்கப்பட்டவளே" (நியா 5:24) என்று சொல்லுகிறாள்.

கேனியர்கள் கானானியரோடு சமாதானமாயிருந்தார்கள். யாகேலோ கானானியரின் ராஜாவாகிய யாபீனோடு சமாதானமாயிருப்பதைவிட, இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரோடு சமாதானமாயிருப்பதையே விரும்பினாள்.

ஆகையினால் கூடாரத்தில் வாசமாயிருக்கிற ஸ்திரீகளுக்குள்ளே, யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவளாயிருக்கிறாள். சமுதாயத்தில் வசதி குறைந்தவர்களும், தாழ்ந்த நிலமையிலுள்ளவர்களும், மச்சுப்பாவப்பட்ட வீடுகளில் குடியிராமல், சாதாரணமான கூடாரங்களில் வாசம்பண்ணுவார்கள். ஆனாலும் யாகேல் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவள். யாகேல் ஒரு ஏழை ஸ்திரீயாகயிருந்தாலும், அவள் தன்னுடைய நிலமையில், தன்னால் முடிந்த ஊழியத்தை கர்த்தருக்காக செய்திருக்கிறாள்.

கர்த்தர் தமக்காக ஊழியம் செய்கிற தம்முடைய ஊழியக்காரர்கள் எல்லோரையும் ஆசீர்வதிக்கிறார். கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள் செழித்திருப்பார்கள். ஸ்திரீகளுக்குள்ளே யாகேல் ஆசீர்வதிக்கப்பட்டவளாயிருக்கிறாள்.

சிசெரா யாகேலின் கூடாரத்திற்கு வந்து, அவளிடத்தில் தண்ணீரைக் கேட்டான். அவள் அவனுக்கு பாலைக் கொடுத்தாள். ராஜாக்களின் கிண்ணியிலே வெண்ணெயைக் கொண்டுவந்து கொடுத்தாள். தன் கையால் ஆணியையும், தன் வலதுகையால் தொழிலாளரின் சுத்தியையும் பிடித்து, சிசெராவை அடித்தாள்; அவன் நெற்றியில் உருவக்கடாவி, அவன் தலையை உடைத்துப்போட்டாள். அவள் கால் அருகே அவன் மடங்கி விழுந்துகிடந்தான், அவள் கால் அருகே மடங்கி விழுந்தான்; அவன் எங்கே மடங்கி விழுந்தானோ அங்கே மடிந்து கிடந்தான் (நியா 5:25-27).

சிசெராவிடம் ஏராளமான இருப்பு இரதங்கள் இருக்கிறது. அந்த இருப்பு இரதங்களால் அவனைப் பாதுகாக்க முடியவில்லை. யாகேல் ஒரு சாதாரண இருப்பு ஆணியினால் சிசெராவைக் கொன்றுபோட்டாள்.

தெபொராள் சிசெராவைப்பற்றிச் சொல்லும்போது, அவளுடைய தாயாரைப்பற்றியும் சொல்லுகிறாள். "சிசெராவின் தாய் ஜன்னலில் நின்று பலகணிவழியாய்ப் பார்த்துக்கொண்டிருந்து: அவனுடைய ரதம் வராமல் பிந்திப்போனதென்ன? அவனுடைய ரதங்களின் ஓட்டம் தாமதிக்கிறதென்ன என்று புலம்பினாள். அவளுடைய நாயகிகளில் புத்திசாலிகள் அவளுக்கு உத்தரவு சொன்னதுமன்றி, அவள் தானும் தனக்கு மறுமொழியாக: அவர்கள் கொள்ளையைக் கண்டுபிடிக்கவில்லையோ, அதைப் பங்கிடவேண்டாமோ, ஆளுக்கு இரண்டொரு பெண்களையும், சிசெராவுக்குக் கொள்ளையிட்ட பலவருணமான ஆடைகளையும், கொள்ளையிட்ட பலவருணமான சித்திரத் தையலாடைகளையும், கொள்ளையிட்டவர்களின் கழுத்துக்கு இருபுறமும் பொருந்தும் சித்திரத்தையலுள்ள பலவருணமான ஆடையையும் கொடுக்கவேண்டாமோ என்றாள்" (நியா 5:28-30).

தெபொராளின் பாடல் ஜெபத்தோடு நிறைவுபெறுகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்களையெல்லாம் சங்காரம்பண்ணுகிறார். "கர்த்தாவே, உம்மைப் பகைக்கிற யாவரும் இப்படியே அழியக்கடவர்கள்" (நியா 5:31) என்று தெபொராள் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறாள்.

கர்த்தரைப் பகைக்கிறவர்கள் அழிந்துபோவார்கள். கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்களோ செழித்திருப்பார்கள். தெபொராளும், பாராக்கும், அவர்களோடுகூட சிசெராவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணின இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரிடத்தில் அன்புகூருகிறவர்கள். "கர்த்தரில் அன்புகூருகிறவர்களோ, வல்லமையோடே உதிக்கிற சூரியனைப்போல இருக்கக்கடவர்கள்" என்று தெபொராளும் பாராக்கும் பாடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு கானானியரின் ராஜாவாகிய யாபீன்மீது ஜெயம் கிடைத்தது. தெபொராளும் இஸ்ரவேல் புத்திரரும், கர்த்தர் தங்களுக்கு கொடுத்த வெற்றியை சந்தோஷமாய் கொண்டாடுகிறார்கள். யுத்தத்திலே சத்துருக்கள்மீது வெற்றி கிடைத்ததினால் இஸ்ரவேல் தேசத்தில் அமைதி உண்டாயிற்று. "பின்பு தேசம் நாற்பதுவருஷம் அமைதலாயிருந்தது" (நியா 5:31).

6 அதிகாரம்

இஸ்ரவேல் தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது. அமைதியான இந்தக் காலத்தில் நடைபெற்ற எந்த சம்பவமும் பரிசுத்த வேதாகமத்தில் எழுதப்படவில்லை. தெபொராளின் காலத்தில், கானானியரின் ராஜாவாகிய யாபீன்மீது, இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயமுண்டாயிற்று. அதன் பின்பு தேசம் நாற்பது வருஷம் அமைதலாயிருக்கிறது.

இஸ்ரவேல் தேசத்திலே, நாற்பது வருஷங்களுக்கு பின்பு மறுபடியும் பிரச்சனை உண்டாயிற்று. கர்த்தர் கிதியோனை எழுப்பி, இஸ்ரவேல் ஜனத்தாரை மீட்டுக்கொள்கிறார். கிதியோன் இஸ்ரவேல் ஜனங்களுக்கு நான்காவது நியாயாபதியாக எழுப்பப்பட்டிருக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் தம்முடைய ஜனத்தை ஏழுவருஷம் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுக்கிறார் (நியா 6:1-6). கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசி ஒருவரை அவர்களிடத்திற்கு அனுப்புகிறார். அவர்களோ கர்த்தருடைய சொல்லை கேளாதே போகிறார்கள் (நியா 6:7-10).

கர்த்தர் கிதியோனை இஸ்ரவேலை இரட்சிக்கும் மீட்பராக எழுப்புகிறார். கர்த்தர் கிதியோனுக்கு ஊழியப்பொறுப்பைக் கொடுத்து அவரை அனுப்புகிறார். கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை ஒரு அடையாளத்தினால் உறுதிபண்ணுகிறார் (நியா 6:11-24).

கிதியோனின் தகப்பனாருடைய வீட்டில் ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாயிற்று (நியா 6:25-32). கிதியோன் மீதியானியரோடு யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்த வேலைகளை மேற்கொள்கிறார் (நியா 6:33-40).

மீதியானியர்
நியா 6:1-6

நியா 6:1. பின்னும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள்; அப்பொழுது கர்த்தர் அவர்களை ஏழு வருஷம் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார்.

நியா 6:2. மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிக்கொண்டார்கள்.

நியா 6:3. இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும்போது, மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து;

நியா 6:4. அவர்களுக்கு எதிரே பாளயமிறங்கி, காசாவின் எல்லைமட்டும் நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதேபோவார்கள்.

நியா 6:5. அவர்கள் தங்கள் மிருகஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும்எண்ணிமுடியாததாயிருக்கும்; இந்தப்பிரகாரமாக தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள்.

நியா 6:6. இப்படி மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்பட்டார்கள்; அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அவர்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். இதனால் இஸ்ரவேல் புத்திரருக்கு மறுபடியும் பிரச்சனைகள் உண்டாயிற்று. பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்கள் பாடுகளை அனுபவிக்கவேண்டும். மதியீனமான காரியங்களை செய்வதற்கு மறுபடியும் திரும்பி வருகிறவர்கள், துக்கத்தையும் வேதனைகளையும் அனுபவிப்பார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். அப்பொழுது கர்த்தர் அவர்களை மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுக்கிறார். மீதியானியர் மிருககுணமுள்ளவர்கள். அவர்கள் மனுஷநேயமில்லாமல், யாருக்கும் ஈவு இரக்கம் காண்பிக்காமல், மனுஷருக்கு தீங்கு செய்கிறவர்கள்.

மீதியானியர் மோவாபியரோடு சேர்ந்துகொண்டார்கள். "மீதியானரின் மூப்பரை நோக்கி: மாடு வெளியின் புல்லை மேய்கிறதுபோல, இப்பொழுது இந்தக் கூட்டம் நம்மைச் சுற்றியிருக்கிற யாவையும் மேய்ந்துபோடும் என்றான். அக்காலத்திலே சிப்போரின் குமாரனாகிய பாலாக் மோவாபியருக்கு ராஜாவாயிருந்தான்" (எண் 22:4).

பூர்வகாலத்திலே இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரை ஒடுக்கி, தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் மீதியானியரை ஒரளவு அழித்தும் விட்டார்கள்.

"கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டபடியே அவர்கள் மீதியானியருடன் யுத்தம்பண்ணி, புருஷர்கள் யாவரையும் கொன்றுபோட்டார்கள். அவர்களைக் கொன்றுபோட்டதும் அன்றி, மீதியானியரின் ஐந்து ராஜாக்களாகிய ஏவி, ரேக்கேம், சூர், ஊர், ரேபா என்பவர்களையும் கொன்றுபோட்டார்கள். பேயோரின் குமாரனாகிய பிலேயாமையும் பட்டயத்தினாலே கொன்றுபோட்டார்கள்" (எண் 31:7,8).

பூர்வகாலத்தில் ஒடுக்கப்பட்டிருந்த மீதியானியர், இப்போது மறுபடியும் பெலனடைந்து, இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்களாக எழும்புகிறார்கள். இப்போது இஸ்ரவேல் புத்திரர் தாழ்ந்திருக்கிறார்கள். மீதியானியர் அவர்களுக்கு மேல் உயர்ந்திருக்கிறார்கள். மீதியானியரின் கை இஸ்ரவேலின்மேல் பலத்துக்கொள்கிறது.

மீதியானியர் திரளான எண்ணிக்கையிலிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஆசீர்வாதமான வாக்குத்தத்தங்களைச் சொன்னார். அவர்கள் வானத்திலுள்ள நட்சத்திரங்களின் எண்ணிக்கையைப்போலவும், கடற்கரை மணலின் எண்ணிக்கையைப்போலவும் திரளாய்ப் பலுகிப் பெருகுவார்கள் என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு வாக்குப்பண்ணினார்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரருடைய பாவம் அவர்களுடைய வளர்ச்சிக்கு தடையாயிருக்கிறது. அவர்கள் பலுகிப் பெருகுவதற்கு பதிலாக, குறைந்து போகிறார்கள். இஸ்ரவேல் ஜனத்தார் தலையாகயிருப்பதற்கு பதிலாக வாலாகயிருக்கிறார்கள். அவர்கள் மேலாக இல்லாமல் கீழாக இருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஆசீர்வாதம் இஸ்ரவேல் புத்திரர்மீது இருந்தவரையிலும், அவர்களுடைய கை, அவர்கள் சத்துருக்கள்மேல் பலத்துக்கொண்டது. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக பொல்லாப்பானதை செய்ய ஆரம்பிக்கும்போது, சத்துருக்களின் கை இஸ்ரவேலின் மேல் பலத்துக்கொள்கிறது.

மீதியானியர் எண்ணிக்கையில் பெருத்திருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் சொற்ப எண்ணிக்கையுள்ள ஜனமாயிருக்கிறார்கள். அவர்கள் மீதியானியருக்கு கீழ் தாழ்ந்திருக்கிறார்கள். மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேல் பலத்துக்கொள்கிறது. அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தை அடக்கி ஒடுக்குகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரைப் பார்த்து பயப்படுகிறார்கள். அவர்களால் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியவில்லை. இஸ்ரவேல் புத்திரர் தங்களைத் தாங்களே குகைகளிலும் கெபிகளிலும் சிறைப்பிடித்துக்கொள்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் மலைகளிலுள்ள கெபிகளையும், குகைகளையும், அரணான ஸ்தலங்களையும் தங்களுக்கு அடைக்கலங்களாக்கிகொள்கிறார்கள் (நியா 6:2). இஸ்ரவேல் புத்திரருக்கு சரீர பெலமில்லை. அவர்களுடைய இருதயம் சத்துருக்களைப் பார்த்து நடுங்குகிறது. அவர்களுடைய ஆவி சோர்ந்து போயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணாமல், அவர்களுக்குப் பயந்து மலைகளிலுள்ள கெபிகளிலும், குகைகளிலும் ஒடி ஒளிந்துகொள்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்வதினால், அவர்களுடைய மனச்சாட்சி குற்றமுள்ளதாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியராலே மிகவும் சிறுமைப்படுகிறார்கள். இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும்போது, மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாய் எழும்பி வந்து; அவர்களுக்கு எதிரே பாளயமிறங்கி, காசாவின் எல்லைமட்டும் நிலத்தின் விளைச்சலைக் கெடுத்து, இஸ்ரவேலிலே ஆகாரத்தையாகிலும், ஆடுமாடுகள் கழுதைகளையாகிலும் வைக்காதேபோவார்கள் (நியா 6:3,4).

மீதியானியர் கானான் தேசத்திற்குள் பலமுறை பிரவேசித்து, அந்த தேசத்தின் தானியங்களைக் கொள்ளையிடுகிறார்கள். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். அந்த தேசத்தின் செழிப்பு மீதியானியருக்கு கவர்ச்சியாயிருக்கிறது. கானான் தேசத்தின் தானியங்களையும், மிருக ஜீவன்களையும் கொள்ளையிடுவதற்காக மீதியானியர் இஸ்ரவேல் தேசத்திற்கு பலமுறை வருகிறார்கள்.

மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிரே பாளயமிறங்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எங்கே குடியிருக்கிறார்களோ அங்கே மீதியானியரும் வந்து குடியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரால் அவர்களைத் துரத்த முடியவில்லை. இஸ்ரவேல் தேசத்தின் மேற்கு பகுதியிலே காசா பட்டணம் இருக்கிறது. மீதியானியர் இஸ்ரவேல் தேசத்தின் மையப்பகுதிக்கும், காசா பட்டணம் வரைக்கும் வருகிறார்கள்.

மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு எதிரே பாளயமிறங்கி தங்கியிருக்கும்போது, அவர்கள் இஸ்ரவேல் ஜனத்தார் செய்யும் எல்லா வேலைகளையும் கவனித்துப் பார்க்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் விதை விதைக்கும்போது மீதியானியர் அவர்களுக்கு ஒரு தீங்கும் செய்யமாட்டார்கள். விதை விதைப்பதற்கு அனுமதிப்பார்கள். பயிரிடுவதற்கு அனுமதிப்பார்கள். பயிர்களுக்கு நீர்ப்பாய்ச்சி அதை பராமரித்து வளர்ப்பதற்கும் அனுமதிப்பார்கள்.

இஸ்ரவேல் தேசத்தாருக்கு அறுவடை காலம் வரும்போது மீதியானியரும், அமலேக்கியரும், கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாக எழும்பி வருவார்கள். அவர்களுக்கு எதிரே பாளமிறங்கி அவர்களுடைய நிலத்தின் விளைச்சலை அறுவடை செய்து கொண்டுபோய்விடுவார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு ஆகாரமில்லாதவாறு எல்லா தானியங்களையும், ஆகாரங்களையும் மீதியானியர் கொள்ளையிட்டுக் கொண்டுபோய்விடுவார்கள். கானான் தேசத்திலுள்ள ஆடுமாடுகளையும், கழுதைகளையும் தங்களோடு கூட்டிக்கொண்டு போய்விடுவார்கள்.

மீதியானியர் தங்கள் மிருகஜீவன்களோடும், தங்கள் கூடாரங்களோடும், வெட்டுக்கிளிகளைப்போல் திரளாய் வருவார்கள்; அவர்களும் அவர்கள் ஒட்டகங்களும் எண்ணிமுடியாததாயிருக்கும்; இந்தப்பிரகாரமாக மீதியானியர் இஸ்ரவேல் தேசத்தைக் கெடுத்துவிட அதிலே வருவார்கள் (நியா 6:5).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ததினால், கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. கர்த்தர் தாமே இஸ்ரவேல் புத்திரரை மீதியானியர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பாவத்தினிமித்தமாய், கர்த்தர் தம்முடைய நீதியினால் அவர்களைத் தண்டிக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்து அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தைவிட்டு விலகிப்போகும்போது, கர்த்தரோடுகூட அவருடைய தெய்வீக பாதுகாப்பும், பராமரிப்பும், ஆசீர்வாதங்களும் புறப்பட்டுப்போய்விடுகிறது.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தர் அவர்களைவிட்டு விலகிப்போகிறார். இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கர்த்தருடைய தெய்வீக பாதுகாப்பு கிடைக்கவில்லை. இதனால் சத்துருக்கள் எந்தவிதமான தடையும், எதிர்ப்பும் இல்லாமல் இஸ்ரவேல் தேசத்திற்குள்ளே பிரவேசிக்கிறார்கள். இஸ்ரவேல் ஜனங்களுக்கு தீங்குகளும், பாடுகளும் வேதனைகளும் உண்டாயிற்று.

இஸ்ரவேலர் மீதியானியராலே மிகவும் சிறுமைப்படுகிறார்கள். அப்போது இஸ்ரவேலருக்கு புத்தி தெளிகிறது. கர்த்தருடைய கரம் தங்களுக்கு ஆதரவாக இல்லையென்பதையும், கர்த்தர் தங்களுக்கு விரோதமாக கிரியை செய்கிறார் என்பதையும் இஸ்ரவேல் ஜனத்தார் புரிந்துகொள்கிறார்கள். இதைப் புரிந்துகொள்வதற்கு இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஏழுவருஷமாயிற்று.

மீதியானியர் இஸ்ரவேல் புத்திரரை ஏழு வருஷமாக ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரும் மீதியானியராலே ஏழு வருஷம் மிகவும் சிறுமைப்படுகிறார்கள். தங்களுக்கு கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும், அநுக்கிரகமும் இருந்தால் மாத்திரமே, தங்களுக்கு சத்துருக்களிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்பதை இஸ்ரவேல் ஜனத்தார் உணர்ந்துகொள்கிறார்கள். கர்த்தரே தங்களை மீதியானியர் கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார் என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் புரிந்துகொள்கிறார்கள்.

தாங்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்ததினால், கர்த்தருடைய கோபம் தங்கள்மேல் திரும்பியிருக்கிறது என்பதை உணர்ந்து, இஸ்ரவேல் புத்திரர் மனந்திரும்பி, கர்த்தருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் அவரிடத்தில் கெஞ்சி மன்றாடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள்.

ஒரு தீர்க்கதரிசி
நியா 6:7-10

நியா 6:7. இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிட்ட போது,

நியா 6:8. கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்பினார்; அவன் அவர்களை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நான் உங்களை எகிப்திலிருந்து வரவும், அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவும் செய்து,

நியா 6:9. எகிப்தியர் கையினின்றும், உங்களை ஒடுக்கின யாவருடைய கையினின்றும் உங்களை இரட்சித்து, அவர்களை உங்களுக்கு முன்பாகத் துரத்தி, அவர்கள் தேசத்தை உங்களுக்குக் கொடுத்து,

நியா 6:10. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றும், நீங்கள் குடியிருக்கும் அவர்கள் தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றும், உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ என் சொல்லைக் கேளாதேபோனீர்கள் என்கிறார் என்று சொன்னான்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய முறையீடுகளுக்கு செவிகொடுக்கிறார். அவர்களுடைய வேண்டுதல்களையும் விண்ணப்பங்களையும் கர்த்தர் கவனித்துக் கேட்கிறார். இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்தார்கள். இப்போதோ அவர்கள் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை மன்னிக்கிறார். நாம் கர்த்தருடைய சமுகத்திலே நம்முடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, மனம் வருந்தி, மனத்தாழ்மையோடு வரும்போது, கர்த்தர் நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு ஆயத்தமாயிருக்கிறார். நம்மை மன்னிக்கக்கூடாதபடிக்கு கர்த்தருடைய கிருபை ஒருபோதும் குறைந்துபோவதில்லை.

இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் தம்மை நோக்கி முறையிடும்போது, கர்த்தர் அவர்களுக்கு தம்முடைய இரக்கத்தைக் காண்பிக்கிறார். கர்த்தருடைய இரக்கம் மிகப்பெரியது. கர்த்தர் தம்முடைய இரக்கத்தை காலதாமதம் பண்ணாமல், உடனே வெளிப்படுத்துகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மீட்பதற்கு ஒரு இரட்சகரை எழுப்புவதற்கு முன்பாக, அவர்களுடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்துவதற்கு ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்புகிறார். கர்த்தருடைய தீர்க்கதரிசியானவர் இஸ்ரவேல் புத்திரருக்கு, அவர்களுடைய பாவங்களைக் குறித்து கண்டித்து உணர்த்தவேண்டும். அவர்களை மனந்திரும்புதலுக்கு வழிநடத்தவேண்டும். இஸ்ரவேல் ஜனத்தை சுத்த இருதயத்தோடு கர்த்தரிடத்தில் திரும்ப அழைத்து வரவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவத்திற்காக மனம் வருந்தி கர்த்தரிடத்தில் முறையிடவில்லை. அவர்கள் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். மீதியானியர் இஸ்ரவேல் புத்திரரை அதிகமாய் ஒடுக்குகிறார்கள். மீதியானியராலே இஸ்ரவேலர் மிகவும் சிறுமைப்படுகிறார்கள். இதன் நிமித்தமாகவே இஸ்ரவேலர் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள்.

கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்புகிறார். தீர்க்கதரிசியானவர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை அவர்களுக்கு கண்டித்து உணர்த்துவார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை நோக்கி முறையிடும்போது தங்களுடைய பாவங்களுக்காக மனம் வருந்தி, அவற்றை கர்த்தருடைய சமுகத்தில் அறிக்கை செய்வார்கள். தங்களுடைய பாவங்களினிமித்தமாய் அவர்கள் வெட்கப்படுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் கர்த்தரை நோக்கி முறையிடுவதற்கு பதிலாக, தங்களுடைய பாவங்களினிமித்தம் கர்த்தருடைய சமுகத்திலே அழுது புலம்புவார்கள்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாகவும், தெய்வீக திட்டத்தின் பிரகாரமாகவும் கிரியை நடப்பிக்கிறார். கர்த்தர் நமக்கு தம்முடைய கிருபைகளை வெளிப்படுத்துகிறார். நாம் கர்த்தருடைய கிருபைகளையும் இரக்கங்களையும் பெற்றுக்கொள்வதற்கு முன்பாக, கர்த்தர் தமது கிருபையினால், அவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு, நம்மை ஆயத்தப்படுத்துகிறார். கர்த்தருடைய கிருபையில்லாமல் நம்மால் அவருடைய இரக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது.

கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே அனுப்புவது அவருடைய கிருபையை வெளிப்படுத்துகிறது. ஒரு தேசத்தில் கர்த்தருக்கு உண்மையாய் ஊழியம் செய்கிறவர்கள் ஏராளமானோர் இருப்பது கர்த்தருடைய சுத்த கிருபை. கர்த்தர் அந்த தேசத்தாருக்கு தம்முடைய கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்துகிறார் என்பதற்கு இது அடையாளம்.

கர்த்தர் அனுப்புகிற தீர்க்கதரிசி, கர்த்தருடைய நாமத்தினாலே, கர்த்தருடைய செய்தியை சொல்லுகிறார். தீர்க்கதரிசி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தினாலே பேசுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே அநேக நன்மைகளை செய்திருக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொண்டார். "நான் உங்களை எகிப்திலிருந்து வரவும், அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவும் செய்தேன்" (நியா 6:8) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுக்கொள்ளவில்லையென்றால், அவர்கள் எகிப்தின் பஞ்சத்திலும் அடிமைத்தனத்திலும் தொடர்ந்து தங்கியிருக்க வேண்டியதுவரும். அவர்களுக்கு நித்திய அடிமைத்தனம் உண்டாகும்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தியர் கையினின்றும், அவர்களை ஒடுக்கின யாவருடைய கையினின்றும் இரட்சித்தார். எகிப்தியரின் கையினின்று தம்முடைய ஜனத்தை இரட்சித்த கர்த்தர், இப்போது இஸ்ரவேல் புத்திரரை மீதியானியருடைய கையின்றும் இரட்சிப்பார். கர்த்தருடைய வல்லமை ஒருபோதும் குறைந்துபோவதில்லை.

கர்த்தர் எகிப்தியரையும், இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கின யாவரையும் அவர்களுக்கு முன்பாகத் துரத்தினார். அதுபோலவே கர்த்தர் இப்போது மீதியானியரை இஸ்ரவேல் புத்திரரின் கண்களுக்கு முன்பாக துரத்துவார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்தார். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற நலமான தேசம். இஸ்ரவேல் புத்திரர் அமைதலான கானான் தேசத்தை சுதந்தரித்து, அங்கே ஆறுதலாக வாசம்பண்ணினார்கள்.

ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர், கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்து, அவருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். அவர்களுடைய பாவத்தினால் கர்த்தருடைய கோபம் அவர்கள்மீது வருகிறது. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுக்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக, கர்த்தர் அவர்களை தம்முடைய நீதியினால் நியாயந்தீர்க்கிறார். இப்போது இஸ்ரவேலர் மீதியானியராலே மிகவும் சிறுமைப்படுகிறார்கள்.

தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேலின் தேவனாகயிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தருடைய இஸ்ரவேலாயிருக்கிறார்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் எமோரியருடைய தேவர்களுக்கு பயப்படவேண்டியதில்லை. "நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றும், நீங்கள் குடியிருக்கும் அவர்கள் தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள்" (நியா 6:10) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு சொல்லுகிறார்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தருடைய சொல்லைக் கேளாதே போகிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள்.

கிதியோன்
நியா 6:11-24

நியா 6:11. அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலி மரத்தின்கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது அவனுடைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான்.

நியா 6:12. கர்த்தருடைய தூதனானவர் அவனுக்குத் தரிசனமாகி: பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார் என்றார்.

நியா 6:13. அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி: ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே என்றான்.

நியா 6:14. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கிப் பார்த்து: உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா என்றார்.

நியா 6:15. அதற்கு அவன்: ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான்.

நியா 6:16. அதற்குக் கர்த்தர்: நான் உன்னோடே கூட இருப்பேன்; ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறியஅடிப்பாய் என்றார்.

நியா 6:17. அப்பொழுது அவன்: உம்முடைய கண்களில் இப்பொழுதும் எனக்குத் தயை கிடைத்ததானால் என்னோடே பேசுகிறவர் தேவரீர்தான் என்று எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்ட வேண்டும்.

நியா 6:18. நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டுவந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும், இவ்விடம் விட்டுப் போகாதிருப்பீராக என்றான்; அதற்கு அவர்: நீ திரும்பிவருமட்டும் நான் இருப்பேன் என்றார்.

நியா 6:19. உடனே கிதியோன் உள்ளே போய், ஒரு வெள்ளாட்டுக்குட்டியையும் ஒரு மரக்கால் மாவிலே புளிப்பில்லாத அப்பங்களையும் ஆயத்தப்படுத்தி, இறைச்சியை ஒரு கூடையில் வைத்து, ஆணத்தை ஒரு கிண்ணத்தில் வார்த்து, அதை வெளியே கர்வாலி மரத்தின் கீழிலிருக்கிற அவரிடத்தில் கொண்டுவந்து வைத்தான்.

நியா 6:20. அப்பொழுது தேவனுடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து, இந்தக் கற்பாறையின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று என்றார்; அவன் அப்படியே செய்தான்.

நியா 6:21. அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார்.

நியா 6:22. அப்பொழுது கிதியோன், அவர் கர்த்தருடைய தூதன் என்று கண்டு: ஐயோ, கர்த்தரான ஆண்டவரே, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க் கண்டேனே என்றான்.

நியா 6:23. அதற்குக் கர்த்தர்: உனக்குச் சமாதானம்; பயப்படாதே, நீ சாவதில்லை என்று சொன்னார்.

நியா 6:24. அங்கே கிதியோன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதற்கு யெகோவா ஷாலோம் என்று பேரிட்டான்; அது இந்நாள்வரைக்கும் அபியேஸ்ரியரின் ஊராகிய ஒப்ராவில் இருக்கிறது.

கர்த்தர் அனுப்பின தீர்க்கதரிசி, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருடைய வார்த்தைகளை அறிவித்தார். தீர்க்கதரிசியின் பிரசங்கச் செய்தியின் மூலமாக எப்படிப்பட்ட எழுப்புதல் உண்டாயிற்று என்று இந்த வசனப்பகுதியில் சொல்லப்படவில்லை.

கர்த்தருடைய வசனம் பிரசங்கிக்கப்படும்போது, அது ஒருபோதும் வீணாய்ப்போவதில்லை. கர்த்தருடைய வார்த்தை ஜீவனுள்ளது. கர்த்தர் அனுப்பின தீர்க்கதரிசிக்கு இஸ்ரவேல் புத்திரரில் சிலர் செவிகொடுத்திருப்பதற்கு வாய்ப்புள்ளது. கர்த்தருடைய வார்த்தை அவர்களுடைய இருதயத்திலும், மனச்சாட்சியிலும் பேசும்போது, அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருப்பார்கள். அவர்களுடைய இருதயம் புதுப்பிக்கப்பட்டிருக்கும்.

கர்த்தர் அனுப்பின தீர்க்கதரிசி, கர்த்தருடைய வார்த்தைகளை இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கிறார். இந்த சம்பவத்தை தொடர்ந்து கர்த்தருடைய தூதனானவர் கிதியோனை சந்திக்கும் சம்பவம் எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரருக்கு மீட்பு சமீபமாயிற்று. கிதியோன் இஸ்ரவேல் புத்திரரை ஒன்றாய்க் கூட்டிச்சேர்த்து மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும்.

கிதியோன் யோவாசின் குமாரன். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கையிலிருந்து இரட்சிக்கும் ஊழியத்தை, கிதியோனிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். கிதியோனின் தகப்பனாகிய யோவாஸ், பாகாலை ஆராதிக்கிறவர். யோவாசோடு சேர்ந்து அவருடைய குடும்பத்தாரும் பாகாலை ஆராதிக்கிறார்கள். யோவாசின் வீட்டிலேயே பாகாலுக்கு ஒரு பலிபீடம் இருக்கிறது.

கிதியோன் யோவாசின் மகனாகயிருந்தாலும், அவர் தன் தகப்பனாருடைய விக்கிரகாராதனையை அங்கீகரிக்கவில்லை. தன்னால் முடிந்த வரையிலும், கிதியோன் தன் வீட்டிலே, விக்கிரகாராதனைக்கு எதிர்த்து நிற்கிறார். ஆனாலும் கிதியோனின் வார்த்தைக்கு, அவருடைய தகப்பனாரோ அல்லது அவருடைய குடும்பத்தாரோ செவிகொடுக்கவில்லை. கிதியோன் தன் தகப்பன் வீட்டிலே, எல்லாரிலும் சிறியவராயிருக்கிறார் (நியா 6:15).

கிதியோன் மனாசேயின் பாதிக்கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர்களுடைய சுதந்தரம் கானான் தேசத்திலிருக்கிறது. இவர் அபியேஸ்ரியரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

"அபியேசரின் புத்திரரும், ஏலேக்கின் புத்திரரும், அஸ்ரியேலின் புத்திரரும், செகேமின் புத்திரரும், எப்பேரின் புத்திரரும், செமீதாவின் புத்திரருமான மனாசேயினுடைய மற்றக் குமாரரின் புத்திரராகிய அபியேசரின் வம்சங்களுக்குத் தக்க சுதந்தரம் கொடுக்கப்பட்டது. தங்கள் வம்சங்களுக்குள்ளே அவர்களே யோசேப்புடைய குமாரனாகிய மனாசேயின் ஆண்பிள்ளைகளாயிருந்தார்கள்" (யோசு 17:2).

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனை சந்திக்க வருகிறார். இவர் யெகோவா என்று அழைக்கப்படுகிறார். யூதர்கள் யெகோவா என்னும் பெயரை உச்சரிக்கவில்லை. பழைய ஏற்பாட்டில் கர்த்தர் தம்மை, கர்த்தருடைய தூதனானவராகவும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலிமரத்தின்கீழ் உட்காருகிறார்; அப்பொழுது யோவாசின் குமாரனாகிய கிதியோன் கோதுமையை மீதினானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடிக்கிறார் (நியா 6:11).

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனிடம் அன்பாகவும் ஆறுதலாகவும் பேசுகிறார். "நான் உன்னோடே கூடயிருப்பேன்" (நியா 6:14,16) என்று கர்த்தர் கிதியோனுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தெய்வீக வெளிப்பாடு கிதியோனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கிதியோன் ஆலைக்கு சமீபமாக போரடித்துக்கொண்டிருக்கிறார். கிதியோனோடு கூட யாருமில்லை. அவர் தனிமையிலிருக்கிறார். நாம் இந்த உலகப்பிரகாரமான அலுவல்களை விட்டு விலகி, கர்த்தருடைய சமுகத்தில் தனிமையில் காத்திருக்கும்போது, கர்த்தர் தம்மை நமக்கு வெளிப்படுத்துகிறார்.

கிதியோன் கோதுமையை ஆலைக்கு சமீபமாக ஒரு கோலால் போரடித்துக் கொண்டிருக்கிறார். போரடிக்க வேண்டிய தானியம் கொஞ்சமாயிருக்கிறது. ஆகையினால் கோதுமையைப் போரடிப்பதற்கு கிதியோன் மாடுகளைப் பயன்படுத்தவில்லை. அந்த அளவுக்கு அவரிடத்தில் கோதுமையில்லை.

கிதியோன் இப்போது கோதுமையைப் போரடித்துக்கொண்டிருந்தாலும், கர்த்தர் அவருக்கு உன்னதமான ஊழியத்தை நியமித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் கடலிலே மீன்களைப் பிடிக்கிற மீனவர்களாயிருந்தார்கள். கிறிஸ்துவானவர் அவர்களை மனுஷரைப் பிடிக்கிறவர்களாக்கினார்.

கிதியோன் இப்போது கோதுமையைப் போரடித்துக்கொண்டிருக்கிறார். கர்த்தர் கிதியோனை தம்முடைய ஊழியத்திற்கு அழைக்கிறார். கிதியோன் கோதுமையைப் போரடிப்பதுபோல, மீதியானியரை போரடிக்கவேண்டும்.

"இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்" (ஏசா 41:15).

கிதியோன் கோதுமையைப் போரடிக்கும்போது, அதை மீதியானியரின் கைக்கு தப்புவிக்கிறதற்காக, ஆலைக்கு சமீபமாய் போரடிக்கிறார். கிதியோன் போரடிக்கும் களத்திலே கோதுமையைப் போரடிக்கவில்லை. பொதுவாக விவசாயம் பண்ணுகிறவர்கள் களத்திலே தானியத்தைப் போரடிப்பது வழக்கம்.

ஆனால் கிதியோனோ கோதுமையை, திராட்ச ரசத்தை ஆட்டுகிற ஆலைக்கு சமீபமாக போரடிக்கிறார். திராட்சரச ஆலை தோட்டத்தின் ஒரு மூலையிலிருக்கும். அது ஜனங்களுடைய கண்களுக்கு மறைவாயிருக்கும். கிதியோன் மீதியானியருக்கு பயப்படுகிறார். கோதுமையை களத்திலே போரடித்தால் மீதியானியர் அதைக் கண்டுபிடித்து விடுவார்கள். மீதியானியரின் கைக்கு கோதுமையை தப்புவிக்கிறதற்காக, கிதியோன் ஆலைக்கு சமீபமாய் போரடிக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவருக்கும் கிதியோனுக்கும் இடையே சம்பாஷணை நடைபெறுகிறது. கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்குத் தரிசனமாகி: "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்று சொல்லுகிறார் (நியா 6:12).

கர்த்தருடைய தூதனானவர் தன்னோடு பேசிக்கொண்டிருக்கும் வரையிலும், அவர் கர்த்தருடைய தூதனானவர் என்று கிதியோனுக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை. அவர் தன்னைவிட்டுப் புறப்பட்டுப்போன பின்புதான், தன்னோடு பேசினவர் கர்த்தருடைய தூதனானவர் என்பதை கிதியோன் அறிந்துகொள்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, இதுவரையிலும், கர்த்தர் அனுப்பின தீர்க்கதரிசியானவர் ஊழியம் செய்து வந்தார். ஆனால் இப்போதோ கர்த்தருடைய தூதனானவரே கிதியோனை சந்திப்பதற்கு நேரடியாக வந்திருக்கிறார். தன்னோடு பேசுவது கர்த்தர் அனுப்பின மற்றொரு தீர்க்கதரிசி என்று கிதியோன் நினைத்திருக்கலாம்.

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு மதிப்பு கொடுத்து, அவரை, "பராக்கிரமசாலியே" என்று அழைக்கிறார். மேலும் "கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்றும் அவருக்கு ஆறுதலான செய்தியைச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் பேசும்போது, அவருடைய பேச்சில் உறுதியிருக்கிறது. அவர் கிதியோனுக்கு ஊழியப்பொறுப்பைக் கட்டளையிடுகிறார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு ஊழியத்தைக் கொடுக்கும்போது, அந்த ஊழியத்தை செய்வதற்கு அவர்களை தகுதிப்படுத்தவும் செய்கிறார்.

கர்த்தருடைய ஊழியத்தை செய்கிறவர்களுக்கு, அவருடைய கிருபை அவர்களோடே கூடயிருக்கும். கர்த்தருடைய பிரசன்னமும் அவர்களோடு கூடயிருக்கும். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக யாரும் எழும்பி நம்மை ஜெயிக்க முடியாது.

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு சந்தோஷமான செய்தியைச் சொன்னாலும், கிதியோனுடைய இருதயத்தில் வருத்தமும், வேதனையும், சோகமும் நிரம்பியிருக்கிறது.

கிதியோன் கர்த்தருடைய தூதனானவரை நோக்கி: "ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்?" என்று கேட்கிறார். கிதியோன் மேலும், "கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?" என்றும் கர்த்தருடைய தூதனானவரிடத்தில் கேட்கிறார்.

கிதியோன் கர்த்தருடைய தூதனானவரிடம் இஸ்ரவேல் புத்திரர் அனுபவிக்கும் வேதனைகளை எடுத்துச் சொல்லிவிட்டு, "இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே" (நியா 6:13) என்றும் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனிடம் "கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" என்று அவருக்கு தனிப்பட்ட முறையில் சொன்னார். கிதியோனோ தன்னை நேசிப்பதுபோல, இஸ்ரவேல் ஜனத்தாரையும் நேசிக்கிறார். கிதியோன் கர்த்தருடைய தூதனானவருக்கு மறுமொழி சொல்லும்போது, "கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்" என்று இஸ்ரவேல் ஜனத்தார் எல்லோரையும் குறிக்கும் வண்ணமாக பொதுவாக பேசுகிறார்.

கிதியோன் தனக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னோடு ஆயிரக்கணக்கான இஸ்ரவேல் புத்திரரையும் சேர்த்துக்கொள்கிறார். கர்த்தருடைய கிருபையானது தனக்கு மாத்திரம் உரியது என்று கிதியோன் சொந்தம் கொண்டாடவில்லை. கர்த்தருடைய கிருபை இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் பொதுவானது. கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தர் நம்மை நேசிப்பதுபோலவே, தம்முடைய பிள்ளைகள் எல்லோரையும் நேசிக்கிறார்.

கிதியோன் ஒரு பராக்கிரமசாலி. ஆனால் அவர் விசுவாசத்தில் பலவீனமாயிருக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு அழைத்துக்கொண்டு வந்தபோது, அநேக அற்புதங்களையும் அடையாளங்களையும் நடப்பித்தார். அப்படிப்பட்ட அற்புதங்கள் எதுவும், கிதியோனுடைய காலத்திலே, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே நடைபெறவில்லை.

கிதியோன் கர்த்தருடைய தூதனானவரிடம், "அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே" என்று கேட்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து விடுவித்து, அவர்களை வழிநடத்தினார். அவர்களை ஒரு தேசமாக உருவாக்கினார். இஸ்ரவேல் தேசத்தாரின் சரித்திரத்திலே இது ஆரம்ப காலம். கர்த்தர் ஆரம்ப காலத்தில் செய்த அற்புதங்களை, எல்லா காலத்திலும் மறுபடியும் மறுபடியுமாக, திரும்ப திரும்ப செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது.

கர்த்தர் அநேக அற்புதங்களை செய்து இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து விடுவித்து, கானான் தேசத்திற்கு வழிநடத்தி கொண்டு வந்தார். இப்போது இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே தங்களுடைய பங்குவீதங்களை சுதந்தரித்து அங்கே குடியிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அதற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும்.

இஸ்ரவேல் தேசத்தாருடைய சரித்திரத்திலே, அவர்கள் இப்போது ஆரம்ப நிலமையில் இல்லை. அவர்கள் உறுதியாக ஸ்தாபிக்கப்பட்டு வளர்ந்த நிலமையிலிருக்கிறார்கள்.

ஆகையினால் கர்த்தர் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து கொண்டு வந்தபோது செய்த அற்புதங்களை, இப்போது இங்கே மறுபடியும் செய்ய வேண்டியதில்லை என்று சித்தங்கொண்டிருக்கிறார். அற்புதங்கள் நடைபெறவில்லையென்றாலும், கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், அவருடைய பரிசுத்த பிரசன்னமும் இஸ்ரவேல் புத்திரரோடு எப்போதும் கூடவே இருக்கிறது.

இஸ்ரவேல் ஜனங்கள் எகிப்து தேசத்திலிருந்து கானான் தேசத்திற்கு பிரயாணம் பண்ணிய போது கர்த்தரோடு நெருங்கிய ஐக்கியத்திலிருந்தார்கள். அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து நடந்தார்கள். அவர்கள் ஒவ்வொரு நாளும் கர்த்தருடைய கிருபையையும், வழிநடத்துதலையும் எதிர்பார்த்தார்கள். கிதியோனின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகி பாகாலைப் பின்பற்றிப்போகிறார்கள். கர்த்தரை விட்டு விலகிப்போகிறார்கள்.

நாம் கர்த்தரைவிட்டு விலகிப்போனால் கர்த்தரும் நம்மைவிட்டு விலகிப்போய்விடுவார். நாம் கர்த்தரோடு ஐக்கியமாயிராமல், கர்த்தரை ஆராதியாமல், அந்நிய தெய்வங்களை ஆராதித்துக்கொண்டிருக்கும்போது, கர்த்தர் நமக்கு அற்புதங்களை செய்வார் என்று எதிர்பார்க்க முடியாது. கிதியோனின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் பாகாலை ஆராதித்து கர்த்தருக்கு விரோதமாகக் கலகம்பண்ணுகிறார்கள். அவர்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். ஆகையினால் கர்த்தர் அவர்களை மீதியானியரின் கையிலே ஒப்புக்கொடுத்துவிடுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனுக்கு நேர்த்தியான பிரதியுத்தரம் சொல்லுகிறார் (நியா 6:14). இந்த வசனத்தில் கர்த்தருடைய தூதனானவர், "கர்த்தர்" என்று அழைக்கப்படுகிறார். கர்த்தர் கிதியோனுக்கு, இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும் ஊழியத்தைக் கொடுக்கிறார். இந்த ஊழியத்தில் கிதியோனுக்கு ஜெயம் கிடைக்கும் என்னும் நிச்சயத்தையும் கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

கர்த்தரே கிதியோனை அனுப்புகிறார். "உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா" என்று கர்த்தர் கிதியோனுக்கு உற்சாகமான வார்த்தையைச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர், "கர்த்தர்" என்று அழைக்கப்படுவதினால், அவர் ஒரு தூதனைப்போல பேசாமல், அதிகாரமுள்ளவராகப் பேசுகிறார். கர்த்தர் கிதியோனை நோக்கிப் பார்க்கிறார். இது சாதாரணமான பார்வையல்ல. கர்த்தர் தம்முடைய பார்வையினாலேயே பேசுகிறவர். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சீமோனை நோக்கிப் பார்த்ததுபோல, கர்த்தர் இங்கே கிதியோனை நோக்கிப் பார்க்கிறார்.

"அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து, வெளியேபோய், மனங்கசந்து அழுதான்" (லூக் 22:61,62).

கர்த்தருடைய பார்வை வல்லமையுள்ளது. அவருடைய பார்வையே வார்த்தையாயிருக்கிறது. கர்த்தருடைய பார்வை கிதியோனுடைய இருதயத்தில் பேசுகிறது. அது கிதியோனுக்கு புதிய ஜீவனையும், புதிய வெளிப்பாடுகளையும் கொடுக்கிறது. கிதியோன் கர்த்தருடைய தூதனானவரிடத்தில், தன்னுடைய மனதிலுள்ள சந்தேகங்களையெல்லாம் சொல்கிறார். கர்த்தரோ கிதியோனுக்கு வார்த்தைகளால் பிரதியுத்தரம் சொல்லாமல், கிதியோனை நோக்கிப் பார்க்கிறார். கர்த்தருடைய பார்வை கிதியோனுடைய சந்தேகத்தை தீர்த்து வைக்கிறது.

கர்த்தர் கிதியோனுக்கு ஊழியப்பொறுப்பைக் கொடுக்கிறார். கிதியோன் இஸ்ரவேலை இரட்சிக்கும் இரட்சகராக ஊழியம் செய்யவேண்டும். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் நோக்கிப் பார்க்கிறார். அவர்களில் கர்த்தர் கிதியோனை தேர்ந்தெடுத்து, அவருக்கு இஸ்ரவேலை இரட்சிக்கும் ஊழியத்தைக் கொடுக்கிறார்.

கிதியோனிடத்தில் விசேஷித்த பராக்கிரமம் இருக்கிறது. அது கிதியோனுக்கே தெரியவில்லை. கர்த்தருடைய தூதனானவர் கிதியோனைப் பார்த்தவுடனேயே, "பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (நியா 6:12) என்று சொல்கிறார். கிதியோனிடத்தில் இருக்கிற பராக்கிரமத்தையும் பலத்தையும் கர்த்தர் இங்கே உறுதிபண்ணுகிறார். "உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ" (நியா 6:14) என்று கர்த்தர் கிதியோனுக்கு கட்டளை கொடுக்கிறார்.

கிதியோனுடைய பலமும் பராக்கிரமமும் கோதுமையை போரடிப்பதற்கு போதுமானதாயிருக்கிறது. கிதியோன் இந்தப் பலத்தையும் பராக்கிரமத்தையும் மீதியானியரை முறியடிப்பதற்கு பயன்படுத்தவேண்டும். இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பதற்கு பயன்படுத்த வேண்டும். கிதியோன் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, புறப்பட்டுப்போகும்போது, கர்த்தர் கிதியோனை மனுஷரைப் போரடிக்கிறவராக மாற்றுவார்.

கிதியோன் தன்னுடைய பலத்தினால் புறப்பட்டுப்போகக்கூடாது. கர்த்தர் இப்போது கிதியோனுக்கு புதிய பலத்தையும், புதிய பராக்கிரமத்தையும் கொடுத்திருக்கிறார். கிதியோன் கர்த்தர் தனக்குக் கொடுத்த பலத்தோடு புறப்பட்டுப்போகவேண்டும். கர்த்தருடைய பலத்தினால் கிதியோன் தன்னை திடப்படுத்திக்கொள்ளவேண்டும்.

கர்த்தர் கிதியோனை அனுப்பும்போதே, "நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்" என்று வாக்குத்தத்தமும் சொல்லுகிறார். கிதியோனுடைய முயற்சியில் ஜெயமுண்டாகும். இஸ்ரவேலுக்கு இரட்சிப்பு உண்டாவதை கிதியோன் தன்னுடைய கண்களால் பார்ப்பார். கிதியோன் ஒரு பார்வையாளராக மாத்திரமல்ல, இஸ்ரவேலின் இரட்சிப்பிலே கர்த்தருடைய கருவியாகவும் கிரியை நடப்பிப்பார்.

கிதியோன் கர்த்தருடைய தூதனானவரிடத்தில், "கர்த்தர் எங்களை எகிப்திலிருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச்சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே?" (நியா 6:13) என்று கேட்டார். கிதியோன் கர்த்தர் தனக்குக் கொடுத்த இந்தப் பலத்தோடே புறப்பட்டுப்போகும்போது, தங்களுடைய பிதாக்கள் தங்களுக்கு விவரித்துச் சொன்ன கர்த்தருடைய அற்புதத்தைக் காண்பார். கிதியோனுடைய ஆவி உற்சாகமாயிருக்கிறது. கர்த்தர் தனக்குக் கொடுத்திருக்கிற அந்தப் பலத்தை கிதியோன் அனுபவிக்கிறார். அது அவருக்கு அற்புதமாயும் ஆச்சரியமாயும் இருக்கிறது.

கர்த்தர் கிதியோனைப் பலப்படுத்தினாலும் அவருக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொன்னாலும், கிதியோன் கர்த்தருக்கு முன்பாக தன்னை இலகுவாகத் தாழ்த்துகிறார். கிதியோன் கர்த்தரிடத்தில் மிகுந்த மனத்தாழ்மையோடு, "ஆ என் ஆண்டவரே, நான் இஸ்ரவேலை எதினாலே ரட்சிப்பேன்; இதோ, மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது; என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்" (நியா 6:15) என்று சொல்லுகிறார்.

கிதியோன் கர்த்தரிடத்தில் இவ்வாறு சொல்லுவதினால், அவர் கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும், அவருடைய வல்லமையையும் நம்பவில்லையோ என்னும் சந்தேகம் உண்டாகிறது. கிதியோன் கர்த்தரை சந்தேகப்படவில்லை. கர்த்தர் கிதியோனிடத்தில், "உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ" என்று கட்டளையிடும்போது, தான் போய், என்னென்ன காரியங்களை செய்யவேண்டும் என்பதையும் கிதியோன் கர்த்தரிடத்தில் அறிந்துகொள்ள விரும்புகிறார்.

கிதியோன் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் கிரியை செய்தால் மாத்திரமே, அவரால் இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க முடியும். கிதியோன் தன்னுடைய சுயசித்தத்தின் பிரகாரமாகவோ அல்லது சுயவிருப்பத்தின் பிரகாரமாகவோ கிரியை செய்தால், கிதியோனால் இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கைக்கு இரட்சிக்க முடியாது. ஆகையினால் கர்த்தர் தாமே தன்னை சரியான பாதையிலே கரம் பிடித்து வழிநடத்தவேண்டுமென்று கிதியோன் கர்த்தரிடத்தில் பணிவாக விண்ணப்பம்பண்ணுகிறார்.

கிதியோனுடைய வார்த்தைகள் அவருடைய மனத்தாழ்மைக்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது. கிதியோன் தன்னைத்தானே வெறுமையாக்குகிறார். கர்த்தருடைய தூதனானவர் கிதியோனைப் பார்த்து, "பராக்கிரமசாலியே" என்று புகழ்ந்து சொல்கிறார். கிதியோனோ, இப்படிப்பட்ட புகழ்ச்சியான வார்த்தைகளுக்கு, தான் பாத்திரவானல்ல என்று, தன்னுடைய வார்த்தையின் மூலமாய் தன்னைத் தாழ்த்துகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் கிதியோனைப் புகழ்ந்து பேசுகிறார். கிதியோனோ தன்னைப்பற்றிச் சொல்லும்போது, தன்னுடைய குடும்பம் மனாசேயில் மிகவும் எளியது என்றும், தன்னுடைய தகப்பன் வீட்டில், தான் எல்லாரிலும் சிறியவன் என்றும் தன்னை வெகுவாக தாழ்த்திச் சொல்லுகிறார்.

கர்த்தர் கொடுக்கும் உன்னதமான ஊழியத்திற்கு தான் தகுதியானவனல்ல என்றும், கர்த்தர் தன்னைப் புகழ்ந்து பேசும் வார்த்தைகளுக்கும் தான் தகுதியானவனல்ல என்றும் கிதியோன் தன்னைத் தாழ்த்துகிறார். கர்த்தர் தாழ்மையுள்ளவர்களுக்கு கிருபையளிக்கிறார் தாழ்மையுள்ளவர்களை ஆசீர்வதிப்பது கர்த்தருக்கு பிரியமாயிருக்கிறது.

கிதியோன் தன்னை வெகுவாகத் தாழ்த்தினாலும், கர்த்தர் கிதியோனுக்கு மறுபடியுமாய் தம்முடைய வாக்குத்தத்தத்தைச் சொல்லி அவரை உற்சாகப்படுத்துகிறார். "நான் உன்னோடே கூடயிருப்பேன்" (நியா 6:16) என்று கர்த்தர் கிதியோனுக்கு வாக்குப்பண்ணுகிறார். கர்த்தர் கிதியோனோடே கூடயிருப்பதே அவருக்கு மெய்யான பலன். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக யாரும் எதிர்த்து நின்று, நம்மை மேற்கொள்ள முடியாது.

கர்த்தர் கிதியோனோடே கூடயிருந்து அவரை வழிநடத்துவார். அவரை பலப்படுத்துவார். கிதியோன் மீதியானியரை எளிதாக முறியடிப்பார். "ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறியஅடிப்பாய்" என்று கர்த்தர் கிதியோனுக்கு வாக்குப்பண்ணுகிறார். மீதியானியர் ஆயிரம் பேராயிருந்தாலும், கிதியோன் அவர்களெல்லோரையும் ஒரு மனிதனை சங்காரம்பண்ணுவதுபோல சங்காரம்பண்ணுவார்.

கிதியோன் தன்னுடைய விசுவாசத்தை உறுதிபண்ண விரும்புகிறார். கர்த்தர் கிதியோனை இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கும் ஊழியத்திற்கு அனுப்புகிறார். ஆனாலும் தனக்கு கட்டளை கொடுக்கிறவர் கர்த்தர் தானா என்பதை கிதியோன் உறுதிபண்ணிக்கொள்ள விரும்புகிறார். அவர் கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை எதிர்பார்க்கிறார்.

கிதியோன் பழைய ஏற்பாட்டுக்காலத்தில் வாழ்ந்தவர். அவர் கர்த்தரிடத்தில், தன்னுடைய விசுவாசத்தை உறுதிபண்ணுவதற்கு "ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டும்" என்று கேட்கிறார். புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், பரிசுத்த ஆவியானவரின் காலத்தில் ஜீவிக்கிறோம். நாம் கிதியோனைப்போல, நம்முடைய கண்களுக்கு முன்பாக அடையாளங்கள் காணப்படவேண்டுமென்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கக்கூடாது. நாம் தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடக்கவேண்டியவர்கள்.

புதிய ஏற்பாட்டுக்காலத்து விசுவாசிகளாகிய நாம், கர்த்தரிடத்தில் அடையாளத்தைக் கேட்காமல், அவரிடத்தில் பணிவோடு ஜெபம்பண்ணவேண்டும். நாமும் கிதியோனைப்போல, "கர்த்தாவே உம்முடைய கண்களில் இப்பொழுதும் தயை கிடைத்ததானால், என்னுடைய இருதயத்தில் ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டும்" என்று ஜெபம்பண்ணலாம். கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் நம்முடைய இருதயத்தில் பலத்த கிரியைகளை நடப்பித்து, நமக்குள்ளே விசுவாசத்தின் கிரியையை பூரணமாய் நிறைவேற்றுவார்.

தன்னோடு பேசுகிறவர் கர்த்தர்தான் என்பதில் கிதியோனுக்கு நிச்சயமில்லை. ஆனாலும் கிதியோன் கர்த்தரோடு இன்னும் அதிகமாய்ப் பேச விரும்புகிறார். கர்த்தரோடு நீண்டநேரம் பேசுவதற்கான வாய்ப்புக்களையும் உண்டுபண்ணுகிறார்.

கிதியோன் கர்த்தரிடத்தில், "நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டுவந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும், இவ்விடம் விட்டுப் போகாதிருப்பீராக" (நியா 6:18) என்று கேட்டுக்கொள்கிறார்.

கிதியோன் அந்நியரை உபசரிக்க விரும்புகிறார். கிதியோனோடு பேசுகிறவர் கர்த்தருடைய தூதனானவர். கர்த்தரே அவரை கிதியோனிடத்தில் அனுப்பியிருக்கிறார். அவர் கிதியோனுக்கு அந்நியராகயிருந்தாலும், கிதியோன் அவருக்கு அதிகமான மதிப்புக்களையும் மரியாதைகளையும் காண்பிக்கிறார்.

கிதியோனிடத்தில் பொருளாதார ஆசீர்வாதம் அதிகமாயில்லை. அவரிடத்தில் தானியம்கூட தாராளமாயில்லை. இஸ்ரவேலர் விதை விதைத்திருக்கும்போது, மீதியானியரும் அமலேக்கியரும், கிழக்கத்திப் புத்திரரும் அவர்களுக்கு விரோதமாக எழும்பி வருவார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய நிலத்தின் விளைச்சலை கெடுத்துப்போடுவார்கள். இஸ்ரவேலிலுள்ள ஆகாரத்தையும், ஆடுமாடுகளையும், கழுதைகளையும் தங்களோடேகூட கொண்டு போய்விடுவார்கள். இஸ்ரவேலருக்கு ஒன்றையும் மீதியாக வைத்திருக்கமாட்டார்கள். ஆகையினால் இஸ்ரவேல் தேசத்திலே பஞ்சமும் வெறுமையும் அதிகரித்திருக்கிறது.

கிதியோனிடத்தில் பொருளாதார வசதியில்லாவிட்டாலும், தானியங்கள் அதிகமாயில்லாவிட்டாலும், தன்னிடத்திலுள்ள கொஞ்சம் பொருளை கிதியோன் கர்த்தருக்கு காணிக்கையாக செலுத்த விரும்புகிறார். இந்தப் பொருட்களை மீதியானியர் களவாடிச் செல்லாமல் விட்டு விட்டுப்போய்விட்டார்கள். அந்த பொருட்களை கிதியோன் தனக்கென்று வைத்துக்கொள்ளாமல், பரலோகத்திலிருந்து வந்திருக்கிற கர்த்தருடைய தூதனானவருக்கு காணிக்கையாக செலுத்த விரும்புகிறார்.

தன்னோடே பேசுகிறவர் யார் என்பதை அறிந்துகொள்வதில் கிதியோனுக்கு ஆர்வம் அதிகமாயிருக்கிறது. கிதியோன் கர்த்தருக்கு கொண்டு வந்து கொடுக்கப்போவதை, "காணிக்கை" என்று அழைக்கிறார். கிதியோன், இந்த வாக்கியத்தில் காணிக்கை என்று சொல்லும் எபிரெய வார்த்தை, கர்த்தருக்கு செலுத்தப்படும் போஜனபலிக்கும் பயன்படுத்தப்படுகிறது.

தான் கொண்டு வந்து வைக்கும் போஜனத்தை, கர்த்தருடைய தூதனானவர், மனுஷர் சாதாரணமாக போஜனம் பண்ணுவதுபோல போஜனம்பண்ணினால், தன்னோடு பேசுகிறவர் ஒரு மனுஷன், அதாவது ஒரு தீர்க்கதரிசி என்று கிதியோன் தீர்மானம் பண்ணுவார். தன்னோடு பேசுகிறவருக்கு முன்பாக வைக்கப்படும் போஜனத்தின்மீது, அவர் ஒரு அற்புதத்தை நடப்பித்தால் அல்லது அந்தப் போஜனத்தில் ஒரு விசேஷித்த சம்பவம் ஏற்பட்டால், கிதியோன் அவரை கர்த்தருடைய தூதனானவர் என்று தீர்மானம் பண்ணுவார்.

கிதியோனுடைய விண்ணப்பத்தை கர்த்தருடைய தூதனானவர் அங்கீகரிக்கிறார். "நீ திரும்பி வருமட்டும் நான் இருப்பேன்" என்று கிதியோனிடத்தில் சொல்லுகிறார். உடனே கிதியோன் உள்ளே போய், ஒரு வெள்ளாட்டுக் குட்டியையும் ஒரு மரக்கால் மாவிலே புளிப்பில்லாத அப்பங்களையும் ஆயத்தப்படுத்துகிறார். இறைச்சியை ஒரு கூடையில் வைத்து, ஆணத்தை ஒரு கிண்ணத்தில் வார்த்து, அதை வெளியே கர்வாலி மரத்தின் கீழிலிருக்கிற அவரிடத்தில் கொண்டுவந்து வைக்கிறார் (நியா 6:19).

அப்பொழுது தேவனுடைய தூதனானவர் கிதியோனை நோக்கி: "நீ இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து, இந்தக் கற்பாறையின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று" என்று சொல்லுகிறார்; கிதியோனும் அப்படியே செய்கிறார் (நியா 6:20). கிதியோன் இறைச்சியையும் ஆணத்தையும் சுடச் சுட கொண்டு வந்திருந்தாலும், அதை கற்பாறையின்மேல் வைக்கும்போது, அது சீக்கிரத்தில் ஆறிப்போகும்.

கிதியோன் கர்த்தருடைய தூதனானவர் தனக்குச் சொன்ன பிரகாரம் செய்கிறார். கர்த்தருடைய தூதனானவர் தனக்கு ஒரு அடையாளத்தைக் காண்பிக்கப்போகிறார் என்னும் விசுவாசம் கிதியோனிடத்தில் காணப்படுகிறது.

அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொடுகிறார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்துப் போடுகிறது. கர்த்தருடைய தூதனானவர், இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் அக்கினியினால் பட்சித்து, அதை தமக்கு சுகந்த வாசனையான பலியாக மாற்றுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் கற்பாறையிலிருந்து அக்கினியை எழுப்புகிறார். இந்த அக்கினி கற்பாறையின்மேல் வைக்கப்பட்ட போஜனபலியை பட்சித்துப் போடுகிறது. கர்த்தர் கிதியோனுடைய கண்களுக்கு முன்பாக இந்த அற்புதத்தை நடப்பித்து தம்முடைய கண்களில் கிதியோனுக்கு தயை கிடைத்திருக்கிறது என்பதை உறுதிபண்ணுகிறார்.

தமக்கு படைக்கப்பட்ட காணிக்கையை கர்த்தருடைய தூதனானவர் அங்கீகரிப்பதன் மூலமாய், கிதியோனை தம்முடைய ஊழியக்காரனாக அங்கீகரிக்கிறார். அத்துடன், கர்த்தர் கிதியோனுக்கு கொடுத்த ஊழியத்தையும் உறுதிபண்ணுகிறார். இந்த சம்பவம் நடைபெற்றவுடன், கர்த்தருடைய தூதனானவர் கிதியோனின் கண்களுக்கு மறைந்துபோகிறார். அவர் அவ்விடத்தை விட்டு உடனே புறப்பட்டுப்போய்விடுகிறார்.

கிதியோனின் விசுவாசம் உறுதிபண்ணப்படுகிறது. அவருடைய மனதில் ஏற்பட்டிருந்த சந்தேகங்களெல்லாம் இந்த சம்பவத்தினால் தீர்த்து வைக்கப்படுகிறது. ஆனால், இந்த சம்பவம் நடைபெற்றவுடன் கிதியோனுடைய இருதயத்தை பயமும், நடுக்கமும், திகிலும் பிடித்துக்கொள்கிறது. கர்த்தர் கிதியோனுடைய பயத்தை நீக்கிப்போடும் வரையிலும், கிதியோன் இந்த சம்பவத்தை நினைத்து பயப்படுகிறார்.

தன்னோடு இதுவரையிலும் பேசினவர் கர்த்தருடைய தூதனானவர் என்பதை கிதியோன் இப்போது காண்கிறார். இதனால் கிதியோனுக்கு பயமுண்டாயிற்று. "ஐயோ, கர்த்தரான ஆண்டவரே, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய்க் கண்டேனே" (நியா 6:22) என்று கிதியோன் பயத்தினால் அலறுகிறார்.

தான் கர்த்தருடைய தூதனானவரை முகமுகமாய்க் கண்டதினால், தான் செத்துப்போவோமோ என்னும் பயம் கிதியோனுக்கு உண்டாயிற்று. கர்த்தர் தாமே தனக்கு கிருபையாய் இரங்கவேண்டுமாறு கிதியோன் விண்ணப்பம்பண்ணுகிறார்.

நாம் உலகப்பிரகாரமான மனுஷராயிருக்கும்போது, ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து நமக்குள் பயமுண்டாகும். உலகப்பிரகாரமான மனுஷர் ஆவிக்குரிய காரியங்களுக்கு அந்நியராயிருக்கிறார்கள். ஆகையினாலேயே அவர்களுக்கு ஆவிக்குரிய உலகத்தைப்பற்றி பயமுண்டாகிறது.

கிதியோன் ஒரு பராக்கிரமசாலியாகயிருக்கிறார். ஆனாலும் அவர் விசுவாசத்தில் பலவீனராகவே இருக்கிறார். கிதியோனுடைய சரீர பலம் இப்போது அவருக்கு உதவிசெய்யவில்லை. கிதியோன் "ஐயோ, கர்த்தராகிய ஆண்டவரே" என்று பயத்திலே அலறுகிறார்.

கிதியோன் கர்த்தருடைய தூதனைப் பார்த்து பயப்படாலும், கர்த்தர் கிதியோனுக்கு ஆறுதலான வார்த்தைகளையும், சமாதானமான வார்த்தைகளையும் சொல்லுகிறார். கர்த்தர் கிதியோனிடம், "உனக்கு சமாதானம், பயப்படாதே, நீ சாவதில்லை" (நியா 6:23) என்று சொல்லுகிறார். கற்பாறையிலிருந்து அக்கினி எழும்பி, கிதியோன் படைத்த இறைச்சியையும், புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தவுடனேயே, கர்த்தருடைய தூதனானவர், கிதியோனின் கண்களுக்கு மறைந்துபோய்விடுகிறார் (நியா 6:21).

கிதியோன் இனிமேல் தரிசித்து நடக்கக்கூடாது. அவர் விசுவாசித்து நடக்கவேண்டும். கிதியோன் கர்த்தருடைய தூதனானவரைப் பார்த்து, அதிகமாக பயப்பட்டு அலறுவதினால், கர்த்தர் மறுபடியும் கிதியோனைப் பார்த்து, "நீ சாவதில்லை" என்று சொல்லுகிறார். கர்த்தர் தனக்கு சொல்லுகிற வார்த்தைகளை கிதியோன் நம்பவேண்டும்.

கிதியோன் கர்த்தரை தரிசித்த இந்த ஸ்தலத்திலே ஒரு ஞாபக சின்னத்தை ஸ்தாபிக்கவேண்டுமென்று விரும்புகிறார். இதைப் பார்க்கும் போதெல்லாம், கர்த்தர் தனக்கு தரிசனம் கொடுத்த சம்பவம் கிதியோனுடைய நினைவில் உண்டாகும். இதற்காக கிதியோன், அங்கே கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டுகிறார். அதற்கு "யெகோவா ஷாலோம்" என்று பேரிடுகிறார்; அது இந்நாள்வரைக்கும் அபியேஸ்ரியரின் ஊராகிய ஒப்ராவில் இருக்கிறது (நியா 6:24). "யெகோவா ஷாலோம்" என்னும் பெயருக்கு "கர்த்தர் சமாதானமாயிருக்கிறார்" என்று பொருள்.

கர்த்தருடைய பெயர் கிதியோனோடு பேசுகிறது. கர்த்தர் கிதியோனுக்கு சொல்லும் வாக்கியத்தின் பொருளும், கர்த்தருடைய பெயரிலேயே இருக்கிறது. கர்த்தர் கிதியோனுக்கு சமாதானத்தை சொல்லுகிறார். "உனக்கு சமாதானம்" என்று கர்த்தர் கிதியோனுக்கு கட்டளையிடுகிறார்.

"உனக்கு சமாதானம்" என்று கர்த்தர் கிதியோனுக்கு சொல்லும்போது, கர்த்தர் கிதியோனுக்கு சமாதானத்தை அனுப்புகிறார். இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் மூலமாய் ஏராளமான பிரச்சனைகளை அனுபவித்து வருகிறார்கள். பல உபத்திரவங்களையும், பாடுகளையும், வேதனைகளையும் அனுபவிக்கிறார்கள். இவற்றிற்கு மத்தியிலே, கர்த்தர் கிதியோனுக்கும், இஸ்ரவேல் புத்திரருக்கும் சமாதானத்தை அனுப்புகிறார்.

பாகாலின் பலிபீடம்
நியா 6:25-27

நியா 6:25. அன்று ராத்திரியிலே கர்த்தர் அவனை நோக்கி: நீ உன் தகப்பனுக்கு இருக்கிற காளைகளில் ஏழு வயதான இரண்டாம் காளையைக் கொண்டுபோய், உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலி பீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருக்கிற தோப்பை வெட்டிப்போட்டு,

நியா 6:26. இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலி பீடத்தைக் கட்டி, அந்த இரண்டாம் காளையைக் கொண்டு வந்து, அதை நீ வெட்டிப்போட்ட தோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடக் கடவாய் என்றார்.

நியா 6:27. அப்பொழுது கிதியோன், தன் வேலையாட்களில் பத்துப்பேரைச் சேர்த்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்தான்; அவன் தன் தகப்பன் குடும்பத்தாருக்கும் அந்த ஊர் மனுஷருக்கும் பயப்பட்டபடியினாலே, அதைப் பகலிலே செய்யாமல், இரவிலே செய்தான்.

கர்த்தர் கிதியோனுக்கு ஊழியப்பொறுப்புக்களை ஒப்புக்கொடுக்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி உண்டாகவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை விட்டு விலகி பாகாலைப் பின்பற்றிப்போகிறார்கள். ஆவிக்குரிய மறுமலர்ச்சி கிதியோனுடைய தகப்பனின் வீட்டில் துவங்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கர்த்தர் கிதியோனுக்கு சமாதானத்தைக் கட்டளையிட்ட, அன்று ராத்திரியிலே, கர்த்தர் கிதியோனை நோக்கி "உன் தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தை தகர்த்து, அதின் அருகே இருக்கிற தோப்பை வெட்டிப்போடு" (நியா 6:25) என்று கட்டளை கொடுக்கிறார்.

கிதியோன் இப்போது கர்த்தரைப்பற்றிய நினைவில் நிரம்பியிருக்கிறார். கர்த்தர் கிதியோனிடத்தில் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் அவருடைய இருதயத்தில் ஆழமாய்ப் பதிந்திருக்கிறது. கர்த்தர் இதுவரையிலும் கிதியோனோடு, முகமுகமாக, பிரத்தியட்சமாகப் பேசினார். இப்போது ராத்திரியிலே ஒரு சொப்பனத்தின் மூலமாய் பேசுகிறார். கிதியோன் என்னென்ன காரியங்களை செய்யவேண்டுமென்றும், அதை எப்படி செய்யவேண்டுமென்றும் கர்த்தர் அவருக்கு கட்டளை கொடுக்கிறார்.

நாம் கர்த்தரை நம்மோடு கூடயிருக்குமாறு எத்தனை முறை அழைத்தாலும், அவர் நம்மோடு கூடயிருப்பார். கர்த்தர் தம்மை நோக்கிக் கூப்பிடுகிறவர்களுக்கு சமீபமாயிருக்கிறார். கர்த்தர் நம்மைத் தேடி வந்து விசாரிக்கிறவர். கர்த்தர் தன்னோடு பேசவேண்டுமென்று கிதியோன் விரும்புகிறார். கர்த்தர் அவரோடுகூட பேசுகிறார்.

கிதியோன் முதலாவதாக, அவருடைய தகப்பனுக்கு இருக்கிற பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்துப்போடவேண்டும். கிதியோனுடைய தகப்பனாரின் பெயர் யோவாஸ். இந்த பலிபீடம் யோவாசின் குடும்பத்தாருக்கு சொந்தமானதாகவோ அல்லது யோவாசின் ஊராகிய ஒப்ரா நகரத்திற்கு பொதுவானதாகவோ இருக்கலாம். கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போட்ட பின்பு, அதன் அருகே இருக்கிற தோப்பையும் வெட்டிப்போடவேண்டும்.

கிதியோன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்துப்போட்ட பின்பு, தன்னுடைய தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தையும் கட்டவேண்டும். இந்தப் பலிபீடத்தை கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்திலே கட்டவேண்டும். "கற்பாறை உச்சி" என்னும் வார்த்தைக்கு பயன்படுத்தப்பட்டிருக்கும் எபிரெய வார்த்தைக்கு, "அரணான கோட்டை, பலத்த துருகம்" என்று பொருள். கோட்டையும் துருகமும் ஒரு பட்டணத்தாரை அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து பாதுகாக்கும். அதுபோலவே கற்பாறையின் உச்சியிலே கட்டப்பட்டிருக்கிற கர்த்தருடைய பலிபீடம், இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கையிலிருந்து பாதுகாக்கும்.

கிதியோன் கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அதிலே சர்வாங்க தகனமாய் பலியிடவேண்டும். கிதியோன் கர்த்தருடைய பலிபீடத்திலே இரண்டு காளைகளை பலிசெலுத்தவேண்டும். அவர் தன்னுடைய தகப்பனாரின் இளம் காளையையும், ஏழுவயதான இரண்டாம் காளையையும் கர்த்தருடைய பலிபீடத்தில் சர்வாங்க தகனமாய் பலியிடவேண்டும். கிதியோன், முதலாவது இளங்காளையை, தன்னுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காக பாவநிவாரண பலியாக பலிசெலுத்தியிருக்க வேண்டும். இரண்டாம் காளையை இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை நிவிர்த்தி பண்ணுவதற்காக, பாவநிவாரண பலியாக செலுத்தியிருக்கவேண்டும்.

கிதியோன் இஸ்ரவேலை மீதியானியர் கைக்கு இரட்சிக்கவேண்டியவர். இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு இரட்சிப்பதற்கு முன்பாக, அவர்களுடைய பாவங்களிலிருந்து அவர்களை இரட்சிக்கவேண்டும். கர்த்தரே மனுஷருடைய பாவங்களை இரட்சிக்கிறவர். இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை இரட்சிப்பதற்காக, கிதியோன் கர்த்தருக்கு ஒரு காளையை பாவநிவாரண பலியாக செலுத்துகிறார்.

கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போடவேண்டும். அதன் அருகே இருக்கிற தோப்பை வெட்டிப்போடவேண்டும். கர்த்தருடைய பலிபீடத்தின்மேல், காளையை சர்வாங்க தகனமாக பலியிடும்போது, தோப்பினுடைய கட்டை விறகுகளின்மேல் அதை சர்வாங்க தகனமாக பலியிடவேண்டும். பாகாலின் தோப்புகளிலுள்ள விறகுகள், கர்த்தருடைய பலிபீடத்தின்மேல், சர்வாங்க தகனபலிக்கு பயன்படுத்தப்படுகிறது.

கர்த்தர் கிதியோனுடைய விசுவாசத்தையும், அவருடைய பக்திவைராக்கியத்தையும் சோதித்துப் பார்க்கிறார். கிதியோன் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவதற்கு முன்பாக, அவர் தன்னுடைய பக்திவைராக்கியத்தை உறுதிபண்ணவேண்டும்.

கர்த்தர் கிதியோனுக்கு சொல்லுகிற ஒவ்வொரு காரியமும் இஸ்ரவேலின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்கு பிரயோஜனமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இரட்சிக்கப்படவேண்டுமென்றால், முதலாவதாக அவர்கள் பாகாலைப் பின்பற்றிப்போவதை நிறுத்தவேண்டும். அவர்களுடைய பாவங்கள் அவர்களைவிட்டு அகற்றப்படவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு மீதியானியர் மூலமாய் துன்பங்களும் வேதனைகளும் வந்திருப்பதற்கு, இஸ்ரவேல் புத்திரரின் பாவங்களே காரணம்.

பாவங்கள் நீக்கப்படாமல் கர்த்தருடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்வதற்கு வேறு குறுக்கு வழி எதுவுமில்லை. இஸ்ரவேல் புத்திரருடைய பிரச்சனைகள் முடிவுக்கு வரவேண்டுமென்றால், முதலாவதாக அவர்கள் தங்களுடைய பாவங்களுக்கு இரட்சிக்கப்படவேண்டும்.

கிதியோன் பரமதரிசனத்திற்கு கீழ்ப்படிகிறார். கர்த்தர் ராத்திரியிலே, தன்னுடைய சொப்பனத்தில் சொன்ன பிரகாரம் கிதியோன் ஒவ்வொரு காரியமாகச் செய்கிறார். அவர் விடியும் வரை காத்திருக்காமல், ராத்திரியிலேயே தான் செய்ய வேண்டிய காரியங்களை ஒவ்வொன்றாய்ச் செய்ய ஆரம்பித்து விடுகிறார்.

கிதியோன், தன் வேலையாட்களில் பத்துப்பேரைச் சேர்த்து, கர்த்தர் தனக்குச் சொன்னபடியே செய்கிறார்; கிதியோன் தன் தகப்பன் குடும்பத்தாருக்கும் அந்த ஊர் மனுஷருக்கும் பயப்பட்டபடியினாலே, அதைப் பகலிலே செய்யாமல், இரவிலே செய்கிறார் (நியா 6:27).

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரரை முதலாவதாக அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கவேண்டுமென்றும், அதன் பின்பு அவர்களுடைய சத்துருக்களிடமிருந்து இரட்சிக்கவேண்டுமென்றும் கிதியோன் விரும்புகிறார். கிதியோனுக்கு பத்து வேலையாட்கள் இருக்கிறார்கள். அவர்கள் கிதியோன் கட்டளையிட்டதை நிறைவேற்றுகிறவர்கள்.

கர்த்தர் கிதியோனிடம், அவருடைய தகப்பனாரின் காளைகளை, தம்முடைய பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனமாக பலியிடுமாறு சொன்னார். கர்த்தர் தனக்கு கட்டளையிட்ட பிரகாரமாக கிதியோன் காளைகளை கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் பலியிடுகிறார். கிதியோன் அந்தக் காளைகளை கர்த்தருக்கு பலியிடும் முன்பாக, தன்னுடைய தகப்பனாரின் அனுமதியைப் பெற்றாரா என்று தெரியவில்லை.

கர்த்தரே கிதியோனுக்கு கட்டளையிட்டவர். தன்னுடைய தகப்பனாரின் கட்டளைக்கு கீழ்ப்படிவதைவிட, கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிவதே உன்னதமானது என்று கிதியோன் தீர்மானித்திருக்கிறார். கிதியோனுடைய தகப்பனாரின் வீட்டில் இந்தக் காளைகள் இருந்தாலும், கர்த்தரே இந்தக் காளைகளுக்கு சொந்தக்காரர். நம்முடைய ஆவி, ஆத்துமா, சரீரம், ஆஸ்தி ஆகியவையெல்லாம் நம்மிடத்திலிருந்தாலும், கர்த்தரே இவற்றிற்கு மெய்யான சொந்தக்காரர்.

கிதியோனுடைய தகப்பனார், பாகாலின் பலிபீடத்தை இடித்துப்போடுவதற்கும், கர்த்தருக்கு பலிபீடம் கட்டுவதற்கும், கிதியோனை தடைபண்ணியிருப்பாரென்றால், அவர் கர்த்தருக்கு விரோதமாக பெரும் பாதகம் செய்திருப்பார். கிதியோனோ, தன்னுடைய தகப்பனார்மீது அன்பாகயிருந்து, தான் கர்த்தருக்காக செய்யப்போவதை அவருக்குச் சொல்லாமல், இரவு வேளையிலே பாகாலின் பலிபீடத்தை இடித்துப்போடுகிறார். அதே இரவிலே தானே, கிதியோன் தன்னுடைய தகப்பனாரின் காளைகளை, கர்த்தருடைய பலிபீடத்தின்மேல் சர்வாங்க தகனமாகவும் பலியிடுகிறார்.

கர்த்தருக்காக தான் செய்கிற காரியங்களை, தன்னுடைய குடும்பத்தாரும், தன்னுடைய ஊராரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது கிதியோனுக்கு நன்றாகத் தெரியும். பாகாலின் பலிபீடத்தை இடித்தால் ஒப்ரா ஊரார் கிதியோன்மீது கோபப்படுவார்கள். கர்த்தர் கிதியோனுக்கு, "பயப்படாதே" (நியா 6:23) என்று கட்டளை கொடுத்திருக்கிறார். கர்த்தர் கிதியோனின் பயத்தை அவரை விட்டு அகற்றிப்போடுகிறார். கிதியோன் இப்போது யாருக்கும் பயப்படவில்லை.

கிதியோனிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயம் மாத்திரமே இருக்கிறது. கிதியோன் மனுஷருடைய கோபத்தைப் பார்த்து பயப்படவில்லை. ஆனாலும் தான் கர்த்தருக்காக ஒரு காரியத்தை செய்யும்போது, தன்னுடைய குடும்பத்தாரோ அல்லது தன்னுடைய ஊராரோ, அந்தக் காரியத்திற்கு தடையாகயிருக்கக்கூடாது என்னும் எண்ணத்தில், கிதியோன் தான் செய்த காரியங்களை பகலிலே செய்யாமல் இரவிலே செய்கிறார்.

யோவாஸ்
நியா 6:28-32

நியா 6:28. அந்த ஊர் மனுஷர் காலமே எழுந்திருந்தபோது, இதோ, பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டதும், அதின் அருகேயிருந்த தோப்பு வெட்டிப்போடப்பட்டதும், கட்டப்பட்டிருந்த பலிபீடத்தின் மேல் அந்த இரண்டாம் காளை பலி யிடப்பட்டதுமாயிருக்க அவர்கள் கண்டு;

நியா 6:29. ஒருவரையொருவர் நோக்கி: இந்தக் காரியத்தைச் செய்தவன் யார் என்றார்கள்; கேட்டு விசாரிக்கிறபோது, யோவாசின் மகன் கிதியோன் இதைச் செய்தான் என்றார்கள்.

நியா 6:30. அப்பொழுது ஊரார் யோவாசை நோக்கி: உன் மகனை வெளியே கொண்டுவா; அவன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருந்த தோப்பை வெட்டிப்போட்டான், அவன் சாகவேண்டும் என்றார்கள்.

நியா 6:31. யோவாஸ் தனக்கு விரோதமாக நிற்கிற அனைவரையும் பார்த்து: நீங்களா பாகாலுக்காக வழக்காடுவீர்கள்? நீங்களா அதை இரட்சிப்பீர்கள்? அதற்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலே தானே சாகக்கடவன்; அது தேவனானால் தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம், அது தானே தனக்காக வழக்காடட்டும் என்றான்.

நியா 6:32. தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம் பாகால் அவனோடே வழக்காடட்டும் என்று சொல்லி, அந்நாளிலே அவனுக்கு யெருபாகால் என்று பேரிடப்பட்டது.

கிதியோன் பாகாலின் பலிபீடத்தை இடித்துப்போட்டார். கிதியோன் செய்த இந்த காரியத்தினிமித்தம், ஒப்ரா ஊரார் அவரைக் கொன்றுபோடுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள். அந்த ஊர் மனுஷர் காலமே எழுந்திருந்தபோது, இதோ, பாகாலின் பலிபீடம் தகர்க்கப்பட்டதும், அதின்அருகேயிருந்த தோப்பு வெட்டிப் போடப்பட்டதும், கட்டப்பட்டிருந்த பலிபீடத்தின் மேல் அந்த இரண்டாம் காளை பலியிடப் பட்டதுமாயிருக்க அவர்கள் காண்கிறார்கள் (நியா 6:28).

இந்தக் காரியத்தை யார் செய்தது என்று கேட்டு விசாரிக்கிறார்கள். ஒப்ரா ஊரார், ஒருவரையொருவர் நோக்கி, "இந்தக் காரியத்தை செய்தவன் யார்" என்று கேட்கிறார்கள். அதைக் கண்டுபிடிப்பதற்காக அவர்கள் இதுபற்றி அநேகரிடம் விசாரிக்கிறார்கள். முடிவிலே யோவாசின் மகன் கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போட்டார் என்பதையும், அதன் அருகே இருந்த தோப்பை வெட்டிப்போட்டார் என்பதையும் கண்டுபிடிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு வெகுதூரம் விலகிப்போயிருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரை முற்றிலுமாய் மறந்துவிட்டு, பாகாலே தங்கள் தெய்வம் என்று நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். பாகாலின் பலிபீடத்தை கிதியோன் தகர்த்துப்போட்டார் என்பதை அறிந்தவுடன், அவர்கள் கிதியோனின் தகப்பனாகிய யோவாசிடம் போய், அவருடைய மகனை தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்குமாறு கேட்கிறார்கள். கிதியோன் சாகவேண்டுமென்று சொல்லுகிறார்கள்.

ஒப்ரா ஊரார் யோவாசை நோக்கி "உன் மகனை வெளியே கொண்டுவா; அவன் பாகாலின் பலிபீடத்தைத் தகர்த்து, அதின் அருகேயிருந்த தோப்பை வெட்டிப்போட்டான், அவன் சாகவேண்டும்" (நியா 6:30) என்று சொல்லுகிறார்கள்.

ஒப்ரா ஊரார் கிதியோனுக்கு விரோதமாக எழும்பி வந்தாலும், கிதியோனின் தகப்பனாராகிய யோவாஸ், கிதியோனுக்கு ஆதரவாயிருக்கிறார். அவர்கள் கிதியோனைக் கொன்றுபோட ஆயத்தமாயிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாய் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு அவர்கள்மீது வந்திருக்கிறது. மீதியானியர் அவர்களை ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. விக்கிரகாராதனையை வெறுத்து, அதை விட்டு விலகி வரவில்லை. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை வெறுப்பதற்கு பதிலாக, தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவதை வெறுக்கிறார்கள்.

யோவாஸ் ஒப்ரா ஊரிலே உள்ள தலைவர்களில் ஒருவர். அவர் ஜனங்களின் மூப்பர். யோவாசின் வீட்டில் பாகாலின் பலிபீடம் இருந்தது. கிதியோன் அந்தப் பலிபீடத்தை தகர்த்துப்போட்டார். அந்தப் பலிபீடத்திற்கு அருகே தோப்பு இருந்தது. கிதியோன் அந்தத் தோப்பையும் வெட்டிப்போட்டார். தன்னுடைய தகப்பனார், தனக்கு விரோதமாக, தனக்கு தண்டனை கொடுப்பாரோ என்று கிதியோன் எதிர்பார்த்தார். ஆனால் யோவாசோ தன்னுடைய குமாரன் கிதியோனுக்காக ஆதரவாய்ப் பேசுகிறார்.

யோவாசுக்கு தன்னுடைய குமாரன்மீது இயற்கையான அன்பும், பாசமும், நேசமும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. யோவாஸ் பாகாலின்மீதும் அன்பாகவே இருக்கிறார். ஆனாலும் அவர் பாகாலின்மீது வைத்திருக்கிற அன்பைவிட, தன்னுடைய குமாரனாகிய கிதியோன்மீது வைத்திருக்கிற அன்பு அதிகமாயிருக்கிறது.

யோவாஸ் ஒப்ரா ஊரின் தலைவர். தன்னுடைய ஊரிலே பாகாலின் பலிபீடம் தகர்த்துப்போடப்பட்டதினிமித்தமாய், பெரிய கலவரம் ஏற்படுவதை அவர் விரும்பவில்லை. நகரத்தில் சமாதானம் இருக்கவேண்டுமென்று அவர் ஆசைப்படுகிறார். ஒப்ரா ஊராரோ கிதியோன்மீது கோபமாயிருக்கிறார்கள். கிதியோன் சாகவேண்டுமென்று தீர்மானமாய்ச் சொல்லுகிறார்கள்.

ஒப்ரா ஊரிலே, யோவாசின் வீட்டிற்கு முன்பாக கலவரம் அதிகரிக்கிறது. இந்தக் கலவரத்தை அடக்காமல் விட்டுவிட்டால், இது பெரிய கலவரமாக வெடித்துவிடும். இந்தக் கலவரத்தை எப்படியாவது ஒடுக்கவேண்டுமென்று யோவாஸ் தீர்மானமாயிருக்கிறார்.

கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போட்டதை, யோவாஸ் ஒருவேளை தீவிரமாக சிந்தித்துப் பார்த்திருக்கலாம். கிதியோன் செய்தது நியாயமானது, அது கர்த்தருக்குப் பிரியமானது என்னும் உணர்வு யோவாசுக்கு ஏற்பட்டிருக்கலாம். தன்னுடைய மகன் இஸ்ரவேல் புத்திரருக்கு ஒரு நல்ல காரியத்தை செய்திருக்கிறார் என்றும், அவருக்கு ஆதரவாயிருக்கவேண்டும் என்றும் யோவாஸ் தீர்மானம் செய்திருக்கலாம்.

நாம் கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். நம்முடைய கடமைகளை நாம் நிறைவேற்றவேண்டும். நம்முடைய பாதுகாப்புக்கு நாம் கர்த்தரையே நம்பவேண்டும்.

யோவாஸ் தனக்கு விரோதமாக நிற்கிற அனைவரிடம் வழக்காடுகிறார். அவர் தன்னுடைய மகன் கிதியோனுக்கு ஆதரவாகப் பேசுகிறார். இஸ்ரவேல் புத்திரர் பாகாலுக்காக வழக்காடுகிறார்கள். பாவம் செய்வது மிகவும் மோசமானது. பாவத்திற்காக வழக்காடுவது அதைவிட மோசமானது. இஸ்ரவேல் புத்திரர் துணிகரமாய்ப் பாவம் செய்கிறார்கள். அவர்கள் துன்மார்க்கத்திலே மூழ்கிப்போயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயமில்லை. அவர்களுடைய இருதயத்தில் கர்த்தருக்கு இடம் கொடுக்காமல் பாகாலுக்கு இடம் கொடுத்திருக்கிறார்கள்.

யோவாஸ் தனக்கு விரோதமாக நிற்கிற அனைவரையும் பார்த்து, "நீங்களா பாகாலுக்காக வழக்காடுவீர்கள்? நீங்களா அதை இரட்சிப்பீர்கள்?" (நியா 6:31) என்று சொல்லுகிறார். பாகாலுக்காக வழக்காடுகிறவன் இன்று காலையிலே தானே சாகக்கடவன் என்றும், அது தேவனானால் தன் பலிபீடத்தைத் தகர்த்ததினிமித்தம், அது தானே தனக்காக வழக்காடட்டும் என்றும் யோவாஸ் சொல்லுகிறார்.

பாகால் ஒரு தெய்வம் என்றால், அதற்காக மனுஷர் யாரும் வழக்காட வேண்டிய அவசியமில்லை. அது தனக்குத்தானே வழக்காடிக்கொள்ளும். பாகால் தெய்வமில்லையென்றால், இஸ்ரவேல் புத்திரர் மாயையான காரியத்தை நம்புகிறார்கள். ஒன்றுமில்லாத விக்கிரகத்தை தங்களுக்கு தெய்வம் என்று சொல்லுகிறார்கள்.

கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போட்டார். அதன் தோப்புகளை வெட்டிப்போட்டார். கிதியோன் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து, பக்திவைராக்கியத்தோடு இந்தக் காரியத்தை செய்திருக்கிறார். ஆகையினால் அந்நாளிலே யோவாஸ், தன் குமாரனாகிய கிதியோனுக்கு, "யெருபாகால்" என்று பெயரிடுகிறார். இந்தப் பெயருக்கு "பாகால் வழக்காடட்டும்" என்று பொருள். பாகாலுக்கு ஜீவனிருந்தால், அதற்கு பெலனும், வல்லமையும் இருந்தால், அதற்கு பேசும் ஆற்றல் இருந்தால், அது தன்னுடைய பலிபீடத்தை தகர்த்த கிதியோனோடு வழக்காடட்டும் என்று சொல்லி, யோவாஸ் கிதியோனுக்கு யெருபாகால் என்று பேரிடுகிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் நியா 6:33-40

நியா 6:33. மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரர் யாவரும் ஏகமாய்க் கூடி, ஆற்றைக் கடந்துவந்து, யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கினார்கள்.

நியா 6:34. அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினார்; அவன் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து,

நியா 6:35. மனாசே நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி, அவர்களையும் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்து, ஆசேர், செபுலோன், நப்தலி நாடுகளிலும் ஆட்களை அனுப்பினான்; அவர்களும் அவனுக்கு எதிர்கொண்டு வந்தார்கள்.

நியா 6:36. அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: தேவரீர் சொன்னபடி என் கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்கவேண்டுமானால்,

நியா 6:37. இதோ, நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன்; பனிதோலின்மேல்மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என்கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன் என்றான்.

நியா 6:38. அப்படியே ஆயிற்று. அவன் மறுநாள் காலமே எழுந்திருந்து, தோலைக் கசக்கி, அதிலிருந்து பனிநீரை ஒரு கிண்ணம் நிறையப் பிழிந்தான்.

நியா 6:39. அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: நான் இன்னும் ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என்மேல் மூளாதிருப்பதாக; தோலினாலே நான் இன்னும் ஒரேவிசை சோதனைபண்ணட்டும்; தோல்மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும் என்றான்.

நியா 6:40. அப்படியே தேவன் அன்று ராத்திரி செய்தார்; தோல்மாத்திரம் காய்ந்திருந்து, பூமியெங்கும் பனி பெய்திருந்தது.

இஸ்ரவேல் புத்திரரின் சத்துருக்கள் அவர்களுக்கு விரோதமாக எழும்பி வருகிறார்கள். மீதியானியரும் அமலேக்கியரும் கிழக்கத்திப் புத்திரர் யாவரும் ஏகமாய்க் கூடி, ஆற்றைக் கடந்துவந்து, யெஸ்ரயேல் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்குகிறார்கள் (நியா 6:33). இந்தப் பள்ளத்தாக்கு மனாசே கோத்திரத்தாரின் சுதந்தரத்திலுள்ளது. யெஸ்ரயேல் பள்ளத்தாக்கு கிதியோனுடைய ஊராகியஒப்ராவுக்கு அருகாமையிலிருக்கிறது.

சத்துருக்களின் அக்கிரமம் அதிகரித்திருக்கிறது. ஆகையினால் கர்த்தர் தம்முடைய நீதியை அவர்கள்மீது சரிக்கட்டுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார். மீதியானியர் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்தாலும், இந்த வருஷம் கர்த்தர் மீதியானியர்மீது தம்முடைய நீதியைச் சரிக்கட்டும் வருஷமாயிருக்கிறது.

"ஆனாலும் அவர்கள் கர்த்தருடைய நினைவுகளை அறியாமலும், அவருடைய யோசனையை உணராமலும் இருக்கிறார்கள்; அவர் அரிக்கட்டுகளைப் போல அவர்களைக் களத்திலே சேர்ப்பார். சீயோன் குமாரத்தியே, நீ எழுந்து போரடி; நான் உன் கொம்புகளை இரும்பும், உன் குளம்புகளை வெண்கலமுமாக்குவேன்; நீ அநேக ஜனங்களை நொறுக்கிப்போடுவாய்; அவர்கள் தேடிச் சேர்த்ததை நீ கர்த்தருக்கென்றும், அவர்களுடைய ஆஸ்தியை பூமிக்கெல்லாம் ஆண்டவராயிருக்கிறவருக்கென்றும் நியமிப்பாய்" (மீகா 4:12,13).

கிதியோன் இதுவரையிலும் கோதுமையை போரடித்துக்கொண்டிருந்தார். அவர் இனிமேல் மீதியானியரை போரடிக்கப்போகிறார்.

கர்த்தர் கிதியோனை, சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தப்படுத்துகிறார். அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன் மேல் இறங்குகிறார். கிதியோன்மீது ஒரு சால்வையை போர்த்துவதுபோல, கர்த்தருடைய ஆவியானவர் அவரைப் போர்த்துகிறார். சால்வையைப் போர்த்தி ஒரு நபரைக் கனம்பண்ணுவது வழக்கம். கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கி, அவரைக் கனம்பண்ணுகிறார். கிதியோனுக்கு பாதுகாப்பைக் கொடுக்கிறார். கர்த்தர் தம்முடைய ஊழியத்திற்கு யாரை அழைக்கிறாரோ, அவர்களை தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு தகுதிப்படுத்தவும் செய்கிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் கிதியோன்மேல் இறங்கினபோது, அவர் எக்காளம் ஊதி, அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்கிறார். கிதியோன் மனாசே நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பி, அவர்களையும் கூப்பிட்டு, தனக்குப் பின்செல்லும்படி செய்கிறார். ஆசேர், செபுலோன், நப்தலி நாடுகளிலும் ஆட்களை அனுப்புகிறார். அவர்களும் கிதியோனுக்கு எதிர்கொண்டு வருகிறார்கள் (நியா 6:34,35).

கிதியோனுடைய கையில் எக்காளம் இருக்கிறது. அவர் தன்னிடத்திலுள்ள எக்காளத்தை ஊதி இஸ்ரவேல் கோத்திரத்தாரையெல்லாம் மீதியானியருக்கு விரோதமாகக் கூட்டிச் சேர்க்கிறார். கிதியோன் எக்காளம் ஊதும்போது, கர்த்தருடைய ஆவியானவர் இஸ்ரவேல் புத்திரருடைய உள்ளத்திலே உணர்த்துகிறார். கர்த்தரும் கிதியோனோடு கிரியை நடப்பிக்கிறார்.

கிதியோன் அபியேஸ்ரியரைக் கூப்பிட்டு தனக்கு பின் செல்லும்படி செய்கிறார். கிதியோன் பாகாலின் பலிபீடத்தை தகர்த்துப்போட்டதினால், அபியேஸ்ரியர் இதற்கு முன்பு, கிதியோனுக்கு விரோதமாக எழும்பி வந்தார்கள். கிதியோனுடைய தகப்பனாராகிய யோவாசின் வீட்டிற்கு முன்பாக நின்று "கிதியோன் சாகவேண்டும்" என்று கூக்குரலிட்டார்கள். ஆனாலும் அவர்கள் இப்போது தங்களுடைய தப்பிதத்தை உணர்ந்துகொள்கிறார்கள். கிதியோனுக்கு உதவிசெய்ய முன்வருகிறார்கள்.

ஆசேர், நப்தலி ஆகிய கோத்திரத்தார் கிதியோனுக்கு வெகுதூரத்திலிருக்கிறார்கள். கிதியோன் அவர்களையும் கூப்பிடுகிறார். அவர்களும் கிதியோனுக்கு உதவி செய்ய வருகிறார்கள். கிதியோனுடைய சேனை பெரியதாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் கிதியோனைப் பின்பற்றி வருகிறார்கள். கிதியோன் கர்த்தர்மீது விசுவாசமாயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரோ தங்கள் விசுவாசத்தில் பலவீனராயிருக்கிறார்கள். தன்னுடைய விசுவாசத்தைப்போலவே, அவர்களுடைய விசுவாசமும் உறுதிப்படவேண்டுமென்று கிதியோன் எதிர்பார்க்கிறார். இதற்காக கிதியோன் கர்த்தரிடத்தில் ஒரு அடையாளத்தை எதிர்பார்க்கிறார்.

அப்பொழுது கிதியோன் தேவனை நோக்கி: "தேவரீர் சொன்னபடி என் கையினாலே இஸ்ரவேலை இரட்சிக்கவேண்டுமானால், இதோ, நான் மயிருள்ள ஒரு தோலைக் களத்திலே போடுகிறேன்; பனிதோலின்மேல்மாத்திரம் பெய்து, பூமியெல்லாம் காய்ந்திருந்தால், அப்பொழுது தேவரீர் சொன்னபடி இஸ்ரவேலை என்கையினால் இரட்சிப்பீர் என்று அதினாலே அறிவேன்" (நியா 6:36,37) என்று சொல்லுகிறார்.

கர்த்தர் கிதியோனுக்கு தம்முடைய இரக்கத்தைக் காண்பிக்கிறார். கிதியோன் கர்த்தரிடத்தில் எப்படிப்பட்ட அடையாளத்தைக் கேட்டாரோ, அது அப்படியே ஆயிற்று. கிதியோன் மறுநாள் காலமே எழுந்திருந்து, தோலைக் கசக்கி, அதிலிருந்து பனிநீரை ஒரு கிண்ணம் நிறையப் பிழிகிறார் (நியா 6:38).

கிதியோன் கர்த்தரிடத்தில் இரண்டாம் முறையாக மேலும் ஒரு அடையாளத்தைக் கேட்கிறார். இப்போது எப்படிப்பட்ட அடையாளம் உண்டாயிற்றோ அதற்கு நேர்மாறாக ஒரு அடையாளத்தைக் கேட்கிறார். கர்த்தரிடத்தில் திரும்ப திரும்ப அடையாளத்தைக் கேட்பதினால், கர்த்தருடைய கோபம் தன்மீது வருமோ என்று கிதியோன் பயப்படுகிறார். ஆகையினால், இரண்டாவது அடையாளத்தைக் கேட்பதற்கு முன்பாகவே, கர்த்தர் தன்னை தயவாக மன்னித்தருளவேண்டுமாறும் விண்ணப்பம்பண்ணுகிறார். "நான் இன்னும் ஒருவிசைமாத்திரம் பேசுகிறேன், உமது கோபம் என்மேல் மூளாதிருப்பதாக" (நியா 6:39) என்று கிதியோன் கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்.

கர்த்தரிடத்தில் மறுபடியும் மறுபடியுமாய் அடையாளத்தைக் கேட்பது, கிதியோன் கர்த்தரை நம்பாமலிருப்பதற்கு அடையாளம். நாம் கர்த்தருடைய கிருபைகளுக்காகவும், சிலாக்கியங்களுக்காகவும், கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது மிகுந்த பயபக்தியோடு விண்ணப்பம்பண்ணவேண்டும். நம்மிடத்தில் கர்த்தருக்குப் பயப்படும் பயம் இருக்கவேண்டும். கர்த்தரிடத்தில் எதை வேண்டுமானாலும் கேட்கலாம் என்று நினைத்து, அவரிடத்தில் விளையாடக்கூடாது. கர்த்தரிடத்தில் வேடிக்கையாகப் பேசக்கூடாது. நாம் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது, பயபக்தியாய் நிற்கவேண்டும்.

கர்த்தருடைய கோபம் தன்மீது மூளாதிருப்பதாக என்று விண்ணப்பம்பண்ணிவிட்டு, கிதியோன் கர்த்தரிடத்தில் இரண்டாவது அடையாளத்தைக் கேட்கிறார். "தோலினாலே நான் இன்னும் ஒரேவிசை சோதனைபண்ணட்டும்; தோல்மாத்திரம் காய்ந்திருக்கவும் பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும்" (நியா 6:39) என்று கிதியோன் கர்த்தரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தரும் தம்முடைய கிருபையினால் கிதியோனுக்கு இரக்கம் காண்பிக்கிறார். கிதியோனுடைய விண்ணப்பத்தை அங்கீகரித்து, அவர் கேட்ட பிரகாரம், அவருக்கு இரண்டாம் விசையும் ஒரு அடையாளத்தைக் காண்பிக்கிறார். தேவன் அன்று ராத்திரியிலேயே, கிதியோன் கேட்டதை செய்கிறார். தோல் மாத்திரம் காய்ந்திருக்கிறது. பூமியெங்கும் பனிபெய்திருக்கிறது (நியா 6:40).

கர்த்தருடைய பிள்ளைகள் விசுவாசத்தில் பலவீனராயிருந்தாலும், கர்த்தர் அவர்களுக்கும் தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். கர்த்தர் தம்முடைய இரக்கத்தில் உண்மையுள்ளவராயிருக்கிறார். கிதியோன் கர்த்தரிடத்தில் இந்த அடையாளங்களைக் கேட்கும்போது, அவர் தனக்காகவும் கேட்கிறார், தன்னோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் புத்திரரின் விசுவாசம் உறுதிப்படவேண்டும் என்பதற்காகவும் கேட்கிறார்.

தோல் இயற்கையாகவே தண்ணீரை உறிஞ்சும் தன்மையுடையது. கர்த்தர் கிதியோனுக்கு முதலாவது அடையாளத்தைக் காண்பித்தபோது, பனி தோலின்மேல் பெய்திருந்தது. கிதினோடு கூடயிருக்கிறவர்கள், இதை கர்த்தருடைய அற்புதம் என்று நம்பாமல், இது இயற்கையாக நடைபெறும் காரியம் என்று சொல்லுவதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினாலேயே கிதியோன் கர்த்தரிடத்தில் இரண்டாவது அடையாளத்தைக் கேட்கிறார்.

பூமியெங்கும் பனிபெய்திருக்கும்போது, இயற்கையாகவே தோலும் நனைந்திருக்கும். ஆனால் இரண்டாவது அடையாளத்தில் பூமியெங்கும் பனிபெய்திருக்கிறது. தோல் மாத்திரம் காய்ந்திருக்கிறது. இயற்கையின் பிரமாணத்தின்படி இப்படி நடப்பதற்கு வாய்ப்பில்லை. கர்த்தர் தம்முடைய அடையாளத்தினால், இஸ்ரவேல் புத்திரரின் விசுவாசத்தை உறுதிபண்ணுகிறார்.

"மனுஷர் தங்களிலும் பெரியவர் பேரில் ஆணையிடுவார்கள்; உறுதிபண்ணும்படிக்கு ஆணையிடுதலே சகல விவாதத்திற்கும் முடிவு. அந்தப்படி, தேவனும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குத் தமது ஆலோசனையின் மாறாத நிச்சயத்தைப் பரிபூரணமாய்க் காண்பிக்கும்படி சித்தமுள்ளவராய், ஓர் ஆணையினாலே அதை ஸ்திரப்படுத்தினார். நமக்கு முன் வைக்கப்பட்ட நம்பிக்கையைப் பற்றிக்கொள்ளும்படி அடைக்கலமாய் ஓடிவந்த நமக்கு இரண்டு மாறாத விசேஷங்களினால் நிறைந்த ஆறுதலண்டாகும்படிக்கு எவ்வளவேனும் பொய்யுரையாத தேவன் அப்படிச் செய்தார்" (எபி 6:17,18).

தேவனுடைய தெய்வீக கிருபை தன்மீது பனியைப்போல இறங்கவேண்டுமென்று கிதியோன் எதிர்பார்க்கிறார். தோல்மீது பனிபெய்கிறது. தோல் கிதியோனுக்கு அடையாளமாயிருக்கிறது. கிதியோன்மீது கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், அநுக்கிரகமும் பனிபோல பெய்கிறது.

கர்த்தருடைய ஆவியானவர் தன்மீது பனிபோல் இறங்குவதுபோல, தன்னோடு கூடயிருக்கிற இஸ்ரவேல் புத்திரர்மேலும் இறங்கவேண்டுமென்று கிதியோன் எதிர்பார்க்கிறார். அவர்கள் காய்ந்திருக்கிற பூமியைப்போல இருக்கிறார்கள். கர்த்தர் இரண்டாவது அடையாளத்தைக் காண்பித்து, பூமியெங்கும் பனிபெய்யச் செய்கிறார். கர்த்தருடைய ஆவியானவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோர்மீதும் பனிபோல இறங்கி வந்ததற்கு இது அடையாளமாயிருக்கிறது.

7 அதிகாரம்

கிதியோன் மீதியானியருக்கு விரோதமாக யுத்தக்களத்திலே நிற்கிறார். இஸ்ரவேலின் சேனைக்கு கட்டளை கொடுக்கிறார். மீதியானியரின் சேனையை முறியடிக்கிறார். கிதியோனுடைய சேனை எப்படியிருக்க வேண்டும் என்றும், அதில் எத்தனைபேர் இருக்கவேண்டும் என்றும் கர்த்தர் கட்டளை கொடுக்கிறார். கிதியோனுடைய சேனையில் முந்நூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள் (நியா 7:1-8).

கர்த்தர் கிதியோனை மீதியானியருடைய பாளயத்திற்கு இரகசியமாய் அனுப்புகிறார். மீதியானியரில் ஒருவன் தான் கண்ட சொப்பனத்தைச் சொல்லுகிறான். அது கிதியோனுக்கு ஆறுதலான வார்த்தையாயிருக்கிறது (நியா 7:9-15).

கிதியோனின் சேனையில் முந்நூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள். கர்த்தர் தனக்கு கட்டளை கொடுத்த பிரகாரமாக, கிதியோன் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார். கிதியோன் மீதியானியரோடு யுத்தம்பண்ணாமல், அவர்களைப் பயமுறுத்துகிறார் (நியா 7:16-20).

இந்த யுத்தத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு வெற்றி கிடைக்கிறது. மீதியானியர் யுத்தத்திலே தோற்றுப்போய் ஓடிப்போகிறார்கள்.

முந்நூறு பேர் நியா 7:1-8

நியா 7:1. அப்பொழுது கிதியோனாகிய யெருபாகாலும் அவனோடிருந்த ஜனங்கள் யாவரும் காலமே எழுந்து புறப்பட்டு, ஆரோத் என்னும் நீரூற்றின் கிட்டப்பாளயமிறங்கினார்கள்; மீதியானியரின் பாளயம் அவனுக்கு வடக்கே மோரே மேட்டிற்குப் பின்னான பள்ளத்தாக்கிலே இருந்தது.

நியா 7:2. அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நான் மீதியானியரை உன்னோடிருக்கிற ஜனத்தின் கையில் ஒப்புக் கொடுக்கிறதற்கு அவர்கள் மிகுதியாயிருக்கிறார்கள்; என் கை என்னை ரட்சித்தது என்று இஸ்ரவேல் எனக்கு விரோதமாக வீம்பு பேசுகிறதற்கு இடமாகும்.

நியா 7:3. ஆகையால் பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போகக்கடவன் என்று, நீ ஜனங்களின் செவிகள் கேட்கப் பிரசித்தப்படுத்து என்றார்; அப்பொழுது ஜனத்தில் இருபத்தீராயிரம் பேர் திரும்பிப் போய்விட்டார்கள்; பதினாயிரம்பேர் மீதியாயிருந்தார்கள்.

நியா 7:4. கர்த்தர் கிதியோனை நோக்கி: ஜனங்கள் இன்னும் அதிகம், அவர்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப்பண்ணு; அங்கே அவர்களைப் பரிட்சித்துக்காட்டுவேன்; உன்னோடேகூட வரலாம் என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வரக்கடவன்; உன்னோடேகூட வரலாகாது என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வராதிருக்கக்கடவன் என்றார்.

நியா 7:5. அப்படியே அவன் ஜனங்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப் பண்ணினான்; அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக அதைத் தன் நாவினாலே நக்குகிறவன் எவனோ அவனைத் தனியேயும், குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிகிறவன் எவனோ, அவனைத் தனியேயும் நிறுத்து என்றார்.

நியா 7:6. தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து, நக்கிக்கொண்டவர்களின் லக்கம் முந்நூறுபேர்; மற்ற ஜனங்களெல்லாம் தண்ணீர் குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிந்தார்கள்.

நியா 7:7. அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: நக்கிக்குடித்த அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன், மற்ற ஜனங்களெல்லாரும் தங்கள் தங்கள் இடத்திற்குப் போகக்கடவர்கள் என்றார்.

நியா 7:8. அப்பொழுது ஜனங்கள் தங்கள் கையில் தின்பண்டங்களையும், எக்காளங்களையும் எடுத்துக் கொண்டார்கள்; மற்ற இஸ்ரவேலரெல்லாரையும் தங்கள்தங்கள் கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டு, அந்த முந்நூறு பேரைமாத்திரம் வைத்துக்கொண்டான்;. மீதியானியரின் சேனை அவனுக்குத் தாழ்விடமான பள்ளத்தாக்கில் இருந்தது.

இஸ்ரவேல் புத்திரர் கிதியோனுக்குப் பின்னால் அணிவகுத்து நிற்கிறார்கள். கிதியோன் அவர்களை யுத்தத்திலே வழிநடத்தும் தளபதியாயிருக்கிறார். கிதியோனும், கிதியோனோடு கூடயிருந்த ஜனங்களும் காலமே எழுந்து, மீதியானியருக்கு விரோதமாகப் புறப்பட்டுப்போகிறார்கள். அவர்கள் ஆரோத் என்னும் நீரூற்றின் அருகே பாளயமிறங்குகிறார்கள்.

கிதியோனின் சேனையிலுள்ளவர்களுக்கு தண்ணீர் பஞ்சம் வரக்கூடாது. ஆகையினால், கிதியோன் தண்ணீர் அதிகமாயிருக்கும் ஆரோத் என்னும் நீரூற்றின் அருகே, தன்னுடைய சேனையோடு பாளயமிறங்குகிறார். இஸ்ரவேல் புத்திரர் மேடான பகுதியில் பாளயமிறங்கியிருக்கிறார்கள். மீதியானியரின் பாளயம், கிதியோனுக்கு வடக்கே, மோரே மேட்டிற்கு பின்னான பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். உயரத்திலிருக்கிறவர்கள், பள்ளத்தாக்கி லிருக்கிறவர்களோடு எளிதாக யுத்தம் பண்ணலாம். உயரத்திலிருக்கிறவர்களுக்கு பல அனுகூலங்கள் உண்டு. கர்த்தர் கிதியோனுக்கு, நல்ல ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணிக்கொடுத்து, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுகூலம்பண்ணுகிறார்.

கிதியோன் கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்புகிறார். "நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்" (நியா 6:14) என்று கர்த்தர் கிதியோனுக்கு வாக்குப்பண்ணினார். கர்த்தருடைய வாக்குத்தத்தம் நம்மை சோம்பேறியாக்கிவிடக்கூடாது. நாம் கர்த்தருடைய வாக்குத்தத்தங்களை விசுவாசத்தோடு பற்றிக்கொண்டு, நம்முடைய முயற்சிகளில் முன்னேறிப்போகவேண்டும்.

கிதியோனின் சேனையில் 32,000 போர்வீரர்கள் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் கூட்டிச் சேர்த்தால், அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் அதிகமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரருடைய யுத்த சன்னத்தரின் மொத்த எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இப்போது கிதியோனோடு கூடயிருக்கிற 32,000 பேர் மிகவும் கொஞ்ச ஜனமாயிருக்கிறார்கள்.

மீதியானியரின் சேனை மிகவும் பெரிது. அவர்கள் வெட்டுக்கிளிகளைப்போல திரளாயிருக்கிறார்கள். அவர்கள் கடற்கரை மணலைப்போலவும் திரளாயிருக்கிறார்கள். அவர்களுடைய ஒட்டகங்களுக்கு கணக்கில்லை (நியா 7:12). மீதியானியரின் சேனையோடு, கிதியோனின் சேனையை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கிதியோனின் சேனை மிகவும் சிறியது.

கிதியோன் தன்னுடைய சேனையையும் பார்க்கிறார். மீதியானியரின் சேனையையும் பார்க்கிறார். தன்னோடிருக்கிறவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு என்னும் எண்ணம் கிதியோனுக்கு உண்டாயிருக்கவேண்டும். ஆனால் கர்த்தரோ கிதியோனோடு கூடயிருக்கிறவர்கள் மிகுதியாயிருக்கிறார்கள் என்று சொல்லுகிறார்.

கர்த்தர் கிதியோனை நோக்கி: "நான் மீதியானியரை உன்னோடிருக்கிற ஜனத்தின் கையில் ஒப்புக் கொடுக்கிறதற்கு அவர்கள் மிகுதியாயிருக்கிறார்கள்; என் கை என்னை ரட்சித்தது என்று இஸ்ரவேல் எனக்கு விரோதமாக வீம்பு பேசுகிறதற்கு இடமாகும்" (நியா 7:2) என்று கர்த்தர் சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக தங்களை பெருமைப்படுத்தி பேசக்கூடாது. அவருக்கு விரோதமாக வீம்பு வார்த்தைகளைப் பேசக்கூடாது. கிதியோனின் சேனையிலிருக்கிறவர்கள் மிகுதியாயிருக்கிறார்கள் என்று சொல்லி, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் பெருமையான வார்த்தைகளையும், வீம்பு வார்த்தைகளையும் அமைதிப்படுத்துகிறார்.

மனுஷன் முகத்தைப் பார்க்கிறான். கர்த்தரோ மனுஷருடைய இருதயத்தின் நினைவுகளை ஆராய்ந்து பார்க்கிறார். இஸ்ரவேல் புத்திரருடைய இருதயங்களில் பெருமையும் வீம்பும் நிரம்பியிருக்கிறது. ஆகையினால் கர்த்தர் அவர்களுடைய இருதயத்தின் பெருமையை முதலாவதாக அகற்றிப்போடுகிறார். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக ஒருபோதும் வீம்பு பேசக்கூடாது.

கிதியோனின் சேனையிலிருக்கிற 32,000 யுத்தவீரர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கு கர்த்தர் இரண்டு உபாயங்களைப் பயன்படுத்துகிறார். அவையாவன : 1. பயமும் திகிலும் உள்ளவர்கள் சேனையிலிருந்து விலகிப்போய்விடவேண்டும். 2. தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக, அதை தன் நாவினாலே நக்குகிறவன் மாத்திரம் கிதியோனுடைய சேனையில் சேர்க்கப்படவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வெளிப்பார்வைக்கு தைரியசாலிகளைப் போலவும், பராக்கிரமசாலிகளைப்போலவும் இருக்கிறார்கள். கிதியோன் எக்காள சத்தம் ஊதினபோது இஸ்ரவேல் புத்திரரில் 32,000 தைரியமாக அவரை பின்தொடர்ந்து வருகிறார்கள். கிதியோன் அவர்களுக்கு படைத்தளபதியாகயிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரின் சேனையிலிருப்பவர்களைப் பார்க்கும்போது, அவர்களிடத்தில் சிறிதும் பயம் இல்லாததுபோலவும், அவர்களெல்லோருமே பராக்கிரமசாலிகள் போலவும் இருக்கிறார்கள்.

ஆனால் கர்த்தரோ கிதியோன் சேனையிலுள்ள இஸ்ரவேல் புத்திரரின் இருதயத்தில் பயமும் திகிலும் நிரம்பியிருப்பதைப் பார்க்கிறார். கர்த்தர் கிதியோனிடம், "பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போகக்கடவன் என்று, நீ ஜனங்களின் செவிகள் கேட்கப் பிரசித்தப்படுத்து" (நியா 7:3) என்று கட்டளையிடுகிறார்.

கிதியோன் இந்த வார்த்தையைச் சொன்னவுடன் ஜனத்தில் இருபத்தீராயிரம் பேர் திரும்பிப் போய்விடுகிறார்கள்; பதினாயிரம்பேர் மாத்திரம் மீதியாயிருக்கிறார்கள். கிதியோனின் சேனையிலுள்ளவர்களில், சுமார் மூன்றில் இரண்டு பங்கு ஜனங்கள் பயத்தோடும் திகிலோடும், கிதியோனை விட்டு விட்டு, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாக ஓடிப்போகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏழு வருஷங்களாக மீதியானியரின் கையில் பாடுகளையும், வேதனைகளையும், உபத்திரவங்களையும் அனுபவித்து வருகிறார்கள். மீதியானியர் இஸ்ரவேலரை அதிகமாய் ஒடுக்கினதினால், இஸ்ரவேலரின் ஆவி அவர்களுக்குள் முறிந்துபோயிற்று. மீதியானியரோடு யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்க முடியும் என்னும் நம்பிக்கையும் அவர்களிடத்தில் இல்லாமல் போயிற்று.

இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் கைகளில் வேதனைகளை அனுபவித்தாலும், அவர்கள் கர்த்தரை நம்பவில்லை. பாகாலைப் பின்பற்றுகிறார்கள். ஆகையினால் இஸ்ரவேல் புத்திரருடைய மனச்சாட்சி கர்த்தருக்கு விரோதமாக குற்றமுள்ளதாயிருக்கிறது. குற்றமுள்ள மனச்சாட்சிக்கு தைரியமிருக்காது. அங்கே பயமும் திகிலும் நிரம்பியிருக்கும்.

இஸ்ரவேல் புத்திரருடைய பாவம் அவர்களை பலவீனப்படுத்துகிறது. அவர்களுடைய முகத்தில் பயமும் திகிலும் வெளிப்படுகிறது. அவர்கள் யுத்தத்திலே மரித்துப்போவதற்கு ஆயத்தமாயில்லை. கர்த்தர் தங்களை பாதுகாத்து பராமரிப்பார் என்னும் நம்பிக்கையும் அவர்களிடத்தில் இல்லை. ஆகையினால் பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பிப்போகலாம் என்று, கிதியோன் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொன்ன உடனேயே, அவர்களில் 22,000 பேர் தப்பித்து ஓடிப்போகிறார்கள். 10,000 பேர் மாத்திரமே கிதியோனோடு கூடயிருக்கிறார்கள்.

கர்த்தர் கிதியோனை நோக்கி: "ஜனங்கள் இன்னும் அதிகம், அவர்களைத் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப்பண்ணு; அங்கே அவர்களைப் பரிட்சித்துக்காட்டுவேன்; உன்னோடேகூட வரலாம் என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வரக்கடவன்; உன்னோடேகூட வரலாகாது என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடேகூட வராதிருக்கக்கடவன்" (நியா 7:4) என்று சொல்லுகிறார்.

கிதியோனுடைய சேனையில் 10,000 பேர் இருப்பது, கர்த்தருடைய பார்வைக்கு அதிகமானோராய்த் தெரிகிறது. ஆகையினால், "அவர்கள் இன்னும் அதிகம்" என்று கர்த்தர் சொல்லுகிறார். கிதியோனோடிருக்கிற 10,000 பேரை, முந்நூறு பேராக குறைக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தம். இஸ்ரவேல் புத்திரர் 32,000 பேராகயிருந்தாலும், அவர்கள் 10,000 பேராயிருந்தாலும், அவர்களும் கர்த்தருக்கு விரோதமாக வீம்பு பேசுகிறதற்கு இடமாகும் என்று கர்த்தர் நினைக்கிறார்.

பல சமயங்களில், நம்முடைய சபைகளில் ஏராளமான விசுவாசிகள் இருக்கும்போது, கர்த்தருடைய கிருபைகளையும், அவருடைய தெய்வீக பராமரிப்புக்களையும் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பில்லாமல் போய்விடும். ஊழியக்காரர்கள் கர்த்தருடைய கிருபைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், சபையிலுள்ள திரளான விசுவாசிகளின் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுத்துவிடுவார்கள். கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும், பாதுகாப்பும், பராமரிப்பும், அநுக்கிரகமும் இல்லாமல், மனுஷருடைய முயற்சியால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஆரோத் என்னும் நீரூற்றின் அருகே பாளயமிறங்கியிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை ஆரோத் நீரூற்றின் தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப்பண்ணுமாறு கிதியோனுக்கு கட்டளை கொடுக்கிறார். இந்த நீரூற்றின் ஓடையிலே, தண்ணீர் ஆறாக பாய்ந்து ஓடுகிறது. கிதியோன் கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம், தன்னோடிருக்கிற இஸ்ரவேல் புத்திரரில் 10,000 பேரை தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப்பண்ணுகிறார்.

கர்த்தர் கிதியோனை நோக்கி: "தண்ணீரை ஒரு நாய் நக்கும் பிரகாரமாக அதைத் தன் நாவினாலே நக்குகிறவன் எவனோ அவனைத் தனியேயும், குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிகிறவன் எவனோ, அவனைத் தனியேயும் நிறுத்து" (நியா 7:5) என்று சொல்லுகிறார்.

ஆற்றிலே தண்ணீர் குடிக்கிறவர்கள், பொதுவாக முழங்கால்களை ஊன்றி குனிந்து தண்ணீர் குடிப்பார்கள். ஆனால் ஒரு சிலர், குனியாமல், முழங்கால் ஊன்றாமல் தண்ணீர் குடிக்கிறார்கள். தங்கள் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து, நக்கிக்கொண்டவர்களின் லக்கம் முந்நூறுபேர்; மற்ற ஜனங்களெல்லாம் தண்ணீர் குடிக்கிறதற்கு முழங்கால் ஊன்றிக் குனிகிறார்கள் (நியா 7:6).

கிதியோனின் சேனையிலிருக்கிற முந்நூறு பேரும், முழங்கால் ஊன்றி குனிந்து, தண்ணீர் குடிக்காமல், தங்கள் கையால் சிறிது தண்ணீரை எடுத்து, தங்களை வாயை நனைத்துக்கொண்டு, அந்த இடத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள். அவர்கள் ஒரு நாய் நக்கும் பிரகாரமாக தண்ணீரை தங்கள் நாவினாலே நக்குகிறார்கள். அவர்கள் ஏதோ ஒரு அவசரமான வேலைக்கு போவது போல, அவசரம் அவசரமாக தண்ணீர் குடிக்கிறார்கள். தண்ணீர் குடிப்பதற்கு அதிக நேரம் செலவிடவில்லை. அவர்கள் சாவாசமாக தண்ணீர் குடிக்கவில்லை. அவசரமாகக் குடிக்கிறார்கள். யுத்தவீரர்கள் எப்போதுமே யுத்தத்திற்கு ஆயத்தமாயிருக்கவேண்டும்.

அப்பொழுது கர்த்தர் கிதியோனை நோக்கி: "நக்கிக்குடித்த அந்த முந்நூறு பேராலே நான் உங்களை இரட்சித்து, மீதியானியரை உன் கையில் ஒப்புக் கொடுப்பேன், மற்ற ஜனங்களெல்லாரும் தங்கள் தங்கள் இடத்திற்குப் போகக்கடவர்கள்" (நியா 7:7) என்று சொல்லுகிறார்.

இப்போது கிதியோனோடு முந்நூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்களெல்லோருமே பராக்கிரமசாலிகள். இவர்களால் பசியையும் தாகத்தையும் தாங்கிக்கொள்ள முடிகிறது. இவர்கள் கடினமாய் உழைக்கக்கூடியவர்கள். தங்களுக்கு ஆகாரக்குறைவோ அல்லது தண்ணீர் குறைவோ இருந்தாலும் இவர்கள் முறுமுறுக்கமாட்டார்கள்.

கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறு பேரும் வேகமாக செயல்படக்கூடியவர்கள். இவர்களில் ஒருவரும் சோம்பேறியல்ல. சத்துருக்களோடு யுத்தம்பண்ண எப்போதுமே ஆயத்தமாயிருக்கிறவர்கள். தங்களுக்கு விரோதமாக சத்துருக்கள் எப்போதும் வரலாம் என்று எதிர்பார்த்து இவர்கள் எச்சரிக்கையோடிருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களே கர்த்தரால் தெரிந்தெடுக்கப்படுகிறவர்கள். இவர்கள் தங்களுடைய சொந்த நலனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல், கர்த்தருடைய சித்தத்திற்கும் திட்டத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

கிதியோனோடு இப்போது முந்நூறு பேர் இருக்கிறார்கள். இந்த முந்நூறு பேரைப் பார்க்கிலும், கர்த்தர் கிதியோனோடு கூடயிருக்கிறார். இதுவே இஸ்ரவேல் புத்திரருக்கு மெய்யான பெலன். கர்த்தர் நம்மோடு கூடயிருக்கும்போது, நமக்கு விரோதமாக எந்த சத்துருவும் எழும்பி நம்மை மேற்கொள்ள முடியாது.

கிதியோனுக்கு கர்த்தருடைய ஆலோசனையும் வழிநடத்துதலும் கிடைத்திருக்கிறது. இதனால் அவருடைய ஆத்துமா உற்சாகமாயிருக்கிறது. கிதியோன் கர்த்தர் சொன்ன பிரகாரம் முந்நூறுபேரை மாத்திரம் தன்னோடுகூட வைத்துக்கொண்டு, மற்ற ஜனங்கள் எல்லோரையும் தங்கள் தங்கள் இடங்களுக்கு அனுப்பி வைத்துவிடுகிறார்.

யுத்தத்திற்கு போகிறவர்கள் பொதுவாக தங்கள் சேனையைப் பலப்படுத்துவார்கள். யுத்தவீரர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பார்கள். ஆனால் கர்த்தரோ, இஸ்ரவேல் புத்திரரின் சேனையிலுள்ளவர்களின் எண்ணிக்கையை குறைக்கச் சொல்லுகிறார். புதிதாக யுத்தவீரர்களை சேர்ப்பதற்கு பதிலாக, ஏற்கெனவே சேர்க்கப்பட்டிருக்கிற வீரர்களை, அவர்களுடைய இடங்களுக்கு அனுப்பிவிடுகிறார்.

மீதியானியரின் கையிலிருந்து தங்களுடைய கை இரட்சித்தது என்று, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு விரோதமாக வீம்பு பேச இனிமேல் வாய்ப்பில்லை. இஸ்ரவேல் புத்திரரின் சேனையில் ஆரம்பத்தில் 32,000 பேர் இருந்தார்கள். இப்போதோ, முந்நூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள். கர்த்தரால் கூடாத காரியம் ஒன்றுமே இல்லை. கர்த்தரால் கொஞ்சம் பேரைக் கொண்டும், யுத்தத்திலே வெற்றி கிடைக்க செய்ய முடியும்.

கிதியோன் மற்ற இஸ்ரவேலரெல்லாரையும் தங்கள்தங்கள் கூடாரங்களுக்கு அனுப்பிவிட்டு, அந்த முந்நூறு பேரைமாத்திரம் தன்னோடே வைத்துக்கொள்கிறார்;. மீதியானியரின் சேனை கிதியோனுக்குத் தாழ்விடமான பள்ளத்தாக்கில் இருக்கிறது (நியா 7:8)

முந்நூறு பேரும் தங்கள் கையில் தின்பண்டங்களையும், எக்காளங்களையும் எடுத்துக் கொள்கிறார்கள். இவர்கள் தங்கள் உடமைகளை தங்கள் பாளயத்தில் வைத்துவிட்டு, தின்பண்டங்களையும் எக்காளங்களையும் மாத்திரம் தங்களோடு எடுத்துக்கொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரை நம்புகிறார்கள். தங்களுடைய சுயதேவைகளை சந்திப்பதற்கு, ஏராளமான பொருட்களை தங்களோடு சுமந்து செல்லாமல், கர்த்தர் தங்களை பராமரிப்பார் என்று நம்பி யுத்தத்திற்குப் புறப்பட்டுப்போகிறார்கள்.

கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறு பேரின் விசுவாசத்தை கர்த்தர் ஏற்கெனவே பரீட்சித்துப் பார்த்திருக்கிறார். கர்த்தரை நம்பாமல் அவர்களால் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாது. இந்த சூழ்நிலையில் தங்களுக்கு எது தேவையோ, அதை மாத்திரமே அவர்கள் சுமந்து செல்கிறார்கள். அவர்களுடைய அத்தியாவசிய தேவைகளை சந்திப்பதற்கு தேவையான தின்பண்டங்களைத் தவிர, அவர்களிடத்தில் வேறு போஜனபதார்த்தங்கள் எதுவுமே இல்லை.

கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறு பேருக்கும் ஒரளவு தின்பண்டம் மாத்திரமே இருக்கிறது. அவர்களுடைய கைக்கும் வாய்க்கும் எட்டும் அளவுக்கு மாத்திரமே அவர்களிடத்தில் இருக்கிறது. யுத்தக்களத்திலே அவர்கள் போஜனம்பண்ணப்போகவில்லை. சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். ஆகையினால் அவர்கள் யுத்தக்களத்தில் எதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டுமோ அதற்கு மாத்திரமே முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.

முந்நூறு பேரின் கைகளில் தின்பண்டங்களும் எக்காளங்களும் இருக்கிறது. இவர்கள் தங்கள் கைகளில் பட்டயத்தைப் பிடித்து சத்துருக்களை சங்காரம்பண்ண வேண்டியவர்கள். ஆனால் இப்போது தங்கள் கைகளில் எக்காளத்தைப் பிடித்து, யுத்தக்களத்திலே எக்காளம் ஊதப்போகிறார்கள். அவர்களைப் பார்க்கும்போது,அவர்கள் யுத்தக்களத்திற்குப் போகிறார்களா அல்லது விளையாட்டு மைதானத்திற்குப் போகிறார்களா என்னும் சந்தேகம் வந்துவிடும். அவர்கள் முந்நூறு பேரும் கர்த்தருக்கு கீழ்ப்படிகிறார்கள். கர்த்தரை நம்பி புறப்பட்டுப்போகிறார்கள்.

மீதியானியரின் பாளயம் நியா 7:9-15

நியா 7:9. அன்று ராத்திரி கர்த்தர் அவனை நோக்கி: நீ எழுந்து, அந்தச் சேனையினிடத்திற்குப் போ; அதை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்.

நியா 7:10. போகப் பயப்பட்டாயானால், முதல் நீயும் உன் வேலைக்காரனாகிய பூராவும் சேனையினிடத்திற்குப் போய்,

நியா 7:11. அங்கே என்ன பேசுகிறார்கள் என்றுகேள்; பின்பு சேனையிடத்திற்குப் போக, உன் கைகள் திடப்படும் என்றார்; அப்படியே அவனும் அவன் வேலைக்காரனாகிய பூராவும் சேனையின் முன்னணியிலே ஜாமம் காக்கிறவர்களின் இடமட்டும் போனார்கள்.

நியா 7:12. மீதியானியரும், அமலேக்கியரும், சகல கிழக்கத்திப் புத்திரரும், வெட்டுக்கிளிகளைப் போலத் திரளாய்ப் பள்ளத்தாக்கிலே படுத்துக்கிடந்தார்கள்; அவர்களுடைய ஒட்டகங்களுக்கும் கணக்கில்லை, கடற்கரை மணலைப்போலத் திரளாயிருந்தது.

நியா 7:13. கிதியோன் வந்தபோது, ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு சொப்பனத்தைச் சொன்னான். அதாவது: இதோ ஒரு சொப்பனத்தைக் கண்டேன்; சுட்டியிருந்த ஒரு வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டுவந்தது, அது கூடாரமட்டும் வந்தபோது, அதை விழத்தள்ளிக் கவிழ்த்துப்போட்டது, கூடாரம் விழுந்துகிடந்தது என்றான்.

நியா 7:14. அப்பொழுது மற்றவன்: இது யோவாசின் குமாரனாகிய கிதியோன் என்னும் இஸ்ரவேலனுடைய பட்டயமே அல்லாமல் வேறில்ல; தேவன் மீதியானியரையும், இந்தச் சேனை அனைத்தையும் அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார் என்றான்.

நியா 7:15. கிதியோன் அந்தச் சொப்பனத்தையும் அதின் வியார்த்தியையும் கேட்டபோது, அவன் பணிந்துகொண்டு, இஸ்ரவேலின் பாளயத்திற்குத் திரும்பிவந்து: எழுந்திருங்கள், கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி,

கிதியோனின் சேனையிலுள்ளவர்களின் எண்ணிக்கையை கர்த்தர் குறைத்துப்போடுகிறார். அவர்கள் மீதியானியருக்கு விரோதமாக விசுவாசத்தோடு யுத்தம்பண்ணவேண்டும். விசுவாசம் இல்லையென்றால் இஸ்ரவேல் புத்திரரால் மீதியானியருக்கு எதிராக யுத்தம்பண்ணவே முடியாது. கர்த்தர் கிதியோனின் சேனையில் திரளான எண்ணிக்கையில் பராக்கிரமசாலிகளை சேர்க்கவில்லை. அதற்கு பதிலாக, கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறு பேருக்கும், அவர்களுடைய விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார்.

கிதியோனுக்கும், அவரோடு கூடயிருக்கிற முந்நூறு பேருக்கும், அவர்களுடைய விசுவாசத்திற்கு நல்ல அஸ்திபாரத்தைக் கொடுக்கிறார். அவர்களுடைய விசுவாசம் வலுவான அஸ்திபாரத்தின்மீது கட்டியெழுப்பப்படுகிறது. கர்த்தருடைய வார்த்தையே நம்முடைய விசுவாசத்திற்கு வலுவான அஸ்திபாரம். இதைத் தவிர நமக்கு வேறு அஸ்திபாரம் எதுவுமில்லை.

கர்த்தர் கிதியோனிடம், "நீ எழுந்து அந்த சேனையினிடத்திற்கு போ" (நியா 7:9) என்று சொல்லுகிறார். கிதியோனிடத்தில் விசுவாசம் இருக்கிறது. விசுவாசமுள்ளவர்கள் சும்மாயிருக்கக்கூடாது. கர்த்தருடைய கட்டளைக்கு கீழ்ப்படிந்து கிரியை செய்யவேண்டும். கிதியோன் எழுந்து புறப்பட்டுப்போகவேண்டும்.

கர்த்தர் கிதியோனுக்கு கட்டளை கொடுக்கும்போது, அவருக்கு வாக்குத்தத்தத்தின் வார்த்தையையும் சொல்லுகிறார். மீதியானியர்மீது கிதியோனுக்கு வெற்றி கிடைக்கும் என்று கர்த்தர் உறுதிபண்ணுகிறார். "அதை உன் கையில் ஒப்புக்கொடுத்தேன்" (நியா 7:9) என்று கர்த்தர் கிதியோனுக்கு வாக்குப்பண்ணுகிறார். மீதியானியர் எல்லோரும் இனிமேல் கிதியோனுக்கு சொந்தமானவர்களாயிருப்பார்கள். அவர்கள் கிதியோன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள். கிதியோன் அவர்களை தன்னுடைய இஷ்டம்போல எது வேண்டுமானாலும் செய்யலாம்.

கர்த்தருடைய வார்த்தை அன்று ராத்திரியே கிதியோனுக்கு உண்டாயிற்று. மீதியானியருக்கு விரோதமாய் எப்படி யுத்தம்பண்ணுவது என்று கிதியோன் யோசித்துக்கொண்டிருக்கிறார். கிதியோன் சேனையிலிருந்த 32,000 பேரை, கர்த்தர் முந்நூறு பேராக குறைத்துவிடுகிறார். சொற்ப எண்ணிக்கையுள்ள யுத்த வீரர்களைக்கொண்டு, திரளான எண்ணிக்கையுள்ள மீதியானியரோடு எவ்வாறு யுத்தம்பண்ணுவது என்று கிதியோன் கலங்கிக்கொண்டிருக்கிறார். அன்று ராத்திரியிலேயே கர்த்தருடைய வார்த்தை கிதியோனுக்கு உண்டாயிற்று.

கர்த்தர் கிதியோனை உற்சாகப்படுத்துகிறார். கிதியோனின் விசுவாசத்தை வர்த்திக்கப்பண்ணுகிறார். கிதியோனுடைய விசுவாசத்திற்கு ஆதரவாகப் பேசுகிறார். கர்த்தர் கிதியோனுடைய சேனைக்கு, கிதியோனையே வேவுகாரராக நியமிக்கிறார். கர்த்தர் கிதியோனோடு பேசும்போது, அது இரவுவேளையாகயிருக்கிறது. அந்த இரவிலே அவர் மீதியானியருடைய பாளத்திற்கு தனியாகப் போகவேண்டும். மீதியானியரைப்பற்றிய செய்திகளை சேகரிக்கவேண்டும். "நீ எழும்பு அந்த சேனையினிடத்திற்குப்போ" (நியா 7:9) என்று கர்த்தர் கிதியோனுக்கு சொல்லுகிறார்.

ஒருவேளை, கிதியோன் இரவிலே, மீதியானியருடைய சேனைக்கு, தனிமையிலே போகப் பயப்படலாம். கர்த்தர் அதற்கும் ஒரு உபாயம் சொல்லுகிறார். "போகப் பயப்பட்டாயானால், முதல் நீயும் உன் வேலைக்காரனாகிய பூராவும் சேனையினிடத்திற்குப் போய், அங்கே என்ன பேசுகிறார்கள் என்று கேள்" (நியா 7:10,11) என்று கர்த்தர் கிதியோனுக்கு சொல்லுகிறார்.

மீதியானியரின் சேனையிலுள்ளவர்கள் பேசுவதைக் கேட்கும்போதே, கிதியோனுடைய விசுவாசம் வர்த்திக்கப்படும். கிதியோனின் வேலையாட்களில் பத்துப்பேர், பாகாலின் பலிபீடங்களை நிர்மூலமாக்குவதற்கு, கிதியோனுக்கு உதவிசெய்தார்கள். அந்தப் பத்துபேரில் பூராவும் ஒருவர்.

கிதியோன் இதுவரையிலும் தன்னுடைய சேனையிலுள்ள முந்நூறு பேரையும், மீதியானியரின் சேனையிலுள்ள திரளான யுத்தவீரரையும் பார்க்கிறார். இதனால் கிதியோனின் இருதயம் சோர்ந்துபோயிருக்கிறது. அவருடைய உற்சாகம் குறைந்துபோயிருக்கிறது. மீதியானியரின் திரளான சேனையைப் பார்த்து கிதியோன் கலங்குகிறார். இது இரவுவேளையாகயிருந்தாலும், சந்திரனின் வெளிச்சமும் பிரகாசமாகயிருந்திருக்கவேண்டும். கிதியோன் மேடான பகுதியிலிருக்கிறார். மீதியானியர் பள்ளத்தாக்கிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

கிதியோன் மேட்டுப்பகுதியிலிருந்து பார்க்கும்போது, பள்ளத்தாக்கிலே, மீதியானியரும், அமலேக்கியரும், சகல கிழக்கத்திப் புத்திரரும், வெட்டுக் கிளிகளைப் போலத் திரளாய்ப் பள்ளத்தாக்கிலே படுத்துக்கிடப்பதை அவரால் பார்க்க முடிகிறது. அவர்களுடைய ஒட்டகங்களுக்கும் கணக்கில்லை, கடற்கரை மணலைப்போலத் திரளாயிருந்தது (நியா 7:12).

மீதியானியரின் சேனையிலுள்ளவர்கள் வெட்டுக்கிளிகளைப்போல திரளான எண்ணிக்கையிலிருந்தாலும், அவர்கள் வெட்டுக்கிளிகளைப்போல பலவீனராகவே இருக்கிறார்கள். வெட்டுக்கிளிகளுக்கு பெலமும் வீரமும் இருக்காது. மீதியானியரின் சேனையிலுள்ளவர்களுக்கும் பெலமும் வீரமும் இல்லை.

கிதியோனும் பூராவும், மீதியானியருடைய சேனையினிடத்திற்குப்போய், அங்கே அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்கவேண்டும். பின்பு மீதியானியரின் சேனைக்குப்போக கிதியோனின் கைகள் திடப்படும். கர்த்தர் சொன்ன பிரகாரம் கிதியோனும், அவருடைய வேலைக்காரானாகிய பூராவும், சேனையின் முன்னணியிலே ஜாமம் காக்கிறவர்களின் இடமட்டும் போகிறார்கள் (நியா 7:11).

கிதியோனும் பூராவும் மீதியானியரின் சேனையினிடத்திற்கு வந்தபோது, மீதியானியரில் ஒருவன் பேசுவதை, கிதியோன் ஒட்டுக்கேட்கிறார். கர்த்தரே இந்த சம்பவத்தை கிதியோனுக்கு வாய்க்கப்பண்ணுகிறார். மீதியானியரில் ஒருவன், மற்றொருவனுக்கு, ஒரு சொப்பனத்தை சொல்லுகிறான். அந்த சொப்பனத்தைக் கேட்டபோது கிதியோனின் விசுவாசம் அதிகரிக்கிறது.

கிதியோன் மீதியானியரின் சேனையினிடத்திற்கு வந்தபோது ஒருவன் மற்றொருவனுக்கு ஒரு சொப்பனத்தைச் சொல்லுகிறான். அதாவது: "இதோ ஒரு சொப்பானத்தைக் கண்டேன்; சுட்டியிருந்த ஒரு வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டுவந்தது, அது கூடாரமட்டும் வந்தபோது, அதை விழத்தள்ளிக் கவிழ்த்துப்போட்டது, கூடாரம் விழுந்துகிடந்தது" (நியா 7:13) என்று சொல்லுகிறான்.

அவனுடைய சொப்பனத்தைக் கேட்ட, மற்றவன், அந்த சொப்பனத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறான். "இது யோவாசின் குமாரனாகிய கிதியோன் என்னும் இஸ்ரவேலனுடைய பட்டயமே அல்லாமல் வேறில்லை; தேவன் மீதியானியரையும், இந்தச் சேனை அனைத்தையும் அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்" (நியா 7:14) என்று சொப்பனத்தைக் கேட்ட மீதியானியன், அதற்கு வியாக்கியானம் சொல்லுகிறான்.

மீதியானியன் கண்ட சொப்பனத்தில், சுட்டிருந்த ஒரு வாற்கோதுமை அப்பமானது கிதியோனுக்கு அடையாளமாயிருக்கிறது. கிதியோன் தன்னுடைய குடும்பத்திற்காக, கோதுமையை போரடித்துக்கொண்டிருந்தார். "அதற்குப்பின்பு கர்த்தருடைய தூதனானவர் வந்து, அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவிலிருக்கும் ஒரு கர்வாலிமரத்தின்கீழ் உட்கார்ந்தார்; அப்பொழுது அவனுடைய குமாரன் கிதியோன் கோதுமையை மீதினானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்தான்" (நியா 6:11).

கிதியோனிடத்தில் கொஞ்சம் கோதுமை மாத்திரமே இருக்கிறது. கிதியோனும் அவருடைய குடும்பத்தாரும், கொஞ்சம் மாவினால் சுடப்பட்ட, வாற்கோதுமை அப்பத்திற்கு அடையாளமாயிருக்கிறார்கள். வாற்கோதுமை அப்பம் மிகவும் சாதாரணமானது. கோதுமை அப்பத்தைவிட வாற்கோதுமை அப்பம் மதிப்பும் ருசியும் குறைந்தது. கிதியோனும் அவருடைய குடும்பத்தாரும், இஸ்ரவேலிலே கொஞ்சம் பேராயும், மதிப்பு குறைந்தவர்களாயும் இருக்கிறார்கள்.

கிதியோனின் வீட்டிலுள்ளவர்களுக்கு, வாற்கோதுமை தங்களுக்கு எப்போது கிடைக்கும் என்பது தெரியாது. கிதியோன் வாற்கோதுமையைப் போரடித்து, எப்போது கொண்டு வருகிறாரோ, அப்போதுதான் அவர்களுக்கு வாற்கோதுமை கிடைக்கும். வாற்கோதுமை கிடைத்தவுடன், கிதியோனின் வீட்டார், அதை அவசரம் அவசரமாக, அப்பமாய்ச் சுடுவார்கள்.

மீதியானியரில் ஒருவன், தான் கண்ட சொப்பனத்தில் சுட்டிருந்து ஒரு வாற்கோதுமை அப்பத்தைப்பற்றிச் சொல்லுகிறான். அந்த சொப்பனத்தைக் கேட்ட மற்ற மீதியானியன், "இது யோவாசின் குமாரனாகிய கிதியோன் என்னும் இஸ்ரவேலனுடைய பட்டயமே அல்லாமல் வேறில்லை" (நியா 7:14) என்று அந்த சொப்பனத்திற்கு வியாக்கியானம் சொல்லுகிறான்.

சுடப்பட்ட வாற்கோதுமை அப்பம் மீதியானியரின் பாளயத்திற்கு உருண்டு வருகிறது. அது அவர்களுடைய கூடாரம் மட்டும் வந்து, அதின்மேல் மோதி, அதை விழத்தள்ளி கவிழ்த்துப்போடுகிறது. மீதியானியரின் கூடாரம் கீழே விழுந்து கிடக்கிறது. மீதியானியர் இஸ்ரவேல் புத்திரரை நினைத்து பயந்துபோயிருக்கிறார்கள். மீதியானியரின் ஆவி முறிந்துபோயிருக்கிறது. கிதியோன் என்னும் பெயரைக் கேட்கும்போதே அவர்களுக்கு கலக்கமுண்டாயிற்று.

மீதியானியர் கிதியோனைப்பற்றி நினைக்கும்போது அவர்களுக்கு தூக்கமும் வரவில்லை. ஆகையினால்தான், மீதியானியரின் பாளயத்திலிருக்கிறவர்கள், இரவு வேளையிலும் தூக்கம் வராமல், தாங்கள் கண்ட சொப்பனத்தைப்பற்றியும், அதற்கான வியாக்கியானத்தைப்பற்றியும் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

சொப்பனத்திற்கு வியாக்கியானம் சொன்ன மீதியானியன், "தேவன் மீதியானியரையும், இந்தச் சேனை அனைத்தையும் அவன் கையிலே ஒப்புக்கொடுத்தார்" (நியா 7:14) என்று சொல்லுகிறான்.

அந்தச் சொப்பனத்தையும் அதின் வியார்த்தியையும் கேட்டபோது, கிதியோனின் இருதயம் சந்தோஷப்படுகிறது. அவருடைய ஆவி உற்சாகப்படுகிறது. அவருடைய விசுவாசம் விருத்தியடைகிறது. கிதியோன் அந்த இடத்தில் கர்த்தரை பணிந்துகொண்டு, இஸ்ரவேலின் பாளயத்திற்குத் திரும்பிவருகிறார். இஸ்ரவேலின் சேனையிலுள்ளவர்களிடம், "எழுந்திருங்கள், கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார்" (நியா 7:15) என்று சொல்லுகிறார்.

மீதியானியர் கிதியோனை சுட்டிருந்த வாற்கோதுமை அப்பத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார்கள். இதைக் கேட்கும்போது கிதியோனுடைய மனதிலே சந்தோஷமுண்டாயிற்று. அது ஒரே ஒரு வாற்கோதுமை அப்பமாகயிருந்தாலும், அந்த அப்பம் கிதியோனியரின் பாளயத்தில் மிகப்பெரிய சேதத்தை உண்டுபண்ணிற்று.

கர்த்தரே கிதியோனுக்கு இந்த ஆறுதலான செய்தியை கேட்பதற்கு உதவி செய்திருக்கிறார். கர்த்தர் கிதியோனின் ஆவி உற்சாகப்படுத்துகிறார். கிதியோன் மீதியானியரின் பாளத்திற்கு அருகாமையி லிருந்தாலும், கர்த்தர் தனக்கு கொடுத்த உற்சாகமான வார்த்தைகளுக்காக, கிதியோன் அங்கேயே இரவு வேளையிலேயே, கர்த்தரைப் பணிந்துகொள்கிறார். கர்த்தரை மகிமைப்படுத்துகிறார். கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை இஸ்ரவேலின் கைகளில் ஒப்புக்கொடுத்துவிட்டார் என்னும் நிச்சயம் கிதியோனுக்கு உண்டாயிற்று.

கிதியோன் இந்த நல்ல செய்தியை, தன்னுடைய சேனையிலுள்ள முந்நூறு பேருக்கும் பகிர்ந்து சொல்வதற்காக, இஸ்ரவேலின் பாளயத்திற்கு திரும்பி வருகிறார். "எழுந்திருங்கள், கர்த்தர் மீதியானியரின் பாளயத்தை உங்கள் கைகளில் ஒப்புக்கொடுத்தார்" (நியா 7:15) என்று சொல்லி கிதியோன் தன்னுடைய சேனையிலுள்ள முந்நூறுபேரையும் உற்சாகப்படுத்துகிறார். இரவுவேளையாகயிருந்தாலும், கிதியோனின் சேனையிலுள்ளவர்கள் எழுந்திருக்கவேண்டும். மீதியானியரின் சேனைக்கு விரோதமாகப் புறப்பட்டுப்போகவேண்டும். கர்த்தருடைய ஊழியக்காரர்கள், அவருடைய ஊழியத்தை செய்ய எப்போதுமே ஆயத்தமாயிருக்கவேண்டும்.

கர்த்தருடைய பட்டயம்
நியா 7:16-22

நியா 7:16. அந்த முந்நூறுபேரை மூன்று படையாக வகுத்து,அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்து,

நியா 7:17. அவர்களை நோக்கி: நான் செய்வதைப் பார்த்து, அப்படியே நீங்களும் செய்யுங்கள். இதோ, நான் பாளயத்தின் முன்னணியில் வந்திருக்கும்போது, நான் எப்படிச் செய்கிறேனோ அப்படியே நீங்களும் செய்யவேண்டும்.

நியா 7:18. நானும் என்னோடே இருக்கும் சகலமானபேரும் எக்காளம் ஊதும்போது, நீங்களும் பாளயத்தைச் சுற்றி எங்கும் எக்காளங்களை ஊதி, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்பீர்களாக என்று சொன்னான்.

நியா 7:19. நடுஜாமத்தின் துவக்கத்தில், ஜாமக்காரரை மாற்றிவைத்தபின்பு, கிதியோனும் அவனோடிருந்த நூறுபேரும் அந்த ஜாமத்தின் துவக்கத்திலே பாளயத்தின் முன்னணியில் வந்து, எக்காளங்களை ஊதி, தங்கள் கையிலிருந்த பானைகளை உடைத்தார்கள்.

நியா 7:20. மூன்று படைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து, தீவட்டிகளைத் தங்கள் இடதுகைகளிலும், ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று சத்தமிட்டு,

நியா 7:21. பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நின்றார்கள்; அப்பொழுது பாளயத்தில் இருந்தவர்கள் எல்லாரும் சிதறிக் கூக்குரலிட்டு, ஓடிப் போனார்கள்.

நியா 7:22. முந்நூறுபேரும் எக்காளங்களை ஊதுகையில், கர்த்தர் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாய் ஓங்கப்பண்ணினார்; சேனையானது சேரோத்திலுள்ள பெத்சித்தாமட்டும், தாபாத்திற்குச் சமீபமான ஆபேல்மேகொலாவின் எல்லைமட்டும் ஓடிப்போயிற்று.

மீதியானியர் நீண்டகாலமாகவே இஸ்ரவேல் புத்திரரை நினைத்து பயத்திலே இருக்கிறார்கள். அவர்களுடைய பயமும் திகிலும் இப்போது கிதியோனுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த இரவு வேளையிலே, கிதியோன், மீதியானியரின் சேனையிலுள்ளவர்களை பயமுறுத்த வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். ஏற்கெனவே பயத்திலிருக்கிறவர்களை, இன்னும் அதிகமாக பயமுறுத்தினால், அவர்கள் பயந்து நடுநடுங்கி ஓடிப்போய்விடுவார்கள்.

கிதியோனிடத்தில் முந்நூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள். கிதியோன் அந்த முந்நூறுபேரை மூன்று படையாக வகுத்து, அவர்கள் ஒவ்வொருவன் கையிலும் ஒரு எக்காளத்தையும், வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுக்கிறார் (நியா 7:16). ஒரு படையை கிதியோனே தலைமை தாங்கி வழிநடத்துகிறார் (நியா 7:19).

கிதியோனோடிருக்கிற முந்நூறு பேரும், அவர் என்ன செய்கிறாரோ அதைப் பார்த்து, அவர்களும் அப்படியே செய்யவேண்டும் (நியா 7:17). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் இதே கட்டளையை விசுவாசிகளாகிய நமக்கும் கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவானவர் நம்முடைய இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார். நாம் கிறிஸ்துவினுடைய போர்சேவகர்களாகயிருக்கிறோம். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நமக்கு ஒரு முன்மாதிரியை வைத்துப்போயிருக்கிறார். நாம் இயேசு கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி, முன்னேறிச் செல்லவேண்டும். அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டும்.

கிதியோன் அந்த இரவுவேளையிலேயே மீதியானியரின் பாளத்தை நோக்கிப் போகிறார். நடுஜாமத்தின் துவக்கத்தில், ஜாமக்காரரை மாற்றிவைத்தபின்பு, கிதியோனும் அவரோடிருந்த நூறுபேரும் அந்த ஜாமத்தின் துவக்கத்திலே பாளயத்தின் முன்னணியில் வருகிறார்கள் (நியா 7:19). நடுஜாமத்தின் துவக்கத்திலே மீதியானியர் தங்கள் ஜாமக்காரரை மாற்றி வைக்கிறார்கள். தாங்கள் பாதுகாப்பாகயிருப்பதாக அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். நடுஜாமத்திலே தங்களுக்கு விரோதமாக யாரும் வரமாட்டார்கள் என்று நினைக்கிறார்கள்.

கிதியோனின் சேனை மிகவும் சிறியது. இப்போது கிதியோனோடு கூட நூறு பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் மீதியானியரின் பாளயத்தில் முன்னணியில் வந்துவிடுகிறார்கள். இவர்களுடைய எண்ணிக்கை குறைவாயிருப்பதினால், அந்த இரவுவேளையிலே, மீதியானியரால் இவர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இருட்டில் ஒன்றும் தெரியாது. மீதியானியருக்கு எதைப் பார்த்தாலும் பயமாகயிருக்கிறது. ஆகையினால் அவர்கள் எதையும் பார்க்காமல், தங்களுடைய கண்களை மூடிக்கொண்டிருக்கிறார்கள்.

கிதியோனின் சேனையிலுள்ள ஒவ்வொருவரும் தங்கள் இடது கைகளில் பானைகளையும், தங்கள் வலதுகைகளில் ஊதும் எக்காளங்களையும் பிடித்துக்கொண்டு போகிறார்கள். ஒவ்வொரு பானைக்குள் ஒரு தீவட்டி வைக்கப்பட்டிருக்கிறது. தன்னோடு நூறுபேர் மாத்திரமே இருக்கவேண்டுமென்று கிதியோன் யுத்த வியூகம் வகுத்திருக்கிறார்.

மீதியானியரின் சேனையிலுள்ளவர்களை பயமுறுத்தவேண்டும் என்பது கிதியோனின் திட்டம். இதற்காக கிதியோன் மூன்று வியூகங்களை வகுக்கிறார். அவையாவன: 1. அவர்களெல்லோரும் ஒரே நேரத்தில் எக்காளம் ஊதவேண்டும். 2. கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று உரத்த சத்தமாய்ச் சொல்லவேண்டும். 3. அவர்கள் தங்கள் கைகளிலுள்ள பானைகளை உடைத்து, தீவட்டியின் வெளிச்சத்தை காண்பிக்கவேண்டும்.

கிதியோனுடைய சேனையிலே முந்நூறுபேர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவருடைய வலதுகையிலும் ஊதும் எக்காளத்தைப் பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். கிதியோனும் அவரோடு கூடயிருக்கிற நூறுபேரும் எக்காளம் ஊதும்போது, மீதமுள்ள இருநூறு பேரும் மீதியானியரின் பாளயத்தை சுற்றி எங்கும் எக்காளங்களை ஊதவேண்டும். மீதியானியரின் பாளயத்திலே நெடுந்தொனியோடும் ஊதப்படுகிற எக்காள சத்தம் திடீரென்று கேட்கும். எல்லா எக்காளங்களும் ஒரே நேரத்தில் ஊதப்படுவதினால், அவற்றின் தொனி பெருந்தொனியாயிருக்கும். எக்காள தொனியைக் கேட்டு மீதியானியரின் சேனையிலுள்ளவர்கள் அதிர்ச்சியடைவார்கள். பயத்திலே பாதி உயிர் போய்விடும்.

கிதியோனுடைய சேனையிலுள்ள ஒவ்வொருவரும், தங்கள் இடதுகையிலே வெறும் பானையை பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பானைக்குள்ளும் ஒரு தீவட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோரும் எக்காளம் ஊதும்போது தங்கள் கையிலிருந்த பானைகளை உடைக்கிறார்கள். எல்லோரும் ஒரே வேளையில், திடீரென்று பானையை உடைப்பதினால், பானைக்குள்ளே இருக்கிற தீவட்டிகளின் வெளிச்சம், அந்த இரவு வேளையிலே பிரகாசமாய்த் தெரிகிறது. மீதியானியரின் பாளயம் முழுவதும் பிரகாசமான வெளிச்சமுண்டாயிற்று. மீதியானியர்கள் தீவட்டிகளின் வெளிச்சத்தைப் பார்த்து பயந்துவிடுகிறார்கள். தங்களுடைய பாளயங்களில் சில அக்கினியினால் பற்றி எரிகிறதோ என்று கலங்குகிறார்கள்.

கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறு பேரும் "கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்" என்று உரத்த சத்தமிட்டு ஏகோபித்து சொல்லுகிறார்கள். கிதியோன் தன்னுடைய சேனையிலுள்ள முந்நூறு பேரிடம், "கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்பீர்களாக" (நியா 7:18) என்று சொல்லச் சொன்னார். மூல எபிரெய பாஷையில் இந்த வாக்கியத்தில் "பட்டயம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்படவில்லை.

கிதியோனுடைய மூன்று படைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து, "கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்" (நியா 7:20) என்று சத்தமிடுகிறார்கள். மூலஎபிரெய பாஷையில், இந்த வாக்கியத்தில், "பட்டயம்" என்னும் வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

கர்த்தருடைய பட்டயமே இஸ்ரவேல் புத்திரருக்கு ஜெயத்தைக் கொடுக்கிறது. கிதியோனும் இந்த யுத்தத்திலே தன்னுடைய பட்டயத்தைப் பயன்படுத்தவேண்டும். கிதியோனுடைய பட்டயம் கர்த்தருடைய பட்டயத்திற்கு கீழ்ப்படிந்து செயல்படவேண்டும். நம்முடைய சித்தம் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படியும்போது, கர்த்தர் நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

கிதியோனோடு கூடயிருக்கிறவர்கள், "கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம்" என்று சொன்னதுபோல, நாமும், "கர்த்தருடைய சித்தம் நம்முடைய சித்தம்" என்று சொல்லவேண்டும்.

இந்த யுத்தத்திலே மீதியானியர் தோற்று ஓடிப்போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மீதியானியரோடு யுத்தம்பண்ணியதுபோல, நமக்கும் இந்தப் பிரபஞ்சத்தில் சாத்தானோடும், அவனுடைய அந்தகார லோகாதிபதிகளோடும் யுத்தமுண்டு. கிதியோன் மீதியானியரை அழித்ததுபோல, நாமும் சாத்தானுடைய ராஜ்யத்தை அழிக்கவேண்டும். கிதியோனின் சேனையிலிருந்த முந்நூறு பேரும் எக்காளங்களை ஊதினார்கள். நாமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நித்திய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவேண்டும்.

தன்னுடைய சேனையிலுள்ள ஒவ்வொருவருக்கும் கிதியோன் ஒரு வெறும் பானையையும், அந்தப் பானைக்குள் வைக்கும் தீவட்டியையும் கொடுத்தார். நாமும் இந்தப் பிரபஞ்சத்தில் மண்பாண்டங்களைப்போல இருக்கிறோம். இந்த மண்பாண்டத்திலே, நாம் சுவிசேஷத்தின் வெளிச்சத்தை சுமந்து செல்கிறோம்.

"இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச்சொன்ன தேவன் இயேசுகிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப்பண்ணும்பொருட்டாக, எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்" *(2கொரி 4:6,7)*.

கர்த்தர் தம்முடைய ஊழியத்திலே, தமக்கு சித்தமானவர்களைத் தெரிந்தெடுத்து அவர்களைப் பயன்படுத்துகிறார். இந்த உலகத்தில் ஞானமுள்ளவைகளை அவமாக்கும்படியாக, கர்த்தர் பைத்தியம் என்று சொல்லப்படுகிறவர்களைத் தெரிந்தெடுத்து, அவர்களைப் பயன்படுத்துகிறார்.

மீதியானியரின் பாளயத்தை நொறுக்கிப்போடுவதற்கு ஒரு சாதாரண வாற்கோதுமை அப்பத்தை கர்த்தர் பயன்படுத்துகிறார். வல்லமை கர்த்தருடையது. வாற்கோதுமை அப்பத்தில் வல்லமையோ, பராக்கிரமமோ, பலமோ இல்லை. ஆனாலும் கர்த்தர் அந்த அப்பத்தை, தம்முடைய கைகளில் எடுத்து பயன்படுத்தும்போது, அது கர்த்தருடைய சித்தத்தை நிறைவேற்றும் வல்லமை பெறுகிறது.

விசுவாசிகளாகிய நாம் இந்த உலகத்தில் சாதாரண ஜனங்களாகயிருந்தாலும், கர்த்தர் தம்முடைய கரத்திலே நம்மை ஒரு கருவியாக எடுத்து பயன்படுத்தும்போது, நாமும் பெரிய காரியங்களை செய்வோம். கர்த்தர் நம்மூலமாய் மிகப்பெரிய காரியங்களை நடப்பிப்பார்.

கிதியோனின் சேனையிலுள்ளவர்கள், அவருடைய கட்டளைக்கு கீழ்ப்படிகிறார்கள். மூன்று படைகளின் மனுஷரும் எக்காளங்களை ஊதி, பானைகளை உடைத்து, தீவட்டிகளைத் தங்கள் இடதுகைகளிலும், ஊதும் எக்காளங்களைத் தங்கள் வலது கைகளிலும் பிடித்துக் கொண்டு, கர்த்தருடைய பட்டயம் கிதியோனுடைய பட்டயம் என்று சத்தமிடுகிறார்கள். பாளயத்தைச் சுற்றிலும் அவரவர் தங்கள் நிலையிலே நிற்கிறார்கள்; அப்பொழுது மீதியானியரின் பாளயத்தில் இருந்தவர்கள் எல்லாரும் சிதறிக் கூக்குரலிட்டு, ஓடிப் போகிறார்கள் *(நியா 7:20,21)*.

மீதியானியரின் சேனையிலுள்ளவர்கள் எக்காள சத்தத்தைக் கேட்டபோது, குழம்பிப்போய்விடுகிறார்கள். முந்நூறுபேரும் எக்காளங்களை ஊதுகையில், கர்த்தர் மீதியானியரின் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாக ஓங்கப்பண்ணுகிறார். முந்நூறு பேரும் தங்கள் கைகளில் தீவட்டிகளை பிடித்திருக்கும்போது, மீதியானியரின் பாளயமெங்கும் வெளிச்சமுண்டாயிற்று. மீதியானியர் ஒருவரையொருவர் அழித்துப்போடுவதற்கு இந்த வெளிச்சம் அவர்களுக்கு உதவிசெய்கிறது.

மீதியானியரின் பாளயத்திலிருக்கிறவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே பயந்து நடுங்கத்திலிருக்கிறார்கள். கிதியோனின் சேனையிலுள்ள முந்நூறுபேரும் ஏகோபித்து எக்காளம் ஊதியபோது, தங்களுக்கு விரோதமாக பெரிய சேனை யுத்தம்பண்ண வருகிறார்களோ என்னும் சந்தேகமும் பயமும் அவர்களுக்கு உண்டாயிற்று. எக்காள சத்தமும் தீவட்டி வெளிச்சமும் திடீரென்று உண்டானதினால், மீதியானியர் கலக்கத்திலும் குழப்பத்திலும் இருக்கிறார்கள். அவர்கள் தெளிவாக சிந்திப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போயிற்று. தங்களை ஆயத்தம்பண்ணுவதற்கு அவர்களுக்கு அவகாசம் கிடைக்கவில்லை.

கிதியோனின் சேனையிலுள்ளவர்கள் எக்காளங்களை ஊதி, தங்கள் கைகளில் தீவட்டிகளை பிடித்தபோது, கர்த்தரும் மீதியானியருக்கு விரோதமாக கிரியை செய்கிறார். முந்நூறு பேரும் எக்காளங்களை ஊதவேண்டும். கர்த்தர் மீதியானியரின் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாக ஓங்கப்பண்ணுகிறார். கர்த்தரே இந்தக் காரியத்தை நடப்பிக்கிறார். கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் இல்லாமல், இஸ்ரவேல் புத்திரரால் மீதியானியரை ஜெயிக்க முடியாது.

கர்த்தருடைய வல்லமையினால் மீதியானியரின் பாளயத்திலே குழப்பமுண்டாயிற்று. தங்களுக்கு விரோதமாக பெரிய சேனை யுத்தம்பண்ணவருகிறார்களோ என்னும் பயம் அவர்களுக்கு உண்டாயிற்று. இவையெல்லாமே மீதியானியரின் மனதில் ஏற்பட்ட கற்பனைகள். கற்பனையின் வல்லமை சில சமயங்களில் இதுபோன்ற ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்திவிடும். ஒரு சிலர் கற்பனை உலகத்திலேயே சந்தோஷமாயிருப்பார்கள். வேறு சிலரோ தேவையில்லாத காரியங்களை கற்பனை செய்து, வேதனையிலும், துக்கத்திலும் மூழ்கிவிடுவார்கள்.

கர்த்தருக்கு விரோதமாக எழும்புகிறவர்கள் அழிந்துபோவார்கள். கர்த்தருடைய சபைக்கு விரோதமாக எழும்புகிற சத்துருக்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்வார்கள். மீதியானியரின் சேனையானது சேரோத்திலுள்ள பெத்சித்தாமட்டும், தாபாத்திற்குச் சமீபமான ஆபேல்மேகொலாவின் எல்லைமட்டும் ஓடிப்போயிற்று (நியா 7:22).

இஸ்ரவேலர் கூடிவந்தார்கள் நியா 7:23-25

நியா 7:23. அப்பொழுது நப்தலி மனுஷரும், ஆசேர் மனுஷரும், மனாசேயின் சகல மனுஷருமாகிய இஸ்ரவேலர் கூடிவந்து, மீதியானியரைப் பின்தொடர்ந்து போனார்கள்.

நியா 7:24. கிதியோன் எப்பிராயீம் மலைகளெங்கும் ஆட்களை அனுப்பி: மீதியானியருக்கு விரோதமாயிறங்கி, பெத்தாபரா இருக்கும் யோர்தான்மட்டும் வந்து, அவர்களுக்கு முந்தித் துறைகளைக் கட்டிக் கொள்ளுங்கள் என்று சொல்லச்சொன்னான்; அப்படியே எப்பிராயீமின் மனுஷர் எல்லாரும் கூடி, பெத்தாபரா இருக்கும் யோர்தான்மட்டும் வந்து, துறைகளைக் கட்டிக்கொண்டு,

நியா 7:25. மீதியானியரின் இரண்டு அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் பிடித்து, ஓரேபை ஓரேப் என்னப்பட்ட கன்மலையிலும், சேபை சேப் என்னப்பட்ட ஆலையிலும் கொன்றுபோட்டு, மீதியானியரைத் துரத்தி, ஓரேப் சேப் என்பவர்களின் தலைகளை யோர்தானுக்கு இக்கரையிலிருந்த கிதியோனிடத்துக்குக் கொண்டுவந்தார்கள்.

கிதியோனின் சேனையில், ஆரம்பத்தில், 32,000 பேர் இருந்தார்கள். கர்த்தரோ அவர்களில் முந்நூறு பேரை மாத்திரம் வைத்துக்கொண்டு, மீதி பேரை அனுப்பிவிட்டார். அனுப்பப்பட்டவர்கள் இப்போது மறுபடியும் ஒன்றுகூடி, மீதியானியருக்கு விரோதமாக வருகிறார்கள்.

மீதியானியரின் சேனையானது சேரோத்திலுள்ள பெத்சித்தாமட்டும், தாபாத்திற்குச் சமீபமான ஆபேல்மேகொலாவின் எல்லைமட்டும் ஓடிப்போயிற்று. அப்பொழுது நப்தலி மனுஷரும், ஆசேர் மனுஷரும், மனாசேயின் சகல மனுஷருமாகிய இஸ்ரவேலர் கூடிவந்து, மீதியானியரைப் பின்தொடர்ந்து போகிறார்கள் (நியா 7:23).

மீதியானியரால் இஸ்ரவேலருக்கு விரோதமாக எதிர்த்து நிற்கமுடியவில்லை. மீதியானியரின் இருதயத்தில் பயம் நிரம்பியிருக்கிறது. அவர்கள் இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண பயப்படுகிறார்கள். மீதியானியர் பயத்தோடும், திகிலோடும், நடுக்கத்தோடும், இஸ்ரவேல் புத்திரருக்கு பயந்து, தங்களுடைய ஜீவனைக் காத்துக்கொள்ள, தப்பித்து ஓடிப்போகிறார்கள்.

இப்போது மீதியானியரைத் துரத்துகிற இஸ்ரவேல் புத்திரர், இதற்கு முன்பு, அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண பயந்து ஓடிப்போனவர்கள். "பயமும் திகிலும் உள்ளவன் எவனோ அவன் திரும்பி, கீலேயாத் மலைகளிலிருந்து விரைவாய் ஓடிப்போகக்கடவன்" (நியா 7:3) என்று கிதியோன் சொன்னவுடனே, 22,000 பேர் ஓடிப்போய்விட்டார்கள். அவ்வாறு பயந்து ஓடிப்போன இஸ்ரவேலர், இப்போது மறுபடியும் கூடிவந்து, மீதியானியரைப் பின்தொடர்ந்து போகிறார்கள்.

யுத்தத்தின் முக்கியமான பகுதி முடிவடைந்துவிட்டது. மீதியானியர் தோற்று ஓடிப்போகிறார்கள். ஆகையினால் தங்களுக்கு இனிமேல் உயிர்ச்சேதம் ஏற்படாது என்பது இஸ்ரவேல் புத்திரருக்கு தெரிந்திருக்கிறது. மேலும் யுத்தத்தின் கொள்ளைப்பொருளையும் பங்கிடவேண்டும். மீதியானியரை பின்தொடர்ந்துபோனால்தான், அவர்களுடைய உடமைகளை கொள்ளையிட முடியும். இதற்காகவே பயந்து ஓடிப்போன இஸ்ரவேலர், இப்போது மறுபடியுமாய் கூடிவந்து மீதியானியரைப் பின்தொடர்ந்து போகிறார்கள்.

கிதியோன் எப்பிராயீம் மலைகளெங்கும் ஆட்களை அனுப்பி: "மீதியானியருக்கு விரோதமாயிறங்கி, பெத்தாபரா இருக்கும் யோர்தான்மட்டும் வந்து, அவர்களுக்கு முந்தித் துறைகளைக் கட்டிக் கொள்ளுங்கள்" (நியா 7:24) என்று சொல்லச்சொல்லுகிறார்; அப்படியே எப்பிராயீமின் மனுஷர் எல்லாரும் கூடி, பெத்தாபரா இருக்கும் யோர்தான்மட்டும் வந்து, துறைகளைக் கட்டிக்கொள்கிறார்கள்.

எப்பிராயீம் மனுஷருக்கு கிதியோன் தன்னுடைய ஆட்களை அனுப்புகிறார். மீதியானியர் தப்பித்து ஓடும்போது, யோர்தானைக் கடந்து, தங்கள் தேசத்திற்கு ஓடிப்போவார்கள். மீதியானியர் யோர்தானைக் கடக்க முடியாதவாறு, யோர்தானிலே தடுப்பு ஏற்படுத்திவிட்டால், அவர்களால் யோர்தானைக் கடந்து ஓடிப்போகமுடியாது. தோற்று ஓடிப்போகிற மீதியானியர், தங்கள் தேசத்திற்கு தப்பித்து ஓடிப்போகவேண்டுமென்றால் யோர்தான் வழியாகத்தான் போகவேண்டும். இப்போதோ கிதியோனின் கட்டளை பிரகாரம், எப்பிராயீமின் மனுஷர் யோர்தானிலே தடுப்பை ஏற்படுத்துகிறார்கள். மீதியானியர் தப்பித்து போகமுடியாதவாறு, பாதைகளை அடைத்து விடுகிறார்கள்.

எப்பிராயீமின் மனுஷர் மீதியானியரின் இரண்டு அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் பிடித்து, ஓரேபை ஓரேப் என்னப்பட்ட கன்மலையிலும், சேபை சேப் என்னப்பட்ட ஆலையிலும் கொன்றுபோடுகிறார்கள் (நியா 7:25). அவர்கள் மீதியானியரைத் துரத்தி, ஓரேப் சேப் என்பவர்களின் தலைகளை யோர்தானுக்கு இக்கரையிலிருந்த கிதியோனிடத்துக்குக் கொண்டுவருகிறார்கள். ஓரேப் என்னும் பெயருக்கு "காகம்" என்று பொருள். சேப் என்னும் பெயருக்கு "நரி" என்று பொருள். இவர்கள் இருவருடைய சுபாவங்களும், காகத்தைப்போலவும், நரியைப்போலவும் இருந்திருக்க வேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

8 அதிகாரம்

கிதியோனுக்கு மீதியானியர்மீது ஜெயம் கிடைத்திருக்கிறது. இந்த அதிகாரத்தில் கிதியோனுடைய ஜீவிய சரித்திரமும், அவருடைய ஆளுகையும் எழுதப்பட்டிருக்கிறது. கிதியோன் எப்பிராயீம் மனுஷருடைய கோபத்தை ஆற்றுகிறார் (நியா 8:1-3).

கிதியோனும் அவரோடிருக்கிற முந்நூறுபேரும் மீதியானியரை பின்தொடர்ந்துபோகிறார்கள் (நியா 8:4,10-12). கிதியோன் சுக்கோத்தின் மனுஷரையும், பெனூவேலின் மனுஷரையும் நீதியாய்த் தண்டிக்கிறார் (நியா 8:5-9,13-17).

கிதியோன் மீதியானியரின் இரண்டு ராஜாக்களை கொன்றுபோடுகிறார் (நியா 8:18-21). கிதியோன் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்ய மறுத்துவிடுகிறார் (நியா 8:22,23). கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, அதை தன் ஊரான ஒப்ராவிலே வைக்கிறார் (நியா 8:24-27). இஸ்ரவேல் தேசம் கிதியோனுடைய நாட்களிலே நாற்பது வருஷம் அமைதலாயிருக்கிறது (நியா 8:28).

கிதியோன் நல்ல விருத்தாப்பியத்திலே மரித்துப்போகிறார். கிதியோனின் சந்ததியார் ஏராளமானோராயிருக்கிறார்கள் (நியா 8:29-32). கிதியோன் மரித்த பின் இஸ்ரவேல் புத்திரர் கிதியோனையும், இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரையும் நினையாமல் போகிறார்கள் (நியா 8:33-35).

எப்பிராயீம் மனுஷர்
நியா 8:1-3

நியா 8:1. அப்பொழுது எப்பிராயீம் மனுஷர் அவனை நோக்கி: நீ மீதியானியர்மேல் யுத்தம்பண்ணப் போகிறபோது, எங்களை அழைப்பிக்க வில்லையே, இப்படி நீ எங்களுக்குச் செய்தது என்ன என்று, அவனோடே பலத்த வாக்குவாதம்பண்ணினார்கள்.

நியா 8:2. அதற்கு அவன்: நீங்கள் செய்ததற்கு நான் செய்தது எம்மாத்திரம்? அபியேஸ்ரியரின் திராட்சப்பழத்தின் முழு அறுப்பைப்பார்க்கிலும், எப்பிராயீமரின் மீதியான அறுப்பு அதிகம் அல்லவா?

நியா 8:3. தேவன் உங்கள் கையிலே மீதியானியரின் அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் ஒப்புக்கொடுத்தாரே; நீங்கள் செய்ததிலும் நான் செய்யக்கூடியது எம்மாத்திரம் என்றான்; இந்த வார்த்தையை அவன் சொன்னபோது, அவன்மேலிருந்த அவர்களுடைய கோபம் ஆறிற்று.

மீதியானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு பொதுவான சத்துருக்களாயிருக்கிறார்கள். கிதியோன் அவர்களை ஒடுக்குகிறார். சத்துருக்கள் ஒடுங்கின பின்பு, இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே சண்டைகள் உண்டாயிற்று.

எப்பிராயீம் மனுஷர் மீதியானியரின் இரண்டு அதிபதிகளாகிய ஓரேபையும், சேபையும் பிடித்து கிதியோனிடத்திற்கு கொண்டு வருகிறார்கள். கிதியோன் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் படைத்தளபதியாயிருக்கிறார். எப்பிராயீம் மனுஷருடைய மனதிலே கிதியோனைக் குறித்து வருத்தமுண்டாயிற்று.

எப்பிராயீம் மனுஷர் கிதியோனை நோக்கி: "நீ மீதியானியர்மேல் யுத்தம்பண்ணப்போகிறபோது, எங்களை அழைப்பிக்கவில்லையே, இப்படி நீ எங்களுக்குச் செய்தது என்ன" (நியா 8:1) என்று, கிதியோனோடே பலத்த வாக்குவாதம்பண்ணுகிறார்கள்.

எப்பிராயீம் மனுஷருடைய வாக்குவாதத்திலே நியாயமில்லை. கிதியோன் மீதியானியர்மேல் யுத்தம்பண்ணப்போகிறபோது, தங்களை அழைப்பிக்கவில்லை என்பது எப்பிராயீம் மனுஷருடைய குற்றச்சாட்டு. எப்பிராயீம் மனுஷர் மனாசே கோத்திரத்தின்மீது பொறாமைப்படுகிறார்கள். தங்களுடைய மதிப்பும் மரியாதையும், மேன்மையும் மனாசே புத்திரரால் மங்கிப்போயிற்று என்று எப்பிராயீம் மனுஷர் நினைக்கிறார்கள்.

எப்பிராயீம் மனுஷர் கிதியோனோடு பலத்த வாக்குவாதம்பண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுடைய வாக்குவாதத்தில் நீதியில்லை. கர்த்தரே கிதியோனை தம்முடைய ஊழியக்காரராக எழுப்பினார். கிதியோன் மீதியானியரின் கையிலிருந்து இஸ்ரவேல் புத்திரரை இரட்சித்தார். கிதியோன் ஒருபோதும் தன்னுடைய சுயமகிமையைத் தேடவில்லை. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணுகிறார். கர்த்தருடைய கட்டளையின் பிரகாரம் கிதியோன் ஒவ்வொரு காரியமாக செய்து முடிக்கிறார். யுத்தம் கர்த்தருடையது. ஆகையினால் எப்பிராயீம் மனுஷர் கிதியோனோடு வாக்குவாதம்பண்ணக்கூடாது.

எப்பிராயீம் மனுஷர் வாக்குவாதம்பண்ண விரும்பினால், கிதியோனை எழுப்பின, கர்த்தரோடு வாக்குவாதம்பண்ண வேண்டும். கர்த்தருடைய சித்தத்திற்கும், திட்டத்திற்கும் விரோதமாக, எந்த மனுஷனாலும் எதிர்த்து நின்று வழக்காடவும் முடியாது. வாக்குவாதம்பண்ணவும் முடியாது. கர்த்தர் தம்முடைய கிரியைகளெல்லாவற்றிலும் நீதியும், நியாயமும், உண்மையுமுள்ளவர்.

எப்பிராயீம் மனுஷர் கிதியோனோடே வாக்குவாதம்பண்ணும்போது, அவர்கள் கர்த்தருடைய தெய்வீக சித்தத்திற்கு விரோதமாக வாக்குவாதம்பண்ணுகிறார்கள். கிதியோன் மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனபோது, எப்பிராயீம் மனுஷர் தாங்களாகவே கிதியோனோடு சேர்ந்துகொள்ளவில்லை. மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண, எப்பிராயீமர் தங்களை அர்ப்பணிக்கவில்லை.

மீதியானியரால் கிதியோனின் சேனைக்கு விரோதமாக எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. அவர்கள் கிதியோனின் சேனைக்கு முன்பாக தோற்று ஓடிப்போகிறார்கள். கிதியோன் மீதியானியருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரரைக் கூட்டிச் சேர்த்தபோது, எப்பிராயீம் மனுஷர் தாங்களாகவே முன்வந்து, கிதியோனோடு சேர்ந்துகொள்ளவில்லை. கிதியோன் தங்களை அழைக்கவேண்டுமென்று எப்பிராயீம் மனுஷர் எதிர்பார்க்கக்கூடாது.

இப்போது யுத்தம் முடிந்துவிட்டது. மீதியானியர் தோற்று ஓடிப்போகிறார்கள். கிதியோன் எப்பிராயீம் மலைகள் எங்கும் ஆட்களை அனுப்பி, மீதியானியருக்கு விரோதமாக இறங்குமாறு சொல்லுகிறார். அதன் பின்பே, எப்பிராயீம் மனுஷர் மீதியானியரின் இரண்டு அதிபதிகளை பிடிக்க வருகிறார்கள்.

கோழைகள் யுத்தத்திற்கு முந்திப்போகமாட்டார்கள். யுத்தத்திலே எல்லா ஆபத்துக்களும் நீங்கிப்போயிற்று என்பதை உறுதிபண்ணிய பின்பு, கோழைகள் தங்களை வீரர்கள்போல காண்பித்துக்கொள்வார்கள். அதுவரையிலும் பொறுமையோடு காத்திருப்பார்கள். எப்பிராயீம் மனுஷர் தங்களுடைய சுயநலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். ஆபத்து அருகாமையிலிருக்கும்போது, இவர்கள் கிதியோனோடு துணிந்து சேரவில்லை.

எப்பிராயீம் மனுஷர் கிதியோனோடே பலத்த வாக்குவாதம்பண்ணுகிறார்கள். கிதியோன் அவர்களுக்கு மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். தன்னுடைய கிரியைகளை அவர்களிடத்தில் நியாயப்படுத்துகிறார். அவர்களை சமாதானப்படுத்துகிறார். அவர்களுடைய கோபத்தை ஆற்றும் வண்ணமாய் ஞானத்தோடு பேசுகிறார்.

கிதியோனுடைய வார்த்தையில் விவேகமும், ஞானமும், பொறுமையும் இருக்கிறது. கிதியோன் எப்பிராயீம் மனுஷரிடத்தில் மிகுந்த பொறுமையோடு பேசுகிறார். கிதியோனுக்கு மீதியானியர்மீது கிடைத்த வெற்றியைவிட, எப்பிராயீம் மனுஷருடைய கோபத்தை ஆற்றியதே மிகப்பெரிய வெற்றியாகயிருக்கிறது. இந்த வெற்றி கிதியோனுடைய சாந்தகுணத்தினால் உண்டாயிற்று.

கிதியோன் மீதியானியருக்கு விரோதமாக துணிந்து யுத்தம்பண்ணினார். இரவுவேளையிலே அவர்களுடைய பாளயத்திற்கே போனார். ஆனாலும் கிதியோன் தன்னுடைய வீரதீர செயல்களை பெருமைப்படுத்தாமல், எப்பிராயீம் மனுஷருடைய செயல்களை மேன்மைப்படுத்துகிறார்.

கிதியோன் எப்பிராயீம் மனுஷரிடத்தில் "நீங்கள் செய்ததற்கு நான் செய்தது எம்மாத்திரம்? அபியேஸ்ரியரின் திராட்சப்பழத்தின் முழு அறுப்பைப்பார்க்கிலும், எப்பிராயீமரின் மீதியான அறுப்பு அதிகம் அல்லவா?" (நியா 8:2) என்று சொல்லுகிறார்.

எப்பிராயீம் மனுஷர் தப்பி ஓடின மீதியானியரைப் பிடிக்கிறார்கள். அபியேஸ்ரியர் கிதியோனோடு கூடயிருந்து மீதியானியருக்கு விரோதமாக யுத்தம்பண்ணினார்கள். அபியேஸ்ரியரின் கிரியைகள் திராட்சப்பழத்தின் முழுஅறுப்புபோல இருக்கிறது. எப்பிராயீம் மனுஷரோ தப்பி ஓடின மீதியானியரைப் பிடிக்கிறார்கள். இவர்களுடைய கிரியைகள் திராட்சப்பழத்தின் மீதியான அறுப்பைப்போல இருக்கிறது. முழுஅறுப்பைவிட, மீதியான அறுப்பே அதிகம் என்று கிதியோன் சொல்லுகிறார்.

எப்பிராயீம் மனுஷர் இஸ்ரவேல் தேசத்திற்கு மிகப்பெரிய சேவை செய்திருக்கிறார்கள் என்று சொல்லி, கிதியோன் அவர்களைப் புகழ்ந்து பேசுகிறார். எப்பிராயீம் மனுஷர் ஆரம்பத்திலேயே தன்னோடு வரவில்லை என்பதற்காக கிதியோன் அவர்களைக் குறை சொல்லவில்லை.

"தேவன் உங்கள் கையிலே மீதியானியரின் அதிபதிகளாகிய ஓரேபையும் சேபையும் ஒப்புக்கொடுத்தாரே; நீங்கள் செய்ததிலும் நான் செய்யக்கூடியது எம்மாத்திரம்" (நியா 8:3) என்று கிதியோன் எப்பிராயீம் மனுஷரைப் புகழ்ந்துபேசுகிறார். கிதியோன் எப்பிராயீம் மனுஷரிடத்தில் இந்த வார்த்தையை சொன்னபோது, எப்பிராயீம் மனுஷருக்கு கிதியோன் மேலிருந்த அவர்களுடைய கோபம் ஆறிற்று.

சத்துருக்களோடு யுத்தம்பண்ணி வெற்றி பெறுவதைவிட, அந்த வெற்றியை தங்களுக்கு சொந்தமாக்கிக்கொண்டு, அதன் சந்தோஷத்தை பூரணமாய் அனுபவிப்பதே மிகவும் மேன்மையானது. ஒரு மீனை தூண்டில் போட்டு பிடிப்பதைவிட, தூண்டிலில் பிடித்த மீனை லாவகமாக எடுத்து, அதை நம்முடைய கூடையில் போடுவதுதான்நமக்கு ஆசீர்வாதமாயிருக்கும். நாம் எத்தனை மீன்களைப் பிடித்தாலும், அந்த மீன்களை நம்முடைய கூடையில் பாதுகாப்பாகப் போடவில்லையென்றால், நமக்கு ஒரு பிரயோஜனமுமில்லை.

கிதியோனுடைய நல்ல சுபாவத்தை நமக்கு சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும். நமக்கு விரோதமாக எழும்பும் பொறாமைகளையும், மனக்கசப்புக்களையும் நீக்கவேண்டுமென்றால், நாம் மனத்தாழ்மையோடிருக்கவேண்டும். மென்மையான பிரதியுத்தரம் தேவையில்லாத வாக்குவாதங்களைத் தவிர்க்கும்.

எப்பிராயீம் மனுஷர் ஆரம்பத்தில் கிதியோனோடு பலத்த வாக்குவாதம்பண்ணினார்கள். அவர்கள் கிதியோன் சொன்ன பிரதியுத்தர வார்த்தைகளைக் கேட்டபோது, அவர்களுக்கு கிதியோன் மேலிருந்த கோபம் ஆறிற்று.

"மெதுவான பிரதியுத்தரம் உக்கிரத்தை மாற்றும்; கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும். ஞானிகளின் நாவு அறிவை உபயோகப்படுத்தும்; மூடரின் வாயோ புத்தியீனத்தைக் கக்கும்" (நீதி 15:1,2).

சேபாவும் சல்முனாவும்
நியா 8:4-17

நியா 8:4. கிதியோன் யோர்தானுக்கு வந்தபோது, அவனும் அவனோடிருந்த முந்நூறுபேரும் அதைக்கடந்துபோய், விடாய்த்திருந்தும் (சத்துருவை) பின்தொடர்ந்தார்கள்.

நியா 8:5. அவன் சுக்கோத்தின் மனுஷரை நோக்கி: என்னோடிருக்கிற ஜனத்திற்குச் சில அப்பங்களைக் கொடுங்கள்; அவர்கள் விடாய்த்திருக்கிறார்கள், நான் மீதியானியரின் ராஜாக்களாகிய சேபாவையும் சல்முனாவையும் பின்தொடருகிறேன் என்றான்.

நியா 8:6. அதற்குச் சுக்கோத்தின் பிரபுக்கள்: உன் சேனைக்கு நாங்கள் அப்பம் கொடுக்கிறதற்குச் சேபா சல்முனா என்பவர்களின் கை உன் கைவசமாயிற்றோ என்றார்கள்.

நியா 8:7. அப்பொழுது கிதியோன் அவர்களை நோக்கி: கர்த்தர் சேபாவையும் சல்முனாவையும் என் கையில் ஒப்புக்கொடுக்கும் போது, உங்கள் மாம்சத்தை வனாந்தரத்தின் முள்ளுகளாலும் நெரிஞ்சில்களாலும் கிழித்துவிடுவேன் என்று சொல்லி,

நியா 8:8. அவ்விடம் விட்டு, பெனூவேலுக்குப் போய், அவ்வூராரிடத்தில் அந்தப்படியே கேட்டான்; சுக்கோத்தின் மனுஷர் பிரதியுத்தரமாகச் சொன்னபடியே பெனூவேலின் மனுஷரும் அவனுக்குச் சொன்னார்கள்.

நியா 8:9. அப்பொழுது அவன், பெனூவேலின் மனுஷரைப் பார்த்து: நான் சமாதானத்தோடே திரும்பிவரும்போது, இந்தக் கோபுரத்தை இடித்துப்போடுவேன் என்றான்.

நியா 8:10. சேபாவும் சல்முனாவும் அவர்களோடேகூட அவர்களுடைய சேனைகளும் ஏறக்குறைய பதினையாயிரம்பேர் கர்கோரில் இருந்தார்கள்; பட்டயம் உருவத்தக்க லட்சத்து இருபதினாயிரம்பேர் விழுந்தபடியால், கிழக்கத்தியாரின் சகல சேனையிலும் இவர்கள் மாத்திரம் மீந்திருந்தார்கள்.

நியா 8:11. கிதியோன் கூடாரங்களிலே குடியிருக்கிறவர்கள் வழியாய் நோபாகுக்கும், யொகிபெயாவுக்கும் கிழக்கே போய், அந்தச் சேனை பயமில்லை என்றிருந்த போது, அதை முறிய அடித்தான்.

நியா 8:12. சேபாவும் சல்முனாவும் ஓடிப்போனார்கள்; அவனோ அவர்களைத் தொடர்ந்து, சேபா சல்முனா என்னும் மீதியானியரின் இரண்டு ராஜாக்களையும் பிடித்து, சேனை முழுவதையும் கலங்கடித்தான்.

நியா 8:13. யோவாசின் குமாரனாகிய கிதியோன் யுத்தம்பண்ணி, சூரியன் உதிக்கும் முன்னே திரும்பிவந்தபோது,

நியா 8:14. சுக்கோத்தின் மனுஷரில் ஒரு வாலிபனைப் பிடித்து, அவனிடத்தில் விசாரித்தான்; அவன் சுக்கோத்தின் பிரபுக்களும் அதின் மூப்பருமாகிய எழுபத்தேழு மனுஷரின் பேரை அவனுக்கு எழுதிக்கொடுத்தான்.

நியா 8:15. அவன் சுக்கோத்து ஊராரிடத்தில் வந்து: இதோ, விடாய்த்திருக்கிற உன் மனுஷருக்கு நாங்கள் அப்பம் கொடுக்கிறதற்குச் சேபா சல்முனா என்பவர்களின் கை உன் கைவசமாயிற்றோ என்று நீங்கள் என்னை நிந்தித்துச் சொன்ன சேபாவும் சல்முனாவும் இங்கே இருக்கிறார்கள் என்று சொல்லி,

நியா 8:16. பட்டணத்தின் மூப்பரைப் பிடித்து, வனாந்தரத்தின் முள்ளுகளையும் நெரிஞ்சில்களையும் கொண்டுவந்து, அவைகளால் சுக்கோத்தின் மனுஷருக்குப் புத்திவரப்பண்ணி,

நியா 8:17. பெனூவேலின் கோபுரத்தை இடித்து, அவ்வூர் மனுஷரையும் கொன்றுபோட்டான்.

கிதியோன் இஸ்ரவேலின் சேனைக்கு வீரமுள்ள படைத்தளபதியாயிருக்கிறார். கிதியோனும், அவரோடிருக்கிற முந்நூறு பேரும் மீதியாயிருக்கிற மீதியானியரை பிடிப்பதற்கு அவர்களைப் பின்தொடர்ந்து போகிறார்கள்.

மீதியானியரின் ராஜாக்களாகிய சேபாவும் சல்முனாவும் அவர்களோடேகூட அவர்களுடைய சேனைகளும் ஏறக்குறைய பதினையாயிரம்பேர் கர்கோரில் இருக்கிறார்கள்; பட்டயம் உருவத்தக்க லட்சத்து இருபதினாயிரம்பேர் விழுந்தபடியால், கிழக்கத்தியாரின் சகல சேனையிலும் இவர்கள் மாத்திரம் மீந்திருக்கிறார்கள் (நியா 8:10).

எப்பிராயீம் மனுஷர் யோர்தானிலே துறைகளைக் கட்டி, தப்பி ஓடிவருகிற மீதியானியரை தடுத்து நிறுத்துவதற்கு முன்பாக, சேபாவும் சல்முனாவும், அவர்களோடுகூட 15,000 மீதியானியரும் யோர்தானைத் தாண்டி கர்கோருக்கு தப்பித்து ஓடிப்போகிறார்கள்.

மீதியானியரில் ஒருவரும் தப்பக்கூடாது என்பது கிதியோனின் விருப்பம். அவர்களை முற்றிலுமாய் சங்காரம்பண்ணவேண்டுமென்று கிதியோன் திட்டமிடுகிறார். கர்கோரிலிருக்கிற சேபாவையும், சல்முனாவையும், 15,000 மீதியானியரையும் சங்காரம்பண்ணினால்தான், மீதியானியர் மொத்தமாய் சங்காரமாவார்கள். இல்லையென்றால், மீதமுள்ள மீதியானியர் பலுகிப்பெருகி, பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்களாய் எழும்புவார்கள்.

கிதியோனும் அவரோடுகூட முந்நூறு பேரும் யோர்தானுக்கு வந்து, அதைக் கடந்துபோகிறார்கள். அவர்களெல்லோருமே விடாய்த்திருக்கிறார்கள். ஆனாலும் சத்துருவைப் பின்தொடர்ந்து செல்லும் முயற்சியை அவர்கள் கைவிடவில்லை. இவர்கள் தங்களுடைய சுயமுயற்சியினால் யோர்தானுக்குப் போகவில்லை. இவர்களுடைய சரீரம் விடாய்த்திருந்தாலும், இவர்களுடைய ஆத்துமா கர்த்தருக்குள் உற்சாகமாயிருக்கிறது. இவர்கள் கர்த்தருடைய வாக்குத்தத்தை நம்பி புறப்பட்டுப்போகிறார்கள்.

கிதியோனும், அவரோடுகூட முந்நூறுபேரும் தங்கள் சுயபலத்தினாலோ அல்லது சுயபராக்கிரமத்தினாலோ மீதியானியரை பின்தொடர்ந்து போகவில்லை. அவர்கள் தங்கள் சொந்த பலத்தை நம்புவதற்கு பதிலாக கர்த்தருடைய வார்த்தையை நம்புகிறார்கள். ஆகையினால் அவர்கள் விடாய்த்திருந்தும், சத்துருக்களைப் பின்தொடர்ந்து போகிறார்கள்.

கிதியோனுக்கு இஸ்ரவேல் புத்திரர் மூலமாய் பிரச்சனைகளும் சோர்வுகளும் உண்டாயிற்று. எப்பிராயீம் மனுஷர் கிதியோனோடே பலத்த வாக்குவாதம்பண்ணுகிறார்கள். தன்னுடைய சொந்த ஜனத்தின் மூலமாக தனக்கு பிரச்சனைகள் வந்தாலும், கிதியோன் கர்த்தரை நம்பி, சத்துருக்களைப் பின்தொடர்ந்துபோகிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும், சில சமயங்களில், நமக்கு உதவியாயிருக்க வேண்டியவர்கள், நமக்கு தடை செய்வார்கள். அவர்கள் உபகாரம்பண்ணாவிட்டாலும், நமக்கு உபத்திரவம் பண்ணிவிடுவார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஓட்டத்திலே, நமக்கு எத்தனை சோதனைகள், எத்தனை தடைகள் வந்தாலும், கர்த்தர் நமக்கு நியமித்திருக்கிற இலக்கை நோக்கி முன்னேறி ஓடவேண்டும். ஓட்டத்தை நிறுத்திவிடக்கூடாது. கிதியோனும், அவரோடு கூடயிருக்கிற முந்நூறுபேரும் விடாய்ந்திருந்தாலும், மீதியானியரை பின்தொடர்ந்து போகிறது போல, நாமும் நம்முடைய ஓட்டத்தை ஓடவேண்டும்.

கிதியோன் மீதியானியரை பின்தொடர்ந்து நீண்ட தூரத்திற்குப்போகிறார். கிதியோன் கூடாரங்களிலே குடியிருக்கிறவர்கள் வழியாய் நோபாகுக்கும், யொகிபெயாவுக்கும் கிழக்கே போய், அந்தச் சேனை பயமில்லை என்றிருந்த போது, அதை முறிய அடிக்கிறார் (நியா 8:11). கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறு பேரும் பசியையும் தாகத்தையும் தாங்கிக்கொள்ளக்கூடியவர்கள். அவர்கள் கடினமாக உழைக்கிறவர்கள். இப்படிப்பட்ட சேனை கிதியோனோடு கூடயிருப்பது, அவருக்கு மிகுந்த அனுகூலமாயிருக்கிறது.

கிதியோனுக்கு மீதியானியர்மீது ஜெயம் கிடைக்கிறது. அவருடைய பிரயாசம் வீணாய்ப்போகவில்லை. ஒரு உன்னதமான நோக்கத்திற்காக கிதியோன் மீதியானியரைப் பின்தொடர்ந்து போகிறார். கிதியோனோடு கூடயிருக்கிறவர்கள் விடாய்த்திருந்தாலும், மீதியானியரை பின்தொடர்ந்துபோய் அவர்களை முறியடிக்கிறார்கள்.

கிதியோன் மீதியானியரின் கூடாரத்திற்கு வந்தபோது சேபாவும் சல்முனாவும் தப்பித்து ஓடிப்போய்விடுகிறார்கள். கிதியோனோ அவர்களைத் தொடர்ந்து, சேபா சல்முனா என்னும் மீதியானியரின் இரண்டு ராஜாக்களையும் பிடித்து, சேனை முழுவதையும் கலங்கடிக்கிறார் (நியா 8:12).

கிதியோன் நீதியுள்ள நியாயாதிபதி. கிதியோனும் முந்நூறுபேரும் மீதியானியரை பின்தொடர்ந்து போனபோது, அவர்கள் சுக்கோத்தின் வழியாகப் போகிறார்கள். கிதியோன் சுக்கோத்தின் மனுஷரை நோக்கி: "என்னோடிருக்கிற ஜனத்திற்குச் சில அப்பங்களைக் கொடுங்கள்; அவர்கள் விடாய்த்திருக்கிறார்கள், நான் மீதியானியரின் ராஜாக்களாகிய சேபாவையும் சல்முனாவையும் பின்தொடருகிறேன்" (நியா 8:5) என்று சொல்லுகிறார்.

ஆனால் சுக்கோத்தின் பிரபுக்களோ கிதியோனுக்கும், அவரோடு கூடயிருக்கிற ஜனத்திற்கும் அப்பங்களை கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். சுக்கோத்தின் பிரபுக்கள் கிதியோனிடம், "உன் சேனைக்கு நாங்கள் அப்பம் கொடுக்கிறதற்குச் சேபா சல்முனா என்பவர்களின் கை உன் கைவசமாயிற்றோ" (நியா 8:6) என்று சொல்லுகிறார்கள்.

சுக்கோத்தின் மனுஷர் மகாபெரிய பாவம் செய்கிறார்கள். பசித்தவர்களுக்கு போஜனம் கொடுக்க மறுத்துவிடுகிறார்கள். மீதியானியர் கிதியோனுக்கு சத்துருவாகயிருப்பதுபோல, அவர்கள் சுக்கோத்தின் மனுஷருக்கும் சத்துருவாகயிருக்கிறார்கள். மீதியானியர் இவர்களெல்லோருக்குமே பொதுவான சத்துரு. சுக்கோத்தின் மனுஷர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு நன்மை செய்யவேண்டும். தங்களுடைய பொதுவான சத்துருவை ஒழிப்பதற்கு, சுக்கோத்தின் மனுஷர், கிதியோனுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். ஆனால் சுக்கோத்தின் மனுஷரோ கிதியோனுக்கு உதவிசெய்ய மறுத்துவிடுகிறார்கள்.

கிதியோன் மீதியானியரைப் பின்தொடர்ந்துபோகும்போது, முதலாவதாக சுக்கோத்தின் வழியாகப் போகிறார். அதன் பின்பு பெனூவேலின் வழியாகப் போகிறார். சுக்கோத்தின் மனுஷர் கிதியோனுக்கு அப்பம் கொடுக்க மறுத்ததினால், அவர் பெனூவேலின் மனுஷரிடத்தில், உதவி கேட்கிறார். சுக்கோத்தின் மனுஷர் பிரதியுத்தரமாகச் சொன்னபடியே பெனூவேலின் மனுஷரும் கிதியோனுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்கள் (நியா 8:8). இவர்களும் கிதியோனுக்கும், அவரோடு கூடயிருக்கிற முந்நூறு பேருக்கும் அப்பம் கொடுக்க மறுத்துவிடுகிறார்கள்.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷரிடத்தில், பெனூவேலின் மனுஷரிடத்திலும் ஆடம்பரமான பொருட்கள் எதையும் கேட்கவில்லை. தங்களுடைய பசியை ஆற்றிக்கொள்வதற்கு போஜனம் கேட்கிறார்கள். கிதியோனும் அவரோடு கூடயிருக்கிறவர்களும் விடாய்த்திருக்கிறார்கள்.

அப்பம் புசிக்கவில்லையென்றால் மயங்கி விழுந்துவிடுவார்கள். கிதியோன் தன்னுடைய சேனையிலுள்ளவர்களுக்காக பரிந்துபேசி அப்பம் கேட்கிறார். "என்னோடிருக்கிற ஜனத்திற்கு சில அப்பங்களைக் கொடுங்கள், அவர்கள் விடாய்த்திருக்கிறார்கள்" என்று கேட்கிறார். ஆனால் சுக்கோத்தின் மனுஷரும், பெனூவேலின் மனுஷரும் கிதியோனின் விண்ணப்பத்திற்கு செவிகொடுக்க மறுத்துவிடுகிறார்கள்.

பசித்தவர்களுக்கு போஜனம் கொடுக்கவேண்டும். வழிப்போக்கரையும் அந்நியரையும் உபசரிக்கவேண்டும். நேர்த்தியான போஜனங்களை நம்மால் கொடுக்க முடியாவிட்டாலும், நம்மிடத்திலிருக்கிற போஜனத்தைக் கொடுத்து, அவர்களுக்கு ஆதரவாயிருக்கவேண்டும். ஆனால் சுக்கோத்தின் மனுஷரோ புத்தியில்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மனுஷநேயமில்லாதவர்களாய், இறுமாப்போடிருக்கிறார்கள். தங்களுடைய சுயநலத்தை மாத்திரம் பார்க்கிறார்கள்.

சுக்கோத்தின் மனுஷர் கிதியோனுக்கு விரோதமாக பாவம் செய்வதுபோல, தேவனுக்கு விரோதமாகவும் பாவம் செய்கிறார்கள். மீதியானியரின் கையிலிருந்து இஸ்ரவேலரை இரட்சிப்பதற்காக கர்த்தர் கிதியோனை எழுப்பியிருக்கிறார். கிதியோனுக்கு ஒரு தேவை வரும்போது சுக்கோத்தின் மனுஷர் அவருக்கு உதவிசெய்யவேண்டும்.

ஆனால் சுக்கோத்தின் மனுஷரோ கிதியோனின் வார்த்தைகளை நம்பவில்லை. கிதியோன் அவர்களிடம், "நான் மீதியானியரின் ராஜாக்களாகிய சேபாவையும், சல்முனாவையும் பின் தொடருகிறேன்" என்று சொல்லுகிறார். ஆனால் சுக்கோத்தின் பிரபுக்களோ, கிதியோனிடம், "சேபா சல்முனா என்பவர்களின் கை உன் கை வசமாயிற்றோ" என்று சந்தேகத்தோடு கேட்கிறார்கள்.

கிதியோனின் சேனைக்கு தப்பி ஓடின மீதியானியர், சுக்கோத்தின் வழியாகத்தான் ஓடிப்போகிறார்கள். கிதியோனால் அவர்களைப் பிடிக்க முடியாது என்று சுக்கோத்தின் மனுஷர் நினைக்கிறார்கள். கிதியோன் சுக்கோத்தின் மனுஷரிடத்திலே அப்பத்தைத் தவிர, வேறு எந்த உதவியும் கேட்கவில்லை. கிதியோனிடத்தில் முந்நூறுபேர் மாத்திரமே இருக்கிறார்கள். தப்பி ஓடின மீதியானியரின் எண்ணிக்கை 15,000 பேர். முந்நூறு பேரால், மீதியானியரின் 15,000 பேரை பிடிக்க முடியாது என்று சுக்கோத்தின் மனுஷர் உலகப்பிரகாரமாக நினைக்கிறார்கள். அவர்கள் மனுஷருடைய எண்ணிக்கையைப் பார்க்கிறார்களேயல்லாமல், கிதியோனோடு கூடயிருக்கிற கர்த்தரைப் பார்க்கவில்லை.

கிதியோனிடத்தில் விசுவாசம் இருக்கிறது. ஆனால் அவரிடத்தில் அப்பம் இல்லை. கிதியோனுக்கு இரக்கம் காண்பிக்க ஒருவருமில்லை. கிதியோன் கர்த்தரை நம்பினாலும், மனுஷர் அவருக்கு உதவிசெய்ய மறுக்கிறார்கள். கர்த்தர் கிதியோனுக்கு மேன்மையான வாக்குத்தத்தங்களைக் கொடுத்தாலும், மனுஷர் கிதியோனிடத்தில் அன்புகூர மறுக்கிறார்கள். சுக்கோத்தின் மனுஷரைப்போலவே பெனூவேலின் மனுஷரும் கிதியோனுக்கு ஆதரவு தர மறுக்கிறார்கள். அவர்கள் கிதியோனின் பட்டயத்தைப் புறக்கணிக்கும்போது, அவர்கள் கர்த்தருடைய பட்டயத்தையே புறக்கணிக்கிறார்கள்.

தன்னோடிருக்கிற ஜனத்திற்கு சில அப்பங்களைக் கொடுக்க மறுக்கிற சுக்கோத்தின் மனுஷருக்கு, கிதியோன் நீதியான தீர்ப்பு சொல்லுகிறார். கிதியோன் அவர்களை நோக்கி: "கர்த்தர் சேபாவையும் சல்முனாவையும் என் கையில் ஒப்புக்கொடுக்கும் போது, உங்கள் மாம்சத்தை வனாந்தரத்தின் முள்ளுகளாலும் நெரிஞ்சில்களாலும் கிழித்துவிடுவேன்" (நியா 8:7) என்று சொல்லுகிறார்.

தன்னோடிருக்கிற ஜனத்திற்கு அப்பம் கொடுக்க மறுத்த பெனூவேலின் மனுஷரைப் பார்த்து, "நான் சமாதானத்தோடே திரும்பிவரும்போது, இந்தக் கோபுரத்தை இடித்துப்போடுவேன்" (நியா 8:9) என்று கிதியோன் சொல்லுகிறார்.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷரையும் பெனூவேலின் மனுஷரையும் உடனே தண்டித்துவிடவில்லை. கிதியோன் அவசரப்பட்டு எதையும் செய்ய விரும்பவில்லை. மீதியானியரைப் பின்தொடர்ந்து போய், அவர்களை முறியடிக்கவேண்டும் என்பதே கிதியோனின் பிரதான நோக்கம். கிதியோன் தன்னுடைய கவனத்தை சுக்கோத்தின் மனுஷர் பக்கமோ அல்லது பெனூவேலின் மனுஷர் பக்கமோ திசை திருப்ப விரும்பவில்லை.

ஆனாலும் கிதியோன் அவர்களுக்கு காலதாமதம்பண்ணாமல் தன்னுடைய நியாயத்தீர்ப்பை சொல்லிவிடுகிறார். தன்னுடைய முயற்சியில் கர்த்தர் தனக்கு வெற்றியைக் கொடுப்பார் என்று கிதியோன் நம்பிக்கையோடிருக்கிறார். தாங்கள் விடாய்த்திருந்தாலும், மீதியானியரை பின்தொடர்ந்துபோய், அவர்களை முறியடிப்பதற்கு, கர்த்தர் தங்களுக்கு உதவி செய்வார் என்று கிதியோன் நம்புகிறார். கிதியோன் அப்பத்தினால் வரும் பெலத்தை நம்பாமல், கர்த்தர் மூலமாய் வரும் பெலத்தை நம்புகிறார்.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷருக்கும், பெனூவேலின் மனுஷருக்கும் உடனே நியாயத்தீர்ப்பு கொடுத்துவிட்டு, தண்டனையை நிறைவேற்றுவதில் காலதாமதம்பண்ணுகிறார். இந்தக் காலதாமதம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற கிருபையின் காலம். இந்தக் காலத்தில் இந்த மனுஷர்கள் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பலாம். தாங்கள் கிதியோனுக்கு சொன்ன அநியாயமான பிரதியுத்தரத்திற்காக மனம் வருந்தி, அவர்கள் கிதியோனுக்கு அப்பங்களையும், மற்றும் போஜனங்களையும், பானங்களையும் அனுப்பலாம்.

கர்த்தரும் பாவிகளை உடனே தண்டிப்பதில்லை. பாவத்தின் சம்பளம் மரணம். கர்த்தர் பாவம் செய்கிறவர்களை எச்சரிக்கிறார். அவர்களுக்கு வரப்போகும் ஆபத்துக்களை அவர்களுக்கு முன்னறிவித்துச் சொல்லுகிறார். பாவிகள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்ப காலஅவகாசம் கொடுக்கிறார். பாவிகளும் அக்கிரமக்காரரும், தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற கிருபையின் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொண்டு, வரப்போகிற கோபத்திற்கு தப்பித்துக்கொள்ளவேண்டும்.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷருக்கும் பெனூவேலின் மனுஷருக்கும் தண்டனையை அறிவித்தாலும், அவர்கள் கிதியோனின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை. கிதியோனை ஏளனம்பண்ணுகிறார்கள். கிதியோனால் தங்களைத் தண்டிக்க முடியாது என்று இறுமாப்பாயிருக்கிறார்கள். கிதியோன் சொல்லுகிற தண்டனை கடுமையானதாகயிருந்தாலும் அது கர்த்தருடைய பார்வையில் நீதியானதாயிருக்கிறது.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷருக்கும், பெனூவேலின் மனுஷருக்கும் தண்டனையை அறிவித்துவிட்டு, மீதியானியரை முறியடிப்பதற்காக, அவர்களைப் பின்தொடர்ந்து போகிறார். கிதியோனோடு கூடயிருக்கிற முந்நூறுபேரும் விடாய்த்திருக்கிறார்கள். ஆயினும், அவர்களும் கிதியோனோடு கூடப்போகிறார்கள்.

மீதியானியரின் இரண்டு ராஜாக்களாகிய சேபாவும் சல்முனாவும் அவர்களோடேகூட அவர்களுடைய சேனைகளும் ஏறக்குறைய பதினையாயிரம்பேர் கர்கோரில் இருக்கிறார்கள். கிதியோன் கூடாரங்களிலே குடியிருக்கிறவர்கள் வழியாய் நோபாகுக்கும், யொகிபெயாவுக்கும் கிழக்கே போய், அந்தச் சேனை பயமில்லை என்றிருந்த போது, அதை முறிய அடிக்கிறார் (நியா 8:10,11).

மீதியானியரின் இரண்டு ராஜாக்களாகிய சேபாவும் சல்முனாவும் தங்கள் பாளயத்திலிருந்து தப்பி ஓடிப்போகிறார்கள். கிதியோன் அவர்களை பின்தொடர்ந்து போய், அவர்கள் இருவரையும் பிடித்து, மீதியானியரின் சேனை முழுவதையும் கலங்கடிக்கிறார். இந்த யுத்தத்திலே கர்த்தர் கிதியோனுக்கு ஜெயத்தைக் கட்டளையிடுகிறார். கிதியோன் மீதியானியரோடு யுத்தம்பண்ணி, அவர்களுடைய சேனை முழுவதையும் கலங்கடித்து, சூரியன் உதிக்கும் முன்பே, திரும்பி வருகிறார்.

திரும்பி வரும் வழியிலே சுக்கோத்தும் பெனூவேலும் இருக்கிறது. கிதியோன் முதலாவதாக சுக்கோத்தின் மனுஷருக்கு புத்தி வரப்பண்ணுகிறார். கிதியோன் சுக்கோத்தின் பட்டணத்து மூப்பரைப் பிடித்து வனாந்தரத்தின் முள்ளுகளையும் நெரிஞ்சில்களையும் கொண்டுவந்து, அவைகளால் சுக்கோத்தின் மனுஷருக்குப் புத்திவரப்பண்ணுகிறார் (நியா 8:16).

கிதியோன் சுக்கோத்தின் மனுஷரை கொன்றுபோடவில்லை. கிதியோன் அவர்களுக்கு புத்தி வரப்பண்ணுகிறார். அவர்களுடைய சரீரங்களை வனாந்தரத்தின் முள்ளுகளினாலும் நெரிஞ்சல்களினாலும் சேதப்படுத்துகிறார். அவர்களுக்கு காயத்தை உண்டுபண்ணி, அவர்களை வேதனைப்படுத்துகிறார்.

சுக்கோத்தின் மனுஷருக்கு புத்திவரவேண்டும் என்பதே கிதியோனின் விருப்பம். ஆகையினால் கிதியோன் அவர்களுடைய சரீரத்தில் வேதனைகளை ஏற்படுத்தினாலும், அதன் மூலமாக, அவர்களுடைய சிந்தையில் நற்புத்தியை உணர்த்துகிறார். அவர்களுக்கும் புத்தி வருகிறது.

சுக்கோத்தின் மனுஷரை அழித்துப்போடவேண்டும் என்பது கிதியோனின் நோக்கமல்ல. அவர்கள் ஒழுக்கமுள்ளவராயிருக்கவேண்டும். பிற்காலத்தில் கர்த்தருக்கு பயந்து, நற்கனிகளைக் கொடுக்கவேண்டும். அவர்கள் ஞானமுள்ளவர்களாகவும், நல்ல சுபாவமுள்ளவர்களாகவும் மாறவேண்டும். இதற்காகவே கிதியோன் சுக்கோத்தின் மனுஷருக்கு புத்தி வரப்பண்ணுகிறார்.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷரை வனாந்தரத்தின் முள்ளுகளினாலும் நெரிஞ்சில்களினாலும் வாதித்தபோது, அவர்கள் தங்களுடைய மதியீனத்தை உணர்ந்துகொள்கிறார்கள். அவர்கள் கர்த்தரை அறிந்துகொள்கிறார்கள். தங்களுடைய கடமைகளையும் புரிந்துகொள்கிறார்கள்.

இக்காலத்திலும் சுக்கோத்தின் மனுஷரைப்போல, இந்தப் பூமியிலே சிலர் இருக்கிறார்கள். அவர்களை முள்ளுகளினாலும் நெரிஞ்சில்களினாலும் வாதிப்பதுபோல வாதித்தால் மாத்திரமே, அவர்களுக்கு புத்தி வரும். வேறு எந்த வழியிலும் அவர்களைத் திருத்த முடியாது.

கிதியோன் சுக்கோத்தின் மனுஷருக்கு புத்தி வரப்பண்ணின பின்பு, பெனூவேலின் மனுஷரிடத்திற்கு வருகிறார். அவர் பெனூவேலின் கோபுரத்தை இடித்து, அவ்வூர் மனுஷரைக் கொன்றுபோடுகிறார் (நியா 8:17). பெனூவேலின் மனுஷர் தங்களுடைய பாதுகாப்புக்காக, தங்கள் ஊரிலுள்ள உயர்ந்த கோபுரத்தின்மீது நம்பிக்கை வைத்திருக்கிறார்கள். மீதியானியரின் கையிலிருந்து இந்தக் கோபுரமே தங்களைப் பாதுகாக்கும் என்று பெனூவேலின் மனுஷர் கோபுரத்தை நம்புகிறார்கள். தங்களைப் பாதுகாப்பதற்கு, கிதியோனுடைய உதவி தேவையில்லை என்று நினைத்து, அவர்கள் கிதியோனுக்கு உதவிசெய்ய மறுத்து விடுகிறார்கள்.

கிதியோன் பெனூவேல் ஊர் மனுஷரைக் கொன்றுபோடுகிறார். இவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையை மற்ற ஊரார் பார்த்து, மனந்திரும்புவார்கள். கிதியோனுக்கு பயப்படுவார்கள். ஒருவனைத் தண்டிக்கும்போது மற்றொருவனுக்கு புத்தி வரும். அதுபோல கிதியோன் பெனூவேலின் மனுஷரைக் கொன்றுபோட்டு, மற்ற ஊர் மனுஷருக்கு புத்தி வரப்பண்ணுகிறார்.

சேபாவும் சல்முனாவும்
நியா 8:18-21

நியா 8:18. பின்பு அவன் சேபாவையும் சல்முனாவையும் நோக்கி: நீங்கள் தாபோரிலே கொன்றுபோட்ட அந்த மனுஷர் எப்படிப்பட்டவர்கள் என்று கேட்டான்; அதற்கு அவர்கள்: நீர் எப்படிப்பட்டவரோ அவர்களும் அப்படிப்பட்டவர்களே; ஒவ்வொருவனும் பார்வைக்கு ராஜகுமாரனைப்போலிருந்தான் என்றார்கள்.

நியா 8:19. அப்பொழுது அவன்: அவர்கள் என் சகோதரரும் என் தாயின் பிள்ளைகளுமாயிருந்தார்கள்; அவர்களை உயிரோடே வைத்திருந்தீர்களானால், உங்களைக் கொல்லாதிருப்பேன் என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன் என்று சொல்லி,

நியா 8:20. தன் மூத்தகுமாரனாகிய யெத்தேரை நோக்கி: நீ எழுந்து, இவர்களை வெட்டிப்போடு என்றான்; அந்த வாலிபன் இளைஞனானபடியால் பயந்து தன் பட்டயத்தை உருவாதிருந்தான்.

நியா 8:21. அப்பொழுது சேபாவும் சல்முனாவும்: நீரே எழுந்து எங்கள்மேல் விழும்; மனுஷன் எப்படியோ அப்படியே அவன் பெலனும் இருக்கும் என்றார்கள்; கிதியோன் எழுந்து, சேபாவையும் சல்முனாவையும் கொன்றுபோட்டு, அவர்கள் ஒட்டகங்களின் கழுத்துக்களில் இருந்த சாந்துக்காறைகளை எடுத்துக்கொண்டான்.

மீதியானியரின் இரண்டு ராஜாக்களாகிய சேபையையும் சல்முனாவையும் கிதியோன் தன்னிடத்தில் பிடித்து வைத்திருக்கிறார். கிதியோன் இனிமேல் இந்த இரண்டு ராஜாக்களுக்கும் தண்டனை கொடுக்கவேண்டும். இவர்கள் சில காலத்திற்கு முன்பு தாபோரிலே, கிதியோனின் சகோதரரைக் கொன்றுபோட்டவர்கள். இஸ்ரவேல் புத்திரர் மீதியானியருக்கு பயந்து, குகைகளிலும் மலைகளிலும் ஒளிந்திருந்தபோது, இவ்விரண்டு ராஜாக்களும் அவர்களைப் பிடித்து கொன்றுபோட்டார்கள்.

"மீதியானியரின் கை இஸ்ரவேலின் மேல் பலத்துக்கொண்டபடியால், இஸ்ரவேல் புத்திரர் மீதியானியர் நிமித்தம் தங்களுக்கு மலைகளிலுள்ள கெபிகளையும் குகைகளையும் அரணான ஸ்தலங்களையும் அடைக்கலங்களாக்கிகொண்டார்கள்" (நியா 6:2).

தாபோர் மலையிலே ஒளிந்திருந்த இஸ்ரவேல் புத்திரர் வாலிபர்கள். மீதியானியரின் இரண்டு ராஜாக்களாகிய சேபாவும் சல்முனாவும், தாபோர் மலையிலே ஒளிந்திருந்த இஸ்ரவேல் புத்திரரை தேடி கண்டுபிடித்து, அங்கே அவர்களை கொன்றுபோட்டார்கள். இஸ்ரவேலர் வாலிபராகயிருந்தாலும் மீதியானியர் அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கவில்லை.

சேபாவும் சல்முனாவும் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக செய்த தீங்குகளை, கிதியோன் அவர்களிடத்தில் விசாரிக்கிறார். கிதியோன் சேபாவையும் சல்முனாவையும் நோக்கி: "நீங்கள் தாபோரிலே கொன்றுபோட்ட அந்த மனுஷர் எப்படிப்பட்டவர்கள்" என்று கேட்கிறார்; அதற்கு அவர்கள்: "நீர் எப்படிப்பட்டவரோ அவர்களும் அப்படிப்பட்டவர்களே; ஒவ்வொருவனும் பார்வைக்கு ராஜகுமாரனைப்போலிருந்தான்" (நியா 8:18) என்று சொல்லுகிறார்கள்.

சேபாவும் சல்முனாவும் கொலை குற்றம் செய்திருக்கிறார்கள். தாங்கள் செய்த கொலையை, தங்களுடைய வாயின் வார்த்தைகளினால் வாக்குமூலம் கொடுக்கிறார்கள். கிதியோன் நீதியுள்ள நியாயாதிபதி. சேபாவும் சல்முனாவும், மீதியானியரின் ராஜாக்களாகயிருந்தாலும், கிதியோன் அவர்கள் இருவருக்கும் நீதியான தண்டனை கொடுக்கிறார்.

கிதியோன் சேபாவையும் சல்முனாவையும் நோக்கி, "அவர்கள் என் சகோதரரும் என் தாயின் பிள்ளைகளுமாயிருந்தார்கள்; அவர்களைஉயிரோடே வைத்திருந்தீர்களானால், உங்களைக் கொல்லாதிருப்பேன் என்று கர்த்தரின் ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்" (நியா 8:29) என்று சொல்லுகிறார். கிதியோன் அவர்கள் இருவரும் மரணதண்டனை கொடுக்கிறார்.

சேபாவையும் சல்முனாவையும் பட்டயத்தினால் வெட்டும் பொறுப்பை கிதியோன் தன்னுடைய மூத்த குமாரனாகிய எத்தேரிடம் ஒப்புக்கொடுக்கிறார். கிதியோன் எத்தேரிடம், "நீ எழுந்து இவர்களை வெட்டிப்போடு" (நியா 8:20) என்று சொல்லுகிறார். ஆனால் எத்தேரோ ஒரு வாலிபனாகவும், இளைஞனாகவும் இருக்கிறான். அவன் சேபாவையும்சல்முனாவையும் பட்டயத்தினால் வெட்டிப்போடுவதற்கு பயப்பட்டு தன் பட்டயத்தை உருவாதிருக்கிறான்.

கிதியோனின் மூத்த குமாரன் தங்களை கொன்றுபோட பயப்படுவதை சேபாவும் சல்முனாவும் பார்க்கிறார்கள். தங்களுக்கு மரணதண்டனை நிச்சயம் கொடுக்கப்படும் என்பது அவர்கள் இருவருக்கும் நன்றாகத் தெரியும். அவர்கள் மரணத்திற்காக காத்திருக்கிறார்கள். தண்டனை சீக்கிரத்தில் நிறைவேற்றப்பட்டால், மரணவேதனைகளை சீக்கிரத்தில் அனுபவித்து செத்துப்போய்விடலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

அப்பொழுது சேபாவும் சல்முனாவும் கிதியோனிடம், "நீரே எழுந்து எங்கள்மேல் விழும்; மனுஷன் எப்படியோ அப்படியே அவன் பெலனும் இருக்கும்" (நியா 8:21) என்று சொல்லுகிறார்கள்; அப்பொழுது கிதியோன் எழுந்து, சேபாவையும் சல்முனாவையும் கொன்றுபோடுகிறார். கிதியோன் அவர்கள் ஒட்டகங்களின் கழுத்துக்களில் இருந்த சாந்துக்காறைகளை எடுத்துக்கொள்கிறார்.

ஏபோத்து
நியா 8:22-28

நியா 8:22. அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் கிதியோனை நோக்கி: நீர் எங்களை மீதியானியர் கைக்கு நீங்கலாக்கிவிட்டபடியினால் நீரும் உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரனின் குமாரனும், எங்களை ஆளக்கடவீர்கள் என்றார்கள்.

நியா 8:23. அதற்குக் கிதியோன்: நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக என்றான்.

நியா 8:24. பின்பு கிதியோன் அவர்களை நோக்கி: உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன்; நீங்கள் அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை என்னிடத்தில் கொண்டு வாருங்கள் என்றான். அவர்கள் இஸ்மவேலராயிருந்தபடியினால் அவர்களிடத்தில் பொன்கடுக்கன்கள் இருந்தது.

நியா 8:25. இஸ்ரவேலர்: சந்தோஷமாய்க் கொடுப்போம் என்று சொல்லி, ஒரு வஸ்திரத்தை விரித்து, அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை அதிலே போட்டார்கள்.

நியா 8:26. பிறைச் சிந்தாக்குகளும், ஆரங்களும், மீதியானியரின் ராஜாக்கள் போர்த்துக் கொண்டிருந்த இரத்தாம்பரங்களும், அவர்களுடைய ஒட்டகங்களின் கழுத்துக்களிலிருந்த சரப்பணிகளும் அல்லாமல், அவன் கேட்டு வாங்கின பொன்கடுக்கன்களின் நிறை ஆயிரத்து எழுநூறு பொன்சேக்கலின் நிறையாயிருந்தது.

நியா 8:27. அதினால் கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி, அதைத் தன் ஊரான ஒப்ராவிலே வைத்தான்; இஸ்ரவேலரெல்லாரும் அதைப் பின்பற்றிச் சோரம்போனார்கள்; அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று.

நியா 8:28. இந்தப்பிரகாரம் மீதியானியர் திரும்ப தலையெடுக்கக் கூடாதபடிக்கு, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்; தேசமானது கிதியோனின் நாட்களில் நாற்பது வருஷம் அமைதலாயிருந்தது.

கிதியோன் இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார். மீதியானியரின் சேனையை கலங்கடிக்கிறார். மீதியானியர் திரும்ப தலையெடுக்கக்கூடாதபடிக்கு, அவர்கள் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக தாழ்த்தப்படுகிறார்கள்.

அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் கிதியோனை நோக்கி: "நீர் எங்களை மீதியானியர் கைக்கு நீங்கலாக்கிவிட்டபடியினால் நீரும் உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரனின் குமாரனும், எங்களை ஆளக்கடவீர்கள்" (நியா 8:22) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் மனுஷர் கிதியோனுக்கு மதிப்பையும் மரியாதையும் கொடுக்க விரும்புகிறார்கள். கிதியோன் தங்களை மீதியானியரின் கையிலிருந்து இரட்சித்திருக்கிறார் என்பதை அவர்கள் அங்கீரிக்கிறார்கள். "நீரும் உம்முடைய குமாரனும், உம்முடைய குமாரனின் குமாரரும் எங்களை ஆளக்கடவீர்கள்" என்று இஸ்ரவேல் மனுஷர் கிதியோனிடத்தில் சொல்லுவது, அவர்களுடைய நற்குணத்தையும், நன்றி உணர்வையும் காண்பிக்கிறது.

ஆனால் கிதியோனோ, இஸ்ரவேல் புத்திரருடைய வேண்டுகோளை ஏற்க மறுத்துவிடுகிறார். கிதியோன் அவர்களிடம், "நான் உங்களை ஆளமாட்டேன்; என் குமாரனும் உங்களை ஆளமாட்டான்; கர்த்தரே உங்களை ஆளுவாராக" (நியா 8:23) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

கிதியோன் இஸ்ரவேல் புத்திரருக்கு சேவை செய்ய விரும்புகிறார். அவர்களுக்கு ஊழியம் பண்ண விரும்புகிறார். கிதியோன் அவர்களை ஆளுகை செய்ய விரும்பவில்லை. இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களின் பயமில்லாமல் பாதுகாப்பாயிருக்கவேண்டும். அவர்கள் கர்த்தருக்குள் சந்தோஷமாயிருக்கவேண்டும். தேசம் செழித்திருக்கவேண்டும். இதுவே கிதியோனின் விருப்பம். தனக்கு கனமும், மகிமையும், மரியாதையும் உண்டாகவேண்டும் என்று கிதியோன் விரும்பவில்லை.

இஸ்ரவேல் புத்திரரை தானும் தன்னுடைய குமாரனும் ஆளுகை செய்யாவிட்டாலும், கர்த்தர் அவர்களை ஆளுகை செய்வார் என்று கிதியோன் சொல்லுகிறார். கிதியோனின் ஆளுகையைவிட கர்த்தருடைய ஆளுகை ஆசீர்வாதமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய கர்த்தத்துவத்தை அவர்கள் அங்கீகரிக்கவேண்டும். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமும், அவருடைய வழிநடத்துதலின் பிரகாரமும், இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு நியாயாதிபதிகளை நியமித்துக்கொள்ளவேண்டும்.

கிதியோன் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக தன்னை வெகுவாகத் தாழ்த்துகிறார். மீதியானியரின் சேனை முழுவதையும் கிதியோன் கலங்கடித்தார். ஆனாலும் அதற்கான புகழ்ச்சியை, மேன்மையை கிதியோன் தனக்கு சொந்தமாக்கிக்கொள்ளவில்லை. அவர் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவராயிருக்கிறார். இஸ்ரவேல் தேசத்திலே கர்த்தருடைய ஆளுகை நடைபெறவேண்டும் என்று கிதியோன் தன்னுடைய உள்ளத்தின் ஆழத்திலே விரும்புகிறார்.

இதன் பின்பு கிதியோனுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் பின்மாற்றம் உண்டாயிற்று. அவருடைய பக்தி வைராக்கியத்தில் ஏற்ற இறக்கங்களும், குளறுபடிகளும் உண்டாயிற்று. இஸ்ரவேல் புத்திரர்கள் எல்லோரும் இப்போது செல்வச்செழிப்போடிருக்கிறார்கள். அவர்களிடத்தில் மீதியானியரை கொள்ளையிட்ட கொள்ளைப்பொருட்களும் ஏராளமாயிருக்கிறது. கிதியோன் இந்த சூழ்நிலையில் கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், ஏபோத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

இப்போது கிதியோனிடத்திலும், இஸ்ரவேல் புத்திரரிடத்திலும், ஏபோத்தை செய்வதற்கு தேவையான பொன்னும் பொருளும் இருக்கிறது. ஆகையினால் கிதியோனுக்கு ஒரு ஏபோத்தை உண்டுபண்ணவேண்டும் என்னும் ஆசை உண்டாயிற்று. ஆரம்பத்திலே கிதியோனிடத்தில் வாற்கோதுமைகூட திரளாயில்லை. அப்போது அவர் ஏபோத்தை உண்டுபண்ணுவது பற்றி நினைத்துக்கூட பார்க்கவில்லை. இப்போது கிதியோனிடம் ஐசுவரியம் பெருகியிருக்கிறது. அவருடைய விசுவாசம் தடுமாறுகிறது.

கிதியோன் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "உங்களிடத்தில் ஒரு காரியத்தைக் கேட்கிறேன்; நீங்கள் அவரவர் கொள்ளையிட்ட கடுக்கன்களை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்" (நியா 8:24) என்று கேட்கிறார். இஸ்ரவேல் புத்திரர் இஸ்மவேலரைக் கொள்ளை யிட்டிருக்கிறார்கள். இஸ்மவேலரிடத்தில் ஏராளமான பொன்கடுக்கன்கள் இருந்தது. அவையெல்லாம் இப்போது இஸ்ரவேல் புத்திரரிடத்தில் கொள்ளைப்பொருளாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கிதியோனின் வேண்டுகோளை அங்கீகரிக்கிறார்கள். இஸ்ரவேலர் கிதியோனிடம் "சந்தோஷமாய்க் கொடுப்போம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் ஒரு வஸ்திரத்தை விரித்து, அவரவர் கொள்ளையிட்ட கடுக்கண்களை அதிலே போடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் பொன்கடுக்கன்கள் தவிர, இன்னும் ஏராளமான பொன்னாபரணங்கள் இருக்கிறது. இஸ்ரவேலர் அவற்றையும் கிதியோனிடம் கொண்டு வந்து கொடுக்கிறார்கள். இந்தப் பொன்கடுக்கன்களோடு, கிதியோனும் தன் பங்குக்கு, தான் மீதியானியரிடத்தில் கொள்ளையிட்ட பொருட்களை, ஏபோத்தை செய்வதற்கு கொண்டு வந்து கொடுக்கிறார்.

கிதியோனிடம் பிறைச் சிந்தாக்குகளும், ஆரங்களும், மீதியானியரின் ராஜாக்கள் போர்த்துக் கொண்டிருந்த இரத்தாம்பரங்களும், அவர்களுடைய ஒட்டகங்களின் கழுத்துக்களிலிருந்த சரப்பணிகளும் இருக்கிறது. இது தவிர, கிதியோன் கேட்டு வாங்கின பொன்கடுக்கன்களின் நிறை ஆயிரத்து எழுநூறு பொன்சேக்கலின் நிறையாயிருக்கிறது (நியா 8:26).

கிதியோன் இந்தப் பொன்னா பரணங்கள் எல்லாவற்றையும் ஒன்று சேர்த்து அதினாலே ஒரு ஏபோத்தை உண்டாக்கு கிறார். கிதியோன் அந்த ஏபோத்தை தன்னுடைய ஊரான ஒப்ராவிலே வைக்கிறார்; இஸ்ரவேலரெல்லாரும் அதைப் பின்பற்றிச் சோரம்போகிறார்கள்; அது கிதியோனுக்கும் அவன் வீட்டாருக்கும் கண்ணியாயிற்று (நியா 8:27).

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு மீதியானியர்மீது ஜெயத்தைக் கொடுத்திருக்கிறார். கர்த்தருடைய கிருபையையும், உதவியையும் ஒத்தாசையையும் நினைவுகூரும் வண்ணமாக, கிதியோன் இந்த ஏபோத்தை, ஒரு ஞாபகப்பொருளாக செய்திருக்கலாம். கர்த்தர் தங்களுக்கு காண்பித்த தெய்வீக கிருபைகளை மறந்துவிடக்கூடாது என்பதற்காக, கிதியோன் இந்த ஏபோத்தை உண்டுபண்ணியிருக்கலாம். ஆனால் இந்த ஏபோத்து கிதியோனுக்கும் அவருடைய வீட்டாருக்கும் கண்ணியாயிற்று.

இஸ்ரவேல் புத்திரர், தங்களுக்கு மீதியானியர்மீது ஜெயத்தைக் கட்டளையிட்ட கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், கிதியோன் உண்டாக்கின ஏபோத்துக்கு முக்கியத்துவம் கொடுக்க ஆரம்பித்துவிடுகிறார்கள்.

கிதியோன் உண்டுபண்ணின ஏபோத்து, அவருடைய ஊரான ஒப்ராவிலே வைக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏபோத்தை ஆராதனை செய்வதற்காக, இஸ்ரவேல் ஜனங்கள் ஒப்ரா ஊருக்கு வர ஆரம்பித்துவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை விட்டு விலகி ஏபோத்தைப் பின்பற்றிப்போகிறார்கள். கிதியோன் ஒரு நல்ல நோக்கத்தோடு, ஏபோத்தை உண்டுபண்ணினார். ஆனால் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் இந்த ஏபோத்தைப் பின்பற்றி சோரம்போனார்கள்.

"இஸ்ரவேல் புத்திரர் அநேகநாள் ராஜா இல்லாமலும், அதிபதி இல்லாமலும், பலி இல்லாமலும், சிலை இல்லாமலும், ஏபோத் வஸ்திரம் இல்லாமலும், தேராபீம் இல்லாமலும் இருப்பார்கள்" (ஓசி 3:4).

கிதியோன் ஏற்கெனவே தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, ஒரு பலிபீடத்தைக் கட்டியிருக்கிறார்.

"இந்தக் கற்பாறை உச்சியிலே பாங்கான ஒரு இடத்தில் உன் தேவனாகிய கர்த்தருக்கு ஒரு பலிபீடத்தைக் கட்டி, அந்த இரண்டாம் காளையைக் கொண்டு வந்து, அதை நீ வெட்டிப்போட்ட தோப்பினுடைய கட்டை விறகுகளின் மேல் சர்வாங்க தகனமாகப் பலியிடக் கடவாய் என்றார்" (நியா 6:26).

கிதியோனின் மனதில் இந்தப் பலிபீடத்தைக் குறித்தும், அவர் உண்டுபண்ணின ஏபோத்தைக் குறித்தும் தெளிவான சிந்தனையில்லை. தான் கட்டின பலிபீடத்தை சர்வாங்க தகனபலி செலுத்துவதற்கு பலியிடலாம் என்றும், தான் உண்டுபண்ணின ஏபோத்தை பயன்படுத்தி கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளலாம் என்றும் கிதியோன் நினைக்கிறார்.

நியாயாபதிகளின் காலத்தில், இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரத்தாரும், தனித்தனியாக, தங்களைத் தாங்களே ஆளுகை செய்து கொள்கிறார்கள். கர்த்தரை ஆராதிக்கும் எல்லா வசதிகளும் வாய்ப்புக்களும், தங்களுடைய கோத்திரத்தின் சுதந்தரவீதத்திற்குள்ளேயே இருக்கவேண்டுமென்று, எல்லா கோத்திரத்தாரும் ஆசைப்படுகிறார்கள்.

யோசுவாவின் காலத்திற்கு பின்பு, நியாயாபதிகளின் காலத்திலே, கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டி சீலோவிலே வைக்கப்பட்டிருந்தது. ஆனால் நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் சீலோவைப்பற்றியோ, கர்த்தருடைய உடன்படிக்கை பெட்டியைப்பற்றியோ அதிகமாக எழுதப்படவில்லை.

கிதியோன் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மதிப்பும் மரியாதையுமுள்ள தலைவர். இந்த ஒரு மனுஷனுடைய தவறான வழிநடத்துதலினால், இஸ்ரவேல் புத்திரரில் அநேகர் கர்த்தரை விட்டு வழிவிலகிப்போகிறார்கள். கிதியோன் ஒரு ஏபோத்தை உண்டாக்கி அதை தன் ஊரான ஒப்ராவிலே வைக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அந்த ஏபோத்தைப் பின்பற்றி சோரம்போகிறார்கள். ஒரு மனுஷனுடைய பாவம், அநேகருடைய ஆவிக்குரிய பின்மாற்றத்திற்கும், வீழ்ச்சிக்கும் காரணமாயிருக்கிறது.

பாவத்தின் ஆரம்ப நிலை மிகவும் சாதாரணமாகயிருக்கும். விக்கிரகாராதனையும் ஆரம்பத்தில் சாதாரணமாகத்தான் ஆரம்பிக்கப்படுகிறது. ஏபோத்தைப்போல ஒரு சிறிய பொருள் விக்கிரகமாக உண்டுபண்ணப்படுகிறது. அதுவே பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் சோரம்போவதற்கு காரணமாயிருக்கும் விக்கிரகாராதனையாய் மாறிவிடுகிறது.

ஒரு அணைக்கட்டு உடையும்போது, ஆரம்பத்தில், அதன் கரையில், ஏதாவது ஒரு பகுதியில் சிறிய உடைப்பு ஏற்படும். சிறிய உடைப்பை எளிதாக அடைத்து விடலாம். ஆனால் அதைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், சிறிய உடைப்பு பெரிய உடைப்பாக மாறி, அந்த அணைக்கட்டே உடைந்துவிடும். அணைக்கட்டு உடையும்போது, அதிலிருந்து வெளியேறும் தண்ணீர் பெருவெள்ளமாயிருக்கும். பெருவெள்ளத்தை தடுத்து நிறுத்துவது மிகவும் கடினம்.

இதுபோலவே கிதியோனின் காலத்தில், விக்கிரகாராதனை, ஒரு ஏபோத்தின் வடிவத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. அதுவே பிற்காலத்தில் கிதியோனுக்கும் அவருடைய வீட்டாருக்கும் கண்ணியாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அந்த ஏபோத்தைப் பின்பற்றி சோரம்போகிறார்கள்.

கிதியோனுடைய முதிர்வயதில், அவர் கர்த்தர்மீது வைத்திருந்த பக்திவைராக்கியம் குறைந்துபோகிறது. கிதியோனின் குடும்பத்திலுள்ளவர்கள் கர்த்தரை நம்பாமல், அவர் உண்டுபண்ணின ஏபோத்தை நம்புகிறார்கள். இதனால் பிற்காலத்தில் கிதியோனின் குடும்பமே அழிந்துபோகிறது.

கிதியோன் இஸ்ரவேல் புத்திரரை நீதியாக நியாயம் விசாரிக்கிறார். இஸ்ரவேல் புத்திரரை தானும், தன்னுடைய குமாரரும் ஆளப்போவதில்லை என்றும் கிதியோன் சொன்னார். இஸ்ரவேல் ஜனங்கள் கிதியோனை ராஜாவாக்கவேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் கிதியோனோ, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாபதியாகயிருந்து, அவர்களை நியாயம் விசாரிக்கவே விரும்பினார்.

கிதியோன் தன்னால் முடிந்த எல்லா உதவிகளையும் இஸ்ரவேல் புத்திரருக்கு செய்தார். இதனால் இஸ்ரவேல் தேசமானது கிதியோனின் நாட்களில் நாற்பது வருஷம் அமைதலாயிருக்கிறது. கிதியோனின் காலத்தில், மீதியானியரும், திரும்ப தலையெக்கக்கூடாதபடிக்கு, இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக தாழ்த்தப்பட்டிருக்கிறார்கள் (நியா 8:28).

இதுவரையிலும் இஸ்ரவேல் தேசத்தைப்பற்றிச் சொல்லும்போது, "நாற்பது வருஷம்" என்னும் காலஅளவு விசேஷமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒத்னியேல் இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தார். யெகூ எண்பது வருஷம் நியாயம் விசாரித்தார். எண்பது என்பது இரண்டு நாற்பது வருஷங்களாகும். பாராக்கு நாற்பது வருஷமும், இப்போது கிதியோன் நாற்பது வருஷமும் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்திற்குப் புறப்பட்டுப்போனபோது, வழியிலே நாற்பது வருஷங்கள் வனாந்தரத்தில் அலைந்து திரிந்தார்கள். கர்த்தர் தம்முடைய தெய்வீக வழிநடத்துதலின் பிரகாரம், இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரத்தில் சுற்றி அலைந்து திரிந்த நாற்பது வருஷங்களை நினைவுகூர்ந்து, நியாயாதிபதிகளும் தம்முடைய ஜனங்களை நாற்பது வருஷங்களுக்கு நியாயம் விசாரிப்பதற்கு வழிநடத்துகிறார் என்று வேதபண்டிதர்கள் விளக்கம் சொல்லுகிறார்கள்.

கிதியோனுக்கு பின்பு ஏலி இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷங்கள் ஆளுகை செய்தார் (1சாமு 4:18), சாமுவேலும் சவுலும் நாற்பது வருஷங்கள் இஸ்ரவேலை ஆளுகை செய்தார்கள் (அப் 13:21). தாவீது நாற்பது வருஷங்களும், சாலொமோன் நாற்பது வருஷங்களும் இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்தார்கள். நாற்பது வருஷ ஆளுகை என்பது, ஒரு தேசத்தின் பரிபூரணமான ஆளுகை காலத்தைக் குறிக்கும்.

கிதியோனின் மரணம்
நியா 8:29-35

நியா 8:29. யோவாசின் குமாரனாகிய யெருபாகால் போய், தன் வீட்டிலே வாசமாயிருந்தான்.

நியா 8:30. கிதியோனுக்கு அநேகம் ஸ்திரீகள் இருந்தார்கள்; அவனுடைய கர்ப்பப்பிறப்பான குமாரர் எழுபதுபேர்.

நியா 8:31. சீகேமிலிருந்த அவனுடைய மறுமனையாட்டியும் அவனுக்கு ஒரு குமாரனைப் பெற்றாள்; அவனுக்கு அபிமெலேக்கு என்று பேரிட்டான்.

நியா 8:32. பின்பு யோவாசின் குமாரனாகிய கிதியோன் நல்ல விருத்தாப்பியத்திலே மரித்து, ஒப்ராவிலே தன் தகப்பனாகிய யோவாஸ் என்னும் அபியேஸ்ரியனுடைய கல்லறையில் அடக்கம்பண்ணப்பட்டான்.

நியா 8:33. கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்குத் தேவனாக வைத்துக் கொண்டார்கள்.

நியா 8:34. இஸ்ரவேல் புத்திரர் தங்களைச் சுற்றிலுமிருந்த தங்கள் எல்லாச் சத்துருக்களின் கையினின்றும் தங்களை இரட்சித்த தங்கள் தேவனாகிய கர்த்தரை நினையாமலும்,

நியா 8:35. கிதியோன் என்னும் யெருபாகால் இஸ்ரவேலுக்குச் செய்த சகல நன்மைக்குந்தக்க தயவை அவன் வீட்டாருக்குப் பாராட்டாமலும் போனார்கள்.

கிதியோனின் சரித்திரம் இந்த அதிகாரத்தில் முடிவு பெறுகிறது. கிதியோன் இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷங்கள் நியாயம் விசாரித்த பின்பு, தன் வீட்டிலே தனிமையில் வாசம்பண்ணுகிறார். கர்த்தர் கிதியோனை இஸ்ரவேல் தேசத்து நியாயாதிபதியாக உயர்த்தினார். இதற்கு முன்பு கிதியோன் எந்த வீட்டிலே வாசம்பண்ணினாரோ, அந்த வீட்டிற்கே திரும்பிபோய், அங்கே வாசம்பண்ணுகிறார்.

ரோமாபுரியின் சேனையில் பணிபுரிகிற வீரர்கள் எல்லோரும் பராக்கிரமசாலிகளாயிருப்பார்கள். அவர்களெல்லோரும் தங்கள் ஊரிலே வேறு ஏதாவது ஒரு தொழிலை செய்கிறவர்கள். யுத்தம் வரும்போது, அவர்களெல்லோரும் தங்கள் தொழிலை விட்டுவிட்டு, ரோமப்பேரரசின் சேனையில் சேர்ந்துகொள்வார்கள். யுத்தம் முடிந்த பின்பு, அவர்கள் மறுபடியும் தங்கள் சொந்த தொழிலைப் பார்க்க போய்விடுவார்கள்.

விவசாயம்பண்ணுகிறவர் ரோமப்பேரரசின் சேனையிலே முக்கிய பதவி வகித்தாலும், யுத்தம் முடிந்த பின்பு, அவர் மறுபடியும் தன்னுடைய நிலத்திற்குப்போய் கலப்பையைப் பிடித்து, நிலத்தை உழ ஆரம்பித்துவிடுவார். அதுபோலவே, கிதியோனும், தன்னுடைய ஊழியக்காலம் முடிந்த பின்பு, தன் பழைய வீட்டிலே போய் வாசம்பண்ணுகிறார்.

கிதியோனின் குடும்பம் பெரியதாயிருக்கிறது. கிதியோனுக்கு அநேக ஸ்திரீகள் இருக்கிறார்கள். அவருடைய கர்ப்பப்பிறப்பான குமாரர் எழுபது பேர். சீகேமிலிருந்த கிதியோனுடைய மறுமனையாட்டியும் அவருக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள்; கிதியோன் அவனுக்கு அபிமெலேக்கு என்று பேரிடுகிறார் (நியா 8:31).

பின்பு யோவாசின் குமாரனாகிய கிதியோன் நல்ல விருத்தாப்பியத்திலே மரித்து, ஒப்ராவிலே தன் தகப்பனாகிய யோவாஸ் என்னும் அபியேஸ்ரியனுடைய கல்லறையில் அடக்கம்பண்ணப்படுகிறார் (நியா 8:32).

கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்கு தேவனாக வைத்துக் கொள்கிறார்கள் (நியா 8:33). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறந்து விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். தவறான ஆராதனைகள் அவர்களை தவறான தெய்வங்களிடத்தில் வழிநடத்துகிறது.

"நூதன தேவர்களைத் தெரிந்து கொண்டார்கள்; அப்பொழுது யுத்தம் வாசல்வரையும் வந்தது; இஸ்ரவேலிலே நாற்பதினாயிரம்பேருக்குள்ளே கேடகமும் ஈட்டியும் காணப்பட்டதுண்டோ?" (நியா 5:8).

இஸ்ரவேல் புத்திரர் இப்போது பாகால்பேரீத் என்னும் புதிய தெய்வத்தை தங்களுக்கு தெய்வமாக தெரிந்துகொள்கிறார்கள். இது ஒரு பெண்தெய்வம். பாகால்பேரீத் என்னும் பெயருக்கு, பேரீத்திலுள்ள தெய்வம் என்று பொருள் சொல்லலாம். பொனிஷியர்கள் தங்கள் விக்கிரகத்தை பேரீத்திலே ஆராதனை செய்தார்கள்.

பாகால்பேரீத் என்னும் பெயருக்கு "உடன்படிக்கையின் தெய்வம்" என்றும் பொருள் சொல்லலாம். பாகால் பேரீத்தை ஆராதிக்கிறவர்கள் இந்த தெய்வத்தோடு உடன்படிக்கை பண்ணிக்கொள்கிறார்கள். பாகால்பேரீத் இஸ்ரவேலின் தேவனைப்போல மாய்மாலம்பண்ணுகிறது.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், தம்முடைய ஜனத்தோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். பாகால்பேரீத்தும், தன்னை ஆராதிக்கிறவர்களோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறது என்று விக்கிரகாராதனைக்காரர் சொல்லுகிறார்கள். பாகால்பேரீத் மாய்மாலம் பண்ணுகிறது. இது சாத்தானுடைய தந்திரம்.

நியாயாதிபதிகள் - விரிவுரை
JUDGES - COMMENTARY

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தெய்வங்களை பின்பற்றிப்போனபடியினால், தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்துவிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களைச் சுற்றிலுமிருந்த தங்கள் எல்லாச் சத்துருக்களின் கையினின்றும் தங்களை இரட்சித்த தங்கள் தேவனாகிய கர்த்தரை நினையாமல் போகிறார்கள் (நியா 8:34).

கர்த்தரை மறந்துவிடுகிறவர்கள், தங்களுடைய சிநேகிதரையும் மறந்துவிடுவார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மறந்து கிதியோனுக்கும், அவருடைய வீட்டாருக்கும் நன்மை பாராட்டாமலிருக்கிறார்கள். கிதியோன் என்னும் யெருபாகால் இஸ்ரவேலுக்குச் செய்த சகல நன்மைக்குந்தக்க தயவை அவர் வீட்டாருக்குப் பாராட்டாமலும் போய்விடுகிறார்கள் (நியா 8:35). கிதியோன் ஒரு ஏபோத்தை செய்தார். அந்த ஏபோத்து அவருக்கும், அவருடைய வீட்டாருக்கும் கண்ணியாயிற்று.

9 அதிகாரம்

கிதியோன் மரித்துப்போனபின்பு, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நினையாமல், அவரை விட்டு விலகிப்போகிறார்கள். கிதியோனுக்கு எழுபது குமாரர் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர, சீகேமிலிருந்த கீதியோனுடைய மறுமனையாட்டியும், அவருக்கு ஒரு குமாரனைப் பெற்றிருக்கிறாள். கிதியோன் அவனுக்கு அபிமெலேக்கு என்று பேரிடுகிறார்.

அபிமெலேக்கினிடத்தில் கிதியோனுடைய நல்ல சுபாவம் எதுவும் காணப்படவில்லை. அபிமெலேக்கு கிதியோனுடைய மறுமனையாட்டியின் குமாரன். அவன் ஒரு துன்மார்க்கனாயிருக்கிறான்.

அபிமெலேக்கு சீகேமை தலைமை ஸ்தலமாக கொண்டு இஸ்ரவேல் தேசத்தை ஆளுகை செய்ய விரும்புகிறான் (நியா 9:1-6). கிதியோனுடைய இளையகுமாரனாகிய யோதாம், ஒரு உவமையின் மூலமாக, அபிமெலேக்குக்கு சாபத்தைச் சொல்லுகிறான். (நியா 9:7-21).

சீகேமிலுள்ளவர்கள் அபிமெலேக்குக்கு சிநேகிதராயிருக்கிறார்கள். ஆனாலும் சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்குக்கு இரண்டகம் பண்ணுகிறார்கள் (நியா 9:22-41). அபிமெலேக்கு சீகேமியரை அழித்துப்போடுகிறான் (நியா 9:42-49). முடிவிலே அபிமெலேக்கும் அழிந்துபோகிறான் (நியா 9:50-57).

அபிமெலேக்கு
நியா 9:1-6

நியா 9:1. யெருபாகாலின் குமாரன் அபிமெலேக்கு சீகேமிலிருக்கிற தன் தாயின் சகோதரிடத்திற்குப் போய், அவர்களையும் தன் தாயின் தகப்பனுடைய வம்சமான அனைவரையும் நோக்கி:

நியா 9:2. யெருபாகாலின் குமாரர் எழுபதுபேராகிய எல்லாரும் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ, ஒருவன்மாத்திரம் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ என்று நீங்கள் சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரின் காதுகளும் கேட்கப் பேசுங்கள்; நான் உங்கள் எலும்பும் உங்கள் மாம்சமுமானவன் என்று நினைத்துக் கொள்ளுங்கள் என்றான்.

நியா 9:3. அப்படியே அவன் தாயின் சகோதரர் சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரின் காதுகளும் கேட்க இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்காகப் பேசினார்கள்; அப்பொழுது: அவன் நம்முடைய சகோதரன் என்று அவர்கள் சொன்னதினால், அவர்கள் இருதயம் அபிமெலேக்கைப் பின்பற்றச் சாய்ந்தது.

நியா 9:4. அவர்கள் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக்காசை எடுத்து அவனுக்குக் கொடுத்தார்கள்; அவைகளால் அபிமெலேக்கு வீணரும் போக்கிரிகளுமான மனுஷரைச் சேவகத்தில் வைத்தான்; அவர்கள் அவனைப் பின்பற்றினார்கள்.

நியா 9:5. அவன் ஒப்ராவிலிருக்கிற தன் தகப்பன் வீட்டிற்குப் போய், யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்தான்; ஆனாலும் யெருபாகாலின் இளைய குமாரனாகிய யோதாம் ஒளித்திருந்தபடியினால் அவன் தப்பினான்.

நியா 9:6. பின்பு சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரும், மில்லோவின் குடும்பத்தாரனைவரும் கூடிக்கொண்டுபோய், சீகேமிலிருக்கிற உயர்ந்த கர்வாலிமரத்தண்டையிலே அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள்.

அபிமெலேக்கு, யெருபாகால் என்னும் கிதியோனுடைய மறுமனையாட்டியின் குமாரன். இவன் சீகேம் ஊரைச் சேர்ந்தவன். அபிமெலேக்கு தன்னைத்தானே பெரியவனாக உயர்த்தி, இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்கிறான். இவன் சிறுபிள்ளையாகயிருந்தபோதே, இவனுடைய தாய் இவன் மனதிலே ஆசை வார்த்தைகளை ஊட்டி வளர்த்திருக்கவேண்டும்.

அபிமெலேக்கு கிதியோனுடைய குமாரன். கிதியோன் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மிகவும் முக்கியமான நபராகயிருந்தார். அவர்களை நாற்பது வருஷம் நியாயம் விசாரித்தார். தானும் கிதியோனைப்போல இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யவேண்டுமென்று அபிமெலேக்கு நினைத்திருக்கலாம். தன்னுடைய தகப்பனாரைப்போல தானும் உயர்ந்த பதவிக்கு வரவேண்டுமென்று அபிமெலேக்கு ஆசைப்பட்டிருக்கலாம். அபிமெலேக்கு சிறுபிள்ளையாகயிருந்தபோது, அவனுடைய மனதிலே தோன்றின ஆசைகளை, இப்போது நடைமுறையில் செயல்படுத்துகிறான்.

இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பதற்கோ அல்லது அவர்களை ஆளுகை செய்வதற்கோ கர்த்தர் அபிமெலேக்கை அழைக்கவில்லை. கர்த்தர் தன்னை அழைக்காவிட்டாலும், அபிமெலேக்கு தன்னைத்தானே இஸ்ரவேலை ஆளுகை செய்யும் உயர்ந்த பதவிக்கு அழைத்துக்கொள்கிறான்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் கிதியோனை தம்முடைய ஊழியத்திற்கு அழைத்தார். மீதியானியர் கையிலிருந்து இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்கும் பொறுப்பை கர்த்தர் கிதியோனிடத்தில் ஒப்புக்கொடுத்தார். கர்த்தர் கிதியோனோடு கூடயிருந்தார். இப்படிப்பட்ட அழைப்பு எதுவும் இல்லாமலேயே, அபிமெலேக்கு இஸ்ரவேலுக்கு ராஜாவாகவேண்டுமென்று ஆசைப்படுகிறான்.

இஸ்ரவேல் தேசம் அமைதலாயிருக்கிறது. சத்துருக்கள் யாரும் அவர்களை ஒடுக்கவில்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரரை சத்துருக்கள் கையிலிருந்து இரட்சிக்கவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. இஸ்ரவேல் புத்திரருக்கு இக்காலத்தில் நியாயாதிபதியும் தேவைப்படவில்லை. கிதியோனுடைய ஊழியத்தினால் இஸ்ரவேல் தேசத்திலே நாற்பது வருஷங்களாக அமைதல் உண்டாயிற்று. ஆனால் அபிமெலேக்கோ, பேராசைப்பட்டு, தன்னுடைய தகப்பனாராகிய கிதியோனைப்போல, இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதியாய் ஆகவேண்டுமென்று விரும்புகிறான்.

அபிமெலேக்கு தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு, தன்னுடைய தாயாரின் உற்றார் உறவினர்களை தந்திரமாகப் பயன்படுத்திக்கொள்கிறான். சீகேம் எப்பிராயீம் கோத்திரத்தாருடைய சுதந்தரவீதத்திலிருக்கும் பட்டணம். யோசுவா இஸ்ரவேல் புத்திரரை கடைசியாக சீகேமிலே கூட்டிச் சேர்த்தார். இஸ்ரவேல் கோத்திரத்தாரும் சீகேம் பட்டணத்தின்மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருக்கிறார்கள்.

சீகேமின் மனுஷரை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தவேண்டுமென்று அபிமெலேக்கு சதிஆலோசனை பண்ணுகிறான். சீகேமின் மனுஷர் தன்னோடு கூடயிருந்தால், இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்யவேண்டும் என்னும் தன்னுடைய ஆசையை நிறைவேற்றிவிடலாம் என்று அபிமெலேக்கு நினைக்கிறான்.

அபிமெலேக்கை இஸ்ரவேல் புத்திரர்மீது ராஜாவாக்கவேண்டும் என்னும் எண்ணம் யாரிடத்திலும் இல்லை. அபிமெலேக்கு தனக்குத்தானே கனவு காண்கிறான். எப்படியாவது இஸ்ரவேல் புத்திரர்மீது ராஜாவாகிவிடவேண்டும் என்பது அபிமெலேக்கின் விருப்பம். இதற்காக அவன் சதிஆலோசனைகளை மேற்கொள்கிறான்.

கிதியோனுக்கு எழுபது குமாரர்கள் இருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கிதியோனிடம் போய் தங்களை ஆளுகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆனால் கிதியோனோ, தானும், தன்னுடைய குமாரர்களும் அவர்களை ஆளுகை செய்யமாட்டார்கள் என்று சொல்லிவிட்டார் (நியா 8:23). ஆனால் அபிமெலேக்கோ இந்த உண்மையை மறைத்து, சீகேமியரிடத்தில், பொய்வார்த்தைகளை வஞ்சகமாகச் சொல்லுகிறான்.

"யெருபாகாலின் குமாரர் எழுபதுபேராகிய எல்லாரும் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ, ஒருவன்மாத்திரம் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ" (நியா 9:2) என்று அபிமெலேக்கு சீகேமியரிடத்தில் கேட்கிறான். இஸ்ரவேல் புத்திரரை, கிதியோனுடைய எழுபது குமாரரும் ஆளுகை செய்ய விரும்புகிறார்கள் என்றும், தங்களுடைய தகப்பனாரின் அதிகாரத்தை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்ள ஆசைப்படுகிறார்கள் என்றும் அபிமெலேக்கு சீகேமியரிடத்தில் பொய்ப்பிரச்சாரம்பண்ணுகிறான்.

இஸ்ரவேல் புத்திரரை கிதியோனுடைய எழுபது குமாரர் ஆளுவதற்கு பதிலாக, தான் ஒருவன் மாத்திரம் அவர்களை ஆளுவது அவர்களுக்கு நல்லதாயிருக்கும் என்று தன்னுடைய யோசனையையும் சொல்லுகிறான். மேலும் அவன் சீகேமியரைப்பற்றிச் சொல்லும்போது, "நான் உங்கள் எலும்பும் உங்கள் மாம்சமுமானவன்" (நியா 9:2) என்று அன்பான வார்த்தைகளை பாசத்தோடு சொல்லுகிறான்.

அபிமெலேக்கின் ஆசை வார்த்தைகள் சீகேமியருடைய மனதிலே நன்றாய் கிரியை செய்கிறது. அவர்களுடைய இருதயம் அபிமெலேக்கை பின்பற்றி சாய்கிறது. அவர்கள் அபிமெலேக்கை பின்பற்றுகிறார்கள்.

யெருபாகாலின் குமாரன் அபிமெலேக்கு சீகேமிலிருக்கிற தன் தாயின் சகோதரிடத்திற்குப் போய், அவர்களையும் தன் தாயின் தகப்பனுடைய வம்சமான அனைவரையும் நோக்கி: "யெருபாகாலின் குமாரர் எழுபதுபேராகிய எல்லாரும் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ, ஒருவன்மாத்திரம் உங்களை ஆளுவது உங்களுக்கு நல்லதோ என்று நீங்கள் சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரின் காதுகளும் கேட்கப் பேசுங்கள்; நான் உங்கள் எலும்பும் உங்கள் மாம்சமுமானவன் என்று நினைத்துக் கொள்ளுங்கள்" (நியா 9:1,2) என்று சொல்லுகிறான்.

அப்படியே அவன் தாயின் சகோதரர் சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரின் காதுகளும் கேட்க இந்த வார்த்தைகளையெல்லாம் அவனுக்காகப் பேசுகிறார்கள்; அப்பொழுது: அவன் நம்முடைய சகோதரன் என்று அவர்கள் சொன்னதினால், அவர்கள் இருதயம் அபிமெலேக்கைப் பின்பற்றச் சாய்கிறது (நியா 9:3).

சீகேமின் பெரிய மனுஷர் தங்கள் பட்டணம் உயர்ந்த அந்தஸ்திலிருக்க வேண்டுமென்று விரும்புகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு அபிமெலேக்கு ராஜாவானால், சீகேம் ராஜதானி பட்டணமாயிருக்கும். இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் சீகேம் பிரதான பட்டணமாயிருக்கும். அபிமெலேக்கும் தன்னை சீகேமியருடைய சகோதரன் என்று சொல்லுகிறான். இதனால் சீகேமியரின் இருதயம் அபிமெலேக்கை பின்பற்ற சாய்கிறது. அபிமெலேக்குக்கு கிடைக்கும் மேன்மை, தங்களுக்கும் கிடைக்கும் என்று சீகேமியர் எதிர்பார்க்கிறார்கள்.

சீகேமின் பெரிய மனுஷர் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக்காசை எடுத்து அவனுக்குக் கொடுக்கிறார்கள்; அவைகளால் அபிமெலேக்கு வீணரும் போக்கிரிகளுமான மனுஷரைச் சேவகத்தில் வைக்கிறான்; அவர்கள் அவனைப் பின்பற்றுகிறார்கள்.

பாகால்பேரீத்தின் கோவிலிலிருப்பது சீகேமியருக்கு சொந்தமான பொதுப்பணம். சீகேமின் பெரிய மனுஷர், தங்கள் ஊராருக்கு சொந்தமான பொதுப்பணத்தை அபிமெலேக்குக்கு கொடுக்கிறார்கள். பாகால்பேரீத் தங்களைப் பாதுகாக்கும் என்று நம்பி, சீகேமியர், தங்கள் வெள்ளிக்காசுகளை, அதன் ஆலயத்தின் பொக்கிஷத்திலே சேர்த்து வைத்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு தூரமாய் விலகிப்போயிருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளையெல்லாம் மறந்துவிடுகிறார்கள். அவர்கள் கர்த்தரை ஆராதியாமல், பாகால்பேரீத் என்னும் நூதன தெய்வத்தை ஆராதித்து, அதற்கு காணிக்கையும் கொடுக்கிறார்கள். அபிமெலேக்கும் சீகேமின் பெரிய மனுஷர் கொடுத்த எழுபது வெள்ளிக்காசுகளை ஏற்றுக்கொள்கிறான்.

அபிமெலேக்கு இஸ்ரவேல் புத்திரரை ஆளுகை செய்ய தகுதியற்றவன். இஸ்ரவேலின் நியாயாதிபதி, தேசத்திலுள்ள விக்கிரகாராதனையை அழித்துப்போடவேண்டும். விக்கிரகங்களின் பலிபீடங்களை நிர்மூலம்பண்ணவேண்டும். ஆனால் அபிமெலேக்கோ பாகால்பேரீத்தின் வெள்ளிக்காசுகளை பெற்றுக்கொண்டு, அதன் ஆலயத்தைப் பாதுகாக்க தீர்மானம்பண்ணுகிறான். விக்கிரகாராதனையை அழிப்பதற்கு பதிலாக, அதற்கு ஆதரவாயிருக்கிறான்.

அபிமெலேக்குக்கு சேனை எதுவுமில்லை. பராக்கிரமசாலிகளை தன்னுடைய சேவகத்தில் வைப்பதற்கு, அவனிடத்தில் பணமுமில்லை. இப்போதோ சீகேமின் பெரிய மனுஷர், அபிமெலேக்குக்கு எழுபது வெள்ளிக்காசுகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவன் அந்தப் பணத்தைக்கொண்டு, வீணரும், போக்கிரிகளுமான மனுஷரை தன்னுடைய சேவகத்திலே வைக்கிறான். அவர்கள் அபிமெலேக்கைப் பின்பற்றுகிறார்கள்.

அபிமெலேக்கின் சேவகத்திலிருப்பவர்களுக்கு சமுதாயத்திலே நல்ல பெயர் இல்லை. அவர்கள் வீணர்கள். துர்க்குணமுள்ளவர்கள். போக்கிரிகள். பிறரை வஞ்சிக்கிறவர்கள். ஒழுக்கமும் கட்டுப்பாடுமில்லாமல் தாறுமாறாக ஜீவிக்கிறவர்கள். அபிமெலேக்கு அப்படிப்பட்டவர்களுக்கு பணம் கொடுத்து அவர்களை தன்னுடைய சேவகத்திலே வைத்துக்கொள்கிறான்.

இஸ்ரவேலின் நியாயாதிபதி, இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சத்துருக்களின் கைகளிலிருந்து இரட்சிக்கவேண்டும். ஆனால் அபிமெலேக்கோ கிதியோனுடைய எழுபது குமாரரில், ஒருவனைத் தவிர மற்ற அறுபத்தொன்பது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்கிறான்.

அபிமெலேக்கு ஒப்ராவிலிருக்கிற தன் தகப்பன் வீட்டிற்குப் போய், யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்கிறான்; ஆனாலும் யெருபாகாலின் இளைய குமாரனாகிய யோதாம் ஒளித்திருந்தபடியினால் அவன் தப்புகிறான் (நியா 9:5).

செத்துப்போனவர்கள் எல்லோருமே அபிமெலேக்கின் சகோதரர்கள். இஸ்ரவேல் புத்திரர்மீது எப்படியாவது ராஜாவாகிவிடவேண்டும் என்னும் பேராசை அபிமெலேக்கின் இருதயத்தில் நிரம்பியிருக்கிறது. தன்னுடைய ஆசையை நிறைவேற்றுவதற்கு அபிமெலேக்கு எதையும் செய்ய துணிந்திருக்கிறான். பேராசை மனுஷனுடைய குணத்தை மிருககுணமாக மாற்றிவிடுகிறது.

அபிமெலேக்கு கிதியோனுடைய குமாரனாகயிருந்தாலும், கிதியோனுடைய நல்ல சுபாவம், இவனிடத்தில் சிறிதும் காணப்படவில்லை. அபிமெலேக்கு தன்னுடைய தகப்பனாராகிய கிதியோனுடைய நற்பெயரை அழித்துப்போடுகிறான்.

இப்போது, இஸ்ரவேல் புத்திரர்மீது ராஜாவாவதற்கு, அபிமெலேக்கைத் தவிர வேறு ஒருவருமில்லை. கிதியோனின் குமாரர்களில் ஒருவன் தப்பித்து ஓடிவிட்டான். மற்றவர்களை அபிமெலேக்கு கொன்றுபோட்டான். பின்பு சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரும், மில்லோவின் குடும்பத்தாரனைவரும் கூடிக்கொண்டுபோய், சீகேமிலிருக்கிற உயர்ந்த கர்வாலி மரத்தண்டையிலே அபிமெலேக்கை ராஜாவாக்குகிறார்கள் (நியா 9:6).

அபிமெலேக்கை ராஜாவாக்குவதற்கு முன்பாக, சீகேமின் பெரிய மனுஷர் கர்த்தருடைய சமுகத்திலே விண்ணப்பம்பண்ணவில்லை. கர்த்தருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளவில்லை. தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமா என்றுகூட சீகேமின் மனுஷர் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணவில்லை. தங்களுக்கு யார் ராஜாவாகயிருக்கவேண்டும் என்பதை தீர்மானிப்பதற்கு முன்பாக, தங்களுக்கு ராஜா வேண்டுமா என்பதை சீகேமின் சகல பெரிய மனுஷரும் கர்த்தரிடத்தில் விசாரித்து கேட்கவேண்டும்.

அபிமெலேக்கின் சகோதரரை கொலைசெய்வதற்கு, சீகேமின் பெரிய மனுஷரும் உடந்தையாயிருக்கிறார்கள் (நியா 9:24). அபிமெலேக்கு ஒரு கொலைகாரனாயிருந்தாலும், அவர்கள் அவனை தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள். கொலைகாரனுக்கு தண்டனை கொடுப்பதற்கு பதிலாக, அவனுக்கு உயர்ந்த பதவியைக் கொடுக்கிறார்கள்.

சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரும், மில்லோவின் குடும்பத்தார் அனைவரும் அபிமெலேக்கை ராஜாவாக்குகிறார்கள். இஸ்ரவேலின் மற்ற ஜனங்கள் யாரும் அபிமெலேக்கை ராஜாவாக்க வரவில்லை. அவர்கள் இந்த சம்பவத்தை கண்டுகொள்ளவே இல்லை. அவர்களுக்கு இது பற்றிய கரிசனை எதுவுமில்லை. அவர்கள் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கிதியோனுடைய வீட்டாருக்கு நன்மை பாராட்டவில்லை. "கிதியோன் என்னும் யெருபாகால் இஸ்ரவேலுக்குச் செய்த சகல நன்மைக்குந்தக்க தயவை அவன் வீட்டாருக்குப் பாராட்டாமலும் போனார்கள்" (நியா 8:35).

யோதாம்
நியா 9:7-21

நியா 9:7. இது யோதாமுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் போய், கெரிசீம் மலையின் உச்சியில் ஏறி நின்று, உரத்த சத்தமிட்டுக் கூப்பிட்டு, அவர்களை நோக்கி: சீகேமின் பெரிய மனுஷரே, தேவன் உங்களுக்குச் செவிகொடுக்கும்படி நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்.

நியா 9:8. விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:9. அதற்கு ஒலிவமரம்: தேவர்களும் மனுஷரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது.

நியா 9:10. அப்பொழுது மரங்கள் அத்திமரத்தைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:11. அதற்கு அத்திமரம்: நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது.

நியா 9:12. அப்பொழுது மரங்கள் திராட்சச் செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:13. அதற்குத் திராட்சச்செடி: தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப்போவேனோ என்றது.

நியா 9:14. அப்பொழுது மரங்களெல்லாம் முட்செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது.

நியா 9:15. அதற்கு முட்செடியானது மரங்களைப் பார்த்து: நீங்கள் என்னை உங்களுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணுகிறது மெய்யானால், என் நிழலிலே வந்தடையுங்கள்; இல்லாவிட்டால் முட்செடியிலிருந்து அக்கினி புறப்பட்டு லீபனோனின் கேதுரு மரங்களைப் பட்சிக்கக்கடவது என்றது.

நியா 9:16. என் தகப்பன் உங்களுக்காக யுத்தம் பண்ணி, தன் ஜீவனை எண்ணாமற்போய், உங்களை மீதியானியரின் கையினின்று இரட்சித்தார்.

நியா 9:17. நீங்களோ இன்று என் தகப்பனுடைய குடும்பத்துக்கு விரோதமாய் எழும்பி, அவருடைய குமாரரான எழுபதுபேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்து, அவருடைய வேலைக்காரியின் மகனாகிய அபிமெலேக்கு உங்கள் சகோதரனானபடியினால், அவனைச் சீகேம் பட்டணத்தாருக்கு ராஜாவாக்கினீர்கள்.

நியா 9:18. இப்போதும் நீங்கள் அவனை ராஜாவாக்கின செய்கை உண்மையும் உத்தமுமான செய்கையாயிருக்குமானால்,

நியா 9:19. நீங்கள் யெருபாகாலையும் அவர் குடும்பத்தாரையும் நன்மையாக நடத்தி, அவர் கைகளின் செய்கைக்குத்தக்கதை அவருக்குச் செய்து, இப்படி இந்நாளில் அவரையும் அவர் குடும்பத்தாரையும் நடத்தினது உண்மையும் உத்தமுமாயிருக்குமானால், அபிமெலேக்கின்மேல் நீங்களும் சந்தோஷமாயிருங்கள்; உங்கள்மேல் அவனும் சந்தோஷமாயிருக்கட்டும்.

நியா 9:20. இல்லாவிட்டால் அபிமெலேக்கிலிருந்து அக்கினி புறப்பட்டு, சீகேம் பட்டணத்தாரையும், மில்லோவின் குடும்பத்தாரையும் பட்சிக்கவும், சீகேம் பட்டணத்தாரிலும் மில்லோவின் குடும்பத்தாரிலுமிருந்து அக்கினி புறப்பட்டு, அபிமெலேக்கைப் பட்சிக்கவும்கடவது என்று யோதாம் சொல்லி,

நியா 9:21. தன் சகோதரனாகிய அபிமெலேக்குக்குப் பயந்து, தப்பியோடி, பேயேருக்குப்போய், அங்கே குடியிருந்தான்.

யெருபாகால் என்னும் கிதியோனுடைய இளையகுமாரனாகிய யோதாம் அபிமெலேக்கின் கொலை வெறிக்கு தப்பிக்கிறான். அபிமெலேக்கு தன்னுடைய சகோதரரை ஒரே கல்லின்மேல் கொலை செய்தபோது, யோதாம் ஒழித்திருந்தபடியினால் தப்பித்துக்கொள்கிறான். தேவனுடைய விசேஷித்த கிருபையினாலும், தெய்வீக பராமரிப்பினாலும், யோதாம் தப்பித்துக்கொள்கிறான். யோதாமினுடைய குடும்பத்தார் எல்லோருக்கும் பொதுவான அழிவு உண்டாயிற்று.

யோதாம் அபிமெலேக்குக்கு விரோதமாக எந்த ஒரு சேனையையும் திரட்டவில்லை. அவன் மற்ற பட்டணங்களுக்குப்போய், அதிலுள்ள மனுஷரை அபிமெலேக்குக்கு விரோதமாய்க் கூட்டிச்சேர்க்கவுமில்லை. ஆனாலும் சீகேமின் பெரிய மனுஷருக்கு விரோதமாக சாபமான வார்த்தைகளை தைரியமாய்ச் சொல்லுகிறான்.

சீகேமிலிருக்கிற சகல பெரிய மனுஷரும் அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள் என்னும் செய்தி யோதாமுக்கு அறிவிக்கப்படுகிறது. இது யோதாமுக்கு அறிவிக்கப்பட்டபோது, அவன் போய், கெரிசீம் மலையின் உச்சியில் ஏறி நின்று, உரத்தசத்தமிட்டுக் கூப்பிட்டு, அவர்களை நோக்கி: "சீகேமின் பெரிய மனுஷரே, தேவன் உங்களுக்குச் செவிகொடுக்கும்படி நீங்கள் எனக்குச் செவிகொடுங்கள்" (நியா 9:7) என்று ஏதோமின் மனுஷருக்கு எச்சரிப்பின் வார்த்தைகளைச் சொல்லுகிறான்.

ஏதோமியருடைய துன்மார்க்கமான கிரியைகளுக்காகவும் அவர்கள் அபிமெலேக்கோடு சேர்ந்துகொண்டு, தன்னுடைய குடும்பத்தாரை அழித்துப்போட்டதற்காகவும், யோதாம் அவர்களை கடிந்துகொள்கிறான்.

ஏதோமின் வார்த்தையில் கோபமும் உறுதியும் இருக்கிறது. "சீகேமின் பெரிய மனுஷரே, தேவன் உங்களுக்கு செவிகொடுக்கும்படி, நீங்கள் எனக்கு செவிகொடுங்கள்" என்று சொல்லுகிறான். ஏதோம் ஒரு உவமையின் மூலமாக, தன்னுடைய செய்தியை ஏதோமின் மனுஷருக்கு அறிவிக்கிறான்.

விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி விரும்புகிறது. எல்லா விருட்சங்களிலும் ஒலிவமரமே மிகவும் விசேஷமானது. விருட்சங்கள் முதலாவதாக, ஒலிவமரத்தைப் பார்த்து, "நீ எங்களுக்கு ராஜாவாயிரு" என்று சொல்லுகிறது (நியா 9:8). ஆனால் ஒலிவமரமோ விருட்சங்களுக்கு ராஜாவாகயிருக்க மறுத்துவிடுகிறது.

"விருட்சங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணும்படி போய், ஒலிவமரத்தைப் பார்த்து: நீ எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு ஒலிவமரம்: தேவர்களும் மனுஷரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது" (நியா 9:8,9). தான் ராஜாவாகயிருக்க மறுப்பதற்கான காரணத்தையும் ஒலிவமரம் சொல்லுகிறது.

விருட்சங்கள், மற்ற மரங்களையும் தேடிப்போகிறது. ஒலிவமரத்திற்கு அடுத்தபடியாக அத்திமரம், திராட்சச்செடி ஆகியவை அதிக கனமுள்ளவை. விருட்சங்கள் அந்த மரங்களையும் பார்த்து "நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு" என்று சொல்லுகிறது. ஆனால் அந்த மரங்களும் ராஜாவாயிருக்க மறுத்துவிடுகிறது.

"அப்பொழுது மரங்கள் அத்திமரத்தைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்கு அத்திமரம்: நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ என்றது (நியா 9:10,11).

"அப்பொழுது மரங்கள் திராட்சச் செடியைப் பார்த்து: நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு என்றது. அதற்குத் திராட்சச்செடி: தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப்போவேனோ என்றது" (நியா 9:12,13).

ஒலிவமரமும், அத்திமரமும், திராட்சச்செடியும் விருட்சங்களை ஆளுகை செய்வதற்கு பதிலாக, ஜனங்களுக்கு சேவை செய்யவே விரும்புகிறது. ஆனால் அபிமெலேக்கோ ஜனங்களுக்கு சேவை செய்ய விரும்பாமல், அவர்களுக்கு ராஜாவாயிருக்க விரும்புகிறான். அவன் மனுஷரால் வரும் புகழ்ச்சியையும், வீண்பெருமையையும் நாடுகிறான்.

யோதாம் விருட்சங்களைப்பற்றிய உவமையைச் சொல்லி, தன்னுடைய தகப்பனாராகிய கிதியோனின் நற்குணத்தை சீகேமியருக்கு அறிவிக்கிறான். கிதியோனுக்கு முன்பாக, இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்த நியாயாதிபதிகள் நற்குணசாலிகளாகவும், ஜனங்களுக்கு சேவை செய்யும் மனப்பான்மையுடையவர்களாயும் இருந்தார்கள். கிதியோனும் இஸ்ரவேல் புத்திரருக்கு நன்மை செய்தார்.

தங்களுக்கு ராஜாவாகயிருந்து, தங்களை ஆளுகை செய்யுமாறு, இஸ்ரவேல் புத்திரர் கிதியோனிடம் கேட்டுக்கொண்டார்கள். கிதியோனோ, தானும், தன்னுடைய குமாரரும் அவர்களை ஆளப்போவதில்லை என்று சொல்லி, அவர்களுடைய வேண்டுதலை நிராகரித்து விட்டார். கிதியோனுக்கு ராஜாசனத்தில் அமர்ந்து, இஸ்ரவேல் புத்திரரை அதிகாரத்தோடு ஆளுகை செய்யவேண்டும் என்னும் விருப்பம் இல்லை. ஒலிவமரம், அத்திமரமும், திராட்சச்செடியும், விருட்சங்களுக்கு ராஜாவாயிருக்க மறுத்ததுபோல, கிதியோனும் மறுத்துவிடுகிறார்.

நற்குணமுள்ளவர்கள் ஜனங்களுக்கு சேவை செய்ய விரும்புவார்கள். அவர்கள் ஜனங்களை ஊழியங்கொள்ளாமல், ஜனங்களுக்கு ஊழியம் செய்வார்கள். தங்களுக்கு பதவிகளும், அதிகாரங்களும் வந்தாலும், அதை ஏற்றுக்கொள்ளாமல், ஜனங்களுக்கு சேவை செய்வதையே தெரிந்துகொள்வார்கள். பெரியவர்களாகயிருப்பதைவிட, பிரயோஜனமுள்ளவர்களாயிருப்பதே நல்லது என்று நினைப்பார்கள்.

காட்டிலுள்ள விருட்சங்களுக்கு ஒரு ராஜா தேவையில்லை. அவர்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்னும் அவசியமுமில்லை. அதுபோலவே இஸ்ரவேல் புத்திரருக்கு, இப்போது தங்கள்மீது ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணவேண்டும் என்னும் அவசியமுமில்லை. கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்கு ராஜாவாயிருக்கிறார்.

தங்களுக்கு ஒரு ராஜாவை அபிஷேகம்பண்ணவேண்டும் என்னும் எண்ணம் இஸ்ரவேல் புத்திரருக்கு வருமென்றால், அவர்கள் நற்குணமுள்ளவரையும் கர்த்தரிடத்தில் பக்தியுள்ளவரையும் தங்களுக்கு ராஜாவாக அபிஷேகம்பண்ணவேண்டும். விருட்சங்கள் ஒலிவமரத்தையும், அத்திமரத்தையும், திராட்சச்செடியையும் தேடிப்போய், தங்களுக்கு ராஜாவாயிருக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டதுபோல, இஸ்ரவேல் புத்திரரும் நல்லவர்களைத் தேடிப்பார்த்து, அவர்களை தங்களுக்கு ராஜாவாயிருக்குமாறு கேட்டுக்கொள்ளவேண்டும்.

ஒலிவமரமும், அத்திமரமும், திராட்சச்செடியும் விருட்சங்களுக்கு ராஜாவாயிருக்க மறுத்துவிட்டது. அப்பொழுது மரங்களெல்லாம் முட்செடியைப் பார்த்து, "நீ வந்து எங்களுக்கு ராஜாவாயிரு" (நியா 9:14) என்று சொல்லுகிறது. முட்செடியினால் ஒரு பிரயோஜனமுமில்லை. ஒரு சில மரங்கள் ஓங்கி வளர்ந்து பெரிதாயிருக்கும். ஆனால் அவை கனிதராது. மனுஷருக்கு பிரயோஜனமாயிருக்காது. அப்படிப்பட்ட மரங்கள் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். ஒருவேளை அவை மனுஷருக்கு நிழல் தரலாம். ஆனால் கனிதராது.

ஒலிவமரம், அத்திமரம், திராட்சச்செடி ஆகியவை மனுஷருக்கு பிரயோஜனமுள்ள விருட்சங்கள். இவையெல்லாம் கனிவிருட்சங்கள். முட்செடியை வெட்டி விறகாக பயன்படுத்தலாம். இது வேறு எதற்கும் பிரயோஜனப்படாது. ஒலிவமரமும், அத்திமரமும், திராட்சச்செடியும் பிரயோஜனமுள்ள கனிகளைத் தந்தாலும், அவை அதிகாரத்தையும், ஆளுகையையும் பெற்றுக்கொள்ள மறுக்கின்றன.

மனுஷருக்கு பிரயோஜனமுள்ள கனிகளைத் தரும் விருட்சங்களை நாம் கனம்பண்ணவேண்டும். அவற்றிற்கு மதிப்பையும் மரியாதையும் கொடுக்கவேண்டும். பிரயோஜனமுள்ள விருட்சங்கள், பிறரிடத்திலிருந்து மதிப்பையோ, கனத்தையோ எதிர்பார்க்காவிட்டாலும், நாம் அந்த விருட்சங்களை மதித்து கனம்பண்ணவேண்டும்.

பிரயோஜனமுள்ள விருட்சங்கள் மரங்களுக்கு ராஜாவாயிருக்க மறுக்கின்றன. அவை அதற்கான காரணத்தையும் தெளிவுபடுத்துகிறது.

ஒலிவமரம்: "தேவர்களும் மனுஷரும் புகழுகிற என்னிலுள்ள என் கொழுமையை நான் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ" (நியா 9:9) என்று சொல்லுகிறது.

அத்திமரம்: "நான் என் மதுரத்தையும் என் நற்கனியையும் விட்டு, மரங்களை அரசாளப்போவேனோ" (நியா 9:11) என்று சொல்லுகிறது.

திராட்சச்செடி: "தேவர்களையும் மனுஷரையும் மகிழப்பண்ணும் என் ரசத்தை நான் விட்டு மரங்களை அரசாளப்போவேனோ" (நியா 9:13) என்று சொல்லுகிறது.

திராட்சரசம் மனுஷரை மகிழப்பண்ணுகிறது. அது கர்த்தருக்கும் பானபலியாக வார்க்கப்படுகிறது. எண்ணெயையும், திராட்சரசமும் கர்த்தருடைய பலிபீடத்திலும் பயன்படுத்தப்படுகிறது. இவை மனுஷருடைய போஜனபந்தியிலும் பயன்படுத்தப்படுகிறது.

ஒலிவமரம், அத்திமரம், திராட்சச்செடி ஆகியவை, தங்களுடைய சேவையை விட்டுவிட்டு, மற்ற மரங்களை அரசாள ஆயத்தமாயில்லை. மரங்களுக்காக இவை தங்களை தாழ்த்தவோ, அல்லது உயர்த்தவோ விரும்பவில்லை. இந்த மரங்கள் எப்போதும் போல, கர்த்தருக்கும் மனுஷருக்கும் சேவை செய்யவே விரும்புகிறது.

ஒரு மனுஷன் ஒரு தேசத்திற்கு ராஜாவாயிருக்கும்போது, அவன் தேசத்தின் குடிகளை மிகவும் கவனமாய் பாதுகாத்து பராமரிக்கவேண்டும். அவர்களுடைய நன்மைக்காக அயராது பாடுபடவேண்டும். தேசத்திற்கு சேவை செய்யவேண்டும். ஒலிவமரமும், அத்திமரமும், திராட்சச்செடியும் தங்களுடைய கொழுமையையும், நற்கனியையும், ரசத்தையும் மனுஷருக்கு பிரயோஜனமுள்ளதாய்க் கொடுப்பதுபோல, ராஜாக்களும் தங்களுடைய சரீர பெலத்தையும், ஞானத்தையும், தங்கள் தேசத்தின் பிரயோஜனத்திற்காய் அர்ப்பணிக்கவேண்டும்.

பொதுவாழ்க்கையில் ஈடுபடுகிறவர்கள், தங்களுடைய சொந்த நன்மையைவிட, பொதுமக்களின் நன்மைக்கு அதிக கவனமும், முக்கியத்துவமும் காண்பிக்கவேண்டும். ஜனங்களின் பிரயோஜனத்திற்காக, ராஜாக்கள் தங்களுடைய சொந்த விருப்பங்களையும், ஆசைகளையும் தியாகம்பண்ண வேண்டியது வரலாம்.

சமுதாயத்திலே மேன்மையையும், உயர்ந்த அந்தஸ்துக்களையும் நாடுகிறவர்கள், தங்களுடைய கொழுமையையும், நற்கனியையும் இழக்கவேண்டியது வரலாம். ஒரு சிலர் உயர்ந்த பதவிக்கு வந்தவுடன், பதவி சுகத்தை அனுபவிப்பார்கள். தங்கள் பதவியைப் பார்த்து பெருமைப்படுவார்கள். இப்படிப்பட்டவர்கள் ஜனங்களுக்கு ஒரு நன்மையும் செய்யமாட்டார்கள். இவர்கள் நற்கிரியைகளை செய்வதில் அசதியாயும் சோம்பேறிகளாயும் இருப்பார்கள்.

இதன் நிமித்தமாகவே ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களும் சேவை செய்யவேண்டுமென்று விரும்புகிறவர்களும், உயர்ந்த பதவிகளை நாடிப்போகமாட்டார்கள். பதவியைப் பார்த்தாலே ஒதுங்கி போய்விடுவார்கள். தாங்கள் செய்யும் சேவைக்கு பதவிகள் தடையாயிருக்கும் என்று நினைப்பார்கள்.

அபிமெலேக்கோ ஒரு துன்மார்க்கன். ஜனங்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்னும் விருப்பம் அவனிடத்தில் இல்லை. ஆனால் ஜனங்களுக்கு ராஜாவாயிருந்து, அவர்களை தன்னுடைய இஷ்டம்போல ஆளுகை செய்யவேண்டும் என்னும் ஆசை அவனிடத்தில் காணப்படுகிறது. அபிமெலேக்கின் ஆசைகளை, யோதாம் இந்த உவமையிலே கடிந்து சொல்லுகிறான்.

மரங்களெல்லாம் முட்செடியைப் பார்த்து: "நீ வந்து, எங்களுக்கு ராஜாவாயிரு" (நியா 9:14) என்று சொல்லுகிறது. அபிமெலேக்கு ஒரு முட்செடியைப்போல இருக்கிறான். முட்செடி ஒன்றுக்கும் பிரயோஜனமில்லாதது. இது கனிதரும் விருட்சமல்ல. முட்செடியை ஒருவரும் விருட்சங்களின் எண்ணிக்கையோடு சேர்க்கமாட்டார்கள். முட்செடி மனுஷருக்கு தீங்கு செய்யும்.

கர்த்தர் இந்தப் பூமியை சபித்தபோது, இதிலே முட்செடியை முளைக்கப்பண்ணினார். முட்செடி கர்த்தருடைய சாபத்திற்கு அடையாளம். அக்கினியில் போட்டு எரிக்கப்படுவதுதான் இதன் முடிவு. அபிமெலேக்கு ஒரு முட்செடியைப்போல இருந்தாலும், சீகேமின் மனுஷர் அவனை ராஜாவாக்குகிறார்கள். மரங்களெல்லாம் முட்செடியை தங்களுக்கு ராஜாவாக்கினதற்கு இது ஒப்பாயிருக்கிறது.

"மூடர் மகா உயர்ந்த நிலையில் வைக்கப்படுகிறார்கள்; சீமான்களோ தாழ்ந்த நிலையில் உட்கார்ந்திருக்கிறார்கள்" (பிர 10:6).

"மனுபுத்திரரில் சண்டாளர் உயர்ந்திருக்கும்போது, துன்மார்க்கர் எங்கும் சுற்றித்திரிவார்கள்" (சங் 12:8).

நமக்கு தலைவர்களையும், வழிகாட்டிகளையும் தெரிந்தெடுக்கும்போது நாம் மிகவும் கவனமாய்ச் செயல்படவேண்டும். விழித்திருந்து தீர்மானம்பண்ணவேண்டும்.

யோதாமின் உவமை ஆழமான கருத்துடையதாயிருக்கிறது. யோதாம் இந்த உவமையின் கருத்தை இஸ்ரவேல் புத்திரருக்கும் அபிமெலேக்குக்கும் பயன்படுத்துகிறான். கிதியோன் இஸ்ரவேல் ஜனத்திற்கு அநேக நன்மைகளை செய்திருக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ கிதியோனுடைய குடும்பத்திற்கு விரோதமாய் எழும்பியிருக்கிறார்கள். கிதியோனுடைய குமாரரான எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலை செய்தார்கள்.

சீகேமின் மனுஷர் அபிமெலேக்குக்கு சகோதரராயிருக்கிறார்கள். அபிமெலேக்கு அவர்களிடத்தில் "நான் உங்கள் எலும்பும், உங்கள் மாம்சமுமானவன்" என்று சொன்னான். அவர்கள் இந்த வாக்கியத்தை நினைத்து அபிமெலேக்கோடு ஐக்கியமாயிருக்கிறார்கள். அபிமெலேக்கு கிதியோனுடைய வேலைக்காரியின் மகன். வேலைக்காரியாயிருந்தவள், பிற்காலத்தில் கிதியோனுக்கு மறுமனையாட்டியானாள். அபிமெலேக்கு தங்கள் சகோதரனானபடியினால், சீகேமின் மனுஷர் அவனை சீகேம் பட்டணத்தாருக்கு ராஜாவாக்கியிருக்கிறார்கள் (நியா 9:17).

யோதாம் கிதியோனுடைய இளையகுமாரன். கிதியோன் இஸ்ரவேல் புத்திரருக்காக யுத்தம்பண்ணினார். தன்னுடைய ஜீவனை எண்ணாமல்போய், இஸ்ரவேல் புத்திரரை மீதியானியரின் கையின்று இரட்சித்தார் (நியா 9:16). ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, கிதியோன் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிடுகிறார்கள். கிதியோனின் குடும்பத்திற்கு ஆதரவாயிருந்து நன்மை செய்வதற்கு பதிலாக, அவர்களுக்கு விரோதமாய் எழும்பி, தீங்கு செய்கிறார்கள்.

கிதியோனுக்கு அநேக குமாரர்கள் இருக்கிறார்கள். பிள்ளைகளின் திரளான எண்ணிக்கை பெற்றோருக்கு கனத்தையும் மேன்மையையும் கொடுக்கிறது. ஆனால் சீகேமின் மனுஷரோ கிதியோனுடைய குமாரனான எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலை செய்தார்கள். எழுபது பேரில் கிதியோனுடைய இளையகுமாரனாகிய யோதாம் மாத்திரம் தப்புகிறான். கிதியோனுடைய வேலைக்காரியின் மகனான அபிமெலேக்கு அவர்களை கொலை செய்கிறான்.

சீகேமின் மனுஷருக்கு கிதியோனுடைய குடும்பத்தின்மீது மதிப்பும் மரியாதையும் இருக்குமென்றால், கிதியோனின் குமாரரைக் கொன்றுபோட்ட அபிமெலேக்கை தண்டிப்பார்கள். ஆனால் சீகேமின் மனுஷரோ அபிமெலேக்கைத் தண்டிக்கவில்லை. சீகேமின் மனுஷர் அபிமெலேக்கோடு சேர்ந்து கிதியோனின் குமாரரை ஒரே கல்லின்மேல் கொன்றுபோடுகிறார்கள். அபிமெலேக்கின் துன்மார்க்கத்திற்கு சீகேமின் மனுஷரும் உடந்தையாயிருக்கிறார்கள். இவர்கள் அபிமெலேக்கின் பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கிறார்கள். சீகேமின் மனுஷர் அபிமெலேக்கைத் தண்டிக்காமல், அவனைத் தங்களுக்கு ராஜாவாக்குகிறார்கள்.

சீகேமின் மனுஷர் செய்கிற காரியம் நன்மையானதா அல்லது தீமையானதா என்பதை அவர்களே தீர்மானித்துக்கொள்ளட்டும் என்று, முடிவு எடுக்கும் பொறுப்பை யோதாம் அவர்களிடத்தில் ஒப்புக்கொடுக்கிறான்.

"இப்போதும் நீங்கள் அவனை ராஜாவாக்கின செய்கை உண்மையும் உத்தமமுமான செய்கையாயிருக்குமானால், நீங்கள் யெருபாகாலையும் அவர் குடும்பத்தாரையும் நன்மையாக நடத்தி, அவர் கைகளின் செய்கைக்குத்தக்கதை அவருக்குச் செய்து, இப்படி இந்நாளில் அவரையும் அவர் குடும்பத்தாரையும் நடத்தினது உண்மையும் உத்தமுமாயிருக்குமானால், அபிமெலேக்கின்மேல் நீங்களும் சந்தோஷமாயிருங்கள்; உங்கள்மேல் அவனும் சந்தோஷமாயிருக்கட்டும்" (நியா 9:18,19) என்று யோதாம் சீகேமின் மனுஷரிடத்தில் சொல்லுகிறான்.

சீகேமின் மனுஷர் கிதியோனின் குடும்பத்திற்கு தீங்கு செய்திருப்பார்களென்றால், அவர்கள் செழித்திருக்க மாட்டார்கள். அவர்கள்மீது சாபமும் அழிவும் வரும். அவர்கள் கிதியோனின் குடும்பத்திற்கு செய்தது அக்கிரமமாகயிருக்கும் என்றால், "அபிமெலேக்கிலிருந்து அக்கினி புறப்பட்டு, சீகேம் பட்டணத்தாரையும், மில்லோவின் குடும்பத்தாரையும் பட்சிக்கவும், சீகேம் பட்டணத்தாரிலும் மில்லோவின் குடும்பத்தாரிலுமிருந்து அக்கினி புறப்பட்டு, அபிமெலேக்கைப் பட்சிக்கவும்கடவது" (நியா 9:20) என்று யோதாம் சொல்லுகிறான்.

யோதாம் சீகேமின் மனுஷர்மீது இந்த வார்த்தையை சொல்லிவிட்டு, தன் சகோதரனாகிய அபிமெலேக்குப் பயந்து, தப்பியோடி, பேயேருக்குப்போய், அங்கே குடியிருக்கிறான். பேயேர் சீகேமிற்கு வெகுதொலைவிலுள்ளது (நியா 9:21)

சீகேமின் மனுஷர்
நியா 9:22-25

நியா 9:22. அபிமெலேக்கு இஸ்ரவேலை மூன்று வருஷம் அரசாண்டபின்பு,

நியா 9:23. அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியை தேவன் வரப்பண்ணினார்.

நியா 9:24. யெருபாகாலின் எழுபது குமாரருக்குச் செய்யப்பட்ட கொடுமை வந்து பலித்து, அவர்களுடைய இரத்தப்பழி அவர்களைக் கொன்ற அவர்களுடைய சகோதரனாகிய அபிமெலேக்கின்மேலும், தன் சகோதரரைக் கொல்ல அவன் கைகளைத் திடப்படுத்தின சீகேம் மனுஷர் மேலும் சுமரும்படியாகச் சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்குக்கு இரண்டகம் பண்ணினார்கள்.

நியா 9:25. சீகேமின் மனுஷர் மலைகளின் உச்சியில் அவனுக்குப் பதிவிருக்கிறவர்களை வைத்தார்கள்; அவர்கள் தங்கள் அருகே வழிநடந்துபோகிற யாவரையும் கொள்ளையிட்டார்கள்; அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டது.

அபிமெலேக்கு இஸ்ரவேலை மூன்று வருஷம் அரசாளுகிறான். தேசத்தில் ஒரு குழப்பமுமில்லை. அவன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான் என்று இந்த வசனத்தில் சொல்லப்படவில்லை. அபிமெலேக்கு இஸ்ரவேல் தேசத்திற்கு ஏதாவது சேவை செய்தான் என்றோ அல்லது நன்மை செய்தான் என்றோ சொல்லப்படவுமில்லை. அவன் இஸ்ரவேலை மூன்று வருஷம் அரசாண்டான். ராஜா என்னும் பட்டத்தைப் பெற்றுக்கொண்டு, ராஜாங்கத்தின் சுகத்தை அனுபவித்தான்.

துன்மார்க்கனுடைய வெற்றியும், சந்தோஷமும் நிலைத்திருப்பதில்லை. கர்த்தருடைய நீதியான கரம் துன்மார்க்கருக்கு விரோதமாக எழும்பியிருக்கும். அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாக்கும் ஆவியை தேவன் வரப்பண்ணுகிறார் (நியா 9:23).

சீகேமின் பெரிய மனுஷரும், அபிமெலேக்கும் ஒருவருக்கொருவர் பொறாமைப்பட்டுக்கொள்கிறார்கள். அவர்களுக்குள் ஒற்றுமையும், அன்பும், பாசமும் குறைந்துபோயிற்று. இது கர்த்தரால் உண்டாயிற்று. கர்த்தர் அவர்கள் நடுவே பொல்லாப்பை உண்டாக்கும் ஆவியை வரப்பண்ணுகிறார். சாத்தான் பொல்லாப்பு உண்டுபண்ணுகிறவன். அவன் மனுஷர் மத்தியிலே தீங்குகளை விதைக்கிறவன். பொல்லாப்பை உண்டாக்கும் ஆவி சாத்தானுடையது.

கர்த்தர் சாத்தானை தம்முடைய அதிகாரத்தினால் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறார். சில சமயங்களில் கர்த்தர் துன்மார்க்கரை சாத்தானுக்கு ஒப்புக்கொடுத்துவிடுவார். கர்த்தருடைய உபதேசத்தைக் கேட்டு, துன்மார்க்கர் மனந்திரும்பவில்லையென்றால், அவர்கள் சாத்தான் மூலமாய் வரும் வேதனைகளை அனுபவிக்க வேண்டியது வரும்.

சீகேமின் பெரிய மனுஷர் பேராசைப்படுகிறார்கள். இந்தப் பேராசையும் அசுத்த ஆவியினால் உண்டாயிற்று. மனுஷருடைய இருதயங்களில் பிசாசும் குடியிருக்கிறான். பிசாசின் மூலமாய் மனுஷருக்குள்ளே பிரிவினைகளும், சண்டைகளும், யுத்தங்களும் உண்டாகிறது.

சீகேமின் மனுஷர் அபிமெலேக்கை ராஜாவாக்கினார்கள். அபிமெலேக்கு மூன்று வருஷமாய் ராஜசுகத்தை அனுபவிக்கிறான். அவனுடைய மேன்மையைப் பார்த்து சீகேமின் மனுஷர் பொறாமைப்பட்டு, அவனுக்கு தீங்கு செய்கிறார்கள். அபிமெலேக்குக்கும் சீகேமின் பெரிய மனுஷருக்கும் நடுவே பொல்லாப்பு உண்டாகிறது.

கர்த்தர் அவர்களுக்கு நடுவே பொல்லாப்பை உண்டுபண்ணும் ஆவியை வரப்பண்ணுகிறார். கர்த்தர் அவர்களை சாத்தானுக்கு ஒப்புக்கொடுக்கிறார். மனுஷருடைய பாவங்களே, அவர்கள் அனுபவிக்கும் தண்டனைகளுக்கு காரணம். கர்த்தர் ஒருபோதும் மனுஷருடைய பாவங்களுக்கு காரணரல்ல. ஆனாலும் மனுஷருடைய பாவத்திற்கான தண்டனை கர்த்தர் மூலமாகவே வருகிறது.

சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்கின் பாவங்களுக்கு பங்காளிகளாயிருந்தார்கள். அபிமெலேக்கை தங்களுக்கு ராஜாவாக்கினார்கள். துன்மார்க்கனை சிங்காசனத்திலே அமரச் செய்தவர்கள், அவனோடுகூட அழிந்துபோவார்கள். துன்மார்க்கன் கீழே விழுவதற்கு முன்பாக, அவனுடைய துன்மார்க்கத்திற்கு துணை போகிறவர்கள் முதலாவதாக கீழே விழுந்துவிடுவார்கள்.

துன்மார்க்கருக்குள்ளே ஐக்கியம் இருக்காது. அபிமெலேக்கு தனக்கு உதவிசெய்த சீகேமின் பெரிய மனுஷரைப் பகைக்கிறான். ஒரு காலத்தில் சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்குக்கு, அவர்களுடைய எலும்பாகவும், மாம்சமாகவும் இருந்தான். இப்போது அவன் அவர்களுக்கு சத்துருவாயிருக்கிறான். அவர்களுக்கு நடுவே பொல்லாப்பு வந்திருக்கிறது.

யெருபாகாலின் எழுபது குமாரருக்குச் செய்யப்பட்ட கொடுமை வந்து பலித்து, அவர்களுடைய இரத்தப்பழி அவர்களைக் கொன்ற அவர்களுடைய சகோதரனாகிய அபிமெலேக்கின்மேலும், தன் சகோதரரைக் கொல்ல அவன் கைகளைத் திடப்படுத்தின சீகேம் மனுஷர் மேலும் சுமரும்படியாகச் சீகேமின் பெரிய மனுஷர் அபிமெலேக்குக்கு இரண்டகம்பண்ணுகிறார்கள் (நியா 9:24).

சீகேமின் பெரிய மனுஷர் கிதியோனின் குடும்பத்திற்கு விரோதமாக செய்த பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அபிமெலேக்கை தங்களுக்கு ராஜாவாக்கின பாவத்திற்காக அவர்கள் வேதனைப்படவுமில்லை. சீகேமின் மனுஷர் அவனுக்கு இரண்டகம் பண்ணுகிறார்கள். அபிமெலேக்கு அருமாவிலிருந்தபோது அவனை சிறைப்பிடிக்கவேண்டும் அல்லது கொன்றுபோடவேண்டும் என்பது சீகேம் மனுஷருடைய திட்டம். அருமா என்பது அபிமெலேக்கின் கிராமப்பகுதியாகும் (நியா 9:41).

அபிமெலேக்கு அருமாவிலே இருக்கிறான். அவன் அந்த ஊரிலிருந்து சீகேமுக்கு வருவான் என்று சீகேமின் மனுஷர் எதிர்பார்க்கிறார்கள். சீகேமின் மனுஷர் மலைகளின் உச்சியில் அவனுக்குப் பதிவிருக்கிறவர்களை வைக்கிறார்கள்; அவர்கள் தங்கள் அருகே வழிநடந்துபோகிற யாவரையும் கொள்ளையிடுகிறார்கள்; அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்படுகிறது (நியா 9:25).

சீகேமின் மனுஷர் மலைகளின் உச்சியில் பதிவிருக்கிறவர்களை வைத்தாலும், அபிமெலேக்கு அங்கு வரவில்லை. தனக்கு பதிவிருக்கிறவர்களை சீகேமின் மனுஷர் வைத்திருக்கிறார்கள் என்னும் செய்தி அபிமெலேக்குக்கும் அறிவிக்கப்படுகிறது. ஆகையினால் அபிமெலேக்கு அருமாவிலிருந்து விடுகிறான்.

காகால்

நியா 9:26-29

நியா 9:26. ஏபேதின் குமாரனாகிய காகால் தன் சகோதரரோடே சீகேமுக்குள் போனான்; சீகேமின் பெரிய மனுஷர் அவனை நம்பி,

நியா 9:27. வெளியே புறப்பட்டு, தங்கள் திராட்சத்தோட்டங்களின் பழங்களை அறுத்து, ஆலையாட்டி, ஆடிப்பாடி, தங்கள் தேவனின் வீட்டிற்குள் போய், புசித்துக் குடித்து, அபிமெலேக்கை சபித்தார்கள்.

நியா 9:28. அப்பொழுது ஏபேதின் குமாரனாகிய காகால்: அபிமெலேக்கு யார்? சீகேம் யார்? நாம் அவனைச் சேவிக்கவேண்டியதென்ன? அவன் யெருபாகலின் மகன் அல்லவா? சேபூல் அவனுடைய காரியக்காரன் அல்லவா? சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் மனுஷரையே சேவியுங்கள்; அவனை நாங்கள் சேவிப்பானேன்?

நியா 9:29. இந்த ஜனங்கள் மாத்திரம் என் கைக்குள் இருக்கட்டும்; நான் அபிமெலேக்கைத் துரத்திவிடுவேன் என்றான். உன் சேனையைப் பெருகப்பண்ணிப் புறப்பட்டுவா என்று, அவன் அபிமெலேக்குக்குச் சொல்லியனுப்பினான்.

சீகேமின் பெரிய மனுஷர், அபிமெலேக்கைத் தள்ளிவிட்டு, காகால் என்பவனை தங்களுக்கு தலைவனாக ஆக்குகிறார்கள். இவன் ஏபேதின் குமாரன். காகால் தன் சகோதரரோடே சீகேமுக்குள் போகிறான். சீகேமின் பெரிய மனுஷர் காகாலை நம்புகிறார்கள்.

ஏபேத் என்னும் பெயருக்கு "வேலைக்காரன்" என்று பொருள். அபிமெலேக்கின் தாயாரும் ஒரு வேலைக்காரி. காகாலின் தகப்பனாரும் ஒரு வேலைக்காரன். அபிமெலேக்கும், காகாலும் வேலைக்காரருடைய இரண்டு பிள்ளைகளாயிருக்கிறார்கள். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் சண்டைபோட்டுக்கொள்கிறார்கள்.

காகாலும் அபிமெலேக்கைப்போல துணிச்சலுள்ளவன். சாதுரியமாய்ப் பேசக்கூடியவன். இவன் அபிமெலேக்குக்கு விரோதமாக சதிஆலோசனை பண்ணுகிறான். சீகேமின் மனுஷரை தன் பக்கமாக சேர்த்துக்கொள்ளவேண்டும் என்று திட்டமிட்டு, அவன் தன் சகோதரரோடே சீகேமுக்குள் போகிறான். அவர்களுடைய நம்பிக்கையைப் பெறும் விதத்தில் சாதுரியமாய்ப் பேசுகிறான். சீகேமின் பெரிய மனுஷர் காகாலை நம்புகிறார்கள்.

சீகேமின் பெரிய மனுஷர், காகாலை நம்பி வெளியே புறப்பட்டு, தங்கள் திராட்சத்தோட்டங்களின் பழங்களை அறுத்து, ஆலையாட்டி, ஆடிப்பாடி, தங்கள் தேவனின் வீட்டிற்குள் போய், புசித்துக் குடித்து, அபிமெலேக்கை சபிக்கிறார்கள் (நியா 9:27). இவர்கள் விக்கிரகக்கோவிலிலே, அறுப்பின் பண்டிகையை கொண்டாடுகிறார்கள்.

சீகேமின் மனுஷர் தங்கள் விக்கிரகங்களுக்கு முன்பாக அபிமெலேக்கை சபிக்கிறார்கள். தங்கள் விக்கிரகம் அபிமெலேக்கை அழித்துப்போடவேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறார்கள். சீகேமின் மனுஷர், மூன்று வருஷத்திற்கு முன்பு, அபிமெலேக்கை நேசித்தார்கள். அப்போது அவர்களுடைய இருதயம் அபிமெலேக்கை பின்பற்றி சாய்ந்தது. அவர்கள் பாகால்பேரீத்தின் கோவிலிலிருந்து எழுபது வெள்ளிக்காசை எடுத்து அபிமெலேக்குக்கு கொடுத்தார்கள் (நியா 9:4). இப்போதோ, சீகேமின் பெரிய மனுஷர் இதே கோவிலிலே அபிமெலேக்கை சபிக்கிறார்கள்.

காகால் சீகேமின் பெரிய மனுஷரிடத்தில் வீரமாகவும், சாதுரியமாகவும் பேசுகிறான். அப்பொழுது ஏபேதின் குமாரனாகிய காகால்: "அபிமெலேக்கு யார்? சீகேம் யார்? நாம் அவனைச் சேவிக்கவேண்டியதென்ன? அவன் யெருபாகலின் மகன் அல்லவா? சேபூல் அவனுடைய காரியக்காரன் அல்லவா? சீகேமின் தகப்பனாகிய ஏமோரின் மனுஷரையே சேவியுங்கள்; அவனை நாங்கள் சேவிப்பானேன்? இந்த ஜனங்கள்மாத்திரம் என் கைக்குள் இருக்கட்டும்; நான் அபிமெலேக்கைத் துரத்திவிடுவேன்" (நியா 9:28,29) என்று சொல்லுகிறான்.

காகாலின் பேச்சைக் கேட்டு சீகேமின் பெரிய மனுஷர் சந்தோஷப்படுகிறார்கள். காகால் தன்னைப்பற்றி பெருமையாகவும், அபிமெலேக்கைப்பற்றித் தூஷணமாகவும் பேசுகிறான். தன்னோடு யுத்தம்பண்ணவருமாறு, காகால் அபிமெலேக்குக்கு சொல்லியனுப்புகிறான். "உன் சேனையை பெருகப்பண்ணி புறப்பட்டுவா" என்று காகால் அபிமெலேக்குக்கு சொல்லியனுப்புகிறான். காகாலின் வீரமான பேச்சைக் கேட்டு சீகேமின் பெரிய மனுஷர் மிகவும் சந்தோஷப்படுகிறார்கள்.

காகால் அபிமெலேக்கைப்பற்றியும், அவனுடைய தகப்பனாகிய யெருபாகால் என்னும் கிதியோனைப்பற்றியும் சொன்னது சீகேமின் பெரிய மனுஷருக்கு சந்தோஷமாயிருக்கிறது. ஏபேத்தின் குமாரனாகிய பாகால் சேபூலைப்பற்றியும் பேசுகிறான். இவன் அபிமெலேக்கின் காரியக்காரன். அபிமெலேக்கு சேபூலை சீகேம் பட்டணத்தின் அதிகாரியாக நியமித்திருக்கிறான். ஏபேதின் குமாரனாகிய காகால் சேபூலைப்பற்றி பேசுவது, சீகேமின் பெரிய மனுஷருக்கு சந்தோஷமாயிருக்கிறது.

காகால் சீகேமுக்கு அபிமெலேக்கின் ஆளுகையிலிருந்து விடுதலை வாங்கி தர விரும்பவில்லை. அபிமெலேக்குக்கு பதிலாக காகால் சீகேமை ஆளுகை செய்ய விரும்புகிறான். "இந்த ஜனங்கள் மாத்திரம் என் கைக்குள் இருக்கட்டும், நான் அபிமெலேக்கை துரத்திவிடுவேன்" (நியா 9:29) என்று காகால் சொல்லுகிறான்.

சீகேமின் மனுஷர் அபிமெலேக்கின்மீது கோபமாயிருக்கிறார்கள். காகால் அபிமெலேக்குக்கு விரோதமாகப் பேசுவது சீகேமின் பெரிய மனுஷருக்கு சந்தோஷமாயிருக்கிறது. இவர்களெல்லோரும் ஒரு காலத்தில் அபிமெலேக்கின்மீது பிரியமாயிருந்தவர்கள். இவர்களுடைய மனச்சாட்சி சுத்தமாயில்லை. மனச்சாட்சியில்லாதவர்கள் எதிலும் நிலையாய் நிலைத்திருக்கமாட்டார்கள். சீகேமின் பெரிய மனுஷர் மூன்று வருஷங்களுக்கு முன்பு அபிமெலேக்கை விரும்பினார்கள். இப்போதோ அவர்கள் அபிமெலேக்கை வெறுத்து காகாலை விரும்புகிறார்கள்.

சேபூல்
நியா 9:30-41

நியா 9:30. பட்டணத்தின் அதிகாரியாகிய சேபூல் ஏபேதின் குமாரனாகிய காகாலின் வார்த்தைகளைக் கேட்டபோது, கோபமூண்டு,

நியா 9:31. இரகசியமாய் அபிமெலேக்கினிடத்துக்கு ஆட்களை அனுப்பி: இதோ, ஏபேதின் குமாரனாகிய காகாலும் அவனுடைய சகோதரரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள்; பட்டணத்தை உமக்கு விரோதமாக எழுப்புகிறார்கள்.

நியா 9:32. ஆகையால் நீர் உம்மோடிருக்கும் ஜனங்களோடேகூட இரவில் எழுந்து வந்து வெளியிலே பதிவிருந்து,

நியா 9:33. காலமே சூரியன் உதிக்கையில் எழும்பி, பட்டணத்தின்மேல் விழுந்து, அவனும் அவனோடிருக்கிற ஜனங்களும் உமக்கு எதிரே புறப்படும்போது, உம்முடைய கைக்கு நேரிடுகிறபடி அவனுக்குச் செய்யும் என்று சொல்லியனுப்பினான்.

நியா 9:34. அப்படியே அபிமெலேக்கும், அவனோடிருந்த சகல ஜனங்களும், இரவில் எழுந்துபோய், சீகேமுக்கு விரோதமாக நாலு படையாகப் பதிவிருந்தார்கள்.

நியா 9:35. ஏபேதின் குமாரன் காகால் புறப்பட்டு, பட்டணத்தின் ஒலி முகவாசலில் நின்றான்; அப்பொழுது பதிவிருந்த அபிமெலேக்கு தன்னோடிருக்கிற ஜனங்களோடேகூட எழும்பிவந்தான்.

நியா 9:36. காகால் அந்த ஜனங்களைக் கண்டு: இதோ, மலைகளின் உச்சிகளிலிருந்து ஜனங்கள் இறங்கிவருகிறார்கள் என்று சேபூலோடே சொன்னான். அதற்குச் சேபூல்: நீ மலைகளின் நிழலைக் கண்டு, மனுஷர் என்று நினைக்கிறாய் என்றான்.

நியா 9:37. காகாலோ திரும்பவும்: இதோ, ஜனங்கள் தேசத்தின் மேட்டிலிருந்து இறங்கிவந்து, ஒரு படை மெயோனெனீமின் கர்வாலிமரத்தின் வழியாய் வருகிறது என்றான்.

நியா 9:38. அதற்குச் சேபூல்: அபிமெலேக்கை நாம் சேவிக்கிறதற்கு அவன் யார் என்று நீ சொன்ன உன் வாய் இப்பொழுது எங்கே? நீ நிந்தித்த ஜனங்கள் அவர்கள் அல்லவா? இப்பொழுது நீ புறப்பட்டு, அவர்களோடே யுத்தம்பண்ணு என்றான்.

நியா 9:39. அப்பொழுது காகால் சீகேமின் மனுஷருக்கு முன்பாகப் புறப்பட்டுப்போய், அபிமெலேக்கோடே யுத்தம்பண்ணினான்.

நியா 9:40. அபிமெலேக்கு அவனைத் துரத்த, அவன் அவனுக்கு முன்பாக ஓடினான்; பட்டணவாசல்மட்டும் அநேகர் வெட்டுண்டு விழுந்தார்கள்.

நியா 9:41. அபிமெலேக்கு அருமாவில் இருந்து விட்டான்; சேபூல் காகாலையும் அவன் சகோதரரையும் சீகேமிலே குடியிராதபடிக்குத் துரத்திவிட்டான்.

சீகேம் பட்டணத்தின் அதிகாரியாகிய சேபூல், ஏபேரின் குமாரனாகிய காகால் சொன்ன வார்த்தைகளையெல்லாம் கேள்விப்படுகிறான். சேபூல் அபிமெலேக்கின் காரியக்காரன். தன்னுடைய எஜமானைப்பற்றி காகால் தூஷண வார்த்தைகளைச் சொன்னதினால், சேபூல் காகால்மீது கோபங்கொள்கிறான் (நியா *9:30*).

சேபூல் இரகசியமாய் அபிமெலேக்கினிடத்திற்கு ஆட்களை அனுப்புகிறான். அவனுக்கு காகாலைப்பற்றியும் அவனுடைய வஞ்சகமாக எண்ணத்தைப்பற்றியும் சொல்லியனுப்புகிறான். "இதோ, ஏபேதின் குமாரனாகிய காகாலும் அவனுடைய சகோதரரும் சீகேமுக்கு வந்திருக்கிறார்கள்; பட்டணத்தை உமக்கு விரோதமாக எழுப்புகிறார்கள்" (நியா *9:31*) என்று சேபூல் அபிமெலேக்குக்கு இரகசியமாய் ஆட்களை அனுப்பி செய்தி சொல்லுகிறான்.

இந்த சூழ்நிலையில் அபிமெலேக்கு என்ன செய்யவேண்டும் என்பதையும், சேபூல் ஆலோசனையாகச் சொல்லியனுப்புகிறான். "ஆகையால் நீர் உம்மோடிருக்கும் ஜனங்களோடேகூட இரவில் எழுந்து வந்து வெளியிலே பதிவிருந்து, காலமே சூரியன் உதிக்கையில் எழும்பி, பட்டணத்தின்மேல் விழுந்து, அவனும் அவனோடிருக்கிற ஜனங்களும் உமக்கு எதிரே புறப்படும்போது, உம்முடைய கைக்கு நேரிடுகிறபடி அவனுக்குச் செய்யும்" (நியா *9:32,33*) என்று சேபூல் அபிமெலேக்குக்கு தன்னுடைய ஆட்கள் மூலமாய் சொல்லியனுப்புகிறான்.

அபிமெலேக்கு தன்னுடைய ஜனங்களோடே இரவில் எழுந்து வந்து, சீகேமுக்கு விரோதமாக பதிவிருந்தால் அது நலமாயிருக்கும் என்று சேபூல் நினைக்கிறான். இது சேபூலின் யுத்த வியூகம். சேபூல் அபிமெலேக்கின் காரியக்காரன். ஆகையினால் அவன் அபிமெலேக்கின் நன்மையை நாடுகிறான்.

சேபூல் சீகேம் பட்டணத்தின் அதிகாரி. அதிகாரியே தன்னுடைய பட்டணத்திற்கு விரோதமாக ஆலோசனை சொல்லுகிறான். ஒரு பட்டணத்தின் அதிகாரி சத்துருவோடு சேர்ந்துகொள்ளும்போது, அந்தப் பட்டணத்தாரால் சத்துருவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது மிகவும் கடினம். அபிமெலேக்கு எப்போது வரவேண்டும் என்றும், அவன் சீகேமியர்மீது எப்போது யுத்தம்பண்ணவேண்டும் என்றும், சேபூல் யுத்த தந்திரங்களையெல்லாம் சொல்லிக்கொடுக்கிறான். அபிமெலேக்குக்கு யுத்த வியூகங்களை வகுத்துக்கொடுக்கிறான்.

அபிமெலேக்கு தன்னுடைய காரியக்காரனாகிய சேபூலின் ஆலோசனை பிரகாரம் செயல்படுகிறான். அபிமெலேக்கும், அவனோடிருந்த சகல ஜனங்களும், இரவில் எழுந்துபோய், சீகேமுக்கு விரோதமாக நாலு படையாகப் பதிவிருக்கிறார்கள் (நியா 9:34).

சீகேம் பட்டணத்தின் அதிகாரியான சேபூல், அபிமெலேக்குக்கு விரோதமாய்க் கலகம்பண்ணுகிற காகாலுக்கு உதவிசெய்யவில்லை. சேபூல் காகாலை வஞ்சித்துவிடுகிறான். அவன் காகாலோடு கூடயிருந்தாலும், அவனுக்கு தப்பிதமான ஆலோசனைகளைச் சொல்லி, அவனுக்கு தீங்கு செய்கிறான். அபிமெலேக்கும், அவனோடிருக்கிற ஜனங்களும், சீகேமுக்கு விரோதமாக பதிவிருக்கிறார்கள்.

ஏபேதின் குமாரன் காகால் புறப்பட்டு, பட்டணத்தின் ஒலிமுகவாசலில் நிற்கிறான்; அப்பொழுது பதிவிருந்த அபிமெலேக்கு தன்னோடிருக்கிற ஜனங்களோடேகூட எழும்பிவருகிறான். காகால் அந்த ஜனங்களைக் கண்டு: "இதோ, மலைகளின் உச்சிகளிலிருந்து ஜனங்கள் இறங்கிவருகிறார்கள்" என்று சேபூலோடே சொல்லுகிறான்.

அதற்குச் சேபூல்: "நீ மலைகளின் நிழலைக் கண்டு, மனுஷர் என்று நினைக்கிறாய்" (நியா 9:35,36) என்று தப்பான செய்தியைச் சொல்லி காகாலை வஞ்சிக்கிறான்.

அபிமெலேக்கின் ஜனங்கள் மலைகளின் உச்சிகளிலிருந்து இறங்கி வருகிறார்கள். இது காகாலுக்கும் தெரிகிறது. காகால் இதுபற்றி சேபூலிடம் விசாரித்தபோது, அவர்கள் மனுஷர்களல்ல என்றும், அது மலைகளின் நிழல் என்றும், காகால் நிழலை மனுஷர் என்று தப்பிதமாய் நினைப்பதாகவும், தவறான செய்தியை சொல்லுகிறான்.

சேபூல் காகாலை வஞ்சிக்கிறான். அவனை ஏளனம்பண்ணுகிறான். அபிமெலேக்கின் சேனை காகாலுக்கு அருகாமையில் வந்துவிடுகிறார்கள். சேபூல் தன்னிடத்தில் சொன்ன செய்தியை காகால் முற்றிலுமாய் நம்பவில்லை.

காகாலோ திரும்பவும்: "இதோ, ஜனங்கள் தேசத்தின் மேட்டிலிருந்து இறங்கிவந்து, ஒரு படை மெயொனெனீமின் கர்வாலிமரத்தின் வழியாய் வருகிறது" (நியா 9:37) என்று சேபூலிடம் சொல்லுகிறான்.

காகால் சொன்ன செய்தி உண்மையென்பது சேபூலுக்கு நன்றாய்த் தெரியும். ஆனால் சேபூல் அவனுக்கு உதவிசெய்யவில்லை. சேபூல் காகாலை ஏளனம்பண்ணுகிறான். "அபிமெலேக்கை நாம் சேவிக்கிறதற்கு அவன் யார் என்று நீ சொன்ன உன் வாய் இப்பொழுது எங்கே? நீ நிந்தித்த ஜனங்கள் அவர்கள் அல்லவா? இப்பொழுது நீ புறப்பட்டு, அவர்களோடே யுத்தம்பண்ணு" (நியா 9:38) என்று சொல்லுகிறான். காகால் வஞ்சிக்கப் படுகிறான். சேபூல் அவனை வஞ்சிக்கிறான்.

சேபூல் தன் எஜமானனாகிய அபிமெலேக்குக்கு உண்மையுள்ளவனாயிருக்கிறான். அபிமெலேக்கின் நாமத்தினாலே, சேபூல் காகாலுக்கு ஆணையிடுகிறான். "இப்பொழுது நீ புறப்பட்டு, அவர்களோடே யுத்தம்பண்ணு" என்று சேபூல் காகாலுக்கு சொல்லுகிறான்.

அப்பொழுது காகால் சீகேமின் மனுஷருக்கு முன்பாகப் புறப்பட்டுப்போய், அபிமெலேக்கோடே யுத்தம்பண்ணுகிறான். அபிமெலேக்கு அவனைத் துரத்த, அவன் அவனுக்கு முன்பாக ஓடுகிறான்; பட்டணவாசல்மட்டும் அநேகர் வெட்டுண்டு விழுகிறார்கள். அபிமெலேக்கு அருமாவில் இருந்து விடுகிறான்; சேபூல் காகாலையும் அவன் சகோதரரையும் சீகேமிலே குடியிராதபடிக்குத் துரத்திவிடுகிறான் (நியா 9:39-41). காகால் எங்கேயிருந்து வந்தானோ அங்கே துரத்தப்படுகிறான்.

சீகேம் பட்டணம்
நியா 9:42-45

நியா 9:42. மறுநாளிலே ஜனங்கள் வெளியிலே வயலுக்குப் போனார்கள்; அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டபோது,

நியா 9:43. அவன் ஜனங்களைக் கூட்டிக் கொண்டு, அவர்களை மூன்று படையாக வகுத்து, வெளியிலே பதிவிருந்து, அந்த ஜனங்கள் பட்டணத்திலிருந்து புறப்பட்டு வருகிறதைக் கண்டு, அவர்கள்மேல் எழும்பி, அவர்களை வெட்டினான்.

நியா 9:44. அபிமெலேக்கும் அவனோடிருந்த படையும் பாய்ந்துவந்து, பட்டணத்தின் ஒலி முகவாசலில் நின்றார்கள்; மற்ற இரண்டு படைகளோ வெளியிலி ருக்கிற யாவர்மேலும் விழுந்து, அவர்களை வெட்டினார்கள்.

நியா 9:45. அபிமெலேக்கு அந்நாள் முழுதும் பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணி, பட்டணத்தைப் பிடித்து, அதிலிருந்த ஜனங்களைக் கொன்று, பட்டணத்தை இடித்து விட்டு, அதில் உப்பு விதைத்தான்.

சீகேமின் மனுஷர் காகாலோடு சேர்ந்துகொண்டு, அபிமெலேக்கை சபித்தார்கள். அவனுக்கு தீங்கு செய்ய எத்தனம்பண்ணினார்கள். அபிமெலேக்குக்கு விரோதமாக எழும்பினார்கள். சீகேம் பட்டணத்து மனுஷரை அழித்துப்போட வேண்டுமென்று அபிமெலேக்கு தீர்மானம்பண்ணுகிறான்.

மறுநாளிலே சீகேம் பட்டணத்து ஜனங்கள் வெளியிலே வயலுக்குப் போகிறார்கள்; அது அபிமெலேக்குக்கு அறிவிக்கப்படுகிறது. அப்போது அபிமெலேக்கு ஜனங்களைக் கூட்டிக் கொண்டு, அவர்களை மூன்று படையாக வகுத்து, வெளியிலே பதிவிருக்கிறான். அந்த ஜனங்கள் பட்டணத்திலிருந்து புறப்பட்டு வருகிறதை அபிமெலேக்கு கண்டு, அவர்கள்மேல் எழும்பி, அவர்களை வெட்டுகிறான் (நியா 9:42,43).

அபிமெலேக்கு அருமாவிலே இருந்தாலும், அவனுக்கு சீகேமைப்பற்றி செய்தி சொல்ல, அந்தப் பட்டணத்திலே வேவுகாரர்கள் இருக்கிறார்கள். அபிமெலேக்கு சீகேமின் மனுஷர்மீது எப்போது யுத்தம்பண்ணலாம் என்று, சாதகமான காலங்களை அவனுக்கு தெரியப்படுத்துகிறார்கள்.

சீகேம் பட்டணத்து மனுஷர், தங்கள் வயல்வெளியிலே உழவு வேலை செய்வதற்கோ அல்லது விதை விதைப்பதற்கோ போயிருக்கவேண்டும். சீகேம் பட்டணத்து மனுஷர் ஒருவேளை அபிமெலேக்குக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கு வெளியிலே வயலுக்குப் போயிருந்திருக்கலாம். காகால் அபிமெலேக்கோடு யுத்தம்பண்ண முடியாமல், அவனுக்கு முன்பாக ஓடிப்போய்விடுகிறான். காகால் தோற்று ஓடிப்போனாலும், சீகேம் பட்டணத்து மனுஷர், அபிமெலேக்குக்கு விரோதமான யுத்தத்தை நிறுத்தாமல் தொடருகிறார்கள். அபிமெலேக்கை அழித்துப்போடவேண்டுமென்று அவர்கள் தீர்மானமாயிருக்கிறார்கள். சீகேம் பட்டணத்து மனுஷர் தங்கள் ஆயுதங்களைக் கீழே போடாமல், அபிமெலேக்குக்கு விரோதமாக தொடர்ந்து யுத்தம்பண்ணுகிறார்கள்.

அபிமெலேக்கும் சீகேமின் மனுஷரை அழித்துப்போட வேண்டுமென்று வைராக்கியமாயிருக்கிறான். தன்னுடைய சேனையை மூன்று படையாக வகுக்கிறான். பட்டணத்திற்குள்ளே இருக்கிறவர்களுக்கும், வெளியிலே வயலிலிருக்கிறவர்களுக்கும், தகவல் தொடர்பு எதுவும் இல்லாதபடிக்கு, அதைத் துண்டிக்கிறான். சீகேமின் ஜனங்கள் பட்டணத்திலிருந்து புறப்பட்டு வரும்போது, அபிமெலேக்கு அவர்களை வெட்டுகிறான். அபிமெலேக்கின் மற்ற படைகளும், வெளியிலிருக்கிற சீகேமின் மனுஷர் யாவர் மேலும் விழுந்து, அவர்களை வெட்டுகிறார்கள்.

அபிமெலேக்கு இதன் பின்பு, சீகேம் பட்டணத்தின்மேல் யுத்தம்பண்ணுகிறான். அவன் அந்தப் பட்டணத்தைப் பிடித்து, அதிலிருந்த ஜனங்களைக் கொன்றுபோடுகிறான். அபிமெலேக்கு சீகேம் பட்டணத்தை இடித்துவிட்டு, அதிலே உப்பு விதைக்கிறான். நிலத்திலே உப்பு விதைத்தால் அதன்பின்பு அதிலே விவசாயம் பண்ண முடியாது. அது உவர்நிலமாக மாறிவிடும். சீகேமின் மனுஷருக்கு அவர்களுடைய உப்பு விதைக்கப்பட்ட வயல்நிலம் நித்திய தண்டனையாயிருக்கும்.

அபிமெலேக்கு சீகேம் பட்டணத்தை முற்றிலுமாய் அழித்துப்போடவில்லை. அந்தப் பட்டணத்தை அவன் மறுபடியும் கட்டுகிறான். இதே பட்டணத்தில், பிற்காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஒன்றுகூடி, ரெகொபெயாமை தங்களுக்கு ராஜாக்குகிறார்கள்.

"ரெகொபெயாமை ராஜாவாக்கும்படி, இஸ்ரவேலர் எல்லாரும் சீகேமுக்கு வந்திருந்தபடியால், அவனும் சீகேமுக்குப் போனான்" (1இராஜா 12:1).

சீகேம் துருக்கத்து மனுஷர்
நியா 9:46-49

நியா 9:46. அதைச் சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் கேள்விப்பட்டபோது, அவர்கள் பேரீத் தேவனுடைய கோவில் அரணுக்குள் பிரவேசித்தார்கள்.

நியா 9:47. சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் அங்கே கூடியிருக்கிறது, அபிமெலேக்குக்கு அறிவிக்கப்பட்டபோது,

நியா 9:48. அபிமெலேக்கு தன்னோடிருந்த எல்லா ஜனங்களோடுங்கூடச் சல்மோன் மலையில் ஏறி, தன் கையிலே கோடரியைப் பிடித்து, ஒரு மரத்தின் கொம்பை வெட்டி, அதை எடுத்து, தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு, தன்னோடிருந்த ஜனங்களை நோக்கி: நான் என்ன செய்கிறேன் என்று பார்க்கிறீர்களே, நீங்களும் தீவிரமாய் என்னைப்போலச் செய்யுங்கள் என்றான்.

நியா 9:49. அப்படியே சகல ஜனங்களும் அவரவர் ஒவ்வொரு கொம்பை வெட்டி, அபிமெலேக்குக்குப் பின்சென்று, அவைகளை அந்த அரணுக்கு அருகே போட்டு, அக்கினி கொளுத்தி அந்த அரணைச் சுட்டுப் போட்டார்கள்; அதினால் புருஷரும் ஸ்திரீகளும் ஏறக்குறைய ஆயிரம்பேராகிய சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் செத்தார்கள்.

சீகேமிலே பாகால்பேரீத்தின் கோவில் உள்ளது. இந்தக் கோவில் சீகேம் துருக்கம் என்று அழைக்கப்படுகிறது. இந்தக் கோவிலுக்கு நடுவே துருக்கம் என்று அழைக்கப்படும் உயர்ந்த கோபுரம் கட்டப்பட்டிருக்கிறது. பாகால்பேரீத்தின் கோவிலுக்கு போகிறவர்கள் "சீகேம் துருக்கத்து மனுஷர்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

அபிமெலேக்கும் அவனுடைய சேனையும் சீகேம் பட்டணத்தைப் பிடித்து, அதிலிருந்த ஜனங்களைக் கொன்றுபோடுகிறார்கள். அபிமெலேக்குக்கு தப்பினவர்கள் பாகால்பேரீத் தேவனுடைய கோவில் அரணுக்குள் பிரவேசிக்கிறார்கள். சீகேம் துருக்கம் என்பது இந்தப் பட்டணத்தின் வேறொரு பகுதியில் இருக்கலாம். இங்கே பாகால்பேரீத்தின் விக்கிரக கோவில் உள்ளது.

சீகேம் துருக்கத்து மனுஷர் அபிமெலேக் சீகேமை இடித்துப்போட்டது பற்றியும், சீகேமின் மனுஷரை கொன்றுபோட்டது பற்றியும் கேள்விப்படுகிறார்கள். தங்களுடைய பாதுகாப்புக்காக பாகால்பேரீத்தின் கோவிலுக்குள் அடைக்கலமாய்த் தங்குகிறார்கள். இவர்கள் விக்கிரகாராதனைக்காரர்கள். பாகால்பேரீத் தங்களைப் பாதுகாக்கும் என்று இவர்கள் நம்புகிறார்கள். ஆனால் எந்தக் கோவில் தங்களுக்கு அடைக்கலமாயிருக்கும் என்று நினைத்தார்களோ, அந்தக் கோவிலே அவர்களுக்கு கண்ணியாயிற்று. பாகால்பேரீத் விக்கிரகம் சீகேம் துருக்கத்து மனுஷரை பாதுகாக்கவில்லை.

சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் பாகால்பேரீத் தேவனுடைய கோவில் அரணுக்குள் கூடியிருக்கிறார்கள் என்று அபிமெலேக்குக்கு அறிவிக்கப்படுகிறது.

அப்பொழுது அபிமெலேக்கு தன்னோடிருந்த எல்லா ஜனங்களோடுங்கூடச் சல்மோன்மலையில் ஏறி, தன் கையிலே கோடரியைப் பிடித்து, ஒரு மரத்தின் கொம்பை வெட்டி, அதை எடுத்து, தன் தோளின்மேல் போட்டுக்கொண்டு வருகிறான். அபிமெலேக்கு தன்னோடிருந்த ஜனங்களை நோக்கி: "நான் என்ன செய்கிறேன் என்று பார்க்கிறீர்களே, நீங்களும் தீவிரமாய் என்னைப்போலச் செய்யுங்கள்" என்று சொல்லுகிறான் (நியா 9:48).

அபிமெலேக்கின் சகல ஜனங்களும் அவரவர் ஒவ்வொரு கொம்பை வெட்டி, அபிமெலேக்குக்குப் பின்சென்று, அவைகளை அந்த அரணுக்கு அருகே போட்டு, அக்கினி கொளுத்தி அந்த அரணைச் சுட்டுப் போடுகிறார்கள் (நியா 9:49).

பாகால் பேரீத்தின் கோவிலிலே அக்கினி எரிகிறது. உள்ளே அக்கியின் புகை மூட்டமாயிருக்கிறது. அந்தக் கோவில் அரணுக்குள் பிரவேசித்த சீகேம் துருக்கத்து மனுஷரால், அக்கினியிலும் புகையிலும் இருக்க முடியவில்லை. அவர்கள் அக்கினியின் வேதனையை தாங்க முடியாமல் அரணுக்கு வெளியே வருகிறார்கள். அபிமெலேக்கு அவர்களை கொன்றுபோடுகிறான். அதினால் புருஷரும் ஸ்திரீகளும் ஏறக்குறைய ஆயிரம்பேராகிய சீகேம் துருக்கத்து மனுஷர் எல்லாரும் செத்துப்போகிறார்கள்.

சீகேம் துருக்கத்து மனுஷருக்கு அபிமெலேக்கின்மேல் விரோதம் எதுவுமில்லை. யுத்தம் அபிமெலேக்குக்கும் சீகேம் பட்டணத்து மனுஷருக்கும் இடையே நடைபெறுகிறது. இந்த யுத்தத்திலே சம்பந்தமில்லாத சீகேம் துருக்கத்து மனுஷரில் ஏறக்குறைய ஆயிரம் பேர் செத்துப்போகிறார்கள். துன்மார்க்கன் தனியாக அழிந்துபோகமாட்டான். துன்மார்க்கனோடு சிநேகம் வைத்திருக்கிறவர்களும், அவனுடைய பாவத்திற்கு பங்காளிகளாயிருக்கிறவர்களும் அவனோடுகூட அழிந்துபோவார்கள். அப்படிப்பட்ட அழிவே சீகேம் துருக்கத்து மனுஷருக்கு உண்டாயிற்று.

தேபேஸ்
நியா 9:50-57

நியா 9:50. பின்பு அபிமெலேக்கு தேபேசுக்குப் போய், அதற்கு விரோதமாய்ப் பாளயமிறங்கி, அதைப் பிடித்தான்.

நியா 9:51. அந்தப் பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் இருந்தது; அங்கே சகல புருஷரும் ஸ்திரீகளும் பட்டணத்து மனுஷர் அனைவரும் ஓடிப்புகுந்து, கதவைப் பூட்டிக் கொண்டு, துருக்கத்தின்மேல் ஏறினார்கள்.

நியா 9:52. அபிமெலேக்கு அந்தத் துருக்கம்மட்டும் வந்து, அதின்மேல் யுத்தம்பண்ணி, துருக்கத்தின் கதவைச் சுட்டெரித்துப் போடும்படிக்கு, அதின் கிட்டச் சேர்ந்தான்.

நியா 9:53. அப்பொழுது ஒரு ஸ்திரீ ஒரு ஏந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்குடைய தலையின்மேல் போட்டாள்; அது அவன் மண்டையை உடைத்தது.

நியா 9:54. உடனே அவன் தன் ஆயுததாரியாகிய வேலைக்காரனைக் கூப்பிட்டு: ஒரு ஸ்திரீ என்னைக் கொன்றாள் என்று என்னைக் குறித்துச் சொல்லாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் கொன்று போடு என்று அவனோடே சொன்னான்; அப்படியே அவன் வேலைக்காரன் அவனை உருவக் குத்தினான், அவன் செத்துப்போனான்.

நியா 9:55. அபிமெலேக்குச் செத்துப்போனதை இஸ்ரவேல் மனுஷர் கண்டபோது, அவர்கள் தங்கள்தங்கள் இடங்களுக்குப் போய் விட்டார்கள்.

நியா 9:56. இப்படியே அபிமெலேக்கு தன்னுடைய எழுபது சகோதரரைக் கொலை செய்ததினால், தன் தகப்பனுக்குச் செய்த பொல்லாப்பை தேவன் அவன்மேல் திரும்பும்படி செய்தார்.

நியா 9:57. சீகேம் மனுஷர் செய்த எல்லாப் பொல்லாப்பையும் தேவன் அவர்கள் தலையின்மேல் திரும்பும்படி செய்தார்; யெருபாகாலின் குமாரன் யோதாமின் சாபம் அவர்களுக்குப் பலித்தது.

தேபேஸ் சீகேமுக்கு அருகாமையிலுள்ள சிறிய பட்டணம். தன்னுடைய பொருளாதாரத்திற்கும், மேலும் தன்னுடைய பாதுகாப்புக்கும், ஆளுகைக்கும் தேபேஸ் பட்டணம் சீகேமையே சார்ந்திருக்கிறது. இது ஒருவேளை சீகேம் பட்டணத்தின் ஆளுகைக்குட்பட்ட சிறிய ஊர் என்றும் சரித்திர ஆசிரியர்கள் சொல்லுகிறார்கள்.

அபிமெலேக்கு தேபேசை அழித்துப்போடவேண்டுமென்று முயற்சி பண்ணுகிறான். அவன் தேபேசுக்கு தன்னுடைய சேனையோடு போய், அதற்கு விரோதமாக பாளயமிறங்கி, அதைப் பிடிக்கிறான்.

அந்தப் பட்டணத்தின் நடுவே பலத்த துருக்கம் இருக்கிறது; அங்கே தேபேசின் சகல புருஷரும் ஸ்திரீகளும் பட்டணத்து மனுஷர் அனைவரும் ஓடிப்புகுந்து, கதவைப் பூட்டிக் கொண்டு, துருக்கத்தின்மேல் ஏறுகிறார்கள் (நியா 9:51).

அபிமெலேக்கு தேபேசின் மனுஷர் எல்லோரையும் கொன்றுபோடும் வண்ணமாக, அந்தத் துருக்கம்மட்டும் வந்து, அதின்மேல் யுத்தம்பண்ணி, துருக்கத்தின் கதவைச் சுட்டெரித்துப் போடும்படிக்கு, அதின் கிட்டச் சேருகிறான் (நியா 9:52).

தேபேசின் துருக்கத்தை சுட்டெரித்து, தேபேசின் மனுஷர் எல்லோரையும் கொன்றுபோடவேண்டுமென்று நினைத்த அபிமெலேக்கு, தன் மண்டை உடைந்து செத்துப்போகிறான். அபிமெலேக்கு தேபேசின் துருக்கத்தின் கதவை சுட்டெரித்துப்போடும்படிக்கு, அதின் கிட்ட சேர்ந்தபோது, ஒரு ஸ்திரீ ஒரு ஏந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்குடைய தலையின்மேல் போடுகிறாள்; அது அவன் மண்டையை உடைத்துப்போடுகிறது (நியா 9:53).

ஒரு ஸ்திரீ தன்னைக் கொன்றுபோட்டாள் என்று சொல்லப்படுவதை அபிமெலேக்கு விரும்பவில்லை. ஆகையினால் உடனே அவன் தன் ஆயுததாரியாகிய வேலைக்காரனைக் கூப்பிட்டு: "ஒரு ஸ்திரீ என்னைக் கொன்றாள் என்று என்னைக் குறித்துச் சொல்லாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னைக் கொன்று போடு" (நியா 9:54) என்று அவனோடே சொல்லுகிறான்; அப்படியே அவன் வேலைக்காரன் அவனை உருவக் குத்துகிறான், அபிமெலேக்கு செத்துப்போகிறான்.

அபிமெலேக்கு ஒரு ஸ்திரீயின் கையினால் செத்துப்போனது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. ஒரு ஸ்திரீ, ஒரு ஏந்திரக்கல்லின் துண்டை அபிமெலேக்கினுடைய தலையின்மேல் போட்டு, அவனுடைய மண்டையை உடைத்துப்போடுகிறாள். அபிமெலேக்கு யெருபாகாலின் குமாரராகிய தன் சகோதரர் எழுபது பேரையும் ஒரே கல்லின்மேல் கொலைசெய்தான். அவர்களை கொலைசெய்த அபிமெலேக்குக்கு ஒரு ஏந்திரக்கல்லின் துண்டினால் மரணமுண்டாயிற்று.

ஏந்திரக்கல் அபிமெலேக்கின் மண்டையை உடைத்துப்போடுகிறது. அபிமெலேக்கு தன்னுடைய தலையின்மேல் கிரீடம் சூட்டிக்கொள்ள வேண்டுமென்று விரும்பினான். இதற்காக தன் சகோதரர் எழுபது பேரை கொன்றுபோட்டான். வீணரும் போக்கிரிகளுமான மனுஷரை தன் சேவகத்தில் வைத்தான். சீகேம் துருக்கத்து மனுஷரில் ஏறக்குறைய ஆயிரம்பேரை அக்கினியினால் சுட்டெரித்தான். அபிமெலேக்கின் தலை கிரீடம் சூட்டப்படுவதற்கு தகுதியானதல்ல. கிரீடம் சுமக்கவேண்டிய அபிமெலேக்கின் தலை உடைந்துபோயிற்று.

ஒரு ஸ்திரீ அபிமெலேக்கைக் கொன்றுபோடுகிறாள். அவனுடைய தலையின்மேல் அவள் ஒரு ஏந்திரக்கல்லின் துண்டைப்போடுகிறாள். ஒரு ஸ்திரீ தன்னைக் கொன்றுபோட்டாள் என்னும் அவமானம் அபிமெலேக்குக்கு உண்டாயிற்று. அபிமெலேக்கு மதியீனமான காரியத்தை செய்தான். மதியீனருக்கு அவமானமுண்டாகும்.

அபிமெலேக்கு தன்னைத்தானே பெருமைப்படுத்திக்கொண்டான். இது மதியீனமான பெருமை. தான் விரும்பியதை அடையவேண்டும் என்பதற்காக அநியாயமும், அக்கிரமமும் பண்ணினான். அபிமெலேக்கு தன் இருதயத்தின் பெருமைக்கு முக்கியத்துவம் கொடுத்தானேயல்லாமல், தன்னுடைய ஆத்துமாவின் பரிசுத்தத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. அவன் கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்வதற்காக ஒருபோதும் ஜெபம்பண்ணியதில்லை. அவன் கர்த்தரிடத்தில் அவருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் பாரத்தோடு ஜெபித்ததுமில்லை.

தனக்கு அவமானம் வந்தபோதுகூட, அந்த அவமானத்தை வெளியே தெரியாமல் மூடி மறைப்பதற்கு என்ன செய்யவேண்டும் என்பதையே அபிமெலேக்கு யோசிக்கிறான். தன்னுடைய பாவத்தை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான். அதை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ கர்த்தரிடத்தில் இரக்கம் பெற்றுக்கொள்வான்.

ஒரு ஸ்திரீ தன்னைக் கொன்றாள் என்பது அபிமெலேக்குக்கு அவமானமாயிருக்கிறது. அந்த அவமானத்தை மூடி மறைப்பதற்கு, தன்னுடைய ஆயுததாரியாகிய ஒரு வேலைக்காரனிடம் தன்னைக் கொன்றுபோடுமாறு சொல்லுகிறான். தன்னுடைய அவமானத்தை மூடி மறைக்க முயற்சிபண்ணுகிறான். நொறுங்கிப்போன அவமானத்தை அபிமெலேக்கால் ஒட்ட வைக்க முடிகிறது. ஆனால் உடைந்துபோன அவன் தலையை அவனால் ஒட்ட வைத்து ஒன்றுசேர்க்க முடியவில்லை.

அபிமெலேக்குக்கு மரணத்திலும் அவமானமுண்டாயிற்று. ஒரு ஸ்திரீ அபிமெலேக்கைக் கொன்றுபோட்டாள் என்பது அவனுக்கு அவமானம். அவனுடைய ஆயுததாரியாகிய ஒரு வேலைக்காரன், அவனை தன் பட்டயத்தால் உருவக்குத்தி கொன்றுபோட்டான் என்பதும் அபிமெலேக்குக்கு அவமானமாகத்தான் இருக்கிறது.

அபிமெலேக்கின் வேலைக்காரன் அவனை தன் பட்டயத்தினால் உருவக்குத்தி கொன்றுபோட்டதினால், அபிமெலேக்கு உடனே செத்துப்போகிறான். அவனுடைய சரீர வேதனை உடனே நின்றுவிடுகிறது. ஆனாலும் தன்னைப்பற்றி சொல்லப்படும் தூஷண வார்த்தையை அபிமெலேக்கால் நிறுத்த முடியவில்லை. ஒரு ஸ்திரீ அபிமெலேக்கைக் கொன்றுபோட்டாள் என்னும் வாக்கியம் இன்றும் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சொல்லப்படுகிறது.

அபிமெலேக்கின் மரணத்திற்கு, அவனுடைய துர்க்குணமும், பொல்லாப்பும், துர்க்கிரியைகளுமே காரணம். அபிமெலேக்கு தன்னுடைய எழுபது சகோதரரைக் கொலை செய்ததினால், தன் தகப்பனுக்குச் செய்த பொல்லாப்பை தேவன் அவன்மேல் திரும்பும்படி செய்கிறார் (நியா 9:56).

கர்த்தர் அபிமெலேக்கை நியாயம் விசாரித்ததுபோல, சீகேம் மனுஷரையும் நியாயம் விசாரிக்கிறார். சீகேமின் மனுஷர் அபிமெலேக்கோடு சேர்ந்து பொல்லாப்பு செய்தார்கள். அபிமெலேக்கு தன் சகோதரரைக் கொல்லுவதற்கு, சீகேமின் மனுஷர் அவனுடைய கைகளைத் திடப்படுத்தினார்கள். இதனால் கர்த்தர் சீகேமின் மனுஷரையும் நியாயந்தீர்க்கிறார்.

BELLWETHER INTERNATIONAL

நியாயாதிபதிகள் - விரிவுரை
JUDGES - COMMENTARY

GOOD NEWS PUBLISHERS

சீகேம் மனுஷர் செய்த எல்லாப் பொல்லாப்பையும் தேவன் அவர்கள் தலையின்மேல் திரும்பும்படி செய்கிறார்; யெருபாகாலின் குமாரன் யோதாமின் சாபம் அவர்களுக்குப் பலிக்கிறது (நியா 9:57).

அபிமெலேக்கு செத்துப்போனதினால் இஸ்ரவேல் தேசத்திலே அமைதலுண்டாயிற்று. அபிமெலேக்கு செத்துப்போனதை இஸ்ரவேல் மனுஷர் கண்டபோது, அவர்கள் தங்கள்தங்கள் இடங்களுக்குப் போய் விடுகிறார்கள் (நியா 9:55).

கர்த்தர் அபிமெலேக்கையும், சீகேமின் மனுஷரையும் நியாயந்தீர்த்து, தம்முடைய நீதியையும், நியாயத்தையும், நாமத்தையும் மகிமைப்படுத்துகிறார். துன்மார்க்கர் சிறிதுகாலம் செழித்திருப்பதுபோல இருப்பார்கள். ஆனாலும் அவர்கள் சீக்கிரத்தில் அழிந்துபோவார்கள்.

10 அதிகாரம்

தோலா, யாவீர் ஆகிய இரண்டு நியாயாதிபதிகளின் கீழ் இஸ்ரவேல் தேசம் அமைதலாயிருக்கிறது (நியா 10:1-5). இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்கிறார்கள். இதனால் அவர்களுக்கு அந்நிய தேசத்தார் மூலமாய் பிரச்சனைகள் உண்டாயிற்று (நியா 10:6-9).

இஸ்ரவேல் புத்திரர் மிகவும் நெருக்கப்படுகிறார்கள். அப்பொழுது அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். தங்கள் பாவங்களுக்கு மனந்திருந்துகிறார்கள். கர்த்தர் அவர்களுடைய வருத்தத்தைப் பார்த்து மனதுருகுகிறார் (நியா 10:10-16). இஸ்ரவேல் புத்திரரை நெருக்குகிறவர்களின் கைகளிலிருந்து விடுவிப்பதற்கு ஆயத்த வேலைகள் நடைபெறுகிறது (நியா 10:17,18).

தோலா, யாவீர்
நியா 10:1-5

நியா 10:1. அபிமெலேக்குப் பின்பு, தோதோவின் மகனாகிய பூவாவின் குமாரன் தோலா என்னும் இசக்கார் கோத்திரத்தான் இஸ்ரவேலை இரட்சிக்க எழும்பினான்; அவன் எப்பிராயீம் மலைத்தேசத்து ஊராகிய சாமீரிலே குடியிருந்தான்.

நியா 10:2. அவன் இஸ்ரவேலை இருபத்துமூன்று வருஷம் நியாயம் விசாரித்து, பின்பு மரித்து, சாமீரிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

நியா 10:3. அவனுக்குப்பின்பு, கீலேயாத்தியனானயாவீர் எழும்பி, இஸ்ரவேலை இருபத்திரண்டு வருஷம் நியாயம் விசாரித்தான்.

நியா 10:4. முப்பது கழுதைக்குட்டிகளின்மேல் ஏறும் முப்பது குமாரர் அவனுக்கு இருந்தார்கள்; அவர்களுக்கு முப்பது ஊர்களும் இருந்தது; கீலேயாத் தேசத்திலிருக்கிற அவைகளுக்கு இந்நாள்வரைக்கும் யாவீரின் கிராமங்களென்கிற பேர் இருக்கிறது.

நியா 10:5. யாவீர் மரித்து, காமோனிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

தோலா, யாவீர் ஆகிய இரண்டு நியாயாதிபதிகளும் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்தார்கள். இவர்களுடைய காலங்களில் இஸ்ரவேல் தேசம் அமைதலாயிருந்தது. ஆனால் இஸ்ரவேலின் சரித்திரத்திலே இவ்விரண்டு நியாயாதிபதிகளைப்பற்றியும் அதிகமாய் எழுதப்படவில்லை.

கர்த்தரே இவ்விரண்டு நியாயாதிபதிகளையும், இஸ்ரவேலை நியாயம் தீர்க்க எழுப்பினார். இவர்கள் அபிமெலேக்கைப்போல மாய்மாலம் பண்ணவில்லை. கர்த்தர் அபிமெலேக்கை அழைக்காவிட்டாலும், அவன் ராஜாவாகவேண்டுமென்று ஆசைப்பட்டான். தோலாவும் யாவீரும் தங்களுடைய சுயஆசையினால் இஸ்ரவேலை நியாயந்தீர்க்க எழும்பவில்லை. கர்த்தரே அவர்களை எழுப்பினார். தம்முடைய ஊழியத்தை செய்வதற்கு கர்த்தர் அவர்களைத் தகுதிப்படுத்தினார்.

அபிமெலேக்கு தன்னைத்தானே உயர்த்தினான். அவன் தன்னைத்தானே கனப்படுத்தினான். கர்த்தர் அவனை ஊழியத்திற்கு அழைக்காவிட்டாலும், அவன் ராஜாவாகவேண்டுமென்று விரும்பினான். தோலாவும் யாவீருமோ தங்களைத் தாங்களே உயர்த்தவில்லை. கர்த்தரே அவர்களை உயர்த்தினார்.

தோலா அபிமெலேக்குக்கு பின்பு இஸ்ரவேலை இரட்சிக்க எழும்புகிறார் (நியா 10:1). அபிமெலேக்கின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் சீரழிந்துபோயிற்று. ஜனங்கள் கர்த்தரைப் பின்பற்றாமல் விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். தேசத்திலே விக்கிரகக்கோவில்களும் ஏராளமாயிருக்கிறது. அபிமெலேக்கினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்காக, கர்த்தர் தோலாவை எழுப்புகிறார்.

தோலா இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனையை நீக்கிப்போடவேண்டும். தேசத்திலே ஆவிக்குரிய மறுமலர்ச்சி ஏற்படுவதற்கு ஊழியம் செய்யவேண்டும். அபிமெலேக்கின் மோசமான ஆட்சியினால் ஏற்பட்ட சேதங்களையெல்லாம், தோலா செப்பனிடவேண்டும். அவர் இஸ்ரவேல் தேசத்தை மறுபடியும் சீர்படுத்தவேண்டும்.

அபிமெலேக்குப் பின்பு, தோதோவின் மகனாகிய பூவாவின் குமாரன் தோலா என்னும் இசக்கார் கோத்திரத்தான் இஸ்ரவேலை இரட்சிக்க எழும்புகிறார்; தோலா எப்பிராயீம் மலைத்தேசத்து ஊராகிய சாமீரிலே குடியிருக்கிறார். தோலா இஸ்ரவேலை இருபத்துமூன்று வருஷம் நியாயம் விசாரித்து, பின்பு மரித்து, சாமீரிலே அடக்கம்பண்ணப்படுகிறார் (நியா 10:1,2).

தோலாவுக்கு பின்பு, கீலேயாத்தியனானயாவீர் எழும்பி, இஸ்ரவேலை இருபத்திரண்டு வருஷம் நியாயம் விசாரிக்கிறார் (நியா 10:3). இவர் மனாசேயின் பாதிக்கோத்திரத்தைச் சேர்ந்தவர். இந்தக் கோத்திரத்தார் யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருக்கிறார்கள்.

யாவீரின் குடும்பம் புகழ் பெற்று விளங்குகிறார்கள். அவருக்கு முப்பது கழுதைக்குட்டிகளின்மேல் ஏறும் முப்பது குமாரர் இருக்கிறார்கள்; அவர்களுக்கு முப்பது ஊர்களும் இருக்கிறது; கீலேயாத் தேசத்திலிருக்கிற அவைகளுக்கு இந்நாள்வரைக்கும் யாவீரின் கிராமங்களென்கிற பேர் இருக்கிறது (நியா 10:4).

யாவீரின் முப்பது குமாரரும், இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிப்பதில், தங்கள் தகப்பனாருக்கு உதவிசெய்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் தங்கள் கழுதைக்குட்டிகளின்மேல், முப்பது ஊர்களுக்கும் பிரயாணம்பண்ணுகிறார்கள். அந்த ஊர்களில் ஏற்பட்டிருக்கிற வழக்குகளை, யாவீருக்குப் பதிலாக, அவருடைய குமாரர்கள் நியாயம் விசாரிக்கிறார்கள். வழக்கு விசாரணை தாமதமில்லாமல் நடைபெறுகிறது. ஜனங்களுக்கு ஏற்ற காலத்தில் நீதி கிடைக்கிறது.

யாவீர் தன்னுடைய ஒவ்வொரு குமாரரையும், ஒவ்வொரு ஊருக்கு நியாயாதிபதியாக நியமித்திருக்கவேண்டும். ஆகையினால் அந்த ஊர்களெல்லாம் இந்நாள் வரைக்கும் "யாவீரின் கிராமங்கள்" என்று அழைக்கப்படுகிறது. போதுமென்கிற மனதோடு ஜீவிக்கிறவர்களுக்கு, கிராமங்களும் பட்டணங்களைப்போல இருக்கும். திருப்தியில்லையென்றால் பட்டணமும் கிராமமாயிருக்கும். யாவீர் மரித்து, காமோனிலே அடக்கம்பண்ணப்படுகிறார் (நியா 10:5).

இஸ்ரவேலரின் விக்கிரகாராதனை நியா 10:6-9

நியா 10:6. இஸ்ரவேல் புத்திரர், மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்து, கர்த்தரைச் சேவியாமல் அவரை விட்டுப் போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவித்தார்கள்.

நியா 10:7. அப்பொழுது கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபமூண்டு, அவர்களைப் பெலிஸ்தர் கையிலும், அம்மோன் புத்திரர் கையிலும் விற்றுப்போட்டார்.

நியா 10:8. அவர்கள் அந்த வருஷம் முதற்கொண்டு பதினெட்டு வருஷமாய் யோர்தானுக்கு அப்பாலே கீலேயாத்திலுள்ள எமோரியரின் தேசத்தில் இருக்கிற இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கினார்கள்.

நியா 10:9. அம்மோன் புத்திரர் யூதாவின்மேலும், பென்யமீன்மேலும், எப்பிராயீம் குடும்பத்தார்மேலும் யுத்தம்பண்ண யோர்தானைக் கடந்துவந்தார்கள்; இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்பட்டார்கள்.

தோலா, யாவீர் ஆகிய நியாயாபதிகள், இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்த காலத்தில் தேசம் அமைதலாயிருந்தது. அவர்கள் இருவரும் மரித்துப்போகிறார்கள். அவர்களுக்கு பின்பு, இஸ்ரவேல் புத்திரர், மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்புச் செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரைச் சேவியாமல் அவரை விட்டுப் போய், பாகால்களையும், அஸ்தரோத்தையும், சீரியாவின் தேவர்களையும், சீதோனின் தேவர்களையும், மோவாபின் தேவர்களையும், அம்மோன் புத்திரரின் தேவர்களையும், பெலிஸ்தரின் தேவர்களையும் சேவிக்கிறார்கள் (நியா 10:6).

தோலாவும், யாவீரும் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்த காலத்திலே, தேசத்தில் விக்கிரகாராதனை குறைந்திருந்தது. இவர்கள் இருவரும் மரித்துப்போனபின்பு, தேசத்திலே மறுபடியும் விக்கிரகாராதனை பெருகுகிறது. அவர்கள் பல தெய்வங்களை ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போகும்போது, பொதுவாக அவர்கள் கானானியரின் தெய்வமாகிய பாகாலையும், அஸ்தரோத்தையும் ஆராதிப்பது வழக்கம். ஆனால் இப்போது அவர்கள் அநேகம் தெய்வங்களை ஆராதிக்கிறார்கள்.

சீரியர், சீதோனியர், மோவாபியர், அம்மோன் புத்திரர், பெலிஸ்தர் ஆகியோர் இஸ்ரவேல் தேசத்தாருக்கு அண்டை தேசங்களில் வாசம்பண்ணுகிறவர்கள். இஸ்ரவேல் புத்திரர் அண்டை தேசத்தாரோடு சிநேகம் கொண்டு, அவர்களுடைய தெய்வங்களை தங்களுக்கு சொந்தமாக்கிக் கொள்கிறார்கள். எல்லா தேசங்களிலிருந்தும் அந்நிய தெய்வங்களை இஸ்ரவேல் தேசத்திற்கு இறக்குமதி பண்ணுவது, அவர்களுடைய முக்கியமான தொழிலாயிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர், தங்களுடைய சாதுரிய ஞானத்தினால், அண்டை தேசத்தாரோடு சிநேகமாயிருக்கிறார்கள். ஏராளமான தந்திரங்களை செய்து அவர்களை தங்களுக்கு சிநேகிதர்களாக்குகிறார்கள். கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு இஸ்ரவேல் புத்திரர்மீது வருகிறது. கர்த்தர் தம்முடைய நீதியினால், இஸ்ரவேல் புத்திரருக்கு சிநேகிதராயிருந்தவர்களை, அவர்களுடைய சத்துருக்களாக மாற்றிப்போடுகிறார். இதனால் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு ஆதரவாயிருந்த அந்நிய ஜனத்தார், இப்போது அவர்களை ஒடுக்குகிறவர்களாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஆரம்பத்தில், கர்த்தரை ஆராதித்தபோது, அந்நிய தெய்வங்களையும் ஆராதித்தார்கள். கர்த்தரையும், அந்நிய தெய்வங்களையும் கலந்து ஆராதித்தார்கள். அதன் பின்பு அவர்கள் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்து, அவரை ஆராதியாமல், அவரை விட்டு விலகிப்போய்விடுகிறார்கள். அவர்கள் அந்நிய ஜாதியாரின் விக்கிரகங்களை மாத்திரம் ஆராதிக்கிறார்கள்.

இக்காலத்திலும் அநேகர், இஸ்ரவேல் புத்திரரைப்போல, கர்த்தரையும் சேவிக்கிறார்கள், பிசாசையும் சேவிக்கிறார்கள். நம்மால் இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய முடியாது. ஆராதனையில் தெளிவில்லாதவர்கள், சிறிதுகாலம் கர்த்தரையும் விக்கிரகங்களையும் ஆராதிப்பார்கள். அதன்பின்பு கர்த்தரை சேவியாமல், அவரை விட்டு விலகி, விக்கிரகங்களை மாத்திரம் ஆராதிப்பார்கள்.

நாம் கர்த்தரை நம்முடைய முழுஇருதயத்தோடு ஆராதிக்கவேண்டும். நம்முடைய இருதயத்தில் கர்த்தருக்கு மாத்திரமே இடம் இருக்கவேண்டும். நாம் கர்த்தருக்கும், பிசாசுக்கும் நம்முடைய இருதயத்தில் இடம் கொடுத்தால், கர்த்தர் நம்முடைய இருதயத்தைவிட்டு விலகிப்போய்விடுவார். அதன்பின்பு நம்முடைய இருதயத்திலே பிசாசு மாத்திரமே குடியிருப்பான்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்து, அவரை சேவியாமல், பாகால்களையும், அந்நிய விக்கிரகங்களையும் சேவிப்பதினால், கர்த்தர் இஸ்ரவேலின்மேல் கோபங்கொள்கிறார். அவர்களுக்கு தம்முடைய நியாயத்தீர்ப்புக்களைக் கொடுக்கிறார். அவர்களை பெலிஸ்தரின் கையிலும், அம்மோன் புத்திரர் கையிலும் விற்றுப்போடுகிறார். சத்துருக்கள் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறார்கள், நெருக்குகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேசத்தாரால் நெருக்கப்படுவது, கர்த்தருடைய நியாயத்தீர்ப்பாயிருக்கிறது. ஒரு பட்டணம் கர்த்தரை மறந்து, விக்கிரகங்களை ஆராதிக்கும்போது, அந்தப் பட்டணத்தின்மீது சத்துருக்கள் படையெடுத்து வந்து, அதை அழித்துப்போடுவார்கள்.

"உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் குடியிருக்கும்படி கொடுக்கும் பட்டணங்கள் ஒன்றில் பேலியாளின் மக்களாகிய துஷ்டமனிதர் உன்னிடத்திலிருந்து புறப்பட்டு, நீங்கள் அறியாத வேறே தேவர்களைச் சேவிக்கப்போவோம் வாருங்கள் என்று தங்கள் பட்டணத்தின் குடிகளை ஏவினார்கள் என்கிற செய்தியைக் கேள்விப்படும்போது, நீ நன்றாய் விசாரித்து, கேட்டாராய்ந்து, அப்படிப்பட்ட அருவருப்பான காரியம் உன் நடுவே நடந்தது மெய்யும் நிச்சயமும் என்று காண்பாயானால், அந்தப் பட்டணத்தின் குடிகளைப் பட்டயக்கருக்கினால் வெட்டி, அதையும் அதிலுள்ள யாவற்றையும் அதின் மிருக ஜீவன்களையும் பட்டயக்கருக்கினால் சங்காரம்பண்ணி, அதில் கொள்ளையிட்டதையெல்லாம் அதின் நடுவீதியிலே கூட்டி, உன் தேவனாகிய கர்த்தருக்கு என்று அந்தப் பட்டணத்தையும், அதில் கொள்ளையிடப்பட்ட யாவற்றையும் முழுவதும் அக்கினியில் சுட்டெரிக்கக்கடவாய்; அது இனிக்கட்டப்படாமல், நித்திய மண்மேடாயிருக்கக்கடவது" (உபா 13:12-16).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்து கர்த்தரை சேவியாமல், அவரை விட்டு விலகிப்போய், அந்நிய தெய்வங்களை சேவித்ததினால், அந்த அந்நிய தேசத்தாரே இஸ்ரவேல் புத்திரருக்கு சத்துருக்களாக எழும்புகிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்குகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களினிமித்தமாக கர்த்தர் அவர்களை அந்நிய தேசத்தார் கையிலே விற்றுப்போடுகிறார்.

பெலிஸ்தரும், அம்மோன் புத்திரரும், அந்த வருஷம் முதற்கொண்டு பதினெட்டு வருஷமாய் யோர்தானுக்கு அப்பாலே கீலேயாத்திலுள்ள எமோரியரின் தேசத்தில் இருக்கிற இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்குகிறார்கள் (நியா 10:8).

அம்மோன் புத்திரர் லோத்தின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். அவர்கள் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிற காலத்தின் அளவு மிகவும் அதிகமாயிருக்கிறது. அம்மோன் புத்திரர் பதினெட்டு வருஷமாய், இஸ்ரவேல் புத்திரரை நெருக்கி ஒடுக்குகிறார்கள். அவர்கள் ஆரம்பத்திலே யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருக்கிற, இஸ்ரவேல் புத்திரரை மாத்திரம் ஒடுக்கினார்கள்.

அதன்பின்பு, அம்மோன் புத்திரர் யூதாவின்மேலும், பென்யமீன்மேலும், எப்பிராயீம் கு ம்பத்தார்மேலும் யுத்தம்பண்ண யோர்தானைக் கடந்துவருகிறார்கள்; இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்படுகிறார்கள் (நியா 10:9).

யோர்தானுக்கு அப்புறத்திலே, கீலேயாத் தேசத்திலே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரைப்போலவே, யோர்தானுக்கு இப்புறத்திலே கானான் தேசத்திலே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்கிறார்கள். அவர்களும் கர்த்தரை சேவியாமல், அவரை விட்டுப்போய், விக்கிரகங்களை சேவிக்கிறார்கள். இஸ்ரவேல் தேசம் புறஜாதி தேசம் போல் இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் புறஜாதி ஜனங்கள் போல் இருக்கிறார்கள்.

யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிற இஸ்ரவேல் புத்திரருக்கும் எமோரியருக்கும் வித்தியாசமில்லாமல்போயிற்று. "கர்த்தராகிய ஆண்டவர் எருசலேமுக்குச் சொல்லுகிறார், கானான் தேசமே உன் உற்பத்திக்கும் உன் பிறப்புக்கும் இடம், உன் தகப்பன் எமோரியன், உன் தாய் ஏத்தித்தி" எசே 16:3).

அம்மோன் புத்திரர் யோர்தானுக்கு அப்புறத்திலே இருக்கிற இஸ்ரவேல் புத்திரரை நெருக்கி, ஒடுக்குகிறார்கள். அவர்கள் யோர்தானைக் கடந்து, இப்புறத்திலே இருக்கிற யூதாவின்மேலும், பென்யமீன் மேலும், எப்பிராயீம் குடும்பத்தார் மேலும் யுத்தம்பண்ண வருகிறார்கள். இஸ்ரவேலர் மிகவும் நெருக்கப்படுகிறார்கள் (நியா 10:9).

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே யூதா, பென்யமீன், எப்பிராயீம் ஆகிய மூன்று கோத்திரரும் மிகவும் விசேஷமானவர்கள். இவர்கள் கர்த்தரிடத்தில் பக்தி வைராக்கியமாயிருக்கிறவர்கள். ஆனால் இவர்களும் இப்போது கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்கிறார்கள். இவர்களும் கர்த்தரை சேவியாமல், அவரை விட்டுப்போய், அந்நியதெய்வங்களை சேவிக்கிறார்கள்.

யூதாகோத்திரத்தார் யுத்தசன்னத்தரானவர்கள். இஸ்ரவேல் புத்திரர் அந்நியரோடு யுத்தம்பண்ணப்போகும்போது "யூதா முன்னாலே போகக்கடவன்" என்று கர்த்தர் சொல்லுவார். ஆனால் இப்போதோ யூதாவின் மனுஷர் கர்த்தரைவிட்டு விலகிப்போயிருக்கிறார்கள். அவர்களிடத்தில் பெலமுமில்லை. பராக்கிரமமுமில்லை. அவர்களால் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருக்கிற அம்மோன் புத்திரரை எதிர்த்து யுத்தம்பண்ண முடியவில்லை.

யூதாவின் மனுஷருக்கும், பென்யமீன் மனுஷருக்கும், எப்பிராயீம் குடும்பத்தாருக்கும் கர்த்தருடைய உதவியும், ஒத்தாசையும் கிடைக்கவில்லை. அவர்கள் கர்த்தரைவிட்டு விலகிப்போகிறார்கள். கர்த்தரும் அவர்களைவிட்டு விலகிப்போய்விடுகிறார். கர்த்தருடைய உதவியில்லாமல் நம்மால் ஒன்றும் செய்ய முடியாது. அம்மோன் புத்திரர் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வரும்போது, இஸ்ரவேல் ஜனங்களால் அம்மோன் புத்திரரை எதிர்த்து நின்று யுத்தம்பண்ண முடியவில்லை. அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்குகிறார்கள்.

கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள் நியா 10:10-15

நியா 10:10. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி முறையிட்டு: உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நாங்கள் எங்கள் தேவனைவிட்டு, பாகால்களைச் சேவித்தோம் என்றார்கள்.

நியா 10:11. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: எகிப்தியரும், எமோரியரும், அம்மோன் புத்திரரும், பெலிஸ்தியரும்,

நியா 10:12. சீதோனியரும், அமலேக்கியரும், மாகோனியரும், உங்களை ஒடுக்கும் சமயங்களில், நீங்கள் என்னை நோக்கி முறையிட்டபோது, நான் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவில்லையா?

நியா 10:13. அப்படியிருந்தும் நீங்கள் என்னை விட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்தீர்கள்; ஆகையால் இனி உங்களை இரட்சியேன்.

நியா 10:14. நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள்; அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும் என்றார்.

நியா 10:15. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி: பாவஞ்செய்தோம், தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும்; இன்றைக்குமாத்திரம் எங்களை இரட்சித்தருளும் என்று சொல்லி,

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்குகிறார்கள். அவர்கள் தங்களுடைய நெருக்கத்திலே கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இரண்டுவிதமான பாவங்களை செய்கிறார்கள். அவையாவன :

1. தாங்கள் செய்ய வேண்டியதை செய்யாதிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரைவிட்டு விலகாதிருக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள்.

2. தாங்கள் செய்யக்கூடாததை செய்கிறார்கள். அவர்கள் பாகால்களை சேவிக்கக்கூடாது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ பாகால்களை சேவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவங்களுக்கு மனம் வருந்துகிறார்கள். அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிட்டு, "உமக்கு விரோதமாகப் பாவஞ்செய்தோம்; நாங்கள் எங்கள் தேவனை விட்டு, பாகால்களைச் சேவித்தோம்" (நியா 10:10) என்று சொல்லுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய தூதனானவர் மூலமாக, இஸ்ரவேல் புத்திரரை ஏற்கெனவே எச்சரித்திருக்கிறார்.

"கர்த்தருடைய தூதனானவர் கில்காலிலிருந்து போகீமுக்கு வந்து: நான் உங்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணி, உங்கள் பிதாக்களுக்கு ஆணையிட்ட தேசத்தில் நான் உங்களைக் கொண்டு வந்து விட்டு, உங்களோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் ஒருக்காலும் முறித்துப்போடுவதில்லை என்றும், நீங்கள் இந்த தேசத்தின் குடிகளோடே உடன்படிக்கைபண்ணாமல், அவர்கள் பலிபீடங்களை இடித்துவிடக்கடவீர்கள் என்றும் சொன்னேன்; ஆனாலும் என் சொல்லைக் கேளாதேபோனீர்கள்; ஏன் இப்படிச் செய்தீர்கள்?. ஆகையால் நான் அவர்களை உங்கள் முகத்திற்கு முன்பாகத் துரத்துவதில்லை என்றேன்; அவர்கள் உங்களை நெருக்குவார்கள்; அவர்களுடைய தேவர்கள் உங்களுக்குக் கண்ணியாவார்கள் என்றார்" (நியா 2:1-3).

கர்த்தர் மறுபடியுமாக, தம்முடைய தீர்க்கதரிசி மூலமாக, இஸ்ரவேல் புத்திரரை எச்சரித்திருந்தார்.

"கர்த்தர் ஒரு தீர்க்கதரிசியை அவர்களிடத்திற்கு அனுப்பினார்; அவன் அவர்களை நோக்கி: இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: நான் உங்களை எகிப்திலிருந்து வரவும், அடிமைத்தன வீட்டிலிருந்து புறப்படவும் செய்து, எகிப்தியர் கையினின்றும், உங்களை ஒடுக்கின யாவருடைய கையினின்றும் உங்களை இரட்சித்து, அவர்களை உங்களுக்கு முன்பாகத் துரத்தி, அவர்கள் தேசத்தை உங்களுக்குக் கொடுத்து, நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்றும், நீங்கள் குடியிருக்கும் அவர்கள் தேசத்திலுள்ள எமோரியருடைய தேவர்களுக்குப் பயப்படாதிருங்கள் என்றும், உங்களுக்குச் சொன்னேன்; நீங்களோ என் சொல்லைக் கேளாதேபோனீர்கள் என்கிறார் என்று சொன்னான்" (நியா 6:8-10).

இஸ்ரவேல் புத்திரர் அதிகமாக நெருக்கப்படுவதினால், அவர்கள் கர்த்தரை நோக்கி முறையிடுகிறார்கள். கர்த்தரோ அவர்களை மறுபடியுமாய் எச்சரிக்காமல், அவர்களை இரட்சிக்க மறுத்துவிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை நோக்கி: "எகிப்தியரும், எமோரியரும், அம்மோன் புத்திரரும், பெலிஸ்தியரும், சீதோனியரும், அமலேக்கியரும், மாகோனியரும், உங்களை ஒடுக்கும் சமயங்களில், நீங்கள் என்னை நோக்கி முறையிட்டபோது, நான் உங்களை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவில்லையா?" (நியா 10:11,12) என்று சொல்லிவிட்டு, "அப்படியிருந்தும் நீங்கள் என்னை விட்டு, அந்நிய தேவர்களைச் சேவித்தீர்கள்; ஆகையால் இனி உங்களை இரட்சியேன்" (நியா 10:13) என்று சொல்லிவிடுகிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு ஏற்கெனவே அநேக நன்மைகளை செய்திருக்கிறார். அந்நிய தேசத்தார் அவர்களை ஒடுக்கின சமயங்களில், கர்த்தர் அவர்களை, அவர்களுடைய சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சித்திருக்கிறார். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை மறந்துவிடுகிறார்கள். அவர்கள் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பு செய்கிறார்கள். அவர்கள் கர்த்தரை சேவியாமல், அவரை விட்டுப்போய், புறஜாதியாரின் விக்கிரகங்களை சேவிக்கிறார்கள்.

கர்த்தர் தம்முடைய நீதியினால் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை கண்டித்து திருத்துகிறார். ஆனாலும் கர்த்தர் தம்முடைய கிருபையினாலும், மனதுருக்கத்தினாலும், இஸ்ரவேல் புத்திரரை அவர்களுடைய சத்துருக்களின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் அனுபவித்த தண்டனைகளை நினைத்து பயந்தோ, அல்லது, கர்த்தர் தம்முடைய கிருபையினால் தங்களை இரட்சித்ததை நினைத்து, அவர்மீது அன்புகூர்ந்தோ, இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை சேவிக்கவேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரை சேவியாமல் அந்நிய தேவர்களை சேவிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு, அந்நிய தேவர்களை சேவிப்பதினால், கர்த்தர் அவர்களை அந்நிய தேவர்களிடத்திலேயே அனுப்புகிறார். "நீங்கள் போய், உங்களுக்காகத் தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுங்கள்; அவைகள் உங்கள் ஆபத்தின் காலத்தில் உங்களை இரட்சிக்கட்டும்" (நியா 10:14) என்று கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடத்தில் சொல்லிவிடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேவர்களை சேவிக்கிறார்கள். அந்த தெய்வங்கள் தங்களுடைய ஆபத்துக்காலத்தில் தங்களை இரட்சிக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால் அவை அவர்களை இரட்சிக்கவில்லை. இஸ்ரவேலர் அதிகமாய் நெருக்கப்படுகிறார்கள். அம்மோன் புத்திரர் அவர்களை நெருக்கி ஒடுக்குகிறார்கள். தங்கள் வேதனை அதிகரிப்பதினால், இஸ்ரவேல் புத்திரர் இப்போது கர்த்தரிடத்தில் முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் பாவங்களுக்கு உண்மையாக மனந்திரும்பவேண்டும். அவர்கள் அந்நிய தெய்வங்களையும் சேவித்துக்கொண்டு, கர்த்தருடைய உதவியையும் எதிர்பார்க்கக்கூடாது. அந்நிய தெய்வங்கள் தங்களுக்கு உதவிசெய்யாது என்பதையும், கர்த்தர் மாத்திரமே தங்களுக்கு உதவிசெய்யக்கூடியவர் என்பதையும், அவர்கள் தங்கள் உள்ளத்தின் ஆழத்தில் விசுவாசிக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை மாத்திரம் சேவிக்கவேண்டும். அவரிடத்தில் மாத்திரம் முறையிடவேண்டும்.

இந்தப் பிரபஞ்சத்தின் மனுஷர், தங்களுடைய சமாதானத்திற்கும், சந்தோஷத்திற்கும் உலகப்பிரகாரமான காரியங்களை நம்புகிறார்கள். உலகத்தின் ஐசுவரியம் தங்களுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும் என்று நினைக்கிறார்கள். ஆனால் இவை மனுஷருக்கு மெய்யான சந்தோஷத்தைக் கொடுக்காது. இதனால் சந்தோஷம் வந்தாலும், அந்த சந்தோஷம் நிலைத்திருக்காது. கர்த்தர் கொடுக்கும் சந்தோஷமே நிலையானது.

நாம் கர்த்தருடைய சமாதானத்தையும், சந்தோஷத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றால், நம்முடைய நம்பிக்கையை உலகப்பிரகாரமான காரியங்கள்மீது வைக்கக்கூடாது. கர்த்தரைத் தவிர, நமக்கு வேறு யார் மூலமாகவும் அல்லது வேறு எதன் மூலமாகவும் சந்தோஷமுண்டாகாது. இதை நாம் உணரவேண்டும். இஸ்ரவேல் புத்திரருக்கு, இந்த சத்தியத்தை உணர்த்துவதற்காக, கர்த்தர் அவர்களை சத்துருக்களின் கையில் விற்றுப்போடுகிறார். அவர்கள் தங்களுக்காக தெரிந்துகொண்ட தேவர்களை நோக்கி முறையிடுமாறு அவர்களை அனுப்பி விடுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் அந்நிய தேவர்களை சேவிக்கிறார்கள். அவற்றிற்கு ஜீவனில்லை. இஸ்ரவேல் புத்திரரின் ஆபத்துக்காலத்திலே, அந்த தெய்வங்கள் அவர்களை இரட்சிக்காது. கர்த்தரைவிட்டு விலகிப்போகிறவர்கள், இப்படிப்பட்ட நிர்ப்பந்தமான சூழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள். கர்த்தரை மறுதலிக்கிறவர்கள் ஆபத்துக்களில் சிக்கிக்கொள்வார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரிடம், "இனி உங்களை இரட்சியேன்" (நியா 10:13) என்று சொல்லிவிடுகிறார். ஆனால் அவர்களோ கர்த்தரை நோக்கி இன்னும் முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கி, "பாவஞ்செய்தோம், தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும்; இன்றைக்குமாத்திரம் எங்களை இரட்சித்தருளும்" (நியா 10:15) என்று முறையிடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய நீதிக்கு தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். "தேவரீர் உம்முடைய பார்வைக்கு நலமானதை எங்களுக்குச் செய்யும்" என்று சொல்லுகிறார்கள். கர்த்தருடைய கிருபைக்காகவும், இரக்கத்திற்காகவும் கெஞ்சுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏற்கெனவே கர்த்தரை நோக்கி முறையிட்டார்கள். "உமக்கு விரோதமாகப் பாவம் செய்தோம்" (நியா 10:10) என்று சொன்னார்கள். இப்போது மறுபடியுமாக "பாவம் செய்தோம்" என்று சொல்லி, தங்களுடைய பாவங்களை அங்கீகரிக்கிறார்கள். இப்போது தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வதோடு, கர்த்தருடைய நீதியான நியாயத்தீர்ப்புக்கும் தங்களை ஒப்புக்கொடுக்கிறார்கள். "இன்றைக்கு மாத்திரம் எங்களை இரட்சித்தருளும்" என்று சொல்லி, கர்த்தருடைய இரக்கத்திற்காகவும், கிருபைக்காகவும் கெஞ்சுகிறார்கள்.

கர்த்தர் மனதுருகுகிறார் நியா 10:16-18

நியா 10:16. அந்நிய தேவர்களைத் தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்தார்கள்; அப்பொழுது அவர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகினார்.

நியா 10:17. அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி, கீலேயாத்திலே பாளயமிறங்கினார்கள்; இஸ்ரவேல் புத்திரரும் கூடிக்கொண்டு, மிஸ்பாவிலே பாளயமிறங்கினார்கள்.

நியா 10:18. அப்பொழுது கீலேயாத்தின் ஜனங்களும் பிரபுக்களும் ஒருவரையொருவர் நோக்கி: அம்மோன் புத்திரர்மேல் முந்தி யுத்தம்பண்ணப்போகிற மனுஷன் யார்? அவனே கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனாயிருப்பான் என்றார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் தங்களுடைய பாவங்களை அறிக்கை செய்வதோடு நின்றுவிடவில்லை. அவர்கள் அந்நிய தேவர்களை தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிடுகிறார்கள். அவர்கள் இதுவரையிலும் இந்த தேவர்களை சேவித்தார்கள். இப்போதோ அவர்கள் அந்நிய தேவர்களை விலக்கிவிட்டு, கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் மனந்திரும்புதலுக்கேற்ற கனிகளைக் கொடுக்கிறார்கள்.

இதுவே மெய்யான மனந்திரும்புதல். அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காகவும் மனந்திரும்புகிறார்கள். தங்களுடைய பாவங்களிலிருந்தும் மனந்திரும்புகிறார்கள்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரின் இருதயத்தைப் பார்க்கிறார். அவர்களுடைய மனமாற்றத்தை கண்ணோக்கிப் பார்க்கிறார். கர்த்தர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து மனதுருகுகிறார் (நியா 10:16). அவர்கள்மீது தம்முடைய கிருபையையும் இரக்கத்தையும் மறுபடியும் காண்பிக்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரோடு உடன்படிக்கை பண்ணியிருக்கிறார். இஸ்ரவேல் ஜனத்தார் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி, தங்களுடைய பாவங்களைவிட்டு விலகி, தம்மிடத்தில் மறுபடியும் வந்து சேருவதைப் பார்க்கும்போது, கர்த்தர் அவர்களை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார். ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளைகளுக்கு இரங்குவதுபோல, கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு இரங்குகிறார். அவர்களுடைய வருத்தத்தைப் பார்த்து மனதுருகிறார். அவர்களுக்கு இரக்கம் காண்பிக்கிறார். நம்முடைய பிதாவாகிய தேவன், ஜோதிகளின் பிதாவாகவும், இரக்கங்களின் பிதாவாகவும் இருக்கிறார்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கிக்கொண்டிருக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய ஜனத்தை அம்மோன் புத்திரரின் கையிலிருந்து இரட்சிப்பதற்கு கிரியை செய்கிறார். கர்த்தர் இதற்கு முன்பு, "நான் உங்களை இரட்சியேன்" (நியா 10:13) என்று சொன்னார். ஆனால் இப்போதோ அவர், இஸ்ரவேல் புத்திரரை இரட்சிப்பதற்கு ஆவன செய்கிறார்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை இரட்சிக்க மறுத்தபோது, அவர்கள் கர்த்தரைவிட்டு அந்நிய தேவர்களை சேவித்தார்கள். இப்போதோ அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். அந்நிய தேவர்களை தங்கள் நடுவிலிருந்து விலக்கிவிட்டு கர்த்தருக்கு ஆராதனை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள்.

அவர்களுடைய இருதயங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இப்போது புதிய மனுஷராயிருக்கிறார்கள். கர்த்தர் இப்போது அவர்களை அம்மோன் புத்திரரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவேண்டுமென்று சித்தங்கொண்டிருக்கிறார்.

அம்மோன் புத்திரரோ, இஸ்ரவேல் புத்திரரை நெருக்கி ஒடுக்குகிறார்கள். அவர்கள் தங்களுக்கு கேடுண்டாகவே, கர்த்தருடைய ஜனத்திற்கு தீங்கு செய்கிறார்கள். அம்மோன் புத்திரர், கூட்டங்கூடி, இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக, கீலேயாத்திலே பாளயமிறங்கி யிருக்கிறார்கள். அம்மோன் புத்திரர் ஒரே பாளயமாக கூட்டங்கூடியிருப்பது, அவர்கள் மொத்தமாய் அழிந்துபோவதற்கு ஏதுவாயிருக்கிறது.

"அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்" (வெளி 16:16).

அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி கீலேயாத்திலே பாளயமிறங்கியிருப்பதைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரர் பயப்படவில்லை. அம்மோன் புத்திரரிடமிருந்து தப்பிப்பதற்கு, இஸ்ரவேல் புத்திரர் ஓடி ஒளிந்து கொள்ளவுமில்லை. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பலப்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரரும் கூடிக்கொண்டு மிஸ்பாவிலே பாளயமிறங்குகிறார்கள் (நியா 10:17). இஸ்ரவேல் புத்திரர் சத்துருக்களுக்கு பயப்படாமல், அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஒன்றுகூடுகிறார்கள்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேலரை பதினெட்டு வருஷமாய் நெருக்கி ஒடுக்கினார்கள். இந்தக் காலத்தில் இஸ்ரவேலர் தனித்தனியாகப் பிரிந்திருந் தார்கள். அவனவன் தனக்கு சரிபோனபடி செய்துகொண்டிருந்தான். அவர்களிடத்தில் ஒற்றுமையில்லை. ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு பட்டணமும், ஒவ்வொரு கோத்திரமமும் தங்களைத் தாங்களே தனித்தனியாக ஆளுகை செய்து கொண்டார்கள். அவர்கள் ஒருபோதும் ஒன்றாய்க்கூடி வரவில்லை. இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஒற்றுமையில்லை. இதனால் இஸ்ரவேல் புத்திரரை நெருக்கி ஒடுக்குவது சத்துருக்களுக்கு எளிதாயிருந்தது.

ஆனால் இப்போதோ, இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக, கூடிக்கொண்டு, மிஸ்பாவிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு புதிய பலத்தையும், ஒற்றுமையின் ஆவியையும் கொடுத்திருக்கிறார்.

விசுவாசிகளாகிய நமக்கு சாத்தானாகிய ஒரே சத்துரு மாத்திரமே இருக்கிறான். விசுவாசிகளாகிய நாம் சாத்தானுக்கு விரோதமாக பிரிந்திராமல், ஒற்றுமையாயிருந்து யுத்தம்பண்ணினால், நமக்கு வெற்றி கிடைக்கும். கர்த்தரும் நம்மோடு கூடயிருப்பார். கர்த்தர் நம் பட்சத்திலிருக்கும்போது, சாத்தானால் நமக்கு விரோதமாய் யுத்தம்பண்ணி, நம்மை ஜெயிக்க முடியாது.

இஸ்ரவேல் புத்திரர் ஒருமனப்பட்டு ஒன்றுகூடி, கர்த்தரை நம்பி, மிஸ்பாவிலே, அம்மோன் புத்திரருக்கு விரோதமாக பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

அப்பொழுது கீலேயாத்தின் ஜனங்களும் பிரபுக்களும் ஒருவரையொருவர் நோக்கி: "அம்மோன் புத்திரர்மேல் முந்தி யுத்தம்பண்ணப்போகிற மனுஷன் யார்? அவனே கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனாயிருப்பான்" (நியா 10:18) என்று சொல்லுகிறார்கள். கர்த்தருடைய ஆவியானவர் இஸ்ரவேல் புத்திரரை வழிநடத்துகிறார். அவர்களை ஆளுகை செய்கிறார்.

11 அதிகாரம்

யெப்தாவின் சரித்திரத்தைப்பற்றி இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. யெப்தா விசுவாசத்தினால் பெரிய காரியங்களை செய்தார் (எபி 11:32). யெப்தாவின் பிறப்பு கனமுள்ளதாயில்லை. அவர் ஒரு பரஸ்திரீயின் குமாரன் (நியா 11:1-3). கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை தங்களுடைய சேனாபதியாயிருக்க தெரிந்துகொள்கிறார்கள் (நியா 11:4-11). யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவோடு உடன்படிக்கை பண்ண முயற்சி பண்ணுகிறார் (நியா 11:12-28).

அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, யெப்தா கர்த்தரோடு ஒரு பொருத்தனை பண்ணுகிறார் (நியா 11:29-31). கர்த்தர் அம்மோன் புத்திரரை யெப்தாவின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார் (நியா 11:32,33). யெப்தா மிஸ்பாவிலிருந்து தன் வீட்டிற்கு திரும்பி வருகிறபோது அவருடைய குமாரத்தி, அவருக்கு எதிர்கொண்டு வருகிறாள். யெப்தா கர்த்தரோடு பண்ணின பொருத்தனைக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார் (நியா 11:34-40).

யெப்தா
நியா 11:1-3

நியா 11:1. கீலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தான்; அவன் பரஸ்திரீயின் குமாரன்; கிலெயாத் அவனைப் பெற்றான்.

நியா 11:2. கிலெயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றாள்; அவன் மனைவி பெற்ற குமாரர் பெரியவர்களான பின்பு, அவர்கள் யெப்தாவை நோக்கி: உனக்கு எங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரம் இல்லை; நீ அந்நிய ஸ்திரீயின் மகன் என்று சொல்லி அவனைத் துரத்தினார்கள்.

நியா 11:3. அப்பொழுது யெப்தா தன் சகோதரரை விட்டு ஓடிப்போய்; தோப்தேசத்திலே குடியிருந்தான்; வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொண்டு, அவனோடேகூட யுத்தத்திற்குப் போவார்கள்.

அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி கீலேயாத்திலே பாளயமிறங்கினபோது, இஸ்ரவேல் புத்திரரும் கூடிக்கொண்டு, மிஸ்பாவிலே பாளயமிறங்குகிறார்கள். அம்மோன் புத்திரர்மேல் முந்தி யுத்தம்பண்ணப்போகிற மனுஷன், கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனாயிருப்பான் என்று, கீலேயாத்தின் ஜனங்களும், பிரபுக்களும் ஒருவரையொருவர் நோக்கி சொல்லிக்கொள்கிறார்கள் (நியா 10:17,18).

கீலேயாத் மூப்பர் அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண, தங்களுக்கு ஒரு சேனாபதியை தெரிந்தெடுக்கிறார்கள். கீலேயாத்தியனான யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருக்கிறார். அவரே தங்களுக்கு சேனாபதியாயிருக்க வேண்டுமென்று கீலேயாத்தின் மனுஷர் ஒருமனதாக தீர்மானம்பண்ணுகிறார்கள். யெப்தாவைப்போல பெரிய பராக்கிரமசாலி தேசத்திலே வேறு ஒருவருமில்லை.

யெப்தா பெரிய பராக்கிரமசாலியாயிருந்தாலும், அவரிடத்திலும் சில குறைகள் காணப்படுகிறது. அவர் ஒரு பரஸ்திரீயின் குமாரன் (நியா 11:1). யெப்தாவின் சகோதரர், அவரை "அந்நிய ஸ்திரீயின் மகன்" என்று சொல்லி அவரைத் துரத்திவிடுகிறார்கள். யூதர்கள் யெப்தாவை "ஒரு இஸ்மவேலர்" என்று சொல்லுகிறார்கள்.

யெப்தாவின் தாயார் ஒரு பரஸ்திரீயாகயிருப்பது, யெப்தாவின் குற்றமல்ல. ஆனாலும் ஒரு பரஸ்திரீயின் குமாரன் என்னும் அவமானம் யெப்தாவோடு கூடவே இருக்கிறது. பெற்றோர் செய்த தப்பிதங்களுக்கு பிள்ளைகளை பொறுப்பாக்கக்கூடாது. பெற்றோர் மோசமானவர்களாகயிருந்தாலும், அவர்களுடைய பிள்ளைகளும் மோசமானவர்களாகவே இருப்பார்கள் என்று தீர்மானம்பண்ணக்கூடாது. பெற்றோரின் நிமித்தமாக அவர்களுடைய பிள்ளைகளை நிந்திக்கக்கூடாது.

ஒருவன் பரஸ்திரீயின் குமாரனாகயிருந்தாலும், அவன் தன்னுடைய பாவங்களுக்கு இரட்சிக்கப்பட்டு, மறுபடியும் பிறக்கும்போது, அவன் பரத்திலிருந்து பிறந்தவனாகவே கருத்தப்படுகிறான். மனந்திரும்புகிற பாவியை கர்த்தர் ஏற்றுக்கொள்கிறார். அவனை தம்முடைய ஆவிக்குரிய பிள்ளையாக அங்கீகரிக்கிறார். கர்த்தரிடத்தில் பட்சபாதமில்லை. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுக்கு மகிமையான ஈவுகளைக் கொடுக்கும்போது, பரஸ்திரீயின் இரட்சிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும், அந்த மகிமையான ஈவுகளைக் கொடுப்பார்.

யெப்தா கிலெயாத்தின் குமாரன். ஆனால் யெப்தாவின் தாயார் ஒரு பரஸ்திரீ. கிலெயாத்தின் மனைவியும் அவனுக்குக் குமாரர்களைப் பெற்றிருக்கிறாள்; அவன் மனைவி பெற்ற குமாரர் பெரியவர்களான பின்பு, அவர்கள் யெப்தாவை நோக்கி: "உனக்கு எங்கள் தகப்பன் வீட்டிலே சுதந்தரம் இல்லை; நீ அந்நிய ஸ்திரீயின் மகன்" என்று சொல்லி யெப்தாவைத் துரத்திவிடுகிறார்கள் (நியா 11:2).

யூதமார்க்கத்து பிரமாணத்தின்படி, பரஸ்திரீயின் மகனுக்கு, அவனுடைய தகப்பனாரின் சுதந்தரத்தில் பாகம் பிரித்துக் கொடுக்கப்படுவதில்லை. கிலெயாத்தின் மனைவி பெற்ற பிள்ளைகள், யெப்தாவை வீட்டைவிட்டே துரத்திவிடுகிறார்கள். யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருந்தாலும், அவரை அவருடைய சகோதரர்கள் மேன்மைப்படுத்தவுமில்லை. தங்களோடுகூட தங்களுடைய வீட்டிலே சேர்த்துக்கொள்ளவுமில்லை.

யெப்தாவின் சகோதரர், அவரை தங்கள் வீட்டிலேயே வைத்திருந்தால், அவர்களுடைய வீட்டிற்கு பாதுகாப்பும், பெருமையும் கிடைக்கும். யெப்தாவின் பராக்கிரமம், அவர்களுடைய குடும்பத்திற்கு அலங்காரமாயிருக்கும். ஆனால் யெப்தாவின் மூலமாய் வரும் எந்த மேன்மையையும், அவருடைய சகோதரர் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயில்லை. அவர்கள் யெப்தாவை, அந்நிய ஸ்திரீயின் மகன் என்று சொல்லி, அவரை துரத்திவிடுகிறார்கள்.

யெப்தா தன் சகோதரரைவிட்டு ஓடிப்போய் தோப் தேசத்திலே குடியிருக்கிறார். யெப்தாவைப்போல வீணரான மனுஷர் அவரோடுகூட சேர்ந்துகொள்கிறார்கள். யெப்தா இயல்பாகவே பலத்த பராக்கிரமசாலி. யெப்தா தன்னுடைய பிழைப்புக்காக, வீணரான மனுஷரைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குப் போகிறார்.

கர்த்தர் ஒருவரை உயர்த்துவதற்கு முன்பாக அவரைத் தாழ்த்துகிறார். ஒரு கல்லை தலைக்கல்லாக ஆக்குவதற்கு முன்பாக, அந்தக் கல்லை ஆகாத கல் என்று கட்டுகிறவர்களால் தள்ளிவிடப்பண்ணுகிறார். யோசேப்பு, மோசே, தாவீது ஆகியோர் இஸ்ரவேலின் பிரதான மேய்ப்பர்களாயிருந்தார்கள். கர்த்தர் இம்மூன்றுபேரையும் தம்முடைய உன்னதமான ஊழியத்திற்கு அழைப்பதற்கு முன்பாக, மனுஷர் இவர்களை ஆகாதவர்கள் என்று தள்ளிவிட்டார்கள்.

யெப்தா பலத்த பராக்கிரமசாலியாயிருக்கிறார். யெப்தாவின் சகோதரர் அவரை வீட்டை விட்டு துரத்திவிட்டாலும், யெப்தா எங்கும்போய் பிச்சையெடுக்கவில்லை. யாரிடத்திலும் உதவி கேட்கவில்லை. அவர் தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும், பட்டயத்தையும் நம்பி ஜீவிக்கிறார். நாம் பராக்கிரமசாலிகளை ஒடுக்கும்போது, அவர்கள் கோழைகளாக மாறமாட்டார்கள். அவர்களுடைய பராக்கிரமம் மேலும் அதிகரிக்கும்.

யெப்தாவின் சகோதரர் அவரை ஒடுக்கினார்கள். வீட்டைவிட்டுத் துரத்தினார்கள். யெப்தாவோ தன் சகோதரரை விட்டு ஓடிப்போய், தோப் தேசத்திலே குடியிருக்கிறார். அங்கே அவர் சும்மாயிருக்கவில்லை. வீணரான மனுஷர் யெப்தாவோடே கூடிக்கொள்கிறார்கள். அவர்கள் யெப்தாவோடே கூட யுத்தத்திற்குப் போகிறார்கள். இந்த வீணர்கள் எல்லோரும் வீட்டைவிட்டு ஓடிவந்தவர்களாகவோ அல்லது வீட்டிலிருந்து துரத்தப்பட்டவர்களாகவோ இருக்கலாம். சமுதாயம் அவர்களை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் யெப்தா அவர்களை ஏற்றுக்கொள்கிறார்.

யெப்தாவும் வீணரான மனுஷரும் காடுகளிலே மிருகங்களை வேட்டையாடப்போகிறார்கள். வழிப்பறி செய்து ஜனங்களுடைய உடமைகளை கொள்ளை யிடுகிறார்கள். ஐசுவரியவான்களின் பொக்கிஷங்களைத் திருடுகிறார்கள். பல சமயங்களில் அந்நிய தேசத்தின்மீது யுத்தம்பண்ணவும் போகிறார்கள். இப்படிப்பட்ட வீணரான மனுஷரோடு சேர்ந்து யுத்தம்பண்ண போகிற யெப்தாவை, கர்த்தர் தெரிந்தெடுக்கிறார். யெப்தா இஸ்ரவேல் புத்திரரை அம்மோன் புத்திரருடைய கைக்கு விலக்கி இரட்சிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது.

கீலேயாத்தின் மூப்பர் நியா 11:4-11

நியா 11:4. சில நாளைக்குப்பின்பு, அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ணினார்கள்.

நியா 11:5. அவர்கள் இஸ்ரவேலின்மேல் யுத்தம் பண்ணும்போது கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவைத் தோப் தேசத்திலிருந்து அழைத்துவரப்போய்,

நியா 11:6. யெப்தாவை நோக்கி: நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்கள் சேனாபதியாயிருக்க வேண்டும் என்றார்கள்.

நியா 11:7. அதற்கு யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து: நீங்கள் அல்லவா என்னைப் பகைத்து, என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தினவர்கள்? இப்பொழுது உங்களுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிற சமயத்தில் நீங்கள் என்னிடத்தில் ஏன் வருகிறீர்கள் என்றான்.

நியா 11:8. அதற்குக் கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை நோக்கி: நீ எங்களுடனேகூட வந்து, அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ணி, கீலேயாத்தின் குடிகளாகிய எங்கள் அனைவர்மேலும் தலைவனாயிருக்க வேண்டும்; இதற்காக இப்பொழுது உன்னிடத்தில் வந்தோம் என்றார்கள்.

நியா 11:9. அதற்கு யெப்தா: அம்மோன் புத்திரரோடே யுத்தம்பண்ண, நீங்கள் என்னைத் திரும்ப அழைத்துப்போனபின்பு, கர்த்தர் அவர்களை என் முன்னிலையாய் ஒப்புக்கொடுத்தால், என்னை உங்களுக்குத் தலைவனாய் வைப்பீர்களா என்று கீலேயாத்தின் மூப்பரைக் கேட்டான்.

நியா 11:10. கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை பார்த்து: நாங்கள் உன் வார்த்தையின் படியே செய்யாவிட்டால், கர்த்தர் நமக்கு நடுநின்று கேட்பாராக என்றார்கள்.

நியா 11:11. அப்பொழுது யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடே கூடப்போனான்; ஜனங்கள் அவனைத் தங்கள்மேல் தலைவனும் சேனாபதியுமாக வைத்தார்கள். யெப்தா தன் காரியங்களையெல்லாம் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியிலே சொன்னான்.

அம்மோன் புத்திரர் கூட்டங்கூடி, இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக கீலேயாத்திலே பாளமிறங்கியிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரரும் கூடிக்கொண்டு மிஸ்பாவிலே பாளயமிறங்குகிறார்கள். சில நாளைக்கு பின்பு, அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின் மேல் யுத்தம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவருமில்லை, சேனாபதியுமில்லை. அம்மோன் புத்திரர்மேல் முந்தி யுத்தம்பண்ணப்போகிற மனுஷன், கீலேயாத்தின் குடிகளுக்கெல்லாம் தலைவனாயிருப்பான் என்று கீலேயாத்தின் மனுஷரும், ஜனங்களும் சொன்னார்கள். ஆனால் அவர்களில் ஒருவனும் அம்மோன் புத்திரர்மேல் முந்தி யுத்தம்பண்ணப்போகவில்லை. அம்மோன் புத்திரரோ, இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு தலைவரையும் சேனாபதியையும் தெரிந்தெடுக்கும் வரையிலும் காத்திருக்காமல், அவர்கள்மேல் யுத்தம்பண்ணுகிறார்கள்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின்மேல் பண்ணுகிற யுத்தம் வலுக்கிறது. யெப்தா தங்களுக்கு தலைவனாகவும், சேனாபதியாகவும் இருக்கவேண்டுமென்று கீலேயாத்தின் மூப்பர் தீர்மானம்பண்ணுகிறார்கள். இதற்காக அவர்கள் யெப்தாவை தோப் தேசத்திலிருந்து அழைத்து வரப்போகிறார்கள் (நியா 11:5).

கீலேயாத்தின் மூப்பருக்கு யெப்தா ஒரு பலத்த பராக்கிரமசாலி என்பது தெரிந்திருக்கிறது. யெப்தாவை அழைத்து வருவதற்கு அவர்கள் ஸ்தானாபதிகளை அனுப்பவில்லை. அல்லது அவர்கள் யெப்தாவுக்கு ஒரு நிரூபம் எழுதவில்லை. கீலேயாத்தின் மூப்பர்களே யெப்தாவை அழைத்து வர தோப் தேசத்திற்குப் போகிறார்கள்.

கீலேயாத்தின் மூப்பர், யெப்தாவை நோக்கி: "நீ வந்து, நாங்கள் அம்மோன் புத்திரரோடு யுத்தம் பண்ண எங்கள் சேனாபதியாயிருக்க வேண்டும்" (நியா 11:6) என்று சொல்லுகிறார்கள்.

யெப்தா வீணரான மனுஷரைக் கூட்டிக்கொண்டு யுத்தத்திற்குப்போவதைப்பற்றி கீலேயாத்தின் மூப்பருக்கு ஏற்கனவே தெரிந்திருக்கிறது. யெப்தா ஒரு பலத்த பராக்கிரமசாலி. அவர் தன்னுடைய பட்டயத்தை வீரமாகப் பயன்படுத்துகிறவர். அப்படிப்பட்ட பராக்கிரமசாலிதான் அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ணுவதற்கு, இஸ்ரவேல் புத்திரரின் சேனாபதியாயிருக்கவேண்டும் என்று கீலேயாத்தின் மூப்பர் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

கர்த்தர் தம்முடைய சித்தத்தையும், திட்டத்தையும் நிறைவேற்றுவதற்கு யெப்தாவை ஏற்கனவே ஆயத்தம்பண்ணியிருக்கிறார். யெப்தா ஒரு பரஸ்திரீயின் குமாரன் என்னும் நிந்தையும் அவமானமும், இப்போது இஸ்ரவேல் புத்திரரின் மேன்மைக்காகவும், மகிமைக்காகவும் பயன்படப்போகிறது. கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம், பிரச்சனைகளும் நமது வெற்றிக்கு சாதகமாகயிருக்கும்.

யெப்தாவின் சகோதரர் அவரோடு கோபப்படாமல், அவரை தங்கள் வீட்டைவிட்டுத் துரத்தாமலிருந்திருந்தால், யெப்தா ஒருவேளை இஸ்ரவேலிலுள்ள சாதாரண மனுஷரைப்போல இருந்திருப்பார். தன்னுடைய பராக்கிரமத்தை வெளிப்படுத்த யெப்தாவுக்கு வாய்ப்பு கிடைத்திருக்காது. ஆனால் யெப்தாவோ வேறு வழியில்லாமல் தோப் தேசத்திலே, தன்னுடைய ஜீவனுக்காக போராடிக்கொண்டிருக்கிறார். வீணரான மனுஷரோடு சேர்ந்து யுத்தம்பண்ணிக்கொண்டிருக்கிறார். ஏற்ற வேளை வரும்போது, கர்த்தர் யெப்தாவை உயர்த்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரரின் சேனைக்கு சேனாபதியில்லை. சேனாபதியில்லாத சேனை, தலையில்லாத சரீரமாகவே இருக்கும். அதனால் ஒரு பிரயோஜனமும் இருக்காது. இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் தங்கள் மனம்போனபடி ஜீவித்தார்கள். அவர்கள் யாருக்கும் கீழ்ப்படியாமல், எல்லோரும் தங்களை தலைவராக உயர்த்திக்கொண்டார்கள். ஆனால் இப்போதோ யெப்தா தங்களுக்கு தலைவராகவும், சேனாபதியாகவும் இருக்கவேண்டுமென்று, அவரிடத்தில் பணிவோடு கேட்டுக்கொள்கிறார்கள்.

ஒரு தேசத்தின் அரசாங்கத்திற்காகவும், அதை ஆளுகை செய்கிறவர்கள் நல்லவர்களாக இருப்பதற்காகவும், நாம் கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும்.

கீலேயாத்தின் மூப்பர் தங்களுக்கு சேனாபதியாயிருக்கவேண்டுமென்று யெப்தாவைக் கேட்டவுடன், அவர் உடனே சம்மதம் தெரிவிக்கவில்லை. யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து: "நீங்கள் அல்லவா என்னைப் பகைத்து, என் தகப்பன் வீட்டிலிருந்து என்னைத் துரத்தினவர்கள்? இப்பொழுது உங்களுக்கு ஆபத்து நேரிட்டிருக்கிற சமயத்தில் நீங்கள் என்னிடத்தில் ஏன் வருகிறீர்கள்" (நியா 11:7) என்று கேட்கிறார்.

கீலேயாத்தின் மனுஷர் யெப்தாவைப் பகைத்தார்கள் என்பதும், அவருடைய தகப்பன் வீட்டிலிருந்து அவரைத் துரத்தினார்கள் என்பதும் மெய்யான சம்பவம். இந்த வேதனை இன்னும் யெப்தாவின் மனதிலிருக்கிறது. தன்னுடைய தேசத்திற்கு சேவை செய்யவேண்டும் என்னும் விருப்பம் யெப்தாவின் மனதிலுள்ளது. ஆனாலும் கீலேயாத்தின் மூப்பர் தனக்கு செய்த தீங்குகளை அவர்களுக்கு உணர்த்தவேண்டும் என்று யெப்தா விரும்புகிறார்.

கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை பகைத்து, அவருடைய தகப்பன் வீட்டிலிருந்து அவரைத் துரத்தி, பாவம் செய்திருக்கிறார்கள். அவர்கள் செய்த பாவத்தினால் யெப்தா அதிகமாய்ப் பாதிக்கப்பட்டிருக்கிறார். கீலேயாத்தின் மூப்பர் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டுமென்று யெப்தா எதிர்பார்க்கிறார்.

யோசேப்பு தன்னுடைய சகோதரருக்கு தன்னை வெளிப்படுத்துவதற்கு முன்பு, அவர்களைத் தாழ்த்தினார். அவர்களுடைய தப்பிதங்களை அவர்கள் உணருமாறு செய்தார். கீலேயாத்தின் மூப்பரைப்போலவே இக்காலத்தில் அநேகர் நல்லவர்களுக்கு தீங்கு செய்கிறார்கள். தங்களுக்கு துன்பம் வரும் வரையிலும் தாங்கள் செய்த தப்பிதத்தைப்பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. அவர்களுக்கு தீங்கு வரும்போதோ, அவர்கள் நல்லவர்களின் உதவிகளை எதிர்பார்த்து ஓடி வருகிறார்கள்.

ஒரு சிலர் தேவையில்லாமல் கர்த்தரையும், அவருடைய பரிசுத்தவான்களையும் பகைக்கிறார்கள். கர்த்தருடைய பிள்ளைகளுக்கு தீங்கு செய்கிறார்கள். தங்களுக்கு துன்பமும் வேதனையும் வரும்போதோ, கர்த்தரிடத்தில் அழுது ஜெபம்பண்ணுகிறார்கள். தங்களுக்காக ஜெபம்பண்ணுமாறு, கர்த்தருடைய பரிசுத்தவான்களை வேண்டிக்கொள்கிறார்கள்.

இப்போது அம்மோன் புத்திரர் இஸ்ரவேலின்மேல் யுத்தம்பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய படைபலன் பெரிதாயிருக்கிறது. அவர்களுக்கு சேனாபதியிருக்கிறார். இஸ்ரவேல் புத்திரரும் ஒன்றாய்க்கூடி மிஸ்பாவிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண, இஸ்ரவேல் புத்திரருக்கு சேனாபதியில்லை. அவர்களுக்கு ஒரு சேனாபதி உடனடியாக தேவைப்படுகிறார். இஸ்ரவேல் புத்திரர் காலதாமதம்பண்ண முடியாது. யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருப்பதினால், அவர்களுடைய காலதாமதம், அவர்களுக்கு ஆபத்தாய் முடியும்.

இஸ்ரவேல் புத்திரருக்கு யெப்தாவின் உதவி உடனே தேவைப்படுகிறது. ஆகையினால் கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை தங்கள்மீது தலைவராகயிருக்க சம்மதம் தெரிவிக்கிறார்கள்.

கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை நோக்கி: "நீ எங்களுடனேகூட வந்து, அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ணி, கீலேயாத்தின் குடிகளாகிய எங்கள் அனைவர்மேலும் தலைவனாயிருக்க வேண்டும்; இதற்காக இப்பொழுது உன்னிடத்தில் வந்தோம்" (நியா 11:8) என்று சொல்லுகிறார்கள்.

இங்கு நடைபெறுகிற சம்பவத்திலிருந்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். நாம் ஒருவரையும் அசட்டைபண்ணக்கூடாது. ஒருவர் ஏழை என்பதற்காகவோ அல்லது ஒருவருடைய பிறப்பு ஈனமானது என்பதற்காகவோ நாம் யாரையும் அசட்டை செய்து அவமானப்படுத்திவிடக்கூடாது. எல்லோரோடும் சமாதானமாயிருக்க வேண்டும். யாரையும் நமக்கு சத்துருவாக்கிவிடக்கூடாது. யாருடைய உதவி எப்போது தேவைப்படும் என்பது நமக்கு தெரியாது. நமக்கு எப்போது ஆபத்தும், தீங்கும் வரும் என்பதும் நமக்குத் தெரியாது. ஆகையினால் முடிந்தவரையிலும் நாம் எல்லோரோடும் சிநேகமாயிருக்க வேண்டும். பகைஞருடைய உதவிகூட நமக்கு தேவைப்படலாம்.

நம்மை மற்றவர்கள் ஏளனம் பண்ணினாலும், அவமானப்படுத்தினாலும், நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. நம்முடைய மனம் முறிந்துவிடக்கூடாது. வேதனைகளையும், அவமானங்களையும் நாம் பொறுமையோடு சகித்துக்கொள்ளவேண்டும். எல்லாவற்றையும் கர்த்தருடைய பாதத்திலே சமர்ப்பிக்கவேண்டும். நாம் கர்த்தரை நம்பும்போது, நமக்கு ஒருபோதும் வெட்கமுண்டாகாது. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். அவர்கள் செழித்திருப்பார்கள்.

யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடு பேரம் பேசுகிறார். கர்த்தர் இஸ்ரவேலின் வருத்தத்தைப் பார்த்து அவர்களுக்கு மனதுருகுகிறார் (நியா 10:16). இஸ்ரவேல் புத்திரரும் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார்கள். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை மன்னித்திருப்பதினால், யெப்தாவும் அவர்களை மன்னிக்க ஆயத்தமாயிருக்கிறார். யெப்தா அவர்களிடம், கர்த்தருடைய கிருபையுள்ள நாமத்தினால் மேலும் ஒரு காரியத்தைக் கேட்கிறார்.

யெப்தா கீலேயாத்தின் மூப்பரைப் பார்த்து, "அம்மோன் புத்திரரோடே யுத்தம்பண்ண, நீங்கள் என்னைத் திரும்ப அழைத்துப்போனபின்பு, கர்த்தர் அவர்களை என் முன்னிலையாய் ஒப்புக்கொடுத்தால், என்னை உங்களுக்குத் தலைவனாய் வைப்பீர்களா" (நியா 11:9) என்று கேட்கிறார்.

கர்த்தர் அம்மோன் புத்திரரை, தன்னுடைய முன்னிலையில் ஒப்புக்கொடுப்பார் என்னும் விசுவாசம் யெப்தாவிடம் இருக்கிறது. அப்படி ஒப்புக்கொடுத்தால், அவர்கள் தன்னை அவர்களுக்கு தலைவராக வைக்கவேண்டுமென்று, யெப்தா கீலேயாத்தின் மூப்பரிடத்தில் கேட்கிறார். யெப்தா கர்த்தருக்கு கீழ்ப்படிந்து யுத்தம்பண்ணுவார். கர்த்தருடைய பலத்தினாலே அவர் இஸ்ரவேல் புத்திரரை அம்மோன் புத்திரரின் கைக்கு விலக்கி இரட்சிப்பார். அப்போது யெப்தா இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே கர்த்தருடைய நாமத்தினால், ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவார். இதற்கு அவர்கள் சம்மதம் தெரிவிக்கவேண்டும்.

யெப்தா கேட்கும் இதே கேள்வியை, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் கேட்கிறார். தாங்கள் இரட்சிக்கப்படவேண்டுமென்று இயேசுகிறிஸ்துவிடம் வருகிறவர்களிடம், கர்த்தரும் இதே கேள்வியைக் கேட்கிறார். "நான் உங்கள் ஆத்துமாவை இரட்சித்தால், உங்கள் ஜீவனை ஆளுகை செய்ய, என்னை அனுமதிப்பீர்களா" என்று நம்முடைய இரட்சகர் கேட்கிறார். நம்மை ஆளுகை செய்வதற்கு கர்த்தரை அனுமதிக்கவில்லையென்றால், அவர் நம்மை இரட்சிக்கமாட்டார்.

கர்த்தர் நம்மை சந்தோஷப்படுத்துவாரென்றால், அவர் நம்மை பரிசுத்தப்படுத்தவும் செய்வார். அவர் நமக்கு உதவிசெய்வாரென்றால், அவர் நம்முடைய தலைவராகவும் இருப்பார். கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவின் விண்ணப்பத்தை உடனே அங்கீகரிக்கிறார்கள்.

கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை பார்த்து; "நாங்கள் உன் வார்த்தையின் படியே செய்யாவிட்டால், கர்த்தர் நமக்கு நடுநின்று கேட்பாராக" (நியா 11:10) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு சமாதானம் தேவைப்படுகிறது. அம்மோன் புத்திரரின் கையிலிருந்து இரட்சிப்பு தேவைப்படுகிறது. அம்மோன் புத்திரரோடு யுத்தம்பண்ண, இஸ்ரவேல் புத்திரரின் சேனாபதியாயிருக்க யெப்தா சம்மதம் தெரிவிக்கிறார். யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடு உடன்படிக்கை பண்ணினாலும், அவர்கள் இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரின் சார்பாகவும், யெப்தாவோடு உடன்படிக்கை பண்ணுகிறார்கள். "யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம் விசாரித்தார்" (நியா 12:7) என்று எழுதப்பட்டிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மிஸ்பாவிலே பாளயமிறங்கியிருக்கிறார்கள். யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடே கூட மிஸ்பாவுக்குப் போகிறார்; ஜனங்கள் யெப்தாவைத் தங்கள்மேல் தலைவனும் சேனாபதியுமாக வைக்கிறார்கள் (நியா 11:11).

மிஸ்பாவிலே பாளயமிறங்கியிருக்கிற இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும், யெப்தாவை தங்கள்மேல் தலைவனாகவும், சேனாபதியாகவும் வைக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் யெப்தாவை நம்புகிறார்கள். அவரை உயர்த்தி கனம்பண்ணுகிறார்கள். யெப்தாவும் தன்னுடைய உயர்ந்த பதவிக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார். யெப்தா தன் ஜீவனை, தன் கையிலே பிடித்துக்கொண்டு, அம்மோன் புத்திரருக்கு விரோதமாய், யுத்தம்பண்ணப்போகிறார் (நியா 12:3).

யெப்தாவைப்போலவே, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலும் நமக்கு யுத்தங்களும் போராட்டங்களும் உண்டு. நமக்கு சோதனைகளும் வேதனைகளும் உண்டு. நாம் பிரச்சனைகளைப் பார்த்து பயந்துவிடக்கூடாது. யுத்தங்களைப் பார்த்து சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தர் யெப்தாவின் சத்துருக்களை அவருடைய கையிலே ஒப்புக்கொடுத்தார். அதுபோலவே கர்த்தர் நமக்கும் ஜெயத்தைக் கட்டளையிடுவார். ஜெயம் பெறுகிறவனுக்கு ஜீவக்கிரீடத்தைக் கொடுப்பதாக, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வாக்குப்பண்ணியிருக்கிறார்.

கர்த்தர் யெப்தாவை உயர்த்துகிறார். கர்த்தருடைய உதவியில்லாமல், தன்னால் அம்மோன் புத்திரரை துரத்த முடியாது என்பது யெப்தாவுக்கு நன்றாய்த் தெரியும். கர்த்தர் சத்துருக்களை நம்முடைய கையில் ஒப்புக்கொடுத்தால் மாத்திரமே, நமக்கு ஜெயம் கிடைக்கும். யுத்தம் கர்த்தருடையது. நாம் கர்த்தருடைய பலத்த கரத்திற்குள்ளே, அவருடைய சித்தத்திற்கு கீழ்ப்படிந்து கிரியை செய்யவேண்டும்.

யெப்தா கீலேயாத்தின் மூப்பரோடேகூட மிஸ்பாவுக்குப்போகிறார். அங்கே அவர் தன் காரியங்களையெல்லாம் கர்த்தருடைய சந்நிதியில் சொல்லுகிறார். கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை உயர்த்தினாலும், யெப்தா கர்த்தருக்கு முன்பாகத் தன்னைத் தாழ்த்துகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் யெப்தாவுக்கு உயர்ந்த பதவியையும், அதிகமான பொறுப்புக்களையும் கொடுக்கிறார்கள். யெப்தாவோ முதல் வேலையாக கர்த்தருடைய சந்நிதிக்குப்போய், அங்கே கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணுகிறார். தன்னுடைய காரியங்கள் எல்லாவற்றையும் கர்த்தரிடத்திலே சொல்லுகிறார். தன்னுடைய மனதின் எண்ணங்கள், தன்னுடைய திட்டங்கள் எல்லாவற்றையும் யெப்தா கர்த்தருடைய பாதபடியிலே சமர்ப்பிக்கிறார்.

கீலேயாத்தின் மூப்பர் யெப்தாவை இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகவும் சேனாபதியாகவும் நியமித்திருக்கிறார்கள். இந்த உயர்ந்த பதவியை கர்த்தரும் அங்கீகரிக்கவேண்டுமென்று யெப்தா எதிர்பார்க்கிறார். தான் இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராயிருந்தாலும், கர்த்தர் தனக்கு தலைவராயிருக்கவேண்டும் என்று யெப்தா விரும்புகிறார். கர்த்தர் யெப்தாவை ஆளுகை செய்யவில்லையென்றால், அவரை வழிநடத்தவில்லையென்றால், யெப்தாவால் இஸ்ரவேல் புத்திரருக்கு பிரயோஜனமான காரியம் எதையும் செய்ய முடியாது. அவரால் இஸ்ரவேலரை அம்மோன் புத்திரருடைய கையிலிருந்து இரட்சிக்கவும் முடியாது.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணிக் கொண்டிருக்கும்போது, யெப்தா இந்த யுத்தத்திலே ஜெபத்தோடு பங்குபெறுகிறார். முதலாவது ஜெபம். அதன் பின்பு யுத்தம். இதுவே நமக்கும் நியமிக்கப்பட்டிருக்கிற பிரமாணம். நாம் ஜெபத்தோடு ஆரம்பிப்பது, நமக்கு ஜெயமாய் முடியும்.

அம்மோன் புத்திரரின் ராஜா
நியா 11:12-28

நியா 11:12. பின்பு யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நீ என் தேசத்தில் எனக்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறதற்கு, எனக்கும் உனக்கும் என்ன வழக்கு இருக்கிறது என்று கேட்கச் சொன்னான்.

நியா 11:13. அம்மோன் புத்திரரின் ராஜா யெப்தாவின் ஸ்தானாபதிகளை நோக்கி: இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, அர்னோன் துவக்கி யாபோக்மட்டும், யோர்தான்மட்டும் இருக்கிற என் தேசத்தைக் கட்டிக்கொண்டார்களே; இப்பொழுது அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்துவிடவேண்டும் என்று சொல்லுங்கள் என்றான்.

நியா 11:14. யெப்தா மறுபடியும் அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி, அவனுக்குச் சொல்லச் சொன்னதாவது:

நியா 11:15. யெப்தா சொல்லுகிறது என்னவென்றால்: இஸ்ரவேலர் மோவாபியரின் தேசத்தையாகிலும், அம்மோன் புத்திரரின் தேசத்தையாகிலும் கட்டிக்கொண்டதில்லையே.

நியா 11:16. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, வனாந்தரத்தில் சிவந்த சமுத்திர மட்டும் நடந்து, பின்பு காதேசுக்கு வந்து,

நியா 11:17. இஸ்ரவேலர் ஏதோமின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நாங்கள் உன் தேசத்துவழியாய்க் கடந்து போகட்டும் என்று சொல்லச்சொன்னார்கள்; அதற்கு ஏதோமின் ராஜா செவிகொடுக்கவில்லை; அப்படியே மோவாபின் ராஜாவினிடத்திற்கும் அனுப்பினார்கள்; அவனும் சம்மதிக்கவில்லை. ஆதலால் இஸ்ரவேலர் காதேசிலே தரித்திருந்து,

நியா 11:18. பின்பு வனாந்தரவழியாய் நடந்து ஏதோம் தேசத்தையும் மோவாப் தேசத்தையும் சுற்றிப்போய், மோவாபின் தேசத்திற்குக் கிழக்கேவந்து, மோவாபின் எல்லைக்குள் பிரவேசியாமல், மோவாபின் எல்லையான அர்னோன் நதிக்கு அப்பாலே பாளயமிறங்கினார்கள்.

நியா 11:19. அப்பொழுது இஸ்ரவேலர் எஸ்போனில் ஆளுகிற சீகோன் என்னும் எமோரியரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: நாங்கள் உன் தேசத்து வழியாய் எங்கள் ஸ்தானத்திற்குக் கடந்துபோக இடங்கொடு என்று சொல்லச் சொன்னார்கள்.

நியா 11:20. சீகோன் இஸ்ரவேலரை நம்பாததினால், தன் எல்லையைக் கடந்துபோகிறதற்கு இடங்கொடாமல் தன் ஜனங்களையெல்லாம் கூட்டி, யாகாசிலே பாளயமிறங்கி, இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினான்.

நியா 11:21. அப்பொழுது இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சீகோனையும் அவனுடைய எல்லா ஜனங்களையும் இஸ்ரவேலரின் கையில் ஒப்புக்கொடுத்தார்; அவர்களை முறிய அடித்தார்கள்; அப்படியே இஸ்ரவேலர் அந்த தேசத்திலே குடியிருந்த எமோரியரின் சீமையையெல்லாம் பிடித்து, அர்னோன் துவக்கி,

நியா 11:22. யாபோக்மட்டும், வனாந்தரம்துவக்கி யோர்தான்மட்டும் இருக்கிற எமோரியரின் எல்லையையெல்லாம் சுதந்தரமாய்க் கட்டிக் கொண்டார்கள்.

நியா 11:23. இப்படி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எமோரியரைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியிருக்க, நீர் அந்த தேசத்தைக் கட்டிக் கொள்ளத்தகுமா?

நியா 11:24. உம்முடைய தேவனாகிய காமோஸ் உமக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தை நீர் கட்டிக்கொள்ளமாட்டீரோ? அப்படியே எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தையெல்லாம் நாங்களும் கட்டிக்கொள்ளுகிறோம்.

நியா 11:25. மேலும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜாவைப் பார்க்கிலும் உமக்கு அதிக நியாயம் உண்டோ? அவன் இஸ்ரவேலோடே எப்போதாகிலும் வழக்காடினானா? எப்போதாகிலும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினானா?

நியா 11:26. இஸ்ரவேலர் எஸ்போனிலும் அதின் கிராமங்களிலும், ஆரோவேரிலும் அதின் கிராமங்களிலும், அர்னோன் நதியருகான எல்லா ஊர்களிலும், முந்நூறு வருஷம் குடியிருக்கையில், இவ்வளவுகாலமாய் நீங்கள் அதைத் திருப்பிக்கொள்ளாதே போனதென்ன?

நியா 11:27. நான் உமக்கு விரோதமாய்க் குற்றம் செய்யவில்லை; நீர் எனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறதினால் நீர்தான் எனக்கு அநியாயம் செய்கிறீர்; நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம் தீர்க்கக்கடவர் என்று சொல்லி அனுப்பினான்.

நியா 11:28. ஆனாலும் அம்மோன் புத்திரரின் ராஜா தனக்கு யெப்தா சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போனான்.

யெப்தா இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதியாயிருக்கிறார். அவர் அம்மோன் புத்திரருடைய ராஜாவினிடத்திலே சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள விரும்புகிறார். அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். அம்மோன் புத்திரரின் ராஜா, இஸ்ரவேலுக்கு விரோதமாக, மூர்க்க குணத்தோடு யுத்தம்பண்ணுகிறான். அவன் இஸ்ரவேல் புத்திரருடைய தேசத்தை சுதந்தரித்துக்கொள்ள ஆசைப்படுகிறான்.

அம்மோன் புத்திரரின் ராஜா இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவதற்கான காரணத்தை யெப்தா அறிந்துகொள்ள விரும்புகிறார். யெப்தா பலத்த பராக்கிரமசாலியா யிருந்தாலும் அவர் யுத்தத்தில் பிரியப்படவில்லை. யுத்தம்பண்ணுவதைவிட சமாதானமாயிருப்பதையே யெப்தா விரும்புகிறார். சமாதானமாயிருப்பதற்கு எந்த ஒரு வழியும் இல்லையென்றால், கடைசியிலே யுத்தம்பண்ணுவது பற்றி யோசிக்கவேண்டும். ஆரம்பத்திலேயே யுத்தம்பண்ணப்போய்விடக்கூடாது.

யுத்தம்பண்ணுவதற்கு முன்பாக, சமாதானமாயிருப்பதற்கு வழிகள் இருக்கிறதா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். சமாதானமாயிருப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். அவை பலனளிக்காத பட்சத்தில், முடிவிலே யுத்தம்பண்ணுவது பற்றி யோசிக்கலாம்.

யுத்தம்பண்ணப்போகும்போது, அதற்கான பிரமாணத்திற்கும் கீழ்ப்படிய வேண்டும். யுத்தத்தின் பட்டயத்தோடு, நீதியின் பட்டயமும் இணைந்திருக்கவேண்டும். மென்மையான பிரதியுத்தரங்களினால், தங்களுடைய கோபங்களை தீர்த்துக்கொள்ள முயற்சிபண்ணலாம். சமாதானமாயிருப்பதற்கு ஸ்தானாபதிகள் மூலமாய் செய்தி சொல்லி அனுப்பலாம். யுத்தம்பண்ண ஆஸ்த்தமா யிருக்கும் இரண்டு பேரும், ஒருவருக் கொருவர் மனம் விட்டு பேசுவதற்கும், ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்கும் வாய்ப்புக்களைக் கொடுக்கலாம்.

"உங்களில் ஒருவனுக்கு வேறொரு வனோடே வழக்குண்டானால், வழக்காடும்படி அவன் பரிசுத்தவான்களிடத்தில் போகாமல், அநீதக்காரரிடத்தில் போகத் துணிகிறதென்ன?" (1கொரி 6:1).

யெப்தா அம்மோன் புத்திரரோடு சமாதானமாயிருக்கவே விரும்புகிறார். யெப்தா இஸ்ரவேலின் நியாயாதிபதி. அவர் எல்லா வழக்குகளையும் நீதியாய் நியாயம் விசாரித்து, நியாயமான தீர்ப்பு சொல்லவேண்டும். நியாயாதிபதியினிடத்தில் பட்சபாதம் இருக்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரரிடத்தில் தப்பிதம் காணப்பட்டால், அவர்களும் தங்கள் தப்பிதத்தை திருத்திக்கொள்ள ஆயத்தமாயிருக்க வேண்டும். ஒருவரும் பிடிவாதமாயிருக்கக் கூடாது. எல்லோரிடமும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை வேண்டும்.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேலருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறார்கள். இந்த யுத்தத்திற்கான காரணத்தை யெப்தா அறிந்துகொள்ள விரும்புகிறார். யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்புகிறார். "நீ என் தேசத்தில் எனக்கு விரோதமாக யுத்தம் பண்ண வருகிறதற்கு, எனக்கும் உனக்கும் என்ன வழக்கு இருக்கிறது" (நியா 11:12) என்று யெப்தா, தன்னுடைய ஸ்தானாபதிகள் மூலமாய், அம்மோன் புத்திரருடைய ராஜாவினிடத்தில் கேட்கச் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரரின் ராஜாவும், இந்த யுத்தத்திற்கான காரணத்தை யெப்தாவின் ஸ்தானாபதிகள் மூலமாய் சொல்லியனுப்புகிறார். அம்மோன் புத்திரரின் ராஜா, இஸ்ரவேல் புத்திரர்மீது யுத்தம் பண்ண வருவதற்கு முன்பாகவே, இதற்கான காரணத்தை இஸ்ரவேலருக்கு சொல்லியிருக்கவேண்டும். இதுவே யுத்த பிரமாணம். ஆனால் அம்மோன் புத்திரரின் ராஜா, இஸ்ரவேலரிடம் ஒரு காரணமும் சொல்லாமல், அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வருகிறான்.

யெப்தா இப்போது அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு, தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பி, இந்த யுத்தத்திற்கான காரணம் என்ன என்று கேட்டபோது, அம்மோன் புத்திரரின் ராஜா, யெப்தாவின் ஸ்தானாபதிகளிடம், இந்த யுத்தத்திற்கான காரணத்தை சொல்லுகிறான்.

"இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, அர்னோன் துவக்கி யாபோக்மட்டும், யோர்தான்மட்டும் இருக்கிற என் தேசத்தைக் கட்டிக்கொண்டார்களே; இப்பொழுது அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்" (நியா 11:13) என்று அம்மோன் புத்திரரின் ராஜா யெப்தாவின் ஸ்தானாபதிகள் மூலமாய் சொல்லியனுப்புகிறான். ராஜா சொன்னதை, யெப்தாவின் ஸ்தானாபதிகள் அவரிடத்தில் சொல்லுகிறார்கள்.

அம்மோன் புத்திரரின் ராஜா சொன்ன காரணத்தைக் கேட்டு, யெப்தா உடனே கோபப்படவில்லை. அவசரப்பட்டு ஒருவார்த்தையும் பேசவில்லை. அதே வேளையில், யெப்தா அமைதியாயும் இருக்கவில்லை. யெப்தா மறுபடியும் அம்மோன் புத்திரரின் ராஜாவினிடத்திற்கு தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பி, தன்னுடைய செய்தியை அவனுக்கு சொல்லச் சொல்லுகிறார்.

அம்மோன் புத்திரருக்கு இஸ்ரவேல் தேசத்திலே பங்குமில்லை பாத்தியமுமில்லை. அர்னோன் துவக்கி யாபோக் மட்டும், யோர்தான் மட்டும் இருக்கிற தேசம் தன்னுடைய தேசம் என்று அம்மோன் புத்திரரின் ராஜா சொல்லுகிறான். இந்த தேசம் இப்போது ரூபன் கோத்திரத்தாருக்கும், காத் கோத்திரத்தாருக்கும் சுதந்தரமாயிருக்கிறது.

இஸ்ரவேலர் மோவாபியரின் தேசத்தையாகிலும், அம்மோன் புத்திரரின் தேசத்தையாகிலும் கட்டிக்கொண்டதில்லை (நியா 11:15). மோவாபியரும் அம்மோன் புத்திரரும் சகோதரர்கள். இவர்கள் லோத்தின் புத்திரர். ஆகையினால் யெப்தா இவர்களைப்பற்றிச் சொல்லும்போது, மோவாபியரையும், அம்மோன் புத்திரரையும் சேர்த்தே சொல்லுகிறார். இவர்கள் காமோஸ் என்னும் தெய்வத்தை ஆராதிக்கிறார்கள். ஒருவேளை மோவாபியருக்கும் அம்மோன் புத்திரருக்கும் ஒரே ராஜா இருப்பதற்கும் வாய்ப்புள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் இந்த தேசத்திற்கு வருவதற்கு முன்பாக, எமோரியர் மோவாபியரின் தேசத்தையும், அம்மோன் புத்திரரின் தேசத்தையும் கட்டிக்கொண்டார்கள். ஆகையினால் அம்மோன் புத்திரரின் ராஜா, இதுபற்றி கேட்கவேண்டுமென்றால், எமோரியரிடம் கேட்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரிடத்தில் இதுபற்றி கேட்கக்கூடாது. இஸ்ரவேல் புத்திரரும் இது பற்றி அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு பிரதியுத்தரம் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை.

"எஸ்போனானது எமோரியரின் ராஜாவாகிய சீகோனின் பட்டணமாயிருந்தது; அவன் மோவாபியரின் முந்தின ராஜாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ணி, அர்னோன் வரைக்கும் இருந்த அவன் தேசத்தையெல்லாம் அவன் கையிலிருந்து பறித்துக்கொண்டான்" (எண் 21:26).

யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு இஸ்ரவேல் தேசத்தின் சரித்திரத்தைச் சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் எகிப்து தேசத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, கானான் தேசத்திற்குப் போகும்போது, வனாந்தரத்தின் வழியாக கடந்துபோகையில், அங்கு நடைபெற்ற சம்பவங்களை அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு யெப்தா விவரித்துச் சொல்லுகிறார்.

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, வனாந்தரத்தில் சிவந்த சமுத்திர மட்டும் நடந்து, பின்பு காதேசுக்கு வந்தார்கள் (நியா 11:16). இஸ்ரவேலர் ஏதோமின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: "நாங்கள் உன் தேசத்துவழியாய்க் கடந்து போகட்டும்" என்று சொல்லச்சொன்னார்கள்; அதற்கு ஏதோமின் ராஜா செவிகொடுக்கவில்லை; அப்படியே மோவாபின் ராஜாவினிடத்திற்கும் அனுப்பினார்கள்; அவனும் சம்மதிக்கவில்லை. ஆதலால் இஸ்ரவேலர் காதேசிலே தரித்திருந்தார்கள் (நியா 11:17).

பின்பு இஸ்ரவேல் புத்திரர் வனாந்தரவழியாய் நடந்து ஏதோம் தேசத்தையும் மோவாப் தேசத்தையும் சுற்றிப்போய், மோவாபின் தேசத்திற்குக் கிழக்கேவந்து, மோவாபின் எல்லைக்குள் பிரவேசியாமல், மோவாபின் எல்லையான அர்னோன் நதிக்கு அப்பாலே பாளயமிறங்கினார்கள் (நியா 11:18).

இஸ்ரவேல் புத்திரருக்கு எமோரியரின் தேசத்தை சுதந்தரிக்கவேண்டும் என்னும் எண்ணமில்லை. அவர்கள் கானான் தேசத்தை நோக்கி பிரயாணம்பண்ணிக் கொண்டிருந்தார்கள். கர்த்தர் இஸ்ரவேல் ஜனத்தாருக்கு கானான் தேசத்தை சுதந்தரமாகக் கொடுத்திருந்தார். கானான் தேசத்திற்குப் போகும் வழியில், அவர்கள் வனாந்தரத்தின் வழியாக பிரயாணம்பண்ணினார்கள். அந்த சூழ்நிலையில் இஸ்ரவேல் புத்திரர் ஏதோமியரின் தேசத்தின் வழியாய் கடந்துபோகவேண்டியதாயிற்று. அதன் பின்பு அவர்கள் மோவாபின் எல்லையான அர்னோன் நதிக்கு அப்பாலே பாளயமிறங்க வேண்டியதாயிற்று. ஏதோமியர் ஏசாவின் சந்ததியைச் சேர்ந்தவர்கள். மோவாபியர் லோத்தின் சந்ததியைச் சேர்ந்தவர்கள்.

இக்காலத்தில், எமோரியரின் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கும் எமோரியருக்கும் யுத்தமுண்டாயிற்று. இஸ்ரவேலர் இந்த யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. எமோரியரின் ராஜாவாகிய சீகோனே, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தத்தை ஆரம்பித்தான்.

அப்பொழுது இஸ்ரவேலர் எஸ்போனில் ஆளுகிற சீகோன் என்னும் எமோரியரின் ராஜாவினிடத்திற்கு ஸ்தானாபதிகளை அனுப்பி: "நாங்கள் உன் தேசத்து வழியாய் எங்கள் ஸ்தானத்திற்குக் கடந்துபோக இடங்கொடு" என்று சொல்லச் சொன்னார்கள் (நியா 11:19). ஆனால் சீகோன் இஸ்ரவேலரை நம்பாததினால், தன் எல்லையைக் கடந்துபோகிறதற்கு அவர்களுக்கு இடங்கொடுக்கவில்லை. சீகோன் தன் ஜனங்களையெல்லாம் கூட்டி யாகாசிலே பாளயமிறங்கி, இஸ்ரவேலரோடே யுத்தம் பண்ணினான் (நியா 11:20).

இஸ்ரவேல் புத்திரர் எமோரியருக்கு ஒரு தீங்கும் செய்யாமல், அவர்கள் தேசத்தின் வழியாக, கானான் தேசத்திற்கு கடந்துபோக விரும்பினார்கள். அதற்கு எமோரியரின் ராஜாவாகிய சீகோனிடத்தில் அனுமதி கேட்டார்கள். ஆனால் சீகோனோ, இஸ்ரவேல் புத்திரருக்கு அனுமதி கொடுக்காமல் அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணினான். இஸ்ரவேலரும் வேறு வழியில்லாமல், தங்களை பாதுகாத்துக்கொள்வதற்காக சீகோனோடும் அவனுடைய சேனையோடும் யுத்தம்பண்ணினார்கள்.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் சீகோனையும் அவனுடைய எல்லா ஜனங்களையும் இஸ்ரவேலரின் கையில் ஒப்புக்கொடுத்தார்; இஸ்ரவேலர் அவர்களை முறிய அடித்தார்கள்; அப்படியே இஸ்ரவேலர் அந்த தேசத்திலே குடியிருந்த எமோரியரின் சீமையையெல்லாம் பிடித்து, அர்னோன் துவக்கி, யாபோக்மட்டும், வனாந்தரம் துவக்கி யோர்தான்மட்டும் இருக்கிற எமோரியரின் எல்லையையெல்லாம் சுதந்தரமாய்க் கட்டிக் கொண்டார்கள் (நியா 11:21,22).

இவ்வாறாக எமோரியரின் தேசம் இஸ்ரவேலின் சுதந்தரமாயிற்று. இந்த யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரர் ஜெயம் பெற்றதினால், யுத்த பிரமாணத்தின்படி, அவர்கள் எமோரியரின் சீமையை தங்களுடைய சுதந்தரமாகக் கட்டிக்கொண்டார்கள். அர்னோன் துவக்கி யாபோக் மட்டும், வனாந்தரம் துவக்கி யோர்தான் மட்டும் இருக்கிற எமோரியரின் எல்லையை, இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய சுதந்தரமாகக் கட்டிக்கொண்டார்கள்.

அம்மோன் புத்திரரின் ராஜா இந்த தேசத்தை, இஸ்ரவேல் புத்திரர் அநியாயமாய்க் கட்டிக்கொண்டார்கள் என்றும், அது தங்களுக்கு வேண்டும் என்றும் கேட்கிறான். "இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வருகிறபோது, அர்னோான் துவக்கி யாபோக்மட்டும், யோர்தான்மட்டும் இருக்கிற என் தேசத்தைக் கட்டிக்கொண்டார்களே; இப்பொழுது அதை எனக்குச் சமாதானமாய்த் திரும்பக் கொடுத்துவிடவேண்டும்" (நியா 11:13) என்று அம்மோன் புத்திரரின் ராஜா கேட்கிறான்.

அம்மோன் புத்திரரின் ராஜா, இஸ்ரவேல் புத்திரரிடம், இந்த தேசத்தை இப்போது திருப்பிக் கேட்பதில் நியாயமில்லை. இந்த தேசத்தை எமோரியரின் ராஜாவாகிய ஏதோம் ஏற்கெனவே அம்மோன் புத்திரரிடமிருந்து சுதந்தரித்துக்கொண்டான். எமோரியரின் ராஜா, அம்மோன் புத்திரரிடமிருந்து சுதந்தரித்ததை, இப்போது அம்மோன் புத்திரரின் ராஜா, இஸ்ரவேல் புத்திரரிடம் கேட்கிறான். ஏதோமின் ராஜா சுதந்தரித்ததை, இப்போது அம்மோன் புத்திரரின் ராஜா, இஸ்ரவேல் புத்திரரிடம் திரும்பக் கேட்கிறான். இதற்காக அவன் இஸ்ரவேலருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுகிறான்.

யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு ஞானமுள்ள பிரதியுத்தரம் சொல்லுகிறார். "இப்படி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் எமோரியரைத் தம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு முன்பாகத் துரத்தியிருக்க, நீர் அந்த தேசத்தைக் கட்டிக் கொள்ளத்தகுமா?" (நியா 11:23) என்று யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவிடம் கேட்கிறார்.

மேலும் யெப்தா, அம்மோன் புத்திரரின் ராஜாவிடம், "உம்முடைய தேவனாகிய காமோஸ் உமக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தை நீர் கட்டிக்கொள்ளமாட்டீரோ?" (நியா 11:24) என்றும் கேட்கிறார். "அப்படியே எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு முன்பாகத் துரத்துகிறவர்களின் தேசத்தையெல்லாம் நாங்களும் கட்டிக்கொள்ளுகிறோம்" (நியா 11:24) என்று யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

கர்த்தரே எமோரியரின் தேசத்தை இஸ்ரவேல் புத்திரருடைய கையில் ஒப்புக்கொடுத்திருக்கிறார். "நீங்கள் எழுந்து பிரயாணம்பண்ணி, அர்னோான் ஆற்றைக் கடந்துபோங்கள்; எஸ்போனின் ராஜாவாகிய சீகோன் என்னும் எமோரியனையும் அவன் தேசத்தையும் உன்கையிலே ஒப்புக்கொடுத்தேன்; இதுமுதல் அதைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி அவனோடே யுத்தஞ்செய்" (உபா 2:24).

யெப்தா இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைப்பற்றிச் சொல்லும்போது, அவர் அம்மோன் புத்திரரின் தெய்வமாகிய காமோசைப்பற்றியும் சொல்லுகிறார். யெப்தா காமோசை ஒரு தெய்வமாக அங்கீகரிக்கவில்லை. ஆனால் அம்மோன் புத்திரரோ காமோசை தங்கள் தெய்வமாக அங்கீகரித்திருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் எமோரியரின் தேசத்திற்குள்ளே முதலாவதாக பிரவேசித்தபோது, அவர்களுக்கு ஒரு எதிர்ப்பும் உண்டாகவில்லை. "மேலும் சிப்போரின் குமாரனாகிய பாலாக் என்னும் மோவாபின் ராஜாவைப் பார்க்கிலும் உமக்கு அதிக நியாயம் உண்டோ? அவன் இஸ்ரவேலோடே எப்போதாகிலும் வழக்காடினானா? எப்போதாகிலும் அவர்களுக்கு விரோதமாக யுத்தம் பண்ணினானா?" (நியா 11:25) என்று யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவிடம் கேட்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இந்த தேசத்திலே முந்நூறு வருஷமாக குடியிருக்கிறார்கள். இத்தனை வருஷங்களாக அம்மோன் புத்திரர், இந்த தேசத்திலிருந்து இஸ்ரவேல் புத்திரரை துரத்திவிட முயற்சி பண்ணவில்லை. இஸ்ரவேல் புத்திரர் இந்த தேசத்திலிருந்ததை அம்மோன் புத்திரரும் அங்கீகரித்தார்கள். பல சந்ததியாக இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக, இந்த தேசத்தைக் குறித்து, ஒருவரும் யுத்தம்பண்ணவுமில்லை. இந்த தேசத்திற்குள் பிரவேசிப்பதற்கு, இதுவரையிலும் அம்மோன் புத்திரருக்கு அனுமதியும் கிடைக்கவில்லை. ஆகையினால் இந்த தேசம் இஸ்ரவேல் புத்திரருக்கே சுதந்தரமானது என்று யெப்தா விவாதம்பண்ணுகிறார்.

"இஸ்ரவேலர் எஸ்போனிலும் அதின் கிராமங்களிலும், ஆரோவேரிலும் அதின் கிராமங்களிலும், அர்னோன் நதியருகான எல்லா ஊர்களிலும், முந்நூறு வருஷம் குடியிருக்கையில், இவ்வளவு காலமாய் நீங்கள் அதைத் திருப்பிக்கொள்ளாதே போனதென்ன?" (நியா 11:26) என்று யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவோடு விவாதம்பண்ணுகிறார்.

யெப்தா தன்னுடைய விவாதத்தின் மூலமாய், தன் பக்கத்தில் நீதியும் நியாயமும் இருப்பதாக உறுதிபண்ணுகிறார். அம்மோன் புத்திரரை கடிந்து சொல்லுகிறார். "நான் உமக்கு விரோதமாய்க் குற்றம் செய்யவில்லை; நீர் எனக்கு விரோதமாய் யுத்தம் பண்ணுகிறதினால் நீர்தான் எனக்கு அநியாயம் செய்கிறீர்; நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும் அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயம் தீர்க்கக்கடவர்" (நியா 11:27) என்று யெப்தா அம்மோன் புத்திரரின் ராஜாவுக்கு சொல்லி அனுப்புகிறார்.

நியாயாதிபதிகளின் காலத்தில், இஸ்ரவேல் புத்திரர் பொருளாதாரத்திலும், படைபலத்திலும் வல்லமையோடிருக்கிறார்கள். அவர்கள் செழித்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் இதுவரையிலும், தங்களுடைய அண்டை தேசத்தாருக்கு விரோதமாக ஒரு தீங்கும் செய்ததில்லை. இஸ்ரவேல் புத்திரர், மற்ற தேசத்தாரோடு, காரணமில்லாமல் யுத்தம்பண்ணவுமில்லை.

அம்மோன் புத்திரரின் ராஜாவோ, இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம்பண்ணி, அவர்கள் அனுபவித்து வரும் சுதந்தரத்தை அபரிக்க விரும்புகிறான். தன்னுடைய நியாயத்தை உறுதிபண்ணுவதற்காக, முந்நூறு வருஷங்களுக்கு முன்பு நடந்த சம்பவங்களை, இப்போது நியாயப்படுத்தி பேசுகிறான். அம்மோன் புத்திரரின் ராஜா, தனக்கு சாதகமான காரணங்களை மாத்திரம் சொல்லுகிறான். மற்ற காரணங்களை மறைத்துவிடுகிறான்.

யெப்தா இந்த வழக்கை கர்த்தருடைய கரத்திலே ஒப்புக்கொடுக்கிறார். கர்த்தரே நீதியுள்ள நியாயாதிபதி. அவர் மனுஷருடைய வழக்குகளை நீதியாய் நியாயந்தீர்க்கிறவர். "நியாயாதிபதியாகிய கர்த்தர் இன்று இஸ்ரவேல் புத்திரருக்கும், அம்மோன் புத்திரருக்கும் நடுநின்று நியாயந்தீர்க்கக்கடவர்" என்று சொல்லி, யெப்தா இந்த வழக்கை கர்த்தருடைய கரத்திலே ஒப்புக்கொடுக்கிறார்.

ஆனாலும் அம்மோன் புத்திரரின் ராஜா தனக்கு யெப்தா சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போகிறான் (நியா 11:28). யெப்தாவின் விவாதத்தை அம்மோன் புத்திரரின் ராஜா ஏற்றுக்கொள்ளவில்லை. கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம்.

அம்மோன் புத்திரர் பதினெட்டு வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கி நெருக்கினார்கள். தேசத்தின் நன்மைகளையெல்லாம் அனுபவித்தார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய உடமைகளைக் கொள்ளையிட்டார்கள்.

"அவர்கள் அந்த வருஷம் முதற்கொண்டு பதினெட்டு வருஷமாய் யோர்தானுக்கு அப்பாலே கீலேயாத்திலுள்ள எமோரியரின் தேசத்தில் இருக்கிற இஸ்ரவேல் புத்திரரையெல்லாம் நெருக்கி ஒடுக்கினார்கள்" (நியா 10:8).

அம்மோன் புத்திரரால் இப்போது இஸ்ரவேல் தேசத்தின் நன்மைகளை அனுபவியாமல் இருக்க முடியவில்லை. இதுவரையிலும் விருட்சத்தின் கனிகளை சுவைத்துப் புசித்தவர்கள், இப்போது அந்த விருட்சத்தையே தங்களுக்கு சொந்தம் என்று சொல்லுகிறார்கள். பதினெட்டு வருஷங்களாக இஸ்ரவேல் புத்திரரை அடக்கி ஆளுகை செய்த அம்மோன் புத்திரர், இப்போது அந்த தேசமே தங்களுக்கு சொந்தமானது என்று சொல்லுகிறார்கள்.

யெப்தாவின் குமாரத்தி
நியா 11:29-40

நியா 11:29. அப்பொழுது கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேல் இறங்கினார்; அவன் கீலேயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்துபோய், கீலேயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போனான்.

நியா 11:30. அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணி: தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக் கொடுத்தால்,

நியா 11:31. நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்றான்.

நியா 11:32. யெப்தா அம்மோன் புத்திரரின்மேல் யுத்தம்பண்ண, அவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டுப்போனான்; கர்த்தர் அவர்களை அவன் கையில் ஒப்புக்கொடுத்தார்.

நியா 11:33. அவன் அவர்களை ஆரோவேர் துவக்கி மின்னித்திற்குப் போகுமட்டும், திராட்சத்தோட்டத்து நிலங்கள்வரைக்கும், மகா சங்காரமாய் முறிய அடித்து, இருபது பட்டணங்களைப் பிடித்தான்; இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்பட்டார்கள்.

நியா 11:34. யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, அவன் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து, அவனுக்கு எதிர்கொண்டு வந்தாள்; அவள் அவனுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் அவனுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை.

நியா 11:35. அவன் அவளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது என்றான்.

நியா 11:36. அப்பொழுது அவள்: என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவோ? அம்மோன் புத்திரராகிய உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும் என்றாள்.

நியா 11:37. பின்னும் அவள் தன் தகப்பனை நோக்கி: நீர் எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும்; நான் மலைகளின்மேல் போய்த் திரிந்து, நானும் என் தோழிமார்களும் என் கன்னிமையினிமித்தம் துக்கங் கொண்டாட, எனக்கு இரண்டுமாதம் தவணைகொடும் என்றாள்.

நியா 11:38. அதற்கு அவன்: போய்வா என்று அவளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிட்டான்; அவள் தன் தோழிமார்களோடும் கூடப்போய், தன் கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கங்கொண்டாடி,

நியா 11:39. இரண்டுமாதம் முடிந்தபின்பு, தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிவந்தாள்; அப்பொழுது அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்குச் செய்தான்; அவள் புருஷனை அறியாதிருந்தாள்.

நியா 11:40. இதினிமித்தம் இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் போய், நாலுநாள் கீலேயாத்தியானான யெப்தாவின் குமாரத்தியைக் குறித்துப் புலம்புவது இஸ்ரவேலிலே வழக்கமாயிற்று.

அம்மோன் புத்திரருக்கு விரோதமான யுத்தத்திலே யெப்தாவுக்கு ஜெயமுண்டாயிற்று. ஆனால் அவர் கர்த்தரிடத்தில் பண்ணின பொருத்தனையினிமித்தமாக, அவருக்கு மிகுந்த துன்பமுண்டாயிற்று.

அம்மோன் புத்திரரின் ராஜா, தனக்கு யெப்தா சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போகிறான். அப்பொழுது கர்த்தருடைய ஆவி யெப்தாவின்மேல் இறங்குகிறார்; யெப்தா கீலேயாத்தையும் மனாசே நாட்டையும் கடந்துபோய், கீலேயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போகிறார் (நியா 11:28,29).

கர்த்தருடைய ஆவியானவர் யெப்தாவின்மேல் இறங்கினபோது, அவருடைய பெலமும் பராக்கிரமமும் அதிகரிக்கிறது. உன்னதத்திலிருந்து வரும் பலத்தினால் யெப்தா தரிப்பிக்கப்படுகிறார். அவருடைய இயல்பான பலத்தைவிட, இப்போது அவரிடத்தில் விசேஷித்த பெலம் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் யெப்தாவின்மேல் இறங்கினதினால், யெப்தாவுக்கு இந்த விசேஷித்த பெலமும், பராக்கிரமமும் உண்டாயிற்று.

யெப்தா அம்மோன் புத்திரருக்கு விரோதமாகப் போகிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரசன்னம் யெப்தாவோடு கூடயிருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவர் யெப்தாவின்மேல் இறங்கினது, கர்த்தர் யெப்தாவின் பிரயாசங்களை அங்கீகரிப்பதற்கு அடையாளமாயிருக்கிறது. அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யெப்தா யுத்தம்பண்ணப்போகும்போது, யுத்தத்திலே அவருக்கு ஜெயம் கிடைக்கும் என்பதை, கர்த்தருடைய ஆவியானவர் உறுதிபண்ணுகிறார்.

அம்மோன் புத்திரரின் ராஜா தனக்கு யெப்தா சொல்லியனுப்பின வார்த்தைகளுக்குச் செவிகொடாதே போகிறான். யெப்தா அவனிடம், மறுபடியும் மறுபடியுமாக, தன்னுடைய ஸ்தானாபதிகளை அனுப்பி, அவனோடு விவாதம்பண்ணவில்லை. யெப்தா தன்னுடைய நேரத்தை வீணாக்கவில்லை. உடனே அவர் மிஸ்பாவுக்கு வந்து, அங்கே இருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்.

யெப்தா அம்மோன் புத்திரரின்மேல் யுத்தம்பண்ண, அவர்களுக்கு விரோதமாய்ப் புறப்பட்டுப்போகிறார்; கர்த்தர் அம்மோன் புத்திரரை யெப்தாவின் கையில் ஒப்புக்கொடுக்கிறார். யெப்தா அவர்களை ஆரோவேர் துவக்கி மின்னித்திற்குப் போகுமட்டும், திராட்சத்தோட்டத்து நிலங்கள்வரைக்கும், மகா சங்காரமாய் முறிய அடித்து, இருபது பட்டணங்களைப் பிடிக்கிறார்; இப்படி அம்மோன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாகத் தாழ்த்தப்படுகிறார்கள் (நியா 11:32,33).

யெப்தா அம்மோன் புத்திரருடைய வயல்நிலங்களிலே, அம்மோன் புத்திரரை முறியடிக்கிறார். அங்கேயிருந்து, அம்மோன் புத்திரருடைய பட்டணங்களுக்கு விரோதமாகவும் யுத்தம்பண்ணப்போகிறார். யெப்தா அம்மோன் புத்திரர் எல்லோரையும் மொத்தமாய் சங்காரம்பண்ணிவிடவில்லை. கர்த்தர் அம்மோன் புத்திரரை யெப்தாவின் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். ஆனாலும் யெப்தா தன்னை அம்மோன் புத்திரர்மீது ராஜாவாக்கவில்லை.

இஸ்ரவேல் புத்திரர் அம்மோன் புத்திரருக்கு விரோதமாக, முதலாவதாக யுத்தம்பண்ணப்போகவில்லை. அம்மோன் புத்திரரே இஸ்ரவேலருக்கு விரோதமாக, முதலாவதாக யுத்தம் பண்ண வந்தார்கள். நமக்கு விரோதமாக மற்றவர்கள் தீங்கு செய்யும்போது, தீங்குகளிலிருந்து நம்மைக் காத்துக்கொள்வதற்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். நமக்கு தீங்கு செய்தவருக்கு விரோதமாக, நாமும் தீங்கு செய்யக்கூடாது.

அம்மோன் புத்திரர் இஸ்ரவேலருக்கு விரோதமாகத் தீங்கு செய்தார்கள். ஆனால் யெப்தாவோ, அம்மோன் புத்திரருக்கு விரோதமாக தீங்கு செய்யவில்லை. அவர்களுக்கு விரோதமாய்த் தீங்கு செய்ய, கர்த்தர் யெப்தாவை அனுமதிக்கவுமில்லை. பழிவாங்குதல் கர்த்தருக்குரியது.

யெப்தா கீலேயாத்திலிருக்கிற மிஸ்பாவுக்கு வந்து, அங்கேயிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார். அப்பொழுது யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனையைப் பண்ணுகிறார். "தேவரீர் அம்மோன் புத்திரரை என் கையில் ஒப்புக்கொடுக்கவே ஒப்புக் கொடுத்தால், நான் அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரும்போது, என் வீட்டு வாசற்படியிலிருந்து எனக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்கு உரியதாகும், அதைச் சர்வாங்க தகனபலி யாகச் செலுத்துவேன்" (நியா 11:30,31) என்று சொல்லி, யெப்தா கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறார்.

யெப்தா மிஸ்பாவிலிருந்து அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, அவருடைய மனது குழப்பமடைந்திருக்கிறது. அவரிடத்தில் கர்த்தரைப்பற்றிய தெளிந்த சிந்தனையில்லை. அவருடைய ஆவிக்குரிய மனக்கண்களும் பிரகாசமாயிராமல் மங்கிப்போயிருக்கிறது.

யெப்தா அம்மோன் புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போகும்போது, கர்த்தருடைய பிரசன்னம் தன்னோடு கூடயிருக்கிறது என்பது அவருக்கு தெரிந்திருக்கிறது. ஆனாலும் யெப்தா கர்த்தருடைய பிரசன்னத்தை, ஒரு பொருத்தனையினால், உறுதிபண்ண விரும்புகிறார்.

யெப்தா கர்த்தரிடத்தில் இரண்டு காரியங்களை விண்ணப்பம் பண்ணுகிறார். அவையாவன : 1. தேவனாகிய கர்த்தர் அம்மோன் புத்திரரை யெப்தாவின் கையிலே ஒப்புக்கொடுக்கவேண்டும். 2. யெப்தா அம்மோன் புத்திரரிடத்திலிருந்து சமாதானத்தோடே திரும்பி வரவேண்டும். யெப்தாவுக்கு யுத்தத்திலே ஜெயம் கிடைக்கவேண்டும்.

கர்த்தர் யெப்தாவுக்கு இவ்விரண்டு காரியங்களையும் வாய்க்கப்பண்ணினால், அவர் யுத்தக்களத்திலிருந்து திரும்பி வரும்போது, அவருடைய வீட்டு வாசற்படி யிலிருந்து, அவருக்கு எதிர்கொண்டு வருவது எதுவோ அது கர்த்தருக்குரியதாகும் என்றும், தான் அதை சர்வாங்க தகனபலியாக செலுத்துவதாகவும் யெப்தா கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுகிறார்.

யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டுக்கு வருகிறபோது, இதோ, யெப்தாவின் குமாரத்தி தம்புரு வாசித்து நடனஞ்செய்து, யெப்தாவுக்கு எதிர்கொண்டு வருகிறாள் (நியா 11:34). யெப்தாவின் குமாரத்தி, யுத்தக்களத்திலிருந்து ஜெயத்தோடு திரும்பி வரும் தன்னுடைய தகப்பனாரை வரவேற்பதற்கு சந்தோஷமாய் வருகிறாள். தன் மகளைப் பார்த்தவுடனே, யெப்தாவின் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று. அவருடைய மனதில் மிகப்பெரிய குழப்பமுண்டாயிற்று. யெப்தா கர்த்தரிடத்தில் பண்ணின பொருத்தனையின்படி, அவருடைய மகள் இப்போது கர்த்தருக்கு உரியவளாகிறாள். யெப்தா தன் மகளை சர்வாங்க தகனபலியாக செலுத்தவேண்டும்.

யெப்தாவுக்கு ஒரே ஒரு குமாரத்தி மாத்திரமே இருக்கிறாள். அவள் யெப்தாவுக்கு ஒரே பிள்ளையானவள்; அவளையல்லாமல் யெப்தாவுக்குக் குமாரனும் இல்லை குமாரத்தியும் இல்லை. யெப்தா தன் மகளைக் கண்டவுடனே தன் வஸ்திரங்களைக் கிழித்துக்கொண்டு: "ஐயோ! என் மகளே, என்னை மிகவும் மனமடியவும் கலங்கவும் பண்ணுகிறாய்; நான் கர்த்தரை நோக்கி என் வாயைத் திறந்து சொல்லிவிட்டேன்; அதை நான் மாற்றக்கூடாது" (நியா 11:34,35) என்று சொல்லுகிறார்.

யெப்தாவின் குமாரத்தி தன் தகப்பனாருக்கு ஆறுதல் சொல்லுகிறாள். "உம்முடைய வாயிலிருந்து புறப்பட்ட படியே எனக்குச் செய்யும்" என்று சொல்லுகிறாள். யெப்தாவின் குமாரத்தி, தன் தகப்பனாரிடம் "என் தகப்பனே, நீர் கர்த்தரை நோக்கி உம்முடைய வாயைத் திறந்து பேசினீரல்லவோ? அம்மோன் புத்திரராகிய உம்முடைய சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டும் ஜெயத்தைக் கர்த்தர் உமக்குக் கட்டளையிட்டபடியினால், உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும்" (நியா 11:36) என்று சொல்லுகிறாள்.

யெப்தாவின் குமாரத்தி இன்னும் புருஷனை அறியாதிருக்கிறாள். தன்னுடைய கன்னிமையினிமித்தம் அவள் துக்கங்கொண்டாட தவணை கேட்கிறாள். யெப்தாவின் குமாரத்தி, தன் தகப்பனிடம் "நீர் எனக்கு ஒரு காரியம் செய்ய வேண்டும்; நான் மலைகளின்மேல் போய்த் திரிந்து, நானும் என் தோழிமார்களும் என் கன்னிமையினிமித்தம் துக்கங் கொண்டாட, எனக்கு இரண்டுமாதம் தவணைகொடும்" (நியா 11:37) என்று கேட்கிறாள்.

யெப்தா தன் மகளுக்கு அனுமதி கொடுக்கிறார். "போய் வா" என்று சொல்லி, யெப்தா தன் மகளை இரண்டு மாதத்திற்கு அனுப்பிவிடுகிறார்.

அவள் தன் தோழிமார்களோடு கூடப்போய், தன் கன்னிமையினிமித்தம் மலைகளின்மேல் துக்கங்கொண்டாடுகிறாள். இரண்டுமாதம் முடிந்தபின்பு, அவள் தன் தகப்பனிடத்திற்குத் திரும்பிவருகிறாள்; யெப்தா தன்னுடைய பொருத்தனையை நிறைவேற்றுவதற்கு, அவருடைய மகள் தன்னை சந்தோஷமாய் ஒப்புக்கொடுக்கிறாள். "உம்முடைய வாயிலிருந்து புறப்பட்டபடியே எனக்குச் செய்யும்" என்று சொல்லுகிறாள். அப்பொழுது யெப்தா தான் பண்ணியிருந்த பொருத்தனையின்படி தன் மகளுக்குச் செய்கிறார் (நியா 11:38,39).

யெப்தாவின் சரித்திரத்திலிருந்து, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு பிரயோஜனமான பாடங்களை நாம் கற்றுக்கொள்ளலாம். கர்த்தரை மெய்யாக விசுவாசிக்கிறவர்களிடத்திலும், விசுவாசத்தில் வளர்ச்சி பெற்றிருக்கிறவரிடத்திலும், அவர்களுடைய இருதயத்தின் ஏதாவது ஒரு ஓரத்தில் சந்தேகமும் அவிசுவாசமும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

கர்த்தருடைய ஆவியானவர் யெப்தாவின்மேல் இறங்கினாலும், கர்த்தருக்கு பொருத்தனை பண்ணினால் தான், தனக்கு யுத்தத்திலே ஜெயம் கிடைக்கும் என்று யெப்தா எதிர்பார்க்கிறார். பொருத்தனை பண்ணவில்லையென்றால், கர்த்தர் அம்மோன் புத்திரரை தன்னுடைய கையிலே ஒப்புக்கொடுக்கமாட்டார் என்றும் அவர் நினைக்கிறார். இப்படிப்பட்ட பொருத்தனைகள் ஆபத்தானது. யெப்தா கர்த்தருடைய கிருபைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தன்னுடைய பொருத்தனைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்.

கர்த்தருக்கு பொருத்தனை பண்ணி ஜெபம்பண்ணுவது மிகவும் நல்லது. கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் எதிர்பார்த்து, நாம் ஜெபம்பண்ணும்போது, கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுவது, வேதவாக்கியத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. கர்த்தருக்கு பொருத்தனை பண்ணுவதுகூட, கர்த்தரை ஆராதிக்கும் ஆராதனையும் ஒரு பகுதியாகவே இருக்கிறது.

நம்முடைய பொருத்தனையினால், கர்த்தருடைய கிருபையை கிரயத்திற்கு வாங்கமுடியாது. நாம் கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணினால், நாம் எதிர்பார்க்கிற காரியங்களை கர்த்தர் நமக்கு நிறைவேற்றி தருவார் என்று வியாபார நோக்கத்தோடு, பொருத்தனை பண்ணக்கூடாது. நன்றியுள்ள இருதயத்தோடு கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணவேண்டும். கர்த்தர் நமக்கு இதுவரையிலும் செய்த நன்மைகளை நினைவுகூர்ந்து, நாம் கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணவேண்டும்.

நம்முடைய தேவைகள் எவ்வளவு அதிகமாயிருந்தாலும், நாம் கர்த்தருக்குப் பொருத்தனைபண்ணும்போது, மிகவும் கவனமாயும், எச்சரிப்பாயும் இருக்கவேண்டும். அவசரப்பட்டோ அல்லது உணர்ச்சிவசப்பட்டோ பொருத்தனை பண்ணக்கூடாது. ஒரு சிலர் உற்சாக மிகுதியினால் கர்த்தருக்குப் பொருத்தனைகளை செய்கிறார்கள். அதன் பின்பு, அந்தப் பொருத்தனைகளை நிறைவேற்ற முடியாமல், தங்களுடைய மனச்சாட்சியில் குற்றப்படுத்தப்படுகிறார்கள்.

நாம் கர்த்தருக்கு பயபக்தியோடு பொருத்தனைபண்ணுவதை, உண்மையான மனதோடு நிறைவேற்றவேண்டும். பொருத்தனையை நிறைவேற்றுவது நமக்கு கஷ்டமாகயிருந்தாலும், அது நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்தக்கூடியதாயிருந்தாலும், நம்முடைய பொருத்தனையில் நாம் உண்மையுள்ளவர்களாயிருக்கவேண்டும்.

பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும். கீழ்ப்படிவதில் ஒரு சந்தோஷம் இருக்கவேண்டும். மனப்பூர்வமாய்க் கீழ்ப்படியவேண்டும். பெற்றோர் கர்த்தருடைய நாமமகிமைக்காகவும், தங்களுடைய குடும்பத்தின் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காகவும், கர்த்தருக்குப் பொருத்தனை செய்கிறார்கள். இந்தப் பொருத்தனைகளில் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் ஈடுபடுத்துகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு, கர்த்தருக்குள் கீழ்ப்படிவது மிகவும் ஆசீர்வாதமாயிருக்கும்.

பெற்றோரின் பொருத்தனைக்கு கீழ்ப்படிந்த பிள்ளைகளுக்கு, ரேகாபியரை எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். தன்னுடைய பிள்ளைகள் திராட்சரசம் அருந்தக்கூடாது என்று யோனதாப் கட்டளையிட்டார். யோனதாபின் பிள்ளைகள், பல சந்ததிகளைக் கடந்த பின்பும், தங்களுடைய முன்னோரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து, திராட்சரசம் பானம்பண்ணாமலிருந்தார்கள்.

யெப்தா கர்த்தருக்கு ஒரு பொருத்தனை பண்ணினார். அந்தப் பொருத்தனைக்கு அவருடைய குமாரத்தி கீழ்ப்படிகிறாள். "உம்முடைய வாயிலிருந்து புறப்பட்ட படியே எனக்குச் செய்யும்" (நியா 11:36) என்று சொல்லி, யெப்தா தன்னுடைய பொருத்தனையை நிறைவேற்ற, அவருடைய மகள் தன்னை ஒப்புக்கொடுக்கிறாள்.

நம்முடைய சிநேகிதரின் சந்தோஷங்களிலும் துக்கங்களிலும் நாம் பங்குபெறவேண்டும். ஒரு சிலர் பிறருடைய சந்தோஷங்களில் மாத்திரம் பங்குபெறுவார்கள். அவர்களுடைய துக்கங்களிலும், கஷ்டங்களிலும், வேதனைகளிலும் பங்குபெறமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் உண்மையான சிநேகிதர்களல்ல.

யெப்தாவின் குமாரத்திக்கு நற்குணமுள்ள தோழிமார்கள் கிடைத்திருக்கிறார்கள். அவர்கள் யெப்தாவின் குமாரத்தியினுடைய கன்னிமையினிமித்தம், அவளோடுகூட மலைகளின்மேல் துக்கங்கொண்டாடுகிறார்கள். அவளுடைய துக்கத்தைப் பகிர்ந்துகொள்கிறார்கள்.

யெப்தா கர்த்தருக்கு பக்திவைராக்கியமாயிருக்கிறார். தன்னுடைய பொருத்தனையினால் அவர் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார். இஸ்ரவேல் தேசத்தின்மீது தனக்கிருக்கும் அன்பையும், அக்கரையையும் வெளிப்படுத்துகிறார். யெப்தாவின் பொருத்தனை இந்நாள் வரையிலும் நினைவுகூரப்படுகிறது. "இதினிமித்தம் இஸ்ரவேலின் குமாரத்திகள் வருஷந்தோறும் போய், நாலுநாள் கீலேயாத்தியனான யெப்தாவின் குமாரத்தியைக் குறித்துப் புலம்புவது இஸ்ரவேலிலே வழக்கமாயிற்று" (நியா 11:40).

யெப்தா கர்த்தருக்குப் பண்ணின பொருத்தனையைப்பற்றி வேதபண்டிதர்களில் சிலர் வெவ்வேறு விதமாக விவாதம்பண்ணுகிறார்கள். யெப்தா தன்னுடைய பொருத்தனையை நிறைவேற்ற தன் மகளுக்கு என்ன செய்தார் என்று, தெளிவாகத் தெரியவில்லை. "அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படி அவளுக்கு செய்தான்" (நியா 11:39) என்று பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

யெப்தா தன் குமாரத்திக்கு திருமணம் செய்து வைக்காமல், அவளை கர்த்தருக்குரியவளாக ஒப்புக்கொடுத்து விட்டார் என்று வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். அவள் திருமணமாகாத கன்னிகையாகவே ஜீவித்தாள் என்பது இவர்களுடைய கருத்து. அவள் புருஷனை அறியாதிருந்தாள். குடும்ப வாழ்க்கையில் ஈடுபடாதிருந்தாள். தன் வாழ்நாள் முழுவதும் அவள் ஒரு கன்னிகையாக, கர்த்தருக்காகவே ஜீவித்தாள்.

யெப்தா தன் குமாரத்தியை சர்வாங்க தகனபலியாக செலுத்திவிட்டார் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். யெப்தா கர்த்தருக்கு பொருத்தனை பண்ணியபோது, "அதை சர்வாங்க தகனபலியாக செலுத்துவேன்" (நியா 11:31) என்று சொன்னார். அதன் பிரகாரம், யெப்தா தன் குமாரத்தியை சர்வாங்க தகனபலியாக செலுத்திவிட்டார் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

"நரஜீவனில் சாபத்தீடாக நியமிக்கப் பட்டவைகளெல்லாம் மீட்கப்படாமல் கொலைசெய்யப்படக் கடவது" (லேவி 27:29).

கர்த்தருக்கு தான் பண்ணின பொருத்தனையை மீறுவதைவிட, தன் மகளை சர்வாங்க தகனபலியாக செலுத்துவதையே யெப்தா தெரிந்தெடுத்தார். யெப்தா மிஸ்பாவிலிருக்கிற தன் வீட்டிற்கு வருகிறபோது, அவருடைய குமாரத்தி, அவருக்கு எதிர்கொண்டு வருகிறாள். இது எதேச்சையாக நடைபெற்ற ஒரு சம்பவமாகயிருந்தாலும், இதுவும் கர்த்தருடைய சித்தமே என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

யெப்தா தன்னுடைய குமாரத்தியை, சர்வாங்க தகனபலியாக செலுத்தியிருப்பாரென்றால், அவர் செய்த காரியம் சரியானதா என்பது பற்றியும் வேதபண்டிதர்கள் விவாதம்பண்ணுகிறார்கள்.

யெப்தா தன் குமாரத்தியை சர்வாங்க தகனபலியாக செலுத்தியது நீதியான செயல் என்று சொல்லி, அவருடைய செயலை ஒரு சிலர் நியாயப்படுத்துகிறார்கள். இந்த உலகத்தில் தனக்கு மிகவும் பிரியமான மகளைக்கூட அவர் கர்த்தருக்கு பலிசெலுத்த ஆயத்தமாயிருந்தார் என்பது இவர்களுடைய விவாதம்.

யெப்தா தன் குமாரத்தியை சர்வாங்க தகனபலியாக செலுத்தியது மதியீனமான செயல் என்றும் வேதபண்டிதர்களில் சிலர் சொல்லுகிறார்கள். யெப்தா அவசரப்பட்டு கர்த்தருக்குப் பொருத்தனை பண்ணினார். அந்தப் பொருத்தனையை நிறைவேற்றியது மிகவும் மோசமான செயல்.

எந்த மனுஷரையும் நரபலியாக செலுத்தவேண்டுமென்று கர்த்தர் எங்கும் சொல்லவில்லை. "கொலைசெய்யாதிருப்பாயாக" என்பது பத்துக்கட்டளைகளில் ஒன்று. பழைய ஏற்பாட்டுக்காலத்தில், புறஜாதி ஜனங்கள் தங்கள் பிள்ளைகளை மோளேகுக்கு பலியாகச் செலுத்தினார்கள். கர்த்தர் இப்படிப்பட்ட பலிகளை தடைபண்ணியிருக்கிறார். ஆகையினால் யெப்தா தன் மகளை சர்வாங்க தகனபலியாக செலுத்தியிருக்கக்கூடாது என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

12 அதிகாரம்

எப்பிராயீம் மனுஷர் யெப்தாவோடு விவாதம்பண்ணுகிறார்கள். யெப்தா கீலேயாத் மனுஷரையெல்லாம் கூட்டி எப்பிராயீமரோடு யுத்தம்பண்ணுகிறார். யெப்தா எப்பிராயீமரை முறியடிக்கிறார் (நியா 12:1-6). யெப்தாவின் ஜீவனும், ஆளுகையும் முடிவு பெறுகிறது (நியா 12:7).

இஸ்ரவேலை நியாயம் விசாரித்த மேலும் மூன்று நியாயாதிபதிகள். இப்சான் (நியா 12:8-10). ஏலோன் (நியா 12:11,12). அப்தோன் (நியா 12:13-15).

எப்பிராயீம் மனுஷர் நியா 12:1-7

நியா 12:1. எப்பிராயீம் மனுஷர் ஏகமாய்க் கூடி வடக்கே புறப்பட்டுப்போய், யெப்தாவை நோக்கி: நீ எங்களை உன்னோடே கூட வரும்படி அழைப்பியாமல் அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ணப்போனதென்ன? உன் வீட்டையும் உன்னையும் கூட அக்கினியால் சுட்டுப்போவோம் என்றார்கள்.

நியா 12:2. அதற்கு யெப்தா: எனக்கும் என் ஜனத்திற்கும் அம்மோன் புத்திரரோடே பெரிய வழக்கு இருக்கும்போது, நான் உங்களைக் கூப்பிட்டேன்; நீங்கள் என்னை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கவில்லை.

நியா 12:3. நீங்கள் என்னை ரட்சிக்கவில்லை என்று நான் கண்டபோது, நான் என் ஜீவனை என் கையிலே பிடித்துக்கொண்டு, அம்மோன் புத்திரருக்கு விரோதமாய்ப் போனேன்; கர்த்தர் அவர்களை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்படியிருக்க, நீங்கள் என்மேல் யுத்தம்பண்ண, இன்று என்னிடத்திற்கு வரவேண்டியது என்ன என்று சொன்னான்.

நியா 12:4. பின்பு யெப்தா கீலேயாத் மனுஷரையெல்லாம் கூட்டி, எப்பிராயீமோடு யுத்தம்பண்ணினான்; எப்பிராயீமுக்கும் மனாசேக்கும் நடுவே குடியிருக்கிற கீலேயாத்தியரான நீங்கள் எப்பிராயீமைவிட்டு ஓடிப்போனவர்கள் என்று எப்பிராயீமர் சொன்னபடியினால், கீலேயாத் மனுஷர் அவர்களை முறிய அடித்தார்கள்.

நியா 12:5. கீலேயாத்தியர் எப்பிராயீமருக்கு முந்தி யோர்தானின் துறைகளைப் பிடித்தார்கள்; அப்பொழுது எப்பிராயீமரிலே தப்பினவர்களில் யாராவது வந்து: நான் அக்கரைக்குப் போகட்டும் என்று சொல்லும்போது, கீலேயாத் மனுஷர்: நீ எப்பிராயீமனா என்று அவனைக் கேட்பார்கள்; அவன் அல்ல என்றால்,

நியா 12:6. நீ ஷிபோலேத் என்று சொல் என்பார்கள்; அப்பொழுது அவன் அப்படி உச்சரிக்கக்கூடாமல், சிபோலேத் என்பான்; அப்பொழுது அவனைப் பிடித்து, யோர்தான் துறையிலே வெட்டிப்போடுவார்கள்; அக்காலத்திலே எப்பிராயீமில் நாற்பத்தீராயிரம்பேர் விழுந்தார்கள்.

நியா 12:7. யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம் விசாரித்தான்; பின்பு கீலேயாத்தியனான யெப்தா மரித்து, கீலேயாத்திலுள்ள ஒரு பட்டணத்தில் அடக்கம் பண்ணப்பட்டான்.

யெப்தா அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ணப்போனபோது, தன்னோடே கூட வரும்படி எப்பிராயீம் மனுஷரை அழைக்கவில்லை. இதனால் எப்பிராயீம் மனுஷர் யெப்தாவின்மீது கோபப்படுகிறார்கள். யெப்தாவுக்கு அம்மோன் புத்திரர்மீது ஜெயமுண்டாயிற்று. கீலேயாத்தியர் யுத்தத்திலே திரளான கொள்ளைப்பொருளை எடுத்துக்கொள்கிறார்கள். இதிலே எப்பிராயீமருக்கு பங்கு இல்லாமல் போயிற்று.

எப்பிராயீம் மனுஷர் தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்களாயிருக்கிறார்கள். மனுஷருடைய பெருமைகளே சண்டைகளுக்கும், வாக்குவாதங்களுக்கும் அடிப்படை காரணம். இருதயத்தில் மேட்டிமையுள்ளவர்கள், எல்லா கனமும் மகிமையும் தங்களுக்கு மொத்தமாய்க் கிடைக்கவேண்டும் என்று பேராசைப்படுவார்கள். தங்களுடைய உதவியும், ஒத்தாசையுமில்லாமல், மற்றவர்களால் ஒன்றும் செய்யமுடியாது என்று ஆணவமாய் நினைப்பார்கள்.

எப்பிராயீம் மனுஷர் யெப்தாவுக்கு விரோதமாக கோபமாயிருக்கிறார்கள். எப்பிராயீம் மனுஷர் ஏகமாய்க் கூடி வடக்கே புறப்பட்டுப்போய், யெப்தாவை நோக்கி: "நீ எங்களை உன்னோடேகூட வரும்படி அழைப்பியாமல் அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ணப்போனதென்ன? உன் வீட்டையும் உன்னையும் கூட அக்கினியால் சுட்டுப்போடுவோம்" (நியா 12:1) என்று சொல்லுகிறார்கள்.

எப்பிராயீம் மனுஷருடைய கோபத்தில் நீதியில்லை. அவர்கள் தேவையில்லாமல் யெப்தாவின்மீது கோபப்படுகிறார்கள். அவர்களுடைய கோபத்திற்கு நியாயமான காரணமுமில்லை. "நீ எங்களை உன்னோடேகூட வரும்படி ஏன் அழைக்கவில்லை" என்று எப்பிராயீம் மனுஷர் யெப்தாவிடம் கோபத்தோடு கேட்கிறார்கள்.

யெப்தா எப்பிராயீம் மனுஷரை தன்னோடேகூட வரும்படி அழைப்பியாமல் அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ண போனதற்கு முக்கியமான காரணமுள்ளது. கீலேயாத்தின் மனுஷரே யெப்தாவை தங்களுக்கு தலைவராகவும், சேனாபதியாகவும் தெரிந்தெடுத்தார்கள். எப்பிராயீம் மனுஷர், யெப்தாவை தங்களுக்கு தலைவராக ஆக்கவில்லை. ஆகையினால் தன்னோடே கூட வரும்படி அழைப்பதற்கு, யெப்தாவுக்கு அதிகாரமில்லை. எப்பிராயீம் மனுஷரை அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ண வருமாறு அழைக்கவேண்டுமென்றால், அவர்களை கீலேயாத்தின் மனுஷர்தான் அழைக்கவேண்டும்.

எப்பிராயீம் மனுஷருடைய கோபம் மிகவும் அதிகமாயிருக்கிறது. அவர்கள் கொடூரகுணமுள்ளவர்கள். அவர்களெல்லோரும் ஏகமாய்க் கூடியிருக்கிறார்கள். அவர்கள் யோர்தானைக் கடந்து கீலேயாத்திலுள்ள மிஸ்பா வரைக்கும் வருகிறார்கள். எப்தா மிஸ்பாவிலே வாசம்பண்ணுகிறார். மிஸ்பாவிலுள்ள யெப்தாவின் வீட்டையும், அதோடுகூட யெப்தாவையும் அக்கினியால் சுட்டுப்போடவேண்டுமென்று எப்பிராயீம் மனுஷர் உக்கிரகோபத்தோடிருக்கிறார்கள்.

சிறிய காரணம் பெரிய கோபத்தை உண்டுபண்ணுகிறது. எப்பிராயீம் மனுஷர் மிருககுணமுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்கள் அனுபவிக்கும் வேதனைகளைப் பார்த்து சந்தோஷப்படுகிறவர்கள். யெப்தாவை அக்கினியால் சுட்டெரித்துவிட்டால், அவர்களுடைய கோபம் தீர்ந்துவிடும். எப்பிராயீம் மனுஷர் மற்றவர்களுடைய அழிவைப் பார்த்து சந்தோஷப்படுகிறவர்கள்.

எப்பிராயீம் மனுஷர் தனக்கு விரோதமாக கூட்டமாய், கோபத்தோடு நிற்கும்போது, யெப்தா அவர்களுக்கு நியாயமான பிரதியுத்தரம் சொல்லுகிறார். யெப்தா அவர்களைப்போல அவசரப்பட்டு கோபப்படவில்லை. அவர்களுடைய கோபம் தணிந்தாலும், தணியாவிட்டாலும், யெப்தா மிகவும் ஞானமாய்ப் பேசுகிறார். தன்னிடத்திலுள்ள நியாயத்தை எடுத்துச் சொல்லுகிறார்.

யெப்தா எப்பிராயீம் மனுஷரிடத்தில், "எனக்கும் என் ஜனத்திற்கும் அம்மோன் புத்திரரோடே பெரிய வழக்கு இருக்கும்போது, நான் உங்களைக் கூப்பிட்டேன்; நீங்கள் என்னை அவர்கள் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கவில்லை. நீங்கள் என்னை ரட்சிக்கவில்லை என்று நான் கண்டபோது, நான் என் ஜீவனை என் கையிலே பிடித்துக்கொண்டு, அம்மோன் புத்திரருக்கு விரோதமாய்ப் போனேன்; கர்த்தர் அவர்களை என் கையில் ஒப்புக்கொடுத்தார்; இப்படியிருக்க, நீங்கள் என்மேல் யுத்தம்பண்ண, இன்று என்னிடத்திற்கு வரவேண்டியது என்ன" (நியா 12:2,3) என்று சொல்லுகிறார்.

எப்பிராயீம் மனுஷர் யெப்தாவோடு சண்டையிடுவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை. அம்மோன் புத்திரர்மேல் நடைபெற்ற யுத்தத்தில், யெப்தா தனக்கு மகிமையையோ, மேன்மையையோ தேடவில்லை. தன்னுடைய தேசத்தைப் பாதுகாக்கவே, யெப்தா அம்மோன் புத்திரர்மேல் யுத்தம்பண்ணினார்.

யெப்தா எப்பிராயீம் மனுஷரை தன்னோடு சேர்ந்துகொள்ளுமாறு கூப்பிட்டார். ஆனால் அவர்கள் யெப்தாவுக்கு உதவி செய்ய வரவில்லை. யெப்தாதான் எப்பிராயீம் மனுஷர்மீது கோபப்படவேண்டும். இதுதான் நியாயம். யெப்தாவுக்கு, அம்மோன் புத்திரர் மூலமாய் ஆபத்து வந்தபோது, எப்பிராயீம் மனுஷர் அவருக்கு உதவி செய்ய வராமல், அவரைத் தனியே விட்டுவிட்டார்கள்.

எப்பிராயீம் மனுஷர் யெப்தாவுக்கு விரோதமாக சண்டை போட ஏகமாய்க் கூடிவந்திருக்கிறார்கள். ஆனால் இஸ்ரவேல் தேசத்திற்கு ஆபத்து வரும்போது, தேசத்தைக் காப்பாற்ற அவர்கள் இதுபோல கூடிவருவதில்லை. எப்பிராயீம் மனுஷர் ஆபத்து காலத்தில் உதவி செய்ய வரமாட்டார்கள். ஆனால் ஆதாயத்தைப் பெற்றுக்கொள்ள வருவார்கள்.

எப்பிராயீம் மனுஷருடைய துன்மார்க்கமான குணத்தைப் பார்த்து, யெப்தா அவர்கள்மீது குற்றம் சொல்லவேண்டும். ஆனால் எப்பிராயீம் மனுஷர் யெப்தாவின்மீது குற்றம் சொல்லுகிறார்கள். துன்மார்க்கர் எப்பிராயீம் மனுஷரைப்போலவே இருப்பார்கள். ஒரு தீங்கும் செய்யாதவர்கள்மீது குற்றம் சுமத்துவார்கள். தாங்கள் மற்றவர்களுக்கு உதவி செய்ய வரமாட்டார்கள்.

யெப்தா தன் ஜீவனை கையிலே பிடித்துக்கொண்டு அம்மோன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போனார். யெப்தாவோடு கூடயிருந்தவர்கள் கொஞ்சம் பேர். அம்மோன் புத்திரரோ திரளான எண்ணிக்கையிலிருந்தார்கள். யெப்தாவின் சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ, கீலேயாத்தின் மனுஷருக்கு யுத்தத்திலே ஜெயம் கிடைக்கவில்லை. கர்த்தருடைய கிருபையினால் அவர்களுக்கு ஜெயம் கிடைத்திருக்கிறது.

யெப்தா அம்மோன் புத்திரர்மீது யுத்தம்பண்ணி, அவர்களை நிர்மூலம்பண்ணினார். இதற்காக அவர் தன்னைத்தானே பெருமைப்படுத்தவில்லை. தனக்கு மகிமையைத் தேடவில்லை. கர்த்தர் அம்மோன் புத்திரரை தன்னுடைய கையிலே ஒப்புக்கொடுத்தார் என்று யெப்தா விசுவாசத்தோடு சொல்லுகிறார். கர்த்தர் தம்முடைய மகிமைக்காக யெப்தாவைப் பயன்படுத்தியிருக்கிறார். எப்பிராயீம் மனுஷரோ இதைப் பார்த்து பொறாமைப்படுகிறார்கள். யெப்தாவின்மீது கோபப்படுகிறார்கள்.

யெப்தா எப்பிராயீம் மனுஷருக்கு மென்மையான பிரதியுத்தரம் சொல்லுகிறார். சமாதானமான வார்த்தைகளைப் பேசுகிறார். ஆனால் எப்பிராயீம் மனுஷருடைய கோபம் குறையவில்லை. அவர்கள் ஆறுதலடையவில்லை. எப்பிராயீம் மனுஷர் யெப்தாவையும், அவரையும் அக்கினியிலே சுட்டுப்போட ஆயத்தமாயிருக்கிறார்கள். யெப்தா அவர்களிடமிருந்து தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும். அவர்களோடு சமாதான வார்த்தைகளைப் பேசுவதினால் இனிமேல் பிரயோஜனமில்லை என்று யெப்தா தீர்மானித்துவிடுகிறார்.

யெப்தா கீலேயாத் மனுஷரையெல்லாம் கூட்டி, எப்பிராயீமோடு யுத்தம்பண்ணுகிறார்; "எப்பிராயீமுக்கும் மனாசேக்கும் நடுவே குடியிருக்கிற கீலேயாத்தியரான நீங்கள் எப்பிராயீமைவிட்டு ஓடிப்போனவர்கள்" என்று எப்பிராயீமர் சொன்னபடியினால், கீலேயாத் மனுஷர் அவர்களை முறிய அடிக்கிறார்கள் (நியா 12:4).

எப்பிராயீம் மனுஷர் யெப்தாவோடு தனிப்பட்ட முறையில் விவாதம்பண்ணுவதோடு, கீலேயாத்தின் மனுஷர் எல்லோரையும் அவமானப்படுத்துகிறார்கள். அவர்களுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். "கீலேயாத்தியரான நீங்கள் எப்பிராயீமை விட்டு ஓடிப்போனவர்கள்" என்று சொல்லுகிறார்கள். இதனால் கீலேயாத்தின் மனுஷருக்கு எப்பிராயீமர் மேல் கோபம் வருகிறது. கீலேயாத் மனுஷர் எப்பிராயீமரை யுத்தத்திலே முறியடிக்கிறார்கள். தேவையில்லாத பேச்சுக்கள் கோபத்தைக் கூட்டும். எப்பிராயீம் மனுஷருடைய பேச்சு இதற்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது.

கீலேயாத்தின் மனுஷர் எப்பிராயீமரை பழிவாங்கவேண்டுமென்று துடிக்கிறார்கள். கீலேயாத்தியர் யுத்தக்களத்திலே எப்பிராயீமரை முறியடிக்கிறார்கள். ஆனாலும் கீலேயாத்தியரின் மனது அமைதியடையவில்லை. எப்பிராயீமரை முற்றிலுமாய் சங்காரம்பண்ணவேண்டுமென்று கீலேயாத்தியர் தீர்மானமாயிருக்கிறார்கள். எப்பிராயீம் மனுஷர் கீலேயாத்தியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாமல், தங்கள் தேசத்திற்கு தப்பி ஓடிப்போகிறார்கள். அவர்கள் யோர்தான் நதியைக் கடந்து தங்கள் தேசத்திற்குப்போகவேண்டும்.

எப்பிராயீம் மனுஷர் யோர்தான் நதிக்கு வருவதற்கு முன்பாகவே, கீலேயாத்தியர் யோர்தானின் துறைகளைப் பிடிக்கிறார்கள். யோர்தானைப்பற்றி எப்பிராயீம் மனுஷருக்கு தெரிவதைவிட, கீலேயாத்தியருக்கு நன்றாய்த் தெரியும். ஆகையினால் எப்பிராயீமர் யோர்தானுக்கு வருவதற்கு முன்பாகவே, கீலேயாத்தியர் யோர்தானுக்கு முந்தி வந்துவிடுகிறார்கள்.

எப்பிராயீமரும் கீலேயாத்தியரும் உருவத்தில் ஒன்றுபோலிருப்பார்கள். அவர்களுடைய முகசாயலை வைத்து, யார் எப்பிராயீமர் என்றும், யார் கீலேயாத்தியர் என்றும் வித்தியாசம் காணமுடியாது. இஸ்ரவேலர் எல்லோருமே ஒரே பாஷையைப் பேசுகிறார்கள். அவர்கள் எல்லோரும் எபிரெய பாஷையைப் பேசினாலும், ஒவ்வொரு கோத்திரத்தாரின் பேச்சிலும் வித்தியாசம் தெரியும்.

எப்பிராயீமரால் "ஷ" என்னும் எழுத்தை உச்சரிக்க முடியாது. அவர்கள் "ஷ" என்று சொல்லுவதற்கு பதிலாக, "ச" என்று சொல்லுவார்கள். இந்த இரகசியம் கீலேயாத்தியாருக்கு தெரிந்திருக்கிறது. எப்பிராயீமர் யுத்தத்திலே தப்பித்து, தங்கள் தேசத்திற்கு ஓடிப்போவதற்காக யோர்தானின் துறைக்கு வருகிறார்கள். அங்கே கீலேயாத்தியர் அவர்களுக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள்.

எப்பிராயீமரிலே தப்பினவர்களில் யாராவது வந்து: "நான் அக்கரைக்குப் போகட்டும்" என்று சொல்லும்போது, கீலேயாத் மனுஷர்: "நீ எப்பிராயீமனா" என்று அவனைக் கேட்பார்கள்; அவன் "அல்ல" என்று மறுப்பான். உடனே கீலேயாத்தியர் அவனிடம், "நீ ஷிபோலேத் என்று சொல்" என்பார்கள்; அப்பொழுது அவன் அப்படி உச்சரிக்கக்கூடாமல், "சிபோலேத்" என்பான் (நியா 12:5,6).

"ஷிபோலேத்" என்னும் வார்த்தைக்கு "ஆறு" அல்லது "ஓடை" என்று பொருள். அன்றைய தினத்திலே "ஷிபோலேத்" என்று சொல்லாமல் "சிபோலேத்" என்று சொன்ன எப்பிராயீம் மனுஷரை கீலேயாத்தியர் பிடித்துக்கொள்கிறார்கள். அவர்களை யோர்தான் துறையிலே வெட்டிப்போடுகிறார்கள். இந்தப் பிரகாரமாக, அந்தக் காலத்திலே, கீலேயாத்தியர், எப்பிராயீமரில், 42,000 பேரை வெட்டிப்போடுகிறார்கள்.

எப்பிராயீம் மனுஷர், வார்த்தையின் முதல் எழுத்தை, "ஷ" என்று உச்சரிக்காமல், "ச" என்று உச்சரிப்பதற்கு ஒருசில காரணங்கள் இருக்கலாம். இது எபிரெய பாஷையின் கிளை மொழியாகயிருக்கலாம். இஸ்ரவேல் தேசத்திலிருக்கிறவர்கள் எல்லோரும், எபிரெய பாஷையைப் பேசினாலும், அவர்களுடைய பேச்சிலே வித்தியாசம் இருக்கிறது. பேதுருவின் பேச்சிலிருந்து, அவர் கலிலேயா மாகாணத்தைச் சேர்ந்தவர் என்பதை கண்டுகொள்ள முடிந்தது.

எப்பிராயீம் மனுஷர், சிறுபிள்ளையாகயிருந்த காலத்திலிருந்தே, வார்த்தையின் முதல் எழுத்தை "ஷ" என்று உச்சரியாமல், "ச" என்று உச்சரித்து, தங்களை பழக்கப்படுத்தியிருக்கலாம். "ஷ" என்று உச்சரிப்பதைவிட, "ச" என்று உச்சரிப்பது எளிது. எப்பிராயீம் மனுஷரால் "ஷிபோலேத்" என்று உச்சரிக்க முடியவில்லையா அல்லது, அவர்கள் "ஷிபோலேத்" என்று உச்சரியாமல், "சிபோலேத்" என்று தங்கள் வழக்கத்தின்படி, உச்சரித்தார்களா என்பது தெரியவில்லை. "ஷிபோலேத்" என்று உச்சரிக்கக்கூடாமல், "சிலோலேத்" என்று உச்சரித்தவர்களை யெல்லாம், கீலேயாத்தியர் யோர்தான் துறையிலே வெட்டிப்போடுகிறார்கள்.

எப்பிராயீமர் ஆணவம் மிகுந்தவர்கள். தங்கள் இருதயத்தில் பெருமையுள்ளவர்கள். அவர்களுடைய பாவங்களினிமித்தமாய், கர்த்தர் அவர்களுக்கு நீதியான தண்டனையைக் கொடுக்கிறார். எப்பிராயீமர் தங்கள் கோத்திரத்தைக் குறித்து பெருமைப்படுகிறார்கள். இவர்கள் மற்ற கோத்திரத்தாரை மதிப்பதில்லை. பெருமையோடிருந்த எப்பிராயீமர், இப்போது தாழ்த்தப்படுகிறார்கள். வெட்கப்படுத்தப்படுகிறார்கள். தங்களுடைய தேசத்திலேயே எப்பிராயீமருக்கு அழிவு உண்டாயிற்று.

கீலேயாத் மனுஷர், எப்பிராயீமரைப் பார்த்து, "நீ எப்பிராயீமனா" என்று கேட்கிறார்கள் (நியா 12:5). எப்பிராயீமரோ தங்களுடைய கோத்திரத்தைச் சொல்லுவதற்குகூட பயப்படுகிறார்கள். தாங்கள் எப்பிராயீமராயிருந்தாலும், தங்களைப்பற்றிச் சொல்லும்போது, தாங்கள் எப்பிராயீமரல்ல என்று தங்கள் கோத்திரத்தை மறுதலித்துவிடுகிறார்கள். எப்பிராயீம் கோத்திரத்தார், இஸ்ரவேலின் வேறு ஏதாவது ஒரு கோத்திரத்தாராயிருக்க விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுடைய பாஷையும், உச்சரிப்பும், அவர்களை எப்பிராயீமர் என்று அடையாளம் காண்பிக்கிறது.

எப்பிராயீம் புத்திரர் யோர்தானைத் தாண்டி யெப்தாவின் ஊருக்கே போனார்கள். அவரையும், அவருடைய வீட்டையும் அக்கினியால் சுட்டெரிக்கவேண்டுமென்று ஆரவாரம்பண்ணினார்கள். ஆனால் இப்போதோ அவர்கள், தங்கள் ஜீவனுக்கு பயந்து, யாருக்கும் தெரியாமல், யோர்தானைத் தாண்டி, தங்கள் தேசத்திற்கு தப்பி ஓட முயற்சிபண்ணுகிறார்கள். அவர்கள் தங்கள் வீடுகளுக்கு தப்பித்து ஓடினபோது, கீலேயாத் மனுஷர், அவர்களைப் பிடித்து, யோர்தான் துறையிலே வெட்டிப்போடுகிறார்கள். யெப்தாவை அழிக்க நினைத்தவர்கள், இப்போது அழிந்துபோகிறார்கள்.

எப்பிராயீம் மனுஷர் கீலேயாத்தின் மனுஷரை ஏளனமாய்ப் பேசினார்கள். கீலேயாத்தியர் யோர்தானுக்கு அப்புறத்திலே குடியிருந்ததினால், அவர்களை "எப்பிராயீமை விட்டு ஓடிப்போனவர்கள்" என்று தூஷணமாய்ச் சொன்னார்கள். ஆனால் இப்போதோ எப்பிராயீம் மனுஷர், "ஷிபோலேத்" என்று உச்சரிக்க முடியாமல், பட்டயத்தினால் வெட்டுண்டு விழுகிறார்கள். தங்கள் பாஷையின் உச்சரிப்பைக் குறித்து எப்பிராயீமர் பெருமைப்பட்டார்கள். அந்த உச்சரிப்பே அவர்களுடைய ஜீவனுக்கு ஆபத்தாயிற்று.

எப்பிராயீம் மனுஷர் கீலேயாத்தியரை அவமானப்படுத்தனார்கள். அவர்களுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொன்னார்கள். கீலேயாத்தியர் எப்பிராயீமை விட்டு ஓடிப்போன கோழைகள் என்று அவர்களை ஏளனம் பண்ணினார்கள். ஆனால் இப்போதோ எப்பிராயீமர், கீலேயாத்தியருக்கு விரோதமாக யுத்தம்பண்ண முடியாமல், கோழைகளாகயிருக்கிறார்கள். தங்கள் ஜீவனுக்குப் பயந்து தப்பித்து ஓடுகிறார்கள்.

மற்றவர்கள்மீது அநீதியாக குற்றம் சுமத்தினால், நம்முடைய தூஷண வார்த்தைகளே நம்மை நியாயந்தீர்க்கும். கர்த்தர் நம்மை நியாயந்தீர்ப்பார். நிந்தையின் கல்லை மற்றவர்கள்மீது அநியாயமாக எரிந்தால், அந்தக் கல் நம்மீது திரும்பி வரும். மற்றவர்களை அநியாயமாக அழிக்க நினைக்கிறவர்கள் அழிந்துபோவார்கள்.

யெப்தா இஸ்ரவேலை ஆறு வருஷம் நியாயம் விசாரிக்கிறார்; பின்பு கீலேயாத்தியனான யெப்தா மரித்து, கீலேயாத்திலுள்ள ஒரு பட்டணத்தில் அடக்கம் பண்ணப்படுகிறார் (நியா 12:7). யெப்தாவின் குமாரத்தி மரித்துப்போனதினால், அவருடைய இருதயம் வேதனையினாலும், துக்கத்தினாலும் உடைந்துபோயிருக்கவேண்டும். இதன் நிமித்தமாக அவர் நீண்டகாலம் ஜீவிக்காமல், சீக்கிரத்திலே மரித்துப்போகிறார்.

இப்சான்
நியா 12:8-10

நியா 12:8. அவனுக்குப்பின்பு பெத்லெகேம் ஊரானாகிய இப்சான் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

நியா 12:9. அவனுக்கு முப்பது குமாரரும் முப்பது குமாரத்திகளும் இருந்தார்கள்; முப்பது குமாரத்திகளையும் புறத்திலே விவாகம்பண்ணிக்கொடுத்து, தன் குமாரருக்கு முப்பது பெண்களைப் புறத்திலே கொண்டான்; அவன் இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரித்தான்.

நியா 12:10. பின்பு இப்சான் மரித்து, பெத்லெகேமிலே அடக்கம்பண்ணப்பட்டான்.

யெப்தாவுக்கு பின்பு, மேலும் மூன்று நியாயாதிபதிகள் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரிக்கிறார்கள். இப்சான், ஏலோம், அப்தோன் ஆகியோர் யெப்தாவுக்கு பின்பு இஸ்ரவேலை நியாயம் விசாரித்தவர்கள். இப்சான் ஏழுவருஷங்களும், ஏலோம் பத்து வருஷங்களும், அப்தோன் எட்டு வருஷங்களும் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்தார்கள்.

இப்சான் பெத்லகேம் ஊரைச் சேர்ந்தவர். செபுலோன் கோத்திரத்தில் ஒரு பெத்லகேம் உள்ளது. பரிசுத்த வேதாகமத்தில், இந்த பெத்லகேமைப்பற்றி, ஒரு தரம் மாத்திரமே சொல்லப்பட்டிருக்கிறது. "காத்தாத், நகலால், சிம்ரோன், இதாலா, பெத்லகேம் முதலான பன்னிரண்டு பட்டணங்களும் அவைகளின் கிராமங்களும்" *(யோசு 19:15).*

இப்சான் தாவீதின் நகரமாகிய பெத்லகேம் ஊரைச் சேர்ந்தவர். இது யூதா கோத்திரத்திலுள்ளது. இப்சான் இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரிக்கிறார். இவருக்கு முப்பது குமாரரும், முப்பது குமாரத்திகளும் இருக்கிறார்கள். இப்சான் தன் பிள்ளைகள் எல்லோருக்கும் திருமணம் செய்து வைக்கிறார். ஆகையினால் இவர் அநேக வருஷம் உயிரோடிருந்திருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள்.

இப்சானுக்கு மொத்தம் அறுபது பிள்ளைகள் இருக்கிறார்கள். அவர்களில் முப்பது பேர் குமாரர். மற்ற முப்பது பேர் குமாரத்திகள். குமாரரும் குமாரத்திகளும் சமஎண்ணிக்கையிலிருக்கிறார்கள். ஒரே குடும்பத்தில் இதுபோல, சமஎண்ணிக்கையில், இத்தனை குமாரரும், இத்தனை குமாரத்திகளும் இருப்பது அபூர்வம். இப்சான் கர்த்தருடைய விசேஷித்த கிருபைகளினால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறார்.

கர்த்தர் ஆதியிலே மனுஷரை ஆணும் பெண்ணுமாக சிருஷ்டித்தார். ஒவ்வொரு மனுஷனுக்கும் ஏற்ற துணையை உண்டாக்கும் வண்ணமாக, கர்த்தர் புருஷரையும் ஸ்திரீகளையும், கலந்து சிருஷ்டித்திருக்கிறார். அவர்களுடைய எண்ணிக்கையும் ஓரளவு சமமாயிருக்கிறது.

இப்சான் தன்னுடைய முப்பது குமாரத்திகளையும் புறத்திலே விவாகம்பண்ணிக்கொடுக்கிறார். அதுபோலவே தன் குமாரருக்கு முப்பது பெண்களை புறத்திலே கொள்கிறார். யூதர்களுடைய பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், ஒவ்வொரு தகப்பனாரும், தன்னுடைய குமாரருக்கு மூன்று கடமைகளை செய்ய வேண்டும். அவையாவன: 1. தன் குமாரருக்கு நியாயப்பிரமாணத்தை வாசிக்க கற்றுக்கொடுக்கவேண்டும். 2. ஒரு தொழிலைக் கொடுக்கவேண்டும். 3. தன் குமாரருக்கு ஒரு பெண்ணைப் பார்த்து விவாகம்பண்ணி வைக்கவேண்டும்.

இப்சான் இஸ்ரவேலை ஏழு வருஷம் நியாயம் விசாரிக்கிறார். பின்பு இப்சான் மரித்து, பெத்லெகேமிலே அடக்கம்பண்ணப்படுகிறார் *(நியா 12:9,10)*

ஏலோன்
நியா 12:11,12

நியா 12:11. அவனுக்குப்பின்பு செபுலோனியனாகிய ஏலோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்; அவன் பத்து வருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

நியா 12:12. பின்பு செபுலோனியனாகிய ஏலோன் மரித்து, செபுலோன் தேசமான ஆயலோன் ஊரில் அடக்கம்பண்ணப்பட்டான்.

ஏலோன் செபுலோன் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர்களுடைய சுதந்திரம் கானான் தேசத்தின் வடக்கு பகுதியிலிருக்கிறது. இவர் இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பொதுவான வழக்குகளை விசாரிக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, விக்கிரகாராதனையை நீக்கிவிட்டு, ஆவிக்குரிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துகிறார். தேசத்திலே நீதியும் நியாயமும் வாசம்பண்ணுவதற்கு ஆதரவாயிருக்கிறார்.

ஏலோன் பத்து வருஷம் இஸ்ரவேலை நியாயம் விசாரிக்கிறார். பின்பு செபுலோனியனாகிய ஏலோன் மரித்து, செபுலோன் தேசமான ஆயலோன் ஊரில் அடக்கம்பண்ணப்படுகிறார் (நியா 12:12).

பெலிஸ்தர்கள் இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷங்களாக ஒடுக்கினார்கள். "இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார்" (நியா 13:1)

ஏலோன் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்த காலத்தில், பெலிஸ்தியர்கள் இஸ்ரவேலரை ஒடுக்க ஆரம்பித்தார்கள் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். இக்காலத்தில் சிம்சோன் பிறந்தார்.

அப்தோன்
நியா 12:13-15

நியா 12:13. அவனுக்குப்பின்பு இல்லேலின் குமாரனாகிய பிரத்தோனியனான அப்தோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான்.

நியா 12:14. அவனுக்கு நாற்பது குமாரரும் முப்பது பேரப்பிள்ளைகளும் இருந்தார்கள்; அவர்கள் எழுபது கழுதைகளின் மேல் ஏறுவார்கள்; அவன் இஸ்ரவேலை எட்டு வருஷம் நியாயம் விசாரித்தான்.

நியா 12:15. பின்பு பிரத்தோனியனான இல்லேலின் குமாரனாகிய அப்தோன் மரித்து, எப்பிராயீம் தேசத்தில் அமலேக்கியர் மலையிலிருக்கிற பிரத்தோனிலே அடக்கம் பண்ணப்பட்டான்.

அப்தோன் எப்பிராயீம் கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் பிரத்தோன் ஊரைச் சேர்ந்தவர். ஆகையினால் இவர் பிரத்தோனியனான அப்தோன் என்று அழைக்கப்படுகிறார். இவர் இல்லேலின் குமாரன். யெப்தாவின் காலத்தில், எப்பிராயீம் கோத்திரத்தார் தங்களுடைய மேன்மையையெல்லாம் இழந்துவிட்டார்கள். அவர்களில் அநேகர் வெட்டுண்டு செத்துப்போனார்கள். அப்தோனின் காலத்தில், எப்பிராயீமர், தாங்கள் இழந்த மேன்மையை, திரும்பவும் பெற்றுக்கொள்கிறார்கள்.

எப்தோனுக்கு நாற்பது குமாரரும், முப்பது பேரப்பிள்ளைகளும் இருக்கிறார்கள். இவர்கள் வளர்ந்து பெரியவர்களாவதை எப்தோன் தன் கண்களால் பார்க்கிறார். அவர்கள் எழுபது கழுதைகளின்மேல் ஏறுவார்கள். பெற்றோர் தங்கள் பிள்ளைகளையும், பிள்ளைகளின் பிள்ளைகளையும் பார்ப்பது பெரிய பாக்கியம்.

எப்தோனின் குடும்பத்தில் ஆசீர்வாதம் இருந்தது. ஆனால் இஸ்ரவேல் தேசத்திலே அமைதி இல்லை. எப்தோனின் காலத்தில் பெலிஸ்தர்கள் இஸ்ரவேலை ஒடுக்க ஆரம்பித்தார்கள்.

அப்தோன் இஸ்ரவேலை எட்டு வருஷம் நியாயம் விசாரிக்கிறார். பின்பு பிரத்தோனியனான இல்லேலின் குமாரனாகிய அப்தோன் மரித்து, எப்பிராயீம் தேசத்தில் அமலேக்கியர் மலையிலிருக்கிற பிரத்தோனிலே அடக்கம் பண்ணப்படுகிறார் (நியா 12:15).

நியாயாதிபதிகளின் காலத்தில் பிரதான ஆசாரியரைப்பற்றியோ அல்லது லேவி கோத்திரத்தாரைப்பற்றியோ அல்லது ஆசாரியரைப்பற்றியோ ஒன்றும் சொல்லப்படவில்லை. பினெகாசின் காலத்திலிருந்து, ஏலியின் காலம் வரையிலுமுள்ள சுமார் 250 வருஷங்களாக, பிரதான ஆசாரியருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. கர்த்தரிடத்தில் விசாரித்து கேட்பதற்கு மாத்திரம், இஸ்ரவேல் புத்திரர் ஆசாரியரை பயன்படுத்தினார்கள்.

"ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரின் மகன் பினெகாஸ் அந்நாட்களில் அவருடைய சந்நிதியில் நின்றான்; எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே பின்னும் யுத்தம்பண்ணப் புறப்படலாமா புறப்படலாகாதா என்று அவர்கள் விசாரித்தார்கள்; அப்பொழுது கர்த்தர்: போங்கள்; நாளைக்கு அவர்களை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்" (நியா 20:28).

நியாயாதிபதிகளின் காலத்தில், பிரதான ஆசாரியருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படாவிட்டாலும், அவர்களுடைய பெயர்கள் வம்ச அட்டவணையில் எழுதப்பட்டிருக்கிறது.

"எலெயாசார் பினெகாசைப் பெற்றான்; பினெகாஸ் அபிசுவாவைப் பெற்றான். அபிசுவா புக்கியைப் பெற்றான்; புக்கி ஊசியைப் பெற்றான். ஊசி செராகியாவைப் பெற்றான்; செராகியா மெராயோதைப் பெற்றான். மெராயோத் அமரியாவைப் பெற்றான்; அமரியா அகிதூபைப் பெற்றான்" (1நாளா 6:4-7).

"இவன் அமரியாவின் குமாரன், இவன் அசரியாவின் குமாரன், இவன் மெராயோதின் குமாரன், இவன் சேராகியாவின் குமாரன், இவன் ஊசியின் குமாரன், இவன் புக்கியின் குமாரன், இவன் அபிசுவாவின் குமாரன், இவன் பினெகாசின் குமாரன், இவன் எலெயாசாரின் குமாரன், இவன் பிரதான ஆசாரியனான ஆரோனின் குமாரன்" (எஸ்றா 7:3-5).

மோசேயின் பிரமாணத்தில் பிரதான ஆசாரியரைப்பற்றியும், அவர்களுடைய ஊழியங்களை பற்றியும் சொல்லப்பட்டிருக்கிறது. பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரதான ஆசாரியர், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் ஆசாரிய ஊழியத்திற்கு முன்னடையாளமாயிருக்கிறார்கள். கிறிஸ்துவானவரே நமக்கு மகிமையான பிரதான ஆசாரியராயிருக்கிறார். நம்முடைய மகாபிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவின் மகிமைக்கு முன்பாக, பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரதான ஆசாரியரின் மகிமை மங்கிப்போயிற்று.

"இப்படியாக, மகிமைப்பட்டிருந்த அந்த ஊழியம் இந்த ஊழியத்திற்கு உண்டாயிருக்கிற சிறந்த மகிமைக்குமுன்பாக மகிமைப்பட்டதல்ல" (2கொரி 3:10).

13 அதிகாரம்

இஸ்ரவேலின் கடைசி நியாயாதிபதியாகிய சிம்சோனைப்பற்றிய சரித்திரம், நியாயாதிபதிகளின் புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இவர் ஏலிக்கு முன்பு இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்தவர்.

சிம்சோனுக்கும், இவருக்கு முன்பு இஸ்ரவேலை நியாயம் விசாரித்த மற்ற நியாயாதிபதிகளுக்கும் பல வித்தியாசங்கள் உள்ளது. சிம்சோன் இஸ்ரவேல் புத்திரரின் சேனைக்கு சேனாபதியாயில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு தலைவராகவும் இல்லை. சிம்சோன் நியாயாசனத்தில் அமர்ந்து இஸ்ரவேல் புத்திரரின் வழக்குகளை விசாரிக்கவுமில்லை. அவர் இஸ்ரவேல் புத்திரரை ஒரு சேனையாகக் கூட்டிச்சேர்த்து, யுத்தக்களத்திலே, சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவும் போகவில்லை.

சிம்சோன் தனிமனிதனாகயிருந்து, தன்னுடைய தேசத்திற்கு சேவை செய்கிறார். இஸ்ரவேலின் சத்துருக்களுக்கும், இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறவர்களுக்கும் விரோதமாக சிம்சோன் துணிந்து எதிர்த்து நிற்கிறார்.

இஸ்ரவேல் புத்திரரில், விசேஷமானவர்களை கர்த்தர் தெரிந்தெடுத்து, அவர்களை நியாயாதிபதிகளாக உயர்த்துவார். அவர்கள் ஏற்கெனவே வளர்ந்து பெரியவர்களாகயிருப்பார்கள். கர்த்தர் சிம்சோனை, அவருடைய தாயின் கர்ப்பத்திலேயே தெரிந்தெடுக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குகிறார்கள். இந்த சூழ்நிலையில், பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேல் புத்திரரை நீங்கலாக்கி இரட்சிக்கும்படியாக, கர்த்தர் சிம்சோனை எழுப்புகிறார் (நியா 13:1).

கர்த்தருடைய தூதனானவர், சிம்சோனின் தாயாரிடம், சிம்சோனுடைய பிறப்பைப்பற்றி முன்னறிவிக்கிறார் (நியா 13:2-5). அந்த ஸ்திரீ தன் புருஷனிடத்தில், கர்த்தருடைய தூதனானவர் தனக்கு சொன்னதை அறிவிக்கிறாள் (நியா 13:6,7).

கர்த்தருடைய தூதனானவர், சிம்சோனின் தகப்பனாரையும், தாயாரையும் சந்திக்கிறார் (நியா 13:8-14). அவர்கள் இருவரும் கர்த்தருடைய தூதனானவரைக் கனம்பண்ணுகிறார்கள் (நியா 13:15-18). கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போகிறார் (நியா 13:19-23). சிம்சோன் பிறக்கிறார் (நியா 13:24,25).

கர்த்தருடைய தூதனானவர் நியா 13:1-7

நியா 13:1. இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தபடியால், கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்தார்.

நியா 13:2. அப்பொழுது தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானான ஒரு மனுஷன் இருந்தான்; அவன் பேர் மனோவா; அவன் மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருந்தாள்.

நியா 13:3. கர்த்தருடைய தூதனானவர் அந்த ஸ்திரீக்குத் தரிசனமாகி, அவளை நோக்கி: இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனை பெறுவாய்.

நியா 13:4. ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு.

நியா 13:5. நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்; அவன் இஸ்ரவேலைப் பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான் என்றார்.

நியா 13:6. அப்பொழுது அந்த ஸ்திரீ தன் புருஷனிடத்தில் வந்து: தேவனுடைய மனுஷன் ஒருவர் என்னிடத்தில் வந்தார்; அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல மகா பயங்கரமாயிருந்தது; எங்கேயிருந்து வந்தீர் என்று நான் அவரிடத்தில் கேட்கவில்லை; அவர் தம்முடைய நாமத்தை எனக்குச் சொல்லவுமில்லை.

நியா 13:7. அவர் என்னை நோக்கி: இதோ, நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானது ஒன்றும் புசியாமலும் இரு; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள்மட்டும் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான் என்று சொன்னார் என்றாள்.

இஸ்ரவேல் புத்திரர் மறுபடியும் கர்த்தரின் பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறார்கள். இதன் நிமித்தமாக கர்த்தர் அவர்களை நாற்பது வருஷமளவும் பெலிஸ்தர் கையிலே ஒப்புக்கொடுக்கிறார் (நியா 13:1). பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு அண்டை தேசத்திலிருக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருடைய எண்ணிக்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பெலிஸ்தரின் எண்ணிக்கை மிகவும் சொற்பம்

பெலிஸ்தருக்கு ஐந்து பட்டணங்கள் மாத்திரமே இருக்கிறது. ஆனாலும் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்குவதற்கு, கர்த்தர் பெலிஸ்தருக்கு அனுமதி கொடுக்கிறார். கர்த்தர் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தர் கையிலே ஒப்புக்கொடுக்கிறார். பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரைத் தண்டிப்பதற்கு, கர்த்தருடைய கையிலுள்ள கோலாக பயன்படுத்தப்படுகிறார்கள். பெலிஸ்தர் மூர்க்ககுணமுள்ளவர்கள். மற்ற தேசத்தாரை நெருக்கி ஒடுக்குகிறவர்கள்.

பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரை நாற்பது வருஷமளவும் ஒடுக்குகிறார்கள். இதற்கு முன்பு வேறு எந்த அந்நிய தேசத்தாரும், இஸ்ரவேல் புத்திரரை, இத்தனை வருஷகாலமாக ஒடுக்கினதில்லை. சத்துருக்கள் இஸ்ரவேலரை பல வருஷங்களாக நெருக்கி ஒடுக்கினாலும், அவர்களில் யாரும், இஸ்ரவேலரை பெலிஸ்தரைப்போல நெருக்கி ஒடுக்கினதில்லை.

பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கின காலத்தில் சிம்சோன் பிறக்கிறார். கர்த்தருடைய தூதனானவர், சிம்சோனுடைய பிறப்பைப்பற்றி முன்னறிவிக்கிறார்.

தாண் வம்சத்தானாகிய சோரா ஊரானான ஒரு மனுஷன் இருக்கிறார்; அவர் பேர் மனோவா; அவர் மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருக்கிறாள் (நியா 13:2).

தாண் என்னும் பெயருக்கு நியாயாதிபதி அல்லது நியாயத்தீர்ப்பு என்று பொருள். "அப்பொழுது ராகேல்: தேவன் என் வழக்கைத் தீர்த்து, என் சத்தத்தையும் கேட்டு, எனக்கு ஒரு குமாரனைக் கொடுத்தார் என்று சொல்லி, அவனுக்குத் தாண் என்று பேரிட்டாள்" (ஆதி 30:6).

தாண் கோத்திரத்தாரின் சுதந்தரவீதம், பெலிஸ்தருடைய தேசத்திற்கு அருகாமையிலிருக்கிறது. ஆகையினால் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க, கர்த்தர் தாண் கோத்திரத்திலிருந்து ஒருவரை உயர்த்துகிறார். சிம்சோனின் பெற்றோருக்கு நீண்டகாலமாக பிள்ளையில்லை. மனாவாவின் மனைவி பிள்ளைபெறாத மலடியாயிருக்கிறாள்.

பரிசுத்த வேதாகமத்தில் முக்கியமான நபர்கள் பலருடைய தாயாரைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் நீண்டகாலம் பிள்ளைபெறாத மலடியாயிருந்தவர்கள். அவர்கள் கர்த்தருடைய சமுகத்திலே பிள்ளை பாக்கியத்திற்காக, நீண்டகாலம் விசுவாசத்தோடும், நீடிய பொறுமையோடும் காத்திருந்தவர்கள். ஈசாக்கு, யோசேப்பு, சாமுவேல், யோவான்ஸ்நானன் ஆகியோரின் பெற்றோரை இதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்லலாம்.

கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் இவர்களுக்கு வெளிப்படுத்தப்பட்டபோது, இவர்கள் நன்றியுள்ள இருதயத்தோடு அதை ஏற்றுக்கொள்கிறார்கள்.

கர்த்தருடைய தூதனானவர் மனோவாவின் மனைவிக்குத் தரிசனமாகிறார். அவர் அவளை நோக்கி: "இதோ, பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனை பெறுவாய்" என்று சொல்லுகிறார் (நியா 13:3).

கர்த்தருடைய தூதனானவர் ஒரு மனுஷனுடைய ரூபத்தில் தன்னை வெளிப்படுத்துகிறார். ஒருவேளை இவர் தன்னை கர்த்தருடைய மனுஷனைப்போலவோ அல்லது ஒரு தீர்க்கதரிசியைப்போலவோ வெளிப்படுத்தியிருக்கவேண்டும்.

கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்காகவோ அல்லது அவருடைய மனைவிக்காகவோ அவர்களை சந்திக்க வரவில்லை. தாண் கோத்திரத்தாரை விசேஷமாய் ஆசீர்வதிப்பதற்காகவும் அவர் வரவில்லை. கர்த்தருடைய தூதனானவர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்காகவும் வந்திருக்கிறார். இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பதற்காக வந்திருக்கிறார்.

சிம்சோன் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவேண்டும். சிம்சோன் இரட்சராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உலக இரட்சகர். அவர் மனுஷருடைய பாவங்களை நீக்கி, அவர்களை இரட்சிப்பதற்காக, இந்த உலகத்திற்கு வந்தவர். சிம்சோனோ, இஸ்ரவேலரை, பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவேண்டும்.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிறப்பை காபிரியேல் என்னும் தேவதூதர் முன்னறிவித்தார். இங்கே கர்த்தருடைய தூதனானவர் சிம்சோனின் பிறப்பை முன்னறிவிக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவியை நோக்கி, "இதோ, பிள்ளை பெறாத மலடியான நீ, கர்ப்பந்தரிப்பாய்" என்று சொல்லுகிறார். மனோவாவின் மனைவி இப்போது பிள்ளைபெறாத மலடியாயிருக்கிறாள். அவள் நித்திய காலத்திற்கும் பிள்ளைபெறாத மலடியாயிருக்கப்போவதில்லை. தனக்கு பிள்ளையே பிறக்காதோ என்று மனோவாவின் மனைவி இதுவரையிலும் பயத்திலிருந்தாள். தேவனுடைய தூதனானவர் அவளுடைய பயத்தை நீக்குகிறார்.

கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவியிடம், "நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்" என்று சொல்லுகிறார். கர்த்தருடைய தூதனானவர், தான் சொன்ன இந்த வார்த்தையை, மறுபடியும் சொல்லி, இதை உறுதிபண்ணுகிறார். "நீ கர்ப்பந்தரித்து ஒரு குமாரனைப் பெறுவாய்" (நியா 13:5) என்று கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் பேசுவது தெய்வீக வார்த்தை. இந்த வார்த்தை தெய்வீக வல்லமையுள்ளது. சிம்சோன் வாக்குத்தத்தத்தின் பிள்ளையாக பிறக்கப்போகிறார். அந்தப் பிள்ளை எப்படி வளர்க்கப்படவேண்டும் என்றும், கர்த்தருடைய தூதனானவர் சொல்லுகிறார். "அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்" (நியா 13:5) என்று கர்த்தருடைய தூதனானவர் மனோவாவின் மனைவிக்குச் சொல்லுகிறார்.

பிள்ளை பிறந்தது முதல் தேவனுக்கென்று நசரேயனாயிருக்கும்போது, அந்தப்பிள்ளையின் தாயாரும் நசரேய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். "ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும், தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு" (நியா 13:4) என்று கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவிக்குச் சொல்லுகிறார். மனோவாவின் மனைவி தனக்கு நசரேய விரதப்பொருத்தனை பண்ணிக்கொள்ளவேண்டியதில்லை. அவள் நசரேய பொருத்தனைக்கு கட்டுப்பட்டவளல்ல. ஆனால் நசரேய பிரமாணத்திற்கு கட்டுப்பட்டவள்.

சிம்சோன் தன் தாயாருடைய கர்ப்பத்தில் வளரும் காலத்திலும், அதன்பின்பு சிம்சோன் பிறந்து தன்னுடைய தாயாரின் தாய்ப்பாலை பருகி வளரும் காலத்திலும், அவருடைய தாயார் திராட்சரசமும் மதுபானம் குடிக்கக்கூடாது. அவள் தீட்டானது ஒன்றையும் புசிக்கக்கூடாது (நியா 13:4,5).

இஸ்ரவேலின் மற்ற நியாயாதிபதிகள், இஸ்ரவேல் புத்திரரின் ஆவிக்குரிய மறுமலர்ச்சிக்காக ஊழியம் செய்தார்கள். இஸ்ரவேலர் கர்த்தரை விட்டு விலகி பின்மாற்றத்திலே போனபோது, நியாயாதிபதிகள் அவர்களைக் கண்டித்து உணர்த்தி, கர்த்தரிடத்தில் திரும்பவும் அழைத்துக்கொண்டு வந்தார்கள். சிம்சோனோ மற்ற நியாயாதிபதிகளிலிருந்து வித்தியாசமானவராயிருக்கிறார். சிம்சோன் கர்த்தருக்கு பரிசுத்தமானவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

சிம்சோனுடைய ஜீவியத்திலே ஒரு சில தப்பிதங்கள் காணப்பட்டிருக்கிறது. சிம்சோனிடத்தில் சில குறைகள் இருந்தாலும், அவர் கர்த்தருக்கு நசரேயனாகவே இருக்கிறார். சிம்சோன் நசரேய விரதத்தின் பிரமாணங்களை ஒரு சடங்காச்சாரமாக ஆசரிக்கவில்லை. அவர் நசரேய விரதத்திற்கு எடுத்துக்காட்டாயிருக்கிறார். நசரேய விரதமிருக்கிறவர்கள் கர்த்தருக்காக வேறு பிரிக்கப்பட்டவர்கள்.

'கர்த்தர் மோசேயை நோக்கி: நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டியது என்னவென்றால்: புருஷனாகிலும் ஸ்திரீயாகிலும் கர்த்தருக்கென்று விரதம் பண்ணிக் கொண்டவர்களாயிருக்கும்படி நசரேய விரதமாகிய ஒரு விசேஷித்த பொருத்தனையைப் பண்ணினால், அப்படிப்பட்டவன் திராட்சரசத்தையும் மதுபானத்தையும் விலக்கக்கடவன்; அவன் திராட்சரசத்தின் காடியையும் மற்ற மதுபானத்தின் காடியையும், திராட்சரசத்தினால் செய்த எவ்விதமான பானத்தையும் குடியாமலும், திராட்சப்பழங்களையாவது திராட்ச வற்றல்களையாவது புசியாமலும், தான் நசரேயனாயிருக்கும் நாளெல்லாம் திராட்சச்செடி விதைமுதல் தோல் வரையிலுள்ளவைகளினால் செய்யப்பட்ட யாதொன்றையும் புசியாமலும் இருக்கக்கடவன்'' (எண் 6:1-4) என்று சொன்னார்.

சிம்சோன் தேவனுக்கென்று நசரேயனாயிருக்கிறார். அவர் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தொடங்குவார். தேவனுக்கு நசரேயராயிருக்கிற சிம்சோனின் தாயாரும், தன்னைத்தானே வெறுத்து, திராட்சரசமும் மதுபானமும் குடிக்கக்கூடாது. அவள் தீட்டானது ஒன்றும் புசியாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். சிம்சோன் தன்னுடைய வயிற்றிலிருக்கும்போதே, சிம்சோன் கடைப்பிடிக்க வேண்டிய, நசரேய விரதத்தின் பிரமாணங்களை, சிம்சோனின் தாயார் கடைப்பிடிக்கிறாள்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் ஆரோக்கியத்திற்கு கேடு விளைவிக்கும் எல்லாவற்றிற்கும் விலகியிருக்கவேண்டும். சிறுபிள்ளைகளை பெற்றெடுத்திருக்கிற தாய்மார்கள், தங்கள் பிள்ளைகளை வளர்க்கும் காலங்களில், போஜனவிஷயங்களில் மிகுந்த கட்டுப்பாடோடிருக்கவேண்டும். தங்கள் பிள்ளைகளின் சரீர வளர்ச்சிக்கு எது நன்மையாயிருக்குமோ அதை மாத்திரமே அவர்கள் செய்யவேண்டும்.

சிம்சோன் தேவனுக்கு நசரேயனாயிருப்பதினால், சிம்சோனின் தாயார் திராட்சரசமும் மதுபானமும் குடிக்கவில்லை என்றோ அல்லது தீட்டானது ஒன்றையும் புசிக்கவில்லை என்றோ சொல்ல முடியாது. கர்த்தர் சிம்சோனை விசேஷித்த ஊழியத்திற்கு தெரிந்தெடுத்திருக்கிறார். சிம்சோன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவேண்டும். இதற்காக சிம்சோனிடத்தில் விசேஷித்த பலமும், பராக்கிரமமும் காணப்படவேண்டும். அதன் நிமித்தமாகவும், சிம்சோனின் தாயார் திராட்சரசமும் மதுபானமும் குடிக்கவில்லை. தீட்டானது ஒன்றையும் புசிக்கவில்லை. தன்னுடைய போஜன விஷயங்களின் மூலமாக, சிம்சோனின் தாயார், சிம்சோனின் பலத்திற்கும், பராக்கிரமத்திற்கும் ஆதரவாயிருக்கிறாள்.

கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவியிடம், சிம்சோனின் ஊழியத்தைப்பற்றியும் சொல்லுகிறார். சிம்சோன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தொடங்குவார். இதுவே சிம்சோனுக்கு கொடுக்கப்படும் ஊழியம். சிம்சோன் மூலமாக இரட்சிப்பு ஆரம்பமாகும். பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரை நீண்டகாலத்திற்கு நெருக்கி ஒடுக்குவார்கள் என்பது இந்த வாக்கியத்தின் பொருள். சிம்சோன் இஸ்ரவேலை இரட்சிக்கத் தொடங்குவார். இஸ்ரவேல் புத்திரருக்கு, பெலிஸ்தர் மூலமாய், நெருக்கமும் ஒடுக்கமும் தொடர்ந்து வந்துகொண்டிருக்கும்.

சிம்சோன் இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். சிம்சோன் தேவனுக்கு நசரேயனாயிருக்கிறார். அவருடைய தாயின் கர்ப்பத்தில் உற்பத்தியான காலம் முதல் அவர் நசரேயனாயிருக்கிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ஒரு நசரேயரல்ல. ஆனாலும் அவர் எல்லா பாவங்களுக்கும் விலகி ஜீவித்தார். கிறிஸ்துவானவர் கன்னி மரியாளின் வயிற்றிலே உற்பத்தியான காலம் முதல், அவர் பிதாவாகிய தேவனுடைய மகிமைக்கு பிரதிஷ்டைபண்ணப்பட்டிருந்தார். இயேசுகிறிஸ்து நசரேயராகயில்லாவிட்டாலும், ஒரு நசரேயரிடத்தில் காணப்படவேண்டிய எல்லா நற்குணங்களும் இயேசுகிறிஸ்துவிடம் உள்ளது.

சிம்சோன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கத் தொடங்குகிறார். இரட்சகராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய ஜனங்களை அவர்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கிறார். சிம்சோன் இஸ்ரவேலை இரட்சிக்கத் தொடங்குகிறார். சிம்சோனுக்கு பின்பு தாவீது எழும்புகிறார். தாவீது பெலிஸ்தரை முற்றிலுமாய் அழித்துப்போடுகிறார். சிம்சோனால் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி முற்றிலுமாய் இரட்சிக்க முடியவில்லை.

கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிம்சோனுக்கும், தாவீதுக்கும் அடையாளமாயிருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வருகிற இரட்சிப்பு பூரணமாயிருக்கும். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நம்முடைய விசுவாசத்தை ஆரம்பிக்கிறவராகவும், முடிக்கிறவராகவும் இருக்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர் தனக்கு சொல்லுகிற எல்லா வார்த்தைகளையும் மனோவாவின் மனைவி, பயத்தோடும், பக்தியோடும், மிகுந்த கவனத்தோடும் கேட்கிறாள். அதன் பின்பு அவள், தன் புருஷனாகிய மனோவாவினிடத்தில் வந்து, "தேவனுடைய மனுஷன் ஒருவர் என்னிடத்தில் வந்தார்; அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல மகா பயங்கரமாயிருந்தது; எங்கேயிருந்து வந்தீர் என்று நான் அவரிடத்தில் கேட்கவில்லை; அவர் தம்முடைய நாமத்தை எனக்குச் சொல்லவுமில்லை" (நியா 13:6) என்று சொல்லுகிறாள்.

கர்த்தருடைய தூதனானவர் தேவனுடைய மனுஷனைப்போல இருக்கிறார். மனோவாவின் மனைவியினால், தேவதூதனானவருடைய சாயலை விவரிக்க முடிகிறது. அவருடைய சாயல் மிகவும் பயங்கரமாயிருக்கிறது என்று அவள் சொல்லுகிறாள். கர்த்தருடைய தூதனானவர் பார்ப்பதற்கு பயங்கரமாயிருக்கிறார். அவருடைய கம்பீரத்தினாலும், மகிமையினாலும், மாட்சிமையினாலும், அவரைப் பார்ப்பதற்கு பயங்கரமாயிருக்கிறது.

கர்த்தருடைய தூதனானவரை மனோவாவின் மனைவி தேவனுடைய மனுஷன் என்று சொல்லுகிறாள். அவருடைய சாயலைப்பற்றிச் சொல்லும்போது, அவருடைய சாயல் தேவனுடைய தூதரின் சாயலைப்போல இருக்கிறது என்று சொல்லுகிறாள். தன்னிடத்தில் பேசின தேவனுடைய மனுஷன், இஸ்ரவேலின் எந்தக் கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்றோ, அவர் எந்தப் பட்டணத்தைச் சேர்ந்தவர் என்றோ, அவருடைய பெயர் என்ன என்றோ மனோவாவின் மனைவிக்கு தெரியவில்லை.

தன்னோடு பேசின தேவனுடைய மனுஷன், கர்த்தருடைய ஊழியக்காரர் என்று அவள் விசுவாசிக்கிறாள். அவருடைய தோற்றமும், அவருடைய செய்தியும், அவர் தேவனுடைய தூதர் என்பதை உறுதிப்படுத்துகிறது. ஆகையினால் மனோவாவின் மனைவி கர்த்தருடைய தூதனானவரிடத்தில், "எங்கே இருந்து வந்தீர்" என்று கேட்கவில்லை. அவரும் தம்முடைய நாமத்தை அவளுக்கு சொல்லவில்லை.

கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவியிடம், "இதோ, நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; ஆதலால் நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானது ஒன்றும் புசியாமலும் இரு; அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள்மட்டும் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்" (நியா 13:7) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் ஒரு வாக்குத்தத்தத்தையும் சொல்லுகிறார். அந்த வாக்குத்தத்தம் நிறைவேற அந்த ஸ்திரீ என்ன செய்யவேண்டும் என்றும் சொல்லுகிறார். மனோவாவும், அவருடைய மனைவியும், தங்களுடைய ஆவிக்குரிய அனுபவங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்கிறார்கள். கர்த்தர் நம்மை பரிசுத்தமாயிருப்பதற்கு அழைத்திருக்கிறார். ஒரு குடும்பத்திலுள்ள கணவனும் மனைவியும், அவர்கள் பரிசுத்தமாயிருப்பதற்கு, ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கவேண்டும். தங்களுடைய ஆவிக்குரிய அனுபவங்களை பகிர்ந்துகொள்ளவேண்டும். கர்த்தருடைய தூதனானவர் தனக்குச் சொன்னதை, மனோவாவின் மனைவி, தன் கணவருக்கு அப்படியே சொல்லுகிறாள்.

மனோவா
நியா 13:8-14

நியா 13:8. அப்பொழுது மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணி: ஆ, என் ஆண்டவரே, நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒருவிசை எங்களிடத்தில் வந்து, பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்யவேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக என்று வேண்டிக்கொண்டான்.

நியா 13:9. தேவன் மனோவாவின் சத்தத்துக்குச் செவிகொடுத்தார்; அந்த ஸ்திரீ வயல்வெளியில் இருக்கும்போது தேவனுடைய தூதனானவர் திரும்பவும் அவளிடத்தில் வந்தார்; அப்பொழுது அவள் புருஷனாகிய மனோவா அவளோடே இருக்கவில்லை.

நியா 13:10. ஆகையால் அந்த ஸ்திரீ சீக்கிரமாய் ஓடி, இதோ, அன்று என்னிடத்தில் வந்தவர் எனக்குத் தரிசனமானார் என்று தன் புருஷனுக்கு அறிவித்தாள்.

நியா 13:11. அப்பொழுது மனோவா எழுந்திருந்து, தன் மனைவியின் பின்னாலே போய், அவரிடத்துக்கு வந்து: இந்த ஸ்திரீயோடே பேசினவர் நீர்தானா என்று அவரிடத்தில் கேட்டான்; அவர் நான்தான் என்றார்.

நியா 13:12. அப்பொழுது மனோவா: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும் என்று கேட்டான்.

நியா 13:13. கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: நான் ஸ்திரீயோடே சொன்ன யாவற்றிற்கும், அவள் எச்சரிக்கையாயிருந்து,

நியா 13:14. திராட்சச்செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும், நான் அவளுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ளக்கடவள் என்றார்.

கர்த்தருடைய தூதனானவர் இரண்டாம் முறையாக மனோவாவையும், அவருடைய மனைவியையும் சந்திக்கிறார். அவர் முதல் தரம் வந்தபோது, மனோவாவுக்கு தரிசனம் கொடுக்கவில்லை. இப்போதோ அவர்கள் இரண்டு பேருக்கும் தரிசனம் கொடுக்கிறார்.

மனோவாவின் மனைவி, தன் புருஷனிடத்தில், கர்த்தருடைய தூதனானவர் தனக்கு தரிசனமானதையும், அவர் தன்னோடு சொன்னதையும் விளக்கமாகச் சொல்லுகிறாள். அதைக் கேட்டபொழுது மனோவா கர்த்தரை நோக்கி கருத்தாய் விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் சொன்ன பிரகாரம், கர்த்தருக்கு பிரியமான வேளையிலே, தங்களுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்பதை மனோவா விசுவாசிக்கிறார். ஆகையினால் அவர் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, "பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்கு கற்பிப்பீராக" (நியா 13:8) என்று வேண்டிக்கொள்கிறார்.

தங்களுக்கு ஒரு பிள்ளை பிறக்கப்போகிறது என்பது மனோவாவுக்கு உறுதியாய்த் தெரிகிறது. கர்த்தருடைய தூதனானவர், தன்னுடைய மனைவியிடம் சொன்ன வார்த்தைகளை மனோவா அப்படியே விசுவாசிக்கிறார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிய வேண்டும் என்னும் அக்கறை மனோவாவிடம் காணப்படுகிறது. ஆகையினால் மனோவா கர்த்தரிடத்தில், தங்களைப்பற்றி வேண்டிக்கொள்ளும்போது, தங்களுடைய பிள்ளைக்காக, தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை, கர்த்தர் தாமே தங்களுக்கு கற்பிக்கவேண்டுமென்று விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய பரிசுத்தவான்கள், கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, தாங்கள் விரும்பும் ஆசீர்வாதங்களுக்காக அதிகமாய் விண்ணப்பம்பண்ணாமல், தாங்கள் நிறைவேற்ற வேண்டிய கடமைகளுக்காக கருத்தாய் விண்ணப்பம்பண்ணவேண்டும். கர்த்தர் தங்களுக்கு என்ன கொடுப்பார் என்பதை அறிந்துகொள்வதற்கு பதிலாக, கர்த்தர் தங்களுக்கு நியமித்திருக்கிற பொறுப்புக்களையும், கடமைகளையும் அறிந்துகொள்வதற்கு ஆர்வமாயிருக்கவேண்டும். நம்முடைய கடமையை நாம் செய்யவேண்டும். கர்த்தர் தம்முடைய சித்தத்தை நிறைவேற்றுவார்.

மனோவா கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணும்போது, "ஆ என் ஆண்டவரே, நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒரு விசை எங்களிடத்தில் வரவேண்டும்" என்று விண்ணப்பம்பண்ணுகிறார். அவர் வந்து, தங்களுக்கு பிறக்கப்போகிற பிள்ளைக்காக தாங்கள் செய்ய வேண்டியதை தங்களுக்கு கற்பிக்கவேண்டுமென்று மனோவா கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்கிறார். நசரேய விரதத்தை எவ்வாறு கைக்கொள்ளவேண்டும் என்னும் தெளிவான உபதேசம் மனோவாவுக்கு தேவைப்படுகிறது.

கர்த்தருடைய தூதனானவர் முதலில் மனோவாவின் மனைவிக்கு தரிசனமானார். அவளுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்று வாக்குப்பண்ணினார். இந்த சந்தோஷமான செய்தியைக் கேட்டு, மனோவாவின் மனைவி அதிகமாய் சந்தோஷப்பட்டிருப்பாள். வாக்குத்தத்தைப்பற்றிய சந்தோஷத்தில், கர்த்தருடைய தூதனானவர் சொன்ன கடமைகளை அவள் சரியாக செவிகொடுத்து கேட்டிருக்கமாட்டாள். அவர் சொன்னதை முற்றிலும் நினைவில் வைத்திராமல், ஓரளவு மறந்துவிடுவதற்கும் வாய்ப்புள்ளது.

தங்களுக்கு பிறக்கப்போகிற பிள்ளைக்காக தாங்கள் செய்ய வேண்டியதை நேர்த்தியாக செய்யவேண்டுமென்று மனோவா விரும்புகிறார். தங்களுடைய கடமைகளை நிறைவேற்றுவதில் எந்தக் குறைபாடும், எந்தப் தப்பிதமும் ஏற்பட்டு விடக்கூடாது என்பதில் மனோவா எச்சரிக்கையாயிருக்கிறார்.

கர்த்தர் பல சமயங்களில் தம்முடைய ஊழியக்காரர் மூலமாய் தம்முடைய செய்தியை நமக்கு அறிவிக்கிறார். கர்த்தருடைய செய்தி ஆசீர்வாதமாயிருந்தால், நாம் அந்தச் செய்தியை சந்தோஷமாகக் கேட்கிறோம். அந்தச் செய்தி நம்மை கடிந்துகொள்ளும் செய்தியாகவும், நம்முடைய தப்பிதங்களை உணர்த்துவதற்கு சொல்லப்படும் செய்தியாகவும் இருந்தால், நாம் அந்தச் செய்தியை உற்சாகமாய்க் கேட்கமாட்டோம். இது மனுஷருடைய பொதுவான இயல்பு.

கர்த்தருடைய செய்தி எதுவாயிருந்தாலும், அதை நாம் அசட்டைபண்ணக்கூடாது. நம்முடைய ஆத்துமாவின் பிரயோஜனத்திற்காகவே கர்த்தர் நமக்கு உபதேசம் பண்ணுகிறார்.

தேவன் மனோவாவின் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறார்; மனோவாவின் மனைவி வயல்வெளியில் இருக்கும்போது தேவனுடைய தூதனானவர் திரும்பவும் அவளிடத்தில் வருகிறார்; அப்பொழுது அவள் புருஷனாகிய மனோவா அவளோடே இருக்கவில்லை (நியா 13:9).

மனோவாவின் மனைவி வயல்வெளியில் தனிமையாய் அமர்ந்திருக்கிறாள். ஒருவேளை அவள் அங்கே தன்னுடைய ஆடு மாடுகளை மேய்த்துக்கொண்டிருக்கலாம். கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதற்கும், கர்த்தரோடு ஐக்கியமாயிருப்பதற்கும், நம்முடைய தனிமை நமக்கு பிரயோஜனமாயிருக்கும். நாம் கர்த்தருடைய சமுகத்தில் தனிமையாயிருப்பது நமக்கு ஆசீர்வாதம். கர்த்தர் தங்களோடு கூடயிருக்கும்போது, உலகப்பிரகாரமான மனுஷர் யாரும் தங்களோடு இல்லாவிட்டாலும், கர்த்தருடைய பரிசுத்தவான்கள், கர்த்தருடைய சமுகத்திலே சந்தோஷமாயிருப்பார்கள். தாங்கள் தனிமையிலிருக்கிறோம் என்று சொல்லமாட்டார்கள்.

கர்த்தருடைய தூதனானவர் தன்னிடத்தில் வந்தபோது, மனோவாவின் மனைவி, தன்னுடைய புருஷன் இருக்கும் இடத்திற்கு சீக்கிரமாய் ஓடுகிறாள். தன்னுடைய புருஷனிடத்தில், "இதோ, அன்று என்னிடத்தில் வந்தவர் எனக்கு தரிசனமானார்" (நியா 13:10) என்று அறிவிக்கிறாள். தாங்கள் இருவரும் வரும் வரையிலும், கர்த்தருடைய தூதனானவர் எங்கும் போய்விடாமல், அங்கேயே இருக்கவேண்டுமென்று, மனோவாவின் மனைவி அவரிடத்தில் பணிவாக விண்ணப்பம் செய்திருக்கவேண்டும்.

மனோவாவின் மனைவி தன் புருஷனுக்கு தேவனுடைய தூதனானவரைப்பற்றி அறிவித்தபோது, மனோவா எழுந்திருந்து, தன்னுடைய மனைவியின் பின்னாலே போகிறார். மனோவா கர்த்தருடைய தூதனானவர் இருக்கும் இடத்திற்கு வந்து, "இந்த ஸ்திரீயோடே பேசினவர் நீர் தானா" என்று கேட்கிறார். கர்த்தருடைய தூதனானவர் மனோவாவிடம், "நான் தான்" என்று சொல்லுகிறார்.

ஸ்திரீகள் தங்கள் புருஷரையும் அழைத்து வரவேண்டுமென்று கர்த்தருடைய ஊழியக்காரர்கள் விரும்புகிறார்கள். "இயேசு அவளை நோக்கி: நீ போய், உன் புருஷனை இங்கே அழைத்துக் கொண்டுவா என்றார்" (யோவா 4:16).

கர்த்தருடைய தூதனானவர் இரண்டாம் முறையாக வந்தபோது, அவர் தன்னைப் பார்க்க வராமல், தன்னுடைய மனைவியிடம் திரும்பவும் வந்ததற்காக, மனோவா கோபப்படவில்லை, வருத்தப்படவில்லை. விசனப்படவுமில்லை. கர்த்தருடைய தூதனானவர் மறுபடியும் வந்திருக்கிறார் என்னும் செய்தியைக் கேட்டபோது, மனோவா எழுந்திருந்து, கர்த்தருடைய தூதனானவரைப் பார்ப்பதற்காக, தன்னுடைய மனைவியின் பின்னாலே போகிறார்.

சில சமயங்களில், குடும்ப வாழ்க்கையில் மனைவிமார்கள் தங்கள் கணவன்மார்களை வழிநடத்த வேண்டியது வரலாம். அப்போது கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களின் பின்னாலே மனப்பூர்வமாய்ப் போகவேண்டும். புருஷரிடத்தில் வீண் பெருமையும், ஆணவமும் இருக்கக்கூடாது. மனைவிக்கு பின்னால் போவது தன்னுடைய கௌரவத்திற்கு இழுக்கானது என்றோ அல்லது அது தனக்கு அவமானமானது என்றோ நினைக்கக்கூடாது.

மனோவா கர்த்தருடைய தூதனானவரிடத்தில் வந்து, தன்னுடைய மனைவியோடு பேசினவர் அவர் தான் என்பதை உறுதிபண்ணிக்கொள்கிறார். அப்போது மனோவா மிகுந்த மனத்தாழ்மையோடு, தேவனுடைய தூதனானவரிடம் விண்ணப்பம்பண்ணுகிறார். "நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும்" (நியா 13:12) என்று கேட்கிறார்.

மனோவா தேவனுடைய தூதனானவரிடத்தில், "நீர் சொன்ன காரியம் நிறைவேறட்டும்" என்று கர்த்தருடைய சித்தத்திற்கு தன்னை ஒப்புக்கொடுக்கிறார். நாம் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, நம்முடைய சித்தம் நிறைவேறட்டும் என்று கேட்காமல், கர்த்தருடைய சித்தமும், அவருடைய விருப்பமும், அவருடைய வார்த்தையும் நிறைவேறட்டும் என்று விண்ணப்பம்பண்ணவேண்டும்.

"அதற்கு மரியாள்: இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்றாள். அப்பொழுது தேவதூதன் அவளிடத்திலிருந்து போய்விட்டான்" (லூக் 1:38).

மனோவா கர்த்தருடைய தூதனானவரிடத்தில், "நீர் சொன்ன காரியம் நிறைவேறட்டும்" என்று சொன்னது அவருடைய விருப்பத்தின் வார்த்தையாகவும், விசுவாசத்தின் வார்த்தையாகவும் இருக்கிறது. கர்த்தர் தனக்கு வாக்குத்தத்தமாக சொன்ன வார்த்தையை மனோவா விசுவாசிக்கிறார். அது நிறைவேறுவதற்கு கர்த்தரையே சார்ந்திருக்கிறார்.

தங்களுக்கு பிறக்கப்போகும் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும் என்று கர்த்தருடைய தூதனானவர் மனோவாவின் மனைவிக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். அந்த வார்த்தைகளை அவர் தனக்கு மறுபடியும் சொல்லவேண்டுமென்று மனோவா பணிவோடு கேட்கிறார். "அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும்" என்று மனோவா கர்த்தருடைய தூதனானவரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர், அவர்களுக்கு பிறக்கப்போகும் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும் என்று, மனோவாவின் மனைவிக்கு ஏற்கெனவே சொல்லியிருக்கிறார். தன்னுடைய மனைவி, தங்களுக்கு பிறக்கப்போகும் பிள்ளையை, கர்த்தருடைய தூதனானவர் சொன்ன பிரகாரம் வளர்ப்பதற்கு, மனோவாவும் உதவி செய்ய விரும்புகிறார். பிள்ளையை வளர்ப்பதில் தப்பிதம் ஏற்பட்டு விடக்கூடாது. தன்னுடைய மனைவி, பிள்ளையை கருத்தாய் வளர்க்கும்போது, தானும் அவளுக்கு உதவியாயிருக்கவேண்டும் என்று மனோவா விரும்புகிறார்.

பிள்ளையை வளர்ப்பதில், பெற்றோருக்கு சமபொறுப்பு இருக்கிறது. கணவனும் மனைவியும் சேர்ந்து, தங்கள் பிள்ளையை, கர்த்தருடைய நாமமகிமைக்காக, கருத்தாய் வளர்க்கவேண்டும். இவர்களுடைய பிள்ளை கர்த்தருக்கு பரிசுத்தமானது. இந்தப் பிள்ளையை இவர்கள் கர்த்தருக்காக வளர்க்கவேண்டும். பிள்ளையை ஒழுங்காய் வளர்க்காமல், புருஷனும் மனைவியும், ஒருவர்மீது ஒருவர் குற்றமும் குறையும் சொல்லிக்கொண்டிருக்கக்கூடாது.

நம்முடைய பிள்ளைகள், கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற சுதந்தரம். கர்த்தர் தம்முடைய கிருபையினாலும் இரக்கத்தினாலும் நமக்கு புத்திர பாக்கியங்களைக் கொடுத்திருக்கிறார். கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற பிள்ளைகளை எப்படி வளர்க்கவேண்டும் என்பதில் நாம் கவனமாயிருக்கவேண்டும். நம்முடைய பிள்ளைகளை கர்த்தருக்கு பிரியமான பிள்ளைகளாகவும், பிரயோஜனமான பிள்ளைகளாகவும் வளர்க்கவேண்டும். பிள்ளைகள் கர்த்தரைப்பற்றிய விசுவாசத்திலும், ஞானத்திலும், அறிவிலும் வளர்ச்சி பெறுவதற்கு பெற்றோர் உதவியாயிருக்கவேண்டும்.

மனோவா கர்த்தருடைய தூதனானவரிடத்தில், "அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், எப்படி நடத்தவேண்டும்" என்று கேட்கிறார். அவர்களுக்கு பிறக்கப்போகும் பிள்ளை, தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான் (நியா 13:5) என்று கர்த்தருடைய தூதனானவர் மனோவாவின் மனைவிக்குச் சொன்னார். நசரேய விரதத்தை எப்படி காத்துக்கொள்வது என்றும், அந்தப் பிள்ளையை கர்த்தருக்கு எவ்வாறு ஜீவபலியாக ஒப்புக்கொடுப்பது என்றும் மனோவா கர்த்தருடைய தூதனானவரிடத்தில் கேட்கிறார்.

கர்த்தருடைய தூதனானவர், மனோவாவின் மனைவிக்கு ஏற்கெனவே சொன்னதை, இங்கு மறுபடியுமாய் மனோவாவுக்குச் சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: "நான் ஸ்திரீயோடே சொன்ன யாவற்றிற்கும், அவள் எச்சரிக்கையாயிருந்து, திராட்சச்செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும், நான் அவளுக்குக் கட்டளையிட்டதையெல்லாம் கைக்கொள்ளக்கடவள்" (நியா 13:13,14) என்று சொல்லுகிறார்.

மனோவாவும் அவருடைய மனைவியும், தங்களுக்கு பிறக்கப்போகும் பிள்ளையை வளர்ப்பதில் கவனமாயிருக்கவேண்டும். பெற்றோரும் ஒழுக்கமாயிருக்கவேண்டும், அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் ஒழுங்காய் வளர்க்கவேண்டும். பெற்றோர் கர்த்தருக்கு முன்பாக பரிசுத்தமாயிருக்கவேண்டும். அவர்கள் பாவத்தைவிட்டு விலகி ஜீவிக்கவேண்டும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல முன்மாதிரியாயிருக்கவேண்டும்.

மனோவாவினுடைய மனைவியின் கர்ப்பத்திலே உற்பத்தியாவது தேவனுக்கு நசரேயனாயிருப்பது. அந்தப் பிள்ளை அவருடைய தாயாரின் வயிற்றிலிருக்கும் வரையிலும், தாயார் தீட்டானது ஒன்றையும் புசிக்கக்கூடாது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் நமக்குள்ளே பிறக்கிறார். நமக்குள்ளே உருவாகுகிறார். கிறிஸ்துவானவர் நமக்குள்ளே உருவாகுமளவும், நம்முடைய சரீரத்தையும் ஆவியையும் நாம் எல்லா அசுத்தங்களுக்கும் விலக்கிக் காத்துக்கொள்ளவேண்டும். நமக்குள்ளே உருவாகும் புதிய மனுஷனை, நம்முடைய பாவசுபாவங்கள் சேதப்படுத்திவிடக்கூடாது.

சர்வாங்க தகனபலி
நியா 13:15-23

நியா 13:15. அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக்கொண்டுவரு மட்டும் தரித்திரும் என்றான்.

நியா 13:16. கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: நீ என்னை இருக்கச் சொன்னாலும் நான் உன் உணவைப் புசியேன்; நீ சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக என்றார். அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறியாதிருந்தான்.

நியா 13:17. அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி, உம்முடைய நாமம் என்ன என்று கேட்டான்.

நியா 13:18. அதற்குக் கர்த்தருடைய தூதனானவர்: என் நாமம் என்ன என்று நீ கேட்க வேண்டியது என்ன? அது அதிசயம் என்றார்.

நியா 13:19. மனோவா போய், வெள்ளாட்டுக்குட்டியையும், போஜனபலியையும் கொண்டுவந்து, அதைக் கன்மலையின்மேல் கர்த்தருக்குச் செலுத்தினான்; அப்பொழுது மனோவாவும் அவன் மனைவியும் பார்த்துக்கொண்டிருக்கையில், அதிசயம் விளங்கினது.

நியா 13:20. அக்கினிஜுவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகையில், கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார்; அதை மனோவாவும் அவன் மனைவியும் கண்டு, தரையிலே முகங்குப்புற விழுந்தார்கள்.

நியா 13:21. பின்பு கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும் அவன் மனைவிக்கும் காணப்படவில்லை; அப்பொழுது அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து,

நியா 13:22. தன் மனைவியைப் பார்த்து: நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம் என்றான்.

நியா 13:23. அதற்கு அவன் மனைவி: கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் ஒப்புக்கொள்ளமாட்டார், இவைகளையெல்லாம் நமக்குக் காண்பிக்கவுமாட்டார், இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார் என்றாள்.

மனோவா கர்த்தருடைய தூதனானவரிடம் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார். தன்னோடு பேசுகிறவர் கர்த்தருடைய தூதனானவர் என்பதை மனோவா இன்னும் அறிந்துகொள்ளவில்லை. இந்த இரகசியம் மனோவாவுக்கு இன்னும் இரகசியமாகவே இருக்கிறது. கர்த்தர் இந்த இரகசியத்தை மனோவாவுக்கு இன்னும் வெளிப்படுத்தவில்லை.

நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபுத்தியினாலோ, சுயபக்தியினாலோ கர்த்தருடைய தெய்வீக மகிமையை தரிசிக்க முடியாது. கர்த்தர் தம்மைப்பற்றி வெளிப்படுத்தினால் மாத்திரமே, நம்மால் அவரை தரிசிக்க முடியும். தேவனுடைய தெய்வீக மகிமையை, கர்த்தர் நமக்கு வெளிப்படுத்தாமல், நம்மால் அதை தரிசிப்பதற்கு வாய்ப்பு இல்லை. இதற்கு வேறு குறுக்கு வழி எதுவுமில்லை.

கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாயும், ஊழியக்காரர் மூலமாயும் நம்மோடு பேசவேண்டுமென்று தீர்மானம்பண்ணியிருக்கிறார். கர்த்தர் சில சமயங்களில் தம்முடைய தூதர்கள் மூலமாகவும் பேசுகிறார். பிதாவாகிய தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை, இந்தப் பூமிக்கு மனுஷ அவதாரத்தில் அனுப்பினார். கிறிஸ்துவானவர் நம்மோடேகூட பேசினார்.

மனோவா தன்னை பார்க்க வந்திருக்கிற கர்த்தருடைய தூதனானவருக்கு மரியாதை செய்ய விரும்புகிறார். மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: "நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக்கொண்டுவருமட்டும் தரித்திரும்" (நியா 13:15) என்று சொல்லுகிறார்.

கர்த்தருடைய தூதனவரோ, மனோவா தமக்கு சமைத்துக்கொண்டு வரும் போஜனத்தை புசிக்க மறுத்துவிடுகிறார். அவருடைய போஜனத்தை சர்வாங்க தகனபலியாக கர்த்தருக்கு செலுத்துமாறு சொல்லுகிறார். மனோவா ஒரு வெள்ளாட்டுக்குட்டியை கர்த்தருடைய தூதனானவருக்கு சமைத்துக்கொண்டு வர விரும்புகிறார். அது வரையிலும் தூதனானவர் காத்திருக்க வேண்டுமென்று மனோவா விண்ணப்பம்பண்ணுகிறார்.

கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி: "நீ என்னை இருக்கச் சொன்னாலும் நான் உன் உணவைப் புசியேன்; நீ சர்வாங்க தகனபலி இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக" (நியா 13:16) என்று சொல்லுகிறார். அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறியாதிருக்கிறார்.

தேவனுடைய தூதனானவர் கிதியோனுடைய காணிக்கையை அங்கீகரிக்கிறார். அவர் படைத்த இறைச்சியையும், புளிப்பில்லா அப்பத்தையும் தேவனுடைய தூதன் அங்கீகரித்து, அதைப் பட்சித்துப்போடுகிறார். ஆனால் மனோவா படைக்கும் உணவை புசிக்க மறுத்துவிடுகிறார்.

"அப்பொழுது தேவனுடைய தூதனானவர் அவனை நோக்கி: நீ இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் எடுத்து, இந்தக் கற்பாறையின்மேல் வைத்து ஆணத்தை ஊற்று என்றார்; அவன் அப்படியே செய்தான். அப்பொழுது கர்த்தருடைய தூதன் தமது கையிலிருந்த கோலின் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார்; அப்பொழுது அக்கினி கற்பாறையிலிருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது; கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார்" (நியா 6:20,21).

மனோவா பலிசெலுத்த வேண்டுமென்று விரும்பினால், அதை கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியாக செலுத்தலாம். மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் பிழைப்பதில்லை. ஆயினும் மனுஷனுக்கு அப்பமும் தேவையாயிருக்கிறது. நம்மால் போஜனம்பண்ணாமல் பானம்பண்ணாமல் ஜீவிக்க முடியாது. நாம் கர்த்தருடைய நாமமகிமைக்காக போஜனம்பண்ணுகிறோம். பானம்பண்ணுகிறோம். நாம் புசிக்கிற பொதுவான போஜனத்தை, கர்த்தருக்கு பலிகளாகவும் செலுத்துகிறோம்.

தன்னோடு பேசுகிறவர் கர்த்தருடைய தூதன் என்பதும் மனோவாவுக்குத் தெரியவில்லை. அவருடைய பெயர் என்ன என்பதும் மனோவாவுக்கு தெரியவில்லை. கர்த்தருடைய தூதனானவர் தன்னுடைய பெயரை மனோவாவுக்கு சொல்ல மறுத்துவிடுகிறார்.

அப்பொழுது மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி: "நீர் சொன்ன காரியம் நிறைவேறும்போது, நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி, உம்முடைய நாமம் என்ன" என்று கேட்கிறார். அதற்குக் கர்த்தருடைய தூதனானவர்: "என் நாமம் என்ன என்று நீ கேட்க வேண்டியது என்ன? அது அதிசயம்" (நியா 13:17,18) என்று சொல்லுகிறார்.

மனோவா கர்த்தருடைய தூதனானவரை கனம்பண்ண விரும்புகிறார். கர்த்தருடைய தூதனானவரின் நாமம் என்ன என்று மனோவா கேட்ட கேள்விக்கு, கர்த்தருடைய தூதன் உடனே பதில் சொல்லவில்லை. ஆனால் மனோவா, "அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்கவேண்டும், அதை எப்படி நடத்தவேண்டும்" (நியா 13:12) என்று கேட்டபோது, கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கு உடனே பதில் சொல்லுகிறார் (நியா 13:13,14).

நம்முடைய கடமைகளைப்பற்றியும், நம்முடைய பொறுப்புக்களைப்பற்றியும் நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஜெபத்திற்கு கர்த்தர் உடனே பதில் கொடுக்கிறார். ஆனால் நம்முடைய ஆசைகள் நிறைவேறவேண்டுமென்றோ அல்லது நமக்கு உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் ஏராளமாய்க் கிடைக்கவேண்டுமென்றோ, நாம் ஜெபம்பண்ணும்போது, நமக்கு கர்த்தருடைய சமுகத்திலிருந்து உடனே பதில் வருவதில்லை.

நாம் கர்த்தரிடத்தில் கேட்கிற எல்லா கேள்விகளுக்கும், அவர் நமக்கு பதில் சொல்லுவார் என்று எதிர்பார்க்கக்கூடாது. நம்முடைய மனதிலே ஏராளமான சந்தேகங்கள் எழும்பும். நாம் பல காரியங்களைக் குறித்து அறிந்துகொள்ள வேண்டுமென்று ஆவலாயிருப்போம். கர்த்தர் நம்முடைய விருப்பங்களையெல்லாம் நிறைவேற்றுவார் என்றோ அல்லது நம்முடைய ஆசைகளையெல்லாம் பூர்த்தியாக்குவார் என்றோ எதிர்பார்க்கக்கூடாது.

கர்த்தர் பரிசுத்த வேதாகமத்திலே, நம்முடைய கடமைகள் எல்லாவற்றையும் தெளிவாக எழுதி வைத்திருக்கிறார். நாம் எதை செய்யவேண்டும் என்றும், எதை செய்யக்கூடாது என்றும் கர்த்தர் தம்முடைய பிரமாணத்தில் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். கர்த்தர் நமக்கு இதுவரையிலும் வெளிப்படுத்தியிருக்கிற இரகசியங்களே, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு போதுமானது. இன்னும் வெளிப்படுத்தப்படாத இரகசியங்கள் கர்த்தருக்கே உரியது.

"கணுக்களாலும் கட்டுகளாலும் உதவிபெற்று இணைக்கப்பட்டு, தேவவளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரமுழுவதையும் ஆதரிக்கிற தலையைப் பற்றிக் கொள்ளாமல், மாயமான தாழ்மையிலும், தேவதூதர்களுக்குச் செய்யும் ஆராதனையிலும் விருப்பமுற்று, காணாதவைகளிலே துணிவாய் நுழைந்து, தன் மாம்சசிந்தையினாலே வீணாய் இறுமாப்புக்கொண்டிருக்கிற எவனும் உங்கள் பந்தயப்பொருளை நீங்கள் இழந்துபோகும்படி உங்களை வஞ்சியாதிருக்கப்பாருங்கள்" (கொலோ 2:18,19).

கர்த்தருடைய தூதனானவர் தனக்குச் சொன்ன கட்டளைக்கு மனோவா கீழ்ப்படிகிறார். மனோவா போய், வெள்ளாட்டுக்குட்டியையும், போஜனபலியையும் கொண்டுவந்து, அதைக் கன்மலையின்மேல் கர்த்தருக்குச் செலுத்துகிறார்; அப்பொழுது மனோவாவும் அவர் மனைவியும் பார்த்துக் கொண்டிருக்கையில், அதிசயம் விளங்கிறது. அக்கினிஜுவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகிறது அப்பொழுது கையில், கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போகிறார்; (நியா 13:19,20).

நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு, நம்மை ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டும். நம்முடைய மனதையும், இருதயத்தையும் கர்த்தருடைய சித்தத்திற்கு கீழ்ப்படுத்த வேண்டும். பரிசுத்த ஆவியானவர் நமக்குள்ளே கிரியை செய்வதற்கு அவரை அனுமதிக்க வேண்டும். கர்த்தருடைய ஆவியானவர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக நம்மை உருவாக்குவதற்கு, நம்மை ஒப்புக்கொடுக்கவேண்டும்.

நாம் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணும்போது, நம்முடைய ஆத்துமா பரலோகத்திலிருக்கிற தேவனை நோக்கி மேலே எழும்பிப்போகிறது. நம்முடைய இருதயத்தில் வாசம்பண்ணுகிற கிறிஸ்துவானவர், நாம் கர்த்தருக்கு படைக்கிற காணிக்கைகளையும் பலிகளையும், சுகந்த வாசனையுள்ள பலியாக மாற்றுகிறார். கிறிஸ்துவானவர் நமக்குள்ளே வாசம்பண்ணவில்லையென்றால், நாம் செலுத்துகிற சர்வாங்க தகனபலி வெறும் புகையாகயிருக்கும். அது தேவன் அங்கீகரிக்கிற சுகந்த வாசனையுள்ள பலியாக இருக்காது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே, தம்மையே நமக்காக பாவநிவாரண பலியாக ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்தபலியின் ஜுவாலையிலே பரலோகத்திற்கு பரமேறிப்போனார். கிறிஸ்துவானவர் தம்முடைய சொந்த இரத்தத்தினாலே பரிசுத்த ஸ்தலத்திற்குள் ஒரே தரம் பிரவேசித்தார்.

"கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைகளுக்குரிய பிரதான ஆசாரியராய் வெளிப்பட்டு, கையினால் செய்யப்பட்டதாகிய இந்தச் சிருஷ்டிசம்பந்தமான கூடாரத்தின் வழியாக அல்ல, பெரிதும் உத்தமுமான கூடாரத்தின் வழியாகவும், வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்" (எபி 9:11,12).

கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போவதை மனோவாவும் அவருடைய மனைவியும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அப்போது அவர்களுக்குள்ளே மிகுந்த பயமுண்டாயிற்று. அவர்கள் இருவரும் தரையிலே முகங்குப்புற விழுகிறார்கள். மனோவா தன் மனைவியைப் பார்த்து, "நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்" (நியா 13:22) என்று பயத்தோடும் நடுக்கத்தோடும் சொல்லுகிறார்.

மனோவா இதற்கு முன்பு கர்த்தருடைய தூதனானவரிடத்தில் பேசியபோது மிகவும் சந்தோஷமாகவும், தெளிவாகவும், உற்சாகமாகவும் பேசினார் (நியா 13:8,12). கர்த்தர் தங்களுக்கு ஒரு குமாரனை வாக்குப்பண்ணியிருக்கிறார் என்பதை அறிந்து மனோவாவும் அவருடைய மனைவியும் மிகுந்த சந்தோஷமடைந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்கள் இருவரும் குழப்பத்திலும், பயத்திலும் இருக்கிறார்கள்.

கர்த்தருடைய தூதனானவர் பலி பீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போகிறார்; அதை மனோவாவும் அவர் மனைவியும் கண்டு, தரையிலே முகங்குப்புற விழுகிறார்கள். பின்பு கர்த்தருடைய தூதனானவர் மனோவாவுக்கும் அவர் மனைவிக்கும் காணப்படவில்லை; அப்பொழுது அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து கொள்கிறார் (நியா 13:20,21).

"நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்" என்று மனோவா சொல்லுகிறார். பூர்வகாலங்களிலே யூதர்கள் மத்தியில் இப்படிப்பட்ட நம்பிக்கை இருந்தது. அவர்கள் கர்த்தரையோ அல்லது கர்த்தருடைய தூதனானவரையோ தரிசித்தால், செத்துப்போவாம் என்று நினைத்தார்கள். மனோவா பயத்திலே பேசினாலும், அவருடைய மனைவி கர்த்தரைப்பற்றும் விசுவாசத்தில் உறுதியாயிருக்கிறார். அவரிடத்தில் கர்த்தரைப்பற்றிய தெளிந்த சிந்தனை இருக்கிறது.

மனோவாவின் மனைவி, தன் புருஷனிடம் கர்த்தர் நம்மைக் கொன்றுபோடச் சித்தமாயிருந்தால், அவர் நம்முடைய கையிலே சர்வாங்க தகனபலியையும் போஜனபலியையும் ஒப்புக்கொள்ளமாட்டார், இவைகளையெல்லாம் நமக்குக் காண்பிக்கவுமாட்டார், இவைகளை நமக்கு அறிவிக்கவுமாட்டார் (நியா 13:23) என்று சொல்லுகிறாள்.

மனோவாவின் மனைவி பலவீனமான பாண்டமாயிருந்தாலும், அவள் பலமுள்ள விசுவாசியாயிருக்கிறாள். ஒருவேளை இந்தக் காரணத்திற்காக, கர்த்தருடைய தூதனானவர், முதலில் மனோவாவை பார்க்காமல், மனோவாவின் மனைவியைப் பார்த்திருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கர்த்தருடைய தூதனானவர் இரண்டாந்தரமும் மனோவாவின் மனைவியையே பார்த்தற்கு, அந்த ஸ்திரீயின் உறுதியான விசுவாசமே காரணமாக இருக்கலாம்.

திருமணமான தம்பதிகள் ஒருவருக்கொருவர் உதவியாகவும், ஆதரவாகவும் இருந்து, தங்களுடைய விசுவாச ஜீவியத்தில் வளர்ச்சி பெறவேண்டும். கர்த்தருக்குள் ஒன்றாய் சந்தோஷமாயிருக்க வேண்டும். புருஷனும் மனைவியும், தங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிற ஆவிக்குரிய சத்தியங்களை, ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளவேண்டும்.

மனோவாவின் மனைவி தன் புருஷனிடத்தில் மிகவும் ஞானமாய்ப் பேசுகிறாள். "நாம் தேவனைக் கண்டோம், சாகவே சாவோம்" என்று மனோவா சொல்லுகிறார். அவருடைய மனைவியோ, "நாம் சாகமாட்டோம்" என்று சொல்லி, அதற்கான காரணங்களையும் சொல்லுகிறாள்.

கர்த்தர் மனோவாவின் மேலும், அவருடைய மனைவியின்மேலும் கிருபையாக இரக்கம் காண்பித்திருக்கிறார். அவர்களை கொன்றுபோடவேண்டும் என்பதற்காக, கர்த்தர் தம்முடைய கிருபைகளை அவர்களுக்கு வெளிப்படுத்தவில்லை.

கர்த்தர் தங்களைக் கொன்றுபோட சித்தமாயிருந்தால், அவர் அவர்களுடைய கையிலே சர்வாங்க தகனபலியையும், போஜனபலியையும் ஒப்புக்கொள்ளமாட்டார் என்று மனோவாவின் மனைவி சொல்லுகிறாள். கர்த்தர் அவர்களுடைய பலிகளை அங்கீகரித்தது, அவர்களை அழிப்பதற்கல்ல. அவர்களை ஆசீர்வதிப்பதற்காகவே என்னும் சத்தியத்தை, மனோவாவின் மனைவி அறிந்திருக்கிறாள்.

கர்த்தர் மனோவாவையும், அவருடைய மனைவியையும் கொன்றுபோட சித்தமாயிருந்தால், அவர் அவர்களுக்கு இவைகளையெல்லாம் காண்பித்திருக்கமாட்டார். அவர்களுக்கு ஒரு குமாரன் பிறப்பான் என்னும் வாக்குத்தத்தை அவர்களுக்கு சொல்லியிருக்கமாட்டார். அவர்களுக்கு பிறக்கப்போகும் குமாரன். தேவனுக்கு நசரேயனாயிருப்பான் என்பதையும், அவன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கத் தொடங்குவான் என்பதையும் கர்த்தர் அவர்களுக்கு வெளிப்படுத்தியிருக்கமாட்டார்.

பாவிகளை கொன்றுபோடவேண்டும் என்பது கர்த்தருடைய திட்டமல்ல. அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதும், அவர்கள் இரட்சிக்கப்படவேண்டும் என்பதும், அவர்கள் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதுமே கர்த்தருடைய திட்டமாயும் விருப்பமாயும் இருக்கிறது.

மனுக்குலத்தின் இரட்சிப்புக்காக, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே, தம்மையே பாவநிவாரண பலியாகச் செலுத்தினார். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் பாவநிவாரண பலியை அங்கீகரித்திருக்கிறார். இயேசுகிறிஸ்துவின் மூலமாய் மனுக்குலத்திற்கு இரட்சிப்பைக் கொடுப்பது கர்த்தருடைய சித்தமாயிருக்கிறது. இயேசுகிறிஸ்துவின் பலியினால், மனந்திரும்புகிற பாவிகள் அழிந்துபோகாமல், இரட்சிக்கப்படுகிறார்கள்.

மனோவாவின் மனைவியைப்போல, விசுவாசிகளாகிய நாமும் கர்த்தருடைய கிருபையையும், இரக்கத்தையும் குறித்து தெளிந்த சிந்தையுள்ளவர்களாயிருக்க வேண்டும். கர்த்தர் நம்மை அழித்துப்போடவேண்டும் என்றோ அல்லது நம்மை கைவிட்டுவிடவேண்டும் என்றோ திட்டமிட்டிருப்பாரென்றால், அவர் நம்முடைய ஆத்துமாவை அழிவுக்கு நீங்கலாக்கி இரட்சித்திருக்கமாட்டார். கர்த்தருடைய கிரியை எப்போதுமே பரிபூரணமாயிருக்கிறது. கர்த்தரை நம்புகிறவர்கள் ஒருபோதும் வெட்கப்பட்டுப்போகமாட்டார்கள். அவர்கள் அழிந்துபோகமாட்டார்கள். கர்த்தரை நம்புகிறவர்கள் புதிய பெலனையும், புதிய ஜீவனையும் பெற்றுக்கொள்வார்கள். நம்முடைய காலங்கள் கர்த்தருடைய கரத்தில் பாதுகாப்பாயிருக்கிறது.

சிம்சோன்
நியா 13:24,25

நியா 13:24. பின்பு அந்த ஸ்திரீ ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சிம்சோன் என்று பேரிட்டாள்; அந்தப் பிள்ளை வளர்ந்தது; கர்த்தர் அவனை ஆசீர்வதித்தார்.

நியா 13:25. அவன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத்துவக்கினார்.

மனோவாவின் மனைவிக்கு நீண்டகாலமாக புத்திரபாக்கியமில்லை. கர்த்தருடைய கிருபையான வாக்குத்தத்தத்தின் பிரகாரமாக அந்த ஸ்திரீ ஒரு குமாரனை பெறுகிறாள். அந்தக் குழந்தைக்கு சிம்சோன் என்று பேரிடுகிறாள். சிம்சோன் என்னும் பெயருக்கு "சூரியன்" என்று பொருள். சிம்சோனின் முகம் சூரியனைப்போல பிரகாசமாகவும் அழகாகவும் இருக்கிறது. அவர் சூரியனைப்போலவே விசேஷித்த வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

"சிம்சோன் என்னும் பெயருக்கு "சின்ன சூரியன்" என்றும் பொருள் சொல்லலாம். "ஆகிலும் அவைகளின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசிவரைக்கும் செல்லுகிறது; அவைகளில் சூரியனுக்கு ஒரு கூடாரத்தை ஸ்தாபித்தார். அது தன் மணவறையிலிருந்து புறப்படுகிற மணவாளனைப்போலிருந்து, பராக்கிரமசாலியைப்போல் தன் பாதையில் ஓட மகிழ்ச்சியாயிருக்கிறது" (சங் 19:4,5).

சூரியன் இந்தப் பூமிக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறது. சிம்சோன் இஸ்ரவேல் புத்திரருக்கு வெளிச்சத்தைக் கொடுக்கிறார். சிம்சோன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். கிறிஸ்துவானவர் நீதியின் சூரியன் என்று அழைக்கப்படுகிறார். சிம்சோன் "சின்ன சூரியன்" என்று அழைக்கப்படுகிறார்.

சிம்சோன் வளருகிறார். கர்த்தர் சிம்சோனை ஆசீர்வதிக்கிறார். தன்னுடைய வயதிலுள்ள மற்ற பிள்ளைகளைவிட, சிம்சோன் ஞானத்திலும், பெலத்திலும், பராக்கிரமத்திலும் வளர்ச்சி பெற்றிருக்கிறார். சிம்சோனிடத்தில் விசேஷித்த பலன் இருக்கிறது.

சிம்சோன் சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவிலுள்ள தாணின் பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவரை ஏவத்துவக்குகிறார் (நியா 13:25).

சிம்சோன் இஸ்ரவேலரை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தொடங்கவேண்டும். சிம்சோன் பெலிஸ்தருக்கு விரோதமாக தாணின் பாளத்திலிருக்கிறார். பாளயத்திலுள்ளவர்கள் மத்தியிலே, சிம்சோன் தன்னுடைய விசேஷித்த பலத்தையும், பராக்கிரமத்தையும் வெளிப்படுத்தி காண்பித்திருக்கவேண்டும். பாளயத்திலிருக்கிற எல்லோரையும்விட சிம்சோன் பராக்கிரமசாலியாயிருக்கிறார்.

பெலிஸ்தருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் வைராக்கியமாயிருக்கிறார்கள். அவர்கள் எல்லோருடைய வைராக்கியத்தையும்விட, சிம்சோனின் வைராக்கியம் பெலிஸ்தருக்கு விரோதமாய் மிகவும் அதிகமாயிருக்கிறது. கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோனை ஏவத்துவங்குகிறார். சிம்சோன் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரம் கிரியை செய்ய ஆரம்பிக்கிறார்.

14 அதிகாரம்

சிம்சோன் தேவனுக்கு நசரேயனாயிருக்கிறவர். அவர் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க வேண்டியவர். அவருடைய சரித்திரத்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இந்த சம்பவத்தை மேலோட்டமாகப் பார்க்கும்போது, சிம்சோனிடத்தில் நசரேய விரதம் இல்லாததுபோன்று தெரியும். ஆனால் அவர் மெய்யாகவே தேவனுக்கு நசரேயனாயிருக்கிறவர்.

சிம்சோன் பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணை கண்டு, அவளை விவாகம்பண்ணுகிறார் (நியா 14:1-5,7,8). சிம்சோன் ஒரு பாலசிங்கத்தை கொன்றுபோடுகிறார் (நியா 14:5,6,8,9).

சிம்சோன் முப்பது தோழரிடம் ஒரு விடுகதையை சொல்லுகிறார் (நியா 14:10-14). சிம்சோனுடைய பெண்சாதியின் உதவியினால், சிம்சோனின் தோழர் இந்த விடுகதையை விடுவிக்கிறார்கள் (நியா 14:15-18).

சிம்சோன் பெலிஸ்தரில் முப்பது பேரை கொன்று, தன் விடுகதையை விடுவித்தவர்களுக்கு மாற்று வஸ்திரங்களைக் கொடுக்கிறார் (நியா 14:19). சிம்சோனுக்கும் அவருடைய பெண்ஜாதிக்கும் இடையே இருந்த உறவு முறிந்துபோயிற்று (நியா 14:20).

சிம்சோனின் பெண்சாதி நியா 14:1-9

நியா 14:1. சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டு,

நியா 14:2. திரும்ப வந்து, தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ள வேண்டும் என்றான்.

நியா 14:3. அப்பொழுது அவன் தாயும் அவன் தகப்பனும் அவனை நோக்கி: நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா என்றார்கள். சிம்சோன் தன் தகப்பனை நோக்கி: அவள் என் கண்ணுக்குப் பிரியமானவள், அவளையே எனக்குக் கொள்ளவேண்டும் என்றான்.

நியா 14:4. அவன் பெலிஸ்தரிடத்தில் குற்றம்பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயல் என்று அவன் தாயும் தகப்பனும் அறியாதிருந்தார்கள்; அக்காலத்திலே பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆண்டார்கள்.

நியா 14:5. அப்படியே சிம்சோனும் அவன் தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்பட்டார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவனுக்கு எதிராக வந்தது.

நியா 14:6. அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன்மேல் பலமாய் இறங்கினதினால், அவன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப் போட்டான்; ஆனாலும், தான் செய்ததை அவன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை;

நியா 14:7. அவன் போய் அந்தப் பெண்ணோடே பேசினான்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருந்தாள்.

நியா 14:8. சிலநாளைக்குப்பின்பு, அவன் அவளை விவாகம்பண்ணத் திரும்பிவந்து, சிங்கத்தின் உடலைப் பார்க்கிறதற்கு வழிவிலகிப் போனான்; இதோ, சிங்கத்தின் உடலுக்குள்ளே தேனீக்கூட்டமும் தேனும் இருந்தது.

நியா 14:9. அவன் அதைத் தன் கைகளில் எடுத்து, சாப்பிட்டுக்கொண்டே நடந்து தன் தாய்தகப்பனிடத்தில் வந்து, அவர்களுக்கும் கொடுத்தான்; அவர்களும் சாப்பிட்டார்கள்; ஆனாலும் தான் அந்தத் தேனைச் சிங்கத்தின் உடலிலே எடுத்ததை அவர்களுக்கு அறிவிக்கவில்லை.

சிம்சோன் கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவும், பரிசுத்த ஆவியானவருடைய வழிநடத்துலின் பிரகாரமாகவும், பெலிஸ்தருக்கு விரோதமாக எழும்புகிறார். பெலிஸ்தரோடு சண்டை போடுவதற்கு கர்த்தர் சிம்சோனுக்கு வாய்ப்புக்களை உண்டுபண்ணிக்கொடுக்கிறார். சிம்சோன் பெலிஸ்தரோடு சிநேகம் பண்ணுகிறார்.

பொதுவாக சத்துருக்களோடு யாரும் சிநேகம் வைத்துக்கொள்ளமாட்டார்கள். சிம்சோனோ, முதலாவதாக பெலிஸ்தரோடு சிநேகம் பாராட்டுகிறார். அதன் பின்பு அவர்களை தன்னுடைய சத்துருக்களாகப் பாவிக்கிறார். சிம்சோன் தேவனுக்கு நசரேயனாயிருக்கிறவர். ஆனால் அவருடைய ஜீவியமே புரியாத புதிரைப்போல இருக்கிறது. அவர் பெலிஸ்தரின் தோழருக்கு ஒரு விடுகதையைச் சொல்லுகிறார். சிம்சோனே விடுவிக்க முடியாத விடுகதையாக இருக்கிறார்.

சிம்சோன் ஒரு பராக்கிரமசாலி. அவர் கர்த்தருக்கு பிரதிஷ்டைபண்ணப் பட்டிருக்கிறவர். அவருடைய வார்த்தைகளும் கிரியைகளும் மிகவும் பரிசுத்தமாயிருக்கவேண்டும். ஆனால், சிம்சோனின் ஜீவியமோ, ஒரு துன்மார்க்கனுடைய ஜீவியம் போலிருக்கிறது.

சிம்சோன் திம்னாத்துக்குப் போய், திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் காண்கிறார். அவர் தன் ஊருக்கு திரும்ப வந்து, தன் தாயையும் தகப்பனையும் நோக்கி: "திம்னாத்திலே பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணைக் கண்டேன்; அவளை எனக்குக் கொள்ள வேண்டும்" (நியா 14:1,2) என்று கேட்கிறார்.

பெலிஸ்தர் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். அவர்கள் தாகோன் என்னும் விக்கிரக தெய்வத்தை ஆராதிக்கிறவர்கள். சிம்சோனோ ஒரு நசரேயர். நசரேய விரதமிருக்கிறவர், தாகோனை ஆராதிக்கிற புறஜாதி பெண்ணை விவாகம்பண்ண வேண்டுமென்று ஆசைப்படக்கூடாது.

சிம்சோன் இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்கவேண்டியவர். ஆனால் சிம்சோனோ பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ண வேண்டுமென்று ஆசைப்படுகிறார். தன்னுடைய தேசத்தின்மீதும், தேசத்தார்மீதும் சிம்சோனுக்கு உண்மையான அக்கரை இருக்கிறதா என்னும் சந்தேகம் வருகிறது. இந்த சந்தேகம் சிம்சோனுடைய பெற்றோருக்கே வந்துவிடுகிறது.

அப்பொழுது சிம்சோனின் தாயும், தகப்பனும் சிம்சோனை நோக்கி: "நீ போய், விருத்தசேதனமில்லாத பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணைக் கொள்ளவேண்டியதென்ன? உன் சகோதரரின் குமாரத்திகளிலும், எங்கள் ஜனமனைத்திலும் பெண் இல்லையா" (நியா 14:3) என்று கேட்கிறார்கள்.

சிம்சோனோ பெலிஸ்தரின் குமாரத்திமீது பிரியமாயிருக்கிறார். தன் பெற்றோரிடத்தில் அவளுக்காக பரிந்து பேசுகிறார். அவள் தன் கண்ணுக்கு பிரியமானவள் என்றும், அவளையே தனக்குக் கொள்ளவேண்டும் என்றும், சிம்சோன் தன்னுடைய தகப்பனாரிடம் உறுதியாகச் சொல்லுகிறார். சிம்சோனின் பெற்றோர் தங்களால் முடிந்த வரையிலும், அவருடைய மனதை மாற்ற முயற்சிபண்ணுகிறார்கள். ஆனால் முடியவில்லை.

சிம்சோனின் பெற்றோருக்கு கர்த்தருடைய சித்தம் தெரியவில்லை. அக்காலத்தில் பெலிஸ்தர் இஸ்ரவேலரை ஆளுகை செய்கிறார்கள். சிம்சோன் பெலிஸ்தரிடத்தில் குற்றம்பிடிக்க முகாந்தரம் உண்டாகும்படி, இது கர்த்தரின் செயலாயிருக்கிறது. ஆனால் இதை சிம்சோனின் தாயும் தகப்பனும் அறியாதிருக்கிறார்கள் (நியா 14:4).

சிம்சோனின் பெற்றோர், கர்த்தருடைய சித்தத்தை அறிந்துகொள்ளாமலேயே, சிம்சோனின் மனதை மாற்ற முயற்சிபண்ணுகிறார்கள். "உன் சகோதரரின் குமாரத்திகளில் பெண் இல்லையா, நம்முடைய கோத்திரத்தில் பெண் இல்லையா, நம்முடைய ஜனங்களில் பெண் இல்லையா, இஸ்ரவேல் வம்சத்தாரில் பெண் இல்லையா, பெலிஸ்தரிடத்தில் ஒரு பெண்ணை கொள்ளவேண்டியதென்ன, அந்நிய நுகத்தில் பிணைக்கப்படக்கூடாது" என்றெல்லாம் சொல்லி, சிம்சோனின் மனதை மாற்ற விரும்புகிறார்கள். ஆனால் பெலிஸ்தரின் குமாரத்தி சிம்சோனின் கண்ணுக்கு பிரியமானவளாயிருக்கிறாள். அவளையே கொள்ளவேண்டுமென்று சிம்சோனும் தீர்மானமாயிருக்கிறார்.

நசரேய விரதம் இருக்கிறவர் தன் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும். தான் செய்கிற ஒவ்வொரு காரியத்திற்கும் பெற்றோரின் சம்மதத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். நசரேயர் தன்னுடைய பெற்றோரின் சம்மதமில்லாமல் எந்த ஒரு காரியத்தையும் செய்யக்கூடாது. இது நசரேயரிடத்தில் எதிர்பார்க்கப்படுகிற விசேஷித்த குணம். இந்த நற்குணம் நசரேயரிடத்தில் மாத்திரம் என்று இல்லாமல், எல்லா பிள்ளைகளிடத்திலும் காணப்படவேண்டும். பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு கர்த்தருக்குள் கீழ்ப்படியவேண்டும்.

சிம்சோன் பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணுவது கர்த்தருடைய செயலாயிருக்கிறது. கர்த்தரே சிம்சோனின் இருதயத்தில், பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்மீது விருப்பத்தை உண்டுபண்ணுகிறார். கர்த்தருடைய சித்தத்தின் பிரகாரமாகவே அவள் சிம்சோனின் கண்ணுக்கு பிரியமானவளாயிருக்கிறாள்.

சிம்சோன் பிற்காலத்தில் பெலிஸ்தருக்கு விரோதமாக எழும்பவேண்டும். இதற்காகவே கர்த்தர் சிம்சோனை, தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக ஆயத்தம் பண்ணுகிறார். சிம்சோன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரமுண்டாகவேண்டும்.

பெலிஸ்தர் இஸ்ரவேலை ஒடுக்கும்போது, பொதுவாக அவர்கள் தங்களுடைய பெரிய சேனையை இஸ்ரவேலுக்கு விரோதமாக அனுப்பமாட்டார்கள். தங்களிடத்திலுள்ள இராட்சதர்களில் ஒரு சிலரை அவர்களுக்கு விரோதமாக அனுப்பி, அவர்களை பயமுறுத்துவார்கள். அல்லது இஸ்ரவேல் ஜனத்தாரின் உடமைகளைக் கொள்ளையிடுவதற்கு, பெலிஸ்தரில் ஒரு சிலர் புறப்பட்டு வருவார்கள்.

பெலிஸ்தர் வஞ்சனையும், தந்திரமும் நிறைந்தவர்கள். சிம்சோனும் பெலிஸ்தரிடத்தில் வஞ்சனையாயும், தந்திரமாயும் நடந்துகொள்கிறார். சிம்சோன் பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒரு பெண்ணை விவாகம்பண்ணும்போது, அவர் பெலிஸ்தருக்கு, அவர்களுடைய விலாவிலே ஒரு முள்ளைப்போல இருப்பார். சிம்சோன் அவர்களுக்கு எப்போதுமே பிரச்சனையாயிருப்பார்.

கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரம், பெலிஸ்தர்மீது யுத்தம்பண்ணுவதற்கு சிம்சோனை ஆயத்தம் பண்ணுகிறார். அவரை உற்சாகப்படுத்துகிறார். கர்த்தருடைய திட்டத்தின் பிரகாரமாகவும், சித்தத்தின் பிரகாரமாகவும் சிம்சோன் திம்னாத்திற்குப் போகிறார். அவர் அங்கே போகும் வழியில் ஒரு பாலசிங்கத்தைக் கொன்றுபோகிறார்.

சிம்சோனும் அவருடைய தாயும் தகப்பனும் திம்னாத்துக்குப் போகப் புறப்படுகிறார்கள்; அவர்கள் திம்னாத் ஊர் திராட்சத்தோட்டங்கள்மட்டும் வந்தபோது, இதோ, கெர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று சிம்சோனுக்கு எதிராக வருகிறது. அப்பொழுது கர்த்தருடைய ஆவி சிம்சோன்மேல் பலமாய் இறங்கினதினால், சிம்சோன் தன் கையில் ஒன்றும் இல்லாதிருந்தும், அதை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுகிறதுபோல் கிழித்துப் போடுகிறார்; ஆனாலும், தான் செய்ததை சிம்சோன் தன் தாய் தகப்பனுக்கு அறிவிக்கவில்லை (நியா 14:5,6).

சிம்சோன் கொர்ச்சிக்கிற பாலசிங்கத்தைக் கொன்றுபோடுகிறார். இது மிகவும் பயங்கரமான மிருகம். தன்னுடைய இரையைப்பிடிக்க இந்தப் பாலசிங்கம் அலைந்துகொண்டிருக்கிறது. சிம்சோனோ திராட்சத்தோட்டங்கள் வழியாக தனியாக நடந்துபோகிறார். திம்னாத்திற்கு அவர் தன்னுடைய பெற்றோரோடு கூடப்போனார்.

ஆனால் திராட்சத்தோட்டத்திற்கு அருகாமையில் வந்தபோது, சிம்சோன் தன் பெற்றோரை விட்டு விட்டு, தனியாகப் போகிறார். ஒருவேளை திராட்சத்தோட்டத்திலுள்ள, திராட்சப்பழங்கள் சிலவற்றை பறித்து புசிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு, அவர் தனியே போயிருக்கவேண்டும்.

நசரேய விரதமிருக்கிறவர்கள் திராட்சரசமும் குடிக்கக்கூடாது. திராட்சப்பழமும் சாப்பிடக்கூடாது. திராட்சப்பழத்தை சாப்பிடுவதற்கு, சிம்சோனின் பெற்றோர் அவருக்கு அனுமதி கொடுக்கமாட்டார்கள். ஆகையினால் சிம்சோன் அவர்களுடைய அனுமதியில்லாமல், திராட்சப்பழங்கள்மீது ஆசைப்பட்டு, திராட்சத்தோட்டங்கள் வழியாக தனியாகப் போயிருக்கவேண்டும்.

சிம்சோன் திராட்சத்தோட்டங்கள் மட்டும் வந்தபோது கொர்ச்சிக்கிற பாலசிங்கம் ஒன்று அவருக்கு எதிராக வருகிறது. சிம்சோனோ தனிமையிலிருக்கிறார். அவருக்கு கர்த்தருடைய உதவியும் தேவைப்படுகிறது. மற்ற மனுஷருடைய உதவியும் தேவைப்படுகிறது. அப்போது கர்த்தருடைய ஆவி சிம்சோன்மேல் பலமாய் இறங்குகிறார். சிம்சோனுக்கு விசேஷித்த பலன் கிடைக்கிறது. சிம்சோனின் கையில் ஒரு ஆயுதமுமில்லை. ஆனாலும் அவர் அந்தப் பாலசிங்கத்தை ஒரு ஆட்டுக்குட்டியைக் கிழித்துப்போடுவதுபோல கிழித்துப்போடுகிறார். சிம்சோனுக்கு ஒரு சேதமும் உண்டாகவில்லை.

பாலசிங்கத்தின்மீது சிம்சோனுக்கு கிடைத்த வெற்றி மிகவும் விசேஷமானது. சிங்கத்தைக் கொன்றுபோடுவதற்கு அவர் அதிகமாய்க் கஷ்டப்படவில்லை. ஒரு ஆட்டுக்குட்டியை எளிதாக கிழித்துப்போடுவதுபோல, அவர் பாலசிங்கத்தைக் கிழித்துப்போடுகிறார்.

இந்தப் பிரபஞ்சத்தில் சாத்தான் கொர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றி அலைகிறான். கிறிஸ்துவானவர் சாத்தானை மேற்கொள்கிறார். தம்முடைய ஊழியத்தின் ஆரம்பத்திலேயே, கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சாத்தானை ஜெயித்தார்.

"அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார்" (மத் 4:1). "அப்பொழுது இயேசு: அப்பாலே போ சாத்தானே; உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். அப்பொழுது பிசாசானவன் அவரை விட்டு விலகிப்போனான்" (மத் 4:10,11).

கிறிஸ்துவானவர் இந்த சம்பவத்திற்கு பின்பு சாத்தானுடைய அந்தகார வல்லமைகளையும், அவனுடைய முறித்துப்போட்டார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்முடைய சொந்த பலத்தினால் உயர்த்தப்பட்டிருக்கிறார். அவர் தம்மைப்பற்றி பெருமையாய் ஒன்றும் பேசவில்லை.

சிம்சோன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறார். தான் பாலசிங்கத்தைக் கொன்றுபோட்டாலும், தான் செய்ததை சிம்சோன் தன்னுடைய பெற்றோருக்கு அறிவிக்கவில்லை. வேறு யாரிடத்திலும் இந்த வீரசெயலைப்பற்றி விளம்பரம் பண்ணவில்லை. சிம்சோனின் பெற்றோருக்கு இந்த சம்பவம் தெரிந்திருந்தால் அவர்கள் இதை ஊரெல்லாம் பிரகடனம் செய்திருப்பார்கள். சிம்சோனைப்போலவே நம்முடைய ஊழியத்திலும் உண்மையும் தாழ்மையும் இருக்கவேண்டும். அப்போது நம்முடைய ஊழியம் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படும்.

சிம்சோன் திம்னாத்திற்குப்போய் அந்தப் பெண்ணோடே பேசுகிறார்; அவள் சிம்சோனின் கண்ணுக்குப் பிரியமாயிருக்கிறாள். சிலநாளைக்குப்பின்பு, சிம்சோன் அவளை விவாகம்பண்ணத் திரும்பிவந்து, சிங்கத்தின் உடலைப் பார்க்கிறதற்கு வழிவிலகிப் போகிறார் (நியா 13:7,8).

இந்தப் பிரயாணத்தையும் கர்த்தரே தம்முடைய சித்தத்தின் பிரகாரமாய் வாய்க்கப்பண்ணுகிறார். சிம்சோன் இதற்கு முன்பு அந்த வழியாகப் போனபோது கெர்ச்சிக்கிற பாலசிங்கம் உயிரோடிருந்தது. இப்போதோ அந்த சிங்கத்தின் செத்துப்போன உடல் இங்கே கிடக்கிறது. சிம்சோனுக்கு அந்த சிங்கத்தின் உடலைப் பார்க்கவேண்டும் என்னும் விருப்பமுண்டாயிற்று. அதற்காக அவர் திராட்சத்தோட்டங்களின் வழியாக வழிவிலகிப்போகிறார். அந்த சிங்கத்தின் உடலுக்குள்ளே தேனீ கூட்டமும் தேனும் இருக்கிறது.

சிம்சோன் சிங்கத்தைக் கொன்றுபோட்ட பின்பு ஒருவேளை காட்டு பறவைகளும், காட்டு மிருகங்களும் அதன் மாம்சத்தைப் பட்சித்துப்போட்டிருக்கலாம். இப்போது அந்த சிங்கத்தின் உடல் மாம்சமில்லாமல் எலும்புக்கூடாயிருக்கலாம். அந்த எலும்புக்கூட்டுக்குள்ளே தேனீ கூடு கட்டியிருக்கிறது. தேனீ ஒருபோதும் சோம்பேறியாயிராது. தேன் கூட்டிலே தேன் திரளாயிருக்கிறது. கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம். கர்த்தர் சொன்ன பிரகாரமாக, கானான் தேசத்திலே, எங்கும் தேன் இருக்கிறது. செத்துப்போன சிங்கத்தின் உடம்புக்குள்ளும் தேன் கூடுகட்டியிருக்கிறது.

சிம்சோன் சிங்கத்தின் உடலுக்குள் இருக்கிற தேனை தன் கைகளில் எடுத்து சாப்பிடுகிறார். தேன் கூட்டுக்குள்ளே கையை விட்டு, கைகளால் தேனை எடுத்தால், தேனீக்கள் அதைப் பார்த்துக்கொண்டு சும்மாயிருக்காது. கையிலே கொட்டும். சிம்சோன் தேன்கூட்டிலிருந்து தேனை எடுக்கும்போது, அங்கே இருக்கிற தேனீக்களை விரட்டியிருக்கவேண்டும். சிம்சோனிடத்தில் பயமில்லை. பாலசிங்கம் கெர்ச்சித்தபோது, சிம்சோன் அதன் கொடூரமான பற்களைப் பார்த்து பயப்படவில்லை. சிங்கத்தின் பற்களுக்கு பயப்படாதவர், தேனீக்களின் கொடுக்குக்கு பயப்படமாட்டார்.

சிம்சோன் சிங்கத்தின் உடலுக்குள்ளே இருக்கிற தேனீ கூட்டத்தை முதலாவதாக துரத்திவிடவேண்டும். தேனீ கூட்டத்திற்கு பயப்பட்டால் அவரால் தேனீக்களை துரத்த முடியாது. பெலிஸ்தரும் தேனீ கூட்டத்தைப்போல திரளாயிருக்கிறார்கள். சிம்சோன் திரளான எண்ணிக்கையுள்ள பெலிஸ்தருக்கு பயப்பட்டால், அவரால் பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேலை மீட்டு இரட்சிக்க முடியாது.

சிங்கத்தின் உடலுக்குள்ளே தேன் இருக்கிறது. சிம்சோன் அந்தத் தேனை தன் கைகளில் எடுத்து சாப்பிடுகிறார். அவர் தன்னுடைய மனச்சாட்சியினிமித்தம், தேனை சாப்பிடலாமா, சாப்பிடக்கூடாதா என்னும் கேள்வி அவருக்குள் எழும்பவில்லை. யோவான்ஸ்நானனும், புதிய ஏற்பாட்டுக்காலத்திலிருந்த ஒரு நசரேயர். வெட்டுக்கிளியும், காட்டுத்தேனும் அவருக்கு உணவாயிருந்தது.

சிம்சோன் தேனை தன் கைகளில் எடுத்து சாப்பிட்டுக்கொண்டே நடந்து தன் தாய்தகப்பனிடத்தில் வந்து, அவர்களுக்கும் கொடுக்கிறார்; அவர்களும் சாப்பிடுகிறார்கள்; ஆனாலும் தான் அந்தத் தேனைச் சிங்கத்தின் உடலிலே எடுத்ததை சிம்சோன் அவர்களுக்கு அறிவிக்கவில்லை (நியா 13:9).

சிம்சோன் சிங்கத்தின் உடலிலிருந்து தேனை எடுத்து, அதை அவரே மொத்தமாகச் சாப்பிட்டுவிடவில்லை. அந்த தேனை தன் பெற்றோருக்கும் பகிர்ந்து கொடுக்கிறார். கர்த்தருடைய கிருபையினாலே, ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறவர்கள், அந்த ஆசீர்வாதங்களை தங்களுக்கு மாத்திரம் வைத்துக்கொள்ளக்கூடாது. கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற நன்மைகளையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், நம்முடைய உற்றார் உறவினருக்கும், பெற்றோருக்கும், மற்றோருக்கும் பகிர்ந்துகொடுக்கவேண்டும். இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தை நம்முடைய சமுதாயத்திற்கு அறிவிக்கவேண்டும். நற்செய்தியைக் கேட்பதற்கு அவர்களை அழைக்கவேண்டும்.

சிம்சோன் தன் கைகளிலுள்ள தேனை சிங்கத்தின் உடலிலிருந்து எடுத்ததை, தன் பெற்றோருக்கு சொல்லியிருந்தால், அவர்கள் அதை சாப்பிட்டிருக்கமாட்டார்கள். ஒருவேளை அந்தத் தேனை அருவருத்திருப்பார்கள். இதன் நிமித்தமாக சிம்சோன் அந்தத் தேனை சிங்கத்தின் உடலில் எடுத்ததை அறிவிக்கவில்லை. தேன் இனிமையான சுவையுள்ளது. அது எங்கேயிருந்து எடுக்கப்பட்டாலும், தேனின் சுவை குறைவதில்லை. தேன் சிங்கத்தின் உடலிலே எடுக்கப்பட்டாலும், அது மதுரமான தேனாகவே இருக்கும்.

விடுகதை
நியா 14:10-20

நியா 14:10. அவன் தகப்பன் அந்தப் பெண் இருக்கும் இடத்தில் போனபோது, சிம்சோன் அங்கே விருந்துசெய்தான்; வாலிபர் அப்படிச் செய்வது வழக்கம்.

நியா 14:11. அவர்கள் அவனைக் கண்டபோது, அவனோடேகூட இருக்கும்படி முப்பது தோழரை அவனிடத்தில் கொண்டுவந்தார்கள்.

நியா 14:12. சிம்சோன் அவர்களை நோக்கி: ஒரு விடுகதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்; அதை நீங்கள் விருந்துண்கிற ஏழுநாளைக்குள்ளே கண்டுபிடித்து எனக்கு விடுவித்தால், நான் உங்களுக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுப்பேன்.

நியா 14:13. அதை எனக்கு விடுவிக்காதே போனால், நீங்கள் எனக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும் என்றான். அதற்கு அவர்கள்: உன் விடுகதையைச் சொல்லு; நாங்கள் அதைக் கேட்கட்டும் என்றார்கள்.

நியா 14:14. அப்பொழுது அவன்: பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது என்றான்; அந்த விடுகதை அவர்களால் மூன்றுநாள்மட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று.

நியா 14:15. ஏழாம்நாளிலே அவர்கள் சிம்சோனின் பெண்சாதியைப் பார்த்து: உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படிக்கு நீ அவனை நயம்பண்ணு; இல்லாவிட்டால் நாங்கள் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப் போடுவோம்; எங்களுக்குள்ளவைகளைப் பறித்துக் கொள்ளவா எங்களை அழைத்தீர்கள் என்றார்கள்.

நியா 14:16. அப்பொழுது சிம்சோனின் பெண்சாதி அவனுக்கு முன்பாக அழுது, நீ என்னை நேசியாமல் என்னைப் பகைக்கிறாய், என் ஜனங்களுக்கு ஒரு விடுகதையைச் சொன்னாய், அதை எனக்காவது விடுவிக்கவில்லையே என்றாள்; அதற்கு அவன்: இதோ, நான் என் தாய்தகப்பனுக்கும் அதை விடுவிக்கவில்லையே உனக்கு அதை விடுவிப்பேனோ என்றான்.

நியா 14:17. விருந்துண்கிற ஏழுநாளும் அவள் அவன் முன்பாக அழுதுகொண்டே இருந்தாள்; ஏழாம்நாளிலே அவள் அவனை அலட்டிக்கொண்டிருந்தபடியால், அதை அவளுக்கு விடுவித்தான்; அப்பொழுது அவள் தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவித்தாள்.

நியா 14:18. ஆகையால் ஏழாம்நாளிலே பொழுது போகுமுன்னே, அந்த ஊர் மனுஷர் அவனை நோக்கி: தேனைப்பார்க்கிலும் மதுரமானது என்ன, சிங்கத்தைப்பார்க்கிலும் பலமானதும் என்ன என்றார்கள்; அதற்கு அவன்: நீங்கள் என் கிடாரியால் உழாதிருந்தீர்களானால், என் விடுகதையைக் கண்டுபிடிப்பதில்லை என்றான்.

நியா 14:19. கர்த்தருடைய ஆவி அவன்மேல் இறங்கினதினால், அவன் அஸ்கலோனுக்குப் போய், அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று, அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டுவந்து, விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்று வஸ்திரங்களைக் கொடுத்து, கோபம் மூண்டவனாய்ப் புறப்பட்டு, தன் தகப்பன் வீட்டுக்குப் போய்விட்டான்.

நியா 14:20. சிம்சோனின் பெண்சாதியோவென்றால், அவனுடைய தோழரில் அவனோடே சிநேகமாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்பட்டாள்.

சிம்சோனுடைய திருமண விருந்தைப்பற்றியும், விருந்தின்போது நடைபெற்ற சம்பவங்களைப்பற்றியும் இந்த வசனப்பகுதியில் எழுதப்பட்டிருக்கிறது. திருமண விருந்து சிம்சோனுக்கு சந்தோஷமாயிருந்தாலும், அவர் பெலிஸ்தர்மீது கோபப்படுவதற்கு, இந்த திருமண விருந்தில் நடைபெற்ற ஒரு சம்பவம் காரணமாயிருக்கிறது. பூர்வகாலத்து பழக்கத்தின்படி திருமண விருந்து ஏழுநாள் தொடர்ச்சியாய் நடப்பது வழக்கம்.

சிம்சோனுடைய தகப்பன் அந்தப் பெண் இருக்கும் இடத்தில் போனபோது, சிம்சோன் அங்கே விருந்துசெய்கிறார்; வாலிபர் அப்படிச் செய்வது வழக்கம் (நியா 14:10). திருமண விருந்துகளில் கலந்துகொள்ளலாம். இதில் தவறு ஒன்றும் இல்லை. மணமக்களை வாழ்த்துவதற்காக நாம் போகலாம். திருமண விருந்துகளில், நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு மறைமுகமான கண்ணிகள் ஏதாவது வைக்கப்பட்டிருந்தால், நாம் அதற்கு கவனமாய் விலகவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நல்லவர்களோடு சகவாசம் வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுடைய நன்மை தீமைகளில் பங்குபெறவேண்டும்.

சிம்சோன் தன்னுடைய பெண்சாதியின் வீட்டில் விருந்து செய்யும்போது, அவருடைய பெண்சாதியின் குடும்பத்தார் முப்பது தோழரை அங்கே அழைத்துக்கொண்டு வருகிறார்கள். வாலிபர் இவ்வாறு செய்வது அக்காலத்து வழக்கமாயிருக்கிறது. இந்த தோழர்கள் திருமணத்தின்போதும், அதைத் தொடர்ந்து நடைபெறும் திருமண விருந்தின்போதும், சிம்சோனோடு கூடவே இருக்கிறார்கள். இவர்கள் மாப்பிள்ளை தோழர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

சிம்சோன் தன்னுடைய பெண்சாதியின் வீட்டில் சந்தோஷமாயிருக்கவேண்டும் என்பதற்காகவும், அவருக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்பதற்காகவும், முப்பது தோழரும் அவரோடு கூடவே இருப்பார்கள். ஆனால் இவர்கள் சிம்சோனுக்கு உண்மையான தோழர்களா அல்லது சிம்சோனை வேவுபார்ப்பதற்காக பெலிஸ்தரால் அனுப்பப்பட்டவர்களா என்று சந்தேகமுண்டாகிறது.

சிம்சோனுடைய தோழர்கள் இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்தவர்களல்ல. அவர்கள் சிம்சோனோடு கூட திம்னாத்திற்கு வரவில்லை. இவர்கள் பெலிஸ்தர்கள். பெலிஸ்தரின் வாலிபர்கள் சிம்சோனைக் கண்டபோது, சிம்சோனோடே கூடயிருக்கும்படி, முப்பது தோழரை சிம்சோனிடத்தில் கொண்டு வருகிறார்கள் (நியா 14:11).

சிம்சோனும் தன்னுடைய தோழரோடு ஐக்கியமாயிருக்கிறார். அவர்களோடு அந்நியோன்னியமாக பழகுகிறார். சிம்சோன் அவர்களை நோக்கி: "ஒரு விடுகதையை உங்களுக்குச் சொல்லுகிறேன்; அதை நீங்கள் விருந்துண்கிற ஏழுநாளைக்குள்ளே கண்டுபிடித்து எனக்கு விடுவித்தால், நான் உங்களுக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுப்பேன்" (நியா 14:12) என்று சொல்லுகிறார்.

திருமண விருந்து ஏழுநாட்களுக்கு நடைபெறும். சிம்சோனின் தோழர், இந்த விடுகதையை, அவர்கள் விருந்துண்கிற ஏழுநாளைக்குள்ளே கண்டுபிடித்து விடுவிக்கவேண்டும். பூர்வகாலத்து திருமண விருந்துகளில், இதுபோன்ற விடுகதைகளை சொல்லுவதும், அவற்றை விடுவிப்பவர்களுக்கு வெகுமதிகளைக் கொடுக்கப்பதும் வழக்கமாயிருந்தது.

சிம்சோன் சொன்ன விடுகதை, அவர் சொந்தமாக யோசித்துச் சொன்னது. தன்னுடைய ஜீவியத்தில் நடைபெற்ற ஒரு சம்பவத்தை, சிம்சோன் இங்கு ஒரு விடுகதையாகச் சொல்லுகிறார். சிம்சோனின் பெற்றோரோ அல்லது அவருடைய ஊரின் மூப்பர்களோ இந்த விடுகதையை அவருக்கு சொல்லிக்கொடுக்கவில்லை.

தான் சொல்லுகிற விடுகதையை, தன்னுடைய தோழர் விடுவித்தால், சிம்சோன் அவர்களுக்கு வெகுமதி கொடுப்பதாக சொல்லுகிறார். அவர்கள் அதை விடுவிக்கதே போனால், அவர்கள் தனக்கு வெகுமதி கொடுக்கவேண்டும் சிம்சோன் என்றும் சொல்லுகிறார்.

சிம்சோன் தன் தோழர்களை நோக்கி, "அதை எனக்கு விடுவிக்காதே போனால், நீங்கள் எனக்கு முப்பது துப்பட்டிகளையும் முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும்" (நியா 14:13) என்று சொல்லுகிறார். அதற்கு அவர்கள்: "உன் விடுகதையைச் சொல்லு; நாங்கள் அதைக் கேட்கட்டும்" என்று சொல்லுகிறார்கள்.

சிம்சோன் சொன்ன விடுகதை இதுதான். "பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் வந்தது" (நியா 14:14) என்று சிம்சோன் தன் விடுகதையை சொல்லுகிறார். அந்த விடுகதையை அவர்களால் மூன்றுநாள்மட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று.

சிம்சோன் சொன்ன விடுகதையை ஆதாரமாக வைத்து தேவனுடைய தெய்வீக பராமரிப்புக்களுக்கும், வழிநடத்துதலுக்கும், கிருபைக்கும் விளக்கம் சொல்லலாம். கர்த்தர் தம்முடைய தெய்வீக சித்தத்தின் பிரகாரமாக, தம்முடைய பிள்ளைகளுக்கு தீமையை நன்மையாக மாற்றுகிறார். விசுவாசிகளுக்கும், சபைக்கும் சத்துருவாயிருக்கிறவர்கள், கர்த்தருடைய வழிநடத்துதலின் பிரகாரம் சிநேகிதராக மாறுகிறார்கள். சபையை அழிக்க நினைத்தவர்கள். அதற்கு ஆதரவாக உதவி செய்கிறார்கள். கர்த்தரை சபித்தவர்கள், கர்த்தரைத் துதிக்கிறார்கள். இவையெல்லாமே கர்த்தருடைய கிருபையான வழிநடத்துதல்கள்.

சிம்சோன் சொன்ன பிரகாரம், பட்சிக்கிறவனிடத்திலிருந்து பட்சணமும், பலவானிடத்திலிருந்து மதுரமும் கர்த்தருடைய கிருபையினால் வருகிறது.

சிம்சோன் சொன்ன விடுகதையை அவருடைய தோழர்களால் விடுவிக்க முடியவில்லை. திருமண விருந்து ஏழு நாட்கள் நடைபெறுகிறது. சிம்சோன் விருந்தின் முதலாம் நாளிலேயே, தன் தோழருக்கு இந்த விடுகதையை சொல்லியிருக்கவேண்டும். அவர்கள் விடுகதையை விடுவிப்பதற்கு மூன்று நாள் முயற்சிபண்ணுகிறார்கள். ஆனாலும் சிம்சோன் சொன்ன விடுகதையை அவர்களால் மூன்றுநாள் மட்டும் விடுவிக்கக்கூடாதே போயிற்று. விடுகதையை விடுவிப்பதற்கு சிம்சோன் அவர்களுக்கு ஏழுநாள் அவகாசம் கொடுத்திருக்கிறார். மூன்றுநாள் முடிந்துபோனதினால், இன்னும் நான்கு நாட்கள் மாத்திரமே மீதமாயிருக்கிறது.

சிம்சோனின் தோழர்கள் அவருடைய பெண்சாதியை மிரட்டுகிறார்கள். ஏழாம்நாளிலே அவர்கள் சிம்சோனின் பெண்சாதியைப் பார்த்து: "உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படிக்கு நீ அவனை நயம்பண்ணு; இல்லாவிட்டால் நாங்கள் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப் போடுவோம்; எங்களுக்குள்ளவைகளைப் பறித்துக்கொள்ளவா எங்களை அழைத்தீர்கள்" (நியா 14:15) என்று சொல்லுகிறார்கள். பெலிஸ்தர்கள் மனிதநேயமில்லாதவர்களாயும், மிருககுணமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள்.

சிம்சோனுடைய தோழர்கள் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, சிம்சோனின் மனைவி பயப்படுகிறாள். அவளுக்குள்ளே மரணபயம் வந்துவிடுகிறது. அந்த விடுகதையின் இரகசியத்தை, தன் புருஷனிடம் கேட்டு தெரிந்துகொள்ளவேண்டும் என்று நினைக்கிறாள். அப்பொழுது சிம்சோனின் பெண்சாதி அவனுக்கு முன்பாக அழுது, "நீ என்னை நேசியாமல் என்னைப் பகைக்கிறாய், என் ஜனங்களுக்கு ஒரு விடுகதையைச் சொன்னாய், அதை எனக்காவது விடுவிக்கவில்லையே" (நியா 14:16) என்று கேட்கிறாள்;

சிம்சோன் விடுகதையின் அர்த்தத்தை தன் பெண்சாதிக்கு உடனே சொல்லிவிடவில்லை. சிம்சோன் அவளிடம், "இதோ, நான் என் தாய்தகப்பனுக்கும் அதை விடுவிக்கவில்லையே உனக்கு அதை விடுவிப்பேனோ" என்று சொல்லுகிறார். இந்த சம்பவம் ஏழாம் நாளிலே நடைபெறுகிறது. இது திருமண விருந்தின் ஏழாம் நாளிலா அல்லது வாரத்தின் கடைசி நாளாகிய ஏழாம் நாளிலா என்பது பற்றி, வேதபண்டிதர்கள் வேறுபட்ட கருத்தை சொல்லுகிறார்கள்.

இந்த சம்பவம், திருமண விருந்தின் நான்காம் நாளில் நடைபெற்றது என்பது வேதபண்டிதர்களின் பொதுவான கருத்தாகும். சிம்சோனின் தோழர்களால் மூன்றுநாள் மட்டும், அந்த விடுகதையை விடுவிக்கக்கூடாமல் போயிற்று. அவர்கள் நாலாம் நாளிலே, சிம்சோனின் பெண்சாதியிடம் இதுபற்றி கேட்கிறார்கள். அவளும், காலதாமதம்பண்ணாமல், விருந்தின் நான்காம் நாளிலேயே, சிம்சோனிடத்தில், அவருடைய விடுகதையைப்பற்றிக் கேட்கிறாள்.

சிம்சோனின் மனைவி சாகக்காரியாயிருக்கிறாள். திருமண விருந்து நடைபெறும் காலத்தில் புருஷனும் மனைவியும் சந்தோஷமாயிருப்பார்கள். ஆனால் சிம்சோனின் மனைவியோ அவருக்கு முன்பாக அழுகிறாள். தான் நினைத்ததை எப்படியாவது சாதிக்கவேண்டும் என்று தீர்மானித்து, சிம்சோனுக்கு முன்பாக பசப்புகிறாள்.

சிம்சோனின் மனைவி தனக்கு முன்பாக அழுதாலும், சிம்சோன் அந்த விடுகதையை அவளுக்கு உடனே விடுவித்துவிடவில்லை. அதை விடுவிக்க மறுத்துவிடுகிறார். ஆனால் சிம்சோனின் மனைவியோ, தான் நினைத்ததை எப்படியாவது சாதிக்கவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறாள். விருந்துண்கிற ஏழுநாளும், அவள் சிம்சோன் முன்பாக அழுதுகொண்டே இருக்கிறாள். அவள் சிம்சோனை தொடர்ந்து அலட்டிக்கொண்டே இருக்கிறாள் (நியா 14:17). இதனால் சந்தோஷமாயிருக்கவேண்டிய திருமண வீடு, சிம்சோனுடைய பெண்சாதியின் அழுகையினால், துக்கவீடுபோல இருக்கிறது.

சிம்சோனும் தன் பெண்சாதியிடம் தான் விடுகதையின் இரகசியத்தை மறைத்துப் பார்க்கிறார். ஆனால் அவரால் முடியவில்லை. அவள் ஒவ்வொரு நாளும் சிம்சோனுக்கு முன்பாக அழுதுகொண்டும், அலட்டிக்கொண்டும் இருந்தபடியினால், சிம்சோன் தன்னுடைய விடுகதையை அவளுக்கு விடுவிக்கிறார்.

சிம்சோன், தன் பெண்சாதியிடம், தன்னுடைய விடுகதையை விடுவிக்கும் முன்பாக, இந்த இரகசியத்தை வேறு யாருக்கும் சொல்லக்கூடாது என்று சொல்லியிருப்பார். அவளும் அதற்கு சம்மதம் தெரிவித்திருப்பாள். ஆனால் சிம்சோனின் மனைவி தன்னுடைய வார்த்தையில் உண்மையுள்ளவளாயில்லை. அவள் உடனே தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவிக்கிறாள் (நியா 14:17).

விடுகதையை விடுவிக்காவிட்டால் பெலிஸ்தர்கள், சிம்சோனின் மனைவியையும், அவளுடைய தகப்பன் வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப்போடுவோம் என்று பயமுறுத்தினார்கள். ஒருவேளை சிம்சோனின் மனைவி அதற்கு பயந்து, சிம்சோன் சொன்ன விடுகதையை தன் ஜனங்களுக்கு விடுவித்திருக்கலாம். அல்லது பெலிஸ்தர்கள் சிம்சோனின் மனைவிக்கு பெரிய வெகுமதி கொடுப்பதாக ஆசை வார்த்தைகளை சொல்லியிருக்கலாம்.

சிம்சோனின் மனைவி பெலிஸ்தரின் அச்சுறுத்துதலுக்கு பயந்தோ, அல்லது அவர்களுடைய ஆசை வார்த்தைகளுக்கு ஆசைப்பட்டோ, தன் ஜனங்களுக்கு அந்த விடுகதையை விடுவிக்கிறாள். அவள் தன் புருஷனுக்கு உண்மையாயிராமல், ஊராருக்கு உண்மையாயிருக்கிறாள்.

சிங்கத்தைவிட பலமுள்ள மிருகம் வேறு ஒன்றுமில்லை. தேனைவிட மதுரமான போஜனமும் வேறு எதுவுமில்லை. "என் மகனே, தேனைச் சாப்பிடு, அது நல்லது; கூட்டிலிருந்து ஒழுகும் தேன் உன் வாய்க்கு இன்பமாயிருக்கும்" (நீதி 24:13).

ஏழாம்நாளிலே பொழுது போகுமுன்னே, அந்த ஊர் மனுஷர் சிம்சோனை நோக்கி: "தேனைப்பார்க்கிலும் மதுரமானது என்ன, சிங்கத்தைப்பார்க்கிலும் பலமானதும் என்ன" (நியா 14:18) என்று சொல்லுகிறார்கள்.

பெலிஸ்தர்கள் தான் சொன்ன விடுகதையை விடுவித்துவிட்டார்கள் என்று சிம்சோனும் அங்கீகரிக்கிறார். சிம்சோன் அவர்களுக்கு சொன்ன பிரகாரம், முப்பது துப்பட்டிகளையும், முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும். தான் சொன்ன விடுகதையை, தன்னுடைய தோழர்களின் சுயமுயற்சியினாலோ, அல்லது சுயபுத்தியினாலோ விடுவிக்க முடியாது என்பது சிம்சோனுக்கு தெரியும்.

சிம்சோனின் தோழர், அவருடைய பெண்சாதியின் உதவியினால், இந்த விடுகதையின் இரகசியத்தை அறிந்து கொள்கிறார்கள். பெலிஸ்தரின் மாய்மாலமும், வஞ்சகமும் சிம்சோனுக்கு தெரிந்திருக்கிறது. சிம்சோன் அவர்களிடம், "நீங்கள் என் கிடாரியால் உழாதிருந்தீர்களானால், என் விடுகதையைக் கண்டுபிடிப்பதில்லை" (நியா 14:18) என்று சொல்லுகிறார்.

பெலிஸ்தர்கள் சிம்சோனின் மனைவியை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். சிம்சோனின் பெண்சாதி, அவருக்கு கிடாரியைப்போல இருக்கிறாள். பெலிஸ்தர்கள் தங்களுடைய சுயபுத்தியை நம்பாமல், சிம்சோனுடைய பெண்சாதியின் உதவியைப் பெற்றுக்கொள்கிறார்கள். சிம்சோனுடைய பெண்சாதி அவருடைய கிடாரியாயிருந்தாலும், பெலிஸ்தர்கள் அவளை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்தி, விடுகதையை விடுவிக்கிறார்கள்.

சாத்தானும் நம்மை சோதிக்கிறான். நம்மிடத்தில் காணப்படுகிற பாவசுபாவங்களை சாத்தான் தனக்கு சாதகமாகப் பயன்படுத்துகிறான். நம்முடைய பாவசுபாவங்கள் கிடாரியைப்போல இருக்கிறது. நம்முடைய பாவசுபாவங்களைப் பயன்படுத்தாமல், சாத்தானால் நமக்கு ஒரு தீங்கும் செய்ய முடியாது. அவனால் நம்மை மேற்கொள்ள முடியாது. நம்முடைய பாவசுபாவமே நம்முடைய அழிவுக்கு காரணமாயிருக்கிறது.

சிம்சோனுக்கு பெலிஸ்தர்மீது கோபமுண்டாகிறது. பெலிஸ்தர்கள் சிம்சோனின் விடுகதையை விடுவிப்பதினால், சிம்சோன் தான் சொன்ன பிரகாரம் அவர்களுக்கு முப்பது துப்பட்டிகளையும், முப்பது மாற்று வஸ்திரங்களையும் கொடுக்கவேண்டும். சிம்சோனோ இந்த வெகுமதிகளை தன்னுடைய ஆஸ்தியிலிருந்து கொடுக்காமல், பெலிஸ்தரைக் கொள்ளையிட்டு, அந்தக் கொள்ளைப் பொருளிலிருந்து, இந்த வெகுமதிகளைக் கொடுக்கிறார்.

கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன்மேல் இறங்குகிறார். சிம்சோன் அஸ்கலோனுக்குப் போய், அவ்வூராரில் முப்பதுபேரைக் கொன்று, அவர்களுடைய வஸ்திரங்களை உரிந்துகொண்டுவந்து, விடுகதையை விடுவித்தவர்களுக்கு அந்த மாற்று வஸ்திரங்களைக் கொடுக்கிறார் (நியா 14:19).

சிம்சோன் பெலிஸ்தரின் குமாரத்திகளில் ஒருத்தியை திருமணம் செய்தார். இதனால் அவருக்கு பெலிஸ்தரோடு புதிய உறவும், புதிய நெருக்கமும் உண்டாயிற்று. கர்த்தரோ இந்தப் புதிய உறவை முறித்துப்போடுவதற்கு, இந்த சம்பவத்தை பயன்படுத்துகிறார். தன்னுடைய தோழர் தனக்கு தீங்கு செய்துவிட்டார்கள் என்பதையும், தன்னுடைய மனைவி தன்னை வஞ்சித்துவிட்டாள் என்பதையும் சிம்சோன் அறிந்துகொள்கிறார். இதனால் அவருக்கு பெலிஸ்தர்மீது கோபம் மூளுகிறது.

சிம்சோன் தன்னுடைய விடுகதையை விடுவித்த தோழருக்கு, தான் கொடுக்க வேண்டிய மாற்று வஸ்திரங்களைக் கொடுத்துவிட்டு, கோபமூண்டவராய், திம்னாத்திலிருந்து புறப்பட்டு தன்னுடைய தகப்பன் வீட்டிற்குப்போய்விடுகிறார்.

சிம்சோனைப்போலவே நாமும் இந்தப் பிரபஞ்சத்தில் வஞ்சகர்களையும், நன்றியில்லாதவர்களையும், நம்மைத் துன்பப்படுத்துகிறவர்களையும், நமக்கு தீங்கு செய்கிறவர்களையும் சந்திக்கிறோம். நாம் இந்த உலகத்தில் ஜீவிக்கும் வரையிலும் சத்துருக்கள் மூலமாய் நமக்கு பிரச்சனைகள் வந்துகொண்டேயிருக்கும். ஆனாலும் நம்முடைய பரலோக பிதாவின் வீட்டிலே நமக்கு ஆறுதலும் அமைதியும் உண்டு. சிம்சோன் தன்னுடைய தகப்பன் வீட்டிற்கு திரும்பிப்போனதுபோல, நாமும் நம்முடைய பரலோக பிதாவின் வீட்டிற்கு, ஜெபத்தோடும், விசுவாசத்தோடும் திரும்பிப்போகவேண்டும். கர்த்தருடைய பிரசன்னத்தில் நமக்கு ஆறுதலும், சந்தோஷமும், சமாதானமும் உண்டு.

நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில், வழியிலே நமக்கு பல சோதனைகள், பல தடைகள் இருந்தாலும், இவையெல்லாம் நாம் கர்த்தருடைய சமுகத்தில் நெருங்கிப்போவதற்கு நமக்கு உதவி செய்யவேண்டும். "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்மை அன்போடு அழைக்கிறார். அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, நாம் அவருடைய சமுகத்திற்குப்போகும் போது, நமக்கு ஆறுதலும், இளைப்பாறுதலும் உண்டு.

சிம்சோனின் பெண்சாதியும் அவருக்கு உண்மையுள்ளவளாயில்லை. சிம்சோனின் மாமனாரும் அவரை வஞ்சிக்கிறார். சிம்சோனின் பெண்சாதியோவென்றால், அவருடைய தோழரில் அவரோடே சிநேகமாயிருந்த ஒருவனுக்குக் கொடுக்கப்படுகிறாள். சிம்சோனின் மனைவியாயிருந்தவள் வேறொருவனின் மனைவியாகிறாள் (நியா 14:20).

15 அதிகாரம்

சிம்சோன் பெலிஸ்தரின் ஒரு குமாரத்தியை விவாகம்பண்ணினார். ஆனால் இப்போதோ சிம்சோன் அவர்களுக்கு விரோதமாக எழும்பியிருக்கிறார். கர்த்தருடைய செயலினால், சிம்சோன் பெலிஸ்தரிடத்தில் குற்றம் பிடிக்க முகாந்தரமுண்டாயிற்று (நியா 14:4).

சிம்சோனின் பெண்சாதி அவருக்கு துரோகம்பண்ணுகிறாள். அவளுடைய தகப்பனார், சிம்சோனின் பெண்சாதியை வேறொருவனுக்கு கொடுத்துவிடுகிறார். இதனால் கோபமடைந்த சிம்சோன் பெலிஸ்தருடைய கதிர்கட்டுகளையும், வெள்ளாண்மையையும், திராட்சத் தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும் சுட்டெரித்துப்போடுகிறார் (நியா 15:1-5).

பெலிஸ்தர் சிம்சோனுடைய பெண்சாதியையும், அவளுடைய தகப்பனையும் அக்கினியால் சுட்டெரிக்கிறார்கள். சிம்சோன் பெலிஸ்தர்மீது கோபமடைந்து, அவர்களை பழிவாங்கும் வண்ணமாக, அவர்களை சின்னபின்னமாக சங்காரம்பண்ணுகிறார் (நியா 15:6-8).

சிம்சோன் ஏத்தாம் ஊர் கன்மலை சந்திலே குடியிருக்கிறார். பெலிஸ்தர் சிம்சோனைப் பிடிக்க தேடிவருகிறார்கள். யூதா மனுஷர் சிம்சோனுக்கு துரோகம்பண்ணி, அவரைப் பிடித்து கட்டி, பெலிஸ்தரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார்கள். சிம்சோன் தாடை எலும்பினால் பெலிஸ்தரில் ஆயிரம்பேரைக் கொன்றுபோடுகிறார் (நியா 15:9-17).

சிம்சோனுக்கு தாகமுண்டாயிற்று. தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணுகிறார். அங்கேயிருந்து தண்ணீர் வருகிறது. சிம்சோனின் தாகம் தணிகிறது. சிம்சோன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரிக்கிறார் (நியா 15:18-20).

பெலிஸ்தர்
நியா 15:1-8

நியா 15:1. சிலநாள் சென்றபின்பு, சிம்சோன் கோதுமை அறுக்கிற நாட்களில் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை எடுத்துக் கொண்டு, தன் பெண்சாதியைக் காணப்போய்: நான் என் பெண்சாதியினிடத்தில் அறைவீட்டிற்குள் போகட்டும் என்றான்; அவள் தகப்பனோ, அவனை உள்ளே போக ஒட்டாமல்:

நியா 15:2. நீ அவளை முற்றிலும் பகைத்துவிட்டாய் என்று நான் எண்ணி, அவளை உன் சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டேன்; அவள் தங்கை அவளைப்பார்க்கிலும் அழகானவள் அல்லவா, அவளுக்குப் பதிலாக இவள் உனக்கு இருக்கட்டும் என்று சொன்னான்.

நியா 15:3. அப்பொழுது சிம்சோன்: நான் பெலிஸ்தருக்குப் பொல்லாப்புச் செய்தாலும், என்மேல் குற்றமில்லை என்று அவர்களுக்குச் சொல்லி,

நியா 15:4. புறப்பட்டுப்போய், முந்நூறு நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து, வாலோடே வால் சேர்த்து, இரண்டு வால்களுக்கும் நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்துக் கட்டி,

நியா 15:5. பந்தங்களை கொளுத்தி, பெலிஸ்தரின் வெள்ளாண்மையிலே அவைகளை ஓடவிட்டு, கதிர்க் கட்டுகளையும் வெள்ளாண்மையையும் திராட்சத்தோட்டங்களையும் ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப் போட்டான்.

நியா 15:6. இப்படிச் செய்தவன் யார் என்று பெலிஸ்தர் கேட்கிறபோது, திம்னாத்தானுடைய மருமகனாகிய சிம்சோன்தான்; அவனுடைய பெண்சாதியை அவனுடைய சிநேகிதனுக்குக் கொடுத்து விட்டபடியால் அப்படிச் செய்தான் என்றார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் போய், அவளையும் அவள் தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்தார்கள்.

நியா 15:7. அப்பொழுது சிம்சோன் அவர்களை நோக்கி: நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன் என்று சொல்லி,

நியா 15:8. அவர்களைச் சின்னபின்னமாகச் சங்காரம்பண்ணி, பின்பு போய், ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திலே குடியிருந்தான்.

சிம்சோனின் பெண்சாதி அவருக்கு துரோகம்பண்ணுகிறாள். இதனால் சிம்சோன் கோபமூண்டவராய், திம்னாத்திலிருந்து புறப்பட்டு, தன் தகப்பன் ஊருக்கு திரும்பிப்போகிறார். சில நாள் சென்ற பின்பு சிம்சோனின் கோபம் தணிகிறது. சிம்சோன் தன் பெண்சாதியைக் காணவேண்டுமென்று விரும்பி, திம்னாத்திற்கு திரும்பிப்போகிறார்.

சிம்சோன் தன் பெண்சாதியை விட்டுவிட்டு வந்ததினால் மனவேதனைப்படுகிறார். தன்னுடைய பெண்சாதியோடு ஒப்புரவாகவேண்டுமென்று விரும்புகிறார். தன்னுடைய மனந்திரும்புதலுக்கு அடையாளமாக ஒரு வெள்ளாட்டுக்குட்டியை எடுத்துக்கொண்டு, தன் மனைவியைக் காண திம்னாத்திற்குப்போகிறார்.

சிம்சோனுக்கு ஏற்பட்டதுபோல, நம்முடைய குடும்ப வாழ்க்கையிலும், உற்றார் உறவினர்களுக்குள்ளே, கருத்து வேறுபாடுகளும், சண்டை சச்சரவுகளும் ஏற்படலாம். நாம் பகையை வளர்க்கக்கூடாது. நமக்கு விரோதமாக நம்முடைய உறவினர்கள் தீங்கு செய்திருந்தாலும் அவர்களை மன்னிக்கவேண்டும். அவர்கள் நமக்கு ஏற்படுத்தின காயங்களை மறக்கவேண்டும். அவர்களோடு ஒப்புரவாகி, நம்முடைய உறவுகளை புதுப்பித்து உறுதிபண்ணிக்கொள்ளவேண்டும்.

சிம்சோன் திம்னாத்திற்குப்போய், தன் பெண்சாதியின் தகப்பனைப் பார்க்கிறார். "நான் என் பெண்சாதியினிடத்தில் அறைவீட்டிற்குள் போகட்டும்" என்று சிம்சோன் தன் மாமனாரிடம் சொல்லுகிறார். ஆனால் சிம்சோனின் மாமனாரோ, சிம்சோனை அவருடைய பெண்சாதியின் அரைவீட்டிற்குள்ளே போக ஒட்டவில்லை. அவர் சிம்சோனை அனுமதிக்கவில்லை. சிம்சோனின் மாமனார், சிம்சோனின் பெண்சாதியை, சிம்சோனுடைய தோழரில் ஒருவனுக்கு கொடுத்துவிடுகிறார்.

சிம்சோனின் மாமனார் சிம்சோனுக்கு விரோதமாக தவறு செய்திருக்கிறார். ஆனாலும் தான் செய்ததை நியாயப்படுத்தும் வண்ணமாக, அவர் சிம்சோனிடம் ஒரு சில காரியங்களை சொல்லுகிறார். "நீ அவளை முற்றிலும் பகைத்துவிட்டாய் என்று நான் எண்ணினேன்" என்று சிம்சோனின் மாமனார் சிம்சோனிடத்தில் சொல்லுகிறார் (நியா 15:2).

சிம்சோனுக்கு அவருடைய மாமனார்மீது கோபம் வருகிறது. ஆனாலும் சிம்சோனின் மாமனார், சிம்சோனுடைய கோபத்தைத் தணிக்கும் வண்ணமாக அவரோடு ஆறுதலான வார்த்தைகளைப் பேசுகிறார். "அவள் தங்கை அவளைப்பார்க்கிலும் அழகானவள் அல்லவா, அவளுக்குப் பதிலாக இவள் உனக்கு இருக்கட்டும்" (நியா 15:2) என்று சொல்லுகிறார்.

சிம்சோனின் மாமனார் சொல்லுவது, மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமானது. சிம்சோன் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிகிறார். கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ய மறுக்கிறார்.

"உன் மனைவி உயிரோடிருக்கையில், அவளுக்கு உபத்திரவமாக அவள் சகோதரியையும் நிர்வாணமாக்கும்பொருட்டு அவளை விவாகம்பண்ணலாகாது" (லேவி 18:18).

சிம்சோனுடைய மனதிலே, அவருடைய மாமனார்மீது கோபம் பற்றியெழும்புகிறது. பெலிஸ்தர் எல்லோரும் மொத்தமாய்ச் சேர்ந்து தன்னை வஞ்சித்துவிட்டார்கள் என்று சிம்சோன் நினைக்கிறார். பெலிஸ்தருக்கு பொல்லாப்பு செய்தாலும் தன்மீது குற்றமில்லை என்று சிம்சோன் தீர்மானமாயிருக்கிறார்.

பெலிஸ்தர் சிம்சோனுக்கு விரோதமாகத் தீங்கு செய்தார்கள். சிம்சோன் தன்னை ஒரு தனிமனிதனாகப் பாவிக்காமல், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தன்னை ஒரு பிரதிநிதியாக பாவிக்கிறார். பெலிஸ்தர் தனக்கு விரோதமாகத் தீங்கு செய்தாலும், அவர்கள் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் விரோதமாகத் தீங்கு செய்கிறார்கள் என்று சிம்சோன் நினைக்கிறார்.

இஸ்ரவேல் புத்திரருக்கு பொல்லாப்பு செய்த பெலிஸ்தருக்கு தானும் பொல்லாப்பு செய்யவேண்டும் என்று சிம்சோன் தீர்மானம்பண்ணுகிறார். சிம்சோன் பெலிஸ்தருடைய கதிர் கட்டுகளையும், வெள்ளாண்மையையும், திராட்சத்தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் சுட்டெரித்துப்போடுகிறார். இது கோதுமை அறுக்கிற அறுவடைக்காலம். பெலிஸ்தர்கள் தங்கள் தானியங்களை அறுவடை செய்து, கதிர்கட்டுகளாக சேமித்து வைத்திருக்கிறார்கள். பெலிஸ்தரின் கதிர்கட்டுகளை சுட்டெரித்துப்போட்டால், பெலிஸ்தருக்கு போஜனம்பண்ண தானியம் இருக்காது. பெலிஸ்தருடைய தேசத்திலே பஞ்சம் ஏற்படும்.

சிம்சோன் நூதனமான முறையில் பெலிஸ்தரின் வெள்ளாண்மையை அழித்துப்போடுகிறார். அவர் புறப்பட்டுப்போய், முந்நூறு நரிகளைப் பிடித்து, பந்தங்களை எடுத்து, வாலோடே வால் சேர்த்து, இரண்டு வால்களுக்கும் நடுவே ஒவ்வொரு பந்தத்தை வைத்துக் கட்டுகிறார். அதன்பின்பு சிம்சோன், பந்தங்களை கொளுத்தி, பெலிஸ்தரின் வெள்ளாண்மையிலே அவைகளை ஓடவிட்டு, கதிர்க்கட்டுகளையும் வெள்ளாண்மையையும் திராட்சத் தோட்டங்களையும் ஒலிவத்தோப்புகளையும் சுட்டெரித்துப் போடுகிறார் (நியா 15:4,5).

பெலிஸ்தரின் வெள்ளாண்மையை அழிப்பதற்கு, சிம்சோன் பயன்படுத்திய முறை மிகவும் விநோதமாயிருக்கிறது. அவர் முந்நூறு நரிகளைப் பிடித்து, இரண்டு இரண்டு நரிகளாகப் பிரித்தெடுத்து, அவற்றின் வால்களைக் கட்டுகிறார். மொத்தம் இப்போது நூற்று ஐம்பது ஜோடி நரிகள் இருக்கிறது. நரிகளின் இரண்டு வால்களுக்கும் நடுவே ஒரு பந்தத்தைக் கட்டி, அவற்றை பெலிஸ்தரின் வெள்ளாண்மையில் துரத்திவிடுகிறார். அந்த நரிகள், தங்கள் வால்களில் எரிகிற பந்தங்களோடு, பெலிஸ்தரின் வெள்ளாண்மையில் அங்கும் இங்குமாக ஓடுகிறது. அவை பெலிஸ்தரின் வெள்ளாண்மையை சுட்டெரித்துப்போடுகிறது. நூற்று ஐம்பது ஜோடி நரிகளும், பெலிஸ்தரின் வெள்ளாண்மையில் அங்கும் இங்குமாக ஓடி, முழுவெள்ளாண்மையையும் சுட்டெரித்துப்போடுகிறது.

சிம்சோன் சத்துருக்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்போது, அவர் ஒரு தனிமனிதனாகவே நின்று யுத்தம்பண்ணுகிறார். சிம்சோன் தன்னோடு வேலையாட்களையோ, யுத்தவீரர்களையோ சேர்த்துக்கொண்டு, சத்துருக்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவில்லை. சிம்சோன் இங்கு நரிகளைப் பயன்படுத்துகிறார். இவை பலவீனமான மிருகம். சிம்சோன் மிருகங்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி, சத்துருக்களின் பலத்தை அழித்துப்போடுகிறார்.

சிம்சோன் இங்கு செய்கிற சம்பவம், விசுவாசிகளாகிய நமக்கு ஒரு எடுத்துக்காட்டாயிருக்கிறது. சபைக்கு விரோதமாக சத்துருக்கள் எழும்புகிறார்கள். அவர்கள் எரிகிற பந்தத்தைப்போல ஒன்றாய்க் கட்டப்பட்டிருக்கிறார்கள். சில சமயங்களில் தேவனுடைய சபைக்கு விரோதமாக சபிக்கப்பட்ட திட்டங்களும், துன்மார்க்கமான ஆலோசனைகளும் வரலாம். சத்துருக்கள் ஒன்று சேர்த்து கட்டப்பட்ட எரிகிற பந்தங்களைப்போல இருக்கிறார்கள். இவர்கள் சபைக்குள் பிரச்சனைகளை மூட்டி, பிரிவினைகளை உண்டுபண்ணி, சபையின் பரிசுத்தத்தையும், ஐக்கியத்தையும், ஊழியத்தையும் அழித்துப்போடுவார்கள்.

சிம்சோன் பெலிஸ்தருக்கு பெரிய நஷ்டத்தை உண்டுபண்ணுகிறார். இது கோதுமை அறுக்கிற அறுவடைக்காலம். தானியமெல்லாம் விளைந்து காய்ந்து போயிருக்கிறது. கதிர்க்கட்டுகளும் ஈரப்பதமில்லாமல் காய்ந்திருக்கிறது. இதை அக்கினியினால் சுட்டெரிப்பது மிகவும் எளிது. காய்ந்த கதிர்க்கட்டுக்களை ஏதாவது ஒரு இடத்தில் அக்கியினால் சுட்டெரித்தாலும், அந்த அக்கினி வேகமாக பரவி தீக்கொளுந்துவிட்டு எரியும். சிம்சோன் பந்தங்களைக் கொளுத்தி, அவற்றை நரிகளின் வாலோடே வால் சேர்த்து கட்டி, பெலிஸ்தரின் வெள்ளாண்மையிலே ஓடவிடுகிறார். எரிகிற தீப்பந்தங்களோ, வெள்ளாண்மையை சுட்டெரிப்பதோடு, திராட்சத்தோட்டங்களையும், ஒலிவத் தோப்புக்களையும் சுட்டெரித்துப்போடுகிறது.

பெலிஸ்தருடைய வெள்ளாண்மையெல்லாம் அக்கினியிலே அழிந்துபோகிறது. இப்படி செய்தவன் யார் என்று பெலிஸ்தர்கள் விசாரித்து கேட்கிறார்கள். "இப்படிச் செய்தவன் யார்" என்று பெலிஸ்தர் கேட்கிறபோது, திம்னாத்தானுடைய மருமகனாகிய சிம்சோன்தான்; அவனுடைய பெண்சாதியை அவனுடைய சிநேகிதனுக்குக் கொடுத்துவிட்டபடியால் அப்படிச் செய்தான் என்று சொல்லுகிறார்கள்; அப்பொழுது பெலிஸ்தர் போய், அவளையும் அவள் தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். ஒருவேளை பெலிஸ்தர் அவர்களுடைய வீட்டையும் சுட்டெரித்திருக்கலாம்.

சிம்சோன் தன்னுடைய தோழருக்கு விடுகதையைச் சொன்னபோது, அவர்கள் சிம்சோனுடைய பெண்சாதியினிடத்தில் "உன் புருஷன் அந்த விடுகதையை எங்களுக்கு விடுவிக்கும்படிக்கு நீ அவனை நயம்பண்ணு; இல்லாவிட்டால் நாங்கள் உன்னையும் உன் தகப்பன் வீட்டையும் அக்கினியால் சுட்டெரித்துப்போடுவோம்" (நியா 14:15) என்று சொன்னார்கள்.

சிம்சோனின் பெண்சாதி, தன் புருஷனுக்கு துரோகம்பண்ணினாள். தன்னையும் தன்னுடைய வீட்டையும் பெலிஸ்தரிடமிருந்து பாதுகாப்பதற்காக அவள் சிம்சோனை ஏமாற்றினாள். தாங்கள் செத்துப்போவோம் என்றும், தங்களுடைய வீடு அக்கினியினால் சுட்டெரிக்கப்படும் என்றும் பயந்து, இந்த அழிவுக்குத் தப்பிக்க ஒரு பாவத்தை செய்தாள். ஆனால் இந்தப் பாவத்தின் சாபம் அவள்மேல் வருகிறது. பெலிஸ்தர் அவளையும் அவளுடைய தகப்பனையும் அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள்.

தீமையான வழிகளிலும், பாவமான வழிகளிலும் நம்முடைய பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி பண்ணக்கூடாது. இப்படிப்பட்ட தப்பிதமான முயற்சிகள் நமக்கே ஆபத்தமாய் முடியும். பாவமும் சாபமும் நம்முடைய தலையின்மேல் தங்கியிருக்கும்.

தன்னுடைய பெண்சாதியையும், மாமனையும் பெலிஸ்தர் அக்கினியால் சுட்டெரித்ததைப் பார்த்து சிம்சோன் அவர்கள்மேல் கோபப்படுகிறார். அவர்களை பழிவாங்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார். பெலிஸ்தர் சிம்சோனின் பெண்சாதிக்கு மிகப்பெரிய தீங்கு செய்திருக்கிறார்கள். அவளுடைய எலும்பையும் மாம்சத்தையும் அக்கினியினால் சுட்டெரித்திருக்கிறார்கள்.

சிம்சோன் இப்போது இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதியாய்ப் பேசுகிறார். சிம்சோன் பெலிஸ்தரை நோக்கி "நீங்கள் இப்படிச் செய்தபடியால் நான் உங்கள் கையிலே பழிவாங்கினாலொழிய இளைப்பாறேன்" (நியா 15:7) என்று சொல்லுகிறார்.

சிம்சோன் நியாயாதிபதியாயிருந்து இந்த வழக்கை தனக்குள்ளே விசாரித்து, பெலிஸ்தருக்கு தீர்ப்பு சொல்லுகிறார். தான் சொன்ன தீர்ப்பை சிம்சோன் அப்படியே நிறைவேற்றுகிறார். சிம்சோன் அவர்களை சின்னபின்னமாக சங்காரம்பண்ணுகிறார். அதன் பின்பு அவர் ஏத்தாம் ஊர் கன்மலை சந்திலே குடியிருக்கிறார்.

பெலிஸ்தர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவார்களா அல்லது, தங்களுடைய பாவங்களில் பிடிவாதமாயிருந்து, தன்னைப் பிடிக்க வருவார்களா என்பது சிம்சோனுக்குத் தெரியவில்லை. சிம்சோன் தனக்கு பாதுகாப்பான இடத்தைத்தேடி அங்கே தங்கியிருக்கிறார். ஆனால் பெலிஸ்தரோ தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பவில்லை. அவர்கள் யூதாவிலே பாளயமிறங்கி சிம்சோனைப் பிடிப்பதற்கு திட்டமிடுகிறார்கள்.

கழுதையின் தாடையெலும்பு நியா 15:9-17

நியா 15:9. அப்பொழுது பெலிஸ்தர்போய், யூதாவிலே பாளயமிறங்கி, லேகி என்கிற வெளியிலே பரவியிருந்தார்கள்.

நியா 15:10. நீங்கள் எங்களுக்கு விரோதமாக வந்தது என்ன என்று யூதா மனுஷர் கேட்டதற்கு, அவர்கள்: சிம்சோன் எங்களுக்குச் செய்ததுபோல, நாங்களும் அவனுக்குச் செய்யும்படி அவனைக் கட்டுகிறதற்காக வந்தோம் என்றார்கள்.

நியா 15:11. அப்பொழுது யூதாவிலே மூவாயிரம் பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப் போய்: பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய் என்று சிம்சோனிடத்தில் சொன்னார்கள். அதற்கு அவன்: அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன் என்றான்.

நியா 15:12. அப்பொழுது அவர்கள்: உன்னைக் கட்டி, பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம் என்றார்கள். அதற்குச் சிம்சோன்: நீங்களேஎன்மேல் விழுகிறதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள் என்றான்.

நியா 15:13. அதற்கு அவர்கள்: நாங்கள் உன்னை இறுகக்கட்டி, அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல், உன்னைக் கொன்றுபோடமாட்டோம் என்று சொல்லி, இரண்டு புதுக் கயிறுகளாலே அவனைக் கட்டி, கன்மலையிலிருந்து கொண்டு போனார்கள்.

நியா 15:14. அவன் லேகிவரைக்கும் வந்து சேர்ந்தபோது, பெலிஸ்தர் அவனுக்கு விரோதமாய் ஆரவாரம் பண்ணினார்கள். அப்பொழுது கர்த்தருடைய ஆவி அவன் மேல் பலமாய் இறங்கினதினால், அவன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவன் கட்டுகள் அவன் கைகளை விட்டு அறுந்து போயிற்று.

நியா 15:15. உடனே அவன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோட்டான்.

நியா 15:16. அப்பொழுது சிம்சோன்: கழுதையின் தாடையெலும்பினால் குவியல் குவியலாகப் பட்டுக்கிடக்கிறார்கள், கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன் என்றான்.

நியா 15:17. அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையில் இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத் லேகி என்று பேரிட்டான்.

பெலிஸ்தர் சிம்சோனைப் பிடிப்பதற்கு கோபத்தோடு வருகிறார்கள். அவர்கள் யூதாவிலே பாளயமிறங்கி, லேகி என்கிற வெளியிலே பரவியிருக்கிறார்கள். சிம்சோனைப் பிடிப்பதற்காக, பெலிஸ்தர்கள் இஸ்ரவேல் தேசத்தின் எல்லா பாகங்களிலும் அங்கும் இங்குமாக பரவியிருக்கிறார்கள். சிம்சோன் யூதாவின் கன்மலைப்பகுதியிலே வந்திருக்கிறார் என்னும் செய்தியை பெலிஸ்தர் கேள்விப்பட்டு, அவர்கள் அங்கே வந்து பாளயமிறங்கியிருக்கிறார்கள்.

சிம்சோன் தனி ஒரு மனுஷன். ஒரு மனுஷனைப் பிடிப்பதற்கு, பெலிஸ்தரின் பெரியசேனை வந்திருக்கிறது. சிம்சோன் தனிநபராகயிருந்தாலும், அவர் தனக்குத்தானே, ஒரு பெரிய சேனையைப்போல பெலமுள்ளவராயிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கெத்சமனே தோட்டத்திலிருந்தபோது, அவரைப் பிடிப்பதற்கு போர்ச்சேவகரும், திரளான ஜனங்களும் வந்தார்கள். கர்த்தருடைய சித்தமில்லாமல், அவருடைய பிள்ளைகள்மேல் யாரும் கைபோடமுடியாது. சிம்சோன் பெலிஸ்தருடைய கையிலே தன்னை ஒப்புக்கொடுத்தால் மாத்திரமே, அவர்களால் சிம்சோனைப் பிடிக்க முடியும். இல்லையென்றால், பெலிஸ்தரின் சேனையால் சிம்சோனைப் பிடிக்க முடியாது. இப்போது வந்திருக்கிற சேனையைப்போல, இன்னும் பத்துமடங்கு பெரிய சேனை வந்தாலும், பெலிஸ்தரால் சிம்சோனைப் பிடிக்க முடியாது.

பெலிஸ்தர் தங்கள் தேசத்திலே ஏன் பாளயமிறங்கியிருக்கிறார்கள் என்று யூதா மனுஷருக்கு தெரியவில்லை. அவர்கள் பெலிஸ்தரிடம், "நீங்கள் எங்களுக்கு விரோதமாக வந்தது என்ன" (நியா 15:10) என்று கேட்கிறார்கள். பெலிஸ்தர் யூதா மனுஷருக்கு விரோதமாக வரவில்லை. அவர்கள் யூதாமனுஷருக்கு பிரதியுத்தரமாக, "சிம்சோன் எங்களுக்குச் செய்ததுபோல, நாங்களும் அவனுக்குச் செய்யும்படி அவனைக் கட்டுகிறதற்காக வந்தோம்" என்று சொல்லுகிறார்கள்.

யூதாவின் மனுஷருக்கு சிம்சோன் குடியிருக்கிற இடம் தெரியும். யூதாவின் மனுஷரோ சிம்சோனுக்கு பாதுகாப்புக் கொடுக்காமல், அவர்கள் சிம்சோனை பெலிஸ்தரிடத்தில் காட்டிக்கொடுக்கிறார்கள். ஒரு காலத்தில் யூதாகோத்திரத்தார் பராக்கிரமசாலிகளாயும், யுத்தசன்னத்தராயும் இருந்தார்கள். ஆனால் இப்போதோ அவர்களுடைய பலமும் பராக்கிரமமும் குறைந்துபோயிற்று.

சிம்சோன் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவரல்ல. அவர் தாண் கோத்திரத்தைச் சேர்ந்தவர். சிம்சோன் தங்கள் கோத்திரத்தை சேர்ந்தவரல்ல என்னும் காரணத்தினிமித்தமாக, யூதாகோத்திரத்தாருக்கு சிம்சோன்மீது அன்பும் பாசமும் இல்லாமல் போயிற்று. ஒருவேளை யூதாகோத்திரத்தார், தாண் கோத்திரத்தானாகிய சிம்சோன்மீது பொறாமைப்பட்டிருக்கலாம். யூதா மனுஷர், தங்கள் பொறாமையினாலும், மதியீனத்தினாலும், தாண் கோத்திரத்திலுள்ள சிம்சோனை பாதுகாப்பதற்குப் பதிலாக, பெலிஸ்தர் தங்களை ஒடுக்குவதற்கு ஒப்புக்கொடுக்கிறார்கள்.

பல சமயங்களில் திருச்சபையின் ஊழியமும், அதன் வளர்ச்சியும், பொறாமை குணமுள்ள சில மனுஷராலும், தங்களுடைய சொந்த கனத்தையும், மகிமையையும், மேன்மையையும் நாடுகிற சுயநலக்காரராலும் தடைபடுகிறது. பாவம் மனுஷரை வஞ்சிக்கிறது. பாவம் மனுஷரை பலவீனப்படுத்துகிறது. பாவிகள் தங்கள் சமாதானத்தைத் தேடுவதில்லை. நம்முடைய சமாதானத்திற்கு உதவியாகயிருக்கும் காரியங்களைப் பார்க்கக்கூடாதபடிக்கு, நம்முடைய பாவங்கள், நம்முடைய மனக்கண்களை குருடாக்கிவிடும்.

யூதாகோத்திரத்தார் இஸ்ரவேல் தேசத்தின் எல்லையில் குடியிருக்கிறார்கள். சிம்சோன் ஏத்தாம் ஊர் கன்மலை சந்திலே குடியிருந்து, யூதா மனுஷருக்கு ஊழியம் செய்ய ஆயத்தமாயிருந்தார். இஸ்ரவேல் புத்திரரை பெலிஸ்தரின் கையிலிருந்து இரட்சிப்பதற்கு, கர்த்தர் தன்னைப் பயன்படுத்துவார் என்பதை யூதா மனுஷர் புரிந்துகொள்வார்கள் என்று சிம்சோன் எதிர்பார்த்தார்.

சிம்சோனைப்போலவே, மோசேயும் எதிர்பார்த்தார். "தன்னுடைய கையினாலே தேவன் தங்களுக்கு இரட்சிப்பைத் தருவாரென்பதைத் தன்னுடைய சகோதரர் அறிந்து கொள்வார்களென்று அவன் நினைத்தான்; அவர்களோ அதை அறியவில்லை" (அப் 7:25).

யூதா மனுஷரோ சிம்சோனைப் பாதுகாக்க வரவில்லை. அவர்கள் சிம்சோனைக் கட்டி பெலிஸ்தரின் கையிலே ஒப்புக்கொடுத்துவிடலாம் என்று தீர்மானம்பண்ணுகிறார்கள். யூதாவின் மனுஷர் பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாயில்லை. இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரை பெலிஸ்தரின் கைக்கு பாதுகாப்பதற்கு பதிலாக, யூதா மனுஷர் பெலிஸ்தரோடு சமாதானமாயிருப்பதையே நாடுகிறார்கள். பெலிஸ்தர் தங்களை ஒடுக்கினாலும், அதை சகித்துக்கொள்ளவும் ஆயத்தமாயிருக்கிறார்கள்.

யூதாவிலே மூவாயிரம் பேர் ஏத்தாம் ஊர்க் கன்மலைச் சந்திற்குப் போகிறார்கள். சிம்சோன் அங்கே குடியிருக்கிறார். யூதா மனுஷர் சிம்சோனிடத்தில், "பெலிஸ்தர் நம்மை ஆளுகிறார்கள் என்று தெரியாதா? பின்னை ஏன் எங்களுக்கு இப்படிச் செய்தாய்" (நியா 15:11) என்று கேட்கிறார்கள். அதற்கு சிம்சோன்: "அவர்கள் எனக்குச் செய்தபடியே நானும் அவர்களுக்குச் செய்தேன்" என்று சொல்லுகிறார்.

அப்பொழுது யூதா மனுஷர் சிம்சோனிடம், "உன்னைக் கட்டி, பெலிஸ்தர் கையில் ஒப்புக்கொடுக்க வந்திருக்கிறோம்" என்று சொல்லுகிறார்கள். அதற்குச் சிம்சோன்: "நீங்களே என்மேல் விழுகிறதில்லை என்று எனக்கு ஆணையிடுங்கள்" என்று அவர்களிடத்தில் சொல்லுகிறார் (நியா 15:12).

அதற்கு யூதா மனுஷர் சிம்சோனிடம் "நாங்கள் உன்னை இறுகக்கட்டி, அவர்கள் கையில் ஒப்புக்கொடுப்போமே அல்லாமல், உன்னைக் கொன்றுபோடமாட்டோம்" என்று சொல்லுகிறார்கள். அவர்கள் சிம்சோனை இரண்டு புதுக் கயிறுகளாலே கட்டி, கன்மலையிலிருந்து கொண்டுபோகிறார்கள் (நியா 15:13).

சிம்சோன் தன்னை யூதா மனுஷரிடத்தில் ஒப்புக்கொடுக்கிறார். சிம்சோன் பராக்கிரமசாலியாயிருந்தாலும், இந்த சூழ்நிலையில் அவர் தன்னுடைய பொறுமையைக் காத்துக்கொண்டு, தன்னை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கிறார். சிம்சோனின் பொறுமை அவருடைய நற்குணத்திற்கு எடுத்துக்காட்டாயிருக்கிறது. சிம்சோன் தன்னை யூதா மனுஷரிடத்தில் ஒப்புக்கொடுப்பதினால், அவர் ஒரு கோழை என்றோ அல்லது பலவீனமானவர் என்றோ சொல்ல முடியாது. அவருடைய தாழ்மையில் பலமும், வீரமும், பராக்கிரமமும் கலந்திருக்கிறது.

சிம்சோன் தன்னுடைய ஆவியை அடக்கி ஆளுகை செய்யக்கூடியவர். சிம்சோனுக்கு எவ்வாறு யுத்தம்பண்ண வேண்டும் என்பது நன்றாய்த் தெரியும். யுத்தத்திலே எப்படி ஜெயம்பெறவேண்டும் என்பதும், தன்னை ஒப்புக்கொடுத்து எப்படி கீழ்ப்படியவேண்டும் என்பதும் சிம்சோனுக்கு நன்றாய்த் தெரியும்.

சிம்சோன் தன்னைப் பிடிக்க வந்திருக்கிற யூதாவின் மனுஷர் மூவாயிரம் பேரையும் பார்க்கிறார். அவர்களைத் தன்னிடத்திற்கு அனுப்பின பெலிஸ்தரின் சேனையையும் பார்க்கிறார். சிம்சோனுக்கு யூதாமனுஷர்மீது கோபமில்லை. பெலிஸ்தரை அழிக்கவேண்டும் என்பதே சிம்சோனின் நோக்கம். இதற்காகவே, யூதாவின் மனுஷர் தன்னைப் பிடித்து கட்டி, பெலிஸ்தரிடம் ஒப்புக்கொடுப்பதை சிம்சோன் அனுமதிக்கிறார். தான் பெலிஸ்தருடைய கையிலிருந்தால், அங்கே ஏராளமான பெலிஸ்தரை சங்காரம்பண்ண முடியும் என்பது சிம்சோனின் திட்டம்.

பெலிஸ்தர் வஞ்சக குணமுள்ளவர்கள். பெலிஸ்தரை ஏமாற்றித்தான் அவர்களோடு யுத்தம்பண்ணவேண்டுமென்று சிம்சோன் தீர்மானம் செய்திருக்கிறார். பெலிஸ்தர் இஸ்ரவேல் மனுஷருக்கு சத்துருக்களாயிருக்கிறார்கள். சிம்சோன் பெலிஸ்தர் மூலமாய் தனக்கு வரும் வேதனைகளையும், அவமானங்களையும் சிறிதுகாலம் தாங்கிக்கொண்டு, அவர்களை முற்றிலுமாய் அழிக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்.

இந்த சம்பவத்தில் யூதாமனுஷரின் உண்மையான சுபாவம் வெளிப்படுகிறது. யூதாமனுஷர் சிம்சோனுக்கு சத்துருக்களல்ல. ஆனாலும் அவர்கள் சிம்சோனை பெலிஸ்தரிடத்திலே காட்டிக்கொடுக்கிறார்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், செல்லும் இடங்களுக்கெல்லாம், நன்மை செய்கிறவராய் சுற்றித்திரிந்தார். அவருக்கு யாரும் சத்துரு இல்லை. ஆனாலும் அவருடைய சீஷர்களில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து, இயேசுகிறிஸ்துவுக்கு சிநேகிதனாயிருந்து கொண்டு, அவரைக் காட்டிக்கொடுத்தான்.

யூதாமனுஷர் சிம்சோனை இரண்டு புதுக்கயிறுகளாலே கட்டுகிறார்கள். அவர்கள் சிம்சோனை ஏத்தாம் ஊர் கன்மலையிலிருந்து பெலிஸ்தரிடத்தில் கொண்டு போகிறார்கள். சிம்சோன் இரண்டு புதுக்கயிறுகளாலே கட்டப்பட்டிருக்கிறார். பெலிஸ்தர் யூதாவிலே பாளயமிறங்கி, லேகி என்கிற வெளியிலே பரவியிருக்கிறார்கள். யூதாமனுஷர் சிம்சோனை லேகி வரைக்கும் அழைத்துக்கொண்டு வருகிறார்கள்.

பெலிஸ்தர்கள் அங்கே சிம்சோனைப் பார்த்து ஆரவாரம்பண்ணுகிறார்கள். சிம்சோனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தைகளைப் பேசுகிறார்கள். சிம்சோனுக்கு விரோதமான யுத்தத்திலே தங்களுக்கு ஜெயம் கிடைத்ததுபோல, பெலிஸ்தர் ஆரவாரம்பண்ணுகிறார்கள்.

பெலிஸ்தர் சிம்சோனுக்கு விரோதமாய் ஆரவாரம்பண்ணியபோது, கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன்மேல் பலமாய் இறங்குகிறார். கர்த்தருடைய ஆவியானவருக்கு விரோதமாக யாராலும் யுத்தம்பண்ண முடியாது. கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன்மேல் பலமாய் இறங்கினதினால், சிம்சோன் புயங்களில் கட்டியிருந்த கயிறுகள் நெருப்புப்பட்ட நூல்போலாகி, அவருடைய கட்டுகள் அவர் கைகளை விட்டு அறுந்து போயிற்று (நியா 15:14).

யூதாமனுஷர் சிம்சோனை இரண்டு புதுப்பெயர்களால் கட்டினார்கள். ஆனால் அந்தக் கயிறுகள் அறுந்துபோயிற்று. கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன்மேல் பலமாய் இறங்கினபோது, சிம்சோனுக்கு புதுபெலன் உண்டாயிற்று. அந்தப் பெலத்திற்கு முன்பாக, இரண்டு கயிறுகளும் அறுந்துபோயிற்று. பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம்பண்ணப்பட்ட சிம்சோனை, கயிறுகளால் கட்டி ஒடுக்க முடியவில்லை.

சிம்சோனுக்கு விரோதமாக ஆரவாரம் பண்ணுகிற பெலிஸ்தர், இந்த சம்பவத்தைப் பார்த்து அதிர்ச்சியடைகிறார்கள். ஆச்சரியமும் பயமும் அவர்களை சூழ்ந்துகொள்கிறது. பெலிஸ்தரின் சந்தோஷ ஆரவாரம், பயத்தின் அலறலாய் மாறிற்று. கர்த்தருடைய ஆவியானவர் எங்கே இருக்கிறாரோ அங்கே விடுதலை உண்டு. கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை விடுவிக்கும்போது, அவர்கள் மெய்யாகவே விடுதலை பெறுவார்கள்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையிலே தம்முடைய ஜீவனை நமக்காக ஒப்புக்கொடுத்தார். அவருடைய சரீரத்தை கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். கல்லறையினால் இயேசுகிறிஸ்துவை அடக்கி வைக்க முடியவில்லை. கிறிஸ்துவானவர் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்தார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரிசுத்த ஆவியானவரின் பலத்தினால் உயிர்த்தெழுந்தார். மரணத்தின் கட்டுக்களை அவிழ்த்தார். இயேசுகிறிஸ்துவின் சரீரத்தை அடக்கம்பண்ணியபோது, அவரைச் சுற்றி கட்டியிருந்த சேலைகளை, அவர் அவிழ்க்காமலேயே, அவை தானாகவே அவிழ்ந்து விழுகிறது.

கிறிஸ்துவானவர் தம்முடைய வல்லமையினால் மரித்துப்போன லாசருவை எழுப்பினார். ஆனால் அவருடைய சரீரத்தில் கட்டப்பட்டிருந்த சேலைகளை, மற்றவர்கள் அவிழ்க்க வேண்டியதாயிற்று.

உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவை, சேலைகளால் கட்ட முடியவில்லை. "இயேசுவை சிலுவையில் அறையும்" என்று யூதர்கள் கூக்குரலிட்டார்கள். அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசி ஆர்ப்பரித்தார்கள். இயேசுகிறிஸ்துவோ தம்முடைய உயிர்த்தெழுந்த வல்லமையினால், சாத்தானின் அந்தகார வல்லமைகளை முறித்துப்போட்டார்.

சிம்சோனின் கட்டுகள் அவர் கைகளைவிட்டு அறுந்துபோயிற்று. அதைப் பார்த்து பெலிஸ்தர்கள் பயப்படுகிறார்கள். சிம்சோனின் கைகள் கட்டியிருப்பதினால், சிம்சோனை ஒரு வேடிக்கைப் பொருளைப்போல பாவித்து, அவரைக் கொடுமைப்படுத்தலாம் என்று பெலிஸ்தர்கள் நினைத்தார்கள். ஆனால் சிம்சோனோ தம்மைச் சுற்றிலும் கூடியிருக்கிற பெலிஸ்தரை மொத்தமாய்ச் சங்காரம்பண்ணுகிறார்.

சிம்சோனிடத்தில் யுத்த ஆயுதம் எதுவுமில்லை. அங்கே ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பு இருக்கிறது. சிம்சோனைச் சுற்றிலும் ஆயிரகணக்கானோர் இருக்கிறார்கள். ஒரு தாடையெலும்பினால் இத்தனை பெலிஸ்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவது மிகவும் கடினம். ஆனாலும் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்று சொல்லுவதுபோல, சிம்சோன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக் கண்டு, தன் கையை நீட்டி அதை எடுத்து, அதினாலே ஆயிரம் பேரைக் கொன்றுபோடுகிறார் (நியா 15:15). ஆயிரம் பெலிஸ்தரும் அந்த இடத்திலேயே செத்துப்போகிறார்கள்.

சிம்சோன் ஆயிரம் பெலிஸ்தரை கொன்றுபோட்டபோது அவர் தன்னை உயர்த்தவில்லை. கர்த்தருக்கு முன்பாக சிம்சோன் தன்னைத் தாழ்த்துகிறார். கர்த்தரும் சிம்சோனைத் தாழ்த்துகிறார். கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன்மேல் பலமாய் இறங்கினதினாலேயே, சிம்சோன் ஆயிரம் பெலிஸ்தரைக் கொன்றுபோடுகிறார்.

சிம்சோனின் கையிலே ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பு இருப்பதற்கு பதிலாக, ஒரு சிங்கத்தின் தாடையெலும்பு இருந்திருக்குமென்றால், அவர் அதைப் பார்த்து பெருமைப்படுவதற்கு வாய்ப்புள்ளது. அந்தத் தாடையெலும்பும், சிம்சோன் ஏற்கெனவே கொன்றுபோட்ட சிங்கத்தின் தாடையெலும்பாகயிருக்குமென்றால், அவர் இன்னும் அதிகமாய்ப் பெருமைப்பட வாய்ப்புள்ளது. ஆனால் சிம்சோனின் கையிலுள்ளதோ ஒரு கழுதையின் தாடையெலும்பு. இதனால் சிம்சோன் பெருமைப்படுவதற்கே வாய்ப்பில்லாமல் போயிற்று. தன்னுடைய சுயபலத்தினாலோ அல்லது சுயபராக்கிரமத்தினாலோ ஆயிரம் பெலிஸ்தரை கொன்றுபோட்டதாக சிம்சோன் பெருமைப்பட முடியாது.

கர்த்தர் இந்த உலகத்தில் சாதாரணமாகயிருக்கும் காரியங்களைக் கொண்டு, பெரிய காரியங்களை செய்கிறார். மனுஷனுடைய பலத்தினாலல்ல, கர்த்தர் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினாலே, பெரிய காரியங்களை செய்கிறார்.

சிம்சோன் ஆயிரம் பெலிஸ்தரை ஒரு கழுதையின் தாடையெலும்பினால் கொன்றுபோடுகிறார். சிம்சோனுக்கு மிகப்பெரிய வெற்றி கிடைத்திருக்கிறது. இந்த வெற்றியை அவர் சந்தோஷமாய்க் கொண்டாடுகிறார். யூதாவின் மனுஷர் சிம்சோனோடு சேர்ந்து, பெலிஸ்தருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவில்லை. சிம்சோன் ஆயிரம் பெலிஸ்தரைக் கொன்றுபோட்டதை, யூதா மனுஷர் பார்வையாளர்களைப்போல பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் சிம்சோனை புகழவுமில்லை, பாராட்டவுமில்லை. சிம்சோனின் சந்தோஷத்தில் பங்குபெறவுமில்லை.

சிம்சோன் பெலிஸ்தர்மீது தனக்கு கிடைத்த ஜெயத்தை கொண்டாடும் வண்ணமாக, ஒரு ஜெயக்கீதத்தை எழுதுகிறார். இந்தக் கீதத்தை அவரே எழுதி, அவரே பாடுகிறார். யூதா மனுஷர் சிம்சோனோடு சேர்ந்து, இந்தக் கீதத்தைப் பாடவில்லை.

"கழுதையின் தாடையெலும்பினால் குவியல் குவியலாகப் பட்டுக்கிடக்கிறார்கள், கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன்" (நியா 15:16) என்பதே சிம்சோனின் ஜெயகீதமாகும்.

எபிரெய பாஷையிலே "கழுதை" என்னும் வார்த்தைக்கு "காமோர்" என்னும் எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. "காமோர்" என்னும் வார்த்தைக்கு "கழுதை" என்றும், "கூட்டம்" என்றும் பொருள் சொல்லலாம். சிம்சோன் பாடிய பாடலுக்கு, "பெலிஸ்தர் கழுதைகளைப்போல குவியல் குவியலாய்ப் பட்டுக்கிடக்கிறார்கள்" என்றும் பொருள் சொல்லலாம்.

கர்த்தருடைய ஆவியானவர் சிம்சோன்மேல் பலமாய் இறங்கினதினாலேயே, சிம்சோனால் ஆயிரம் பெலிஸ்தரைக்கொல்ல முடிந்தது. ஆனால் சிம்சோன் இந்தப் பாடலில், கர்த்தருடைய நாமத்தைத் துதிக்கவில்லை. கர்த்தரை மகிமைப்படுத்தவில்லை. "கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம்பேரைக் கொன்றேன்" என்று தன்னுடைய சுயபலத்தையும், சுயபராக்கிரமத்தையும் பெருமைப்படுத்தி பாடுகிறார்.

சிம்சோன் அப்படிச் சொல்லித் தீர்ந்தபின்பு, தன் கையில் இருந்த தாடையெலும்பை எறிந்துவிட்டு, அவ்விடத்திற்கு ராமாத் லேகி என்று பேரிடுகிறார் (நியா 15:17). "ராமாத்லேகி" என்னும் பெயருக்கு "தாடையெலும்பை உயர்த்துதல்" என்று பொருள்.

எந்நக்கோரி
நியா 15:18-20

நியா 15:18. அவன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: தேவரீர் உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்க, இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ என்றான்.

நியா 15:19. அப்பொழுது தேவன் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணினார்; அதிலிருந்து தண்ணீர் ஓடிவந்தது; அவன் குடித்தபோது அவன் உயிர் திரும்ப வந்தது, அவன் பிழைத்தான்; ஆனபடியால் அதற்கு எந்நக்கோரி என்று பேரிட்டான்; அது இந்நாள்வரையும் லேகியில் இருக்கிறது.

நியா 15:20. அவன் பெலிஸ்தரின் நாட்களில் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தான்.

சிம்சோன் ஒரு கழுதையின் பச்சைத் தாடையெலும்பைக்கொண்டு, ஆயிரம் பெலிஸ்தரைக் கொன்றுபோடுகிறார். அவர் பெலிஸ்தரை மகாபெரிய சங்காரம் பண்ணுகிறார். இந்த சம்பவம் நடைபெற்ற பிறகு சிம்சோனுக்கு ஒரு பிரச்சனை உண்டாகிறது. அவருக்கு குடிக்க தண்ணீர் கிடைக்கவில்லை. சிம்சோன் மிகவும் தாகமடைகிறார். தாகத்தினால் மயங்கி விழும் நிலமையிலிருக்கிறார்.

சிம்சோன் ஆயிரம் பெலிஸ்தரைக் கொன்றுபோட்ட பின்பு, பாடின பாடலில், அவர் கர்த்தருடைய பெயரை ஒரு தரம் கூட சொல்லவில்லை. சிம்சோனின் கைகளே பெலிஸ்தரை கொன்றுபோட்டதுபோல அவர் பாடினார். கர்த்தருடைய உதவியில்லாமல் சிம்சோனால் ஒன்றும் செய்ய முடியாது. ஆனால் சிம்சோனோ எல்லா பெருமைகளையும் தனக்கு மாத்திரம் எடுத்துக்கொண்டார். “கழுதையின் தாடையெலும்பினால் ஆயிரம் பேரைக் கொன்றேன்” என்று தன்னுடைய பலத்தையும், பராக்கிரமத்தையும் புகழ்ந்து பாடினார்.

இப்போதோ சிம்சோன் மிகவும் தாகமடைந்திருக்கிறார். அவருடைய சுயபலத்தினால் இந்த தாகத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சிம்சோன் மிகவும் தாகமடைந்து, கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். தனக்கு பேரும் புகழும் கிடைத்தபோது, சிம்சோன் கர்த்தரை மறந்துவிட்டார். இப்போதோ அவர் தாகத்தினால் செத்துப்போகக்கூடிய நிலமையிலிருக்கும்போது, கர்த்தருடைய உதவிக்காக அவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சிம்சோனைப்போலவே இன்றும் அநேகர் இருக்கிறார்கள். கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளை அவர்கள் மறந்து விடுகிறார்கள். கர்த்தரைத் துதித்து, அவரை ஸ்தோத்திரியாமலிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களைத் திருத்துவதற்காக, அவர்களுடைய ஜீவியத்தில் ஒரு சில பிரச்சனைகளை அனுமதிக்கிறார். அவர்களால் பிரச்சனையை தாங்கிக்கொள்ள முடியாமல் போகும்போது, அப்போது அவர்கள் கர்த்தரை நோக்கி ஜெபத்திலே கூப்பிடுகிறார்கள்.

தமக்கு நன்றி சொல்லாத ஜனங்களை, தம்மிடத்தில் நன்றியுள்ள இருதயத்தோடு திரும்பி வரப்பண்ணுவதற்காக, கர்த்தர் அவர்களுக்கு வேதனைகளையும் சோதனைகளையும் அனுமதிக்கிறார்.

சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிடும்போது தன்னுடைய ஜெபத்தில் இரண்டு காரியங்களை சொல்லுகிறார். அவையாவன : 1. சிம்சோன் தன்னை கர்த்தருடைய ஊழியக்காரராக அங்கீகரிக்கிறார். 2. சிம்சோன் இப்போது சத்துருக்களின் கைகளில் விழுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்.

சிம்சோன் தன்னைப்பற்றியும், கர்த்தர் தன் மூலமாய் செய்கிற காரியங்களைப்பற்றியும் தன்னுடைய ஜெபத்திலே சொல்லுகிறார். “தேவரீர், உமது அடியேன் கையினால் இந்தப் பெரிய இரட்சிப்பைக் கட்டளையிட்டிருக்கிறீர்” என்று நடந்த சம்பவங்களை சிம்சோன் ஜெபத்திலே சொல்லுகிறார். சிம்சோனுக்கு பெலிஸ்தர்மீது வெற்றி கிடைத்திருக்கிறது. சிம்சோன் இந்த வெற்றியைப்பற்றிச் சொல்லும்போது, இதை “பெரிய இரட்சிப்பு” என்று சொல்லுகிறார்.

கர்த்தர் சிம்சோனுக்கு உதவி செய்யவில்லையென்றால், அவரால் பெலிஸ்தரை ஜெயித்திருக்க முடியாது. பெலிஸ்தர் சிம்சோனைக் கொன்றுபோட்டிருப்பார்கள். நம்முடைய ஜீவியத்திலும் கர்த்தர் நமக்கு கடந்தகாலத்திலே, தம்முடைய வல்லமையையும், நன்மையையும், கிருபையையும், இரக்கத்தையும் வெளிப்படுத்தியிருப்பார். நம்முடைய ஜெபங்களில், அவற்றை நாம் நன்றியுள்ள இருதயத்தோடு நினைவுகூரவேண்டும். கர்த்தருடைய புதிய கிருபைகளுக்காகவும் புதிய இரக்கங்களுக்காகவும் விண்ணப்பம்பண்ணும்போது, அவர் நமக்கு ஏற்கெனவே காண்பித்த கிருபைகளையும் இரக்கங்களையும் நினைத்து அவருக்கு நன்றி சொல்லவேண்டும்.

சிம்சோன் இப்போது தாகமடைந்திருக்கிறார். அவருடைய சரீர பலமெல்லாம் அவரை விட்டு நீங்கிப்போயிற்று. அவரைச் சுற்றிலும் பெலிஸ்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விருத்தசேதனமில்லாதவர்கள். சிம்சோனுடைய பலம் குறைந்துபோனால், பெலிஸ்தர்கள் அவரை எளிதாகக் கொன்றுபோடுவார்கள். "இப்பொழுது நான் தாகத்தினால் செத்து, விருத்தசேதனம் இல்லாதவர்கள் கையிலே விழவேண்டுமோ" என்று சிம்சோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். சிம்சோன் செத்துப்போனால், பெலிஸ்தர் மிகவும் சந்தோஷப்படுவார்கள். தங்களுக்கு கிடைத்த ஜெயத்தை காத்திலும், அஸ்கலோனின் வீதிகளிலும் பிரகடனம்பண்ணுவார்கள்.

கர்த்தர் சிம்சோனுக்கு தம்முடைய கிருபையை வெளிப்படுத்துகிறார். சிம்சோனின் தாகத்தைத் தீர்த்து வைப்பதற்காக, கர்த்தர் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணுகிறார். அதிலிருந்து தண்ணீர் ஓடி வருகிறது. சிம்சோன் இதே லேகியில்தான், பெலிஸ்தரில் ஆயிரம்பேரைக் கொன்றுபோட்டார். இந்த இடத்திலிருந்து இப்போது தண்ணீர் ஓடி வருகிறது. சிம்சோன் அந்தத் தண்ணீரைக் குடிக்கிறார். அவருடைய தாகம் தீர்ந்துபோகிறது. அவருக்கு திரும்ப உயிர் வருகிறது. சிம்சோன் பிழைத்துக்கொள்கிறார்.

நாம் அன்றாடம் குடிக்கிற தண்ணீருக்காக கர்த்தரை நன்றியோடு துதிக்கவேண்டும். கர்த்தரே நம்முடைய தாகத்தைத் தீர்ப்பதற்கு அனுதினமும் தண்ணீரைக் கொடுக்கிறார். தண்ணீரில்லாமல் நம்மால் ஜீவிக்க முடியாது. நமக்கு குடிப்பதற்கு தண்ணீர் இல்லையென்றால், நாம் தாகத்தினால் செத்துப்போவோம்.

கர்த்தர் லேகியிலுள்ள பள்ளத்தைப் பிளக்கப்பண்ணி, அதிலிருந்து தண்ணீர் ஓடிவரப்பண்ணினார். சிம்சோன் அந்த இடத்திற்கு "எந்நக்கோரி" என்று பேரிடுகிறார். இந்தப் பெயருக்கு, "தான் கூப்பிட்டபோது தனக்கு கிடைத்த நீரூற்று" என்று பொருள். சிம்சோன் இந்த ஸ்தலத்திற்கு எந்நக்கோரி என்று பேரிட்டு, தான் தாகமடைந்து வேதனைப்பட்டதையும், கர்த்தர் தம்முடைய கிருபையினால் தனக்கு இரக்கம் காண்பித்ததையும் நினைவுகூருகிறார்.

கர்த்தர் தம்முடைய ஜனத்திற்கு ஏராளமான ஆறுதலின் ஊற்றுகளை திறந்துகொடுக்கிறார். நாம் பல சமயங்களில் நமக்கு ஆறுதல் வேண்டுமென்று கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறோம். நாம் கூப்பிடும்போது, கர்த்தர் நமக்கு ஆறுதலின் ஊற்றைத் திறந்து கொடுத்து, நமக்கு இரக்கம் காண்பிக்கிறார். கர்த்தர் நமக்குக் காண்பிக்கும் கிருபைகளையும் இரக்கங்களையும், சிம்சோனைப்போலவே, "எந்நக்கோரி" என்று அழைக்கலாம்.

சிம்சோன் கழுதையின் தாடையெலும்பினால், ஆயிரம் பேரை வெட்டிக்கொன்றுபோட்ட அந்த இடத்திற்கு, "ராமாத்லேகி" என்று ஆரம்பத்திலே பேரிட்டார். இந்தப் பெயருக்கு "தாடையெலும்பை உயர்த்துதல்" என்று பொருள். நம்முடைய முயற்சியினால் நாம் தாடையெலும்பை உயர்த்துவதினால் நமக்கு வெற்றி கிடைக்கப்போவதில்லை. கர்த்தர் தம்முடைய கிருபையை நமக்கு கொடுத்தால் மாத்திரமே, நமக்கு வெற்றி கிடைக்கும். நம்முடைய தேவைகளுக்கு, நம்முடைய சுயபலத்தை சார்ந்திராமல், கர்த்தருடைய கிருபையையே சார்ந்திருக்கவேண்டும்.

இந்த சம்பவங்கள் நடைபெற்ற பிறகு, சிம்சோன் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரிக்கிறார். இந்தக் காலங்களில் பெலிஸ்தரே இஸ்ரவேலை ஆளுகை செய்கிறார்கள். சிம்சோனுக்கு ஆபத்து வந்தபோது, இஸ்ரவேல் புத்திரர் அவருக்கு உதவி செய்யவில்லை. ஆனாலும் சிம்சோன் இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரிக்கிறார். இஸ்ரவேல் ஜனங்கள் சிம்சோனின் ஆளுகைக்கு கீழ்ப்படிந்திருக்கிறார்கள்.

விருத்தசேதனமில்லாத பெலிஸ்தர் இஸ்ரவேல் புத்திரரை ஒடுக்கினாலும், இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே அவர்களை ஆளுகை செய்வதற்கு கர்த்தர் சிம்சோனை நியாயாதிபதியாக எழுப்பியிருக்கிறார். இஸ்ரவேலருக்குள்ளே வழக்குகளும் பிரச்சனைகளும் வரும்போது, சிம்சோன் அவர்களை நியாயம் விசாரித்து, அவர்களுக்கு நீதியான தீர்ப்பு சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரர் ஒருவரையொருவர் அழித்துவிடக்கூடாது. அவர்களை ஆளுகை செய்வதற்கு, ஒரு நியாயாதிபதி வேண்டும். கர்த்தர் சிம்சோனை இஸ்ரவேலருடைய நியாயாதிபதியாக எழுப்பியிருக்கிறார்.

சிம்சோன், பெலிஸ்தரின் நாட்களில், இஸ்ரவேலை இருபது வருஷம் நியாயம் விசாரித்தார் (நியா 15:7) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் இந்தக் காலத்தில் நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. சிம்சோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்து, இருபது வருஷங்களுக்கு பின்பு நடைபெற்ற சம்பவம், அடுத்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

16 அதிகாரம்

சிம்சோன் என்னும் பெயருக்கு "சின்ன சூரியன்" என்று பொருள். சிம்சோன் என்னும் சூரியன் இதுவரையிலும் பிரகாசமாய் எரிகிறது. மதியவேளையிலே, சூரியன் அதிக பிரகாசமாய் எரிவதுபோல, சிம்சோனுடைய ஜீவியமும் அதிக பிரகாசமாயிருக்கிறது. சிம்சோன் இஸ்ரவேலை இருபது வருஷம் ஆளுகை செய்கிறார்.

மதியப்பொழுதுக்கு பின்பு மாலைப்பொழுது வரும். அப்போது சூரியனின் பிரகாசம் மங்கிப்போகும். அதுபோலவே, இப்போது சிம்சோனின் பெருமையும் மேன்மையும் மங்கிப்போகிறது. சிம்சோனுடைய ஜீவியம் மாலைப்பொழுதுபோல, மகிமை மங்கியதாயிருக்கிறது. மாலைப்பொழுதுக்கு பின்பு சூரியன் மறைந்துவிடும்.

மாலைப்பொழுதிலே, சூரியனின் பிரகாசம் மங்கினாலும் அது மறையும் வேளை நெருங்கி வந்தாலும், சூரியனின் ஒளிக்கதிர்கள் மேகத்தின் ஊடே பிரகாசமாய்த் தெரியும். அதுபோலவே சிம்சோனின் மகிமை மங்கிப்போகும் காலமாயிருந்தாலும், அவருடைய ஜீவியத்தில் ஒரு சில சம்பவங்கள். அவருடைய மேன்மைக்கு சாட்சியாயிருக்கிறது.

கிறிஸ்துவானவர் மரணத்தை ஜெயித்தார். சிம்சோன் கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறவர். அவரும் தன்னுடைய மரணத்தின் மூலமாய் அதிக மேன்மை பெற்றார்.

சிம்சோன் இஸ்ரவேல் தேசத்திலே, இஸ்ரவேல் புத்திரரை இருபது வருஷம் நியாயம் விசாரிக்கிறார். சிம்சோனுக்கு இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே மகிமையும் மேன்மையும் உண்டாயிற்று. இக்காலத்திலோ அல்லது, சிம்சோன் இஸ்ரவேலை நியாயம் விசாரித்த இருபது வருஷங்களுக்கு பின்போ, சிம்சோன் காசாவிலுள்ள ஒரு வேசியினிடத்தில் சிநேகமாயிருக்கிறார். காசா ஊரார் சிம்சோனை பிடிக்க வந்தபோது, சிம்சோன் அவர்களிடமிருந்து தப்பிக்கிறார் (நியா 16:1-3).

சிம்சோனுக்கு கிடைத்த மேன்மையினால், அவருடைய இருதயத்தில் பெருமை வந்திருக்கலாம். அவர் தன்னுடைய நசரேய விரதத்தை மறந்து, தனக்கு இஷ்டமானபடி தாறுமாறாய் ஜீவிக்கிறார். சிம்சோன் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார். சிம்சோன் மறுபடியும் தெலீலாள் என்னும் பெயருள்ள வேறொரு ஸ்திரீயோடு சிநேகமாயிருக்கிறார்.

தெலீலாள் சிம்சோனை வஞ்சிக்கிறாள். சிம்சோன் தன்னுடைய காமஇச்சையினால் அவளோடு சிநேகமாயிருக்கிறார் (நியா 16:4). சிம்சோனைப் பிடிப்பதற்கு, பெலிஸ்தர் தெலீலாளை ஒரு கருவியாகப் பயன்படுத்துகிறார்கள்.

சிம்சோனிடம் மகாபலம் இருக்கிறது. அந்தப் பலம் சிம்சோனுக்கு எதினால் உண்டாயிருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்குமாறு, பெலிஸ்தர் தெலீலாளுக்குச் சொல்லுகிறார்கள். இதை செய்தால் அவளுக்கு வெகுமதி கொடுப்பதாகவும் ஆசை வார்த்தைகளைப் பேசுகிறார்கள் (நியா 16:5-17).

சிம்சோனுடைய மகாபலம் எதினால் உண்டாயிற்று என்னும் இரகசியத்தை, தெலீலாள் வஞ்சகமாக கண்டுபிடிக்கிறாள். சிம்சோனே தன்னுடைய வாயினால் இந்த இரகசியத்தை அவளுக்கு சொல்லுகிறார் (நியா 16:18-20).

பெலிஸ்தர் சிம்சோனைப் பிடிக்கிறார்கள். சிம்சோனுடைய கண்களைப் பிடுங்கி, அவரை காசாவுக்கு கொண்டுபோகிறார்கள். சிம்சோன் சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்கிறார் (நியா 16:21-25). சிம்சோனும், பெலிஸ்தரும் ஒரு வீட்டிலிருக்கிறார்கள். அப்போது சிம்சோன் அந்த வீட்டின் தூண்களை பலமாய்ச் சாய்க்கிறார். வீடு இடிந்து விழுகிறது. அப்போது அந்த வீட்டிலிருந்த பெலிஸ்தரும் சிம்சோனும் மடிந்துபோகிறார்கள் (நியா 16:26-31).

காசாவிலே சிம்சோன்
நியா 16:1-3

நியா 16:1. பின்பு சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போனான்.

நியா 16:2. அப்பொழுது: சிம்சோன் இங்கே வந்திருக்கிறான் என்று காசா ஊராருக்குச் சொல்லப்பட்டது. அவர்கள்: காலையில் வெளிச்சமாகிற போது அவனைக் கொன்று போடுவோம் என்று சொல்லி, அவனை வளைந்து கொண்டு இராமுழுதும் அவனுக்காகப் பட்டணவாசலில் பதிவிருந்து இராமுழுதும் பேசாதிருந்தார்கள்.

நியா 16:3. சிம்சோன் நடுராத்திரிமட்டும் படுத்திருந்து, நடுராத்திரியில் எழுந்து, பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்து, தன் தோளின் மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்குச் சுமந்து கொண்டுபோனான்.

சிம்சோன் ஆரம்பத்திலேயே பெலிஸ்தரின் குமாரத்தி ஒருத்தியை தனக்கு மனைவியாகக் கொண்டார். இஸ்ரவேல் புத்திரர் அந்நிய ஜாதியாரோடு சம்மந்தம் வைத்துக்கொள்ளக்கூடாது. ஆனால் சிம்சோனோ இந்த விஷயத்தில், கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார். இதனால் அவருக்கு பல பிரச்சனைகள் உண்டாயிற்று.

சிம்சோன் தன்னுடைய பாவத்திற்கு இன்னும் மனந்திரும்பவில்லை. அவருடைய பாவம் மேலும் அதிகரிக்கிறது. சிம்சோன் இப்போது காசாவிலுள்ள ஒரு வேசியினிடத்தில் சிநேகமாயிருக்கிறார். சிம்சோன் ஒரு சாதாரண இஸ்ரவேலர் மாத்திரமல்ல. அவர் இஸ்ரவேல் புத்திரருக்கு நியாயாதிபதி. சிம்சோன் கர்த்தருக்கு நசரேயனாயிருக்கிறவர். இப்படிப்பட்டவர்கள் தங்கள் ஜீவியத்தில் மிகவும் ஒழுக்கமாயும், கண்ணியமாயும் பரிசுத்தமாயும் இருக்கவேண்டும். சிம்சோன் வேசியினிடத்தில் சிநேகமாயிருந்து, தன்னுடைய நல்ல பெயரை அவமானப்படுத்துகிறார்.

சிம்சோன் காசாவுக்குப் போய், அங்கே ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்தில் போகிறார் சிம்சோன் இங்கே வந்திருக்கிறார் என்று காசா ஊராருக்குச் சொல்லப்படுகிறது (நியா 16:1,2). ஒருவேளை அந்த வேசியே, காசா ஊராருக்கு, சிம்சோன் தன்னிடத்தில் வந்திருக்கிற செய்தியை வஞ்சகமாக சொல்லியிருக்கலாம்.

சிம்சோன் இப்போது காசா ஊரிலே இருக்கிறார். காசா ஊரார் நகரத்தின் கதவுகளை அடைத்துவிடுகிறார்கள். கதவுகளுக்கு தாழ்ப்பாள் போடுகிறார்கள். சிம்சோன் காசா ஊரைவிட்டு தப்பித்து போய்விடக்கூடாது என்றும், காலையில் வெளிச்சமாகிறபோது சிம்சோனைக் கொன்றுபோடவேண்டும் என்றும், காசா ஊரார் திட்டமிடுகிறார்கள். இதன் நிமித்தமாக அவர்கள் சிம்சோனை வளைந்துகொண்டு, இராமுழுவதும் சிம்சோனுக்காக பட்டண வாசலில் பதிவிருந்து, இராமுழுவதும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள்.

காசா ஊரார் தன்னைப் பிடிக்க வந்திருக்கிறார்கள் என்னும் சந்தேகம் சிம்சோனுக்கு வரக்கூடாது. இதன் நிமித்தமாகவே அந்த ஊரார் இராமுழுவதும் பேசாமல் அமைதியாயிருக்கிறார்கள். சிம்சோன் இப்போது காசா ஊரிலுள்ள வேசியின் வீட்டிலிருக்கிறார். சிம்சோன் அந்த வீட்டிலே சிறைப்பிடிக்கப்பட்டிருப்பதாக காசா ஊரார் நினைக்கிறார்கள். ஆகையினால் காலையில் வெளிச்சமாகிறபோது சிம்சோனை கென்றுபோடலாம் என்று நிச்சயமாய் நம்புகிறார்கள்.

சிம்சோனுடைய ஜீவனுக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவரைச் சுற்றிலும் சத்துருக்கள் பதிவிருக்கிறார்கள். சிம்சோனோ வேசியின் வீட்டில், தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றிக்கொண்டிருக்கிறார். அவர் பாவத்திலும் அசுத்தத்திலும் நிரம்பியிருக்கிறார். சிம்சோன் வேசியின் வீட்டிலே குடித்து வெறித்திருப்பதற்கும் வாய்ப்புள்ளது. சிம்சோன் காசாவிலுள்ள வேசியின் வீட்டிலே, மாம்சப்பிரகாரமாக சந்தோஷமாயிருக்கிறார். ஆனால் அவரைச் சுற்றிலும் சத்துருக்கள் சூழ்ந்திருக்கிறார்கள்.

இக்காலத்திலும் ஏராளமான ஜனங்கள் குடித்து வெறித்து, மாம்சப்பிரகாரமாக சந்தோஷமாயிருக்கிறார்கள். தங்கள் மாம்சத்தின் இச்சைகளை நிறைவேற்றுவதே தங்களுக்கு சந்தோஷம் என்று சொல்லுகிறார்கள். அவர்கள் தங்களை பாவத்திற்கும் அசுத்தத்திற்கும் ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட பாவிகளை, ஆவிக்குரிய சத்துருக்கள் சூழ்ந்துகொள்வார்கள். தங்களைச் சுற்றிலும் ஆவிக்குரிய ஆபத்து இருக்கிறது என்பதை உணராமலேயே, பாவிகள் பாவத்திலே ஜீவிக்கிறார்கள்.

சிம்சோன் வேசியின் வீட்டிலே நடுராத்திரி மட்டும் படுத்திருக்கிறார். நடுராத்திரியிலே அவர் திடீரென்று எழும்புகிறார். ஒருவேளை சிம்சோனுடைய மனச்சாட்சி அவரை எழுப்பியிருக்கலாம். வேசியின் வீட்டிலிருப்பது பாவம் என்பதை அவருடைய மனச்சாட்சி உணர்த்தியிருக்கலாம். சிம்சோன் ஒருவேளை தான் செய்த பாவத்திற்காக மனந்திரும்பி, இனிமேலும் இந்தப் பாவத்தை செய்யக்கூடாது என்று நினைத்து, நடுராத்திரியிலே எழும்பியிருக்கலாம். இந்த வேசியின் வீட்டிற்கு இனிமேல் திரும்பி வரக்கூடாது என்றும் சிம்சோன், கர்த்தருக்குள் தீர்மானம் செய்திருக்கலாம்.

சிம்சோன் வேசியின் வீட்டிற்கு வருவதற்கு முன்பாகவே, அவருடைய மனச்சாட்சி, அவருடைய பாவத்தை, அவருக்கு உணர்த்தியிருக்கவேண்டும். வேசியின் வீட்டிற்குள் போவதற்கு முன்பாகவே, இப்படிப்பட்ட இடங்களுக்குப் போகக்கூடாது என்று அவர் தீர்மானம் செய்திருக்கவேண்டும். ஒருவேளை சிம்சோனுடைய மனச்சாட்சி, அவருடைய பாவங்களை அவருக்கு உணர்த்தியிருந்தாலும், அவர் தன்னுடைய மனச்சாட்சியின் சத்தத்திற்கு செவிகொடுக்காமல், கீழ்ப்படியாமல், வேசியின் வீட்டிலே நடுராத்திரி மட்டும் படுத்திருக்கிறார்.

சிம்சோன் நடுராத்திரியிலே எழுந்து, சிறிதும் காலதாமதம்பண்ணாமல், அந்த வேசியோடு எதுவும் பேசாமல், காசா ஊர் பட்டணத்து வாசல் கதவுகள் இருக்கும் இடத்திற்குப் போகிறார். சிம்சோன் அந்தக் கதவுகளை உடைத்து, அவற்றை திறக்கவேண்டுமென்று நினைத்து காலதாமதம்பண்ணவில்லை.

சிம்சோன், காசா பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்து, தன் தோளின் மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்குச் சுமந்து கொண்டுபோகிறார் (நியா 16:3).

காசா ஊரார் சிம்சோனைப் பிடிப்பதற்கு பட்டணத்தின் வாசல் கதவுகளை தாழ்ப்பாள் போட்டு அடைத்திருக்கிறார்கள். ஆனால் சிம்சோனோ அந்தக் கதவுகளை தாழ்ப்பாளோடு பெயர்த்தெடுக்கிறார். சிம்சோன் கர்த்தருடைய விசேஷித்த பலத்தினால் நிரப்பப்பட்டிருக்கிறார் என்பதற்கு இது அடையாளமாயிருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து கல்லறையிலே அடக்கம்பண்ணப்பட்டிருந்தபோது, அவர் மரணத்தை ஜெயித்தார். கல்லறையை மூடியிருந்த பெரிய கல்லை புரட்டிப்போட்டார். இயேசுகிறிஸ்து கல்லறையிலிருந்து வெளியே வருவதற்கு வேறு யாரும் அவருக்கு உதவி செய்யவில்லை. கிறிஸ்துவானவர் தாமே, தம்முடைய உயிர்த்தெழுதலின் வல்லமையினால், மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்து, கல்லறையைவிட்டு வெளியேறி வந்தார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை பாதாளத்தின் வாசல்களால் மேற்கொள்ள முடியவில்லை. இயேசுகிறிஸ்துவின் சரீரம் பாதுகாப்பாயிருக்கவேண்டும் என்பதற்காக, கல்லறையின் வாயிலை பெரிய கல்லினால் மூடினார்கள். அதற்கு முத்திரையும் இட்டார்கள். ஆனால் இயேசுகிறிஸ்துவை கல்லறையினால் அடைத்து வைக்க முடியவில்லை. இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்தபோது, கல்லறையை மூடியிருந்த கல்லுக்கு பலமில்லாமல் போயிற்று. கிறிஸ்துவானவர் உயிர்த்தெழுந்து கல்லறையை விட்டு வெளியேறினார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இப்போது அந்தக் கல்லறையில் இல்லை. கிறிஸ்துவின் கல்லறை இப்போது காலியாயிருக்கிறது.

தெலீலாள்
நியா 16:4-17

நியா 16:4. அதற்குப்பின்பு அவன் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிற தெலீலாள் என்னும் பேருள்ள ஒரு ஸ்திரீயோடே சிநேகமாயிருந்தான்.

நியா 16:5. அவளிடத்திற்குப் பெலிஸ்தரின் அதிபதிகள் போய்: நீ அவனை நயம்பண்ணி, அவனுடைய மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்றும், நாங்கள் அவனைக் கட்டிச் சிறுமைப்படுத்துகிறதற்கு எதினாலே அவனை மேற்கொள்ளலாம் என்றும் அறிந்துகொள்; அப்பொழுது நாங்கள் ஒவ்வொருவரும் ஆயிரத்துநூறு வெள்ளிக்காசு உனக்குக் கொடுப்போம் என்றார்கள்.

நியா 16:6. அப்படியே தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.

நியா 16:7. அதற்கு சிம்சோன்: உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளாலே என்னைக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான்.

நியா 16:8. அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளை அவளிடத்திற்குக் கொண்டுவந்தார்கள்; அவைகளால் அவள் அவனைக் கட்டினாள்.

நியா 16:9. பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டிலே காத்திருக்கும்போது, அவள்: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அப்பொழுது, சணல்நூலானது நெருப்புப்பட்டவுடனே இற்றுப்போகிறதுபோல, அவன் அந்தக் கயிறுகளை அறுத்துப்போட்டான்; அவன் பலம் இன்னதினாலே உண்டாயிருக்கிறது என்று அறியப்படவில்லை.

நியா 16:10. அப்பொழுது தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதோ, என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; இப்போதும் உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்.

நியா 16:11. அதற்கு அவன்: இதுவரைக்கும் ஒரு வேலைக்கும் வழங்காதிருக்கிற புதுக்கயிறுகளால் என்னை இறுகக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன் என்றான்.

நியா 16:12. அப்பொழுது தெலீலாள், புதுக்கயிறுகளை வாங்கி, அவைகளால் அவனைக் கட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; பதிவிருக்கிறவர்கள் அறைவீட்டில் இருந்தார்கள்; ஆனாலும் அவன் தன் புயங்களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போட்டான்.

நியா 16:13. பின்பு தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: இதுவரைக்கும் என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும் என்றாள்; அதற்கு அவன்: நீ என் தலைமயிரின் ஏழுஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிட்டால் ஆகும் என்றான்.

நியா 16:14. அப்படியே அவள் செய்து, அவைகளை ஆணியடித்து மாட்டி: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டெழும்பி, நெசவு ஆணியையும் நூல்பாவையுங்கூடப் பிடுங்கிக்கொண்டுபோனான்.

நியா 16:15. அப்பொழுது அவள் அவனைப் பார்த்து: உன் இருதயம் என்னோடே இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம் பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற்போனாயே என்று சொல்லி,

நியா 16:16. இப்படி அவனைத் தினம்தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக் கொண்டிருக்கிறதினால், சாகத்தக்கதாய் அவன் ஆத்துமா விசனப்பட்டு,

நியா 16:17. தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தி: சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன் என்று அவளிடத்தில் சொன்னான்.

"நெருப்புக் காயம்பட்ட பிள்ளை நெருப்புக்குப் பயப்படும்" என்று பழமொழி சொல்லுவார்கள். சிம்சோனுக்கு நெருப்புக்காயம்பட்டதுபோல, காசா ஊரிலே அவருக்கு கசப்பான அனுபவம் உண்டாயிற்று. ஆனால் அவர் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பியதாக தெரியவில்லை. சிம்சோனிடத்தில் மனுஷரிடத்தில் காணப்படும் சாதாரண பலத்தைவிட, விசேஷித்த பலம் இருக்கிறது. ஆனால் சிம்சோனிடத்திலுள்ள ஞானமோ, ஒரு சிறு பிள்ளையின் ஞானத்தைவிட குறைவாயிருக்கிறது.

சிம்சோன் ஏற்கெனவே இரண்டு ஸ்திரீகள் மூலமாக தன் ஜீவனுக்கு ஆபத்தை சந்தித்திருக்கிறார். ஸ்திரீகளின் சிநேகமும், மாம்ச இச்சையும் பெரிய ஆபத்தாக அவரை நோக்கி வந்தது. கர்த்தருடைய கிருபையினால் சிம்சோன் அவ்விரண்டு சம்பவங்களிலும் தப்பித்துக்கொண்டார். ஆனாலும் சிம்சோன் அந்த சம்பவங்களை, தனக்கு கொடுக்கப்பட்ட எச்சரிப்பாக நினைக்கவில்லை. சிம்சோன் மறுபடியும் மறுபடியும் பாவம் செய்கிறார்.

சிம்சோன் இதற்கு முன்பு காசா ஊரிலுள்ள ஒரு வேசியின் கண்ணியில் விழுந்தார். அதற்கு முன்பாக, அவர் பெலிஸ்தரின் குமாரத்தி ஒருத்தியின்மீது சிநேகம் வைத்து, அவளுடைய கண்ணியில் விழுந்தார். இப்போது மூன்றாம் முறையாக தெலீலாள் என்னும் பெயருள்ள ஒரு ஸ்திரீயின் கண்ணியிலே விழுகிறார்.

தெலீலாள் சிம்சோனை அழிவுக்கு நேராக வழிநடத்துகிறாள். தெலீலாள் என்னும் பேரே ஒரு அசுத்தமான பெயர். வஞ்சகமும் சூதும் நிரம்பிய பெயர். இவள் வெளி வேஷத்திற்கு சிநேகத்தைக் காண்பிக்கிறாள். ஆனால் இவளுக்குள்ளே சூதும், வஞ்சகமும் நிரம்பியிருக்கிறது. சிம்சோன் அவளுடைய வெளி அழகைப்பார்த்து, அவளோடே சிநேகமாயிருக்கிறார்.

தெலீலாள் சோரேக் ஆற்றங்கரையில் இருக்கிறாள். அங்கே இருக்கிற இந்த ஸ்திரீயை சிம்சோன் கண்டுபிடித்து, அவளிடத்தில் போய், அவளோடே சிநேகமாயிருக்கிறார் (நியா 16:4). தெலீலாள் இஸ்ரவேல் ஜனத்தை சேர்ந்தவளா அல்லது பெலிஸ்தியரை சேர்ந்தவளா என்பது தெளிவாகத் தெரியவில்லை. அவள் இஸ்ரவேல் தேசத்தை சேர்ந்தவளாக இருந்தாலும், அவளுடைய இருதயத்தில் பெலிஸ்தருடைய குணாதிசயமே நிரம்பியிருக்கிறது.

சிம்சோன் தெலீலாளின் வீட்டிற்குப்போகிறார். பெலிஸ்தரின் அதிபதிகளும் அவளிடத்திற்குப் போகிறார்கள். சிம்சோனை வஞ்சித்து, அவரை தங்களிடத்தில் ஒப்புவிக்குமாறு, பெலிஸ்தரின் அதிபதிகள் தெலீலாளிடம் பேரம் பேசுகிறார்கள்.

சிம்சோனைக் கட்டி சிறுமைப்படுத்தவேண்டும். இதுவே தங்களுடைய நோக்கம் என்று பெலிஸ்தரின் அதிபதிகள் தெலீலாளிடம் சொல்லுகிறார்கள். சிம்சோனை கட்டி சிறுமைப்படுத்துவதைத் தவிர, அவரைக் கொன்றுபோடும் நோக்கம் தங்களுக்கு இல்லை என்பதையும் அவர்கள் தெலீலாளிடம் சொல்லுகிறார்கள். சிம்சோனை மேற்கொள்ளவேண்டும் என்பதே அவர்களுடைய விருப்பமாயிருக்கிறது.

சிம்சோனிடத்தில் மகாபலம் இருக்கிறது. ஆனால் அந்த மகாபலம் எதினால் உண்டாயிருக்கிறது என்பது பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு தெரியவில்லை. சாதாரணமாக எந்த மனுஷனிடத்திலும் காணப்படாத விசேஷித்த பலம் சிம்சோனிடத்தில் காணப்படுவதால், அந்த மகாபலம் உண்டாயிருப்பதற்கு, ஏதாவது விசேஷித்த காரணம் இருக்கும் என்று பெலிஸ்தரின் அதிபதிகள் நினைக்கிறார்கள்.

சிம்சோனுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள பெலிஸ்தரின் அதிபதிகள் விரும்புகிறார்கள். தாங்கள் சிம்சோனை எப்படி மேற்கொள்ளலாம் என்றும், சிம்சோனை எதினால் கட்டி, அவரை சிறுமைப்படுத்தலாம் என்றும் அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகிறார்கள். பெலிஸ்தரின் அதிபதிகள் இவற்றை அறிந்துகொள்வதற்கு, அவர்களுக்கு தெலீலாளின் உதவி தேவைப்படுகிறது.

பெலிஸ்தரின் அதிபதிகள் சிம்சோனுடைய ஜீவனுக்கோ அல்லது தெலீலாளின் ஜீவனுக்கோ தீங்குசெய்யப்போவதில்லை என்றும் அவளுக்கு உறுதிசொல்லுகிறார்கள். அவர்கள் தெலீலாளிடம் நயமாய்ப் பேசுகிறார்கள்.

தெலீலாள் இந்த உதவியை தங்களுக்கு செய்து கொடுத்தால், பெலிஸ்தரின் அதிபதிகள் ஒவ்வொருவரும் 1,100 வெள்ளிக் காசுகளை அவளுக்கு கொடுப்பதாகவும் வாக்குப்பண்ணுகிறார்கள். பெலிஸ்தரின் அதிபதிகள் ஐந்து பேர். இவர்கள் ஒவ்வொருவரும் ஆளுக்கு 1,100 வெள்ளிக்காசுகளைக் கொடுத்தால், மொத்தம் 5,500 வெள்ளிக்காசுகளைக் கொடுப்பார்கள். பெலிஸ்தரின் அதிபதிகள் தெலீலாளிடம் ஆசை வார்த்தைகளை சொல்லுகிறார்கள். தெலீலாளும் 5,500 வெள்ளிக் காசுகளுக்கு ஆசைப்பட்டு, சிம்சோனுக்கு துரோகம்பண்ண சம்மதிக்கிறாள்.

தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: "உன் மகா பலம் எதினாலே உண்டாயிருக்கிறது, உன்னைச் சிறுமைப்படுத்த உன்னை எதினாலே கட்டலாம் என்று நீ எனக்குச் சொல்லவேண்டும்" (நியா 16:6) என்று கேட்கிறாள். சிம்சோனுக்கு ஆசை வார்த்தைகளைச் சொல்லியும், நயமான வார்த்தைகளைச் சொல்லியும் மாத்திரமே அவரை மயக்க முடியும் என்பது தெலீலாளுக்கு நன்றாய்த் தெரியும். வேறு எந்த வழியிலும் சிம்சோனை மயக்க முடியாது என்பதை அறிந்து, தெலீலாள் அவரை நயம் பண்ணுகிறாள். தெலீலாள் தன் வார்த்தைகளினாலே சிம்சோனை நெருக்கி அலட்டிக்கொண்டிருக்கிறாள்.

சிம்சோனும் தெலீலாளின் அலட்டலை தாங்கிக்கொள்ள முடியாமல், அவளிடம், "உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளாலே என்னைக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன்" (நியா 16:7) என்று சொல்லுகிறார்.

தெலீலாள் சிம்சோன் தனக்கு சொன்னதை பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு சொல்லுகிறாள். பெலிஸ்தரின் அதிபதிகள் உலராத பச்சையான ஏழு அகணிநார்க் கயிறுகளை அவளிடத்திற்குக் கொண்டு வருகிறார்கள்; அவைகளால் தெலீலாள் சிம்சோனைக் கட்டுகிறாள் (நியா 16:8). சிம்சோன் தன்னுடைய மகாபலத்தைப்பற்றி தனக்கு சொன்ன இரகசியத்தை தெலீலாள் பரீட்சித்துப் பார்க்கிறாள். உலராத பச்சையான ஏழு அகணிநார் கயிறுகளாலே சிம்சோனைக் கட்டுகிறாள்.

பதிவிருக்கிறவர்கள் தெலீலாளின் அறைவீட்டிலே காத்திருக்கிறார்கள். அப்பொழுது தெலீலாள் சிம்சோனிடம் "சிம்சோனே பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்" என்று சொல்லுகிறாள். அப்பொழுது, சணல்நூலானது நெருப்புப்பட்டவுடனே இற்றுப்போகிறதுபோல, சிம்சோன் அந்தக் கயிறுகளை அறுத்துப்போடுகிறார். சிம்சோனின் பலம் இன்னதினாலே உண்டாயிருக்கிறது என்று அறியப்படவில்லை (நியா 16:9).

தெலீலாளுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று. சிம்சோன் தன்னிடத்தில் பொய் சொல்லியிருக்கிறார் என்பதை தெலீலாள் அறிந்துகொள்கிறாள். அவள் உடனே கோபப்பட்டு சிம்சோனை, தன் வீட்டைவிட்டுத் துரத்திவிடவில்லை. தெலீலாள் சிம்சோனோடு பேசாமலும் இருந்துவிடவில்லை. தெலீலாள் சாகசக்காரியாயிருக்கிறாள். தான் நினைத்ததை சாதிக்கவேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறாள்.

தெலீலாள் சிம்சோனை தன் வார்த்தைகளினால் இதுவரையிலும் நெருக்கி அலட்டியதைவிட இப்போது அதிகமாய் அலட்டுகிறாள். தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: "இதோ, என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; இப்போதும் உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும்" (நியா 16:10) என்று கேட்கிறாள்.

சிம்சோன் தெலீலாள்மீது பிரியமாயிருக்கிறார். தெலீலாளை விட்டுப்பிரிய சிம்சோனுக்கு மனமில்லை. அதே வேளையில் தன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிற்று என்னும் இரகசியத்தை தெலீலாளுக்கு சொல்லவும் சிம்சோனுக்கு விருப்பமில்லை. ஆனால் தெலீலாளோ தன்னுடைய வார்த்தைகளினால், சிம்சோனை நெருக்கி அலட்டிக்கொண்டிருக்கிறாள்.

சிம்சோன் ஏற்கெனவே ஒருமுறை தெலீலாளிடம், தன் மகாபலம் எதினால் உண்டாயிற்று என்பது பற்றி பொய்சொன்னார். இப்போது மறுபடியும் வேறொரு பொய்யை யோசித்து அவளுக்கு சொல்லுகிறார். சிம்சோன் தெலீலாளிடம், "இதுவரைக்கும் ஒரு வேலைக்கும் வழங்காதிருக்கிற புதுக்கயிறுகளால் என்னை இறுகக் கட்டினால், நான் பலட்சயமாகி, மற்ற மனுஷனைப்போல் ஆவேன்" (நியா 16:11) என்று சொல்லுகிறார்.

சிம்சோன் தன்னிடம் பொய் சொல்லமாட்டார் என்று தெலீலாள் நம்புகிறாள். தன்னுடைய ஆசை வார்த்தைகளுக்கும், அலட்டல் வார்த்தைகளுக்கும் அதிகமான பலமுண்டு என்னும் நிச்சயம் தெலீலாளிடம் இருக்கிறது.

தெலீலாள், புதுக்கயிறுகளை வாங்கி, அவைகளால் சிம்சோனைக் கட்டுகிறாள். அவள் சிம்சோனிடம், "சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்" என்று சொல்லுகிறாள்; சிம்சோனைப் பிடிக்க பதிவிருக்கிறவர்கள் தெலீலாளின் அறைவீட்டில் இருக்கிறார்கள்; ஆனாலும் சிம்சோன் தன் புயங்களில் இருந்த கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போடுகிறார் (நியா 16:12).

தெலீலாளுக்கு மிகுந்த ஏமாற்றமுண்டாயிற்று. சிம்சோன் தெலீலாளிடம் இரண்டுமுறை பொய் சொல்லி அவளை ஏமாற்றிவிட்டார். இப்போது தெலீலாளிடமிருந்து பாசவார்த்தைகளும், பசப்பு வார்த்தைகளும் சேர்ந்து வருகிறது.

தெலீலாள் சிம்சோனைப் பார்த்து: "இதுவரைக்கும் என்னைப் பரியாசம்பண்ணி, எனக்குப் பொய்சொன்னாய்; உன்னை எதினாலே கட்டலாம் என்று எனக்குச் சொல்லவேண்டும்" என்று சொல்லுகிறாள்; அதற்கு சிம்சோன்: "நீ என் தலைமயிரின் ஏழுஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிட்டால் ஆகும்" (நியா 16:13) என்று மறுபடியும் ஒரு பொய்யை யோசித்து சொல்லுகிறார்.

தெலீலாள் சிம்சோனின் வார்த்தைகளை நம்பி அப்படியே செய்கிறாள். சிம்சோனின் தலைமயிரின் ஏழுஜடைகளையும் நெசவுநூல் பாவோடே பின்னி, அவைகளை ஆணியடித்து மாட்டுகிறாள். அதன் பின்பு அவள் சிம்சோனைப் பார்த்து, "சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்" என்று சொல்லுகிறாள்; சிம்சோன் நித்திரைவிட்டெழும்பி, நெசவு ஆணியையும் நூல்பாவையுங்கூடப் பிடுங்கிக்கொண்டுபோகிறார் (நியா 16:14). சிம்சோனின் மகாபலம் அவரைவிட்டு நீங்கவில்லை.

சிம்சோனுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்பதை அறிந்துகொள்ள தெலீலாள் மூன்றுதரம் முயற்சி பண்ணினாள். ஆனால் அவளுடைய முயற்சிகள் இதுவரையிலும் வீணாய்ப்போயிற்று. ஆனாலும் அவள் சோர்ந்துபோகவில்லை. சிம்சோனால் அதிகமான பொய்களை யோசித்து சொல்லவும் முடியவில்லை.

சிம்சோன் முதலில் கயிறுகளால் தன்னைக் கட்டவேண்டுமென்று சொன்னார். அதன் பின்பு புதுக்கயிறுகளால் தன்னை இறுகக்கட்டவேண்டும் என்று சொன்னார். மூன்றாம் தரமாக தன் தலைமயிரின் ஏழுஜடைகளை நெசவுநூல் பாவோடே பின்னிவிடவேண்டும் என்று சொன்னார்.

சிம்சோன் தன்னுடைய சரீரத்திலிருந்து, தன்னுடைய தலைமயிரின் ஏழுஜடைகளுக்கும் வந்துவிடுகிறார். சிம்சோன் தனக்கு மறைவாக விரிக்கப்பட்டிருக்கும் கண்ணிக்கு அருகாமையில் வருகிறார்.

சத்துரு நம்மை சோதிக்கும்போது, நாம் சோதனையைவிட்டு வெளியேறி வரவேண்டும். சத்துருவால் நம்மை மேற்கொள்ள முடியாது என்று, இருமாப்பாய் இருப்பபோமென்றால், நாம் அழிவுக்கு சமீபமாய் வந்துவிடுவோம். சத்துரு கெர்ச்சிக்கிற சிங்கம்போல சுற்றி அலைகிறவன். பிசாசானவன் மனுஷரை சோதிப்பதில் ஒருபோதும் சோர்ந்துபோகமாட்டான். மனுஷர் தன்னுடைய வலையில் விழும் வரையிலும், பிசாசு தன்னுடைய சோதனைகளை நிறுத்தமாட்டான்.

சிம்சோனுடைய மகாபலம் அவருடைய தலைமயிரிலிருக்கிறது. ஆனால் சிம்சோனோ இந்த உண்மையை சொல்லாமல், தன்னுடைய தலைமயிரின் ஏழுஜடைகளைப்பற்றிச் சொல்லுகிறார். அவர் தன் இரகசியத்தை வெளிப்படுத்துவதற்கு மிகவும் அருகாமையிலிருக்கிறார்.

விசுவாசிகளாகிய நாம் பாவத்தை விட்டு விலகி ஜீவிக்கவேண்டும். பாவத்திற்கு அருகாமையில் நின்றுகொண்டு, நம்மால் பரிசுத்தமாய் ஜீவிக்க முடியுமென்று இருமாப்பாயிருக்கக்கூடாது. நாம் சாத்தானோடும் விளையாடக்கூடாது. கர்த்தரோடும் விளையாடக்கூடாது. நம்முடைய விசுவாசத்தோடும் விளையாடக்கூடாது. நம்முடைய பரிசுத்தத்தோடும் விளையாடக்கூடாது. நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திலே நாம் மிகுந்த எச்சரிப்போடிருக்கவேண்டும்.

சிம்சோன் தன்னை மூன்றாம் முறையும் பொய்சொல்லி ஏமாற்றிவிட்டார் என்பதை தெலீலாள் அறிந்துகொள்கிறாள். தான் இதுவரையிலும் சிம்சோனை தன்னுடைய வார்த்தைகளினால் நெருக்கி அலட்டியதைவிட, இன்னும் அதிகமாய் நெருக்கி அலட்டவேண்டுமென்று தெலீலாள் தீர்மானம்பண்ணுகிறாள்.

தெலீலாள் சிம்சோனைப் பார்த்து, "உன் இருதயம் என்னோடே இராதிருக்க, உன்னைச் சிநேகிக்கிறேன் என்று நீ எப்படிச் சொல்லுகிறாய்? நீ இந்த மூன்றுவிசையும் என்னைப் பரியாசம் பண்ணினாய் அல்லவா, உன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்று எனக்குச் சொல்லாமற்போனாயே" (நியா 16:15) என்று தன் வார்த்தைகளினால் நெருக்கி அலட்டுகிறாள்.

சிம்சோன் தெலீலாளின் வார்த்தைகளைக்கேட்டு மிகவும் விசனப்படுகிறார். அவருடைய சந்தோஷம் அவரைவிட்டு நீங்கிப்போகிறது. சிம்சோனின் சந்தோஷம் துக்கமாய் மாறிற்று. தெலீலாள், இப்படி, சிம்சோனை, தினம் தினம் தன் வார்த்தைகளினால் நெருக்கி அலட்டிக்கொண்டிருக்கிறாள். இதனால் சிம்சோனின் ஆத்துமா சாகத்தக்கதாய் விசனப்படுகிறது. தெலீலாளின் அலட்டலை சிம்சோனால் இதற்குமேல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. சிம்சோன் மிகவும் விசனப்பட்டு தன் இருதயத்தையெல்லாம் தெலீலாளுக்கு வெளிப்படுத்துகிறார்.

தெலீலாள் சிம்சோனை தினம் தினம் அதிகமாய் அலட்டியபோது, சிம்சோன் விசனப்பட்டு, தன்னுடைய மகாபலம் எதினாலே உண்டாயிருக்கிறது என்னும் இரகசியத்தை அவளுக்கு சொல்லுகிறார். "சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன்" (நியா 16:17) என்று சிம்சோன் தெலீலாளுக்கு தன்னுடைய மகாபலத்தின் இரகசியத்தை சொல்லுகிறார். இந்த முறை சிம்சோன் பொய் சொல்லவில்லை. அவர் தெலீலாளை ஏமாற்றவில்லை. சிம்சோன் தன்னுடைய இருதயத்தையெல்லாம் தெலீலாளுக்கு வெளிப்படுத்துகிறார்.

சிம்சோன் தன்னுடைய மகாபலத்தின் இரகசியத்தைப்பற்றி, தெலீலாளுக்கு ஒவ்வொரு முறையும் சொன்னபோது, தெலீலாள் அதைப் பரீட்சித்துப்பார்க்கிறாள். இது சிம்சோனின் பலவீனமா அல்லது தெலீலாளின் துன்மார்க்கமா அல்லது இவ்விரண்டும் சேர்ந்ததா என்று தெளிவாகத் தெரியவில்லை.

தெலீலாள் தன்னுடைய துன்மார்க்கத்தில் உறுதியாயிருக்கிறாள். சிம்சோனுடைய மகாபலம் எதினால் உண்டாயிருக்கிறது என்னும் இரகசியத்தை அறிந்துகொள்வதில் தெலீலாள் தீர்மானமாயிருக்கிறாள். அதற்காக விடாமுயற்சி செய்கிறாள். இந்த இரகசியம் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு தெரிந்தால், சிம்சோனின் ஜீவனுக்கு ஆபத்து உண்டாகும் என்பது தெலீலாளுக்கு தெரியும். ஆனால் தெலீலாளுக்கு சிம்சோனின் ஜீவனைவிட, பெலிஸ்தரின் அதிபதிகள் கொடுப்பதாக வாக்குப்பண்ணின 5,500 வெள்ளிக்காசுகளை பெரிதாயிருக்கிறது.

சிம்சோன் தன்னுடைய இருதயத்தையெல்லாம் தெலீலாளுக்கு வெளிப்படுத்துகிறார். சிம்சோன் இப்போது பொய்சொல்லவில்லையென்றும், அவர் தன்னுடைய இருதயத்தையெல்லாம் தனக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்றும் தெலீலாள் கண்டுகொள்கிறாள்.

தெலீலாள் சிம்சோனைத் தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணி, ஒருவனை அழைத்து, சிம்சோனுடைய தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, சிம்சோனைச் சிறுமைப்படுத்தத் தொடங்குகிறாள்; சிம்சோனின் பலம் அவரைவிட்டு நீங்கிற்று (நியா 16:17).

தெலீலாள் சிம்சோனை தன் மடியிலே நித்திரைசெய்யப்பண்ணியதினால், அவள் தன் மீது அன்பாயிருக்கிறாள் என்று சிம்சோன் நம்புகிறார். தெலீலாள் தன் மாசற்ற அன்பினால் சிம்சோனை தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணவில்லை. அவள் வெள்ளிக்காசுகளுக்கு ஆசைப்பட்டு, சிம்சோனை வஞ்சிக்கவேண்டும் என்பதற்காக, அவரை தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணுகிறாள்.

தெலீலாள் சிம்சோனிடம், அவருடைய மகாபலம் எதினால் உண்டாயிற்று என்று திரும்பத் திரும்ப கேட்டபோது, சிம்சோனுக்கு புத்தி தெளிந்திருக்கவேண்டும். அவள் ஏன் தன்னிடத்தில் இதைக் கேட்கிறாள் என்பதைப் புரிந்துகொண்டு, சிம்சோன் தெலீலாளைவிட்டு விலகிப்போகவேண்டும்.

ஆனால் சிம்சோனுக்கோ தெலீலாளை விட்டுப் பிரிய மனதில்லை. தெலீலாளின் மடியில் நித்திரை பண்ணுவது, மரணத்தின் மடியில் நித்திரைபண்ணுவதற்கு சமீபமானது என்பதை அறிந்தும், சிம்சோன் தன்னுடைய இருதயத்தை அவளுக்கு வெளிப்படுத்துகிறார்.

சிம்சோன் தெலீலாளிடத்தில் இதுவரையிலும் பொய் சொன்னாலும், இப்போது உண்மையைச் சொல்லுகிறார். தன்னுடைய மகாபலம் எதினால் உண்டாயிருக்கிறது என்கிற இரகசியத்தை சிம்சோன் தெலீலாளுக்கு வெளிப்படுத்துகிறார். சிம்சோன் தனக்குத்தானே அழிவை வரவழைத்துக்கொள்கிறார். சிம்சோன் தெலீலாளை நம்புகிறார். இந்த இரகசியத்தை அவள் மற்றவர்களுக்கு சொல்லமாட்டாள் என்று நினைக்கிறார். ஆனால் தெலீலாளின் உண்மையான இருதயமும், அந்த இருதயத்திலுள்ள வஞ்சக எண்ணமும் சிம்சோனுக்குத் தெரியவில்லை.

தெலீலாள் சிம்சோனிடத்தில், அவருடைய மகாபலத்தின் இரகசியத்தை அறிந்துகொள்வதற்கு, பல உபாயங்களை யோசிக்கிறாள். சிம்சோன் தன்னை சிநேகிப்பதாகச் சொல்லுவது உண்மையானதல்ல என்று தெலீலாள் சிம்சோனுக்கு சொல்லுகிறாள். தெலீலாள் சிம்சோனை தினம் தினம் தன் வார்த்தைகளினாலே நெருக்கி அலட்டிக்கொண்டிருந்ததினால், சிம்சோனுடைய சந்தோஷம் துக்கமாய் மாறிற்று.

சிம்சோன் தன்னுடைய மாம்சத்தின் இச்சைகளுக்கு இடம் கொடுத்தார். சிம்சோன் மதியீனமான காரியங்களை செய்ய வேண்டுமென்று தீர்மானம்பண்ணியதினால், கர்த்தர் அவரைக் கைவிட்டுவிட்டார். சிம்சோன் அசுத்தத்திலும் மாம்ச இச்சையிலும் விழுந்தார். கர்த்தர் தம்முடைய நீதியினால் சிம்சோனுக்கு நீதியான தண்டனைகளைக் கொடுக்க வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்.

"நீ கர்ப்பந்தரித்து, ஒரு குமாரனைப் பெறுவாய்; அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது; அந்தப் பிள்ளை பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்" (நியா 13:5) என்று சிம்சோன் பிறப்பதற்கு முன்பாகவே, அவரைப்பற்றி, அவரை பெற்றெடுக்கப்போகும் தாயாருக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. சிம்சோனின் தாயாரும் இந்த இரகசியத்தை அவருக்கு சொல்லியிருக்கிறாள்.

சிம்சோனோ தெலீலாள்மீது வைத்திருந்த ஆசை மயக்கத்தினாலும், மோகத்தினாலும், தன்னுடைய இருதயத்தையெல்லாம், அவளுக்கு வெளிப்படுத்துகிறார். "சவரகன் கத்தி என் தலையின்மேல் படவில்லை; நான் என் தாயின் கர்ப்பத்தில் பிறந்ததுமுதல் தேவனுக்கென்று நசரேயனானவன்; என் தலை சிரைக்கப்பட்டால், என் பலம் என்னை விட்டுப்போம்; அதினாலே நான் பலட்சயமாகி, மற்ற எல்லா மனுஷரைப்போலும் ஆவேன்" (நியா 16:17) என்று தன் மகாபலத்தின் இரகசியத்தை சிம்சோன் தெலீலாளுக்கு வெளிப்படுத்துகிறார்.

சிம்சோன் தேவனுக்கென்று நசரேயனாயிருக்க வேண்டியவர். இதுவே சிம்சோனுடைய மகாபலத்திற்கு காரணம். சிம்சோன் தன்னுடைய நசரேய விரதத்தைக் காத்துக்கொள்ளாமல், அதை இழந்துவிட்டால், அவருடைய மகாபலம் அவரைவிட்டு நீங்கிப்போகும். சவரகன் கத்தி சிம்சோனின் தலையின்மேல் பட்டால், அவர் தேவனுக்கு நசரேயனாயிருக்கமாட்டார். அவர் தேவனுக்கு நசரேயனாயிருக்கவில்லையென்றால், சிம்சோனுடைய மகாபலம் அவரை விட்டு நீங்கிப்போகும்.

கர்த்தருடைய பலம் தன்னிடத்தில் நிலைத்திருக்கவேண்டுமென்றால், சிம்சோன் கர்த்தருடைய கிருபையில் நிலைத்திருக்கவேண்டும். கர்த்தர் தனக்கு கட்டளையிட்டிருக்கிற தெய்வீக பிரமாணங்களைக் கனப்படுத்தி, அவற்றிற்கு கீழ்ப்படியவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், அவருடைய கிருபையைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும், நாம் தொடர்ந்து பாவம் செய்தாலும் கர்த்தருடைய கிருபை நம்மோடு எப்போதும் தங்கியிருக்கும் என்றும் எதிர்பார்க்கக்கூடாது.

சிம்சோன் தன்னுடைய ஜீவியத்தில் கர்த்தருடைய கிருபையை அசட்டைபண்ணினார். அவர் தன்னுடைய பலத்தை இழந்தார்.

பெலிஸ்தரின் அதிபதிகள் நியா 16:18-21

நியா 16:18. அவன் தன் இருதயத்தையெல்லாம் தனக்கு வெளிப்படுத்தினதைத் தெலீலாள் கண்டபோது, அவள் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு ஆள் அனுப்பி: இந்த ஒருவிசை வாருங்கள், அவன் தன் இருதயத்தையெல்லாம் எனக்கு வெளிப்படுத்தினான் என்று சொல்லிச் சொன்னாள்; அப்பொழுது பெலிஸ்தரின் அதிபதிகள் வெள்ளிக்காசுகளைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டு அவளிடத்துக்கு வந்தார்கள்.

நியா 16:19. அவள் அவனைத் தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணி, ஒருவனை அழைத்து, அவன் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவனைச் சிறுமைப்படுத்தத் தொடங்கினாள்; அவன் பலம் அவனைவிட்டு நீங்கிற்று.

நியா 16:20. அப்பொழுது அவள்: சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள் என்றாள்; அவன் நித்திரைவிட்டு விழித்து, கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமல், எப்போதும்போல் உதறிப்போட்டு வெளியே போவேன் என்றான்.

நியா 16:21. பெலிஸ்தர் அவனைப் பிடித்து, அவன் கண்களைப் பிடுங்கி, அவனைக் காசாவுக்குக் கொண்டுபோய், அவனுக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்க வைத்தார்கள்.

சிம்சோன் தன்னுடைய மதியீனத்தினால், கர்த்தர் தனக்கு கிருபையாகக் கொடுத்திருக்கிற மகாபலத்தோடே விளையாடுகிறார். அதனால் ஏற்படும் தீமையான விளைவுகளை அவர் அனுபவிக்கிறார். தெலீலாளுக்கு சிம்சோன்மீது உண்மையான பிரியமில்லை. பெலிஸ்தர் தனக்குக் கொடுப்பதாக சொன்ன 5,500 வெள்ளிக்காசுகளின்மீதே தெலீலாள் பிரியமாயிருக்கிறாள். அந்தப் பணத்தை அவர்களிடத்திலிருந்து வாங்கி, அதை மொத்தமாக தனக்கே வைத்துக்கொள்கிறாள்.

சிம்சோனை பெலிஸ்தரின் அதிபதிகளிடத்தில் காட்டிக்கொடுத்ததற்காக, தெலீலாளின் இருதயம் வேதனைப்பட்டதா என்பது தெரியவில்லை. சிம்சோன் தன் இருதயத்தையெல்லாம் தெலீலாளுக்கு வெளிப்படுத்தினார். உடனே அவள் சிறிதும் காலதாமதம்பண்ணாமல் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு ஆள் அனுப்புகிறாள். "இந்த ஒரு விசை வாருங்கள், அவன் தன் இருதயத்தையெல்லாம் எனக்கு வெளிப்படுத்தினான்" (நியா 16:18) என்று சொல்லச் சொல்லுகிறாள்.

சிம்சோன் மூன்றுதரம் தெலீலாளை பொய் சொல்லி ஏமாற்றினார். தெலீலாளும் சிம்சோனின் வார்த்தையை நம்பி பெலிஸ்தரின் அதிபதிகளை வரச்சொன்னாள். அவர்களும் வந்து, மூன்றுமுறை ஏமாந்துபோனார்கள். தெலீலாள் தங்களை இந்த முறையும் ஏமாற்றுவாளோ என்று பெலிஸ்தரின் அதிபதிகள் நினைப்பதற்கு வாய்ப்புள்ளது. ஆகையினால் இந்த முறை தெலீலாள் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு ஆள் அனுப்பும்போதே, "இந்த ஒரு விசை வாருங்கள்" என்றும், இந்த விசை அவர்களுக்கு ஏமாற்றமுண்டாகாது என்றும் உறுதியாய்ச் சொல்லுகிறாள்.

பெலிஸ்தரின் அதிபதிகள், சிம்சோனை எப்படியாவது பிடித்துவிடவேண்டும் என்று தீர்மானமாயிருக்கிறார்கள். அவர்கள் சிறிதும் காலதாமதம்பண்ணாமல், வெள்ளிக்காசுகளை தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு, தெலீலாளிடத்திற்கு வருகிறார்கள். அங்கே சிம்சோன் அவளுடைய மடியிலே நித்திரை செய்துகொண்டிருக்கிறார்.

சிம்சோன் இந்தப் பிரபஞ்சத்திலேயே மகாபெரிய பராக்கிரமசாலி. அப்படிப்பட்ட ஒருவரை, தெலீலாள் வெள்ளிக்காசுகளுக்கு ஆசைப்பட்டு, பெலிஸ்தரின் அதிபதிகளிடத்தில் பிடித்துக்கொடுக்கிறாள். ஒருவேளை தான் செய்வது அநியாயம் என்று நினைத்து, தெலீலாளின் இருதயம் வேதனைப்பட்டிருக்கலாம். ஆனாலும், வெள்ளிக்காசுகளின்மீது அவள் வைத்திருக்கும் ஆசை, சிம்சோன்மீது அவள் வைத்திருக்கிற பாசத்தை மறைத்துவிடுகிறது.

தெலீலாள் பெலிஸ்தரின் அதிபதிகளுக்கு உண்மையுள்ளவளாயிருக்கிறாள். அவர்களும் தெலீலாளுக்கு உண்மையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தெலீலாளிடத்திற்கு வரும்போதே, தாங்கள் சொன்ன பிரகாரம், பெலிஸ்தரின் ஒவ்வொரு அதிபதியும் தங்கள் கையிலே 1,100 வெள்ளிக்காசுகளை, தெலீலாளுக்கு கொடுப்பதற்காக கொண்டு வருகிறார்கள்.

தெலீலாள் சிம்சோனை தன் மடியிலே நித்திரை செய்யப்பண்ணுகிறாள். தெலீலாள் ஒருவனை அழைத்து, சிம்சோனின் தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பித்து, அவரைச் சிறுமைப்படுத்தத் தொடங்குகிறாள்; சிம்சோனின் பலம் அவரைவிட்டு நீங்கிற்று (நியா 16:19). தெலீலாளின் மடியே தனக்கு இன்பமானது என்றும், அதுவே பாதுகாப்பானது என்றும் சிம்சோன் நினைக்கிறார். தெலீலாளின் மடியில் நித்திரை செய்கிறார். ஆனால் தெலீலாளின் மடியே சிம்சோனின் ஜீவனுக்கு ஆபத்தாயிற்று.

சாத்தானும் மனுஷரை மடியில் வைத்து தாலாட்டுவதுபோல தாலாட்டி நித்திரை பண்ணச்செய்வான். நமக்கு ஒரு தீங்கும் வராது என்றும், நாம் பாதுகாப்பாயிருக்கிறோம் என்றும் நம்மை நம்பச் செய்வான். நாம் எதற்கும் கவலைப்படவோ அல்லது பயப்படவோ வேண்டியதில்லை என்று நமக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லுவான். நாம் சாத்தானுடைய ஆசை வார்த்தைகளில் மயங்கி, நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் விழித்திராமல் நித்திரையாயிருக்கும்போது, சாத்தான் நம்மை வஞ்சித்துவிடுவான். நம்முடைய பலத்தையும், மேன்மையையும் அபகரித்துக்கொள்வான். சாத்தான் நம்மை தன்னுடைய சித்தத்திற்கு சிறைப்பிடிப்பான்.

சிம்சோன் தெலீலாளின் மடியில் நித்திரைபண்ணும்போது, அவருடைய தலைமயிரின் ஏழு ஜடைகளையும் சிரைப்பதற்கு ஒருவன் அங்கே ஆயத்தமாயிருக்கிறான். அவன் தன்னுடைய வேலையை வேகமாகவும், அமைதியாகவும் செய்கிறான். எந்தவித சத்தமும், ஆரவாரமுமில்லாமல் அவன் சிம்சோனின் ஜடைகளை சிரைக்கிறான். அவன் சிரைக்கும்போது எந்த ஒரு சத்தமும் எழும்பவில்லை. அவன் சிம்சோனின் ஜடைகளைப் பிடித்து இழுக்கவில்லை. எல்லாம் அமைதியாய் நடைபெறுகிறது. சிம்சோனின் நித்திரையும் கலந்துபோக வில்லை. சிம்சோனுடைய தலைமயிரின் ஏழுஜடைகளும் சிரைக்கப்பட்ட பின்பு, சிம்சோன்சிறுமைப்படுகிறார். சிம்சோனுடைய பலம் அவரைவிட்டு நீங்கிப்போயிற்று.

சிம்சோனுக்கோ தன்னைப்பற்றி சிறிதும் அக்கரையோ கவலையோ இல்லை. சிம்சோனுடைய தலைமயிரின் ஏழுஜடைகளும் சிரைக்கப்பட்டிருக்கிறது. அப்பொழுது தெலீலாள், தன் மடியில் நித்திரை செய்துகொண்டிருக்கும் சிம்சோனைப் பார்த்து, "சிம்சோனே, பெலிஸ்தர் உன்மேல் வந்துவிட்டார்கள்" என்று சொல்லுகிறாள். சிம்சோன் நித்திரைவிட்டு விழிக்கிறார்.

சிம்சோனுடைய தலைமயிரின் ஏழுஜடைகளும் சிரைக்கப்பட்டவுடனே, கர்த்தர் சிம்சோனைவிட்டு விலகிப்போய்விடுகிறார். ஆனால் சிம்சோனோ கர்த்தர் தன்னைவிட்டு விலகினதை அறியாமலிருக்கிறார். சிம்சோன் நித்திரைவிட்டு விழித்தவுடன், "எப்போதும்போல உதறிப்போட்டு வெளியே போவேன்" என்று சொல்லுகிறார். ஆனால் சிம்சோனிடத்தில் இப்போது மகாபலம் இல்லை. கர்த்தர் சிம்சோனைவிட்டு எப்போது விலகிப்போனாரோ அப்போது சிம்சோனுடைய மகாபலமும் அவரைவிட்டு விலகிப்போயிற்று.

சிம்சோன் நித்திரையைவிட்டு எழுந்தபோது, தன்னிடத்தில் ஒரு மாற்றம் ஏற்பட்டிருப்பதை அறிந்து கொள்கிறார். ஆனால் கர்த்தர் தன்னை விட்டு விலகிப்போய்விட்டார் என்பதை சிம்சோன் அறியாதிருக்கிறார். தன்னுடைய மப்பாபலம் தன்னைவிட்டு நீங்கிப்போனதற்கு, கர்த்தர் தன்னைவிட்டு விலகிப்போனதே காரணம் என்பதை சிம்சோன் அறியாதிருக்கிறார்.

இக்காலத்திலும் சிம்சோனைப்போல சில விசுவாசிகள் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய கிருபையையும், கர்த்தருடைய பிரசன்னதையும் இழந்துவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் தாங்கள் இழந்துபோனதை அறியாதிருக்கிறார்கள். கர்த்தர் அவர்களை விட்டு விலகிப்போவதற்கு, அவர்களுடைய பாவமும், துன்மார்க்கமும், நிர்விசாரமும் காரணமாயிருக்கிறது. அவர்கள் தங்கள் பாவத்தில் நிலைத்திருக்கிறார்கள். கர்த்தரை விட்டு தூரமாய் விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தரும் அவர்களை விட்டு விலகிப்போய்விடுகிறார். ஆனால் அவர்களோ, தாங்கள் கர்த்தரை விட்டு விலகிப்போனாலும், கர்த்தர் தங்களை விட்டு விலகிப்போகமாட்டார் என்று தப்பிதமாய் நினைக்கிறார்கள். கர்த்தர் தங்களைவிட்டு விலகிப்போனதினால், தங்களுக்கு ஏற்பட்டிருக்கிற இழப்புக்களை, அவர்கள் அறியாதவர்களாயிருக்கிறார்கள்.

சிம்சோனின் மகாபலம் அவரைவிட்டு நீங்கிற்று. பெலிஸ்தர் உடனே சிம்சோனைப் பிடித்து, அவருடைய கண்களை பிடுங்குகிறார்கள். அவர்கள் சிம்சோனை காசாவுக்குக் கொண்டுபோய், அவருக்கு இரண்டு வெண்கல விலங்குபோட்டுச் சிறைச்சாலையிலே போடுகிறார்கள். அவர்கள் சிம்சோனை அங்கே மாவரைத்துக்கொண்டிருக்க வைக்கிறார்கள் (நியா 16:21). ஒரு காலத்தில் மகாபராக்கிரமசாலியாயிருந்த சிம்சோன், இப்போது கண்கள் பிடுங்கப்பட்ட குருடனாக, வெண்கல விலங்குகளைப் போட்ட கைகளோடு, சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்கிறார். மகாபலசாலியான சிம்சோன் இப்போது மிகவும் சிறுமைப்பட்டிருக்கிறார்.

கர்த்தர் சிம்சோனோடு கூடயிருந்த வரையிலும், பெலிஸ்தரால் அவரைப் பிடிக்க முடியவில்லை. கர்த்தர் சிம்சோனைவிட்டு விலகின உடனேயே, பெலிஸ்தர் அவரைப் பிடித்துக்கொள்கிறார்கள். சிம்சோன் தெலீலாளின் மடியிலே நித்திரை பண்ணுகிறார். அவர் நித்திரையைவிட்டு விழித்துப் பார்த்தபோது, பெலிஸ்தரின் கையிலே இருக்கிறார்.

நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்தில், நாம் நம்முடைய இச்சைகளின் மடியிலே நித்திரை செய்தால், நாம் நித்திரையை விட்டுவிழிக்கும்போது, சாத்தானுடைய கரங்களிலே இருப்போம். சாத்தான் நம்மை தனக்கு அடிமைப்படுத்துவான்.

பெலிஸ்தரின் அதிபதிகள் சிம்சோனை கொன்றுபோடப்போவதாக தெலீலாளிடம் சொல்லவில்லை. சிம்சோனைக் கட்டி சிறுமைப்படுத்த வேண்டும் என்பதே அவர்களுடைய நோக்கம் (நியா 16:5). அவர்கள் தெலீலாளிடம் சொன்ன பிரகாரம் சிம்சோனைக் கொல்லவில்லை. ஆனால் அவர்கள் சிம்சோனை சித்திரவதை பண்ணுகிறார்கள். அவர்கள் சிம்சோனை அதிகமாய் சிறுமைப்படுத்துகிறார்கள். அவரை செயலிழக்கச் செய்கிறார்கள்.

பெலிஸ்தரின் அதிபதிகள், சிம்சோனைப் பிடித்தவுடன், முதல் வேலையாக அவருடைய கண்களைப் பிடுங்குகிறார்கள். மூலஅரபிய வேதாகமத்தில், பெலிஸ்தர்கள் சிம்சோனுடைய கண்களை எரிகிற கொள்ளிக்கட்டைகளினால் குத்தி குருடாக்கினார்கள் என்று எழுதப்பட்டிருக்கிறது. சிம்சோன் தங்களுடைய கைகளிலிருந்து தப்பித்து ஓடிவிடக்கூடாது என்பதற்காக, பெலிஸ்தர் சிம்சோனின் கண்களைக் குருடாக்குகிறார்கள்.

சிம்சோனுக்கு கண் பார்வை போய்விட்டால், அந்தப் பார்வை அவருக்கு திரும்ப வரப்போவதில்லை. சிம்சோனின் கைகள் எவ்வளவு பெலமுள்ளதாகயிருந்தாலும், அவருக்கு கண் பார்வையில்லையென்றால் அவரால் ஒன்றும் செய்யமுடியாது. குருட்டு கண்களால் சிம்சோனை வழிநடத்த முடியாது. ஒருவேளை சிம்சோன் தன்னுடைய மகாபலத்தை திரும்பப் பெற்றுக்கொண்டாலும், கண் பார்வை இழந்த சிம்சோனால், பெலிஸ்தருக்கு விரோதமாக பெரிய தீங்குகளை செய்ய முடியாது என்று பெலிஸ்தரின் பிரபுக்கள் நினைக்கிறார்கள். ஆகையினால் பெலிஸ்தர் சிம்சோனைப் பிடித்தவுடன், அவருடைய கண்களைப் பிடுங்கிவிடுகிறார்கள்.

சிம்சோனுடைய பாவங்கள் அவருடைய கண்களின் வழியாக, அவருடைய சரீரத்திற்குள் பிரவேசித்தது. சிம்சோன் காசாவுக்குப்போய், அங்கே தன் கண்களால் ஒரு வேசியைக் கண்டு, அவளிடத்திற்குப்போனார் (நியா 16:1). சிம்சோனின் பாவத்தை அவருடைய கண்கள்தான் ஆரம்பித்து வைத்தது. சிம்சோனுடைய பாவத்திற்கான தண்டனை, அதே கண்களில் ஆரம்பமாயிற்று. எந்தக் கண்களால் பார்த்து இச்சித்தாரோ, அந்தக் கண்கள் இப்போது பிடுங்கப்பட்டிருக்கிறது.

பெலிஸ்தர் சிம்சோனுடைய கண்களைப் பிடுங்கிய பின்பு, அவரை காசாவுக்குக் கொண்டுவருகிறார்கள். சிம்சோன் இதற்கு முன்பு காசாவிலே தன்னுடைய பலத்தை வெளிப்படுத்தினார். சிம்சோன் காசாவிலே நடுராத்திரி மட்டும் படுத்திருந்து, நடுராத்திரியில் எழுந்து, காசா பட்டணத்து வாசல் கதவுகளையும் அதின் இரண்டு நிலைகளையும் பிடித்து, தாழ்ப்பாளோடேகூடப் பேர்த்து, தன் தோளின் மேல் வைத்து, எபிரோனுக்கு எதிரேயிருக்கிற மலையின் உச்சிக்குச் சுமந்து கொண்டுபோனார் (நியா 16:3).

சிம்சோனிடம் அப்போதிருந்த மகாபலம் இப்போது இல்லை. சிம்சோன் இப்போது காசா பட்டணத்தாருக்கு முன்பாக, கண் பார்வை இழந்தவராக, சரீரத்தில் பலமில்லாதவராக, பரிதாபமாக நிற்கிறார். காசா பட்டணத்து ஜனங்கள் சிறுமைப்படுத்தப்பட்ட சிம்சோனைப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். பெலிஸ்தரின் பிரபுக்கள் சிம்சோனை காசாவுக்கு கொண்டு வருகிறார்கள்.

சிம்சோன் மகாபலத்தோடிருந்தபோது, தன்னுடைய கரத்தினாலே ஏழு அகணிநார் கயிறுகளை அறுத்துப்போட்டார் (நியா 16:9). அதன்பின்பு சிம்சோன் தன் புயங்களிலிருந்த புதுக்கயிறுகளை ஒரு நூலைப்போல அறுத்துப்போட்டார் (நியா 16:12). சிம்சோன் மகாபலத்தோடிருந்தபோது தன்னுடைய கைகளினால் பராக்கிரமமான காரியங்களை செய்தார். சிம்சோனின் கைகளை செயலிழக்கச் செய்யவேண்டுமென்று பெலிஸ்தரின் பிரபுக்கள் தீர்மானம்பண்ணி, சிம்சோனுக்கு இரண்டு வெண்கல விலங்குகளைப் போடுகிறார்கள்.

சிம்சோனை காசாவிலுள்ள சிறைச்சாலையிலே போடுகிறார்கள். சிம்சோனின் கைகளில் இரண்டு வெண்கல விலங்குகள் போடப்பட்டிருக்கிறது. அவருடைய கண்கள் குத்தப்பட்டு குருடாக்கப் பட்டிருக்கிறது. சிம்சோன் இப்போது சிறைச்சாலையிலே மாவரைத்துக் கொண்டிருக்கிறார். மகாபலசாலியான சிம்சோனின் மகாபலம் அவரை விட்டு நீங்கிப்போயிற்று. இப்போது சிம்சோனின் மகிமையும், மேன்மையும் சிறைச்சாலையில் மாவரைத்துக்கொண்டிருக்கிறது.

சிம்சோன்
நியா 16:22-31

நியா 16:22. அவன் தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று.

நியா 16:23. பெலிஸ்தரின் பிரபுக்கள்: நம்முடைய பகைஞனாகிய சிம்சோனை நம்முடைய தேவன் நம்முடைய கையில் ஒப்புக் கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலி செலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் கூடிவந்தார்கள்.

நியா 16:24. ஜனங்கள் அவனைக் கண்டவுடனே: நம்முடைய தேசத்தைப் பாழாக்கி, நம்மில் அநேகரைக் கொன்றுபோட்ட நம்முடைய பகைஞனை நம்முடைய தேவன் நமது கையில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, தங்கள் தேவனைப் புகழ்ந்தார்கள்.

நியா 16:25. இப்படி அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கும்போது: நமக்கு முன்பாக வேடிக்கைகாட்டும்படிக்கு, சிம்சோனைக் கூட்டிக்கொண்டு வாருங்கள் என்றார்கள்; அப்பொழுது சிம்சோனைச் சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வந்தார்கள். அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டினான்; அவனைத் தூண்களுக்கு நடுவே நிறுத்தினார்கள்.

நியா 16:26. சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே, வீட்டைத் தாங்குகிற தூண்களிலே நான் சாய்ந்துகொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப்பார்க்கட்டும் என்றான்.

நியா 16:27. அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருந்தது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

நியா 16:28. அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டு: கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும் என்று சொல்லி,

நியா 16:29. சிம்சோன் அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக் கொண்டு,

நியா 16:30. என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது என்று சொல்லி, பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுந்தது; இவ்விதமாய் அவன் உயிரோடிருக்கையில் அவனால் கொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும், அவன் சாகும்போது அவனால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருந்தார்கள்.

நியா 16:31. பின்பு அவன் சகோதரரும், அவன் தகப்பன் வீட்டாரனைவரும் போய், அவனை எடுத்துக் கொண்டுவந்து, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவே அவன் தகப்பனாகிய மனோவாவின் கல்லறையில் அடக்கம்பண்ணினார்கள். அவன் இஸ்ரவேலை இருபதுவருஷம் நியாயம் விசாரித்தான்.

சிம்சோனுடைய ஜீவியத்தின் கடைசிப்பகுதி மேன்மையற்றதாயிருந்தாலும், அவருடைய மரணம் மகிமையுள்ளதாயிருக்கிறது. சிம்சோன் தன்னுடைய பாவங்களுக்காக மனம் வருந்துகிறார். அவர் கர்த்தரிடத்தில் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பி ஒப்புரவாகுகிறார். கர்த்தரும் சிம்சோனின் மனந்திரும்புதலை அங்கீகரித்து, அவருடைய பாவங்களை மன்னிக்கிறார்.

சிம்சோனுடைய தலைமயிர் சிரைக்கப்பட்ட பின்பு, அது திரும்பவும் முளைக்கத் தொடங்கிற்று. சிம்சோன் கர்த்தருக்கு நசரேயனாயிருந்தார். அவர் நசரேய விரதத்தை விட்டு விலகிப்போனாலும், கர்த்தர் அவரை மறுபடியும் நசரேயனாய் அங்கீகரிக்கிறார். இதற்கான அடையாளமுண்டாகிறது. சிம்சோனின் தலைமயிர் திரும்பவும் முளைப்பது, கர்த்தருடைய கிருபை சிம்சோனுக்கு திரும்பவும் கிடைப்பதற்கு அடையாளமாயிருக்கிறது.

சிம்சோனுடைய தலைமயிர் சிரைக்கப்படுவதற்கு முன்பு, அது ஏழுஜடைகளாக நீளமாய் வளர்ந்திருந்தது. இப்போது மறுபடியும் சிம்சோனின் தலைமயிர் முன்பு இருந்ததுபோலவே நீளமாய் வளருகிறது. சிம்சோன் தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பியபோது, கர்த்தருடைய கிருபையும் இரக்கமும் சிம்சோனுக்கு மறுபடியும் காண்பிக்கப்படுகிறது. இதற்கு அடையாளமாக அவருடைய தலைமயிர் நீளமாய் வளருகிறது.

கர்த்தர் தம்முடைய சித்தத்தின் பிரகாரமாக, இஸ்ரவேலை பெலிஸ்தரின் கைகளிலிருந்து இரட்சிப்பதற்கு, சிம்சோனை தம்முடைய கருவியாகப் பயன்படுத்துகிறார். பெலிஸ்தர் சிம்சோனை சிறைப்பிடித்த பின்பு, அவர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். தங்களுடைய விக்கிரக தேவனாகிய தாகோனைப் போற்றி புகழுகிறார்கள்.

கர்த்தருக்கு ஏற்ற வேளை வந்தபோது, அவருடைய கிருபையும், பலமும் சிம்சோன்மீது மறுபடியும் இறங்குகிறது. பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆளுகை செய்தபோது, சிம்சோன் பெலிஸ்தரின் கையிலிருந்து இஸ்ரவேலை பாதுகாக்கவோ அல்லது அவர்களை இரட்சிக்கவோ அதிகமாய் முயற்சி பண்ணவில்லை. பெலிஸ்தர் இஸ்ரவேலை ஆளுகை செய்கிற காலத்தில், சிம்சோன் இஸ்ரவேலை இருபது வருஷங்களாக நியாயம் விசாரித்தார் (நியா 15:20). சிம்சோன் இஸ்ரவேலின் சத்துருக்களாகிய பெலிஸ்தரை அழிக்கவில்லை. கர்த்தர் சிம்சோனுக்கு மகாபலத்தை கொடுத்திருந்தபோதிலும், சிம்சோன் இஸ்ரவேலை பெலிஸ்தரின் கையிலிருந்து இரட்சிப்பதற்கு தன்னுடைய மகாபலத்தை பயன்படுத்தவில்லை.

சிம்சோன் காசாவிலே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டபோது, பெலிஸ்தர் கர்த்தருடைய நாமத்தைத் தூஷிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்துவதற்காக, சிம்சோனுக்கு தம்முடைய கிருபைகளையும், பலத்தையும் மறுபடியும் கொடுக்கிறார். பெலிஸ்தர்கள் இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தைத் தூஷித்து, தங்களுடைய தேவனாகிய தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள். கர்த்தரே மகிமைக்கு பாத்திரர். கர்த்தர் தம்முடைய மகிமையை வேறு எந்த தேவர்களோடும் பகிர்ந்துகொள்ளமாட்டார்.

பெலிஸ்தரின் பிரபுக்கள் சிம்சோனை தங்களுடைய பகைஞனாகவே பாவிக்கிறார்கள். தங்களுடைய தேவனாகிய தாகோனே சிம்சோனை தங்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, பெலிஸ்தர்கள் தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள். தங்களுக்கு நன்மை செய்த தாகோனுக்கு ஒரு பெரிய பலிசெலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும், பெலிஸ்தரின் பிரபுக்களும், பெலிஸ்தரின் புருஷரும் ஸ்திரீகளும் கூடிவருகிறார்கள் (நியா 16:23).

பெலிஸ்தர்கள் கூடியிருக்கிற இடத்திலே, பெலிஸ்தரின் பிரபுக்கள் சிம்சோனை அழைத்து வருகிறார்கள். பெலிஸ்தர்கள் சிம்சோனைக் கண்டவுடனே, தங்கள் தேவனாகிய தாகோனைப் புகழுகிறார்கள். தாகோன் ஒரு விக்கிரக தெய்வம். அதனுடைய சரீரத்தின் மேல்பகுதி மனுஷரூபத்திலும், அதன் கீழ்ப்பகுதி மீன்ரூபத்திலும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. பெலிஸ்தர் தங்களுடைய தேவனாகிய தாகோனை மிகவும் விநோதமான உருவமாக உண்டாக்கியிருக்கிறார்கள்.

தாகோனுக்கு ஜீவனுமில்லை பெலனுமில்லை. ஆனாலும் பெலிஸ்தர் தாகோனை தங்கள் தேவனாக ஆராதிக்கிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைவிட, தங்கள் தேவனாகிய தாகோனே ஜீவனும் வல்லமையும் உள்ளவரென்று பெலிஸ்தர் நம்புகிறார்கள். தங்கள் தெய்வமாகிய தாகோனை மகிமைப்படுத்துகிறார்கள்.

சிம்சோன் பெலிஸ்தரின் தேசத்தைப் பாழாக்கினார். அவர் பெலிஸ்தரில் அநேகரைக் கொன்றுபோட்டார். பெலிஸ்தரின் பார்வைக்கு சிம்சோன் பகைவராகவே தெரிகிறார். தங்களுடைய தேவனாகிய தாகோன், தங்கள் பகைஞனாகிய சிம்சோனை, தங்கள் கையிலே ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி, பெலிஸ்தர் தாகோனைப் புகழுகிறார்கள் (நியா 16:24).

பெலிஸ்தர் எல்லோரும் மனமகிழ்ச்சியாயிருக்கிறார்கள். தங்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டும்படிக்கு சிம்சோனை கூட்டிக்கொண்டு வரச்சொல்லுகிறார்கள். அப்பொழுது சிம்சோனை சிறைச்சாலையிலிருந்து கூட்டிக்கொண்டு வருகிறார்கள். சிம்சோன் அவர்களுக்கு முன்பாக வேடிக்கை காட்டுகிறார். பெலிஸ்தர் சிம்சோனை தாங்கள் இருந்த வீட்டின் தூண்களுக்கு நடுவே நிறுத்துகிறார்கள் (நியா 16:25).

சிம்சோன் கர்த்தருடைய பராக்கிரமசாலி. அவர் மகாபலமுள்ளவர். தேவனுக்கு நசரேயனாயிருக்கிறவர். ஆனால் இப்போதோ சிம்சோன் பெலிஸ்தருக்கு முன்பாக, ஒரு வேடிக்கைப் பொருளைப்போல நிற்கிறார். அவர்களுக்கு வேடிக்கை காண்பிக்கிறார். சிம்சோனுடைய கண்கள் பிடுங்கப்பட்டிருக்கிறது. அவர் பார்க்க முடியாத குருடராயிருக்கிறார். சிம்சோன் பெலிஸ்தருக்கு விளையாட்டு காண்பிக்கும்போது, தடுமாறி கீழே விழுகிறார் அதைப் பார்த்து அவர்கள் சந்தோஷப்படுகிறார்கள். சிம்சோனைப் பார்த்து நகைக்கிறார்கள்.

சிம்சோனுக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறவர்கள், சிம்சோனின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாகவும் தூஷண வார்த்தைகளைப் பேசுகிறார்கள். சிம்சோனோ தம்முடைய பாவங்களுக்கு மனந்திரும்பியிருக்கிறார். அவருடைய இருதயத்தில் மனந்திரும்புதலுக்கேற்ற துக்கம் காணப்படுகிறது. அவர் நீடிய பொறுமையோடு பெலிஸ்தருக்கு முன்பாக நிற்கிறார். தன்னுடைய பாவத்தினாலும், அக்கிரமத்தினாலும், தனக்கு இந்த தண்டனை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை சிம்சோன் அங்கீகரிக்கிறார்.

பெலிஸ்தர் சிம்சோனை பரியாசம்பண்ணுவதையும், அவர்கள் சிம்சோனையும், கர்த்தரையும் தூஷிப்பதையும், அவர்கள் தங்கள் தேவனாகிய தாகோனைப் புகழுவதையும் கர்த்தர் பார்க்கிறார். கர்த்தர் அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்கிறார். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் மகிமைக்குப் பாத்திரர். அவர் சர்வவல்லமையுள்ள தேவன். பெலிஸ்தர் எல்லோரையும் ஒரே நேரத்தில் மொத்தமாய் அழிக்கவேண்டும் என்பது கர்த்தருடைய சித்தமாயிற்று. பெலிஸ்தரை அழிப்பதற்கு கர்த்தர் சிம்சோனின் கரங்களை பயன்படுத்துகிறார்.

பெலிஸ்தர்கள் தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலிசெலுத்தவும், சந்தோஷம் கொண்டாடவும் ஒரு பெரிய வீட்டிலே கூடிவந்திருக்கிறார்கள். அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருக்கிறது; அங்கே பெலிஸ்தரின் சகல பிரபுக்களும், வீட்டின்மேல் புருஷரும் ஸ்திரீகளுமாக ஏறக்குறைய மூவாயிரம்பேர், சிம்சோன் வேடிக்கை காட்டுகிறதைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் (நியா 16:27).

சிம்சோனோ பெலிஸ்தருக்கு முன்பாக வேடிக்கை காட்டுகிறார். பெலிஸ்தர் சிம்சோனை தாங்கள் கூடியிருக்கிற வீட்டின் தூண்களுக்கு நடுவே நிறுத்துகிறார்கள். சிம்சோன் தனக்குக் கைலாகு கொடுத்து நடத்துகிற பிள்ளையாண்டானோடே, "வீட்டைத் தாங்குகிற தூண்களிலே நான் சாய்ந்துகொண்டிருக்கும்படி அவைகளை நான் தடவிப்பார்க்கட்டும்" (நியா 16:26) என்று சொல்லுகிறார்.

அப்பொழுது சிம்சோன் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறார். "கர்த்தராகிய ஆண்டவரே, நான் என் இரண்டு கண்களுக்காக ஒரே தீர்வையாய்ப் பெலிஸ்தர் கையிலே பழிவாங்கும்படிக்கு, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும், தேவனே, பலப்படுத்தும்" (நியா 16:28) என்று சிம்சோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சிம்சோன் கர்த்தரிடத்தில் தன்னுடைய விண்ணப்பத்தை ஏறெடுத்துவிட்டு, அந்த வீட்டைத் தாங்கி நிற்கிற இரண்டு நடுத்தூண்களில், ஒன்றைத் தன் வலதுகையினாலும், மற்றொன்றைத் தன் இடதுகையினாலும் பிடித்துக் கொள்கிறார் (நியா 16:29).

"என் ஜீவன் பெலிஸ்தரோடே கூட மடியக்கடவது" என்று சொல்லி, சிம்சோன் அந்தத் தூண்களை பலமாய்ச் சாய்க்க, அந்த வீடு அதில் இருந்த பிரபுக்கள்மேலும் எல்லா ஜனங்கள்மேலும் விழுகிறது. அந்த வீட்டிலிருந்த எல்லா புருஷரும், எல்லா ஸ்திரீகளும், பெலிஸ்தரின் சகல பிரபுக்களும் செத்துப்போகிறார்கள். அவர்களோடேகூட சிம்சோனும் செத்துப்போகிறார். இவ்விதமாய் சிம்சோன் உயிரோடிருக்கையில் அவரால் கொல்லப்பட்டவர்களைப்பார்க்கிலும், அவர் சாகும்போது அவரால் கொல்லப்பட்டவர்கள் அதிகமாயிருக்கிறார்கள் (நியா 16:30).

பெலிஸ்தரின் ஐந்து பிரபுக்களும், தெலீலாளுக்கு 5,500 வெள்ளிக்காசுகளைக் கொடுத்து, சிம்சோனை பிடித்துக்கொண்டார்கள். பெலிஸ்தரின் ஸ்திரீகள் சிம்சோனை பாவத்திற்குள்ளாக வழிநடத்தினார்கள். இப்போது இறந்துபோன பெலிஸ்தரில், அவர்களுடைய ஸ்திரீகள் அநேகராயிருக்கிறார்கள்.

சிம்சோன் பெலிஸ்தருக்கு வேடிக்கை காட்டிக்கொண்டிருந்தபோது, பெலிஸ்தர்கள் அதைப் பார்த்து சந்தோஷப்பட்டார்கள். தங்களுக்கு பகைவனாயிருந்த சிம்சோன் இப்போது கண்கள் பிடுங்கப்பட்டு, குருடனாயிருக்கிறான். சிம்சோனுக்கு பலமில்லை. ஆகையினால் தங்களுக்கு ஆபத்தில்லை என்று நினைத்து பெலிஸ்தர் சந்தோஷப்படுகிறார்கள்.

தங்கள் தேவனாகிய தாகோனே சிம்சோனை தங்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்தார் என்று சொல்லி பெலிஸ்தர் தாகோனைப் புகழுகிறார்கள். தங்கள் தேவனாகிய தாகோனுக்கு ஒரு பெரிய பலியைச் செலுத்துகிறார்கள். அப்போது அவர்கள் கூடியிருந்த வீடு அவர்கள்மேல் இடிந்து விழுகிறது.

சிம்சோன் கர்த்தருக்கு நசரேயனாயிருக்கிறார். அவர் ஒரு இஸ்ரவேலர். சிம்சோன் பெலிஸ்தருக்கு முன்பாக வேடிக்கை காட்டிக்கொண்டிருக்கிறார். பெலிஸ்தர் சிம்சோனை அவமானப்படுத்துகிறார்கள். இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தரைத் தூஷிக்கிறார்கள். பெலிஸ்தருக்கு யாரோடு விளையாடுகிறோம் என்பதே தெரியவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளைத் தொடுகிறவர்கள் அவருடைய கண்மணியைத் தொடுகிறார்கள் என்பது பெலிஸ்தருக்கு தெரியவில்லை. கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறவர்கள், கர்த்தருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள் என்னும் சத்தியமும் பெலிஸ்தருக்கு புரியவில்லை. பெலிஸ்தர் கர்த்தரைப்பற்றியும் தெரியாமல், அவருடைய மகிமையையும் மகத்துவத்தையும் புரியாமல், அவருக்கு விரோதமாகத் தூஷண வார்த்தைகளைச் சொல்லி, தங்களுக்குத் தாங்களே அழிவை வரவழைத்துக்கொள்கிறார்கள்.

சிம்சோன் இதுவரையிலும் தன்னுடைய மகாபலத்தை நம்பினார். இப்போது அவர் கர்த்தரை நம்புகிறார். தன்னுடைய பலத்தினாலும், பராக்கிரமத்தினாலும் பெலிஸ்தரை அழிக்க முடியாது என்பதை சிம்சோன் புரிந்துகொள்கிறார். கர்த்தருடைய உதவியும் ஒத்தாசையும் தனக்குக் கிடைக்கவில்லையென்றால், தன்னால் பெலிஸ்தருக்கு விரோதமாக ஒன்றும் செய்ய முடியாது என்பதையும் சிம்சோன் அறிந்துகொள்கிறார்.

சிம்சோன் கர்த்தருடைய கிருபைக்காக அவரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். "தேவனே என்னை நினைத்தருளும், என்னைப் பலப்படுத்தும்" என்று சிம்சோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். சிம்சோன் தன்னைத் தாழ்த்தி கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணியபோது கர்த்தர் அவரை மறுபடியும் பலப்படுத்துகிறார்.

சிம்சோன் தன்னுடைய பாவத்தினால், தன்னிடத்திலிருந்த மகாபலத்தை இழந்துவிட்டார். இப்போதோ தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்புவதினாலும், கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுவதினாலும், கர்த்தருடைய கிருபையினால், சிம்சோன் புதிய பலத்தைப் பெற்றுக்கொள்கிறார். பாவத்தினால் இழந்துபோனது, பாவத்திற்கு மனந்திரும்புவதினால் திரும்பக் கிடைக்கிறது.

சிம்சோன் கர்த்தர் தனக்குக் கொடுத்த பலத்தினால் ஏற்கெனவே பெரிய காரியங்களை செய்திருக்கிறார். அப்படிப்பட்ட பலம் தனக்கு மற்றொரு விசை கிடைக்கவேண்டுமென்று சிம்சோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார். கர்த்தர் தன்னை மறந்துவிட்டாரோ என்னும் உணர்வு சிம்சோனுடைய இருதயத்தில் உண்டாயிற்று. ஆகையினால் சிம்சோன் கர்த்தரிடத்தில் தன்னை பலப்படுத்துமாறு ஜெபம்பண்ணுவதற்கு முன்பு, "ஆண்டவரே இந்த ஒரு விசை மாத்திரம் என்னை நினைத்தருளும்" என்று கருத்தாய் விண்ணப்பம்பண்ணுகிறார்.

தான் இதுவரையிலும் செய்த மகத்துவமான கிரியைகளெல்லாம், கர்த்தர் தன்னைப் பலப்படுத்தியதினால் செய்தது என்றும், அது தன்னுடைய சொந்த பலத்தினால் செய்யப்பட்டதல்ல என்றும் சிம்சோன் அங்கீரிக்கிறார்.

சிம்சோன் கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டே செத்துப்போகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, கல்வாரி சிலுவையிலே, பிதாவாகிய தேவனிடத்தில் ஜெபம்பண்ணிக்கொண்டே தம்முடைய ஜீவனை ஒப்புக்கொடுத்தார். அதுபோல, சிம்சோனும் ஜெபம்பண்ணிக்கொண்டே, பெலிஸ்தரோடுகூட மரித்துப்போகிறார்.

இயேசுகிறிஸ்துவின் ஜெபத்திற்கும் சிம்சோனின் ஜெபத்திற்கும் பெரிய வித்தியாசமுண்டு. தமக்கு தீங்கு செய்தவர்களை மன்னிக்கவேண்டுமென்று கிறிஸ்துவானவர் பிதாவினிடத்தில் ஜெபம்பண்ணினார். சிம்சோனோ, தனக்கு தீங்கு செய்தவர்களை பழிவாங்கவேண்டுமென்று கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணுகிறார்.

சிம்சோன் இருப்பது மிகப்பெரிய வீடு. அந்த வீடு புருஷராலும் ஸ்திரீகளாலும் நிறைந்திருக்கிறது. ஏறக்குறைய மூவாயிரம்பேர் அங்கே கூடியிருக்கிறார்கள். சிம்சோன் அந்த வீட்டைத் தாங்குகிற தூண்களிலே சாய்ந்துகொண்டிருக்கிறார். அப்போது சிம்சோன், "என் ஜீவன் பெலிஸ்தரோடேகூட மடியக்கடவது" என்று சொல்லி, அந்தத் தூண்களை பலமாய்ச் சாய்க்கிறார். அப்போது அந்த வீடு, அதிலிருந்து பிரபுக்கள்மேலும், எல்லா ஜனங்கள் மேலும் விழுகிறது. அந்த வீட்டிலிருந்த ஜனங்களில் ஒரு சிலர் வீட்டின் இடிபாடுகளுக்கு தப்பித்திருக்கலாம். மற்றபடி அந்த வீட்டிலிருந்த மற்ற அனைவரும் செத்துப்போகிறார்கள். சிம்சோன் உயிரோடிருக்கையில் அவரால் கொல்லப்பட்டவர்களைப் பார்க்கிலும், அவர் சாகும்போது அவரால் கொல்லப்பட்டவர்கள் அநேகமாயிருக்கிறார்கள்.

சிம்சோனும், பெலிஸ்தரும் இருந்த வீடு தாகோனின் கோவிலாகயிருக்கவேண்டுமென்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சிம்சோன் தாகோனின் கோவிலை இடித்துப்போடுகிறார். அந்தக் கோவில் இடியும்போது, தாகோனின் சிலை அந்த இடிபாடுகளில் புதைந்து போகிறது.

சிம்சோன் செய்த காரியம் நீதியானதுதான் என்று வேதபண்டிதர்கள் சொல்லுகிறார்கள். சிம்சோன் வேண்டுமென்றே தன்னையோ அல்லது பெலிஸ்தரையோ கொலைபண்ணவில்லை. சிம்சோன்மீது கொலை குற்றம் சுமத்தப்படாது. சிம்சோன் தற்கொலை செய்துகொள்ளவுமில்லை. பெலிஸ்தரின் கைகளில் சிக்கிக்கொள்ளாதவாறு, தான் செத்துப்போகவேண்டுமென்று, சிம்சோன் தன்னைத்தானே கொன்றுபோடவுமில்லை.

கர்த்தர் சிம்சோனின் பாவங்களையும் மீறுதல்களையும் மன்னிக்கிறார். சிம்சோனை மன்னிப்பதன் மூலமாக, கர்த்தர் தம்முடைய மன்னிக்கும் கிருபையை மகிமைப் படுத்துகிறார். சிம்சோன் தாகோனின் கோவிலை இடித்துப்போட்டதுபோல, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சாத்தானின் ராஜ்யத்தை அழித்துப் போடுகிறார். கிறிஸ்துவானவர் மரித்தபோது, அவருக்கு அந்தகார வல்லமைகள்மீது மகிமையான வெற்றி உண்டாயிற்று.

சிம்சோன் தன்னுடைய இரண்டு கைகளையும் தூக்கி, தான் இருந்த வீட்டை தாங்கி நிற்கிற இரண்டு தூண்களையும் பிடித்துக்கொண்டார். கிறிஸ்துவானவரும் சிலுவையிலே அறையப்பட்டபோது, அவருடைய இரண்டு கைகளும் விரிக்கப்பட்ட நிலமையிலே சிலுவையில் அறையப்பட்டது. சிம்சோன் தாகோனின் கோவிலை கீழே விழச் செய்தார். கிறிஸ்துவானவரோ பாதாளத்தின் வாசல்களை முறித்துப்போட்டார். மரணத்தின்மீதும், பிசாசின்மீதும் ஜெயம்கொண்டார்.

"ஆதலால், பிள்ளைகள் மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப்போல மாம்சத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்; மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும், ஜீவகாலமெல்லாம் மரணபயத்தினாலே அடிமைத்தனத்திற்குள்ளானவர்கள் யாவரையும் விடுதலைபண்ணும்படிக்கும் அப்படியானார்" (எபி 2:14,15).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிம்சோனைவிட பெரியவர். சிம்சோன் பெலிஸ்தரோடுகூட மரித்துப்போனார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவோ மரித்தாலும், மறுபடியும் உயிரோடு எழும்பினார்.

சிம்சோன் தாகோனின் கோவிலிலே செத்துக்கிடக்கிறார். அங்கே சிம்சோனின் சகோதரரும், அவர் தகப்பன் வீட்டாரனைவரும் போய், அவருடைய சரீரத்தை எடுத்துக்கொண்டுவந்து, சோராவுக்கும் எஸ்தாவோலுக்கும் நடுவே அவர் தகப்பனாகிய மனோவாவின் கல்லறையில் அடக்கம்பண்ணுகிறார்கள் (நியா 16:31). இத்துடன் சிம்சோனின் சரித்திரம் நிறைவு பெறுகிறது.

சிம்சோன் இஸ்ரவேலை இருபதுவருஷம் நியாயம் விசாரித்தார் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டது (நியா 15:20). அது இங்கு மறுபடியும் சொல்லப்படுகிறது.

17 அதிகாரம்

நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் தேசம் சந்தோஷமாயிருந்தது. அவர்களுக்கு நியாயாதிபதிகள் இல்லாதபோது, அவர்களுடைய சந்தோஷமும் அவர்களிடத்தில் இல்லாதே போயிற்று. மீகாவின் குடும்பத்திலே விக்கிரகாராதனை ஆரம்பமாயிற்று (நியா 17-ஆவது அதிகாரம்). இதற்கு பின்பு தாண் கோத்திரத்தார் மத்தியிலும் விக்கிரகாராதனை பரவிற்று (நியா 18-ஆவது அதிகாரம்).

பென்யமீன் கோத்திரத்தார் செய்த பாவம் (நியா 19-ஆவது அதிகாரம்). பென்யமீன் கோத்திரத்தார் மொத்தமாய் அழிக்கப்படுகிறார்கள் (நியா 20-ஆவது அதிகாரம்). பென்யமீன் கோத்திரத்தார் மொத்தமாய் அழிந்துபோகாமல் பாதுகாக்கப்படுகிறார்கள் (நியா 21-ஆவது அதிகாரம்).

இந்த அதிகாரத்தில் எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய மீகாவைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. மீகா தன்னுடைய தெய்வத்திற்கு ஒரு வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகம் உண்டுபண்ணியிருக்கிறார் (நியா 17:1-6). ஒரு லேவியன் மீகாவுக்கு ஆசாரியராயிருக்கிறார் (நியா 17:7-13).

மீகாவின் விக்கிரகம்
நியா 17:1-6

நியா 17:1. எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய மீகா என்னும் பேருள்ள ஒரு மனுஷன் இருந்தான்.

நியா 17:2. அவன் தன் தாயை நோக்கி: உன்னிடத்திலிருந்த ஆயிரத்து நூறு வெள்ளிக்காசு களவுபோயிற்றே, அதைக் குறித்து என் காதுகள் கேட்க நீ சாபமிட்டாயே, அந்தப் பணம், இதோ, என்னிடத்தில் இருக்கிறது; அதை எடுத்தவன் நான்தான் என்றான். அதற்கு அவன் தாய்: என் மகனே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாய் என்றாள்.

நியா 17:3. அவன் அந்த ஆயிரத்து நூறு வெள்ளிக்காசைத் தன் தாயினிடத்தில் திரும்பக் கொடுத்தான்; அவள்: வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண, நான் என் கையிலிருந்த இந்த வெள்ளியை என் மகனுக்காக முற்றிலும் கர்த்தருக்கென்று நியமித்தேன்; இப்போதும் இதை உனக்குத் திரும்பக் கொடுக்கிறேன் என்றாள்.

நியா 17:4. அவன் அந்த வெள்ளியைத் தன் தாய்க்குத் திரும்பக் கொடுத்தான்; அப்பொழுது அவன் தாய் இருநூறு வெள்ளிக்காசை எடுத்து, தட்டான் கையிலே கொடுத்தாள்; அவன் அதினாலே, வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் பண்ணினான்; அவைகள் மீகாவின் வீட்டில் இருந்தது.

நியா 17:5. மீகா, சுவாமிக்கு ஒரு அடைவீட்டை நியமித்து வைத்திருந்தான்; அவன் ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் உண்டு பண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டைபண்ணினான்; இவன் அவனுக்கு ஆசாரியனானான்.

நியா 17:6. அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்.

மீகாவுக்கும் அவருடைய தாயாருக்கும் வாக்குவாதமுண்டாயிற்று. மீகா தன் தாயாரிடத்திலிருந்து 1,100 வெள்ளிக்காசுகளை திருடியிருக்கிறார். மீகாவின் தாயார் வயதான ஸ்திரீ. அவள் தன்னுடைய வருமானத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மீதப்படுத்தி, இந்தப் பெரிய தொகையை சேமித்து வைத்திருக்கிறாள். தான் மரித்துப்போகும்போது, இந்த வெள்ளிப்பணத்தை, தன் குமாரனாகிய மீகாவுக்கு கொடுக்கவேண்டும் என்பது அவளுடைய விருப்பமாகயிருந்திருக்கவேண்டும்.

மீகாவின் தாயார் சேர்த்து வைத்திருந்த 1,100 வெள்ளிக்காசுகளும் களவு போயிற்று. தன்னுடைய பணத்தை எடுத்தவனை, மீகாவின் தாயார் சபிக்கிறாள். அதை திருடியது யார் என்பது அவளுக்குத் தெரியாது. பணம் திருடு போனவுடன், அவளுடைய சந்தோஷமும் சமாதானமும் அவளை விட்டு விலகிப்போயிற்று.

பணத்தின்மீது ஆசை வைத்திருக்கிறவர்கள் மீகாவின் தாயாரைப்போல வேதனைப்படுவார்கள். வருத்தப்படுவார்கள். பணம் களவு போனவுடன் அவள் தன்னுடைய அன்றாட வேலைகளை மறந்துவிடுகிறாள். பணத்தை திருடியவனை சபிக்கிறாள். அவளுடைய உற்றார் உறவினர்மீது அவளுக்கு பாசமுண்டாகவில்லை. அவள் பணத்தின்மீதே பாசமாயிருக்கிறாள்.

விசுவாசிகளாகிய நம்முடைய ஜீவியத்தில் நமக்கு பொருளாதார இழப்பு ஏற்பட்டால், நாம் யாரையும் சபிக்கக்கூடாது. கர்த்தருடைய சமுகத்திலே வந்து ஜெபம்பண்ணவேண்டும். பொல்லாதவர்களுக்கும், பாவிகளுக்கும், துன்மார்க்கருக்கும் பொருளாதார இழப்பு ஏற்பட்டால் அவர்கள் எல்லோரையும் சபிப்பார்கள். எல்லோர்மீதும் சந்தேகப்படுவார்கள்.

மீகாவின் தாயார் தன்னுடைய 1,100 வெள்ளிக்காசுகளை திருடியவனை சபிக்கிறாள் மீகாவும் அவளுடைய சாபவார்த்தைகளைக் கேட்கிறார். அதைக் கேட்கும்போது மீகாவுக்கு மிகுந்த வருத்தமும், மனவேதனையும் உண்டாயிற்று. ஏனென்றால் மீகாதான் தன் தாயாருடைய 1,100 வெள்ளிக்காசுகளைத் திருடியிருக்கிறார். அந்த ஸ்திரீயும் தன் மகனை சபிக்கிறோம் என்பது தெரியாமலேயே, மீகாவின் காதுகள் கேட்க சாபமிடுகிறாள். தன் தாயாரின் சாபவார்த்தைகளைக் கேட்டு மீகாவுக்கு பயம் வந்துவிடுகிறது.

மீகா தன்னுடைய பாவத்திற்கு மனம் வருந்துகிறார். "அந்தப் பணம் இதோ என்னிடத்திலிருக்கிறது. அதை எடுத்தவன் நான் தான்" (நியா 17:2) என்று மீகா தன்னுடைய தாயாரிடத்தில் சொல்லுகிறார். தன்னுடைய மகன் மனம் திரும்பியதைப் பார்த்து மீகாவின் தாயாருக்கு மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. தன்னுடைய சாபவார்த்தைகளை அவள் உடனே நிறுத்திவிடுகிறாள்.

தன்னுடைய 1,100 வெள்ளிக்காசுகளை திருடியவனை மீகாவின் தாயார் இதுவரையிலும் சபித்தாள். தான் அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டதாக மீகா தன்னுடைய தாயாரிடம் ஒப்புக்கொள்கிறார். இப்போது மீகாவின் தாயார் தன்னுடைய மகனை சபிக்காமல், அவர்மீது கோபப்படாமல், அவர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமென்று விரும்பி அவருக்காக ஜெபிக்கிறாள். "என் மகனே, நீ கர்த்தரால் ஆசீர்வதிக்கப்படுவாய்" என்று மீகாவின் தாயார், அவரை ஆசீர்வதிக்கிறாள்.

மீகா 1,100 வெள்ளிக்காசுகளை தன் தாயாரிடத்தில் கொடுத்துவிடுகிறார். மீகாவின் தாயார் இந்த வெள்ளிக்காசுகளை கர்த்தருக்கென்று நியமித்திருக்கிறாள் (நியா 17:3). ஆகையினால் இந்த வெள்ளிக்காசுகளை கர்த்தரிடத்திலே ஒப்புக்கொடுத்துவிட வேண்டுமென்று மீகாவும் அவருடைய தாயாரும் தீர்மானம்பண்ணுகிறார்கள். ஆனால் இந்த வெள்ளிக்காசுகளை கர்த்தருக்கு காணிக்கையாக படைக்கும் விதம் விநோதமாயிருக்கிறது.

இந்த வெள்ளிக்காசுகளைக் கொண்டு, அவர்கள் தங்கள் வீட்டில் விக்கிரகாராதனையை ஆரம்பிக்கிறார்கள். மீகாவின் குடும்பத்தார் கர்த்தரைத்தான் ஆராதிக்கிறார்கள். ஆனால் அவர்கள் கர்த்தருக்கு ஒரு விக்கிரகத்தை செய்து அதை ஆராதிக்கிறார்கள். மீகாவின் தாயார், தன் கையிலிருக்கிற 1,100 வெள்ளிக்காசுகளைக் கொண்டு, வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண வேண்டுமென்று ஏற்கெனவே தீர்மானம்பண்ணியிருக்கிறாள்.

மீகாவின் தாயார் கர்த்தரை ஆராதிப்பதற்கு, வெட்டப்பட்ட ஒரு சொரூபத்தையும், வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ணுகிறாள். இது கர்த்தருடைய பத்துக்கற்பனைகளுக்கு விரோதமானது.

"என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்" (யாத் 20:3-5).

மீகாவின் குடும்பத்தார் கர்த்தரை ஆராதித்தாலும், அவர்கள் ஒரு சொரூபத்தையும், விக்கிரகத்தையும் செய்து, அதன் மூலமாய் கர்த்தரை ஆராதிக்கிறார்கள். இது விக்கிரகாராதனையின் ஆரம்பம். அவர்கள் இந்த விக்கிரகாராதனைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், இனிமேல் புறஜாதி தெய்வங்களின் விக்கிரகங்களும், சொரூபங்களும் அவர்களுடைய வீட்டிற்குள் பிரவேசித்துவிடும். அவர்கள் கர்த்தரை மறந்து, விக்கிரகங்களுக்கு தூபங்காட்ட ஆரம்பித்துவிடுவார்கள்.

இஸ்ரவேல் தேசத்திலே, விக்கிரகாராதனை ஆரம்பத்தில், இதுபோன்று சிறிய அளவில் ஆரம்பமாயிற்று. அவர்கள் கர்த்தரை ஆராதிப்பதற்கு விக்கிரகத்தையும் சொரூபத்தையும் பயன்படுத்தினார்கள். அதன் பின்பு அவர்கள் பாகால்களின் விக்கிரகங்களையும், அஸ்தரோத்தின் விக்கிரகங்களையும், தோப்பு விக்கிரகங்களையும் ஆராதிக்க ஆரம்பித்தார்கள்.

மீகாவின் தாயார் விக்கிரகாராதனையைப்பற்றிய தன்னுடைய யோசனையைச் சொல்லுகிறாள். அவள் தன்னிடத்திலுள்ள 1,100 வெள்ளிக்காசுகளையும், தன் மகனுக்காக, முற்றிலும் கர்த்தருக்கென்று நியமித்திருக்கிறாள் (நியா 17:3). மீகா இந்த வெள்ளிப்பணத்தை தன் தாயாரிடத்திலிருந்து திருடுவதற்கு முன்பாக, அவருடைய தாயார் இந்த வெள்ளியை மீகாவுக்காக, முற்றிலும் கர்த்தருக்காக நியமித்திருக்கிறாள்.

இந்த வெள்ளிப்பணம் மீகாவின் தாயாரிடத்திலிருந்தாலும், இது மீகாவுக்குரியது. ஆனால் மீகா இந்தப் பணத்தை தன் இஷ்டம்போல செலவு பண்ணக்கூடாது. இது முற்றிலும் கர்த்தருக்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற வெள்ளிக்காசுகள். மீகாவின் தாயார் தன்னுடைய மனதிலுள்ள பொருத்தனையை மீகாவிடம் சொல்லுகிறாள். "இப்போதும் இதை உனக்கு திரும்பக் கொடுக்கிறேன்" என்று சொல்லி அவள் அந்த வெள்ளியை மீகாவினிடத்தில் கொடுக்கிறாள்.

மீகாவின் தாயார் 1,100 வெள்ளியையும் தனக்கென்று வைத்துக்கொள்ள விரும்பவில்லை. இதை மீகாவுக்கு, அவருடைய சொந்த உபயோகத்திற்கென்று கொடுக்கவும் விரும்பவில்லை. இந்த வெள்ளியைக்கொண்டு வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும், வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ணவேண்டுமென்று இரண்டுபேரும் தீர்மானம்பண்ணுகிறார்கள். இந்த சுரூபமும் விக்கிரகமும் கர்த்தரை ஆராதிப்பதற்கு தங்களுக்கு உதவியாயிருக்கும் என்று நினைக்கிறார்கள்.

மீகாவின் தாயாருக்கு எகிப்து தேசத்தோடு தொடர்பு இருந்திருக்கவேண்டும். ஒரு வேளை அவள் எகிப்து தேசத்திலிருந்து எப்பிராயீம் மலைத்தேசத்திற்கு வந்திருக்கிற ஸ்திரீயாக இருக்கவேண்டும். எகிப்தியர்கள் தங்கள் தேசத்தில் இதுபோன்ற வெட்டப்பட்ட சுரூபங்களையும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகங்களையும் வெள்ளியினால் உண்டுபண்ணி வைத்திருப்பார்கள். அவற்றை தங்கள் தெய்வமாக ஆராதிப்பார்கள்.

மீகாவின் தாயார், எகிப்து தேசத்திலே, சொரூபங்களையும் விக்கிரகங்களையும் பார்த்திருக்கிறாள். அதுபோல தாங்களும் உண்டுபண்ணி, கர்த்தரை ஆராதிக்கவேண்டுமென்று, தன்னுடைய மகனாகிய மீகாவிடம் சொல்லுகிறாள். மீகாவும் இந்த விக்கிரகாராதனைக்கு சம்மதம் தெரிவிக்கிறார். கர்த்தரை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் என்னும் சத்தியம் மீகாவின் தாயாருக்கு தெரியவில்லை.

மீகாவுக்கு கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தைப்பற்றி ஓரளவு தெரியும். மீகாவின் தாயார் அவரிடத்தில், சொரூபத்தையும் விக்கிரகத்தையும் உண்டுபண்ணவேண்மென்று சொன்னபோது, மீகா அதிர்ச்சியடைந்திருப்பார். இந்த விக்கிரகத்தையும் சொரூபத்தையும் கர்த்தருக்கு செய்யவேண்டுமென்று மீகாவின் தாயார் சொல்லுகிறாள். இந்த விளக்கத்தைக் கேட்டு மீகாவின் மனம் சமாதானமடைகிறது. விக்கிரகாராதனை செய்தாலும் தாங்கள் கர்த்தரையே ஆராதிக்கப்போகிறோம் என்றும், அந்நிய தெய்வங்களை ஆராதிக்கப்போவதில்லை என்றும் நினைத்து, மீகா தன்னுடைய தாயாரின் யோசனைக்கு சம்மதம் சொல்லுகிறார்.

மீகாவின் தாயார் வயதான ஸ்திரீயாயிருந்தாலும், தன்னுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிறாள். மீகாவின் தாயார் வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் உண்டுபண்ண, தன் கையிலிருந்த 1,100 வெள்ளிக்காசுகளையும், முற்றிலுமாக கர்த்தருக்கென்று நியமித்தாள். ஆனால் அவள் அதை மொத்தமாய் செலவு பண்ணவில்லை. அதை உண்டுபண்ணுவதற்கு அவள் தன்னிடத்திலுள்ள 1,100 வெள்ளிக்காசுகளை, 200 வெள்ளிக்காசுகளில் மாத்திரமே சுரூபத்தையும் விக்கிரகத்தையும் உண்டுபண்ணுவதற்கு பயன்படுத்துகிறாள்.

மீகா அந்த வெள்ளியைத் தன் தாய்க்குத் திரும்பக் கொடுக்கிறார்; அப்பொழுது அவன் தாய் இருநூறு வெள்ளிக்காசை எடுத்து, தட்டான் கையிலே கொடுக்கிறாள்; அவன் அதினாலே, வெட்டப்பட்ட ஒரு சுரூபத்தையும் வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்தையும் பண்ணுகிறான்; அவைகள் மீகாவின் வீட்டில் இருக்கிறது (நியா 17:4).

மீகாவின் தாயார் கர்த்தருக்கு பொருத்தனைபண்ணி வெள்ளிப்பணத்தில், ஐந்தில் ஒரு பகுதியை மாத்திரமே செலவு பண்ணுகிறாள். வெள்ளிக்காசு விஷயத்தில் அவள் மிகவும் கவனமாயிருக்கிறாள்.

இப்போது இந்த சொரூபமும் விக்கிரகமும் மீகாவின் வீட்டிலிருக்கிறது. செப்துவஜிந்த் பதிப்பில் "தேவர்களுடைய வீடு" மீகாவினிடத்திலிருக்கிறது என்று பொருள்படுமாறு எழுதப்பட்டிருக்கிறது.

மீகாவின் காலத்திலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும், ஆசரிப்புக்கூடாரமும் சீலோவிலே இருக்கிறது. சீலோ கர்த்தருடைய வாசஸ்தலம். தன்னுடைய வீட்டிலே கர்த்தருடைய சுரூபமும், விக்கிரகமும் இருப்பதினால், தன்னுடைய வீடும் சீலோவைப்போல விசேஷமானது என்று மீகா நினைக்கிறார்.

சீலோவிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டி இருப்பதினால் மீகாவுக்கு ஒரு சந்தோஷமும் உண்டாகவில்லை. ஆனால், தன்னுடைய வீட்டிலே, கர்த்தருடைய சொரூபமும் விக்கிரகமும் இருப்பதினால் மீகா மிகவும் சந்தோஷமாயிருக்கிறார்.

அக்காலத்திலே இஸ்ரவேல் புத்திரர் ஒவ்வொருவரும், தங்களுடைய மார்க்க ஆராதனைகளை தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கவேண்டும் என்று விரும்பினார்கள். ஒவ்வொருவனும் தன்னுடைய மனம் போனபடி ஜீவிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டான்.

விக்கிரகங்கள் மீகாவின் வீட்டில் இருந்ததினால் அவருடைய வீடு பாவத்தின் வீடாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் தேவனாகிய கர்த்தரைவிட்டும், சத்தியத்தைவிட்டும் விலகிப்போயிருக்கிறார்கள். மீகாவின் வீடு அவர்களை வஞ்சிக்கிற வீடாயிருக்கிறது. எல்லாவிதமான மாய்மாலங்களுக்கும், ஏமாற்று வேலைகளுக்கும் மீகாவின் வீடே வாசஸ்தலமாயிருக்கிறது.

மீகா தன்னுடைய தாயாரின் வெள்ளியினால் "தெராபீம்" என்னும் சிறிய சுரூபங்களை செய்கிறார். யோசனைகளைக் கேட்பதற்கும், தங்களை வழிநடத்துவதற்கும், இனிமேல் நடைபெறப்போகும் சம்பவங்களை முன்னறிந்து கொள்வதற்கும் இஸ்ரவேல் புத்திரர் அக்காலத்தில் "தெராபீம்" என்னும் சிறிய விக்கிரகத்திடம் விசாரித்தார்கள்.

இஸ்ரவேல் ஜனத்தார் தங்கள் தேவனாகிய கர்த்தரை மாத்திரமே ஆராதிக்கவேண்டும். கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து ஜீவிக்க வேண்டும். ஆனால் அவர்களோ கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றுகிறார்கள். சத்தியத்தைவிட்டு விலகிப்போகிறார்கள். விக்கிரகாராதனையின் முடிவு பிசாசுகளின் ஆராதனையாயிருக்கிறது.

மீகா தன்னுடைய வீட்டின் ஒரு அறையை, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தை வைப்பதற்கும், வெட்டப்பட்ட சுரூபத்தை வைப்பதற்கும் பயன்படுத்துகிறார். தன்னுடைய வீட்டின் இந்தப் பகுதியை, மீகா "தேவனுடைய வீடு" அல்லது "தேவனுடைய ஆலயம்" என்று சொல்லுகிறார்.

சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரத்திலே, பிரதான ஆசாரியர் கர்த்தருக்கு ஆராதனை செய்வார். அவர் ஆசாரிய வஸ்திரம் தரித்திருப்பார். அவரிடத்தில் "ஏபோத்து" இருக்கும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சித்தத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று ஆசரிப்புக்கூடாரத்திற்கு வரும்போது, ஆசாரியர் ஏபோத்தைப் பயன்படுத்தி, கர்த்தருடைய சித்தத்தை அவர்களுக்கு வெளிப்படுத்துவார்.

மீகாவும் தன்னுடைய வீட்டிலுள்ள சுரூபமும் விக்கிரகமும் வைக்கப்பட்டிருக்கிற அறையை, சீலோவிலுள்ள ஆசரிப்புக்கூடாரம் போலவே அழகுபடுத்துகிறார். மீகாவின் வீட்டிலே விக்கிரகாரதானை ஆரம்பமாகிறது.

மீகா, சுவாமிக்கு ஒரு அறைவீட்டை நியமித்து வைத்திருக்கிறார்; மீகா ஒரு ஏபோத்தையும் சுரூபங்களையும் உண்டு பண்ணி, தன் குமாரரில் ஒருவனைப் பிரதிஷ்டைபண்ணுகிறார்; மீகாவின் மகன் மீகாவுக்கு ஆசாரியனானாயிருக்கிறான் (நியா 17:5).

பெலிஸ்தரின் அதிபதிகள் ஒவ்வொருவரும், 1,100 வெள்ளிக்காசுகளைக் கொடுத்து சிம்சோனை அழித்தார்கள். அதுபோலவே இங்கு, யூதருடைய மார்க்க ஆராதனையை அழிப்பதற்கு, 1,100 வெள்ளிக்காசுகள் பயன்படுத்தப்படுகிறது. விக்கிரகாராதனை முதலாவதாக தாண் கோத்திரத்திலே ஆரம்பமாயிற்று.

அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை, அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவருகிறான் (நியா 17:6). இது விக்கிரகாராதனையினால் ஏற்பட்ட சாபம். அவனவன் ஆரம்பத்தில் தன் தன் பார்வைக்கு சரிபோனபடி செய்து வருகிறான். பின்பு ஒவ்வொருவனும் கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதை செய்கிறான்.

இஸ்ரவேல் தேசத்திலே, அவர்களை ஆளுகை செய்வதற்கு ராஜாவுமில்லை. நியாயாதிபதியுமில்லை. இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரை விட்டு விலகி விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். கர்த்தரும் இஸ்ரவேல் ஜனங்களைவிட்டு விலகிப்போகிறார். கர்த்தர் தம்முடைய ஜனத்தைவிட்டு விலகிப்போகும்போது, அவரோடுகூட, அவருடைய பாதுகாப்பும், பராமரிப்பும் இஸ்ரவேல் புத்திரரைவிட்டு விலகிப்போகிறது.

கர்த்தர் நம்முடைய தேசத்திற்கு ஆளுகையையும், அதிகாரிகளையும் கொடுத்திருக்கிறார். நாம் இதற்காக கர்த்தரைத் துதிக்கவேண்டும். நம்முடைய தேசத்தின் தலைவர்களுக்காக கர்த்தரிடத்தில் ஜெபம்பண்ணவேண்டும்.

"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காவும் அப்படியே செய்ய வேண்டும்" (1தீமோ 2:1,2).

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷம் எல்லா தேசத்தார் மத்தியிலும் அறிவிக்கப்படவேண்டும். இந்தப் பூமியிலுள்ள ராஜாக்களும், ராஜ்யங்களும், ஆளுகைகளும் சுவிசேஷப் பிரபல்யத்திற்கு அநுகூலம்பண்ண வேண்டுமென்று, கர்த்தருடைய பிள்ளைகள் கருத்தாய் ஜெபம்பண்ணவேண்டும்.

மீகாவின் ஆசாரியன்
நியா 17:7-13

நியா 17:7. யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானும் லேவியனுமான ஒரு வாலிபன் அங்கே தங்கியிருந்தான்.

நியா 17:8. அந்த மனுஷன் எங்கேயாகிலும் பரதேசியாய்ப் போய்த் தங்கும்படிக்கு, யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பிரயாணம் போகையில், எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீட்டில் வந்து சேர்ந்தான்.

நியா 17:9. எங்கே இருந்து வந்தாய் என்று மீகா அவனைக் கேட்டதற்கு, அவன்: நான் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய லேவியன், எங்கேயாகிலும் போய்த் தங்கப்போகிறேன் என்றான்.

நியா 17:10. அப்பொழுது மீகா: நீ என்னிடத்தில் இரு, நீ எனக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிருப்பாய்; நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும், மாற்று வஸ்திரத்தையும், உனக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன் என்று அவனிடத்தில் சொன்னான்; அப்படியே லேவியன் உள்ளே போனான்.

நியா 17:11. அந்த லேவியன் அந்த மனிதனிடத்தில் இருக்கச் சம்மதித்தான்; அந்த வாலிபன் அவனுக்கு அவன் குமாரரில் ஒருவனைப்போல் இருந்தான்.

நியா 17:12. மீகா அந்த லேவியனைப் பிரதிஷ்டை பண்ணினான்; அந்த வாலிபன் அவனுக்கு ஆசாரியனாகி, மீகாவின் வீட்டில் இருந்தான்.

நியா 17:13. அப்பொழுது மீகா: எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மைசெய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன் என்றான்.

மீகா தன் வீட்டிலுள்ள சுரூபத்திற்கும் விக்கிரகத்திற்கும் ஆசாரிய ஊழியம் செய்வதற்கு ஒரு லேவியரை நியமிக்கிறார். இந்த லேவியர், தன்னுடைய தாயாரின் வழியில் யூதாகோத்திரத்தைச் சேர்ந்தவர். இவர் பெத்லகேம் ஊரிலே வாசம்பண்ணியவர்.

லேவியனாகிய அந்த மனுஷன் எங்கேயாகிலும் பரதேசியாய்ப் போய்த் தங்கும்படிக்கு, யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரைவிட்டுப் புறப்பட்டுப் பிரயாணம் போகையில், எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீட்டில் வந்து சேருகிறார் (நியா 17:8).

பெத்லகேமிலே லேவியருக்கு போஜனமும், தன்னுடைய குடும்பத்தை நடத்துவதற்கு பொருளாதார வருமானமும் கிடைக்கவில்லை. ஜனங்கள் கர்த்தரை விட்டுப் பின்வாங்கிப்போய்விடுகிறார்கள். கர்த்தருடைய ஆராதனையும் ஒழுங்காய் நடைபெறவில்லை. ஜனங்கள் லேவியருக்கும் ஆசாரியருக்கும் காணிக்கைகளையும் கொடுக்கவில்லை. இதனால் பெத்லகேமிலுள்ள இந்த லேவியன், பசியும் பட்டினியுமாயிருந்து, வேறு ஏதாவது ஒரு ஊரில் போய் தங்கலாம் என்று நினைத்து, பெத்லகேம் ஊரைவிட்டு புறப்பட்டு வந்திருக்கிறார்.

இஸ்ரவேல் ஜனத்தார் கர்த்தரைப் புறக்கணிக்கும்போது, கர்த்தருடைய ஆராதனைகளையும் புறக்கணிக்கிறார்கள். லேவியரையும் ஆசாரியரையும் புறக்கணிக்கிறார்கள். கர்த்தருடைய ஊழியக்காரர்கள் புறக்கணிக்கப்பட்டு, பசியும் பட்டினியுமாயிருப்பார்களென்றால், அங்கே கர்த்தருடைய ஊழியமும், ஆவிக்குரிய காரியங்களும் குறைவாயிருக்கிறது என்பதே பொருள்.

பெத்லகேம் ஊரைவிட்டு புறப்பட்ட லேவியன் மீகாவின் வீட்டிற்கு வந்து சேருகிறார். மீகா லேவியனிடத்தில், "எங்கே இருந்து வந்தாய்" என்று கேட்கிறார். அதற்கு அந்த லேவியன் "நான் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய லேவியன், எங்கேயாகிலும் போய்த் தங்கப்போகிறேன்" (நியா 17:9) என்று பிரதியுத்தரம் சொல்லுகிறார்.

மீகாவின் வீட்டிலே சுரூபமும் விக்கிரகமும் இருக்கிறது. மீகா தன்னுடைய குமாரரில் ஒருவனை, தனக்கு ஆசாரியனாயிருக்கும்படி பிரதிஷ்டைபண்ணியிருந்தார். இப்போது மீகாவின் வீட்டில், அவருடைய குமாரரே, அவருக்கு ஆசாரியராயிருக்கிறார். தன்னுடைய குமாரனின் ஆசாரிய ஊழியத்தில் மீகாவுக்கு திருப்தியில்லை. தன்னுடைய வீட்டிலே வைக்கப்பட்டிருக்கிற விக்கிரகத்திற்கும் சுரூபத்திற்கும், ஆசாரிய ஊழியம் செய்ய ஒரு லேவியன் இருந்தால், அதுவே சிறப்பாகயிருக்கும் என்று மீகா விரும்புகிறார்.

மீகா லேவியனோடு அன்பான வார்த்தைகளைப் பேசுகிறார். மீகா லேவியனிடம், "நீ என்னிடத்தில் இரு, நீ எனக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிருப்பாய்; நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும், மாற்று வஸ்திரத்தையும், உனக்குவேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன்" (நியா 17:10) என்று சொல்லுகிறார்.

மீகா லேவியனிடம் அவருடைய ஊழியத்தகுதியைப்பற்றியோ, அனுபவத்தைப்பற்றியோ ஒன்றும் கேட்கவில்லை. அவருக்கு நியாயப்பிரமாணம் தெரிந்திருக்கிறதா என்றெல்லாம், மீகா அவரை சோதித்துப் பார்க்கவில்லை. மீகா லேவியனை பார்த்தவுடனேயே, "நீ என்னிடத்தில் இரு, நீ எனக்கு தகப்பனும் ஆசாரியனுமாயிருப்பாய்" என்று சொல்லிவிடுகிறார்.

இந்த லேவியன், மீகாவின் வீட்டில் தங்கியிருந்து, மீகாவின் வீட்டில் வைக்கப்பட்டிருக்கிற வெட்டப்பட்ட சுரூபத்திற்கும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்திற்கும் ஆசாரியராயிருக்கவேண்டும்.

யெரொபெயாம் தான் கட்டின ஆலயத்திலே, தான் நிறுவின விக்கிரகங்களுக்கு ஆசாரிய ஊழியம் செய்ய, தனக்கு இஷ்டமான துன்மார்க்கரை நியமித்தார். அவர்கள் ஜனத்தில் ஈனமானவர்களாயிருந்தார்கள்.

"அவன் மேடையாகிய ஒரு கோவிலையும் கட்டி, லேவியின் புத்திரராயிராத ஜனத்தில் ஈனமானவர்களை ஆசாரியராக்கினான்" (1இராஜா 12:31).

மீகா இந்த லேவியனை ஆதரிப்பதாகவும் சொல்லுகிறார். "நான் உனக்கு வருஷத்திலே பத்து வெள்ளிக்காசையும், மாற்று வஸ்திரத்தையும், உனக்கு வேண்டிய ஆகாரத்தையும் கொடுப்பேன்" என்று மீகா லேவியனுக்கு சொல்லுகிறார்.

லேவியன் ஒரு வஸ்திரத்தை அன்றாடம் தரித்துக்கொள்ளவேண்டும். மற்ற வஸ்திரத்தை பரிசுத்த நாட்களிலே தரித்துக்கொள்ளவேண்டும். ஒரு வருஷம் முழுவதும் அந்த லேவியருக்கு பத்து வெள்ளிக்காசுகள் மாத்திரமே சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. இது தவிர அவருக்கு வேண்டிய ஆகாரமும் கொடுக்கப்படுகிறது.

வருஷத்திற்கு பத்து வெள்ளிக்காசுகள் என்பது லேவியருக்கு மிகவும் குறைவான சம்பளம். லேவியர்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்து பரிசுத்தமாய் ஜீவியத்தால், கர்த்தர் அவர்களை நன்றாய்ப் போஷிப்பார். அவர்களுடைய தேவைகளை தாராளமாய்ச் சந்திப்பார். ஆனால் இக்காலத்தில் லேவியர்களும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைப்போல, கர்த்தரை விட்டு விலகிப்போயிருக்கிறார்கள்.

கர்த்தருடைய ஊழியத்தை விட்டு விலகி வருகிறவர்களுக்கு ஆசீர்வாதம் இல்லை. அவர்களுடைய ஜீவியத்தில் செழிப்பு இருக்காது. ஊழியக்காரர்கள் கர்த்தருடைய ஊழியத்தைக் கைவிடும்போது, கர்த்தரும் அவர்களைக் கைவிட்டுவிடுகிறார். ஒரு காலத்தில் கர்த்தருக்கு ஊழியம் செய்த, ஊழியக்காரர்கள் ஊழியத்தைவிட்டு பின்வாங்கிப்போய், எப்படித்தான் தேடிப்பார்த்தாலும், எங்குதான் ஓடிப்பார்த்தாலும், அவர்களால் கர்த்தரைப்போல நல்ல எஜமானைப் பார்க்க முடியாது.

கர்த்தருடைய ஊழிய அழைப்பு என்பது மிகவும் கனமுள்ளது. ஆனால் இந்த உலகப்பிரகாரமான வேலை அல்லது தொழில் என்று பார்க்கும்போது, கர்த்தருடைய ஊழியம் கனவீனமானது.

மீகா லேவியனுக்கு சொற்ப சம்பளம் கொடுப்பதாகச் சொல்லுகிறார். லேவியனும் அந்த சம்பளத்திற்கு, மீகாவினிடத்தில் ஆசாரிய ஊழியம் செய்ய சம்மதிக்கிறார். லேவியன் மீகாவின் வீட்டிற்குள்ளே, சொரூபமும் விக்கிரகமும் வைக்கப்பட்டிருக்கிற இடத்திற்குப் போகிறார். அந்த லேவியன் மீகாவிடம் இருக்க சம்மதிக்கிறார். அவர் மீகாவுக்கு, அவருடைய குமாரரில் ஒருவரைப்போல இருக்கிறார்.

லேவியன் மீகாவுக்கு ஆசாரிய ஊழியம் செய்யவேண்டும். ஆசாரிய ஊழியம் மிகவும் கனமுள்ளது. ஆனால் இந்த ஊழியத்திற்குக் கொடுக்கப்படும் சம்பளமோ மிகவும் குறைவு. மீகா தன்னைத்தானே பரிசுத்தமுள்ளவராக நினைத்துக்கொள்கிறார். தன்னுடைய உற்றார் உறவினர், தன்னுடைய ஊரிலுள்ளவர்கள் ஆகிய எல்லோரையும்விட, மீகா தன்னைப் பரிசுத்தவானாக நினைத்துக்கொண்டு, அந்த லேவியனை ஆசாரிய ஊழியத்திற்கு பிரதிஷ்டைபண்ணுகிறார். லேவியனாகிய அந்த வாலிபனும், மீகாவுக்கு ஆசாரியனாகி, மீகாவின் வீட்டிலிருக்கிறார் (நியா 17:12).

தனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் கிடைத்திருப்பதை நினைத்து மீகா மிகவும் சந்தோஷப்படுகிறார். அப்பொழுது மீகா: "எனக்கு ஆசாரியனாக ஒரு லேவியன் அகப்பட்டபடியினால், கர்த்தர் எனக்கு நன்மைசெய்வார் என்று இப்பொழுது அறிந்திருக்கிறேன்" (நியா 17:13) என்று சொல்லுகிறார்.

மீகாவின் வீட்டில் வெட்டப்பட்ட சுரூபமும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகமும் இருக்கிறது. இது கர்த்தர் தன்னுடைய வீட்டிலிருப்பதற்கு அடையாளம் என்று மீகா நினைக்கிறார். கர்த்தர் தன்னுடைய வீட்டிலே இருப்பது, தனக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம் என்று மீகா கருதுகிறார். இப்போது தனக்கு கர்த்தர் மேலும் ஒரு நன்மை செய்திருக்கிறார் என்று மீகா நினைக்கிறார். தனக்கு ஆசாரியனாயிருப்பதற்கு கர்த்தர் ஒரு லேவியனை அனுப்பியிருக்கிறார் என்று மீகா சந்தோஷப்படுகிறார்.

கர்த்தருடைய கிருபையும், இரக்கமும், ஆசீர்வாதமும் தனக்கு கிடைத்திருப்பதற்கு இவையெல்லாம் அடையாளங்கள் என்று மீகா சந்தோஷப்படுகிறார். மீகாவின் வீட்டிற்குள்ளே சுரூபமும் விக்கிரகமும் இருக்கிறது. மீகாவின் வாசலிலே லேவியர் இருக்கிறார். இதுவே தனக்கு பெரிய சிலாக்கியம் என்று மீகா நினைக்கிறார்.

பழைய ஏற்பாட்டுக்காலத்து பிரமாணத்தின்படி, ஒரு லேவியன் ஆசாரிய ஊழியம் செய்யலாம். அந்த ஆசாரியன் கர்த்தருக்கு மாத்திரமே ஊழியம் செய்யவேண்டும். ஆனால் மீகாவின் வீட்டிலிருக்கிற ஆசாரியனோ, சுரூபத்திற்கும் விக்கிரகத்திற்கும் ஊழியம் செய்கிறார். ஆசாரிய ஊழியம் கனமுள்ளது. ஆனால் மீகாவின் வீட்டிலிருக்கிற சுரூபமும் விக்கிரகமும் கனவீனமுள்ளது. ஊழியம் பரிசுத்தமானது. விக்கிரகம் அசுத்தமானது.

தனக்கு ஆசாரியனாக, ஒரு லேவியன் அகப்பட்ட படியினால், கர்த்தர் தனக்கு நன்மை செய்கிறார் என்று மீகா சொல்லுகிறார். அவர் தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்கிறார். ஒரு லேவியன் ஆசாரிய ஊழியம் செய்யலாம். இது பரிசுத்தமான ஊழியம். ஆனால் வீட்டிலே விக்கிரகம் இருக்கக்கூடாது. ஆசாரியன் விக்கிரகத்திற்கு ஊழியம் செய்யக்கூடாது.

மீகா முழுவதுமாய் மனந்திரும்பவில்லை. அவர் தன்னைத்தானே வஞ்சித்துக்கொள்கிறார். தன்னிடத்தில் ஒரு லேவியன் ஆசாரியனாக இருந்தால் அதுவே தனக்குப் போதுமானது என்று மீகா நினைக்கிறார். மீகாவைப்போலவே இக்காலத்தில் ஏராளமானோர் தங்களை வஞ்சித்துக்கொள்கிறார்கள். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு முழுவதுமாய் மனந்திரும்பாமல், அரைகுறையாக மனந்திரும்புகிறார்கள்.

தாங்கள் நன்றாயிருப்பதினால் கர்த்தர் தங்களுக்கு நன்மை செய்திருக்கிறார் என்று சொல்லுகிறார்கள். ஒருவருடைய பொருளாதாரம் அதிகரிப்பதினாலோ, அவருடைய வசதிகள் கூடுவதினாலோ, அவருடைய அந்தஸ்து பெருகுவதினாலோ, கர்த்தர் அவருக்கு நன்மை செய்திருக்கிறார் என்று சொல்ல முடியாது. கர்த்தருடைய நன்மைகளையும், ஆசீர்வாதங்களையும், உலகப்பிரகாரமான நன்மைகளைக்கொண்டு அளக்கக்கூடாது.

மீகாவுக்கு சத்தியம் தெரியும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகி, விக்கிரகங்களைப் பின்பற்றிப்போகிறார்கள். மீகாவோ கர்த்தரையே விக்கிரகமாக மாற்றி தன்னுடைய வீட்டிற்குள்ளே வைத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் மகாபெரிய பாவிகளாயிருக்கும்போது, தான் அவர்களைப்போல மகாபாவியல்ல என்று மீகா நினைக்கிறார். இதனால், தான் மற்றவர்களைவிட கர்த்தருடைய பார்வையில் பரிசுத்தமானவர் என்று மீகா தனக்குத்தானே நினைத்துக்கொள்கிறார்.

மீகாவைப்போலவே இக்காலத்தில், ஒரு சில விசுவாசிகள் தங்களை மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, சந்தோஷப்படுகிறார்கள். தாங்கள் மற்றவர்களைப்போல மோசமானவர்களல்ல என்று சொல்லி, தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் திருப்தியோடிருக்கிறார்கள். நம்முடைய ஆவிக்குரிய ஜீவியத்திற்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவே, நமக்கு இலக்காயிருக்கிறார். நாம் மனுஷரை நோக்கிப் பார்க்காமல், கிறிஸ்துவை நோக்கிப் பார்க்கவேண்டும்.

ஒரு லேவியனை தனக்கு ஆசாரியனாக ஆக்கியது தன்னுடைய பாக்கியம் என்று மீகா நினைக்கிறார். நாம் ஆராதிக்கிறவர் இன்னாரென்பதை நாம் அறிந்திருக்கவேண்டும். லேவியன் கர்த்தருக்கு ஆசாரியராயிருந்தால், அது ஆசீர்வாதமாயிருக்கும். ஆனால் இந்த லேவியனோ, வார்ப்பிக்கப்பட்ட ஒரு விக்கிரகத்திற்கும் வெட்டப்பட்ட ஒரு சுரூபத்திற்கும் ஆசாரியனாயிருக்கிறார்.

லேவியன் மீகாவோடே கூட அவருடைய வீட்டிலிருக்கிறார். அவர் மீகாவுக்கு அவருடைய குமாரரில் ஒருவரைப்போல இருக்கிறார். தன்னுடைய வீட்டிலே ஒரு லேவியன் தங்கியிருப்பது, தனக்கு கிடைத்திருக்கிற பெரிய சிலாக்கியம் என்று மீகா நினைக்கிறார்.

கர்த்தருடைய ஊழியக்காரர்கள் நம்முடைய வீட்டிலிருப்பது நமக்கு நல்லதுதான். ஆனாலும் ஊழியக்காரர்களைவிட, கர்த்தருடைய பரிசுத்தமான பிரசன்னம் நம்மோடேகூட நம்முடைய வீட்டிலே இருக்கவேண்டும். இதுவே நமக்கு மெய்யான ஆசீர்வாதம்.

லேவியன் மீகாவின் வீட்டிலிருப்பதினால், கர்த்தருடைய பாதுகாப்பும் பராமரிப்பும் அந்த வீட்டிலே இருக்கும் என்னும் உத்திரவாதமில்லை. மீகா கர்த்தருக்கு உண்மையுள்ளவராயிருக்க வேண்டும். அவர் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய சித்தமும் திட்டமும், மீகாவின் சித்தமாகவும், திட்டமாகவும் இருக்கவேண்டும். இதுவே மீகாவுக்கும், அவருடைய வீட்டிற்கும் மெய்யான ஆசீர்வாதம்.

18 அதிகாரம்

மீகாவின் வீட்டிலே விக்கிரகாராதனை பிரவேசித்தது. அந்த விக்கிரகாராதனை அங்கே இருந்து தாண் கோத்திரத்தார் முழுவதற்கும் பரவிற்று. இஸ்ரவேல் புத்திரரில், தாண் கோத்திரத்தாருக்கு, சுதந்தரவீதம் கடைசியாகப் பிரித்துக்கொடுக்கப்பட்டது. கானான் தேசத்தின் வடபகுதியிலுள்ள ஒரு பட்டணமும் தாண் கோத்திரத்தாரின் பங்குவீதத்திற்கு கொடுக்கப்பட்டது.

தாண் கோத்திரத்தார் தேசத்தை உளவு பார்த்து வரும்படி பலத்த மனுஷராகிய ஐந்து பேரை அனுப்புகிறார்கள். அவர்கள் மீகாவின் வீட்டண்டைக்குப்போய், அவருடைய வீட்டிலிருக்கிற லேவியனான ஆசாரியனைப் பார்க்கிறார்கள் (நியா 18:1-6).

தேசத்தை வேவுபார்க்க அனுப்பப்பட்ட ஐந்து மனுஷரும் தாண் கோத்திரத்தாருக்கு உற்சாகமான செய்தியை சொல்லுகிறார்கள் (நியா 18:7-10). தாண் கோத்திரத்தாரில் அறுநூறுபேர் ஆயுதபாணிகளாக புறப்பட்டுப்போய், லாயீசுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள் (நியா 18:11-13).

தாண் கோத்திரத்தாரின் யுத்த மனுஷர் மீகாவின் வீட்டிலே இருக்கிற வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும், சுரூபங்களையும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக்கொள்கிறார்கள் (நியா 18:14-26).

தாண் கோத்திரத்தாரின் யுத்த மனுஷர் லாயீஸ் ஊர் ஜனங்களை பட்டயக்கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள் (நியா 18:27-29). தாண் புத்திரர் மீகாவின் வீட்டிலிருந்து எடுத்துக்கொண்டு வந்த சுரூபத்தை, தங்களுக்கு ஸ்தாபித்துக்கொள்கிறார்கள் (நியா 18:30,31).

தாண் கோத்திரத்தார்
நியா 18:1-6

நியா 18:1. அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை; தாண் கோத்திரத்தார் குடியிருக்கிறதற்கு, தங்களுக்குச் சுதந்தரம் தேடினார்கள்; அந்நாள்வரைக்கும் அவர்களுக்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே போந்த சுதந்தரம் கிடைக்கவில்லை.

நியா 18:2. ஆகையால் தேசத்தை உளவுபார்த்து வரும்படி, தாண் புத்திரர் தங்கள் கோத்திரத்திலே பலத்த மனுஷராகிய ஐந்து பேரைத் தங்கள் எல்லைகளில் இருக்கிற சோராவிலும் எஸ்தாவோலிலுமிருந்து அனுப்பி: நீங்கள் போய், தேசத்தை ஆராய்ந்துபார்த்து வாருங்கள் என்று அவர்களோடே சொன்னார்கள்; அவர்கள் எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீடுமட்டும் போய், அங்கே இராத்தங்கினார்கள்.

நியா 18:3. அவர்கள் மீகாவின் வீட்டண்டை இருக்கையில், லேவியனான வாலிபனுடைய சத்தத்தை அறிந்து, அங்கே அவனிடத்தில் போய்: உன்னை இங்கே அழைத்துவந்தது யார்? இவ்விடத்தில் என்ன செய்கிறாய்? உனக்கு இங்கே இருக்கிறது என்ன என்று அவனிடத்தில் கேட்டார்கள்.

நியா 18:4. அதற்கு அவன்: இன்னஇன்னபடி மீகா எனக்குச் செய்தான்; எனக்குச் சம்பளம் பொருந்தினான்; அவனுக்கு ஆசாரியனானேன் என்றான்.

நியா 18:5. அப்பொழுது அவர்கள் அவனை நோக்கி: எங்கள் பிரயாணம் அநுகூலமாய் முடியுமா என்று நாங்கள் அறியும்படி தேவனிடத்தில் கேள் என்றார்கள்.

நியா 18:6. அவர்களுக்கு அந்த ஆசாரியன்: சமாதானத்தோடே போங்கள்; உங்கள் பிரயாணம் கர்த்தருக்கு ஏற்றது என்றான்.

தாண் கோத்திரத்தாரில், ஒரு குடும்பத்திற்கு இன்னும் சுதந்தரம் கொடுக்கப்படவில்லை. அவர்கள் லாயீஸ் பட்டணத்தை தங்களுக்கு சுதந்தரமாக்கிக்கொள்ள விரும்புகிறார்கள். இந்தப் பட்டணம் கானான் தேசத்தின் வடக்குப்பகுதியிலுள்ளது. லாயீஸ் பட்டணம் தாண் புத்திரரின் சுதந்தரத்திற்குள் வருகிறது.

தாண் கோத்திரத்தாரில், சுதந்தரம் கிடைக்காத இந்தக் குடும்பத்தார், இதுவரையிலும், தங்கள் சகோதரராகிய மற்ற தாண் கோத்திரத்தாரோடு பிரயாணம் பண்ணினார்கள். அவர்களுக்கு சுதந்தரம் வீதம் கிடைப்பதற்கு, அவர்களோடு சேர்ந்து கானானியருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார்கள்.

தாண் புத்திரருக்கு சுதந்தரம் கிடைத்தது. அவர்களுடைய பங்குவீதம் யூதாதேசத்திற்கும், பெலிஸ்தருடைய தேசத்திற்கும் நடுவிலே உள்ளது. தாண் புத்திரரோ தங்களுடைய பங்குவீதத்திலுள்ள பட்டணத்திற்கு போகவில்லை. ஏனெனில், அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜா இல்லை; தாண் கோத்திரத்தார் குடியிருக்கிறதற்கு, தங்களுக்குச் சுதந்தரம் தேடினார்கள்; அந்நாள்வரைக்கும் அவர்களுக்கு இஸ்ரவேல் கோத்திரங்கள் நடுவே போந்த சுதந்தரம் கிடைக்கவில்லை (நியா 18:1).

தாண் புத்திரருடைய எண்ணிக்கை அதிகரிக்கிறது. அவர்களுக்கென்று சொந்த பட்டணங்கள் தேவைப்படுகிறது. தங்களுடைய போந்த சுதந்தரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தாண் புத்திரர் தீர்மானிக்கிறார்கள். தங்களுக்கு ராஜா இல்லாவிட்டாலும், தாங்களாகவே தங்களுடைய பங்குவீதத்தை சுதந்தரித்துக்கொள்ளலாம் என்று தாண் கோத்திரத்தார் தீர்மானிக்கிறார்கள்.

தேசத்தை உளவுபார்த்து வரும்படி, தாண் புத்திரர் தங்கள் கோத்திரத்திலே பலத்த மனுஷராகிய ஐந்து பேரைத் தங்கள் எல்லைகளில் இருக்கிற சோராவிலும் எஸ்தாவோலிலுமிருந்து அனுப்புகிறார்கள். தாண் புத்திரர் அவர்களிடம், "நீங்கள் போய், தேசத்தை ஆராய்ந்துபார்த்து வாருங்கள்" என்று சொல்லுகிறார்கள்; உளவு பார்க்கிற ஐந்துபேரும் எப்பிராயீம் மலைத்தேசத்தில் இருக்கிற மீகாவின் வீடுமட்டும் போய், அங்கே இராத்தங்குகிறார்கள் (நியா 18:2).

தாண் புத்திரர் தெரிந்தெடுக்கிற ஐந்துபேரும் பலத்த மனுஷராயிருக்கிறார்கள். ஒருவேளை இவர்கள் சத்துருக்களின் கைகளில் பிடிபட்டாலும், அவர்களின் பிடியிலிருந்து எப்படியாவது தப்பித்து ஓடி வந்துவிடுவார்கள். இவர்கள் பலத்த மனுஷராயிருப்பதினால் சத்துருக்களோடு யுத்தம்பண்ண வல்லவராயும் இருக்கிறார்கள்.

உளவு பார்ப்பதற்கு அனுப்பப்பட்ட ஐந்துபேரும், எப்பிராயீம் மலைத்தேசத்திலிருக்கிற மீகாவின் வீடு மட்டும் போகிறார்கள். அங்கே அவர்களுக்கு மீகாவின் ஆசாரியரோடு பழக்கம் ஏற்படுகிறது. ஐந்துபேரும் மீகாவின் வீட்டிலே இராத்தங்குகிறார்கள். அதே வீட்டில் மீகாவின் ஆசாரியனாகிய லேவியனும் தங்கியிருக்கிறார்.

தாண் புத்திரரால் உளவு பார்க்க அனுப்பப்பட்ட ஐந்து பேருக்கும், இந்த லேவியனுக்கும் இதற்கு முன்பு ஏதோ ஒரு வழியில் பழக்கம் ஏற்பட்டிருக்கிறது. ஒருவேளை இந்த லேவியன் ஒவ்வொரு ஊராக பரதேசியாய் சுற்றி அலைந்தபோது, தாண் கோத்திரத்தார் மத்தியிலும் அலைந்திருக்கவேண்டும். தாண் கோத்திரத்தார் ஐந்துபேரும் லேவியனான இந்த வாலிபனுடைய சத்தத்தை அறிந்திருக்கிறார்கள்.

வேவுகாரருக்கு லேவியனைப்பற்றி நன்றாய்த் தெரிந்திருக்கிறது. அவர்கள் மீகாவின் வீட்டண்டை இருக்கையில், லேவியனான வாலிபனுடைய சத்தத்தை அறிந்து, அங்கே அவனிடத்தில் போய்: "உன்னை இங்கே அழைத்துவந்தது யார்? இவ்விடத்தில் என்ன செய்கிறாய்? உனக்கு இங்கே இருக்கிறது என்ன" (நியா 18:3) என்று அவனிடத்தில் கேட்கிறார்கள்.

லேவியனிடத்தில் கர்த்தருடைய வார்த்தையிருக்கிறது. இனிமேல் நடைபெறப்போகும் சம்பவங்களை இந்த லேவியன் முன்னறிவித்து சொல்லக்கூடியவர். அவர்கள் ஐந்து பேரும் லேவியனிடத்தில் ஒவ்வொரு காரியமாக விசாரிக்கிறார்கள். அதற்கு அந்த லேவியன் அவர்களிடம், "இன்ன இன்னபடி மீகா எனக்குச் செய்தான்; எனக்குச் சம்பளம் பொருந்தினான்; அவனுக்கு ஆசாரியனானேன்" (நியா 18:4) என்று சொல்லுகிறார்.

தாண் கோத்திரத்தைச் சேர்ந்த ஐந்து பேரும் தேசத்தை உளவு பார்ப்பதற்காக வந்திருக்கிறார்கள். அவர்களுடைய பிரயாணம் அநுகூலமாய் முடியுமா என்பது அவர்களுக்கே தெரியவில்லை. ஆனால் அது அந்த லேவியனுக்கு தெரியுமென்று தாண் புத்திரர் நம்புகிறார்கள். அவர்கள் லேவியனை நோக்கி, "எங்கள் பிரயாணம் அநுகூலமாய் முடியுமா என்று நாங்கள் அறியும்படி தேவனிடத்தில் கேள்" (நியா 18:5) என்று கேட்கிறார்கள்.

கர்த்தருடைய பிரதான ஆசாரியரிடத்தில் "ஊரிம்" இருக்கிறது. பிரதான ஆசாரியர் கர்த்தருடைய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஊரிமைப் பயன்படுத்துவார். மீகாவின் வீட்டில் தெராபீம் இருக்கிறது. ஊரீமைவிட, தெராபீமே அதிக வல்லமையுள்ளது என்று தாண் கோத்திரத்தின் உளவுகாரர்கள் நம்புகிறார்கள்.

தாண் கோத்திரத்து உளவுகாரர் ஏற்கெனவே சீலோவைக் கடந்து வந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தரிடத்தில் ஆலோசனை கேட்கவேண்டுமென்றால், சீலோவிலுள்ள பிரதான ஆசாரியரிடத்தில் கேட்டிருக்கலாம். ஆனால் தாண் கோத்திரத்தின் வேவுகாரரோ, சீலோவிலுள்ள பிரதான ஆசாரியரை நம்பாமல், மீகாவின் வீட்டிலுள்ள லேவியனான வாலிபரை நம்புகிறார்கள். லேவியரிடத்தில் கர்த்தருடைய வாக்கு இருக்கிறது என்பது தாண் கோத்திரத்து உளவுகாரரின் நம்பிக்கை.

மீகாவின் வீட்டிலிருக்கிற லேவியனான ஆசாரியன், அவர்களிடம், "சமாதானத்தோடே போங்கள்; உங்கள் பிரயாணம் கர்த்தருக்கு ஏற்றது" (நியா 18:6) என்று சொல்லுகிறார். தான் சொல்லுவது கர்த்தருடைய வார்த்தை என்று லேவியன் வேவுகாரரை நம்ப வைக்கிறார். அவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளையும், உற்சாகமான வார்த்தைகளையும் சொல்லுகிறார். அவர்களுக்கு ஜெயமுண்டாகும் என்று ஆசீர்வாதமான வார்த்தையையும் சொல்லுகிறார்.

லாயீஸ்
நியா 18:7-13

நியா 18:7. அப்பொழுது அந்த ஐந்து மனுஷரும் புறப்பட்டு, லாயீசுக்குப் போய், அதில் குடியிருக்கிற ஜனங்கள் சீதோனியருடைய வழக்கத்தின்படியே, பயமில்லாமல் அமரிக்கையும் சுகமுமாய் இருக்கிறதையும், தேசத்திலே அவர்களை அடக்கி ஆள யாதொரு அதிகாரியும் இல்லை என்பதையும், அவர்கள் சீதோனியருக்குத் தூரமானவர்கள் என்பதையும், அவர்களுக்கு ஒருவரோடும் கலவை காரியம் இல்லை என்பதையும் கண்டு,

நியா 18:8. சோராவிலும் எஸ்தாவோலிலும் இருக்கிற தங்கள் சகோதரரிடத்திற்குத் திரும்பிவந்தார்கள். அவர்கள் சகோதரர்: நீங்கள் கொண்டுவருகிற செய்தி என்ன என்று அவர்களைக் கேட்டார்கள்.

நியா 18:9. அதற்கு அவர்கள்: எழும்புங்கள், அவர்களுக்கு விரோதமாய்ப் போவோம் வாருங்கள்; அந்த தேசத்தைப் பார்த்தோம், அது மிகவும் நன்றாயிருக்கிறது, நீங்கள் சும்மாயிருப்பீர்களா? அந்த தேசத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி புறப்பட்டுப்போக அசதியாயிராதேயுங்கள்.

நியா 18:10. நீங்கள் அங்கே சேரும்போது, சுகமாய்க் குடியிருக்கிற ஜனங்களிடத்தில் சேருவீர்கள்; அந்த தேசம் விஸ்தாரமாயிருக்கிறது; தேவன் அதை உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அது பூமியிலுள்ள சகல வஸ்துவும் குறைவில்லாமலிருக்கிற இடம் என்றார்கள்.

நியா 18:11. அப்பொழுது சோராவிலும் எஸ்தாவோலிலும் இருக்கிற தாண் கோத்திரத்தாரில் அறுநூறுபேர் ஆயுதபாணிகளாய் அங்கேயிருந்து புறப்பட்டுப்போய்,

நியா 18:12. யூதாவிலுள்ள கீரியாத்யாரீமிலே பாளயமிறங்கினார்கள்; ஆதலால் அது இந்நாள்வரைக்கும் மக்னிதான் என்னப்படும்; அது கீரியாத்யாரீமின் பின்னாலே இருக்கிறது.

நியா 18:13. பின்பு அவர்கள் அங்கேயிருந்து எப்பிராயீம் மலைக்குப் போய், மீகாவின் வீடு மட்டும் வந்தார்கள்.

தாண் கோத்திரத்தாரின் உளவுகாரர் லாயீஸ் பட்டணத்தை வேவுபார்க்கிறார்கள். அந்தப் பட்டணம் பெரியபட்டணமாயிருக்கிறது. ஆனால் அந்தப் பட்டணத்தில் சரியான ஆளுகையில்லை. அவர்களுக்கு போதுமான பாதுகாப்புமில்லை. அவர்கள்மீது யுத்தம்பண்ணினால், அவர்களை எளிதாக ஜெயித்துக்கொள்ளலாம் என்று தாண் கோத்திரத்து உளவுகாரர் வேவுபார்த்து கண்டுபிடிக்கிறார்கள்.

லாயீஸ் பட்டணத்தில் குடியிருக்கிற ஜனங்கள் சீதோனியருடைய வழக்கத்தின்படியே, பயமில்லாமல் அமரிக்கையும் சுகமுமாய் இருக்கிறார்கள். தேசத்திலே அவர்களை அடக்கி ஆள யாதொரு அதிகாரியும் இல்லை. அவர்கள் சீதோனியருக்குத் தூரமானவர்கள். அவர்களுக்கு ஒருவரோடும் கவை காரியம் இல்லை (நியா 18:7). தாண் கோத்திரத்து உளவுகாரர்கள், லாயீஸ் பட்டணத்தாரைப்பற்றி இந்தச் செய்திகளையெல்லாம் கண்டுகொள்கிறார்கள்.

லாயீஸ் பட்டணத்தாரை அடக்கி ஆள அவர்களுக்கு அதிகாரி ஒருவருமில்லை. எல்லோருமே துன்மார்க்கராயிருக்கிறார்கள். லாயீஸ் பட்டணத்தாருடைய பாவங்களினாலும், அக்கிரமங்களினாலும் கர்த்தருடைய கோபம் அவர்கள்மேல் வந்திருக்கிறது. அவர்கள் தங்களுக்குத் தாங்களே தீங்கு செய்து கொள்கிறார்கள். தங்களைத் தாங்களே அழித்துக்கொள்கிறார்கள்.

தேசத்தின் நியாயாபதிகளும் அதிகாரிகளும், தேசத்தில் நடைபெறுகிற தீங்குகளை அடக்க வேண்டும். ஜனங்கள் துன்மார்க்கராயிருந்தாலும் அதிகாரிகள் நல்லவர்களாக இருக்கவேண்டும். ஆனால் லாயீஸ் பட்டணத்திலோ, ஜனங்களும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அதிகாரிகளும் துன்மார்க்கராயிருக்கிறார்கள். தேசத்திலே உள்ள துன்மார்க்கரை, அந்த தேசத்து அதிகாரிகளால் ஆளுகை செய்ய முடியவில்லை.

தீங்கு செய்கிறவர்கள் அதிகாரிகளைப் பார்த்து பயப்படவேண்டும். அவர்கள் மறுபடியும் தீங்கு செய்யாமல், தீமையைவிட்டு விலகிவரவேண்டும். அதிகாரிகள் தீங்கு செய்கிறவர்களை கடினமாய்த் தண்டிக்கவேண்டும். ஆனால் லாயீஸ் பட்டணத்து அதிகாரிகளோ, எதையும் கண்டு கொள்ளலாமல், தங்களுடைய சுகவாழ்வின்மீது கவனமாயிருக்கிறார்கள்.

பாவிகள் தங்கள் பாவங்களையும், துன்மார்க்கங்களையும் நினைத்து வெட்கப்படவேண்டும். அவர்களுடைய மனச்சாட்சி அவர்களை திருத்தவேண்டும். அவர்கள் கர்த்தருக்கு முன்பாக நிற்கும்போது, அவர்களுடைய பாவங்கள் அவர்களை வெட்கப்படுத்தவேண்டும். தேசத்தின் அதிகாரிகள் ஜனங்களுக்கு நீதியையும், நியாயத்தையும் கற்றுக்கொடுக்கவேண்டும். தேசத்தின் சட்டங்களுக்கு கீழ்ப்படியவில்லையென்றால், அவர்களுக்கு என்னென்ன தண்டனைகளெல்லாம் கொடுக்கப்படும் என்று தெளிவாக சொல்லவேண்டும். ஆனால் ஜனங்களோ அதிகாரிகளுக்கு பயமில்லாமல், அமரிக்கையாயும், சுகமாயும் இருக்கிறார்கள்.

ஒரு தேசத்திலே, அந்த தேசத்து ஜனங்களை அடக்கி ஆள அதிகாரிகளும், நியாயாதிபதிகளும் இல்லையென்றால், அவர்களுக்கு பாதுகாப்பே இல்லை. அவர்களுக்கு தலைவருடைய அந்தஸ்தில் ஒருவருமில்லையென்றால், சத்துருக்கள் அந்த தேசத்தின்மீது எளிதாக யுத்தம்பண்ண வருவார்கள். நிர்விசாரமாய் ஜீவிக்கிறவர்களுக்கு பட்டயத்தினால் அழிவு வரும்.

லாயீஸ் பட்டணத்தார் தங்கள் பட்டணத்தைப் பாதுகாக்கவில்லை. கோட்டையின் கதவுகளுக்கு தாள்ப்பாள்கள் இல்லை. அவை எப்போதும் திறந்தே இருக்கிறது. அவர்களுடைய கோட்டைச்சுவர்களெல்லாம் பழுதடைந்திருக்கிறது. சுவற்றிலுள்ள திறப்புக்களெல்லாம் பழுதுபார்க்கப்படவில்லை. லாயீஸ் பட்டணத்திற்கு ஆபத்து சமீபமாயிருக்கிறது. லாயீஸ் பட்டணத்தாரிடத்தில் பலமுமில்லை, புத்தியுமில்லை.

இஸ்ரவேல் புத்திரர், லாயீஸ் பட்டணத்தாரைப்போல நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். அவர்கள் சோம்பேறிகளாகவும், தங்களுடைய ஆத்துமாக்களை காத்துக்கொள்ளாதவர்களாகவும் இருக்கிறார்கள். கானானியர் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாக வரும்போது, அவர்களால் கானானியரை எதிர்க்க முடியவில்லை.

லாயீஸ் பட்டணத்து மக்களுக்கு ஒருவரோடும் கவை காரியமில்லை. அவர்கள் யாரோடும் பேசமாட்டார்கள். அவர்கள் மற்றவர்களுடைய விஷயங்களிலும் தலையிடமாட்டார்கள். தங்களுடைய விஷயங்களில் மற்றவர்கள் தலையிடவும் அனுமதிக்கமாட்டார்கள். அவர்கள் எந்த தேசத்தோடும் சமாதான உடன்படிக்கை செய்யமாட்டார்கள். அவர்கள் தங்களுடைய இராணுவ பலத்தை பயன்படுத்திக்கொள்ளமாட்டார்கள்.

லாயீஸ் பட்டணத்தார் மற்றவர்களைப்பற்றி கவலைப்படாததுபோலவே, தங்களைப்பற்றியும் கவலைப்படாதிருக்கிறார்கள். தங்களுடைய பாதுகாப்பைக் குறித்து அவர்கள் கவலைப்படுவதில்லை. லாயீஸ் மனுஷர் மற்றவர்களைக் குறித்தும் கவலைப்படுவதில்லை. மற்றவர்களும் அவர்களைக் குறித்து கவலைப்படுவதில்லை. இதுவே லாயீஸ் பட்டணத்து மனுஷரின் விசேஷித்த குணமாயிருக்கிறது.

தாண் கோத்திரத்தார் அனுப்பிய ஐந்து உளவுகாரரும் லாயீஸ் பட்டணத்தையும், அந்தப் பட்டணத்து ஜனங்களையும் வேவுபார்க்கிறார்கள். அதன் பின்பு அவர்கள் சோராவிலும் எஸ்தாவோலிலும் இருக்கிற தங்கள் சகோதரரிடத்திற்குத் திரும்பிவருகிறார்கள் (நியா 18:8).

தாண் கோத்திரத்தார் தங்களிடத்தில் திரும்பி வந்திருக்கிற உளவுகாரரிடம், "நீங்கள் கொண்டு வருகிற செய்தி என்ன" என்று கேட்கிறார்கள். உளவுகாரர் தாண் புத்திரரிடம், "எழும்புங்கள், அவர்களுக்கு விரோதமாய்ப் போவோம் வாருங்கள்; அந்த தேசத்தைப் பார்த்தோம், அது மிகவும் நன்றாயிருக்கிறது, நீங்கள் சும்மாயிருப்பீர்களா? அந்த தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி புறப்பட்டுப்போக அசதியாயிராதேயுங்கள். நீங்கள் அங்கே சேரும்போது, சுகமாய்க் குடியிருக்கிற ஜனங்களிடத்தில் சேருவீர்கள்; அந்த தேசம் விஸ்தாரமாயிருக்கிறது; தேவன் அதை உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்; அது பூமியிலுள்ள சகல வஸ்துவும் குறைவில்லாமலிருக்கிற இடம்" (நியா 18:9,10) என்று சொல்லுகிறார்கள்.

லாயீஸ் தேசம் மிகவும் நன்றாயிருக்கிறது. அது உளவுகாரருக்கு மிகவும் பிடித்திருக்கிறது. எப்பிராயீம் மலைத்தேசத்தைச் சுற்றிலும் பெலிஸ்தர்கள் இருக்கிறார்கள். பெலிஸ்தரோடு எப்போதும் சண்டை போடுவதற்கு பதிலாக, லாயீஸ் பட்டணத்திற்குப் போய்விட்டால் அங்கே சண்டை இருக்காது. அங்கே பெலிஸ்தர் இல்லை.

கர்த்தர் தங்களுக்கு லாயீஸ் தேசத்தை ஒப்புக்கொடுப்பார் என்று தாண் கோத்திரத்து உளவுகாரர் நம்புகிறார்கள். லாயீஸ் பட்டணத்தார் தங்கள் ஊரில் சுகமாய்க் குடியிருக்கிறார்கள். தாண் கோத்திரத்து யுத்தவீரர்கள் லாயீஸ் பட்டணத்திற்குப் போகும்போது, அந்தப் பட்டணத்திலே, அவர்கள் யுத்தவீரர் யாரையும் பார்க்கமாட்டார்கள். அவர்களுக்கு பதிலாக அங்கே சுகமாய்க் குடியிருக்கிற ஜனங்களைப் பார்ப்பார்கள்.

தாண் கோத்திரத்தார் எல்லோரும் லாயீசுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப் போகவில்லை. சோராவிலும் எஸ்தாவோலிலும் இருக்கிற தாண் கோத்திரத்தாரில் அறுநூறுபேர் மாத்திரம் ஆயுதபாணிகளாய், லாயீசுக்கு விரோதமாக யுத்தம்பண்ண, அங்கேயிருந்து புறப்பட்டுப்போகிறார்கள் நியா 18:11).

இந்த அறுநூறு யுத்தவீரர்களும், ஒருவேளை தாண் கோத்திரத்தைச் சேர்ந்த, ஒரு குறிப்பிட்ட வீட்டையோ அல்லது வம்சத்தையோ சேர்ந்தவர்களாயிருக்கலாம். இந்த வம்சத்தாருக்கு லாயீஸ் பட்டணம் சுதந்தரமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. அறுநூறு பேர் மாத்திரம் யுத்தத்திற்கு போகும் போது, தாண் கோத்திரத்தாரில் மற்றவர்கள் யாரும் அவர்களோடுகூட புறப்பட்டுப்போகவில்லை. ஆனால் தாண் கோத்திரத்தார் தங்களுடைய சுதந்தரத்தை சுதந்தரித்தபோது, இந்த அறுநூறு யுத்தவீரர்களும் அவர்களோடு கூடயிருந்தார்கள்.

யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஒற்றுமையாயிருந்தார்கள். கானான் தேசத்தைச் சுதந்தரிப்பதற்கு இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் ஒன்றாய் நின்று யுத்தம்பண்ணினார்கள். இப்போது யோசுவா மரித்து பல வருஷங்களாயிற்று. இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே ஒற்றுமையுமில்லை. ஒருமனமுமில்லை. அவர்களுக்குள்ளே சகோதர சிநேகமுமில்லை. ஒருவருக்கொருவர் உதவிசெய்து கொள்ளவேண்டும் என்னும் நற்குணமுமில்லை.

தாண் கோத்திரத்திலிருந்து புறப்பட்ட ஆயுதபாணிகளான அறுநூறு பேர் மாத்திரமே, லாயீஸ் பட்டணத்திலே குடியிருக்கப்போனார்கள். "அவர்கள் திரும்பும்படி புறப்பட்டு, பிள்ளைகளையும், ஆடுமாடுகளையும், பண்டம் பாடிகளையும், தங்களுக்கு முன்னே போகும்படி செய்தார்கள்" (நியா 18:21).

தாண் கோத்திரத்தாரிலிருந்து புறப்பட்டுப்போன ஆயுதபாணிகளாகிய அறுநூறு பேரும் யூதாவிலுள்ள கீரியாத்யாரீமிலே பாளயமிறங்குகிறார்கள்; ஆதலால் அது இந்நாள்வரைக்கும் மக்னிதான் என்னப்படுகிறது. அது கீரியாத்யாரீமின் பின்னாலே இருக்கிறது. பின்பு அவர்கள் அங்கேயிருந்து எப்பிராயீம் மலைக்குப் போய், மீகாவின் வீடு மட்டும் வருகிறார்கள் (நியா 18:12,13).

மீகாவின் விக்கிரகம்
நியா 18:14-26

நியா 18:14. அப்பொழுது லாயீசின் நாட்டை உளவுபார்க்கப் போய்வந்த ஐந்து மனுஷர் தங்கள் சகோதரரைப் பார்த்து: இந்த வீடுகளில் ஏபோத்தும் சுரூபங்களும் வெட்டப்பட்ட விக்கிரகமும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகமும் இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா; இப்போதும் நீங்கள் செய்யவேண்டியதை யோசித்துக் கொள்ளுங்கள் என்றார்கள்.

நியா 18:15. அப்பொழுது அவ்விடத்திற்குத் திரும்பி, மீகாவின் வீட்டில் இருக்கிற லேவியனான வாலிபனின் வீட்டிலே வந்து, அவனிடத்தில் சுகசெய்தி விசாரித்தார்கள்.

நியா 18:16. ஆயுதபாணிகளாகிய தாண் புத்திரர் அறுநூறுபேரும் வாசற்படியிலே நின்றார்கள்.

நியா 18:17. ஆசாரியனும் ஆயுதபாணிகளாகிய அறுநூறுபேரும் வாசற்படியிலே நிற்கையில், தேசத்தை உளவுபார்க்கப் போய் வந்த அந்த ஐந்து மனுஷர் உள்ளே புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக் கொண்டு வந்தார்கள்.

நியா 18:18. அவர்கள் மீகாவின் வீட்டிற்குள் புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு வருகிறபோது, ஆசாரியன் அவர்களைப் பார்த்து: நீங்கள் செய்கிறது என்ன என்று கேட்டான்.

நியா 18:19. அதற்கு அவர்கள்: நீ பேசாதே, உன் வாயை மூடிக்கொண்டு, எங்களோடேகூட வந்து எங்களுக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிரு; நீ ஒரே ஒருவன் வீட்டுக்கு ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? இஸ்ரவேலில் ஒரு கோத்திரத்திற்கும் வம்சத்திற்கும் ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? என்றார்கள்.

நியா 18:20. அப்பொழுது ஆசாரியனுடைய மனது இதமியப்பட்டு, அவன் ஏபோத்தையும் சுரூபங்களையும் வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு, ஜனங்களுக்குள்ளே புகுந்தான்.

நியா 18:21. அவர்கள் திரும்பும்படி புறப்பட்டு, பிள்ளைகளையும், ஆடுமாடுகளையும், பண்டம் பாடிகளையும், தங்களுக்கு முன்னே போகும்படி செய்தார்கள்.

நியா 18:22. அவர்கள் புறப்பட்டு, மீகாவின் வீட்டை விட்டுக் கொஞ்சந்தூரம் போனபோது, மீகாவின் வீட்டிற்கு அயல்வீட்டார் கூட்டங்கூடி, தாண் புத்திரரைத் தொடர்ந்துவந்து,

நியா 18:23. அவர்களைப் பார்த்துக் கூப்பிட்டார்கள்; அவர்கள் திரும்பிப்பார்த்து, மீகாவை நோக்கி: நீ இப்படிக் கூட்டத்துடன் வருகிற காரியம் என்ன என்று கேட்டார்கள்.

நியா 18:24. அதற்கு அவன்: நான் உண்டுபண்ணின என்னுடைய தெய்வங்களையும் அந்த ஆசாரியனையுங்கூட நீங்கள் கொண்டுபோகிறீர்களே; இனி எனக்கு என்ன இருக்கிறது; நீ கூப்பிடுகிற காரியம் என்ன என்று நீங்கள் என்னிடத்தில் எப்படிக் கேட்கலாம் என்றான்.

நியா 18:25. தாண் புத்திரர் அவனைப் பார்த்து: எங்கள் காதுகள் கேட்க கூக்குரல் இடாதே, இட்டால் கோபிகள் உங்கள்மேல் விழுவார்கள்: அப்பொழுது உன் ஜீவனுக்கும் உன் வீட்டாரின் ஜீவனுக்கும் மோசம் வருவித்துக்கொள்வாய் என்று சொல்லி,

நியா 18:26. தங்கள் வழியே நடந்துபோனார்கள்; அவர்கள் தன்னைப்பார்க்கிலும் பலத்தவர்கள் என்று மீகா கண்டு, அவன் தன் வீட்டுக்குத் திரும்பினான்.

தேசத்தை உளவுபார்த்து வரும்படி, தாண் புத்திரர் தங்கள் கோத்திரத்தில் பலத்த மனுஷராகிய ஐந்து பேரை அனுப்பினார்கள். உளவு பார்க்க போனவர்கள் திரும்பி வந்து, தங்கள் சகோதரரிடத்தில் அவர்களுக்கு ஆறுதலான செய்திகளையும் உற்சாகமான செய்திகளையும் சொன்னார்கள். அப்போது தாண் கோத்திரத்தாரில் அறுநூறு பேர் ஆயுதபாணிகளாய் புறப்பட்டு, எப்பிராயீம் மலைக்குப்போய் மீகாவின் வீடு மட்டும் வருகிறார்கள்.

மீகாவின் வீட்டிலே ஏபோத்தும் சுரூபங்களும், வெட்டப்பட்ட விக்கிரகமும், வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகமும் இருக்கிறது. இந்த இரகசியம் லாயீசை உளவுபார்க்க போய் வந்த ஐந்து மனுஷருக்கு மாத்திரம் தெரியும். உளவுகாரர்கள் ஐந்துபேரும், அறுநூறு யுத்த வீரருக்கும் மீகாவின் வீட்டில் என்னென்ன இருக்கிறது என்னும் இரகசியத்தை வெளிப்படுத்துகிறார்கள். இந்த ஐந்து பேரும், ஆயுதபாணிகளாயிருக்கிற தாண் கோத்திரத்து அறுநூறு யுத்தவீரரையும் பார்த்து, "இப்போதும் நீங்கள் செய்ய வேண்டியதை யோசித்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார்கள் (நியா 18:14).

மீகாவின் வீட்டிலிருப்பதுபோல, ஏபோத்தோ, தெராபீமோ அல்லது வெட்டப்பட்ட சுரூபமோ, வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகமோ தாண் கோத்திரத்தாரிடத்தில் இல்லை. அவர்களுக்கு இவற்றை எப்படி பயன்டுத்த வேண்டும் என்பதும் தெரியாது. ஆகையினால் "இப்போதும் நீங்கள் செய்ய வேண்டியதை யோசித்துக்கொள்ளுங்கள்" என்று உளவுபார்த்தவர்கள் சொல்லுகிறார்கள்.

லாயீசை உளவுபார்க்கப்போன ஐந்துபேரும், மீகாவின் வீட்டிலிருக்கிற வாலிபனிடம், "எங்கள் பிரயாணம் அநுகூலமாய் முடியுமா, என்று நாங்கள் அறியும்படி தேவனிடத்தில் கேள்" என்று கேட்டார்கள். லேவியன் அவர்களுக்கு பிரதியுத்தரமாக, "சமாதானத்தோடே போங்கள், உங்கள் பிரயாணம் கர்த்தருக்கேற்றது" (நியா 18:5,6) என்று சொல்லுகிறார்.

உளவுபார்க்கப்போன ஐந்துபேரும் தாண் கோத்திரத்து ஆயுதபாணிகளிடம், அந்த லேவியனோடு தங்களுக்கு ஏற்பட்ட அனுபவங்களை பகிர்ந்து சொல்லுகிறார்கள். லேவியன் அந்த விக்கிரகங்களை பயன்படுத்துவதுபோல, தாங்களும் பயன்படுத்தினால், தங்களுக்கு எல்லா காரியங்களிலும் ஜெயம் கிடைக்கும் என்று தாண் கோத்திரத்தார் நம்புகிறார்கள்.

தாண் கோத்திரத்தார் இதுவரையிலும் கர்த்தரை நம்பி, லாயீசுக்கு விரோதமாகப் புறப்பட்டு வந்தார்கள். இப்போதோ ஏபோத்தையும், சுரூபங்களையும், விக்கிரகங்களையும் நம்புகிறார்கள்.

தாண் புத்திரர் லாயீசுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப் புறப்படுவதற்கு முன்பு, "தேவன் அதை உங்கள் கையில் ஒப்புக்கொடுத்தார்" (நியா 18:10) என்று சொல்லி கர்த்தருக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். இப்போதோ ஏபோத்துக்கும், விக்கிரகங்களுக்கும், சுரூபங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தருடைய பிரசன்னத்திற்கு பதிலாக, ஏபோத்தும் விக்கிரகங்களும் தங்களோடு கூடயிருந்தால், தங்களுக்கு யுத்தத்திலே ஜெயமுண்டாகும் என்று தாண் கோத்திரத்து ஆயுதபாணிகள் நம்புகிறார்கள்.

தாண் கோத்திரத்தார் லாயீசுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, தங்களோடுகூட, மீகாவின் வீட்டிலிருக்கிற ஏபோத்தையும், சுரூபங்களையும், விக்கிரகங்களையும் எடுத்துக்கொண்டு போனால், கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருக்கும் என்பது அவர்களுடைய நம்பிக்கை. தாண் கோத்திரத்தார் இதுவரையிலும் கர்த்தரை நம்பினார்கள். இப்போது விக்கிரகங்களை நம்புகிறார்கள்.

சீலோவிலே கர்த்தருடைய உடன்படிக்கைப் பெட்டியும் ஆசரிப்புக்கூடாரமும் இருக்கிறது. தாண் கோத்திரத்தார் லாயீசிலே குடியேறப்போகிறார்கள். லாயீஸ் பட்டணம் சீலோவிலிருந்து வெகுதூரத்திலுள்ளது. அவர்களால் அடிக்கடி சீலோவுக்குப்போய், அங்கேயிருக்கிற பிரதான ஆசாரியனிடத்தில், ஊரீமைப் பயன்படுத்தி விசாரிக்க முடியாது. பிரதான ஆசாரியரின் ஊரீமுக்குப் பதிலாக, மீகாவின் ஏபோத்தும், விக்கிரகங்களும், சுரூபங்களும் தங்களோடு கூடயிருந்தால், தங்களால் கர்த்தரிடத்தில் விசாரித்துக்கொள்ள முடியும் என்று தாண் கோத்திரத்தார் நினைக்கிறார்கள்.

தாண் புத்திரர் மீகாவின் வீட்டிலிருந்து விக்கிரகங்களை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அப்பொழுது தாண் புத்திரரின் ஆயுதபாணிகளாகிய அறுநூறுபேரும், அவ்விடத்திற்குத் திரும்பி, மீகாவின் வீட்டில் இருக்கிற லேவியனான வாலிபனின் வீட்டிலே வந்து, அவனிடத்தில் சுகசெய்தி விசாரிக்கிறார்கள். ஆயுதபாணிகளாகிய தாண் புத்திரர் அறுநூறுபேரும் வாசற்படியிலே நிற்கிறார்கள். அப்போது, தேசத்தை உளவுபார்க்கப் போய் வந்த அந்த ஐந்து மனுஷர் உள்ளே புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள் (நியா 18:15-17).

தேசத்தை உளவுபார்க்கப்போன ஐந்துபேரும் ஏற்கெனவே மீகாவின் வீட்டில் தங்கியிருக்கிறார்கள் (நியா 18:2). அவர்களுக்கு மீகாவின் வீட்டைப்பற்றி நன்றாய்த் தெரியும். மீகா தன்னுடைய வீட்டிலே எந்த இடத்தில் ஏபோத்தையும் சுரூபத்தையும் விக்கிரகத்தையும் வைத்திருக்கிறார் என்பது ஐந்து வேவுகாரருக்கும் நன்றாய்த் தெரியும்.

மீகாவின் வீட்டு வாசற்படியிலே ஆசாரியனும், ஆயுதபாணிகளாகிய அறுநூறு பேரும் நிற்கிறார்கள். அப்பொழுது தேசத்தை உளவுபார்க்கப் போய் வந்த அந்த ஐந்து மனுஷர் உள்ளே புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக் கொண்டு வருகிறார்கள்.

ஆசாரியனாகிய லேவியனோ தன்னுடைய விக்கிரகங்களைப் பாதுகாக்க ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. அந்த ஆசாரியன் மீகாவின் வீட்டில் நடைபெறுகிற சம்பவங்களை, ஒரு பார்வையாளரைப்போல பார்த்துக்கொண்டிருக்கிறார். மீகாவின் வீட்டிலுள்ள விக்கிரகங்களுக்கும் வல்லமையில்லை. அந்த சுரூபங்களால் தங்களைத் தங்களை பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை. தேசத்தை உளவுபார்க்கப் போய் வந்த ஐந்து மனுஷரும், விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு போகும்போது, இந்த விக்கிரகங்களால் அதைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

தாண் கோத்திரத்தாரும் கர்த்தரை நம்பாமல் சுரூபங்களையும் விக்கிரகங்களையும் நம்புகிறார்கள். தங்களுக்கு முன்பாக விக்கிரக தெய்வங்கள் போகவேண்டுமென்று விரும்புகிறார்கள். இந்த தெய்வங்களையும் தாங்கள் உண்டுபண்ணாமல், மீகாவின் வீட்டிலிருப்பதை திருடிக்கொண்டு போகிறார்கள். தாண் கோத்திரத்தாரின் ஆவிக்குரிய நிலமை மிகவும் பரிதாபமாயிருக்கிறது.

தாண் புத்திரரின் விக்கிராகாராதனை திருட்டில் ஆரம்பிக்கப்படுகிறது. அவர்களுடைய விக்கிராகாராதனை சரித்திரத்தின் முன்னுரையே மிகவும் அசுத்தமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் விக்கிரகங்களை ஆராதிக்கக்கூடாது. அவர்கள் பிறர் பொருளை இச்சிக்கக்கூடாது. ஆனால் தாண் புத்திரரோ விக்கிரகங்களையும் ஆராதிக்கிறார்கள். மீகாவின் பொருட்களான ஏபோத்தையும், சுரூபத்தையும், விக்கிரகத்தையும் இச்சித்து திருடிக்கொண்டு போகிறார்கள்.

உளவு பார்க்கப்போய்வந்த ஐந்து மனுஷரும், மீகாவின் வீட்டிற்குள் புகுந்து, வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் ஏபோத்தையும் சுரூபங்களையும் வார்ப்பிக்கப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு வருகிறார்கள். அப்போது, ஆசாரியன் அவர்களைப் பார்த்து: "நீங்கள் செய்கிறது என்ன" (நியா 18:18) என்று கேட்கிறார்.

விக்கிரகங்களை எடுத்துக்கொண்டு வருகிறவர்கள், ஆசாரியனைப் பார்த்து, "நீ பேசாதே, உன் வாயை மூடிக்கொண்டு, எங்களோடேகூட வந்து எங்களுக்குத் தகப்பனும் ஆசாரியனுமாயிரு; நீ ஒரே ஒருவன் வீட்டுக்கு ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ? இஸ்ரவேலில் ஒரு கோத்திரத்திற்கும் வம்சத்திற்கும் ஆசாரியனாயிருக்கிறது நல்லதோ?" (நியா 18:19) என்று கேட்கிறார்கள்.

தாண் புத்திரர் விக்கிரகங்களை ஆராதிக்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஆனால் அவர்களுக்கு மீகாவின் வீட்டிலுள்ள ஏபோத்தை எப்படி பயன்படுத்தவேண்டும் என்று தெரியாது. அவர்கள் மீகாவின் ஏபோத்தையும், அவருடைய விக்கிரகங்களையும் எடுத்துக்கொண்டு போகும்போது, மீகாவின் வீட்டில் ஆசாரியனாயிருக்கிற லேவியனையும் தங்களோடு கூட்டிக்கொண்டு போகவேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆசாரியன் அவர்களோடு கூடயிருந்தால்தான், அவர்களால் ஏபோத்தைப் பயன்படுத்த முடியும்.

தேசத்தை உளவுபார்க்கப்போய்வந்த ஐந்து மனுஷரும், ஆசாரியனிடம் ஆசை வார்த்தைகளைப் பேசுகிறார்கள். மீகாவின் வீட்டில் ஆசாரியர் வசதியாயிருப்பதைவிட, தங்களோடு கூடவந்தால் அவருக்கு அதிக வசதி கிடைக்கும் என்று நயம் காட்டுகிறார்கள். ஒரு வீட்டிலே ஆசாரியனாயிருப்பதைவிட, ஒரு கோத்திரத்திற்கும் வம்சத்திற்கும் ஆசாரியனாயிருக்கிற பதவி உயர்வைப்பற்றி அவருக்கு சொல்லுகிறார்கள்.

தாண் புத்திரர் பேசுவதைக் கேட்டபோது, லேவியனுடைய மனது மிகவும் சந்தோஷப்படுகிறது. லேவியன் அவர்களுடைய ஆசை வார்த்தைகளினால் மயங்குகிறார். ஆசாரியனுடைய மனது இதமியப்படுகிறது. ஆசாரியன் ஏபோத்தையும் சுரூபங்களையும் வெட்டப்பட்ட விக்கிரகத்தையும் எடுத்துக்கொண்டு, ஜனங்களுக்குள்ளே புகுந்துவிடுகிறார் (நியா 18:20).

விக்கிரகாராதனை ஒரு புற்று நோயைப்போன்றது. மீகாவின் வீட்டில் ஆரம்பிக்கப்பட்ட விக்கிரகாராதனை, லாயீஸ் பட்டணம் முழுவதும் பரவிற்று. மீகாவின் வீட்டிலிருக்கிற சுரூபங்களையும், விக்கிரகங்களையும் ஆராதனை செய்ததினால் லாயீஸ் பட்டணத்தாருக்கு ஒரு நன்மையும் உண்டாகவில்லை. அவர்களுடைய விக்கிரகங்கள் லாயீஸ் பட்டணத்தாரைப் பாதுகாக்கவில்லை. அந்த விக்கிரகங்களால் தங்களைக்கூட பாதுகாத்துக்கொள்ள முடியவில்லை.

தாண் புத்திரர் மீகாவின் வீட்டிலே விக்கிரகங்களைத் திருடிக்கொண்டு போவதை அவருடைய வீட்டிற்கு அயல் வீட்டார் எல்லோரும் பார்க்கிறார்கள். மீகாவும் அதைப் பார்க்கிறார். ஆனால் மீகாவால் தாண் புத்திரரை தடுத்து நிறுத்த முடியவில்லை. தன்னுடைய வீட்டிலுள்ள விக்கிரகங்களை அவரால் பாதுகாக்க முடியவில்லை. சுரூபங்களை எடுத்துக் கொண்டு போனவர்கள். மீகாவின் வீட்டைவிட்டு கொஞ்சதூரம் போய்விடுகிறார்கள்.

மீகாவின் வீட்டிற்கு அயல் வீட்டார் எல்லோரும் கூட்டங்கூடுகிறார்கள். இவர்கள் மீகாவின் வீட்டிலுள்ள ஏபோத்தையும் வெட்டப்பட்ட சுரூபத்தையும், வார்க்கப்பட்ட விக்கிரகத்தையும் ஆராதிக்கிறவர்கள். இந்த விக்கிரகாராதனைக்காரர் கூட்டங்கூடி, தாண் புத்திரரை தொடர்ந்து வந்து, அவர்களைப் பார்த்து கூப்பிடுகிறார்கள்.

தாண் புத்திரர் திரும்பிப் பார்த்தபோது அங்கு மீகாவும் நிற்கிறார். அவரோடுகூட மீகாவின் வீட்டிற்கு அயல் வீட்டிலுள்ளவர்களும் நிற்கிறார்கள். அவர்கள் மீகாவை நோக்கி, " நீ இப்படிக் கூட்டத்துடன் வருகிற காரியம் என்ன" என்று கேட்கிறார்கள். அதற்கு மீகா "நான் உண்டுபண்ணின என்னுடைய தெய்வங்களையும் அந்த ஆசாரியனையுங்கூட நீங்கள் கொண்டுபோகிறீர்களே; இனி எனக்கு என்ன இருக்கிறது; நீ கூப்பிடுகிற காரியம் என்ன என்று நீங்கள் என்னிடத்தில் எப்படிக் கேட்கலாம்" (நியா 18:23,24) என்று சொல்லுகிறார்.

தாண் புத்திரர் மீகாவின் வீட்டிலுள்ள விக்கிரகங்களைத் திருடிக்கொண்டு வேகமாக ஓடிப்போகவில்லை. அவர்கள் மெதுவாகவே போகிறார்கள். அவர்கள் திரும்பும்படி புறப்பட்டு, பிள்ளைகளையும், ஆடுமாடுகளையும், பண்டம் பாடிகளையும், தங்களுக்கு முன்னே போகும்படி செய்கிறார்கள் (நியா 18:21). அவர்கள் லாயீசிலே குடியேறுவதற்கு ஆயத்தமாய் போகிறார்கள். தங்கள் பிள்ளைகளையும் ஆடுமாடுகளையும் கூட்டிக்கொண்டு, அவர்களால் வேகமாய் ஓடிப்போகமுடியாது.

தாண் புத்திரர் மீகாவைப் பார்த்தோ, அவருடைய அயல் வீட்டாரைப் பார்த்தோ பயப்படவில்லை. அவர்கள் மீகாவை பயமுறுத்துகிறார்கள். தாண் புத்திரர் மீகாவைப் பார்த்து, "எங்கள் காதுகள் கேட்க கூக்குரல் இடாதே, இட்டால் கோபிகள் உங்கள்மேல் விழுவார்கள்: அப்பொழுது உன் ஜீவனுக்கும் உன் வீட்டாரின் ஜீவனுக்கும் மோசம் வருவித்துக்கொள்வாய்" (நியா 18:25,26) என்று சொல்லி, தங்கள் வழியே நடந்துபோகிறார்கள்.

மீகாவால் தாண் புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியாது. அவர்கள் மீகாவைப் பார்க்கிலும் பலத்தவர்கள். அவர்களுடைய பலமும், தன்னுடைய பலவீனமும் மீகாவுக்கு நன்றாய்த் தெரியும். மீகா தன்னுடைய சூழ்நிலையைப் புரிந்துகொண்டு, தாண் புத்திரரோடு யுத்தம்பண்ணாமல், தன் வீட்டிற்கு திரும்பி வருகிறார். தாண் புத்திரரோ மீகா உண்டுபண்ணின வைகளையும், அவருடைய ஆசாரியனையும் தங்களோடே கூட கொண்டு போகிறார்கள் (நியா 18:27).

மீகா தாண் புத்திரரிடத்தில், தன்னுடைய வீட்டிலுள்ள விக்கிரகங்களைப்பற்றிச் சொல்லும்போது, அவற்றை தன்னுடைய தெய்வங்கள் என்று சொல்லுகிறார் (நியா 18:24). இந்த சுரூபங்களை மீகா தனக்காக செய்தார். மீகா ஒரு இஸ்ரவேல் புத்திரர். அவர் விக்கிரகங்களை செய்யவும் கூடாது. அவற்றை ஆராதிக்கவும் கூடாது. மீகாவோ கர்த்தரைவிட்டு விலகிப்போனதினால், அவருடைய இருதயத்திலே கர்த்தரைப்பற்றிய அறிவும் ஞானமும் விலகிப்போயிற்று. அவருக்கு விக்கிரகத்திற்கும், தேவனுக்கும் வித்தியாசம் தெரியவில்லை.

தாண் புத்திரர் மீகாவின் வீட்டிலுள்ள விக்கிரகங்களை திருடிக்கொண்டு போகிறார்கள். அவர்கள் மீகாவுக்கு நஷ்டஈடு எதுவும் கொடுக்கமாட்டார்கள். அந்நாட்களில் இஸ்ரவேலிலே ராஜாவுமில்லை. அதிகாரிகளுமில்லை. ஆகையினால் மீகாவின் வழக்கை விசாரித்து, அவருக்கு நீதி செய்ய ஒருவருமில்லை. மீகாவின் தெய்வங்களும் விக்கிரகங்களாயிருக்கிறது. அவற்றிற்கு ஜீவனுமில்லை, வல்லமையுமில்லை.

தாண் புத்திரரோ மீகாவோடு இணக்கமாய்ப் பேசாமல் அவரைப் பயமுறுத்துகிறார்கள். மீகா கூக்குரலிட்டு பேசினால், அவருடைய ஜீவனுக்கும் அவருடைய வீட்டாரின் ஜீவனுக்கும் மோசமுண்டாகும் என்று பயமுறுத்துகிறார்கள். மீகாவும் உண்மை நிலையை அறிந்து, அதற்கு மேல் ஒன்றும் பேசாமல், தன் வீட்டிற்கு திரும்பிப்போய்விடுகிறார். தன் வீட்டிற்கு வந்து திருடுகிற தாண் புத்திரர், தன்னையும் தன்னுடைய வீட்டாரையும் கொலை செய்ய தயங்கமாட்டார்கள் என்பது மீகாவுக்கு நன்றாய்த் தெரியும்.

தன்னுடைய விக்கிரக தெய்வங்களைப் பாதுகாக்க, மீகா தன்னுடைய ஜீவனையும் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயில்லை. அவர் பயப்படுகிறார். மீகா ஒரு கோழையாக, விக்கிரகங்களை பறிகொடுத்துவிட்டு, தன் வீட்டிற்கு வெறுங்கையோடு திரும்பி வருகிறார்.

"பூமியைத் தத்தளிக்கப்பண்ணக் கர்த்தர் எழும்பும் அந்நாளிலே, அவருடைய பயங்கரத்திற்கும், அவருடைய மகிமைப்பிரதாபத்திற்கும் விலகி, கன்மலைகளின் வெடிப்புகளிலும் குன்றுகளின் சந்துகளிலும் புகுந்துகொள்ளும்படிக்கு, மனுஷன் பணிந்துகொள்ளத் தனக்கு உண்டாக்கியிருந்த தன் வெள்ளி விக்கிரகங்களையும், தன் பொன் விக்கிரகங்களையும், மூஞ்சூறுகளுக்கும் துரிஞ்சில்களுக்கும் எறிந்துவிடுவான்" (ஏசா 2:20,21).

"உன் சுரூபங்களை மூடியவெள்ளித்த கட்டையும், உன் விக்கிரகங்களின் பொன் ஆடையாபரணத்தையும் தீட்டாக எண்ணி, அவைகளைத் தீட்டுப்பட்ட வஸ்திரம்போல எறிந்து விட்டு, அதைச் சீ! போ என்பாய்" (ஏசா 30:22).

தாண்
நியா 18:27-31

நியா 18:27. அவர்களோ மீகா உண்டுபண்ணினவைகளையும், அவனுடைய ஆசாரியனையும் கொண்டுபோய், பயமில்லாமல் சுகமாயிருக்கிற லாயீஸ் ஊர் ஜனங்களிடத்தில் சேர்ந்து, அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினியால் சுட்டெரித்துப்போட்டார்கள்.

நியா 18:28. அது சீதோனுக்குத் தூரமாயிருந்தது; வேறே மனுஷரோடே அவர்களுக்குச் சம்பந்தமில்லாமலும் இருந்தபடியால், அவர்களைத் தப்புவிப்பார் ஒருவரும் இல்லை; அந்தப் பட்டணம் பெத்ரேகோபுக்குச் சமீபமான பள்ளத்தாக்கில் இருந்தது; அவர்கள் அதைத் திரும்பக் கட்டி, அதிலே குடியிருந்து,

நியா 18:29. பூர்வத்திலே லாயீஸ் என்னும் பேர் கொண்டிருந்த அந்தப் பட்டணத்திற்கு இஸ்ரவேலுக்குப் பிறந்த தங்கள் தகப்பனாகிய தாணுடைய நாமத்தின்படியே தாண் என்று பேரிட்டார்கள்.

நியா 18:30. அப்பொழுது தாண் புத்திரர் அந்தச் சுரூபத்தைத் தங்களுக்கு ஸ்தாபித்துக்கொண்டார்கள்; மனாசேயின் குமாரனாகிய கெர்சோனின் மகன் யோனத்தானும், அவன் குமாரரும் அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப்போன நாள்மட்டும், தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராயிருந்தார்கள்.

நியா 18:31. தேவனுடைய ஆலயம் சீலோவிலிருந்த காலமுழுதும் அவர்கள் மீகா உண்டுபண்ணின சுரூபத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள்.

தாண் புத்திரர் லாயீஸ் ஊர் ஜனங்களை பட்டயக்கருக்கினால் வெட்டி, அந்தப் பட்டணத்தையும் அக்கினியினால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். தாண் புத்திரர் லாயீசுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது அவர்களை எதிர்ப்பதற்கு ஒருவருமில்லை. லாயீசின் மனுஷர் பயமில்லாமல் சுகமாயிருக்கிறார்கள்.

மீகாவும் தாண் புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவில்லை. அவர்கள் தன்னைப்பார்க்கிலும் பலத்தவர்கள் என்று மீகா கண்டு அவர் தன் வீட்டிற்கு திரும்பிப்போகிறார். தாண் புத்திரரோ மீகா உண்டுபண்ணினவைகளையும், அவருடைய ஆசாரியனையும் கொண்டுபோய், பயமில்லாமல் சுகமாயிருக்கிற லாயீஸ் ஊர் ஜனங்களிடத்தில் சேர்த்து, அவர்களைப் பட்டயக் கருக்கினால் வெட்டி, பட்டணத்தை அக்கினியால் சுட்டெரித்துப்போடுகிறார்கள் (நியா 18:27).

தாண் புத்திரர் இப்போது செழிப்படைந்திருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருக்கு விரோதமான காரியங்களை செய்தாலும், தாங்கள் செழிப்பாயிருப்பதினால், கர்த்தர் தங்களை ஆசீர்வதிப்பதாக நினைக்கிறார்கள். இக்காலத்திலும் அநேகர் தங்களுடைய உலகப்பிரகாரமான ஐசுவரியம் பெருகுவதைப் பார்த்து, தங்களுடைய அவபக்தியையும், அநியாயத்தையும் நியாயப்படுத்துகிறார்கள்.

லாயீசின் மனுஷர் பயமில்லாமல் சுகமாயிருக்கிறார்கள். அவர்களுடைய அலங்கங்கள் பாதுகாப்பாயில்லை. ஆனாலும் தங்களுக்கு விரோதமாய் ஒருவரும் யுத்தம் பண்ண வரமாட்டார்கள் என்று நினைத்து, லாயீசின் மனுஷர் நிர்விசாரமாய் ஜீவிக்கிறார்கள். இதனால் அவர்கள்மீது யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயிப்பது தாண் புத்திரருக்கு எளிதாயிருக்கிறது.

தாண் புத்திரரின் சேனை மிகவும் சிறியது. அவர்களிடத்தில் அறுநூறு பேர் மாத்திரமே ஆயுதம் ஏந்தினவராயிருக்கிறார்கள். தாண் புத்திரரின் சேனை சிறிதாயிருந்தாலும், லாயீசின் மனுஷர் நிர்விசாரமாய் ஜீவிப்பதினால், அவர்களை பட்டயக்கருக்கினால் வெட்டிப்போடுகிறார்கள். லாயீஸ் பட்டணத்தையும் அக்கியினால் சுட்டெரித்துப்போடுகிறார்கள். லாயீஸ் பட்டணத்திலும் திரளான ஜனங்கள் இருந்தாலும், அவர்கள் எல்லோருமே செத்துப்போகிறார்கள்.

லாயீஸ் பட்டணத்தாருக்கு மற்ற பட்டணத்தாரோடு சம்பந்தமில்லை. அவர்கள் யாரோடும் சமாதான உடன்படிக்கை பண்ணவில்லை. லாயீஸ் பட்டணம் சீதோனுக்கு தூரமாயிருக்கிறது. அவர்களுக்கு வேறே மனுஷரோடு சம்பந்தமில்லாமலிருக்கிறபடியினால், அவர்களை தப்புவிப்பார் ஒருவருமில்லை.

லாயீஸ் பட்டணம் பெத்ரேகோபுக்கு சமீபமான பள்ளதாக்கிலே இருக்கிறது. இந்த பள்ளத்தாக்கிலே தங்களுடைய பட்டணத்தைக் கட்டவேண்டுமென்று தாண் புத்திரரும் விரும்புகிறார்கள். அவர்கள் லாயீஸ் பட்டணத்தை அக்கினியினால் சுட்டெரித்துப்போட்டாலும், அந்த இடத்திலே தங்களுடைய பட்டணத்தை திரும்பக்கட்டி அதிலே குடியிருக்கவேண்டும் என்பதே தாண் புத்திரரின் நோக்கம். தங்கள் விருப்பத்தின்படி தாண் புத்திரர் லாயீசை திரும்பக்கட்டி அதிலே குடியிருக்கிறார்கள்.

தாண் புத்திரர் லாயீஸ் பட்டணத்தை முற்றிலுமாய் சுட்டெரித்தார்களா அல்லது அந்தப் பட்டணத்தில் தங்களுக்கு பிரயோஜனப்படாத பகுதியை மாத்திரம் சுட்டெரித்தார்களா என்பது தெரியவில்லை.

பூர்வத்திலே லாயீஸ் என்னும் பேர் கொண்டிருந்த அந்தப் பட்டணத்திற்கு இஸ்ரவேலுக்குப் பிறந்த தங்கள் தகப்பனாகிய தாணுடைய நாமத்தின்படியே தாண் என்று பேரிடுகிறார்கள் (நியா 18:29).

தாண் கோத்திரத்தைச் சேர்ந்த மற்றவர்களெல்லாம் லாயீஸ் பட்டணத்திற்கு தூரத்திலிருக்கிறார்கள். தாண் கோத்திரத்தில், இந்த வம்சத்தார் மாத்திரம், லாயீசை திரும்பக்கட்டி, அங்கே குடியிருக்கிறார்கள். தாண் கோத்திரத்தார் வெவ்வேறு இடங்களிலிருந்தாலும், அவர்களெல்லோரும் பிறப்பினால் ஒரே கோத்திரமாகவே இருக்கிறார்கள். தங்களுடைய கோத்திரத்தின் முற்பிதாவாகிய தாணை நினைவுகூரும் வண்ணமாக, தாங்கள் திரும்பக்கட்டி குடியிருக்கிற பட்டணத்திற்கு "தாண்" என்று பேரிடுகிறார்கள்.

தாண் புத்திரர் லாயீஸ் பட்டணத்தை திரும்பக்கட்டி, அதிலே குடியிருந்தவுடன், முதலாவதாக அங்கே விக்கிரகாராதனையை ஸ்தாபிக்கிறார்கள். கர்த்தர் தம்முடைய கிருபையினால், தாண் கோத்திரத்தாருக்கு தம்முடைய வாக்குத்தத்தை நிறைவேற்றியிருக்கிறார். தாண் புத்திரருக்கு பங்குவீதமாக விழுந்த சீட்டின் பிரகாரம், கர்த்தர் லாயீசை அவர்களுடைய கைகளில் ஒப்புக்கொடுத்திருக்கிறார்.

கர்த்தர் தங்களுக்கு செய்த நன்மைகளுக்காக, தாண் புத்திரர் கர்த்தருக்கு நன்றியுள்ளவர்களாய் ஜீவிக்கவேண்டும். கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படியவேண்டும். ஆனால் தாண் புத்திரரோ, லாயீஸ் பட்டணத்தை திரும்பக்கட்டியவுடன், முதலாவதாக கர்த்தருடைய பிரமாணத்தை மீறுகிறார்கள். அங்கே தங்களுக்கு விக்கிரகங்களை ஸ்தாபிக்கிறார்கள்.

தாண் புத்திரர் அந்தச் சுரூபத்தைத் தங்களுக்கு ஸ்தாபித்துக்கொள்கிறார்கள்; மனாசேயின் குமாரனாகிய கெர்சோனின் மகன் யோனத்தானும், அவன் குமாரரும் அந்தத் தேசத்தார் சிறைப்பட்டுப்போன நாள்மட்டும், தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராயிருக்கிறார்கள் (நியா 18:30).

லாயீஸ் பட்டணத்தின்மீது தங்களுக்கு கிடைத்த வெற்றி, மீகாவின் வீட்டிலுள்ள சுரூபத்தினாலும், விக்கிரகத்தினாலும் கிடைத்தது என்று தாண் புத்திரர் நம்புகிறார்கள். தாங்கள் திரும்பக்கட்டின நகரத்திலே தங்களுக்கு சுரூபத்தை ஸ்தாபிப்பதோடு, அதற்கு ஆசாரியரையும் நியமிக்கிறார்கள்.

மனாசேயின் குமாரனாகிய கெர்சோனின் மகன் யோனத்தானும், அவன் குமாரரும், தாண் கோத்திரத்தாருக்கு ஆசாரியராயிருக்கிறார்கள். மனாசே என்னும் பெயர் மூலஎபிரெய பாஷையிலே, ஒரு சில பதிப்புக்களில், "மோசே" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இவர்கள் மோசேயின் வம்சவழியை சேர்ந்தவர்களாகயிருக்கலாம்.

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளை கர்த்தருக்குப் பயப்படும் பயத்திலே வளர்க்கவேண்டும். பெற்றோர் பரிசுத்தவான் களாகயிருந்தாலும், அவர்களுடைய பிள்ளைகள் துன்மார்க்கராயிருப்பதற்கு வாய்ப்புள்ளது. பெற்றோர் கர்த்தருக்கு ஊழியம் செய்தாலும், அவர்களுடைய பிள்ளைகள் விக்கிரகங்களுக்கு ஊழியம் செய்ய வாய்ப்புள்ளது.

தேவனுடைய ஆலயம் சீலோவிலிருந்த காலமுழுதும், லாயீஸ் பட்டணத்தில் குடியிருக்கிற தாண் புத்திரர் மீகா உண்டுபண்ணின சுரூபத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் (நியா 18:31). சாமுவேலின் காலம் வரையிலும் தேவனுடைய ஆலயம் சீலோவிலே இருந்தது. சாமுவேல் இஸ்ரவேல் புத்திரரை நியாயம் விசாரித்த காலத்திலே, இஸ்ரவேல் தேசத்திலே விக்கிரகாராதனையை ஒழித்தார்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட விக்கிரகாராதனை, லாயீசில் குடியிருந்த தாண் புத்திரர் எல்லோர் மத்தியிலும் பரவிற்று. விக்கிரகாராதனை சீக்கிரத்தில் அழிந்துபோகவில்லை. இஸ்ரவேல் புத்திரர் நீண்டகாலமாக விக்கிரங்களைப் பின்பற்றி, அவற்றிற்கு தூபங்காட்டினார்கள். விக்கிரகாராதனை ஒரு புற்றுநோயைப்போல இருக்கிறது. அது சீக்கிரத்தில் பரவுகிறது. அதே வேளையில் அது சீக்கிரத்தில் அழிந்துபோகாமல், நீண்டகாலமாக நிலைத்திருக்கவும் செய்கிறது.

19 அதிகாரம்

கிபியாவின் மனுஷர் துன்மார்க்கராய் ஜீவிக்கிறார்கள். பென்யமீன் கோத்திரத்தாரிடத்தில் கர்த்தருக்கு பயப்படும் பயமில்லை. இக்காலத்திலே இஸ்ரவேலிலே ராஜா இல்லை. நியாயாதிபதியும் இல்லை. அவர்களை ஒருவரும் நியாயம் விசாரிப்பதில்லை (நியா 19:1; 21:25).

தாண் புத்திரர் மத்தியிலே விக்கிரகாராதனை பிரபல்யமாயிருக்கிறது. பென்யமீன் கோத்திரத்தார் துன்மார்க்கமாய் ஜீவிக்கிறார்கள். இஸ்ரவேல் தேசம் முழுவதுமே கர்த்தரைவிட்டு விலகி, தங்களுடைய மனம் போன பிரகாரம் ஜீவிக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்கு பொல்லப்பானதை செய்கிறார்கள். அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரை மறந்து, பாகால்களையும், தோப்பு விக்கிரகங்களையும் சேவிக்கிறார்கள் (நியா 3:7).

லேவியனுடைய மறுமனையாட்டி ஒருத்தியை பென்யமீன் கோத்திரத்தார் இலச்சையாய் நடத்துகிற சம்பவம் இந்த அதிகாரத்தில் எழுதப்பட்டிருக்கிறது. லேவியனுடைய மறுமனையாட்டி, அவருக்கு துரோகமாய் விபசாரம்பண்ணி, பெத்லகேம் ஊரிலே இருக்கிற தன் தகப்பன் வீட்டிலே தங்கியிருக்கிறாள் (நியா 19:1,2).

லேவியன் தன் மறுமனையாட்டியோடு ஒப்புரவாகி, அவளைத் திரும்ப தன் வீட்டிற்கு அழைத்து வர, பெத்லேகேமுக்குப் போகிறார் (நியா 19:3). அந்த ஸ்திரீயின் தகப்பனார் லேவியனை நன்றாய் உபசரிக்கிறார் (நியா 19:4-9).

கிபியாவிலே லேவியனுடைய மறுமனையாட்டி இலச்சையாய் நடத்தப்படுகிறாள். கிபியாவின் மனுஷர், லேவியனுக்கு தங்கள் வீட்டிலே இராத்தங்க இடம் கொடுக்கவில்லை (நியா 19:10-15). எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய ஒரு கிழவன் கிபியாவிலே சஞ்சரிக்க வந்திருக்கிறார். இந்தக் கிழவன், லேவியனுக்கும் அவருடைய மறுமனையாட்டிக்கும் தன்னுடைய வீட்டிலே இராத்தங்க இடம் கொடுக்கிறார் (நியா 19:16-21).

கிபியாவின் மனுஷரில் சிலர், லேவியன் தங்கியிருக்கிற வீட்டைச் சூழ்ந்துகொண்டு, சோதோமின் மனுஷரைப்போல அக்கிரமம் செய்கிறார்கள் (நியா 19:22-24). கிபியாவின் மனுஷர் லேவியனின் மறுமனையாட்டியைப் பிடித்து அவளை இலச்சையாய் நடத்துகிறார்கள். அவள் செத்துப்போகிறாள் (நியா 19:25-28).

லேவியன் தன்னுடைய மறுமனையாட்டிக்கு செய்யப்பட்ட தீங்கை, இஸ்ரவேலின் எல்லையெங்கும் பிரசித்தப்படுத்துகிறார் (நியா 19:29,30).

லேவியன்
நியா 19:1-15

நியா 19:1. இஸ்ரவேலில் ராஜா இல்லாத அந்நாட்களிலே, எப்பிராயீம் மலைகள் அருகே பரதேசியாய்த் தங்கின ஒரு லேவியன் இருந்தான்; அவன் யூதாவிலுள்ள பெத்லெகேம் ஊரானாகிய ஒரு ஸ்திரீயைத் தனக்கு மறுமனையாட்டியாகக் கொண்டிருந்தான்.

நியா 19:2. அவள் அவனுக்குத் துரோகமாய் விபசாரம்பண்ணி, அவனை விட்டு, யூதா தேசத்துப் பெத்லெகேம் ஊரிலிருக்கிற தன் தகப்பன் வீட்டுக்குப் போய், அங்கே நாலுமாதம்வரைக்கும் இருந்தாள்.

நியா 19:3. அவள் புருஷன் அவளோடே நலவு சொல்லவும், அவளைத் திரும்ப அழைத்து வரவும், இரண்டு கழுதைகளை ஆயத்தப்படுத்தி, தன் வேலைக்காரனைக் கூட்டிக்கொண்டு, அவளிடத்துக்குப் போனான்; அப்பொழுது அவள் அவனைத் தன் தகப்பன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனாள்; ஸ்திரீயின் தகப்பன் அவனைக் கண்டபோது சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு,

நியா 19:4. ஸ்திரீயின் தகப்பனாகிய அவனுடைய மாமன் அவனை இருத்திக்கொண்டதினால், மூன்றுநாள் அவனோடிருந்தான்; அவர்கள் அங்கே புசித்துக் குடித்து இராத் தங்கினார்கள்.

நியா 19:5. நாலாம் நாள் காலமே அவர்கள் எழுந்திருந்தபோது, அவன் பிரயாணப்படுகையில், ஸ்திரீயின் தகப்பன் தன் மருமகனை நோக்கி: கொஞ்சம் அப்பம் புசித்து, உன் மனதைத் தேற்றிக்கொள்; பிற்பாடு நீங்கள் போகலாம் என்றான்.

நியா 19:6. அவர்கள் உட்கார்ந்து, இருவரும் கூடப் புசித்துக் குடித்தார்கள்; ஸ்திரீயின் தகப்பன் அந்த மனுஷனைப் பார்த்து: நீ தயவுசெய்து, உன் இருதயம் மகிழ்ச்சியடைய இராத்திரிக்கும் இரு என்றான்.

நியா 19:7. அப்படியே போகிறதற்கு அந்த மனுஷன் எழுந்தபோது, அவனுடைய மாமன் அவனை வருந்திக்கொண்டதினால், அவன் அன்று இராத்திரியும் அங்கே இருந்தான்.

நியா 19:8. ஐந்தாம் நாளிலே அவன் போகிறதற்கு அதிகாலமே எழுந்திருந்தபோது, ஸ்திரீயின் தகப்பன்: இருந்து உன் இருதயத்தைத் தேற்றிக்கொள் என்றான்; அப்படியே அந்திநேரமட்டும் தாமதித்திருந்து, இருவரும் போஜனம்பண்ணினார்கள்.

நியா 19:9. பின்பு அவனும், அவன் மறுமனையாட்டியும், அவன் வேலைக்காரனும் போகிறதற்கு எழுந்திருந்தபோது, ஸ்திரீயின் தகப்பனாகிய அவனுடைய மாமன்: இதோ, பொழுது அஸ்தமிக்கப் போகிறது, சாயங்காலமுமாயிற்று; இங்கே இராத்திரிக்கு இருங்கள்; பார், மாலைமயங்குகிற வேளையாயிற்று: உன் இருதயம் சந்தோஷமாயிருக்கும்படி, இங்கே இராத்தங்கி நாளை இருட்டோடே எழுந்திருந்து, உன் வீட்டுக்குப் போகலாம் என்றான்.

நியா 19:10. அந்த மனுஷனோ, இராத்திரிக்கு இருக்க மனதில்லாமல், இரண்டு கழுதைகள் மேலும் சேணம்வைத்து, தன் மறுமனையாட்டியைக் கூட்டிக்கொண்டு, எழுந்து புறப்பட்டு, எருசலேமாகிய எபூசுக்கு நேராக வந்தான்.

நியா 19:11. அவர்கள் எபூசுக்குச் சமீபமாய் வருகையில், பொழுதுபோகிறதாயிருந்தது; அப்பொழுது வேலைக்காரன் தன் எஜமானை நோக்கி: எபூசியர் இருக்கிற இந்தப் பட்டணத்திற்குப் போய், அங்கே இராத் தங்கலாம் என்றான்.

நியா 19:12. அதற்கு அவன் எஜமான் நாம் வழியைவிட்டு, இஸ்ரவேல் புத்திரரில்லாத மறுஜாதியார் இருக்கிற பட்டணத்துக்குப் போகப்படாது; அப்பாலே கிபியாமட்டும் போவோம் என்று சொல்லி,

நியா 19:13. தன் வேலைக்காரனைப் பார்த்து: நாம் கிபியாவிலாகிலும் ராமாவிலாகிலும் இராத்தங்கும்படிக்கு, அவைகளில் ஒரு இடத்திற்குப்போய்ச் சேரும்படி நடந்து போவோம் வா என்றான்.

நியா 19:14. அப்படியே அப்பாலே நடந்துபோனார்கள்; பென்யமீன் நாட்டைச் சேர்ந்த கிபியாவின் கிட்ட வருகையில், சூரியன் அஸ்தமனமாயிற்று.

நியா 19:15. ஆகையால் கிபியாவிலே வந்து இராத்தங்கும்படிக்கு, வழியைவிட்டு அவ்விடத்திற்குப் போனார்கள்; அவன் பட்டணத்துக்குள் போனபோது, இராத்தங்குகிறதற்கு அவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்வார் இல்லாததினால், வீதியில் உட்கார்ந்தான்.

இந்த அதிகாரம் எழுதப்பட்ட நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை. இந்த அதிகாரத்தில் ஒரு லேவியனைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இவர் எப்பிராயீம் மலைத்தேசம் அருகே பரதேசியாய்த் தங்கியிருக்கிறார். இவர் யூதாவிலுள்ள பெத்லகேம் ஊராளாகிய ஒரு ஸ்திரீயை தனக்கு மறுமனையாட்டியாக கொண்டிருக்கிறார். இவள் அந்த லேவியனுக்கு இரண்டாவது மனைவியாக இருப்பதற்கு வாய்ப்புள்ளது (நியா 19:1).

லேவியனுடைய மறுமனையாட்டியோ, அவருக்கு விரோதமாகத் துரோகம்பண்ணுகிறாள். விபசாரம் பண்ணுகிறாள். அவள் தன் புருஷனைவிட்டு, யூதா தேசத்து பெத்லகேம் ஊரிலிருக்கிற தன் தகப்பன் வீட்டிற்குப் போகிறாள். அங்கே நாலு மாதம் வரைக்கும் தங்கியிருக்கிறாள் (நியா 19:2).

அந்த ஸ்திரீயின் தகப்பன், தன் மகளை அன்போடு ஏற்றுக்கொள்கிறார். அவள் தன் புருஷனுக்கு துரோகமாய் விபசாரம் பண்ணினாலும், அவளுடைய தகப்பன் அவளைத் தண்டிக்கவில்லை. நாலு மாதம் வரையிலும் அந்த மனுஷன் தன் மகளை தன் வீட்டிலே ஆதரிக்கிறார்.

அந்த ஸ்திரீ தன் புருஷனுக்குத் துரோகம்பண்ணி, மற்ற புருஷனோடு பழகும்போது, அவளுடைய தகப்பன் அவளுடைய பாவத்தை கண்டித்து உணர்த்தவேண்டும். ஆனால் அவள் தகப்பனோ அவளைக் கண்டிக்காமல், ஆதரிக்கிறார். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைக் கடிந்துகொள்ளாமல், அதிக செல்லம் கொடுத்து வளர்ப்பதினால், பிள்ளைகளில் அநேகர் கெட்டுப்போகிறார்கள். பெற்றோரின் கண்டிப்பில்லாத பிள்ளைகளுடைய ஜீவியம் சீரழிந்துபோகிறது.

லேவியனோ, தன்னுடைய மறுமனையாட்டி தனக்கு விரோதமாய் விபசாரம்பண்ணி பாவம் செய்தாலும், அவளை மன்னிக்கிறார். அவள் தன்னுடைய வீட்டைவிட்டு, அவளுடைய தகப்பன் வீட்டிற்குப்போயிருந்தாலும், லேவியன் யூதாதேசத்து பெத்லகேமிலே, அவளோடே நலவு சொல்லவும், அவளைத் திரும்ப தன்னுடைய ஊருக்கு அழைத்து வரவும் போகிறார்.

லேவியன் தன்னுடைய பிரயாணத்திற்காக இரண்டு கழுதைகளை ஆயத்தப்படுத்துகிறார். தன்னுடைய வேலைக்காரனை தனக்கு துணைக்கு கூட்டிக்கொண்டு, தன்னுடைய மறுமனையாட்டி இருக்கிற யூதாவிலுள்ள பெத்லகேம் ஊருக்குப் போகிறார். அங்கே லேவியன் தன் மறுமனையாட்டியை சந்திக்கிறார்.

அப்பொழுது அந்த ஸ்திரீ, தன் புருஷனை, தன் தகப்பன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போகிறாள். ஸ்திரீயின் தகப்பனும் தன்னுடைய மருமகனைக் கண்டபோது, அவரை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார். லேவியன் எப்பிராயீம் மலைத்தேசத்திலிருந்து பெத்லகேமுக்கு வந்திருக்கிறார். இது நீண்ட தூரத்து பிரயாணம். பிரயாணக்களைப்பு நீங்குவதற்கு, லேவியனுடைய மாமனார் அவரை சந்தோஷமாய் ஏற்றுக்கொள்கிறார்.

லேவியன் தன்னுடைய மாமனாரின் வீட்டில் மூன்று நாள் தங்கியிருக்கிறார். அங்கே அந்த லேவியன், அவர்களோடுகூட புசித்து குடித்து இராத்தங்குகிறார். லேவியனின் மாமனாரைப்போல, நாமும் நம்முடைய உற்றார் உறவினரையும், மற்ற விருந்தினரையும் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு உபசரிக்கவேண்டும்.

லேவியனுடைய மறுமனையாட்டி, அவருக்கு துரோகமாய் விபசாரம் பண்ணியதை நினைத்து வேதனைப் பட்டிருக்கலாம். அவள் தன்னுடைய தகப்பன் வீட்டிலிருந்த நாலு மாத காலத்தில், தன்னுடைய தவறை உணர்ந்திருக்கலாம். தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பி யிருக்கலாம். அவளுடைய தகப்பனும் அவளுக்கு, இந்தக் காலத்தில் நல்ல புத்திமதிகளை சொல்லியிருக்கலாம்.

லேவியனைப் பார்த்தபோது, அவருடைய மாமனார், அவரை சந்தோஷமாய் ஏற்றுக் கொள்கிறார். அவருக்கு மூன்று நாட்களாக விருந்து உபசரிக்கிறார். லேவியனுக்கு தன்னுடைய மறுமனையாட்டியின்மீதோ, அல்லது அவளுடைய தகப்பன்மீதோ கோபமில்லை. லேவியன் அவளுடைய பாவத்தை மன்னித்து மறந்துவிடுகிறார். இதற்கு அடையாளமாக, தன்னுடைய மாமனாரின் விருந்து உபசரிப்புக்களை ஏற்றுக்கொண்டு, அவருடைய வீட்டிலே மூன்று நாட்களாக தங்கியிருக்கிறார்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை மன்னிக்கிறார். நம்முடைய கர்த்தரைப்போலவே, நாமும் நமக்கு விரோதமாய்த் தீங்கு செய்தவர்களை மன்னிக்கவேண்டும். அதிலும் விசேஷமாய், விசுவாசிகளும், ஊழியக்காரர்களும், தங்களுக்கு விரோதமாக மற்றவர்கள் செய்யும் பாவங்களை மன்னித்து மறந்துவிடவேண்டும்.

லேவியனும் அவருடைய மறுமனையாட்டியும், மறுபடியும் சேர்ந்து வாழ்வதற்கு ஆரோக்கியமான சூழ்நிலை உண்டாயிருக்கிறது. அவர்கள் வருங்காலத்தில் பிரச்சனையில்லாமல் வாழ்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. லேவியன் அந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி, தன்னுடைய மறுமனையாட்டியை, தன்னுடைய வீட்டிற்கு திரும்ப அழைத்துக்கொண்டு போவதற்காக வந்திருக்கிறார்.

யூதாமார்க்கத்து பாரம்பரிய வழக்கத்தின் பிரகாரம், மாமனார் தன்னுடைய மருமகனை அன்பாய் உபசரிப்பார். தன்னுடைய சொந்த வீட்டில் நாட்டப்பட்ட திராட்சச்செடியைப்போல, மாமனார் தன் மருமகன்மீது அன்பாயிருப்பார். மருமகனை தன்னுடைய மற்றொரு மகன் போலவே பாவித்து அவர்மீது அன்புகூருவார்.

நம்முடைய குடும்பத்தில், திருமணத்தின் மூலமாக உறவினராக இருக்கிறவர்களை நாம் மதித்து மரியாதையோடு நடத்தவேண்டும். நம்முடைய வீடுகளில் அவர்களை அன்போடு ஏற்றுக்கொண்டு உபசரிக்கவேண்டும். திருமணத்தின் மூலமாய் ஏற்பட்டிருக்கிற உறவினரை உபசரிப்பதுபோலவே, நம்மோடுகூட உடன்பிறந்தவர்களையும், அவர்களுடைய குடும்பத்தாரையும் உபசரிக்கவேண்டும்.

அந்த ஸ்திரீயின் புருஷன் ஒரு லேவியன். அவர் தேவனுடைய ஆலயத்திலே பணிவிடை செய்கிறவர். அவருடைய மாமனார் அவரை அன்போடு உபசரிக்கிறார். ஆனாலும் அந்த லேவியன் சீக்கிரத்திலே தன்னுடைய வீட்டிற்குத் திரும்பிப்போகவேண்டுமென்று விரும்புகிறார். மாமனார் வீட்டில் விருந்து உபசரிப்பு சிறப்பாயிருந்தாலும், லேவியனுக்கு தேவாலயத்திலே ஊழியப்பொறுப்பு இருக்கிறது. லேவியன் தன் மாமனார் வீட்டிலே இருந்தாலும், தன்னுடைய ஊழியத்தைப்பற்றி நினைத்துக்கொண்டிருக்கிறார்.

நல்ல மனுஷருடைய இருதயம், அவருடைய தொழிலும் வியாபாரமும் எங்கே நடைபெறுகிறதோ அங்கே இருக்கும். ஒரு சிலர் தங்கள் குடும்பத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்கள் வேலைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பார்கள். நம்முடைய ஜீவியத்தில், நாம் குடும்பத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். வேலைக்கும் முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். குடும்பத்திற்காகவே வேலை செய்கிறோம். வேலையை நன்றாய்ச் செய்தால்தான் குடும்பத்திற்கு வருமானம் வரும்.

லேவியனுக்கு தன்னுடைய மாமனார் வீட்டிலே, மூன்றுநாள் விருந்து முடிந்து விடுகிறது. அப்போது அந்த லேவியன், தன்னுடைய மறுமனையாட்டியை அழைத்துக்கொண்டு, தன்னுடைய ஊருக்குப்போக ஆயத்தமாகிறார்.

நாலாம் நாள் காலமே அவர்கள் எழுந்திருக்கிறார்கள். அந்த லேவியன் பிரயாணப்படுகையில், ஸ்திரீயின் தகப்பன் தன் மருமகனை நோக்கி: "கொஞ்சம் அப்பம் புசித்து, உன் மனதைத் தேற்றிக்கொள்; பிற்பாடு நீங்கள் போகலாம்" (நியா 19:5) என்று சொல்லுகிறார்.

லேவியன் தன்னுடைய மாமனாரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறார். அவர்கள் உட்கார்ந்து, இருவரும் கூடப் புசித்துக் குடிக்கிறார்கள்; ஸ்திரீயின் தகப்பன் அந்த லேவியனைப் பார்த்து: "நீ தயவுசெய்து, உன் இருதயம் மகிழ்ச்சியடைய இராத்திரிக்கும் இரு" என்று சொல்லுகிறார்.

ஆனால் லேவியனோ தன்னுடைய ஊருக்குப்போக விரும்புகிறார். அப்படியே போகிறதற்கு அந்த லேவியன் எழுந்தபோது, அவருடைய மாமன் அவரை வருந்திக்கொண்டதினால், அந்த லேவியன் அன்று இராத்திரியும் அங்கே இருக்கிறார்.

ஐந்தாம் நாளிலே அந்த லேவியன் போகிறதற்கு அதிகாலமே எழுந்திருக்கிறார். அப்போது, ஸ்திரீயின் தகப்பன், தன் மருமகனிடம், "இருந்து உன் இருதயத்தைத் தேற்றிக்கொள்" என்று சொல்லுகிறார்; அப்படியே அந்திநேரமட்டும் தாமதித்திருந்து, இருவரும் போஜனம்பண்ணுகிறார்கள்.

பின்பு லேவியனும், அவர் மறுமனையாட்டியும், அவர் வேலைக்காரனும் போகிறதற்கு எழுந்திருந்தபோது, ஸ்திரீயின் தகப்பனாகிய அவருடைய மாமன்: "இதோ, பொழுது அஸ்தமிக்கப்போகிறது, சாயங்காலமுமாயிற்று; இங்கே இராத்திரிக்கு இருங்கள்; பார், மாலைமயங்குகிற வேளையாயிற்று; உன் இருதயம் சந்தோஷமாயிருக்கும்படி, இங்கே இராத்தங்கி நாளை இருட்டோடே எழுந்திருந்து, உன் வீட்டுக்குப் போகலாம்" என்று சொல்லுகிறார் (நியா 19:9).

இந்த முறை, அந்த லேவியனுக்கு, தன்னுடைய மாமனாரின் வேண்டுகோளை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த இராத்திரிக்கும் தன்னுடைய மாமனாரின் வீட்டிலிருக்க லேவியனுக்கு மனமில்லை. லேவியன் தன்னுடைய இரண்டு கழுதைகள் மேலும் சேணம்வைத்து, தன் மறுமனையாட்டியைக் கூட்டிக்கொண்டு, எழுந்து புறப்பட்டு, எருசலேமாகிய எபூசுக்கு நேராக வருகிறார் (நியா 19:10).

இந்த லேவியனுக்கு தன் மாமனார் வீட்டிலே சும்மாயிருக்க பிடிக்கவில்லை. தன்னுடைய ஆசாரிய ஊழியத்தை விட்டு விட்டு, தன்னுடைய மறுமனையாட்டியை அழைத்து வருவதற்காக, லேவியன் பெத்லகேமுக்கு வந்திருக்கிறார். அவர் எப்பிராயீம் மலைத்தேசத்திற்கு சீக்கிரத்தில் திரும்பிப்போகவேண்டுமென்று விரும்புகிறார்.

ஐந்தாம் நாள் மதியம் வரையிலும், லேவியன் தன் மாமனார் வீட்டில் தங்கியிருக்கிறார். லேவியன், அதிகாலையிலேயே தன் மாமனாரைவிட்டுப் புறப்பட்டுப்போயிருந்தால், இரவு வேளைக்குள், ஒரு நல்ல ஊருக்குப் போய் சேர்ந்திருக்கலாம். லேவியனும், அவருடைய மறுமனையாட்டியும் மதியத்திற்குமேல் தங்கள் வீட்டைவிட்டுப் புறப்பட்டுப்போனதினால், இரவுவேளையிலே அவர்களால் எருசலேமாகிய எபூசு வரைக்கும் மாத்திரமே வரமுடிந்திருக்கிறது.

அவர்கள் எபூசுக்குச் சமீபமாய் வருகையில், பொழுதுபோகிறதாயிருக்கிறது; அப்பொழுது வேலைக்காரன் தன் எஜமானை நோக்கி: "எபூசியர் இருக்கிற இந்தப் பட்டணத்திற்குப் போய், அங்கே இராத் தங்கலாம்" (நியா 19:11) என்று சொல்லுகிறான்.

லேவியனுக்கு மறுஜாதியார் இருக்கிற பட்டணத்திலே தங்க பிடிக்கவில்லை. எபூசியர் இஸ்ரவேலின் காணியாட்சிக்குப் புறம்பானவர்கள். எபூசியர் மத்தியில் தங்குவதற்கு பதிலாக, கிபியாவிலேபோய் தங்கலாம் என்று லேவியன் விரும்புகிறார்.

"நாம் வழியைவிட்டு, இஸ்ரவேல் புத்திரரில்லாத மறுஜாதியார் இருக்கிற பட்டணத்துக்குப் போகப்படாது; அப்பாலே கிபியாமட்டும் போவோம்" (நியா 19:12) என்று லேவியன் தன் வேலைக்காரனிடம் சொல்லுகிறார்.

லேவியன் தன் வேலைக்காரனைப் பார்த்து: "நாம் கிபியாவிலாகிலும் ராமாவிலாகிலும் இராத்தங்கும்படிக்கு, அவைகளில் ஒரு இடத்திற்குப் போய்ச் சேரும்படி நடந்து போவோம் வா" என்று சொல்லுகிறார். அப்படியே அவர்கள் அப்பாலே நடந்துபோகிறார்கள்; பென்யமீன் நாட்டைச் சேர்ந்த கிபியாவின் கிட்ட வருகையில், சூரியன் அஸ்தமனமாயிற்று (நியா 19:13,14).

கிபியா பட்டணம் பென்யமீன் புத்திரருடைய சுதந்தரத்திலிருக்கிறது. பிற்காலத்தில் கிபியா, "சவுலின் கிபியா" என்று அழைக்கப்பட்டது. இந்தப் பட்டணம் சீலோவுக்கும் எப்பிராயீம் மலைக்கும் போகிற பாதையிலிருக்கிறது. லேவியன் கிபியாவுக்கு அருகாமையில் வரும்போது, சூரியன் அஸ்தமனமாகி இருட்டிவிடுகிறது. அவர்கள் இருட்டிலே இதற்குமேல், பிரயாணம் பண்ண விரும்பவில்லை.

லேவியனுடைய வேலைக்காரன், எபூசியர் இருக்கிற எருசலேமாகிய எபூசிலே தங்கலாம் என்று ஆலோசனை சொல்லுகிறான். எபூசு என்னும் பட்டணமே பிற்காலத்தில் எருசலேம் என்று அழைக்கப்பட்டது. அக்காலத்தில் எபூசு பட்டணத்திலே எபூசியர்கள் குடியிருந்தார்கள்.

லேவியனும், அவரோடு கூடயிருக்கிற அவருடைய மறுமனையாட்டியும், எபூசு பட்டணத்திலே தங்கியிருந்தால் அவர்களுக்கு அதிக பிரச்சனை இருந்திருக்காது. அவர்களோ பென்யமீன் நாட்டைச் சேர்ந்த கிபியாவிலே தங்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அக்காலத்திலே கானானியரைவிட, இஸ்ரவேல் புத்திரர் மோசமானவர்களாகவும், அக்கிரமக் காரர்களாகவும், பயங்கரமானவர்களாகவும் இருக்கிறார்கள்.

லேவியனுடைய ஆலோசனை பிரகாரம் அவர்கள் கிபியாவிலே வந்து இராத்தங்கும்படிக்கு, வழியைவிட்டு அவ்விடத்திற்குப் போகிறார்கள்; லேவியன் பட்டணத்துக்குள் போனபோது, இராத்தங்குகிறதற்கு அவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்வார் இல்லாததினால், வீதியில் உட்காருகிறார் (நியா 19:15).

லேவியனும், அவரோடு கூடயிருக்கிறவர்களும் எபூசு பட்டணத்தைக் கடந்து, கிபியாவுக்கு வருகிறார்கள். அவர்களுக்கு அங்கே தங்குவதற்கு இடமில்லை. இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே லேவியருக்கு ஆதரவாயிருக்கவேண்டும். ஆனால் பென்யமீன் புத்திரரோ இந்த லேவியன்மீது அன்பு செலுத்தவில்லை. அவர்களை தங்கள் வீட்டிலே சேர்த்துக்கொள்ள ஒரு பென்யமீனும் முன்வரவில்லை. இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகிப்போனபோது, கர்த்தருடைய பிரமாணங்களையும் விட்டு விலகிப்போகிறார்கள். தங்களுக்கு லேவியருடைய ஊழியம் தேவையில்லை என்று நினைக்கிறார்கள்.

ஒரு கிழவன்
நியா 19:16-21

நியா 19:16. வயலிலே வேலைசெய்து, மாலையிலே திரும்புகிற ஒரு கிழவன் வந்தான்; அந்த மனுஷனும் எப்பிராயீம் மலைத்தேசத்தான், அவன் கிபியாவிலே சஞ்சரிக்கவந்தான்; அவ்விடத்து மனுஷரோ பென்யமீனர்.

நியா 19:17. அந்தக் கிழவன் தன் கண்களை ஏறெடுத்துப் பட்டணத்து வீதியில் அந்தப் பிரயாணக்காரன் இருக்கக் கண்டு: எங்கே போகிறாய், எங்கேயிருந்து வந்தாய் என்று கேட்டான்.

நியா 19:18. அதற்கு அவன்: நாங்கள் யூதாவிலுள்ள ஊராகிய பெத்லெகேமிலிருந்து வந்து, எப்பிராயீம் மலைத்தேசத்தின் புறங்கள்மட்டும் போகிறோம்; நான் அவ்விடத்தான்; யூதாவிலுள்ள பெத்லெகேம் மட்டும் போய்வந்தேன், நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறேன்; இங்கே என்னை வீட்டிலே ஏற்றுக்கொள்வார் ஒருவரும் இல்லை.

நியா 19:19. எங்கள் கழுதைகளுக்கு வைக்கோலும் தீவனமும் உண்டு; எனக்கும் உமது அடியாளுக்கும் உமது அடியானோடிருக்கிற வேலைக்காரனுக்கும் அப்பமும் திராட்சரசமும் உண்டு; ஒன்றிலும் குறைவில்லை என்றான்.

நியா 19:20. அப்பொழுது அந்தக் கிழவன்: உனக்குச் சமாதானம்; உன் குறைவுகளெல்லாம் என்மேல் இருக்கட்டும்; வீதியிலேமாத்திரம் இராத்தங்கவேண்டாம் என்று சொல்லி,

நியா 19:21. அவனைத் தன் வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய், கழுதைகளுக்குத் தீபனம்போட்டான்; அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொண்டு, புசித்துக்குடித்தார்கள்.

லேவியனும், அவருடைய மறுமனையாட்டியும், வேலைக்காரனும் கிபியாவின் வீதியிலே உட்கார்ந்திருக்கிறார்கள். இரவு முழுவதும் தாங்கள் வீதியிலே தங்கவேண்டுமோ என்னும் பயம் லேவியனுக்கு உண்டாயிற்று. கிபியாவிலே, பென்யமீன் புத்திரர் மத்தியிலே, இவ்வாறு வீதியிலே தங்குவது, சிங்கத்தின் குகைக்குள்ளே, சிங்கங்களோடு தங்கியிருப்பதற்கு சமம். பென்யமீன் புத்திரர் ஒருவர்கூட அவர்களை தங்கள் வீட்டிலே சேர்த்துக்கொள்ளவில்லை.

அப்பொழுது, லேவியன் உட்கார்ந்திருக்கிற இடத்திற்கு அருகாமையில், வயலிலே வேலைசெய்து, மாலையிலே திரும்புகிற ஒரு கிழவன் வருகிறார்; அந்த மனுஷன் எப்பிராயீம் மலைத்தேசத்தார், அவர் கிபியாவிலே சஞ்சரிக்கவந்தவர்; அவ்விடத்து மனுஷரோ பென்யமீனர் (நியா 19:16).

பென்யமீன் கோத்திரத்தார் அந்நியரை உபசரிக்கவேண்டும். தங்கள் தேசத்திற்கு பிரயாணம்பண்ணி வருகிறவர்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும். பென்யமீன் கோத்திரத்தாரின் முற்பிதாவாகிய, "பென்யமீன்" போகிற வழியில் சாலையில் பிறந்தவர். பென்யமீனுடைய தாயாராகிய ராகேல் அவரை வழியிலே பெற்றுப்போட்டாள். பென்யமீன் கிபியாவுக்கு அருகாமையிலே, வழியிலே பிறந்தவர்.

" பின்பு, பெத்தேலை விட்டுப் பிரயாணம் புறப்பட்டார்கள். எப்பிராத்தாவுக்கு வர இன்னும் கொஞ்சம் தூரமிருக்கும்போது, ராகேல் பிள்ளைபெற்றாள்; பிரசவத்தில் அவளுக்குக் கடும்வேதனை உண்டாயிற்று. பிரசவிக்கும்போது, அவளுக்குக் கடும்வேதனையாயிருக்கையில், மருத்துவச்சி அவளைப் பார்த்து: பயப்படாதே, இந்த முறையும் புத்திரனைப் பெறுவாய் என்றாள்" (ஆதி 35:16,17).

பென்யமீன் கோத்திரத்தாரோ தங்களுடைய பழைய சரித்திரத்தை மறந்துவிட்டார்கள். கஷ்டப்படுகிற அந்நியருக்கும், வேதனைப்படுகிற யாத்திரீகர்களுக்கும் ஆதரவு காண்பிக்காமல், கடின இருதயமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

எப்பிராயீம் மலைத்தேசத்தைச் சேர்ந்த ஒரு கிழவன், அந்த லேவியனுக்கு ஆதரவாயிருக்கிறார். இந்த லேவியனும் எப்பிராயீம் மலைத்தேசத்தைச் சேர்ந்தவர். இரண்டுபேரும் ஒரே ஊரைச்சேர்ந்தவர்களாகயிருப்பதினால், அவர்களுக்கு இடையே இயல்பாகவே அன்பும் பாசமும் உண்டாகிறது.

லேவியனுக்கு அருகாமையில் வருகிறவர் ஒரு கிழவர். இஸ்ரவேல் புத்திரருடைய நல்ல சுபாவங்கள் பல இவரிடத்தில் இன்னும் காணப்படுகிறது. இஸ்ரவேலின் புதிய சந்ததியார் கர்த்தரைவிட்டு விலகிப்போய்விடுகிறார்கள். கர்த்தருடைய பிரமாணங்களை மறந்துவிடுகிறார்கள். இஸ்ரவேலின் பழைய சந்ததியாரோ இன்னும் கர்த்தருக்கு பயந்து ஜீவிக்கிறார்கள். முதியவர்கள் கர்த்தருடைய பிரமாணங்களுக்கு கீழ்ப்படிகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே இருக்கிற ஒரு சில நல்லவர்கள் வயது முதிர்ந்த கிழவராகவே இருக்கிறார்கள்.

இந்தக் கிழவன் வயலிலே வேலை செய்துவிட்டு, மாலையிலே தன்னுடைய வீட்டிற்குத் திரும்பி வருகிறார். இவர் ஐசுவரியவானல்ல. கிபியாவிலே இருக்கிற பென்யமீன் புத்திரர் எல்லோருமே ஐசுவரியவான்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஆடம்பரமாய் ஜீவிக்கிறார்கள். பென்மீன் புத்திரர் சோம்பேறிகளாயிருக்கிறார்கள்.

பென்யமீன் புத்திரருக்கும், லோத்தின் காலத்திலிருந்த சோதோமின் புத்திரருக்கும் வித்தியாசமே இல்லை. அவர்கள் எல்லோருமே சும்மாயிருந்து பொழுதைப் போக்குகிறவர்கள்.

"இதோ, கெர்வமும், ஆகாரத் திரட்சியும், நிர்விசாரமான சாங்கோபாங்கமுமாகிய இவைகளே உன் சகோதரியான சோதோமின் அக்கிரமம்; இவைகளே அவளிடத்திலும் அவள் குமாரத்திகளிடத்திலும் இருந்தன; சிறுமையும் எளிமையுமானவனுடைய கையை அவள் பலப்படுத்தவில்லை" (எசே 16:49).

எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய அந்தக் கிழவன், லேவியனோடு பட்சமாய்ப் பேசுகிறார். அந்தக் கிழவன் தன் கண்களை ஏறெடுத்துப் பட்டணத்து வீதியில் அந்தப் பிரயாணக்காரன் இருக்கக் கண்டு: "எங்கே போகிறாய், எங்கேயிருந்து வந்தாய்" (நியா 19:17) என்று கேட்கிறார்.

லேவியனும் அந்தக் கிழவனிடம் தன்னுடைய பரிதாபமான நிலமையைச் சொல்லுகிறார். "நாங்கள் யூதாவிலுள்ள ஊராகிய பெத்லெகேமிலிருந்து வந்து, எப்பிராயீம் மலைத்தேசத்தின் புறங்கள்மட்டும் போகிறோம்; நான் அவ்விடத்தான்; யூதாவிலுள்ள பெத்லெகேம் மட்டும் போய்வந்தேன், நான் கர்த்தருடைய ஆலயத்துக்குப் போகிறேன்; இங்கே என்னை வீட்டிலே ஏற்றுக்கொள்வார் ஒருவரும் இல்லை. எங்கள் கழுதைகளுக்கு வைக்கோலும் தீபனமும் உண்டு; எனக்கும் உமது அடியாளுக்கும் உமது அடியானோடிருக்கிற வேலைக்காரனுக்கும் அப்பமும் திராட்சரசமும் உண்டு; ஒன்றிலும் குறைவில்லை" (நியா 19:18,19) என்று லேவியன் அந்தக் கிழவனிடம் சொல்லுகிறார்.

எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய அந்தக் கிழவன், லேவியனை தன்னுடைய வீட்டிற்கு வருமாறு அன்போடு அழைக்கிறார். அப்பொழுது அந்தக் கிழவன்: "உனக்குச் சமாதானம்; உன் குறைவுகளெல்லாம் என்மேல் இருக்கட்டும்; வீதியிலேமாத்திரம் இராத்தங்கவேண்டாம்" (நியா 19:20) என்று சொல்லுகிறார்.

அந்தக் கிழவன் லேவியனைத் தன் வீட்டுக்குள் அழைத்துக்கொண்டுபோய், கழுதைகளுக்குத் தீபனம்போடுகிறார்; அவர்கள் தங்கள் கால்களைக் கழுவிக்கொண்டு, புசித்துக்குடிக்கிறார்கள் (நியா 19:21).

தங்களுக்கு தங்க இடம் வேண்டுமென்று லேவியன், கிழவனிடம் கேட்கும் முன்பாகவே, அந்தக் கிழவன் அவர்களை தன்னுடைய வீட்டிலே தங்க வருமாறு அழைத்துக்கொண்டு போகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், நாம் ஜெபம்பண்ணுவதற்கு முன்பாகவே, நமக்கு பதில் கொடுக்கிறார். நன்மை செய்ய விரும்புகிறவர்கள் விளம்பரம் தேடமாட்டார்கள். சூழ்நிலைகளைப் பார்க்கமாட்டார்கள். வாய்ப்புக்களை மாத்திரம் பார்ப்பார்கள். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் நன்மை செய்வார்கள்.

"அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்" (1கொரி 8:4-7).

கிபியாவின் மனுஷர்
நியா 19:22-30

நியா 19:22. அவர்கள் மனமகிழ்ச்சியாயிருக்கிற போது, இதோ, பேலியாளின் மக்களாகிய அந்த ஊர் மனுஷரில் சிலர் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு, கதவைத் தட்டி: உன் வீட்டிலே வந்த அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு, வெளியே கொண்டுவா என்று வீட்டுக்காரனாகிய அந்தக் கிழவனோடே சொன்னார்கள்.

நியா 19:23. அப்பொழுது வீட்டுக்காரனாகிய அந்த மனுஷன் வெளியே அவர்களிடத்தில் போய்: இப்படிச் செய்யவேண்டாம்; என் சகோதரரே, இப்படிப்பட்ட பொல்லாப்பைச் செய்யவேண்டாம்; அந்த மனுஷன் என் வீட்டிற்குள் வந்திருக்கையில், இப்படிக்கொத்த மதிகேட்டைச் செய்யீர்களாக.

நியா 19:24. இதோ, கன்னியாஸ்திரீயாகிய என் மகளும், அந்த மனிதனுடைய மறுமனையாட்டியும் இருக்கிறார்கள்; அவர்களை உங்களிடத்தில் வெளியே கொண்டுவருகிறேன்; அவர்களை அவமானப்படுத்தி, உங்கள் பார்வைக்குச் சரிபோனபிரகாரம் அவர்களுக்குச் செய்யுங்கள்; ஆனாலும் இந்த மனுஷனுக்கு அப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம் என்றான்.

நியா 19:25. அந்த மனுஷர் அவன் சொல்லைக் கேட்கவில்லை; அப்பொழுது அந்த மனுஷன் தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவர்களிடத்தில் வெளியே கொண்டுவந்து விட்டான்; அவர்கள் அவளை அறிந்து கொண்டு, இராமுழுவதும் விடியுங்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்தி, கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிட்டார்கள்.

நியா 19:26. விடியுங்காலத்திற்கு முன்னே அந்த ஸ்திரீ வந்து, வெளிச்சமாகுமட்டும் அங்கே தன் எஜமான் இருந்த வீட்டுவாசற்படியிலே விழுந்துகிடந்தாள்.

நியா 19:27. அவள் எஜமான் காலமே எழுந்திருந்து வீட்டின் கதவைத் திறந்து, தன் வழியே போகப் புறப்படுகிறபோது, இதோ, அவன் மறுமனையாட்டியாகிய ஸ்திரீ வீட்டுவாசலுக்கு முன்பாகத் தன் கைகளை வாசற்படியின்மேல் வைத்தவளாய்க் கிடந்தாள்.

நியா 19:28. எழுந்திரு போவோம் என்று அவன் அவளோடே சொன்னதற்குப் பிரதியுத்தரம் பிறக்கவில்லை. அப்பொழுது அந்த மனுஷன் அவளைக் கழுதையின்மேல் போட்டுக்கொண்டு, பிரயாணப்பட்டு, தன் இடத்திற்குப் போனான்.

நியா 19:29. அவன் தன் வீட்டுக்கு வந்தபோது, ஒரு கத்தியை எடுத்து, தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவளை அவளுடைய எலும்புகளோடுங்கூடப் பன்னிரண்டு துண்டமாக்கி, இஸ்ரவேலின் எல்லைகளுக்கெல்லாம் அனுப்பினான்.

நியா 19:30. அப்பொழுது அதைக் கண்டவர்களெல்லாரும், இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இந்நாள் வரைக்கும் இதைப் போலொத்த காரியம் செய்யப்படவும் இல்லை, காணப்படவும் இல்லை; இந்தக் காரியத்தை யோசித்து ஆலோசனை பண்ணி செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுங்கள் என்றார்கள்.

கிபியாவின் மனுஷர் துன்மார்க்கராயிருக்கிறார்கள். அவர்கள் பேலியாளின் மக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். அவர்கள் கர்த்தருடைய நியாயப்பிரமாணத்திற்கு அடங்காதவர்கள். அவர்களை யாரும் ஆளுகை செய்யாததினால், கிபியாவின் மனுஷர் நுகத்தை சுமக்காத அடங்காத எருதுகளைப்போல இருக்கிறார்கள்.

பிசாசானவன் பேலியாளாயிருக்கிறான். கிபியாவின் மக்கள் பிசாசின் மக்களாயிருக்கிறார்கள். அவர்கள் பிசாசின் குணத்தோடு, பிசாசைப்போலவே இருக்கிறார்கள். கிபியாவின் மனுஷர் பிசாசாசோடு சேர்ந்துகொண்டு, தேவனுக்கு விரோதமாகவும் அவருடைய ராஜ்யத்திற்கு விரோதமாகவும் கலகம்பண்ணுகிறார்கள்.

எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய கிழவனுடைய வீட்டிலே, லேவியனும், அவருடைய மறுமனையாட்டியும், வேலைக்காரனும் புசித்து குடித்து மனமகிழ்ச்சியாயிருக்கிறார்கள். அப்பொழுது பேலியாளின் மக்களாகிய அந்த ஊர் மனுஷரில் சிலர் அந்த வீட்டைச் சூழ்ந்துகொண்டு, கதவைத் தட்டுகிறார்கள். அவர்கள் அந்த வீட்டுக்காரனாகிய கிழவனிடம், "உன் வீட்டிலே வந்த அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு, வெளியே கொண்டுவா" (நியா 19:22) என்று சொல்லுகிறார்கள்.

எப்பிராயீம் மலைத்தேசத்தானாகிய கிழவன் கிபியாவிலே கண்ணியமாய் ஜீவிக்கிறார். அவர் அந்த ஊர் ஜனங்கள் மத்தியிலே சமாதானமாயிருக்கிறார். அந்தக் கிழவன் யாரோடும் வீண் சண்டைக்குப் போவதில்லை. அவர் கிபியாவின் மனுஷர் மத்தியிலே நற்சாட்சியுள்ளவராயிருக்கிறார். அவர் தன்னுடைய வீட்டை நல்லமுறையில் பராமரிக்கிறார். கிழவனுடைய வீடு கிபியா பட்டணத்திற்கு ஆசீர்வாதமாகவும், அலங்காரமாகவும் இருக்கிறது.

கிபியாவின் மனுஷரில் சிலர் இரவு வேளையில் அந்தக் கிழவனுடைய வீட்டைச் சூழ்ந்துகொள்கிறார்கள். அவர்கள் ஆண்புணர்ச்சிக்காரர்கள். கிழவனுடைய வீட்டிலிருக்கிற லேவியனை தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று கேட்கிறார்கள்.

அப்பொழுது வீட்டுக்காரனாகிய அந்த மனுஷன் வெளியே அவர்களிடத்தில் போய்: "இப்படிச் செய்யவேண்டாம்; என் சகோதரரே, இப்படிப்பட்ட பொல்லாப்பைச் செய்யவேண்டாம்; அந்த மனுஷன் என் வீட்டிற்குள் வந்திருக்கையில், இப்படிக்கொத்த மதிகேட்டைச் செய்யீர்களாக" (நியா 19:23) என்று சொல்லுகிறார்.

கிபியாவின் மனுஷரோ கிழவனுடைய புத்திமதிகளுக்கு செவிகொடுக்கவில்லை. அவருடைய வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளவில்லை. கிபியாவின் மனுஷர் பாவிகளாயும் துன்மார்க்கராயும் இருக்கிறார்கள். அருவருப்பான காரியங்களை செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறார்கள். "அந்த மனுஷனை நாங்கள் அறியும்படிக்கு வெளியே கொண்டு வா" என்று கிபியாவின் மனுஷர் அந்தக் கிழவனிடம் சொல்லுகிறார்கள்.

இது சோதோமின் பாவம். சோதோமியர் ஆண்புணர்ச்சிக்காரராயிருந்ததுபோல, கிபியாவின் மனுஷரும் ஆண்புணர்ச்சிக்காரராயிருக்கிறார்கள். இக்காலத்தில் இஸ்ரவேல் தேசம் சீரழிந்து கிடக்கிறது. தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டி சீலோவிலே வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ, தங்களுடைய வீதிகளிலே சோதோமின் மனுஷரைப்போல பாவம் செய்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய கைகளில் கர்த்தருடைய பிரமாணம் இருக்கிறது. அவர்களுடைய இருதயங்களிலோ பிசாசு வாசம்பண்ணுகிறான். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரைவிட்டு விலகி விக்கிரகங்களை ஆராதிக்கிறார்கள். அவர்களுடைய விக்கிராராதனைக்கு தண்டனையாக, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே, சோதோமின் பாவம் பிரவேசித்திருக்கிறது.

கிபியாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாக ஏராளமான பாவங்களை செய்தாலும், சோதோமின் பாவமாகிய ஆண்புணர்ச்சியே அவர்களுடைய பிரதான பாவமாயிருக்கிறது. அவர்கள் இந்தப் பாவத்திற்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள்.

கிபியாவின் மனுஷர் விக்கிரகங்களை ஆராதித்து தங்களைத் தீட்டுப்படுத்துகிறார்கள். மதியீனமான காரியங்களை செய்கிறார்கள்.

"இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். தேவனுடைய சத்தியத்தை அவர்கள் பொய்யாக மாற்றி, சிருஷ்டிகரைத் தொழுது சேவியாமல் சிருஷ்டியைத் தொழுது சேவித்தார்கள், அவரே என்றென்றைக்கும் ஸ்தோத்திரிக்கப்பட்டவர். ஆமென்" (ரோம 1:24,25).

"தேவனை அறியும் அறிவைப் பற்றிக் கொண்டிருக்க அவர்களுக்கு மனதில்லாதிருந்தபடியால், தகாதவைகளைச் செய்யும்படி, தேவன் அவர்களைக் கேடான சிந்தைக்கு ஒப்புக்கொடுத்தார்" (ரோம 1:28).

வீட்டுக்காரனாகிய கிழவன், தன் வீட்டை சூழ்ந்துகொண்டு நிற்கிற கிபியாவின் மனுஷரிடத்தில், "இப்படி செய்யவேண்டாம், இப்படிப்பட்ட பொல்லாப்பை செய்யவேண்டாம், இப்படிக்கொத்த மதிகேட்டை செய்யீர்களாக" என்று சொல்லுகிறார். ஆனால் கிபியாவின் மனுஷரோ அந்தக் கிழவனுடைய எச்சரிப்பின் வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவில்லை.

கிபியாவின் மனுஷருக்கு லோத்தின் சரித்திரமும், சோதோமியரின் சரித்திரமும் தெரியும். இந்த சரித்திரம் அந்தக் கிழவனுக்கும் தெரியும். தன்னுடைய வீட்டில் ஏற்பட்டிருக்கிற மோசமான சூழ்நிலையை தவிர்ப்பதற்காக, வீட்டுக்காரனாகிய கிழவன், லோத்தைப்போல நடந்து கொள்கிறார். சோதோமியரோடு லோத்து பேசினதுபோல, கிபியாவின் மனுஷரோடு, வீட்டுக்காரக் கிழவன் பேசுகிறார்.

"அப்பொழுது லோத்து வாசலுக்கு வெளியே வந்து, தனக்குப் பின்னாலே கதவைப் பூட்டி, அவர்களிடத்தில் போய்: சகோதரரே, இந்த அக்கிரமம் செய்யவேண்டாம். இதோ, புருஷரை அறியாத இரண்டு குமாரத்திகள் எனக்கு உண்டு; அவர்களை உங்களிடத்திற்கு வெளியே கொண்டுவருகிறேன், அவர்களுக்கு உங்கள் இஷ்டப்படி செய்யுங்கள்; இந்தப் புருஷர் என் கூரையின் நிழலிலே வந்தபடியால், இவர்களுக்கு மாத்திரம் ஒன்றும் செய்யவேண்டாம் என்றான்" (ஆதி 19:6-8).

வீட்டுக்கார கிழவன் கிபியாவின் மனுஷரிடத்தில், "இதோ, கன்னியாஸ்திரீயாகிய என் மகளும், அந்த மனிதனுடைய மறுமனையாட்டியும் இருக்கிறார்கள்; அவர்களை உங்களிடத்தில் வெளியே கொண்டுவருகிறேன்; அவர்களை அவமானப்படுத்தி, உங்கள் பார்வைக்குச் சரிபோனபிரகாரம் அவர்களுக்குச் செய்யுங்கள்; ஆனாலும் இந்த மனுஷனுக்கு அப்படிப்பட்ட மதிகேடான காரியத்தைச் செய்யவேண்டாம்" (நியா 19:24) என்று சொல்லுகிறார்.

கிபியாவின் மனுஷரோ அந்தக் கிழவன் சொல்லைக் கேட்கவில்லை. கிழவனுடைய வீட்டில் நடைபெறும் மோசமான சம்பவங்களை லேவியனும் பார்த்துக்கொண்டிருக்கிறார். அப்போது அந்த லேவியன் தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவர்களிடத்தில் வெளியே கொண்டுவந்து விடுகிறார்; அவர்கள் அவளை அறிந்து கொண்டு, இராமுழுவதும் விடியுங்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்தி, கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிடுகிறார்கள் (நியா 19:25).

லோத்து சோதோமின் மனுஷருக்கு தன்னுடைய குமாரத்திகளைக் கொடுக்க முன்வந்தார். வீட்டுக்கார கிழவனும் கன்னியாஸ்திரீயாகிய தன் மகளை கிபியாவின் மனுஷருக்கு கொடுக்க முன்வருகிறார். வீட்டுக்கார கிழவன் செய்த காரியத்தைக் குறித்து வேதபண்டிதர்கள் விவாதம் பண்ணுகிறார்கள். கன்னியாஸ்திரீயாகிய தன்னுடைய மகளை கிபியாவின் மனுஷரிடத்தில் ஒப்புக்கொடுக்க அவருக்கு எந்த அதிகாரமுமில்லை. ஒரு நன்மையான காரியம் நடைபெறும் என்பதற்காக தீமையான காரியத்தைச் செய்யக்கூடாது என்பது வேதபண்டிதர்களின் விளக்கம்.

கிபியாவின் மனுஷரோ வீட்டுக்கார கிழவன் சொல்லுவதைக் கேட்கவில்லை. அவர்கள் மாம்ச இச்சைக்கு அடிமைப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய செவிகள் அடைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுடைய மனச்சாட்சியும் செயலிழந்து கிடக்கிறது.

லேவியன் தன்னுடைய மறுமனையாட்டியை கிபியாவின் மனுஷரிடத்தில் கொண்டு வந்து விடும்போது, அவர்கள் அவளை ஏற்றுக்கொள்கிறார்கள். அவர்கள் அவளை அறிந்து கொண்டு, இராமுழுவதும் விடியுங்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்தி, கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிடுகிறார்கள். விடியுங்காலத்திற்கு முன்னே அந்த ஸ்திரீ வந்து, வெளிச்சமாகுமட்டும் அங்கே தன் எஜமான் இருந்த வீட்டுவாசற்படியிலே விழுந்துகிடக்கிறாள் (நியா 19:26).

லேவியன் காலமே எழுந்திருந்து வீட்டின் கதவைத் திறந்து, தன் வழியே போகப் புறப்படுகிறபோது, இதோ, அவர் மறுமனையாட்டியாகிய ஸ்திரீ வீட்டுவாசலுக்கு முன்பாகத் தன் கைகளை வாசற்படியின்மேல் வைத்தவளாய்க் கிடக்கிறாள் (நியா 19:27).

லேவியன் அவளிடம், "எழுந்திரு போவோம்" என்று சொன்னதற்குப் பிரதியுத்தரம் பிறக்கவில்லை. அந்த ஸ்திரீ அங்கே செத்துக்கிடக்கிறாள். அப்பொழுது அந்த லேவியன் அவளைக் கழுதையின்மேல் போட்டுக்கொண்டு, பிரயாணப்பட்டு, தன் இடத்திற்குப் போகிறார் (நியா 19:28).

கிபியாவின் மனுஷர்பேலியாளின் மக்களாயிருக்கிறார்கள். அவர்கள் இருளின் பிள்ளைகளாயிருக்கிறார்கள். பிசாசின் பிள்ளைகள் வெளிச்சத்தை வெறுப்பார்கள். கிபியாவின் மனுஷரோ லேவியனுடைய மறுமனையாட்டியை அறிந்துகொண்டு, இராமுழுவதும், விடியற்காலமட்டும் அவளை இலச்சையாய் நடத்துகிறார்கள். கிழக்கு வெளுக்கும்போது அவளைப் போகவிடுகிறார்கள். கிபியா மனுஷருடைய பாவமான கிரியைகளெல்லாம் இருளிலே நடைபெறுகிறது.

லேவியனுடைய மறுமனையாட்டியோ, தான் இருந்த வீட்டு வாசற்படியிலே கிடக்கிறாள். அவளுடைய கைகள் அந்த வீட்டு வாசற்படியின்மேல் வைத்தவளாக, அவள் அங்கே விழுந்து கிடக்கிறாள். அந்த ஸ்திரீ தன்னுடைய பாவங்களுக்கு மனந்திரும்பியதற்கு அடையாளமாக, தன் கைகளை வாசற்படியின்மேல் வைத்தவளாய் கிடக்கிறாள்.

லேவியனுடைய மறுமனையாட்டி கிபியாவிலே செத்துக்கிடக்கிறாள். லேவியன் தன்னுடைய மறுமனையாட்டியின் சரீரத்தை கழுதையின்மேல் போட்டுக்கொண்டு தன் வீட்டிற்குப்போகிறார். சீலோவுக்குப்போகாமல், எப்பிராயீம் மலைகளிலுள்ள தன்னுடைய வீட்டிற்குப்போகிறார்.

இக்காலத்தில் இஸ்ரவேலிலே ராஜாவோ, நியாயாதிபதியோ இல்லை. மனுஷருடைய வழக்குகளை நீதியாய் விசாரிப்பதற்கு ஒருவருமில்லை. லேவியனோ தன்னுடைய மறுமனையாட்டிக்கு செய்யப்பட்ட இலச்சைக்கு, இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே நீதியான தீர்ப்பு கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

இதற்காக அந்த லேவியன் தன் வீட்டுக்கு வந்தபோது, ஒரு கத்தியை எடுத்து, தன் மறுமனையாட்டியைப் பிடித்து, அவளை அவளுடைய எலும்புகளோடுங்கூடப் பன்னிரண்டு துண்டமாக்கி, இஸ்ரவேலின் எல்லைகளுக்கெல்லாம் அனுப்புகிறார் (நியா 19:29).

லேவியனுடைய மறுமனையாட்டியின் சரீரத்தின் ஒவ்வொரு பகுதியும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தார்களுக்கும் அனுப்பப்படுகிறது. கிபியாவின் மனுஷர் தன்னுடைய மறுமனையாட்டிக்கு செய்த அக்கிரமத்தை இந்த லேவியன் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருக்கும் தெரியப்படுத்துகிறார்.

அந்த ஸ்திரீயினுடைய சரீரத்தின் துண்டங்களைப் பார்த்தவர்கள் எல்லோரும் அதிர்ச்சியடைகிறார்கள். அப்பொழுது அதைக் கண்டவர்களெல்லாரும், "இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலிருந்து புறப்பட்ட நாள் முதற்கொண்டு இந்நாள்வரைக்கும் இதைப் போலொத்த காரியம் செய்யப்படவும் இல்லை, காணப்படவும் இல்லை; இந்தக் காரியத்தை யோசித்து ஆலோசனை பண்ணி செய்யவேண்டியது இன்னதென்று சொல்லுங்கள்" (நியா 19:30) என்று சொல்லுகிறார்கள்.

கிபியாவின் மனுஷர், இஸ்ரவேல் தேசத்திலே இதுவரையிலும் செய்யப்படாத அக்கிரமத்தைச் செய்திருக்கிறார்கள். இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும் ஒன்றாய்க் கூடி வந்து, இந்த வழக்கை விசாரித்து, கிபியாவின் மனுஷருக்கு தண்டனை வழங்கவேண்டுமென்று லேவியனும் எதிர்பார்க்கிறார். இஸ்ரவேல் புத்திரரும் எதிர்பார்க்கிறார்கள். இந்த வழக்கை விசாரித்து நீதியான தீர்ப்பு கொடுக்கவில்லையென்றால், தேவனுடைய கோபம் தங்கள் தேசத்தின்மீது வரும் என்று இஸ்ரவேல் புத்திரர் பயப்படுகிறார்கள்.

இந்த துயரமான சம்பவம் ஒரு லேவியனுடைய குடும்பத்திலே நடைபெற்றதாகயிருந்தாலும், இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரத்தாரும், இந்த சம்பவத்தை பாரபட்சமில்லாமல் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த துயர சம்பவத்தை புறக்கணித்துவிடாமல், அதைப்பற்றி சிந்தித்து, ஒரு தீர்மானம்பண்ணவேண்டும். தப்பு செய்தவர்களுக்கு தண்டனை கொடுக்கவேண்டும்.

இக்காலத்தில் இஸ்ரவேல் தேசத்திலே ராஜாவோ, நியாயாதிபதியோ இல்லை. ஆகையினால் இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே ராஜாவைப்போலவும், நியாயாதிபதிகளைப்போலவும் இருந்து, இந்த வழக்கை தீர விசாரித்து, நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும். இந்த தீர்ப்பு அவர்களுடைய மனச்சாட்சியின் பிரகாரம் கொடுக்கப்படவேண்டும். இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு பயந்து லேவியனுடைய வழக்கை விசாரித்து நீதியான தீர்ப்பு சொல்லவேண்டும்.

20 அதிகாரம்

இந்த அதிகாரத்தில் பென்யமீன் புத்திரருக்கும், இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கும் இடையே நடைபெற்ற யுத்தத்தைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர், கர்த்தர் தங்களுக்கு வாக்குத்தத்தமாகக் கொடுத்த கானான் தேசத்திலே குடியேறுகிறார்கள். கானான் தேசம் பாலும் தேனும் ஓடுகிற செழிப்பான தேசம்.

இஸ்ரவேல் புத்திரர் கானான் தேசத்திலே சந்தோஷமாயும், செழிப்பாயும், ஆசீர்வாதமாயும் இருக்கவேண்டும். ஆனால் அவர்கள் அந்த தேசத்திலே சந்தோஷமாயும் சமாதானமாயுமில்லை. அவர்களுடைய பாவங்களே அவர்களுடைய பிரச்சனைகளுக்கு காரணம்.

இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் லேவியனுடைய வழக்கை விசாரிப்பதற்காக, மிஸ்பாவிலே சபையாகக் கூடி வந்திருக்கிறார்கள் (நியா 20:1-7. கிபியாவின் மனுஷருக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் தீர்மானம்பண்ணுகிறார்கள் (நியா 20:8-11).

தங்கள் கோத்திரத்தில் குற்றம் செய்தவர்களை தண்டிப்பதற்கு பதிலாக, அவர்களைப் பாதுகாக்கவேண்டுமென்று பென்யமீன் கோத்திரத்தார் தீர்மானம்பண்ணுகிறார்கள் (நியா 20:12-17).

முதலாம் நாளிலும், இரண்டாம் நாளிலும் நடைபெற்ற யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரருக்கு தோல்வி உண்டாயிற்று (நியா 20:18-25). இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருக்கு முன்பாக தங்களைத் தாழ்த்துகிறார்கள் (நியா 20:26-28). மூன்றாம் நாள் யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு வெற்றி உண்டாயிற்று. பென்யமீன் புத்திரரில் அறுநூறு பேரை தவிர மற்ற எல்லோரும் பட்டயத்தினால் சங்காரமாகிறார்கள் (நியா 20:29-48).

இஸ்ரவேல் புத்திரர்
நியா 20:1-11

நியா 20:1. அப்பொழுது தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கீலேயாத் தேசத்தாருடன் மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து சபையாகக் கூடினார்கள்.

நியா 20:2. சகல ஜனங்களின் அதிபதிகளும், இஸ்ரவேலின் சகல கோத்திரத்தாரும் தேவனுடைய ஜனமாகிய சபையாகக் கூடிநின்றார்கள்; அவர்கள் பட்டயம் உருவுகிற நாலு லட்சம் காலாட்கள்.

நியா 20:3. இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவுக்கு வந்த செய்தியைப் பென்யமீன் புத்திரர் கேள்விப்பட்டார்கள்; அந்த அக்கிரமம் நடந்தது எப்படி, சொல்லுங்கள் என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்டார்கள்.

நியா 20:4. அப்பொழுது கொலைசெய்யப்பட்ட ஸ்திரீயின் புருஷனாகிய லேவியன் மாறுத்தரமாக: நானும் என் மறுமனையாட்டியும் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலே இராத்தங்க வந்தோம்.

நியா 20:5. அப்பொழுது கிபியாபட்டணத்தார் எனக்கு விரோதமாய் எழும்பி, என்னைக் கொலைசெய்ய நினைத்து, நான் இருந்த வீட்டை இராத்திரியிலே வளைந்து கொண்டு, என் மறுமனையாட்டியை அவமானப் படுத்தினார்கள்; அதினாலே அவள் செத்துப்போனாள்.

நியா 20:6. ஆகையால் இஸ்ரவேலிலே அவர்கள் இப்படிப்பட்ட முறைகேட்டையும் மதிகேட்டையும் செய்தபடியினால், நான் என் மறுமனையாட்டியைப் பிடித்துத் துண்டித்து, இஸ்ரவேலின் சுதந்தரமான சகல நாடுகளுக்கும் அனுப்பினேன்.

நியா 20:7. நீங்கள் எல்லோரும் இஸ்ரவேல் புத்திரராமே, இங்கே ஆலோசித்துத் தீர்மானம் பண்ணுங்கள் என்றான்.

நியா 20:8. அப்பொழுது எல்லா ஜனங்களும் ஏகமாய் எழும்பி: நம்மில் ஒருவரும் தன்கூடாரத்திற்குப் போகவும்படாது, ஒருவனும் தன் வீட்டிற்குத் திரும்பவும்படாது.

நியா 20:9. இப்பொழுது கிபியாவுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: சீட்டுப்போட்டு அதற்கு விரோதமாகப் போவோம்.

நியா 20:10. பென்யமீன் கோத்திரமான கிபியா பட்டணத்தார் இஸ்ரவேலிலே செய்த எல்லா மதிகேட்டுக்கும் தக்கதாக ஜனங்கள் வந்து செய்யும்படிக்கு, நாம் தானிய தவசங்களைச் சம்பாதிக்கிறதற்கு, இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நூறுபேரில் பத்துப்பேரையும், ஆயிரம்பேரில் நூறுபேரையும், பதினாயிரம்பேரில் ஆயிரம்பேரையும், தெரிந்தெடுப்போம் என்றார்கள்.

நியா 20:11. இஸ்ரவேலரெல்லாரும் ஒன்றுபோல ஏகோபித்துப் பட்டணத்திற்கு முன்பாகக் கூட்டங்கூடி,

கிபியாவின் மனுஷர் லேவியனுடைய மறுமனையாட்டியை இரவு முழுவதும் இலச்சையாய் நடத்துகிறார்கள். அவள் செத்துப்போகிறாள். தன்னுடைய வழக்கை விசாரிக்கவேண்டும் என்று, லேவியன், தன்னுடைய மறுமனையாட்டியை, பன்னிரண்டு துண்டமாக்கி இஸ்ரவேலின் எல்லைகளுக்குகெல்லாம் அனுப்புகிறார்.

லேவியனின் வழக்கை விசாரிப்பதற்காக தாண்முதல் பெயெர்செபாமட்டுமுள்ள இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கிலேயாத் தேசத்தாருடன் மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து சபையாகக் கூடுகிறார்கள் (நியா 20:1).

மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிற ஜனங்களின் எண்ணிக்கை திரளாயிருக்கிறது. அவர்களெல்லோருமே ஒருமனப்பட்டு கூடிவந்திருக்கிறார்கள். கர்த்தரைக் கனம்பண்ணவேண்டுமென்று பக்தி வைராக்கியத்தோடு அங்கே வந்திருக்கிறார்கள். லேவியனுடைய மறுமனையாட்டிக்கு ஏற்பட்ட அக்கிரமத்தைப்போல, இஸ்ரவேலிலே மறுபடியும் அக்கிரமம் நடக்கக்கூடாது என்று அவர்களெல்லோரும் தீர்மானமாய்க் கூடிவந்திருக்கிறார்கள்.

சகல ஜனங்களின் அதிபதிகளும், இஸ்ரவேலின் சகல கோத்திரத்தாரும் தேவனுடைய ஜனமாகிய சபையாகக் கூடிநிற்கிறார்கள்; அவர்கள் பட்டயம் உருவுகிற நாலு லட்சம் காலாட்கள் (நியா 20:2).

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாக, சபையாக கூடிநிற்கிறார்கள். கர்த்தர் அங்கே இருக்கிறார். மிஸ்பா சீலோவுக்கு அருகாமையிலிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் மிஸ்பாவிலே பாளயமிறங்கி, சீலோவுக்கு எளிதாகப் போகலாம். சீலோ சிறிய பட்டணம். இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் சீலோவிலே கூடிவருவதற்கு, சீலோ விசாலமான பட்டணமல்ல.

இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து கூடிவருவதற்கு, அவர்கள் மிஸ்பாவையே தெரிந்தெடுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு மிஸ்பா தலைநகரம் போல் இருக்கிறது.

மிஸ்பாவிலே இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கூடிவருகிறார்கள். அவர்கள் வடக்கே தாணிலிருந்து தெற்கே பெயர்செபா வரையிலுமிருந்து வந்திருக்கிறார்கள். மேலும் கீலேயாத் தேசத்தாரும் மிஸ்பாவுக்கு வந்திருக்கிறார்கள். கீலேயாத் தேசம் யோர்தானுக்கு அப்புறத்திலே உள்ளது.

இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஏகோபித்து, ஒருமனப்பட்டு மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிறார்கள். அவர்கள் இஸ்ரவேல் தேசத்தின் நன்மைக்காகவும், இஸ்ரவேல் புத்திரரின் நன்மைக்காகவும் அங்கே வந்திருக்கிறார்கள்.

இக்காலத்திலே, இஸ்ரவேலிலே ராஜா இல்லை. ஆனாலும் அவர்களெல்லோரும் ஒழுங்கும் கிரமமுமாக வந்திருக்கிறார்கள். இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நூறுபேரில் பத்துப்பேரையும், ஆயிரம்பேரில் நூறுபேரையும், பதினாயிரம்பேரில் ஆயிரம்பேரையும் தெரிந்தெடுத்து, அவர்களை தங்களுக்கு தலைவர்களாக நியமித்திருக்கிறார்கள் (நியா 20:10).

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கூடிவரும்போது, அவர்கள் ஒவ்வொரு கோத்திரமாக, தனித்தனியாக நிற்கிறார்கள். ஒவ்வொரு கோத்திரத்தாரும், நூறுபேராகவும் ஆயிரம்பேராகவும், பதினாயிரம் பேராகவும் தனித்தனியாகப் பிரிந்து, ஒழுக்கமாய் நிற்கிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே ராஜா இல்லாவிட்டாலும், அவர்கள் மத்தியிலே ஒழுங்கும், கிரமமும் காணப்படுகிறது.

இஸ்ரவேல் புத்திரரில் பட்டயம் உருவுகிற காலாட்கள் நாலு லட்சம் பேர் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கென்று படைத்தளபதி யாருமில்லை. அவர்களுக்கு சேனாபதியுமில்லை. ஆனாலும் அவர்கள் நூறுபேராகவும், ஆயிரம் பேராகவும், பதினாயிரம் பேராகவும் அணிவகுத்து நிற்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் லேவியனுடைய வழக்கை விசாரிப்பதற்காக ஏகோபித்து சபையாகக் கூடிவந்திருக்கிறார்கள். இந்த வழக்கைக் குறித்து, அவர்களெல்லோருக்கும் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லுவதற்கு உரிமை இருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் இந்த வழக்கைக் குறித்து, விசாரணை செய்து, ஏகோபித்து தீர்மானம்பண்ணவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் வழக்கை விசாரித்து தீர்மானம்பண்ணினால் மாத்திரம் போதாது. தீர்ப்பை நிறைவேற்றவும்வேண்டும். அதற்கு ஆயுதபலம் தேவை. இஸ்ரவேல் புத்திரர் மத்தியில் பட்டயம் உருவுகிற காலாட்கள் நாலு லட்சம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் இஸ்ரவேல் சபையாரின் ஏகோபித்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

"பென்யமீன் கோத்திரத்தையல்லாமல் இஸ்ரவேலிலே பட்டயம் உருவுகிற மனுஷர் நாலு லட்சம்பேர் என்று தொகையிடப்பட்டது; இவர்களெல்லாரும் யுத்தவீரராயிருந்தார்கள்" (நியா 20:17).

இஸ்ரவேல் புத்திரர், தாங்கள் விசாரிக்கவேண்டிய வழக்கைக் குறித்து பென்யமீன் புத்திரருக்கு செய்தி சொல்லியனுப்புகிறார்கள். கிபியாவிலுள்ள பென்யமீனர்தான், லேவியனுடைய மறுமனையாட்டிக்கு தீங்கு செய்தவர்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவுக்கு வந்த செய்தியைப் பென்யமீன் புத்திரர் கேள்விப்படுகிறார்கள். தங்களுக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் ஏகோபித்து சபையாகக் கூடிவந்திருப்பதைப் பார்த்து, பென்யமீன் புத்திரருடைய இருதயம் கடினப்படுகிறது. பென்யமீனர் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாருக்கு விரோதமாக எழும்புகிறார்கள். இஸ்ரவேல் தேசத்திலே அமைதியும் சமாதானமும் ஏற்படவேண்டுமென்று பென்யமீன் புத்திரர் நினைக்க வேண்டும். ஆனால் அவர்களோ தங்களுடைய சுயபெருமைகளை நினைத்து, இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தாரைப் பகைக்கிறார்கள்.

"அந்த அக்கிரமம் நடந்தது எப்படி, சொல்லுங்கள்" என்று இஸ்ரவேல் புத்திரர் கேட்கிறார்கள் (நியா 20:3). அப்பொழுது கொலைசெய்யப்பட்ட ஸ்திரீயின் புருஷனாகிய லேவியன், இஸ்ரவேல் புத்திரருக்கு மாறுத்தரம் சொல்லுகிறார்.

"நானும் என் மறுமனையாட்டியும் பென்யமீன் நாட்டிலுள்ள கிபியாவிலே இராத்தங்க வந்தோம். அப்பொழுது கிபியாபட்டணத்தார் எனக்கு விரோதமாய் எழும்பி, என்னைக் கொலைசெய்ய நினைத்து, நான் இருந்த வீட்டை இராத்திரியிலே வளைந்து கொண்டு, என் மறுமனையாட்டியை அவமானப்படுத்தினார்கள்; அதினாலே அவள் செத்துப்போனாள். ஆகையால் இஸ்ரவேலிலே அவர்கள் இப்படிப்பட்ட முறைகேட்டையும் மதிகேட்டையும் செய்தபடியினால், நான் என் மறுமனையாட்டியைப் பிடித்துத் துண்டித்து, இஸ்ரவேலின் சுதந்தரமான சகல நாடுகளுக்கும் அனுப்பினேன்" (நியா 20:4-6) என்று லேவியன் நடந்த சம்பவத்தை வரிசையாகச் சொல்லுகிறார்.

லேவியன் நடந்த சம்பவத்தை சொன்ன பின்பு, இஸ்ரவேல் புத்திரர் தனக்கு நீதியான தீர்ப்பு சொல்லவேண்டுமென்று லேவியன் எதிர்பார்க்கிறார். "நீங்கள் எல்லோரும் இஸ்ரவேல் புத்திரராமே, இங்கே ஆலோசித்துத் தீர்மானம் பண்ணுங்கள்" (நியா 20:7) என்றும் அந்த லேவியன் இஸ்ரவேல் புத்திரரிடம் சொல்லுகிறார்.

மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து சபையாகக் கூடிவந்திருக்கிறவர்கள் எல்லோரும் இஸ்ரவேல் புத்திரர். ஆகையினால் அவர்களுக்கு கர்த்தருடைய கட்டளையும் பிரமாணமும் தெரியும். இஸ்ரவேல் புத்திரர் தன்னுடைய வழக்கை ஆலோசித்து, கர்த்தருடைய கட்டளையின் பிரகாரமும் நியாயப்பிரமாணத்தின் பிரகாரமும் தீர்மானம்பண்ணவேண்டும் என்று லேவியன் விண்ணப்பம்பண்ணுகிறார்.

"ராஜா நியாயப்பிரமாணத்தையும் ராஜநீதியையும் அறிந்தவர்களிடத்தில் பேசுவது தனக்கு வழக்கமானபடியால், காலாகால வர்த்தமானங்களை அறிந்த பண்டிதர்களை நோக்கி: ராஜாவாகிய அகாஸ்வேரு பிரதானிகள் மூலமாய்ச் சொல்லியனுப்பின கட்டளையின்படி ராஜஸ்திரீயாகிய வஸ்திசெய்யாமற் போனதினிமித்தம், தேசச் சட்டத்தின்படி அவளுக்குச் செய்யவேண்டியது என்ன என்று கேட்டான்" (எஸ் 1:14,15).

லேவியன் கிபியாவின் மனுஷர்மீது குற்றம் சொல்லுகிறார். கிபியாவுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வேண்டும் என்று இஸ்ரவேல் புத்திரர் தீர்மானம்பண்ணுகிறார்கள். கிபியாவின் மனுஷரைத் தண்டிக்காமல், இஸ்ரவேல் புத்திரரில் ஒருவரும் மிஸ்பாவை விட்டு தங்கள் கூடாரத்திற்கு போகக்கூடாது என்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

அப்பொழுது எல்லா ஜனங்களும் ஏகமாய் எழும்பி: "நம்மில் ஒருவரும் தன்கூடாரத்திற்குப் போகவும்படாது, ஒருவனும் தன் வீட்டிற்குத் திரும்பவும்படாது. இப்பொழுது கிபியாவுக்குச் செய்யவேண்டியது என்னவென்றால்: சீட்டுப்போட்டு அதற்கு விரோதமாகப் போவோம்" (நியா 20:8,9) என்று சொல்லுகிறார்கள்.

கிபியா பட்டணத்தை அழிக்காமல் விட்டுவிட்டால், இஸ்ரவேல் தேசம் முழுவதும் கெட்டுப்போய்விடும் என்று இஸ்ரவேல் புத்திரர் பயப்படுகிறார்கள். கிபியாவின் மனுஷர் செய்த அக்கிரமத்திற்கு சரியான தண்டனை கொடுக்கவில்லையென்றால், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே சீர்கெட்டுப்போய்விடுவார்கள் என்று மிஸ்பாவிலே கூடிவந்திருக்கிற இஸ்ரவேலர் நினைக்கிறார்கள்.

தாங்கள் கூடிவந்திருக்கிற நோக்கத்தை நிறைவேற்றாமல், தங்களுடைய கூடாரத்திற்கு திரும்பிப்போகக்கூடாது என்று இஸ்ரவேலர் தீர்மானம்பண்ணுகிறார்கள். அவர்களுடைய நோக்கத்தில் உறுதியிருக்கிறது. அவர்கள் பாவத்திற்கும் அக்கிரமத்திற்கும் விரோதமாக வைராக்கியமாய்க் கூடிவந்திருக்கிறார்கள். தங்களுடைய குடும்பத்தில் எவ்வளவு முக்கியமான வேலைகள் இருந்தாலும், லேவியனுடைய வழக்கை ஆலோசித்து தீர்மானம்பண்ணுவதற்கும், கிபியாவின் மனுஷரை தண்டிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். கர்த்தரை கனம்பண்ணவேண்டும், இஸ்ரவேலை சுத்தம்பண்ணவேண்டும் என்பதே அவர்களுடைய பிரதான நோக்கம்.

"கிபியாவின் மனுஷருக்கு விரோதமாக போவோம்" என்று இஸ்ரவேலர் எல்லோரும் தீர்மானம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரரிடத்தில் தெளிவான திட்டமும் ஞானமும் இருக்கிறது. அவர்களுடைய காலாட்கள் நாலு லட்சம் பேராயிருக்கிறார்கள். யுத்தம்பண்ணவேண்டுமென்றால் தானிய தவசங்கள் வேண்டும். இதையெல்லாம் எப்படி சம்பாதிப்பது என்பதையும் இஸ்ரவேல் புத்திரர் தீர்மானம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலரெல்லாரும் ஒன்றுபோல ஏகோபித்துப் பட்டணத்திற்கு முன்பாகக் கூட்டங்கூடுகிறார்கள். "பென்யமீன் கோத்திரமான கிபியா பட்டணத்தார் இஸ்ரவேலிலே செய்த எல்லா மதிகேட்டுக்கும் தக்கதாக ஜனங்கள் வந்து செய்யும்படிக்கு, நாம் தானிய தவசங்களைச் சம்பாதிக்கிறதற்கு, இஸ்ரவேல் கோத்திரங்களிலெல்லாம் நூறுபேரில் பத்துப்பேரையும், ஆயிரம்பேரில் நூறுபேரையும், பதினாயிரம்பேரில் ஆயிரம்பேரையும், தெரிந்தெடுப்போம்" (நியா 20:10) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய தீர்மானத்தில் தெளிவான நீதியிருக்கிறது. தங்களுடைய தீர்மானத்தை எவ்வாறு நிறைவேற்றவேண்டும் என்னும் தெளிவான திட்டமும் அவர்களிடத்திலிருக்கிறது. அவர்கள் தங்களுடைய தீர்மானத்தை ஏகமாய் எழும்பி சொல்லுகிறார்கள். அவர்களெல்லோரும் ஒருமனப்பட்டிருக்கிறார்கள். இதுவே அவர்களுடைய பெலமும் மகிமையுமாயிருக்கிறது. இஸ்ரவேல் புத்திரர் பல கோத்திரங்களாகப் பிரிந்திருந்தாலும், இஸ்ரவேல் தேசத்தின் பொதுவான நன்மை என்று வரும்போது, அவர்களெல்லோரும் ஏகோபித்து வந்து கூடுகிறார்கள்.

பென்யமீன் கோத்திரத்தார் நியா 20:12-17

நியா 20:12. அங்கே இருந்த இஸ்ரவேலின் கோத்திரத்தார் பென்யமீன் கோத்திரமெங்கும் ஆட்களை அனுப்பி: உங்களுக்குள்ளே நடந்த இந்த அக்கிரமம் என்ன?

நியா 20:13. இப்பொழுது கிபியாவில் இருக்கிற பேலியாளின் மக்களாகிய அந்த மனுஷரை நாங்கள் கொன்று, பொல்லாப்பை இஸ்ரவேலை விட்டு விலக்கும்படிக்கு, அவர்களை ஒப்புக்கொடுங்கள் என்று சொல்லச்சொன்னார்கள்; பென்யமீன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரராகிய தங்கள் சகோதரரின் சொல்லைக் கேட்க மனமில்லாமல்,

நியா 20:14. இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணப் புறப்படும்படிக்கு, பட்டணங்களிலிருந்து கிபியாவுக்கு வந்து கூடினார்கள்.

நியா 20:15. கிபியாவின் குடிகளிலே தெரிந்து கொள்ளப்பட்ட எழுநூறுபேரையல்லாமல் அந்நாளில் பட்டணங்களிலிருந்து வந்து கூடின பட்டயம் உருவுகிற மனுஷரின் இலக்கம் இருபத்தாறாயிரம்பேர் என்று தொகையிடப்பட்டது.

நியா 20:16. அந்த ஜனங்களெல்லாருக்குள்ளும் தெரிந்து கொள்ளப்பட்ட இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருந்தார்கள்; அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிவார்கள்.

நியா 20:17. பென்யமீன் கோத்திரத்தையல்லாமல் இஸ்ரவேலிலே பட்டயம் உருவுகிற மனுஷர் நாலுலட்சம்பேர் என்று தொகையிடப்பட்டது; இவர்களெல்லாரும் யுத்தவீரராயிருந்தார்கள்.

இஸ்ரவேல் கோத்திரத்தார் பென்யமீன் கோத்திரமெங்கும் ஆட்களை அனுப்பி: "உங்களுக்குள்ளே நடந்த இந்த அக்கிரமம் என்ன? இப்பொழுது கிபியாவில் இருக்கிற பேலியாளின் மக்களாகிய அந்த மனுஷரை நாங்கள் கொன்று, பொல்லாப்பை இஸ்ரவேலை விட்டு விலக்கும்படிக்கு, அவர்களை ஒப்புக்கொடுங்கள்" (நியா 20:12,13) என்று சொல்லச் சொல்லுகிறார்கள்.

லேவியனுடைய மறுமனையாட்டிக்கு தீங்கு செய்த கிபியாவின் மக்களை, விசாரணைக்காக தங்களிடத்தில் ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர், பென்யமீன் புத்திரருக்கு சொல்லுகிறார்கள். பென்யமீன் புத்திரர் எல்லோரையும் அழித்துப்போடவேண்டும் என்பது இஸ்ரவேல் புத்திரருடைய நோக்கமல்ல. தவறு செய்த கிபியாவின் மனுஷர் மாத்திரம் தண்டிக்கப்படவேண்டும்.

கிபியாவிலிருக்கிற பேலியாளின் மக்களை, பென்யமீன் புத்திரர், மிஸ்பாவிலே கூடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரரிடம் ஒப்புக்கொடுக்க மறுத்தால், இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே பென்யமீன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணுவார்கள். குற்றவாளியைப் பாதுகாப்பதும், அவனை நீதி விசாரணைக்கு ஒப்புக்கொடுக்க மறுப்பதும் குற்றமாகும்.

பென்யமீன் புத்திரர் இஸ்ரவேல் புத்திரராகிய தங்கள் சகோதரரின் சொல்லைக் கேட்க மனமில்லாமல், இஸ்ரவேல் புத்திரரோடு யுத்தம் பண்ணப் புறப்படும்படிக்கு, பட்டணங்களிலிருந்து கிபியாவுக்கு வந்து கூடுகிறார்கள் (நியா 20:13,14).

கிபியாவின் குடிகளிலே தெரிந்து கொள்ளப்பட்ட எழுநூறுபேரையல்லாமல் அந்நாளில் பட்டணங்களிலிருந்து வந்து கூடின பட்டயம் உருவுகிற மனுஷரின் லக்கம் இருபத்தாறாயிரம்பேர் என்று தொகையிடப்படுகிறது. அந்த ஜனங்களெல்லாருக்குள்ளும் தெரிந்துகொள்ளப்பட்ட இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருக்கிறார்கள்; அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்குக் கவண்கல் எறிவார்கள் (நியா 20:15,16).

இஸ்ரவேல் புத்திரர் குற்றவாளிகளைத் தண்டிக்கவேண்டுமென்று வைராக்கியமாயிருக்கும்போது, பென்யமீன் புத்திரரோ குற்றவாளிகளை தண்டனைக்கு ஒப்புக்கொடுக்காமல், அவர்களைப் பாதுகாக்கவேண்டும் என்று வைராக்கியமாயிருக்கிறார்கள். பென்யமீன் புத்திரர் மதியீனராயிருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய சந்தோஷத்திற்கும் பெருமைக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்களேயல்லாமல், இஸ்ரவேல் தேசத்தின் நீதிக்கும், சமாதானத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

தங்களுடைய சொந்த விஷயங்களில் இஸ்ரவேலின் மற்ற கோத்திரத்தார் தலையிடக்கூடாது என்று பென்யமீன் புத்திரர் நினைக்கிறார்கள். இஸ்ரவேலிலே இப்போது ராஜா இல்லை. அவர்களுடைய வழக்குகளை விசாரிக்க நியாயாதிபதியுமில்லை. தங்களை மற்ற கோத்திரத்தார் ஆளுகை செய்யக்கூடாது என்றும், கட்டுப்படுத்தக்கூடாது என்றும் பென்யமீன் கோத்திரத்தார் நினைக்கிறார்கள்.

இஸ்ரவேல் தேசம் சமாதானமாயிருப்பதற்கு, இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் ஒத்துழைக்கவேண்டும். சகோதரருக்குள்ளே ஐக்கியமும், ஒருமனமும் இருந்தால் மாத்திரமே தேசத்தில் சமாதானம் இருக்கும். ஒவ்வொருவரும் தனக்கு இஷ்டமான பிரகாரம் செய்ய ஆரம்பித்துவிட்டால், தேசத்தில் ஒழுங்கும், கட்டுப்பாடும் இருக்காது.

பென்யமீன் புத்திரர் கிபியாவுக்கு வந்து கூடும்போதே, இஸ்ரவேலுக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்த வேலைகளை செய்து விடுகிறார்கள். தங்களுடைய கோத்திரத்திலே பட்டயம் உருவுகிற மனுஷரின் இலக்கம் எத்தனை பேர் என்று எண்ணித்தொகையிடுகிறார்கள். அவர்களுடைய யுத்த திறமைகளையும் சோதித்துப் பார்க்கிறார்கள். இடதுகை வாக்குள்ளவர்களை தனியாகப் பிரிக்கிறார்கள். கவண் கல் எரிகிறவர்களை தேர்ந்தெடுக்கிறார்கள்.

பென்யமீன் புத்திரர் இஸ்ரவேலின் மற்ற கோத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணவில்லை. அவர்கள் நீதி நியாயத்திற்கு விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய கட்டளைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் விரோதமாக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தர் நீதியுள்ளவர். அவர் நீதியாய் நியாயம் விசாரிக்கிறவர். பென்யமீன் புத்திரர் நீதிக்கு விரோதமாய் யுத்தம்பண்ணுவதினால், அவர்கள் கர்த்தருக்கு விரோதமாகவே யுத்தம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மத்தியிலே பிரதான ஆசாரியர் இருக்கிறார். கர்த்தருடைய தெய்வீக வார்த்தை அவர்களோடு கூடயிருக்கிறது. இவையெல்லாவற்றிற்கும் மேலாக இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர், இஸ்ரவேல் புத்திரரோடு கூடயிருக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த பிரமாணத்திற்கு கீழ்ப்படியாமல், அதற்கு விரோதமாக கலகம்பண்ணுகிற பென்யமீன் புத்திரருக்கு விரோதமாக இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணுகிறார்கள்.

பென்யமீன் புத்திரர் தங்களுடைய யுத்த மனுஷரின் திறமைகளை நம்புகிறார்கள். அவர்களிடத்தில் இடதுகை வாக்கான எழுநூறுபேர் இருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் ஒரு மயிரிழையும் தப்பாதபடிக்கு கவண்கல் எரிகிறவர்கள். பென்யமீன் புத்திரரோ, இவர்களுடைய கைத்திறமையையும், இவர்களுடைய எண்ணிக்கையையும் நம்புகிறார்கள்.

பென்யமீன் புத்திரர் எவ்வளவு துல்லியமாக கவண்கல்லை எரிந்தாலும், அவர்களுடைய நாசியிலே சுவாசம் இருந்தால்தான், அவர்களால் கவண்கல்லை எரியமுடியும். கர்த்தரே அவர்களுக்கு ஜீவசுவாசத்தைக் கொடுத்து, அவர்களை ஜீவாத்துமாவாக வைத்திருக்கிறார். அவர்கள் திறமை மிகுந்தவர்களாகயிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் நீதிக்காக யுத்தம்பண்ணாமல் அநீதிக்காக யுத்தம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரோ கர்த்தரையும், அவருடைய வார்த்தையையும் நம்புகிறார்கள். கர்த்தருடைய நீதிக்காக யுத்தம்பண்ணுகிறார்கள். பென்யமீன் கோத்திரத்தையல்லாமல் இஸ்ரவேலிலே பட்டயம் உருவுகிற மனுஷர் நாலு லட்சம்பேர் என்று தொகையிடப்பட்டிருக்கிறது; இவர்களெல்லாரும் யுத்தவீரராயிருக்கிறார்கள் (நியா 20:17).

இஸ்ரவேல்ரில் சங்காரம் நியா 20:18-25

நியா 20:18. இஸ்ரவேல் புத்திரரான அவர்கள் எழும்பி, தேவனுடைய வீட்டிற்குப்போய்: எங்களில் யார் முந்திப் போய் பென்யமீன் புத்திரரோடு யுத்தம்பண்ண வேண்டும் என்று தேவனிடத்தில் விசாரித்தார்கள்; அதற்குக் கர்த்தர்: யூதா முந்திப் போகவேண்டும் என்றார்.

நியா 20:19. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் காலமே எழுந்து புறப்பட்டு, கிபியாவுக்கு எதிராகப் பாளயமிறங்கினார்கள்.

நியா 20:20. பின்பு இஸ்ரவேல் மனுஷர் பென்யமீனோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டு, கிபியாவிலே அவர்களுக்கு எதிராகப் போர் செய்ய அணிவகுத்து நின்றார்கள்.

நியா 20:21. ஆனாலும் பென்யமீன் புத்திரர் கிபியாவிலிருந்து புறப்பட்டு, இஸ்ரவேலில் இருபத்தீராயிரம்பேரை அன்றையதினம் தரையிலே விழும்படி சங்கரித்தார்கள்.

நியா 20:22. இஸ்ரவேல் ஜனங்கள் தங்களைத் திடப்படுத்திக்கொண்டு, முதல்நாளில் அணிவகுத்து நின்ற ஸ்தலத்திலே, மறுபடியும் போர்செய்ய அணிவகுத்து நின்றார்கள்.

நியா 20:23. அவர்கள் போய், கர்த்தருடைய சந்நிதியில் சாயங்காலமட்டும் அழுது: எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே திரும்பவும் யுத்தம் கலக்கப்போவோமா என்று கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்; அப்பொழுது கர்த்தர்: அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள் என்றார்.

நியா 20:24. மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் புத்திரர் கிட்டச் சேருகிறபோது,

நியா 20:25. பென்யமீன் கோத்திரத்தாரும் அந்நாளிலே கிபியாவிலிருந்து அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டுவந்து, பின்னும் இஸ்ரவேல் புத்திரரில் பட்டயம் உருவுகிற பதினெண்ணாயிரம்பேரைத் தரையிலே விழும்படி சங்கரித்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனருக்கு விரோதமாக யுத்தம்பண்ண ஆயத்தமாகிறார்கள். யுத்தம்பண்ணப் போவதற்கு முன்பாக கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரான அவர்கள் எழும்பி, தேவனுடைய வீட்டிற்குப்போய்: "எங்களில் யார் முந்திப் போய் பென்யமீன் புத்திரரோடு யுத்தம்பண்ண வேண்டும்" என்று தேவனிடத்தில் விசாரிக்கிறார்கள்; அதற்குக் கர்த்தர்: "யூதா முந்திப் போகவேண்டும்" என்று சொல்லுகிறார். அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் காலமே எழுந்து புறப்பட்டு, கிபியாவுக்கு எதிராகப் பாளயமிறங்குகிறார்கள் (நியா 20:18,19).

இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகும்போது, வரிசைக் கிரமமாகப் போகவேண்டும். இஸ்ரவேலின் ஒவ்வொரு கோத்திரமும் அணிவகுத்துச் செல்லவேண்டும். இந்த அணிவகுப்பில் யார் முந்திப்போகவேண்டும் என்றும், இந்த யுத்தத்தை எப்படி நடத்தவேண்டும் என்றும் இஸ்ரவேலர் கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள். கர்த்தர் அவர்களுக்கு சொன்ன பிரகாரம், யுத்த வரிசையிலே, யூதாகோத்திரத்தார் முந்திப்போகிறார்கள். ஆனாலும் முதல் நாள் யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு தோல்வி உண்டாயிற்று.

இஸ்ரவேல் மனுஷர் பென்யமீனோடு யுத்தம்பண்ணப் புறப்பட்டு, கிபியாவிலே அவர்களுக்கு எதிராகப் போர் செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள். ஆனாலும் பென்யமீன் புத்திரர் கிபியாவிலிருந்து புறப்பட்டு, இஸ்ரவேலில் இருபத்தீராயிரம்பேரை அன்றையதினம் தரையிலே விழும்படி சங்கரிக்கிறார்கள் (நியா 20:20,21).

இஸ்ரவேல் புத்திரருடைய சேனையிலே நாலு லட்சம் பேர் யுத்தவீரராயிருக்கிறார்கள். இவர்களில், முதல் நாளில், 22,000 பேர் செத்துப்போகிறார்கள். இஸ்ரவேல் புத்திரருக்கு இது பேரிழப்பாகயிருக்கிறது. ஆனாலும், இஸ்ரவேல் ஜனங்கள் தங்களைத் திடப்படுத்திக்கொண்டு, முதல்நாளில் அணிவகுத்து நின்ற ஸ்தலத்திலே, மறுபடியும் போர்செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள் (நியா 20:22).

முதல் நாள் யுத்தத்திலே இஸ்ரவேல் புத்திரருக்கு தோல்வியும், சங்காரமும் ஏற்பட்டாலும், அவர்கள் கர்த்தரை மறக்கவில்லை. இஸ்ரவேலர் பென்யமீனருக்கு விரோதமாக மறுபடியும் போர்செய்ய அணிவகுத்து நின்றாலும், யுத்தம்பண்ணுவதற்கு முன்பாக, இஸ்ரவேலர் கர்த்தருடைய சமுகத்திற்குப் போகிறார்கள். அங்கே அவர்கள் கர்த்தருடைய சந்நிதியில் சாயங்காலமட்டும் அழுது ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர், முதல் முறையாக, கர்த்தரிடத்தில் விசாரித்தபோது, "எங்களில் யார் முந்திப்போய் பென்யமீன் புத்திரரோடு யுத்தம்பண்ணவேண்டும்" (நியா 20:18) என்று தேவனிடத்தில் விசாரித்தார்கள். இப்போது இஸ்ரவேலர் கர்த்தரிடத்தில், "யார் முந்திப்போகவேண்டும்" என்று கேட்கவில்லை. அதற்கு பதிலாக "பென்யமீனரோடு யுத்தம்பண்ணப்போகவேண்டுமா" என்று கேட்கிறார்கள்.

இஸ்ரவேலர் தேவனுடைய வீட்டிற்குப்போய் கர்த்தருடைய சந்நிதியில் சாயங்காலமட்டும் அழுது: "எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே திரும்பவும் யுத்தம் கலக்கப்போவோமா" என்று கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள்; அப்பொழுது கர்த்தர்: "அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்" என்று சொல்லுகிறார் (நியா 20:23).

பென்யமீன் புத்திரர், இஸ்ரவேல் புத்திரருக்கு சகோதரராயிருக்கிறார்கள். ஆனாலும் பென்யமீன் புத்திரர் ஒரு சரீரத்தின் புற்று நோயைப்போலவும், அழுகி துர்நாற்றம் வீசும் பகுதியைப்போலவும் இருக்கிறார்கள். இவர்களை சரீரத்திலிருந்து வெட்டி அகற்றிப்போடவேண்டும் இல்லையென்றால், இந்தப் புற்று நோய் முழுசரீரத்தையும் பாதிக்கும். பென்யமீனர் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் அசுத்தப்படுத்திவிடுவார்கள்.

இஸ்ரவேல் புத்திரரில் 22,000 பேர் முதல் நாள் யுத்தத்தில் செத்துப்போனாலும், அவர்களிடத்தில் இன்னும் ஏராளமான யுத்தவீரர் இருக்கிறார்கள். அவர்கள் கர்த்தருடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், தங்களுடைய சேனையிலுள்ள திரளான எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களை திடப்படுத்திக்கொள்கிறார்கள். முதல்நாளில் அணிவகுத்து நின்ற அதே ஸ்தலத்தில், இஸ்ரவேல் புத்திரர் இரண்டாம் நாளும், பென்யமீனருக்கு விரோதமாய் மறுபடியும் யுத்தம் செய்ய அணிவகுத்து நிற்கிறார்கள்.

மறுநாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் புத்திரர் கிட்டச் சேருகிறபோது, பென்யமீன் கோத்திரத்தாரும் அந்நாளிலே கிபியாவிலிருந்து அவர்களுக்கு எதிராகப் புறப்பட்டுவந்து, பின்னும் இஸ்ரவேல் புத்திரரில் பட்டயம் உருவுகிற பதினெண்ணாயிரம்பேரைத் தரையிலே விழும்படி சங்கரிக்கிறார்கள் (நியா 20:24,25).

முதல் நாள் யுத்தத்தில் 22,000 பேர் சங்காரம், இரண்டாம் நாள் யுத்தத்தில் 18,000 பேர் சங்காரம். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய இழைப்பைப் பார்த்து சோர்வடைந்திருக்கவேண்டும். அவர்கள் நீதிக்காக யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணப்போகிறார்கள். கர்த்தரும் அவர்களுக்கு அனுமதி கொடுக்கிறார். ஆனால் இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தத்திலே வெற்றி கிடைக்கவில்லை. அவர்கள் கர்த்தருக்காக, பாவத்திற்கு விரோமாக யுத்தம்பண்ணுகிறார்கள். தங்களுக்கு இரண்டு நாள் யுத்தங்களிலும், ஏன் தோல்வி உண்டாயிற்று என்று, இஸ்ரவேல் புத்திரருக்கு தெரியவில்லை.

கர்த்தருடைய நியாயத்தீர்ப்புகளெல்லாம் மிகவும் ஆழமானது. அவருடைய வழிகள் ஆழமான சமுத்திரத்திலுள்ளது. கர்த்தருடைய கிரியைகளெல்லாமே நீதியானவை. பல சமயங்களில் நாம் கர்த்தருடைய சித்தத்தையும், திட்டத்தையும், கிரியைகளையும் புரிந்துகொள்ளாமலிருக்கிறோம்.

கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருக்கு, இந்த யுத்தத்தின் மூலமாய், ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கப்பண்ணுகிறார். நீதிக்காக யுத்தம்பண்ணுகிறவர்கள், கர்த்தரை நம்பி யுத்தம்பண்ணவேண்டும். தங்களுடைய சேனையிலுள்ள வீரர்களின் எண்ணிக்கையையோ அல்லது யுத்தவீரரின் திறமைகளையோ நம்பி யுத்தம்பண்ணக்கூடாது.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில், ஆரம்பத்தில் நாலு லட்சம் பேர் யுத்தவீரராயிருந்தார்கள். பென்யமீன் கோத்திரத்திலோ 26,000 பேர் மாத்திரமே யுத்தவீரராயிருந்தார்கள். இஸ்ரவேல் புத்திரர், தங்கள் சேனையிலுள்ள திரளான யுத்தவீரரின் எண்ணிக்கையைப் பார்த்து பெருமைப்பட்டிருக்கலாம். தங்களிடத்தில் நாலு லட்சம் யுத்தவீரர் இருப்பதினால், தங்களுக்கு இந்த யுத்தத்திலே நிச்சயம் வெற்றி கிடைக்கும் என்று எதிர்பார்த்திருக்கலாம். இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய கைகளின் மாம்சபலத்தை நம்பினார்கள். நம்முடைய சுயபலத்தினாலோ, சுயபராக்கிரமத்தினாலோ, நமக்கு வெற்றி கிடைக்காது. கர்த்தருடைய கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவருடைய பெலத்தினாலுமே நமக்கு வெற்றி கிடைக்கும்.

இஸ்ரவேல் புத்திரர் இரண்டு நாட்களாக, தங்களுடைய சுயபலத்தை நம்பி, பென்யமீன் புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ணப்போனார்கள். இரண்டு நாட்களிலும் இஸ்ரவேலருக்கு தோல்வி உண்டாயிற்று. உயிர்ச்சேதமுண்டாயிற்று. கர்த்தர் இஸ்ரவேல் புத்திரருடைய பாவங்களை, அவர்களுக்கு உணர்த்த விரும்புகிறார். அவர்களைத் திருத்த விரும்புகிறார்.

இஸ்ரவேல் புத்திரர், அநியாயம் செய்த கிபியாவின் மனுஷருக்கு விரோதமாய் வைராக்கியமாய் எழும்பி நிற்கிறார்கள். இது மிகவும் நல்ல செயல். கிபியாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாய்ப் பாவம் செய்ததுபோலவே, இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்திருக்கிறார்கள். நம்மிடத்தில் பாவம் இல்லையென்று நம்மால் சொல்ல முடியாது. நாம் அப்படி சொல்வோமென்றால், நாம், நம்மையே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.

கிபியாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததுபோல, இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்திருக்கிறார்கள். மீகாவின் வீட்டிலும், தாண் கோத்திரத்தார் மத்தியிலும் விக்கிரகாராதனை காணப்படுகிறது. விக்கிரகாராதனை கர்த்தருக்கு விரோதமான பாவம். எல்லோரும் பாவம் செய்து ஏகமாய்க் கெட்டுப்போயிருக்கிறார்கள்.

நாம் ஒரு நல்ல நோக்கத்திற்காக மிகவும் பிரயாசப்பட்டு, ஒரு வேலை செய்யும்போது, அந்த வேலையில் ஒருபோதும் தோல்வி வராது என்று நினைக்கக்கூடாது. தோல்வி வரலாம். தோல்வி வந்தாலும் நாம் சோர்ந்துபோய்விடக்கூடாது. கர்த்தர் நம்மோடு கூடயிருக்கிறார் என்னும் நிச்சயம் நமக்குள் இருக்கவேண்டும். நாம் நல்ல நோக்கத்திற்காக பிரயாசப்பட்டு ஒரு வேலையை செய்யும்போது, நமக்கு ஒரு சில காரியங்களில் தோல்வி ஏற்பட்டாலும், அதைப் பார்த்து ஆச்சரியப்படக்கூடாது. தோல்விகளைப் பார்த்து சோர்ந்துபோய்விடக்கூடாது.

சில சமயங்களில் நாம் செய்யும் வேலைகளில் வெற்றிகளுக்கு மேல் வெற்றி கிடைக்கலாம். நமக்கு, நம்முடைய முயற்சிகளில் வெற்றி கிடைக்கிறது என்பதற்காக, நம்முடைய முயற்சிகளும், நாம் செய்கிற வேலைகளும், கர்த்தருக்கு சித்தமானது என்றோ, அல்லது அது கர்த்தருக்குப் பிரியமானது என்றோ தீர்மானம்பண்ணிவிடக்கூடாது. நாம் கர்த்தருக்கு பிரியமில்லாத வேலைகளை செய்தாலும், அதிலும் வெற்றி கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. வெற்றி தோல்வியை வைத்து, கர்த்தருடைய சித்தத்தை தீர்மானம்பண்ணக்கூடாது.

நாம் கர்த்தருக்காக ஊழியம் செய்யும்போது, நம்முடைய ஊழியங்களில் தோல்வி ஏற்படலாம். நம்முடைய இருதயம் சோர்ந்துபோகலாம். உலகப்பிரகாரமான காரியங்கள் நம்மை நெருக்கலாம். நமக்கு எல்லா பக்கங்களிலும் மிகப்பெரிய நஷ்டங்கள் ஏற்படுவதுபோல தெரியலாம். ஊழியத்தை நிறுத்திவிடலாமா என்றுகூட நமது மனதிலே அவிசுவாசமான எண்ணங்கள் வரலாம்.

ஆனாலும் கர்த்தருக்காக ஊழியம் செய்கிறவர்கள், கர்த்தருடைய சமுகத்திலே பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும். கர்த்தரை நம்பி நன்மை செய்யவேண்டும். இப்போது நமக்கு தோல்வி ஏற்பட்டாலும், கர்த்தர் முடிவிலே நமக்கு ஜெயத்தைக் கொடுப்பார் என்று நம்பி, கர்த்தருடைய ஊழியத்தை தொடர்ந்து செய்யவேண்டும். நீதிமான் விழுந்தாலும் எழுந்திருப்பான்.

நமக்கு ஒரு யுத்தத்தில் தோல்வி உண்டாகலாம். ஆனாலும் இந்த தோல்வியோடு யுத்தம் முடிந்துபோவதில்லை. கர்த்தர் நமக்கு முடிவிலே பூரண வெற்றியை கட்டளையிடுவார்.

பென்யமீனரில் சங்காரம்
நியா 20:26-48

நியா 20:26. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலமட்டும் உபவாசித்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதானபலி களையும் இட்டு,

நியா 20:27. கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள்; தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி அந்நாட்களில் அங்கே இருந்தது.

நியா 20:28. ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரின் மகன் பினெகாஸ் அந்நாட்களில் அவருடைய சந்நிதியில் நின்றான்; எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே பின்னும் யுத்தம்பண்ணப் புறப்படலாமா புறப்படலாகாதா என்று அவர்கள் விசாரித்தார்கள்; அப்பொழுது கர்த்தர்: போங்கள்; நாளைக்கு அவர்களை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன் என்றார்.

நியா 20:29. அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கிபியாவைச்சுற்றிலும் பதிவிடையாட்களை வைத்து,

நியா 20:30. மூன்றாம்நாளிலே பென்யமீன் புத்திரருக்கு விரோதமாய்ப் போய், முன் இரண்டுதரம் செய்ததுபோல, கிபியாவுக்குச் சமீபமாய்ப் போருக்கு அணிவகுத்து நின்றார்கள்.

நியா 20:31. அப்பொழுது பென்யமீன் புத்திரர் ஜனத்திற்கு விரோதமாய்ப் புறப்பட்டுப் பட்டணத்தை விட்டு, அப்பாலே வந்து, வெளியிலே பெத்தேலுக்கும் கிபியாவுக்கும் போகிற இரண்டு வழிகளில் இஸ்ரவேல் ஜனத்தில் ஏறக்குறைய முப்பதுபேரை, முதல் இரண்டுதரம் செய்ததுபோல, வெட்டவும் கொல்லவும் தொடங்கினார்கள்.

நியா 20:32. முன்போல நமக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்கள் என்று பென்யமீன் புத்திரர் சொன்னார்கள்; இஸ்ரவேல் புத்திரரோ: அவர்களைப் பட்டணத்தை விட்டு அப்பாலேயிருக்கிற வழிகளிலே வரப்பண்ணும்படிக்கு, நாம் ஓடவேண்டும் என்று சொல்லியிருந்தார்கள்.

நியா 20:33. அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தங்கள் ஸ்தானத்திலிருந்து எழும்பி, பாகால்தாமாரிலே யுத்தத்திற்கு அணிவகுத்து நின்றார்கள்; இஸ்ரவேலரில் கிபியாவின் பள்ளத்தாக்கிலே பதிவிருந்தவர்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு,

நியா 20:34. அவர்களில் எல்லா இஸ்ரவேலிலும் தெரிந்துகொள்ளப்பட்ட பதினாயிரம்பேர் கிபியாவுக்கு எதிரே வந்தார்கள்; யுத்தம் பலத்தது; ஆனாலும் தங்களுக்கு விக்கினம் நேரிட்டது என்று அவர்கள் அறியாதிருந்தார்கள்.

நியா 20:35. கர்த்தர் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பென்யமீனை முறிய அடித்தார்; அந்நாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனிலே பட்டயம் உருவுகிற ஆட்களாகிய இருபத்தையாயிரத்து நூறுபேரைச் சங்கரித்தார்கள்.

நியா 20:36. இஸ்ரவேலர் கிபியாவுக்கு அப்பாலே வைத்த பதிவிடையை நம்பியிருந்தபடியினாலே, பென்யமீனருக்கு இடம் கொடுத்தார்கள்; அதினாலே அவர்கள் முறிய அடிக்கப்படுகிறார்கள் என்று பென்யமீன் புத்திரருக்குக் காணப்பட்டது.

நியா 20:37. அப்பொழுது பதிவிடையிருந்தவர்கள் தீவிரமாய்க் கிபியாவின்மேல் பாய்ந்து பரவி, பட்டணத்தில் இருக்கிறவர் களெல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டினார்கள்.

நியா 20:38. பட்டணத்திலிருந்து மகா பெரிய புகையை எழும்பப்பண்ணுவதே இஸ்ரவேலருக்கும் பதிவிடைக்காரருக்கும் குறிக்கப்பட்ட அடையாளமாயிருந்தது.

நியா 20:39. ஆகையால் இஸ்ரவேல் யுத்தத்திலே பின்வாங்கினபோது, பென்யமீனர்: முந்தின யுத்தத்தில் நடந்ததுபோல, அவர்கள் நமக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்களே என்று சொல்லி, இஸ்ரவேலரில் ஏறக்குறைய முப்பதுபேரை வெட்டவும் கொல்லவும் தொடங்கினார்கள்.

நியா 20:40. பட்டணத்திலிருந்து புகையானது ஸ்தம்பம்போல உயர எழும்பினபோது, பென்யமீனர் பின்னாகப் பார்த்தார்கள்; இதோ, பட்டணத்தின் அக்கினிஜுவாலை வானபரியந்தம் எழும்பிற்று.

நியா 20:41. அப்பொழுது இஸ்ரவேலர் திரும்பிக்கொண்டார்கள்; பென்யமீன் மனுஷரோ, தங்களுக்கு விக்கினம் நேரிட்டதைக் கண்டு திகைத்து,

நியா 20:42. இஸ்ரவேல் புத்திரரைவிட்டு, வனாந்தரத்திற்குப் போகிற வழிக்கு நேராய்த் திரும்பி ஓடிப்போனார்கள்; ஆனாலும் யுத்தம் அவர்களைத் தொடர்ந்தது; பட்டணங்களில் இருந்தவர்களும் தங்கள் நடுவே அகப்பட்டவர்களைக் கொன்றுபோட்டார்கள்.

நியா 20:43. இப்படியே பென்யமீனரை வளைந்துகொண்டு துரத்தி, கிபியாவுக்குக் கிழக்குப்புறமாக வருமட்டும், அவர்களை லேசாய் மிதித்துப்போட்டார்கள்.

நியா 20:44. இதினால் பென்யமீனரிலே பதினெண்ணாயிரம்பேர் விழுந்தார்கள்; அவர்களெல்லாரும் பலவான்களாயிருந்தார்கள்.

நியா 20:45. மற்றவர்கள் விலகி, வனாந்தரத்தில் இருக்கிற ரிம்மோன் கன்மலைக்கு ஓடிப்போனார்கள்; அவர்களில் இன்னும் ஐயாயிரம்பேரை வழிகளிலே கொன்று, மற்றவர்களைக் கீதோம்மட்டும் பின்தொடர்ந்து, அவர்களில் இரண்டாயிரம் பேரை வெட்டிப்போட்டார்கள்.

நியா 20:46. இவ்விதமாய் பென்யமீனரில் அந்நாளில் விழுந்தவர்களெல்லாரும் இருபத்தையாயிரம்பேர்; அவர்களெல்லாரும் பட்டயம் உருவுகிற பலவான்களாயிருந்தார்கள்.

நியா 20:47. அறுநூறுபேர் திரும்பிக் கொண்டு ஓடி, வனாந்தரத்திலிருக்கிற ரிம்மோன் கன்மலைக்குப் போய், ரிம்மோன் கன்மலையிலே நாலு மாதம் இருந்தார்கள்.

நியா 20:48. இஸ்ரவேலரோ பென்யமீன் புத்திரர் மேல் திரும்பி, பட்டணத்தில் மனுஷர் தொடங்கி மிருகங்கள் மட்டும் கண்டவைகள் எல்லாவற்றையும் பட்டயக்கருக்கினால் வெட்டி, கண்ட பட்டணங்களையெல்லாம் அக்கினியால் கொளுத்திப் போட்டார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மூன்றாம் நாளிலே பென்யமீன் புத்திரருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். மூன்றாம் நாளிலே இஸ்ரவேலருக்கு முழுமையான வெற்றி கிடைக்கிறது. நீதிக்காக போராடும்போது, முடிவிலே நீதிக்கு ஜெயம் கிடைக்கிறது.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பு இரண்டு நாட்களாக, பென்யமீன் புத்திரரோடு யுத்தம்பண்ணினார்கள். அவர்களுக்கு இரண்டு நாட்களிலும் தோல்வி உண்டாயிற்று. இஸ்ரவேலர் இதுவரையிலும் யுத்தம்பண்ணப்போனபோது இரண்டு காரியங்களை நம்பினார்கள். அவையாவன : 1. அவர்களுடைய நோக்கம் நல்லது, நீதியானது. 2. அவர்களுடைய யுத்தவீரரின் எண்ணிக்கை, பென்யமீனரின் எண்ணிக்கையைவிட அதிகமானது.

இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நீதியும் பெலமும் இருக்கிறது என்பது மெய்தான். இவை இரண்டுமே இஸ்ரவேலருக்கு அநுகூலமாயிருக்கிறது. ஆனால் இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய கிருபையை அதிகமாய் நம்பாமல், தங்களுடைய சுயநீதியையும், தங்களுடைய சேனையின் திரளான எண்ணிக்கையையும் அதிகமாய் நம்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருக்கு, பென்யமீனரோடு நடைபெற்ற யுத்தத்தில், இரண்டு நாட்களாக தோல்வி உண்டாயிற்று. மூன்றாம் நாளிலே இஸ்ரவேலர் தங்களுடைய தப்பிதங்களைப் புரிந்துகொள்கிறார்கள். தங்களை கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்கிறார்கள். கர்த்தரைத் துதித்து, அவரை ஆராதிக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் இதுவரையிலும் தங்களுடைய சுயநீதியை நம்பினார்கள். கர்த்தருடைய பிரசன்னமும், அவருடைய ஆசீர்வாதமும் தங்களோடு கூடயிருக்கவேண்டுமென்று இஸ்ரவேலர் எதிர்பார்க்கவில்லை. அவர்கள் கர்த்தரிடத்தில் இதற்காக ஜெபம்பண்ணவுமில்லை. தங்களுடைய நோக்கம் நல்ல நோக்கமாயிருப்பதினால், கர்த்தருடைய பிரசன்னம் தங்களோடு கூடயிருக்குமென்று அவர்களாகவே நினைத்துக்கொள்கிறார்கள்.

தாங்கள் நல்ல நோக்கத்திற்காக யுத்தம்பண்ணுவதினால், கர்த்தர் தங்களை ஆசீர்வதிப்பார் என்றும், யுத்தத்திலே தங்களுக்கு வெற்றி கிடைக்கும் என்றும், இஸ்ரவேல் புத்திரர் தாங்களாகவே நினைத்துக்கொள்கிறார்கள். வெற்றி நிச்சயம் என்று உறுதியாய் நம்பி, இஸ்ரவேல் புத்திரர் முதல்நாள் யுத்தத்திற்குப் போகும் முன்பாக, கர்த்தரிடத்தில், "எங்களில் யார் முந்திப்போய் பென்யமீன் புத்திரரோடு யுத்தம்பண்ணவேண்டும்" (நியா 20:18) என்று கேட்டார்கள்.

இரண்டாவது நாளிலே, யுத்தம்பண்ண புறப்படுவதற்கு முன்பாக "எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே திரும்பவும் யுத்தம் கலக்கப்போவோமா" (நியா 20:23) என்று கேட்டார்கள்.

இப்போதோ இஸ்ரவேல் புத்திரர், கர்த்தரிடத்தில் யுத்தத்தைப்பற்றியே பேசவில்லை. அவர்கள் கர்த்தருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக உபவாசம்பண்ணி ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரராகிய சகல ஜனங்களும் புறப்பட்டு, தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே கர்த்தருடைய சந்நிதியில் அழுது, தரித்திருந்து, அன்று சாயங்காலமட்டும் உபவாசித்து, கர்த்தருடைய சந்நிதியில் சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் இட்டு, கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள்; தேவனுடைய உடன்படிக்கையின் பெட்டி அந்நாட்களில் அங்கே இருக்கிறது (நியா 20:26,27).

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரிடத்தில் விண்ணப்பம்பண்ணும்போது, தங்களுடைய பாவங்களை அங்கீகரிக்கிறார்கள். கர்த்தருடைய சந்நிதியில் பாவநிவாரண பலிகளைச் செலுத்துகிறார்கள். தாங்கள் கர்த்தரை சார்ந்து ஜீவிப்பதை அங்கீகாரம்பண்ணுகிறார்கள். கர்த்தருடைய உதவியில்லாமல் தங்களால் ஒன்றும் செய்ய முடியாது என்பதை இஸ்ரவேல் புத்திரர் அங்கீகரித்து, கர்த்தருடைய சந்நிதியில் அழுது ஜெபம்பண்ணுகிறார்கள்.

இஸ்ரவேலர் கர்த்தருடைய சந்நிதியில் அழுது ஜெபித்து, உபவாசித்து, பலிகளை செலுத்தி, கர்த்தரிடத்தில் விசாரிக்கிறார்கள். அந்நாட்களில் ஆரோனின் குமாரனாகிய எலெயாசாரின் மகன் பினெகாஸ் கர்த்தருடைய சந்நிதியில் நிற்கிறார்.

இஸ்ரவேல் புத்திரர், கர்த்தருடைய சமுகத்திலே, "எங்கள் சகோதரராகிய பென்யமீன் புத்திரரோடே பின்னும் யுத்தம்பண்ணப் புறப்படலாமா புறப்படலாகாதா" என்று விசாரிக்கிறார்கள். அப்பொழுது கர்த்தர்: "போங்கள்; நாளைக்கு அவர்களை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன்" (நியா 20:28) என்று சொல்லுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பு இரண்டு தரம் கர்த்தரிடத்தில் விசாரித்தார்கள். அப்போது கர்த்தர், "யூதா முந்திப்போகவேண்டும்" (நியா 20:18) என்றும், "அவர்களுக்கு விரோதமாய்ப் போங்கள்" (நியா 20:23) என்றும் பதில் கொடுத்தார். இஸ்ரவேல் புத்திரருக்கு யுத்தத்திலே வெற்றி கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லவில்லை. ஆனாலும் இப்போதோ, கர்த்தர் அவர்களிடம், "போங்கள், நாளைக்கு அவர்களை உங்கள் கையிலே ஒப்புக்கொடுப்பேன்" (நியா 20:28) என்று சொல்லுகிறார். இஸ்ரவேல் புத்திரருக்கு பென்யமீன் புத்திரர்மீது வெற்றி கிடைக்கும் என்று கர்த்தர் வாக்குப்பண்ணுகிறார்.

இஸ்ரவேல் புத்திரர் இதற்கு முன்பு தங்களுடைய சுயபலத்தை நம்பினார்கள். தங்களுடைய சேனையிலுள்ள திரளான யுத்தவீரரை நம்பினார்கள். ஆகையினால் அவர்கள் யுத்த தந்திரங்களையோ, யுத்தவியூகங்களையோ வகுப்பதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை. தங்களுடைய சேனையின் திரளான எண்ணிக்கையைப் பார்த்து, பென்யமீன் புத்திரர் பயந்து ஓடிப்போவார்கள் என்று நினைத்தார்கள்.

ஆனால், பென்யமீன் புத்திரரோ இஸ்ரவேலருக்கு பயந்து ஓடவில்லை. அவர்கள் முதலாம் நாளிலே, இஸ்ரவேலரில் 22,000 பேரையும், இரண்டாம் நாளிலே 18,000 பேரையும் வெட்டி சங்காரம்பண்ணினார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் மூன்றாம் முறையாக, பென்யமீனருக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போகிறார்கள். இப்போது அவர்கள் தங்களுடைய சுயபலத்தையும், சேனையின் திரளான எண்ணிக்கையையும் நம்பாமல், கர்த்தருடைய கிருபையையும், அவருடைய வார்த்தையையும் நம்புகிறார்கள். பென்யமீனரோடு யுத்தம்பண்ணுவதற்கு, யுத்தவியூகங்களையும் ஜெபத்தோடு வகுக்கிறார்கள்.

யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரரின் கைகள் வலுவாகயிருந்தால்தான், அவர்களால் யுத்தத்திலே ஜெயிக்க முடியும். அதே வேளையில் தங்கள் கைகளை எப்படி பயன்படுத்த வேண்டும் என்னும் யுத்த வியூங்களும் அவர்களுக்கு தெரிந்திருக்கவேண்டும். இஸ்ரவேல் புத்திரரிடத்தில், திரளான யுத்தவீரர் இருந்தாலும், அவர்களை தங்களுடைய யுத்தவியூகங்களின்படி பயன்படுத்தவேண்டும். யுத்தம்பண்ணப்போகும்போது, எந்தவிதமான கட்டுப்பாடும், திட்டங்களும் இல்லாமல் மொத்தமாகப் போனால், யுத்தக்களத்திலே மொத்தமாக அழிவு வரும்.

இஸ்ரவேல் புத்திரர் கிபியாவைச்சுற்றிலும் பதிவிடையாட்களை வைக்கிறார்கள். அவர்கள் மூன்றாம்நாளிலே பென்யமீன் புத்திரருக்கு விரோதமாய்ப் போய், முன் இரண்டுதரம் செய்ததுபோல, கிபியாவுக்குச் சமீபமாய்ப் போருக்கு அணிவகுத்து நிற்கிறார்கள் (நியா 20:29,30).

இஸ்ரவேல் புத்திரருக்கு பதிவிடை வைத்து யுத்தம்பண்ணுவது, புதுமையான யுத்தவியூகமல்ல. அவர்களுடைய முற்பிதாக்கள் ஆயி பட்டணத்தைப் பிடித்தபோது, பதிவிடை வைத்து அதைப் பிடித்தார்கள் (யோசு 8-ஆவது அதிகாரம்).

இஸ்ரவேல் புத்திரரின் சேனையின் ஒரு பகுதி, கிபியாவுக்கு சமீபமாய் போருக்கு அணிவகுத்து நிற்கிறார்கள். அவர்கள் கிபியாவின் கோட்டை வாயிலை நோக்கி முன்னேறிப்போகிறார்கள். பென்யமீன் புத்திரரோ கிபியாவின் கோட்டைக்குள்ளே யுத்தம்பண்ணுவதற்கு ஆயத்தமாயிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரருடைய சேனையின் ஒரு பகுதி, கிபியாவுக்கு சமீபமாய் போருக்கு அணிவகுத்து நின்றபோது, பென்யமீன் புத்திரர் ஜனத்திற்கு விரோதமாய்ப் புறப்பட்டுப் பட்டணத்தை விட்டு, அப்பாலே வருகிறார்கள். பென்யமீனர் வெளியிலே பெத்தேலுக்கும் கிபியாவுக்கும் போகிற இரண்டு வழிகளில் இஸ்ரவேல் ஜனத்தில் ஏறக்குறைய முப்பதுபேரை, முதல் இரண்டுதரம் செய்ததுபோல, வெட்டவும் கொல்லவும் தொடங்குகிறார்கள் (நியா 20:31). "முன்போல நமக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்கள்" என்று பென்யமீன் புத்திரர் சொல்லுகிறார்கள்.

பென்யமீன் புத்திரருக்கு, இஸ்ரவேல் புத்திரரின் யுத்தவியூகம் தெரியாது. இஸ்ரவேல் புத்திரர் கிபியாவைச் சுற்றிலும் பதிவிடை ஆட்களை வைத்திருக்கிறார்கள் என்பது தெரியாமலேயே, பென்யமீனர் கிபியா பட்டணத்தைவிட்டு வெளியே வந்து, இஸ்ரவேல் ஜனத்தை துரத்திக்கொண்டு ஓடுகிறார்கள். இது இஸ்ரவேல் புத்திரரின் யுத்தவியூகம். இஸ்ரவேல் புத்திரரோ: "அவர்களைப் பட்டணத்தை விட்டு அப்பாலேயிருக்கிற வழிகளிலே வரப்பண்ணும்படிக்கு, நாம் ஓடவேண்டும்" என்று சொல்லியிருந்தார்கள் (நியா 20:32).

அப்பொழுது இஸ்ரவேல் மனுஷர் எல்லாரும் தங்கள் ஸ்தானத்திலிருந்து எழும்பி, பாகால்தாமாரிலே யுத்தத்திற்கு அணிவகுத்து நிற்கிறார்கள்; இஸ்ரவேலரில் கிபியாவின் பள்ளத்தாக்கிலே பதிவிருந்தவர்கள் தங்கள் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு, அவர்களில் எல்லா இஸ்ரவேலிலும் தெரிந்துகொள்ளப்பட்ட பதினாயிரம்பேர் கிபியாவுக்கு எதிரே வருகிறார்கள்; யுத்தம் பலக்கிறது; ஆனாலும் தங்களுக்கு விக்கினம் நேரிட்டது என்று பென்யமீனர் அறியாதிருக்கிறார்கள் (நியா 20:33,34).

கர்த்தர் இஸ்ரவேலுக்கு முன்பாகப் பென்யமீனை முறிய அடிக்கிறார்; அந்நாளிலே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனிலே பட்டயம் உருவுகிற ஆட்களாகிய இருபத்தையாயிரத்து நூறுபேரைச் சங்கரிக்கிறார்கள் (நியா 20:35).

இஸ்ரவேலர் கிபியாவுக்கு அப்பாலே வைத்த பதிவிடையை நம்பியிருந்தபடியினாலே, பென்யமீனருக்கு இடம் கொடுக்கிறார்கள்; அதினாலே அவர்கள் முறிய அடிக்கப்படுகிறார்கள் என்று பென்யமீன் புத்திரருக்குக் காணப்படுகிறது. அப்பொழுது பதிவிடையிருந்தவர்கள் தீவிரமாய்க் கிபியாவின்மேல் பாய்ந்து பரவி, பட்டணத்தில் இருக்கிறவர்களெல்லாரையும் பட்டயக்கருக்கினால் வெட்டுகிறார்கள் (நியா 20:36,37).

பட்டணத்திலிருந்து மகா பெரிய புகையை எழும்பப்பண்ணுவதே இஸ்ரவேலருக்கும் பதிவிடைக்காரருக்கும் குறிக்கப்பட்ட அடையாளமாயிருக்கிறது. ஆகையால் இஸ்ரவேல் யுத்தத்திலே பின்வாங்கினபோது, பென்யமீனர்: "முந்தின யுத்தத்தில் நடந்ததுபோல, அவர்கள் நமக்கு முன்பாக முறிய அடிக்கப்படுகிறார்களே" என்று சொல்லி, இஸ்ரவேலரில் ஏறக்குறைய முப்பதுபேரை வெட்டவும் கொல்லவும் தொடங்குகிறார்கள் (நியா 20:38,39).

கிபியா பட்டணத்திலிருந்து புகையானது ஸ்தம்பம்போல உயர எழும்பினபோது, பென்யமீனர் பின்னாகப் பார்க்கிறார்கள்; இதோ, பட்டணத்தின் அக்கினிஜுவாலை வானபரியந்தம் எழும்பிற்று. அப்பொழுது இஸ்ரவேலர் திரும்பிக்கொள்கிறார்கள்; பென்யமீன் மனுஷரோ, தங்களுக்கு விக்கினம் நேரிட்டதைக் கண்டு திகைக்கிறார்கள். பென்யமீனர் இஸ்ரவேல் புத்திரரைவிட்டு, வனாந்தரத்திற்குப் போகிற வழிக்கு நேராய்த் திரும்பி ஓடிப்போகிறார்கள்; ஆனாலும் யுத்தம் அவர்களைத் தொடருகிறது; பட்டணங்களில் இருந்த இஸ்ரவேல் புத்திரரும், தங்கள் நடுவே அகப்பட்ட பென்யமீனரை கொன்றுபோடுகிறார்கள் (நியா 20:40-42).

இப்படியே இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனரை வளைந்துகொண்டு துரத்தி, கிபியாவுக்குக் கிழக்குப்புறமாக வருமட்டும், அவர்களை லேசாய் மிதித்துப்போடுகிறார்கள். இதினால் பென்யமீனரிலே பதினெண்ணாயிரம்பேர் விழுகிறார்கள்; அவர்களெல்லாரும் பலவான்களாயிருக்கிறார்கள் (நியா 20:43,44).

பென்யமீனரில் மற்றவர்கள் விலகி, வனாந்தரத்தில் இருக்கிற ரிம்மோன் கன்மலைக்கு ஓடிப்போகிறார்கள்; இஸ்ரவேலர், பென்யமீனரில் இன்னும் ஐயாயிரம்பேரை வழிகளிலே கொன்று, மற்றவர்களைக் கீதோம்மட்டும் பின்தொடர்ந்து, அவர்களில் இரண்டாயிரம் பேரை வெட்டிப்போடுகிறார்கள். இவ்விதமாய் பென்யமீனரில் அந்நாளில் விழுந்தவர்களெல்லாரும் இருபத்தையாயிரம்பேர்; அவர்களெல்லாரும் பட்டயம் உருவுகிற பலவான்களாயிருக்கிறார்கள் (நியா 20:45,46).

பென்யமீனரில் அறுநூறுபேர் திரும்பிக்கொண்டு ஓடி, வனாந்தரத்திலிருக்கிற ரிம்மோன் கன்மலைக்குப் போய், ரிம்மோன் கன்மலையிலே நாலு மாதம் இருக்கிறார்கள் (நியா 20:47).

இஸ்ரவேலரோ பென்யமீன் புத்திரர் மேல் திரும்பி, பட்டணத்தில் மனுஷர் தொடங்கி மிருகங்கள் மட்டும் கண்டவைகள் எல்லாவற்றையும் பட்டயக்கருக்கினால் வெட்டி, கண்ட பட்டணங்களையெல்லாம் அக்கினியால் கொளுத்திப் போடுகிறார்கள் (நியா 20:48).

பென்யமீனரால் இஸ்ரவேல் புத்திரருக்கு விரோதமாய் யுத்தம்பண்ண முடியவில்லை. முதல் இரண்டு நாளிலும் பென்யமீனர் இஸ்ரவேலுக்கு விரோதமாய், திடமனதோடு, தைரியமாய் யுத்தம்பண்ணினார்கள். ஆனால் மூன்றாம் நாளிலோ, பென்யமீனர் இஸ்ரவேலருக்கு பயந்து ஓடுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்தில் ஜெபம்பண்ணி, யுத்தவியூகங்களை வகுத்தார்கள். தாங்கள் வகுத்த வியூகங்களின் பிரகாரம் இஸ்ரவேல் புத்திரர் யுத்தம்பண்ணுகிறார்கள். கர்த்தரே இஸ்ரவேல் புத்திரருக்கு ஞானத்தையும், பலத்தையும் கொடுத்திருக்கிறார். இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் புத்திரர் எல்லோரையும் சுற்றி வளைத்து சங்காரம்பண்ணுகிறார்கள்.

பென்யமீன் புத்திரர் இஸ்ரவேலருக்கு விரோதமாக தோற்று ஓடிப்போகும்போது, தங்களுடைய பாவங்களினாலும், குற்றவுணர்வுகளினாலும் அவர்களுடைய இருதயம் சோர்ந்துபோகிறது. இஸ்ரவேல் புத்திரரின் கைகள் பென்யமீனருக்கு விரோதமாய்த் திரும்பியிருக்கிறது.

இஸ்ரவேல் புத்திரருக்கும், பென்யமீனருக்கும் நடைபெற்ற யுத்தத்திலே, முதல் இரண்டு நாள் யுத்தத்தில் பென்யமீனருக்கு வெற்றி கிடைத்தது. மூன்றாம் நாள் யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்பாக, தங்களுக்கு எப்போதும் போல வெற்றி கிடைக்கும் என்று பென்யமீனர் நம்பிக்கையோடிருந்தார்கள். ஆனால் பென்மீனருக்கு மூன்றாம் நாளிலே வெற்றி கிடைக்கவில்லை.

பென்யமீனரைப்போலவே, இந்தப் பிரபஞ்சத்திலே, துன்மார்க்கர் சிறிதுகாலம் செழித்திருக்கிறார்கள். துன்மார்க்கருடைய கைகளின் கிரியைகளும், பிரயாசங்களும் அவர்களுக்கு நன்மைகளையும் வெற்றிகளையும் தருகிறது. ஆனால் துன்மார்க்கருக்கு வரும் நன்மைகள் அவர்களுக்கு நிலைத்திருக்காது. கர்த்தர் அவர்களுடைய வெற்றிகளைத் தோல்வியாக மாற்றுவார். பென்யமீனருக்கு ஆரம்பத்திலே வெற்றி கிடைத்தது. ஆனால் முடிவிலே தோல்வி உண்டாயிற்று. துன்மார்க்கரின் சமாதானமும், சந்தோஷமும் நிலைத்திருப்பதில்லை.

இஸ்ரவேல் புத்திரர் கிபியாவுக்கு விரோதமாக, அந்தப் பட்டணத்தைச் சுற்றிலும் பதிவிடை இருக்கிறார்கள். ஆனால் பென்யமீனருக்கு இஸ்ரவேலரின் பதிவிடையைப்பற்றி ஒன்றும் தெரியவில்லை. இஸ்ரவேலர் பென்யமீனரில் 18,000 பேரை சங்காரம்பண்ணுகிறார்கள். இவர்களெல்லோரும் பலவான்கள். ஆனாலும் தங்களுடைய பலவான்கள் செத்துப்போனது பென்யமீனருக்குத் தெரியவில்லை. துன்மார்க்கருக்கு தீங்கு சமீபமாய் வரும். ஆனாலும் அவர்கள் அதை அறியாதிருப்பார்கள்.

மூன்றாம் நாள் யுத்தத்திலே, இஸ்ரவேல் புத்திரர் அதிக தைரியத்தோடும், புத்தியோடும் யுத்தம்பண்ணுகிறார்கள். அவர்கள் எப்படித்தான் யுத்தம்பண்ணினாலும், ஜெயம் கர்த்தரிடத்திலிருந்தே வரும். யுத்தம் கர்த்தருடையது. ஜெயமும் கர்த்தருடையது. கர்த்தர் பென்யமீனருக்கு விரோதமாக யுத்தம்பண்ணியபோது, இஸ்ரவேல் புத்திரர் பென்யமீனரை வளைந்து கொண்டு துரத்தி, அவர்களை லேசாய் மிதித்துப்போடுகிறார்கள்.

பாவிகள் தங்களுடைய ஆத்துமாக்களுக்கு விரோதமாகப் பாவம் செய்கிறார்கள். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிறவர்களுக்கு கர்த்தருடைய நீதியான தீர்ப்பின் பிரகாரம் தண்டனை கொடுக்கப்படும். கிபியாவின் மனுஷர் கர்த்தருடைய வார்த்தைக்கும், அவருடைய பிரமாணத்திற்கும் எதிர்த்து நின்றார்கள். கிபியா பட்டணம் அக்கினியிலே அழிந்துபோயிற்று.

கிபியாவின் மனுஷர் துணிகரமாய்ப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய இருதயத்திலே அக்கிரம சிந்தைகள் நிரம்பியிருந்தது. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் நடுவே அகப்பட்ட கிபியாவின் மனுஷர் எல்லோரையும் கொன்றுபோடுகிறார்கள். தப்பித்து ஓடின கிபியாவின் மனுஷரும், இஸ்ரவேல் புத்திரருடைய பட்டயத்தினால் சங்காரம்பண்ணப்படுகிறார்கள்.

பென்யமீனரில், தப்பித்து ஓடாமல் கிபியாவிலேயே தங்கியிருந்தவர்களையும் இஸ்ரவேலர் கொன்றுபோடுகிறார்கள். கிபியாவின் பட்டணத்திற்கு வெளியே இருந்த பென்யமீனரும், உள்ளே இருந்த பென்யமீனரும் சங்கரமானார்கள். பென்யமீன் புத்திரரிலே, அறுநூறு பேரை தவிர, மற்ற எல்லோரும் செத்துப்போனார்கள்.

பென்யமீனரில், இஸ்ரவேலரின் பட்டயத்திற்குத் தப்பின அறுநூறுபேர் திரும்பிக்கொண்டு ஓடி, வனாந்தரத்திலிருக்கிற ரிம்மோன் கன்மலைக்குப் போய், ரிம்மோன் கன்மலையிலே நாலு மாதம் இருக்கிறார்கள் (நியா 20:47).

ஓசியா தீர்க்கதரிசி கிபியாவைப்பற்றி தன்னுடைய புஸ்தகத்தில் இரண்டு சமயங்களில் சொல்லியிருக்கிறார்.

"கிபியாவின் நாட்களில் நடந்தது போல, அவர்கள் தங்களை மிகவும் கெடுத்துக்கொண்டார்கள்; அவர்களுடைய அக்கிரமத்தை அவர் நினைப்பார். அவர்களுடைய பாவங்களை விசாரிப்பார்" (ஓசி 9:9)

"இஸ்ரவேலே, நீ கிபியாவின் நாட்கள் முதல் பாவஞ்செய்துவந்தாய்; கிபியாவிலே அக்கிரமக்காரர்மேல் வந்த யுத்தம் தங்களைக் கிட்டுவதில்லையென்று அந்த நிலையிலே நிற்கிறார்கள்" (ஓசி 10:9).

21 அதிகாரம்

இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் மனுஷரோடு யுத்தம்பண்ணி, அவர்களை சங்காரம்பண்ணினார்கள். பென்யமீனரில் அறுநூறு பேர் மாத்திரம் ரிம்மோன் கன்மலையிலே ஒளிந்திருக்கிறார்கள். பென்யமீனரில் மற்றவர்கள் எல்லோரும் யுத்தத்திலே செத்துப்போனார்கள்.

இஸ்ரவேலர் மிஸ்பாவிலே இருக்கும்போது: நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள் (நியா 21:1). பென்யமீன் கோத்திரம் குறைந்துபோவதையும், அழிந்துபோவதையும் நினைத்து, இஸ்ரவேல் புத்திரர் தேவசந்நிதியில் சத்தமிட்டு அழுகிறார்கள் (நியா 21:1-4,6,15).

பென்யமீன் புத்திரரில், உயிரோடிருக்கிற அறுநூறு பேருக்கு மனைவிகள் கிடைக்கும்படி இஸ்ரவேல் புத்திரர் இரண்டு காரியங்களை யோசிக்கிறார்கள்.

கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்திலே புருஷரை அறியாத நானூறு கன்னிப்பெண்களை பென்யமீன் புத்திரருக்கு மனைவிகளாகக் கொடுக்கிறார்கள் (நியா 21:5,7-14).

பென்யமீன் புத்திரரில், மனைவிகளில்லாமல், மீதமுள்ளவர்களுக்கு சீலோவின் குமாரத்திகளை மனைவிகளாகக் கொடுக்கிறார்கள் (நியா 21:16-25).

நானூறு கன்னிப்பெண்கள் நியா 21:1-15

நியா 21:1. இஸ்ரவேலர் மிஸ்பாவிலே இருக்கும்போது: நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருந்தார்கள்.

நியா 21:2. ஆகையால் ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே தேவசந்நிதியில் சாயங்காலமட்டும் இருந்து, சத்தமிட்டு, மிகவும் அழுது:

நியா 21:3. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்துபோகத்தக்கதாக இஸ்ரவேலில் இந்தக் காரியம் நேரிட்டது என்ன என்றார்கள்.

நியா 21:4. மறுநாளிலே, ஜனங்கள் காலமே எழுந்திருந்து, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்தினார்கள்.

நியா 21:5. கர்த்தருடைய சந்நிதியில் மிஸ்பாவுக்கு வராதவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன் என்று அவர்கள் பெரிய ஆணையிட்டிருந்தபடியால், இஸ்ரவேல் புத்திரர்: கர்த்தருடைய சந்நிதியில் சபைகூடினபோது, இஸ்ரவேலுடைய எல்லாக் கோத்திரங்களிலுமிருந்து வராதேபோனவர்கள் யார் என்று விசாரித்தார்கள்.

நியா 21:6. இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரராகிய பென்யமீனரை நினைத்து, மனஸ்தாபப்பட்டு: இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் அறுப்புண்டுபோயிற்றே.

நியா 21:7. மீந்திருப்பவர்களுக்கு மனைவிகள் கிடைக்கும்படி, நாம் அவர்களுக்காக என்னசெய்யலாம்? நம்முடைய குமாரத்திகளில் ஒருத்தியையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று நாம் கர்த்தர்மேல் ஆணையிட்டுக்கொண்டோமே.

நியா 21:8. இஸ்ரவேலின் கோத்திரங்களில் மிஸ்பாவிலே கர்த்தருடைய சந்நிதியில் வராதேபோன யாதொருவர் உண்டோ என்று விசாரித்தார்கள்; அப்பொழுது கீலேயாத்திலுள்ள யாபேசின் மனுஷரில் ஒருவரும் பாளயத்தில் சபைகூடினபோது வரவில்லை.

நியா 21:9. ஜனங்கள் இலக்கம் பார்க்கப்பட்டபோது, கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவரும் இருந்ததில்லை.

நியா 21:10. உடனே சபையார் பலவான்களில் பன்னீராயிரம்பேரை அங்கே அழைத்து: நீங்கள் போய், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை ஸ்திரீகளோடும் பிள்ளைகளோடும் பட்டயக்கருக்கினால் வெட்டுங்கள்.

நியா 21:11. சகல ஆண்பிள்ளைகளையும், புருஷரை அறிந்த சகல பெண்பிள்ளைகளையும் சங்கரிக்கக்கடவீர்கள் என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினார்கள்.

நியா 21:12. இவர்கள் கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்திலே புருஷரை அறியாத நானூறு கன்னிப்பெண்களைக் கண்டுபிடித்து, அவர்களைக் கானான்தேசமான சீலோவிலிருக்கிற பாளயத்திற்குக் கொண்டுவந்தார்கள்.

நியா 21:13. அப்பொழுது ரிம்மோன் கன்மலையிலிருக்கிற பென்யமீன் புத்திரரோடே பேசவும், அவர்களுக்குச் சமாதானம் கூறவும், சபையார் எல்லாரும் மனுஷரை அனுப்பினார்கள்.

நியா 21:14. அப்படியே அக்காலத்தில் பென்யமீனர் திரும்ப வந்தார்கள்; கீலேயாத்திலிருக்கிற யாபேசின் ஸ்திரீகளில் உயிரோடே வைத்த பெண்களை அவர்களுக்குக் கொடுத்தார்கள்; அப்படிச் செய்தும் அவர்கள்தொகைக்குக் காணாதிருந்தது.

நியா 21:15. இஸ்ரவேல் கோத்திரங்களிலே கர்த்தர் ஒரு பிளப்பை உண்டாக்கினார் என்று ஜனங்கள் பென்யமீனருக்காக மனஸ்தாபப்பட்டார்கள்.

கிபியாவின் மனுஷர் லேவியனுடைய மறுமனையாட்டியை இலச்சையாய் நடத்தி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தார்கள். அவர்களுடைய துன்மார்க்கத்திற்கு தண்டனை கொடுக்கும் வண்ணமாக, இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் புத்திரரோடு யுத்தம்பண்ணினார்கள். இஸ்ரவேலர், மிஸ்பாவிலே பென்யமீனருக்கு விரோதமாக ஒருமனப்பட்டு, ஏகமாகக் கூடிவருகிறார்கள்.

இஸ்ரவேலர் மிஸ்பாவிலே இருக்கும்போது: நம்மில் ஒருவனும் தன் குமாரத்தியைப் பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை என்று ஆணையிட்டிருக்கிறார்கள் (நியா 21:1).

பென்யமீன் புத்திரர் எல்லோரும் மொத்தமாய் சங்காரமாகவில்லை. அவர்களில் அறுநூறு பேர் ரிம்மோன் கன்மலையிலே நாலுமாதம் ஒளிந்திருக்கிறார்கள். பென்யமீனரில் உயிரோடிருக்கிற இந்த அறுநூறு பேருக்கு, தங்கள் குமாரத்தியை விவாகம்பண்ணிக்கொடுப்பதில்லை என்று, இஸ்ரவேல் புத்திரர் எல்லோருமே ஆணையிட்டிருக்கிறார்கள்.

இப்போது, இஸ்ரவேல் புத்திரர் தாங்கள் இட்ட ஆணையை நினைத்து வேதனைப்படுகிறார்கள். ஜனங்கள் தேவனுடைய வீட்டிற்குப்போய், அங்கே தேவசந்நிதியில் சாயங்காலமட்டும் இருந்து, சத்தமிட்டு, மிகவும் அழுகிறார்கள். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்துபோகத்தக்கதாக இஸ்ரவேலில் இந்தக் காரியம் நேரிட்டது என்ன" (நியா 21:2,3) என்று இஸ்ரவேல் புத்திரர் கர்த்தருடைய சமுகத்திலே அழுது ஜெபிக்கிறார்கள்.

மறுநாளிலே, ஜனங்கள் காலமே எழுந்திருந்து, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்துகிறார்கள் (நியா 21:4).

இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரராகிய பென்யமீனரை நினைத்து, மனஸ்தாபப்படுகிறார்கள். "இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் அறுப்புண்டுபோயிற்றே. மீந்திருப்பவர்களுக்கு மனைவிகள் கிடைக்கும்படி நாம் அவர்களுக்காக என்னசெய்யலாம்? நம்முடைய குமாரத்திகளில் ஒருத்தியையும் அவர்களுக்குக் கொடுப்பதில்லை என்று நாம் கர்த்தர்மேல் ஆணையிட்டுக்கொண்டோமே" (நியா 21:6,7) என்று இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குள் சொல்லிக்கொள்கிறார்கள்.

லேவியனுடைய வழக்கை விசாரிப்பதற்காகவும், இந்தக் காரியத்தை யோசித்து ஆலோசனை பண்ணி, செய்யவேண்டியது இன்னதென்பதை தீர்மானம்பண்ணுவதற்காகவும், இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து, மிஸ்பாவிலே சபையாகக் கூடிவந்திருக்கிறார்கள். கர்த்தருடைய சந்நிதியில் மிஸ்பாவுக்கு வராதவன் நிச்சயமாய்க் கொலை செய்யப்படக்கடவன் என்று அவர்கள் பெரிய ஆணையிட்டிருந்தார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் அனைவரும், கீலேயாத் தேசத்தாரும், மிஸ்பாவிலே, கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து சபையாகக் கூடிவந்திருக்கிறார்கள். ஆனாலும் கீலேயாத்திலுள்ள யாபேசின் மனுஷரில் ஒருவரும் பாளயத்தில் சபை கூடினபோது வரவில்லை (நியா 21:8).

மிஸ்பாவிலே இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் ஏகோபித்து, சபையாகக் கூடிவந்திருக்கிறபோது, "இஸ்ரவேலுடைய எல்லா கோத்திரங்களிலுமிருந்து வராதே போனவர்கள் யார்" (நியா 21:5) என்று விசாரிக்கிறார்கள். அவர்கள் யாபேசிலே கூடியிருக்கிற இஸ்ரவேல் புத்திரரை இலக்கம் பார்க்கிறார்கள். அப்போது கீலேயாத்திலிருக்கிற யாபேசின் குடிகளில் அங்கே ஒருவருமில்லை என்பதை கண்டுகொள்கிறார்கள் (நியா 21:9).

உடனே சபையார் பலவான்களில் பன்னீராயிரம்பேரை அங்கே அழைத்து: "நீங்கள் போய், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளை ஸ்திரீகளோடும் பிள்ளைகளோடும் பட்டயக்கருக்கினால் வெட்டுங்கள். சகல ஆண்பிள்ளைகளையும், புருஷரை அறிந்த சகல பெண்பிள்ளைகளையும் சங்கரிக்கக்கடவீர்கள்" (நியா 21:10,11) என்று அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்புகிறார்கள்.

பலவான்களில் பன்னீராயிரம் பேரும், கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்திலே புருஷரை அறியாத நானூறு கன்னிப்பெண்களைக் கண்டுபிடித்து, அவர்களைக் கானான்தேசமான சீலோவிலிருக்கிற பாளயத்திற்குக் கொண்டுவருகிறார்கள் (நியா 21:12).

இஸ்ரவேல் புத்திரர் மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாகக் கூடிவந்தபோது, அவர்கள் இரண்டு காரியங்களை தீர்மானம்பண்ணுகிறார்கள். அவையாவன: 1. கிபியாவின் மனுஷருக்கு விரோதமாக யுத்தம்பண்ணவேண்டும். 2. தங்களுடைய குமாரத்தியை பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக்கொடுக்கக்கூடாது.

பென்யமீன் கோத்திரத்தை அழித்துப்போடவேண்டும் என்பது இஸ்ரவேல் புத்திரருடைய நோக்கமல்ல. இஸ்ரவேல் புத்திரர் கிபியா மனுஷருடைய துன்மார்க்கத்திற்கு தண்டனை கொடுக்கவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். இஸ்ரவேல் தேசத்தை சுத்தம்பண்ணவேண்டும் என்பது அவர்களுடைய விருப்பம். இதன் நிமித்தமாகவே, பென்யமீனருக்கு தங்களுடைய குமாரத்திகளை விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை என்று தீர்மானம்பண்ணியிருக்கிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் ஏகமாய்க் கூடி தீர்மானித்த பிரகாரம், பென்யமீன் கோத்திரத்தாரை அழித்துப்போடுகிறார்கள். அவர்களுக்கு தங்களுடைய குமாரத்திகளை விவாகம்பண்ணிக்கொடுக்காமல், தங்களுடைய தீர்மானத்தில் உறுதியாயிருக்கிறார்கள். ஆனாலும் இஸ்ரவேல் புத்திரர் தங்கள் சகோதரராகிய பென்யமீனரை நினைத்து மனஸ்தாபப்படுகிறார்கள். இஸ்ரவேலிலே ஒரு கோத்திரம் அறுப்புண்டு போயிற்றே (நியா 21:6) என்று நினைத்து இஸ்ரவேலர் மனம் வேதனைப்படுகிறார்கள்.

கிபியாவின் மனுஷர் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்ததினால், இஸ்ரவேல் புத்திரர் அவர்கள்மீது கோபப்படுகிறார்கள். பென்யமீன் புத்திரருக்கு அழிவு வந்தபோதோ, இஸ்ரவேல் புத்திரரின் கோபம் துக்கமாய் மாறிற்று. தங்கள் சகோதரராகிய பென்யமீனர் அழிந்துபோவதைப் பார்த்து, இஸ்ரவேல் புத்திரர் வருத்தப்படுகிறார்கள். இஸ்ரவேல் கோத்திரத்திலே கர்த்தர் ஒரு பிளப்பை உண்டாக்கினார் என்று இஸ்ரவேல் ஜனங்கள் பென்யமீனருக்காக மனஸ்தாபப்படுகிறார்கள் (நியா 21:6,15).

இஸ்ரவேல் புத்திரர் பாவத்திற்கு விரோதமாக தாங்கள் வைராக்கியமாயிருந்ததற்காக மனஸ்தாபப்படவில்லை. ஆனால் பாவத்தின் விளைவினால் பென்யமீனருக்கு ஏற்பட்டிருக்கிற அழிவைப் பார்த்து இஸ்ரவேலர் மனஸ்தாபப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ண வந்திருந்த ஆயுததாரிகளாகிய பென்யமீனரை மாத்திரம், சங்காரம்பண்ணியிருந்தால், அவர்கள் இவ்வளவு அதிகமாய் மனஸ்தாபப்பட்டிருக்கமாட்டார்கள்.

ஆனால் இஸ்ரவேல் புத்திரரோ பென்யமீனருடைய ஆயுதம் ஏந்தியிராத ஸ்திரீகளையும், பிள்ளைகளையும், மேய்ப்பர்களையும், வயல்வெளிகளிலே வேலை செய்கிறவர்களையும் சங்காரம்பண்ணிவிடுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் பாவத்திற்கு விரோதமான வைராக்கியத்தோடு நல்லது செய்தார்கள். ஆனால் அவர்கள் செய்த நல்ல வேலையை, அளவுக்கு அதிகமாய்ச் செய்து விடுகிறார்கள்.

நம்மிடத்தில் பாவத்திற்கு விரோதமான வைராக்கியம் இருக்கவேண்டும். அந்த வைராக்கியம் நம்முடைய ஆளுகைக்கு கட்டுப்பட்டிருக்கவேண்டும். எந்தவிதமான கட்டுப்பாடுமில்லாமல், ஆவிக்குரிய காரியங்களில் நாம் ஈடுபடுவோமென்றால், விபரீதமான விளைவுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புள்ளது. மனுக்குலத்தை அழிப்பது கர்த்தருடைய சித்தமல்ல.

இந்த உலகத்தில் ஏராளமான யுத்தங்கள் நடைபெற்றிருக்கிறது. யுத்தங்களின் ஆரம்பம் விறுவிறுப்பாகயிருந்தாலும், அதன் முடிவு சோகமாகவே இருக்கும். மனுக்குலத்தை அழித்துப்போடும் எந்தக் காரியமும் கர்த்தருடைய சித்தமாயிருப்பதற்கு வாய்ப்பில்லை.

நாம் வழக்குகளை விசாரிக்கும்போது நியாயமாய் விசாரிக்கவேண்டும். வழக்குகளுக்கு தீர்ப்பு கொடுக்கும்போது நீதியான தீர்ப்பு கொடுக்கவேண்டும். நியாயத்தீர்ப்பில் அன்பும் மனதுருக்கமும் இருக்கவேண்டும். கர்த்தர் மனுக்குலத்தைத் தண்டிக்கும்போது, மனுஷருடைய வேதனையில் அவர் ஒருபோதும் பிரியப்படுகிறவரல்ல. நாமும் மற்றவர்களுடைய வேதனையில் பிரியப்படக்கூடாது.

மனுஷர் தங்களுடைய பாவங்களுக்கு மனந்திரும்பவேண்டும் என்பதே கர்த்தருடைய விருப்பம். நாம் மனுஷர்மீது உண்மையான அன்பு வைத்திருப்போமென்றால், அவர்கள் அழிந்துபோவதைப் பார்த்து சந்தோஷப்படமாட்டோம். அவர்கள் தங்கள் பாவங்களுக்கு மனந்திரும்பி, நல்லவர்களாக ஜீவிப்பதைப் பார்த்து மகிழ்ச்சியாயிருப்போம்.

நம்முடைய கோபத்தினாலே நாம் சில கோபவார்த்தைகளைப் பேசிவிடலாம். கோபத்திலே நாம் அழிவுக்கேதுவான காரியங்களைக்கூட செய்துவிடலாம். அதையெல்லாம் அமைதியாயிருக்கும்போது சிந்தித்துப் பார்த்தால், நமக்கு வருத்தமும் வேதனையும் உண்டாகும். கோபமாக பேசியிருக்கக்கூடாது என்றும், கோபத்திலே அதை அப்படி செய்திருக்கக்கூடாது என்றும் நம்முடைய சமாதானத்திலே நாம் நினைப்போம்.

இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் கோத்திரத்தாரின் அழிவுக்காக மனஸ்தாபப்படுகிறார்கள். இஸ்ரவேலிலே ஒரு கோத்திரம் அறுப்புண்டுபோயிற்று என்று நினைத்து வேதனைப்படுகிறார்கள். இஸ்ரவேல் புத்திரர் அனைவரும் மிஸ்பாவிலே கர்த்தருக்கு முன்பாக ஏகோபித்து சபையாகக் கூடிவந்திருக்கிறார்கள். இஸ்ரவேலர் கர்த்தருடைய சமுகத்திலே, தங்களுடைய சந்தேகங்களையும், ஆலோசனைகளையும், கரிசனைகளையும், மனஸ்தாபங்களையும் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் எல்லா கோத்திரத்தாரும் கர்த்தருடைய சமுகத்திற்கு முன்பாக நிற்கும்போது அங்கே ஒரு கோத்திரம் மாத்திரம் அவர்களோடு கூடயில்லை. பென்யமீன் கோத்திரத்தார், மற்ற இஸ்ரவேல் கோத்திரத்தாரோடு அங்கே இல்லை. வலதுகையின் குமாரனாகிய பென்யமீன் இப்போது வருத்தத்தின் குமாரனாயிருக்கிறான்.

இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய வருத்தத்தை கர்த்தரிடத்தில் சொல்லுகிறார்கள். "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, இன்று இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் குறைந்துபோகத்தக்கதாக இஸ்ரவேலில் இந்தக் காரியம் நேரிட்டது என்ன" (நியா 21:3) என்று இஸ்ரவேலர் கர்த்தரிடத்தில் கேட்கிறார்கள்.

மறுநாளிலே, ஜனங்கள் காலமே எழுந்திருந்து, அங்கே ஒரு பலிபீடத்தைக் கட்டி, சர்வாங்க தகனபலிகளையும் சமாதான பலிகளையும் செலுத்துகிறார்கள் (நியா 21:4). இஸ்ரவேல் புத்திரர் தங்களுடைய பாவத்தை நிவிர்த்தி பண்ணுவதற்காகவும், தங்கள் மதியீனத்தை அகற்றுவதற்காகவும், யுத்தத்திலே தங்களுக்குகிடைத்த வெற்றிக்காக கர்த்தருக்கு நன்றி சொல்லுவதற்காகவும், தங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கிற பிரச்சனையைத் தீர்த்து வைப்பதற்கு தங்களுக்கு தெய்வீக கிருபை கிடைக்கவேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சர்வாங்க தகனபலிகளையும், சமாதான பலிகளையும், தாங்கள் கட்டின பலிபீடத்தின்மீது செலுத்துகிறார்கள்.

நம்மிடத்தில் எவ்வளவு துக்கங்கள் இருந்தாலும், பாரங்கள் இருந்தாலும், அவையெல்லாவற்றையும் கர்த்தருடைய பாதபடியிலே இறக்கி வைத்துவிடவேண்டும். நம்முடைய கஷ்டங்களையும், கவலைகளையும் கர்த்தருடைய சித்தத்திற்கு ஒப்புக்கொடுக்கவேண்டும்.

இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் கோத்திரத்தாருக்காக மனஸ்தாபப் படுகிறார்கள். அவர்களில் அறுநூறு பேரை தவிர மற்றவர்கள் எல்லோருமே யுத்தத்திலே சங்காரமானார்கள். உயிரோடிருக்கிற அறுநூறுபேரும், வனாந்தரத்திலிருக்கிற ரிம்மோன் கன்மலைக்குப்போய், அந்தக் கன்மலையிலே, இஸ்ரவேல் புத்திரருக்கு பயந்து நாலு மாதமாக இருக்கிறார்கள் (நியா 20:47).

இஸ்ரவேல் புத்திரர் ரிம்மோன் மலையிலே இருக்கிற பென்யமீன் புத்திரரோடு சமாதான உடன்படிக்கை பண்ணவேண்டுமென்று தீர்மானம்பண்ணுகிறார்கள். அப்பொழுது ரிம்மோன் கன்மலையிலிருக்கிற பென்யமீன் புத்திரரோடே பேசவும், அவர்களுக்குச் சமாதானம் கூறவும், சபையார் எல்லாரும் மனுஷரை அனுப்புகிறார்கள்.

பென்யமீன் மனுஷர் தங்களுடைய சகோதரர் என்றும், அவர்களை தங்களுடைய சகோதரராக ஏற்றுக்கொள்வதாகவும், அவர்களை தங்கள் சத்துருக்களாகப் பாவித்து, அவர்களுக்கு விரோதமாக யுத்தம்பண்ணப்போவதில்லை என்றும் ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லியனுப்புகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரர் பென்யமீன் புத்திரர்மீது கரிசனையோடிருக்கிறார்கள். தங்களுடைய குமாரத்திகளை பென்யமீனருக்கு விவாகம்பண்ணிக் கொடுப்பதில்லை என்று இஸ்ரவேலர் ஆணையிட்டிருந்தாலும், பென்யமீனருடைய விவாகக்காரியங்களைக் குறித்து இஸ்ரவேலர் கரிசனையோடிருக்கிறார்கள். இஸ்ரவேலர் பென்யமீனருக்காக, கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளிடத்தில் புருஷரை அறியாத நானூறு கன்னிப்பெண்களைக் கண்டுபிடித்து, அவர்களை சீலோவிலிருக்கிற பாளயத்திற்கு கொண்டு வந்திருக்கிறார்கள்.

நானூறு கன்னிப்பெண்களையும் பென்யமீனருக்கு ஆயத்தம்பண்ணின பின்பு, அவர்களுக்கு சமாதானம் கூற இஸ்ரவேல் புத்திரர் மனுஷரை அனுப்புகிறார்கள். அவர்களுடைய சமாதான வார்த்தைகளைக் கேட்டு பென்யமீனர் திரும்ப வருகிறார்கள்; இஸ்ரவேலர் கீலேயாத்திலிருக்கிற யாபேசின் ஸ்திரீகளில் உயிரோடே வைத்த பெண்களை பென்யமீனருக்குக் கொடுக்கிறார்கள்; அப்படிச் செய்தும் பென்யமீனரின் தொகைக்குக் காணாதிருக்கிறது (நியா 21:14).

இஸ்ரவேலிலே பென்யமீன் கோத்திரம் அறுப்புண்டு போய்விடக்கூடாது. அந்தக் கோத்திரம் மறுபடியும் கட்டியெழுப்பப்பட வேண்டும். பென்யமீன் கோத்திரத்தை மறுபடியும் கட்டியெழுப்பவேண்டுமென்றால், பென்யமீனரில் மீதியாயிருக்கிற மனுஷருக்கு விவாகம்பண்ணி வைக்கவேண்டும். பென்யமீனர் ரிம்மோன் கன்மலையிலே இஸ்ரவேலருக்கு பயந்து, தங்களை ஒளித்துக்கொண்டிருக்கிறார்கள். இஸ்ரவேலர் பென்யமீனரைக் கவனிக்காமல் விட்டுவிட்டால், அவர்கள் அங்கேயே செத்துப்போவார்கள். பென்யமீன் கோத்திரம் முழுவதுமாய் அழிந்துபோகும்.

பென்யமீன் புத்திரரை ரிம்மோன் கன்மலையிலிருந்து அழைத்து வந்து, அவர்களுக்கு கன்னிப்பெண்களை விவாகம் செய்துகொடுத்தால், அவர்களுடைய சந்ததி பெருகும். இஸ்ரவேல் புத்திரரிடத்தில் நானூறு கன்னிப்பெண்கள் இருக்கிறார்கள். பென்யமீனரோ அறுநூறு பேராயிருக்கிறார்கள். பென்யமீனரில் நானூறு பேருக்கு, கீலேயாத்திலிருந்து கொண்டு வரப்பட்டிருக்கிற நானூறு கன்னிப்பெண்களை விவாகம் செய்து கொடுக்கிறார்கள். இன்னும் இருநூறு பென்யமீனருக்கு விவாகம்பண்ணி வைக்கவேண்டும்.

இந்த விவாகத்தின் மூலமாக பென்யமீனருக்கும் கீலேயாத்திலுள்ள யாபேசின் குடிகளுக்கும் புதிய உறவு முறை உண்டாயிற்று. பென்யமீன் கோத்திரத்தானாகிய சவுல் கீலேயாத்திலுள்ள யாபேசைக் குறித்து மிகுந்த கரிசனையோடிருந்தார். சவுலின் காலத்திலே கீலேயாத்திலுள்ள யாபேசிலே புதிய குடும்பங்கள் குடியேறின போதிலும், சவுல் அந்த ஊரின்மீது மிகுந்த கரிசனையோடிருந்தார்.

“அதற்கு யாபேசின் மூப்பர்கள்: நாங்கள் இஸ்ரவேல் நாடெங்கும் ஸ்தானாபதிகளை அனுப்பும்படி, ஏழுநாள் எங்களுக்குத் தவணைகொடும், எங்களை ரட்சிப்பார் இல்லாவிட்டால், அப்பொழுது உம்மிடத்தில் வருவோம் என்றார்கள். அந்த ஸ்தானாபதிகள் சவுலின் ஊராகிய கிபியாவிலே வந்து, ஜனங்களின் காதுகேட்க அந்தச் செய்திகளைச் சொன்னார்கள்; அப்பொழுது ஜனங்களெல்லாரும் சத்தமிட்டு அழுதார்கள்” (1சாமு 11:3,4).

சீலோவின் குமாரத்திகள்
நியா 21:16-25

நியா 21:16. பென்யமீன் கோத்திர ஸ்திரீகள் அழிந்தபடியினாலே, மீதியான மற்றப்பேர்களுக்கும் மனைவிகள் கிடைக்கும்படி, என்னசெய்யலாம் என்று சபையின் மூப்பரானவர்கள் கேட்டு,

நியா 21:17. இஸ்ரவேலில் ஒரு கோத்திரம் நிர்மூலமாகாதபடிக்கு தப்பினவர்களுடைய சுதந்தரம் பென்யமீனுக்கு இருக்கவேண்டுமே,

நியா 21:18. நாமோ நம்முடைய குமாரத்திகளில் அவர்களுக்குப் பெண் கொடுக்கக்கூடாது; பென்யமீனருக்குப் பெண்கொடுக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று, இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டார்களே என்றார்கள்.

நியா 21:19. பின்னும், இதோ, பெத்தேலுக்கு வடக்கே பெத்தேலிலிருந்து சீகேமுக்குப் போகிற பாதைக்குக் கிழக்காகவும் லிபோனாவுக்குத் தெற்காகவும் இருக்கிற சீலோவிலே வருஷந்தோறும் கர்த்தருக்குப் பண்டிகை கொண்டாடப்படுகிறதே என்று சொல்லி,

நியா 21:20. அவர்கள் பென்யமீன் புத்திரரை நோக்கி: நீங்கள் போய், திராட்சத்தோட்டங்களிலே பதிவிருந்து,

நியா 21:21. சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருகிறதை நீங்கள் காணும்போது, திராட்சத்தோட்டங்களிலிருந்து புறப்பட்டு, உங்களில் அவரவர் சீலோவின் குமாரத்திகளில், ஒவ்வொரு பெண்ணைப் பிடித்துப் பென்யமீன் தேசத்திற்குக் கொண்டுபோங்கள்.

நியா 21:22. அவர்களுடைய தகப்பன்மாராகிலும், சகோதரராகிலும் எங்களிடத்தில் முறையிட வரும்போது, நாங்கள் அவர்களை நோக்கி: எங்கள் நிமித்தம் அவர்களுக்குத் தயவுசெய்யுங்கள்; நாங்கள் யுத்தம்பண்ணி, அவனவனுக்கு மனைவியை வாங்கிக்கொடுக்கவில்லை; உங்கள்மேல் குற்றமுண்டாக இப்போது நீங்கள் அவர்களுக்கு மனைவிகளைக் கொடுக்கவும் இல்லை என்போம் என்று சொன்னார்கள்.

நியா 21:23. பென்யமீன் புத்திரர் அப்படியே செய்து, நடனம்பண்ணுகிறவர்களிலே தங்கள் தொகைக்குச் சரியான பெண்களை மனைவிகளாகப் பிடித்துக்கொண்டு, தங்கள் சுதந்தரத்திற்குத் திரும்பிப்போய், பட்டணங்களைப் புதுப்பித்துக் கட்டி, அவைகளில் குடியிருந்தார்கள்.

நியா 21:24. இஸ்ரவேல் புத்திரரும் அக்காலத்திலே அவ்விடம் விட்டு அவரவர் தங்கள் கோத்திரத்துக்கும் தங்கள் குடும்பத்துக்கும் போய், அவரவர் தங்கள் சுதந்தரத்தில் சேர்ந்தார்கள்.

நியா 21:25. அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன் தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்.

பென்யமீன் கோத்திரத்திலே அறுநூறு வீரர்கள் இருக்கிறார்கள். இவர்களில் நானூறு பேருக்கு விவாகம் செய்து வைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் இருநூறு பென்யமீனர் தங்களுக்கு மனைவி கிடைக்கவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் விவாகம்பண்ணி வைக்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்புகிறார்கள்.

பென்யமீன் புத்திரருக்கு விவாகம் பண்ணி வைக்கவேண்டுமென்று இஸ்ரவேல் புத்திரர் விரும்பினாலும், அவர்கள் தங்கள் குமாரத்திகளை அவர்களுக்கு விவாகம்பண்ணி வைக்க விரும்பவில்லை. "நாமோ நம்முடைய குமாரத்திகளில் அவர்களுக்குப் பெண் கொடுக்கக்கூடாது; பென்யமீனருக்குப் பெண்கொடுக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்று, இஸ்ரவேல் புத்திரர் ஆணையிட்டார்களே" (நியா 21:18) என்று இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்குள் சொல்லிக்கொள்கிறார்கள்.

சீலோவிலே வருஷந்தோறும் கர்த்தருக்கு பண்டிகை கொண்டாடப்படுவது வழக்கம். சீலோ பெத்தேலுக்கு வடக்கே, பெத்தேலிலிருந்து சீகேமுக்குப் போகிற பாதைக்குக் கிழக்காகவும் லிபோனாவுக்குத் தெற்காகவும் இருக்கிறது. இந்தப் பண்டிகை நாளின்போது, சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருவார்கள் (நியா 21:21).

இஸ்ரவேல் தேசத்திலே, கர்த்தருக்கு பண்டிகை கொண்டாடப்படுகிற இந்தக் காலத்தில் மாத்திரமே, இஸ்ரவேலிலுள்ள கன்னிப்பெண்களுக்கு கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுவதற்கு அனுமதியிருந்தது. இந்தக் கன்னிப்பெண்கள் தங்கள் சந்தோஷத்திற்காக நடனமாடாமல், கர்த்தரைக் கனம்பண்ணும் வண்ணமாக நடனமாடுகிறார்கள். தாவீது உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக நடனமாடி கர்த்தரைக் கனம்பண்ணியதுபோல, இந்தக் கன்னிப்பெண்கள் கர்த்தரைக் கனம்பண்ணுகிறார்கள்.

சீலோவின் குமாரத்திகள் மிகுந்த கண்ணியத்தோடும், ஒழுக்கத்தோடும் கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுவார்கள். கன்னிப்பெண்கள் பொதுஇடங்களில் நடனமாடுவது அவர்களுக்கு ஆபத்தாகவே இருக்கும். துஷ்டர்கள் அந்தப் பெண்களை பிடித்துக்கொண்டு போய்விடுவதற்கு வாய்ப்புள்ளது.

கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுகிற சீலோவின் குமாரத்திகளில், பென்யமீனரில் ஒவ்வொருவரும் ஒரு பெண்ணைப் பிடித்து, பென்யமீன் தேசத்திற்கு கொண்டுபோக இஸ்ரவேலின் மூப்பர் அனுமதி கொடுக்கிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர் பென்யமீன் புத்திரரை நோக்கி: "நீங்கள் போய், திராட்சத்தோட்டங்களிலே பதிவிருந்து, சீலோவின் குமாரத்திகள் கீதவாத்தியத்தோடே நடனம்பண்ணுகிறவர்களாய்ப் புறப்பட்டு வருகிறதை நீங்கள் காணும்போது, திராட்சத்தோட்டங்களிலிருந்து புறப்பட்டு, உங்களில் அவரவர் சீலோவின் குமாரத்திகளில், ஒவ்வொரு பெண்ணைப் பிடித்துப் பென்யமீன் தேசத்திற்குக் கொண்டுபோங்கள்" (நியா 21:20,21) என்று சொல்லுகிறார்கள்.

பென்யமீன் புத்திரர் சீலோவின் குமாரத்திகளைப் பிடித்துக்கொண்டு போய் விவாகம்பண்ணுவது, விநோதமான விவாக முறையாகயிருக்கிறது. விவாகம்பண்ணுவதற்கு முன்பாக, அவர்கள் சீலோவின் குமாரத்திகளுடைய சம்மதத்தைக் கேட்கவில்லை. அவர்களுடைய பெற்றோரின் சம்மத்தைக் கேட்கவில்லை. அவசரமாகவும், பலவந்தமாகவும் நடைபெற்ற விவாகமாயிருக்கிறது. அவசரப்பட்டு திருமணம் செய்தால், பின்பு நிதானமாக வருத்தப்படவேண்டியது வரும். இந்த விவாகத்தினால் சீலோவின் குமாரத்திகளுக்கு ஆறுதலும், சந்தோஷமும் உண்டாயிற்றா என்பது தெரியவில்லை.

பென்யமீன் புத்திரர், சீலோவின் குமாரத்திகளைப் பிடித்து தங்கள் தேசத்திற்கு கொண்டுபோய்விட்டால், அந்தக் குமாரத்திகளின் தகப்பன்மாரும், சகோதரரும் சும்மாயிருக்கமாட்டார்கள். அவர்கள் தங்கள் வழக்குகளை இஸ்ரவேலின் மூப்பரிடத்தில் முறையிடுவார்கள். இஸ்ரவேலர் சீலோவின் மனுஷருடைய வழக்குகளையும் நீதியாய் விசாரிக்கவேண்டும்.

இஸ்ரவேலின் மூப்பரோ, சீலோவின் மனுஷர் தங்களிடத்தில் முறையிட வரும்போது, தாங்கள் என்ன செய்வோம் என்பதையும், அவர்களிடத்தில் என்ன சொல்லுவோம் என்பதையும், பென்யமீன் புத்திரருக்கு முன் கூட்டியே எடுத்துச் சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேலின் மூப்பர், பென்யமீன் புத்திரரிடம், "சீலோவின் குமாரத்திகளுடைய தகப்பன்மாராகிலும், சகோதரராகிலும் எங்களிடத்தில் முறையிட வரும்போது, நாங்கள் அவர்களை நோக்கி: எங்கள் நிமித்தம் அவர்களுக்குத் தயவுசெய்யுங்கள்; நாங்கள் யுத்தம்பண்ணி, அவனவனுக்கு மனைவியை வாங்கிக்கொடுக்கவில்லை; உங்கள்மேல் குற்றமுண்டாக இப்போது நீங்கள் அவர்களுக்கு மனைவிகளைக் கொடுக்கவும் இல்லை என்போம்" (நியா 21:22) என்று சொல்லுகிறார்கள்.

இஸ்ரவேல் புத்திரரின் மூப்பருடைய ஆலோசனை பென்யமீன் புத்திரருக்கு நன்மையாய்த் தெரிகிறது. பென்யமீன் புத்திரர் அப்படியே செய்து, நடனம்பண்ணுகிறவர்களிலே தங்கள் தொகைக்குச் சரியான பெண்களை மனைவிகளாகப் பிடித்துக்கொண்டு, தங்கள் சுதந்தரத்திற்குத் திரும்பிப்போய், பட்டணங்களைப் புதுப்பித்துக் கட்டி, அவைகளில் குடியிருக்கிறார்கள் (நியா 21:23). பென்யமீன் புத்திரருடைய பிரச்சனை இத்துடன் முடிவு பெறுகிறது. அவர்கள் மறுபடியும் தங்கள் சுதந்தரத்திற்கு திரும்பி வந்து அங்கே குடியிருக்கிறார்கள்.

இஸ்ரவேலின் இரண்டாவது நியாயாதிபதியாகிய ஏகூத் இந்தக் கோத்திரத்திலிருந்து வந்தவர். "இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டபோது, கர்த்தர் அவர்களுக்குப் பென்யமீன் கோத்திரத்தானாகிய கேராவின் மகன் ஏகூத் என்னும் இரட்சகனை எழும்பப்பண்ணினார்; அவன் இடதுகைப் பழக்கமுள்ளவனாயிருந்தான்; அவன் கையிலே இஸ்ரவேல் புத்திரர் மோவாபின் ராஜாவாகிய எக்லோனுக்குக் காணிக்கை அனுப்பினார்கள்" (நியா 3:15).

இஸ்ரவேல் புத்திரரும் அக்காலத்திலே அவ்விடம் விட்டு அவரவர் தங்கள் கோத்திரத்துக்கும் தங்கள் குடும்பத்துக்கும் போய், அவரவர் தங்கள் சுதந்தரத்தில் சேருகிறார்கள் (நியா 21:24). அவர்கள் மிஸ்பாவிலே ஒரு சேனையை நிறுத்தி வைக்கவேண்டுமென்று நினைக்கவில்லை. கர்த்தர் இஸ்ரவேல் கோத்திரத்தாருக்கு சமாதானத்தைக் கட்டளையிடுகிறார். அவரவர் தங்கள் கோத்திரத்திற்கும் தங்கள் குடும்பத்திற்கும் போகிறார்கள்.

"அந்நாட்களிலே இஸ்ரவேலில் ராஜா இல்லை; அவனவன் தன்தன் பார்வைக்குச் சரிப்போனபடி செய்துவந்தான்" (நியா 21:25).